த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—498

# இந்திய வங்கியியல்

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்படுகின்றது)

*ஆசிரியர்*

**கு. ஆளுடையபிள்ளை,** பி.காம். (ஆனர்ஸ்.), எம்.காம்., பி.எல்.,

*முதல்வர்,*

*கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,*

*சென்னை.*

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—September, 1973

T.N.T.B.S. (C.P.) No. 498

© Tamil Nadu Text Book Society

# BANKING IN INDIA

K. ALUDIAPILLAI

*Price Rs.* **7-10**

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

*Printed by*
**EX Printers,**
**adras-4.**

# அணிந்துரை

**திரு. இரா. நெடுஞ்செழியன்**
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்களின் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில்; கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'இந்திய வங்கியியல்'** என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **498** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **533** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின் உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# முன்னுரை

ஓர் ஆளுக்கு ஒரு வங்கி (One man one bank) என்ற நிலை மேலை நாடுகளில் இருந்து வருகிறது என்பது எவரும் அறிந்த செய்தியே. இந் நிலை உண்டாக, மக்கள் கல்வியறிவுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினர் கல்வி யறிவு பெற்றவர்களாக இருக்கும் நாடுகளில், மக்கள் வங்கியின் பயனையும் தொழிலையும் நன்கு அறிந்து, அதைத் தம் வசதிக்குப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். ஒவ்வொருவரும் ஒரு வங்கியில் கணக்கு வைத்துக் கொண்டு, அவ் வங்கியின் வாடிக்கையர் என்ற முறையில் அது அளிக்கும் பணிகளைப் பெற்றுப் பயனடைகின்றனர். வங்கி, பணம் பெற்று, கடனுகப் பணமளிக்கும் நிறுவனம் மட்டுமன்று; அது நண்பனுகவும், நல்லாசிரியனுகவும், வழிகாட்டியாகவும் கூடச் செயலாற்றக்கூடும் நிறுவனம் என்று மக்கள் உணர்ந்துள்ளனர்.

இந்தியாவில் கல்வியறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை நாடு விடுதலை பெற்ற பின் வளர்ந்துள்ளது என்ருலும், இன்னமும் பெரும்பான்மையான மக்கள் வங்கிகளைப்பற்றிச் சரிவர அறிந்து கொள்ளவில்லை. வங்கிகள், ஏதோ பெரும் பணம் படைத்த ஒரு சிலருக்கு மட்டும் உரித்தான பணிகளைத் தான் செய்ய முடியும்; சிறிய மனிதருக்கு அவை அளிக்கக் கூடியது ஏதொன்றுமில்லை என்ற பரவலான எண்ணம் இருந்து வந்தது. கல்வியறிவு பெற்றவர்களில்கூட, பலருக்கு வங்கிகளைப்பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருந்ததில்லை. இதற்குக் காரணம், வங்கிகளின் பெயர் முதல், நடவடிக்கைகள் ஈருக அனைத்தும் ஆங்கிலத்தில் அமைந்திருந்தமையே. வங்கிய நடவடிக்கைகள் பெரும்பாலும் அயல்நாடுகளில் அமைந்துள்ள பாணியைப் பின்பற்றி யிருந்தன. மிகப் பல ஆண்டுகளாக நாட்டில் வங்கியத் தொழில் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நாட்டு வங்கியருக்கு ஆங்கிலப் பாணியில் அமைக்கப்பட்ட வங்கியத் துறையில் தக்க இடம் தரப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் வங்கியத் துறை—இன்று நாம் காணக்கிடக்கும் வங்கியத் துறை எவ்வாறு உருவாயிற்று? இத் துறை நாட்டின்

பொருளாதாரத்தில் பெற்றுள்ள இடம் என்ன? வங்கிய நிறுவனங்கள் போன்று காணப்படும் பிற நிறுவனங்கள் யாவை என்ற வினாக்களுக்கு, 'இந்திய வங்கியியல்' விடை காண முயலுகிறது.

நம் நாட்டு வங்கியியல் பற்றிப் பேசுகையில், கூட்டுறவு வங்கிகளைப் பற்றி விரிவாகப் பேசுவது அவசியமாகிறது. ஆண்டுக்குஆண்டு இவ்வங்கிகள் எல்லாத் துறைகளிலும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வருகின்றன. மாநில அரசுகளும் மத்திய அரசும் கூட்டுறவு வங்கிய வளர்ச்சிக்குப் பெரும் ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகின்றன. இந் நூலில் கூட்டுறவு வங்கிகளைப் பற்றிய செய்திகள் ஓரளவுக்கு விரிவாகக் கூறப்பட்டுள்ளமைக்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியென இந்திய வங்கியத் துறையில் கருதப்படுவது வங்கியக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையாகும். அருமையான பரிந்துரைகள், ஏற்றுக் கொண்டு செயற்படுத்தத் தக்க யோசனைகள்; வளர்ச்சிக்கு வித்தான பல கருத்துக்கள், ஆழ்ந்த ஆய்வின் பயனாகக் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் நிரம்ப அடங்கியுள்ள இந்த அறிக்கையின் சாரம் சுருக்கமாக இந் நூலில் தரப்பட்டுள்ளது.

இந் நூலை எழுதுமாறு பணித்து, என்னை ஊக்குவித்த தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனத்தினருக்கு என் நன்றி உரித்தாகும். முன்னுரையின் தொடக்கத்தில் கூறியது போன்று, 'ஓர் ஆளுக்கு ஒரு வங்கி' என்ற நிலை தமிழகத்தில் உருவாக, தமிழ் மொழியில் வங்கியியல் பற்றிய நூல்கள் வெளியிடப்பட வேண்டும். இந் நூல் வங்கிய முறை பற்றி அறிந்துகொள்ள விரும்பும் தமிழன்பர்களுக்குப் பயன்படுமாகில் ஆசிரியருக்கு மன நிறைவு உண்டாகும்.

**ஆசிரியர்**

# பொருளடக்கம்

பக்கம்

1. வங்கி முறை வளர்ந்த வரலாறு .... 1

பண்டைக் கால நிலை—இக் கால நிலை—முதல் கட்டம் கி. பி 1860 வரை—முகமை நிறுவனங்கள்—மாகாண வங்கிகள்—இரண்டாம் கட்டம் கி. பி. 1860—1900 க்குப் பின் இருபதாம் நூற்றுண்டில் வங்கிய வளர்ச்சி—வணிக நெருக்கடியும் வங்கி நொடிப்பும்—நிருவாகக் கோளாறுகள்—முதல் உலகப் போரும் அதன் விளைவுகளும்—அயல் நாட்டு (நாணய மாற்று) வங்கிகள் வளர்ச்சி—கூட்டுப்பங்கு வங்கிகள் வளர்ச்சி—சீரான வளர்ச்சி இல்லாமைக்குக் காரணம்—அண்மைக் கால நிகழ்ச்சிகள்—வங்கி அலுவலகங்கள் பரவியுள்ள முறைமை—விழுக்காடு—பல வகை இடங்களில் வங்கி அலுவல்கள் பரவியுள்ள முறைமை.

வங்கி அலுவலகங்கள் பரவியுள்ள முறைமை—கிளைப்பெருக்கம்—வைப்புத் தொகை வளர்ச்சி—கடன் வசதி யளிப்பு நிலை—விடுதலைக்குப் பின் வளர்ச்சி—அறுபதில் அதிர்ச்சி—கடனளிப்பின் புதுமைக் கொள்கை.

வங்கிகள் மீது சமூகக் கட்டுப்பாடு—நாட்டு உடைமையாக்கல்—சோதனையிலும் சாதனை.

2. இந்தியப் பணச் சந்தை ... 33

பணச்சந்தையின் பொருள்—பணச்சந்தையும் மூலதனச் சந்தையும்—பணச் சந்தையின் தன்மை—பணச் சந்தையின் பிரிவுகள்—பணச் சந்தையின் சிறப்புக் கூறுகள்—குறுகிய காலச் சொத்துகளின் இன்றியமையாமை.

பொருளாதார வளர்ச்சிக்குப் பணச் சந்தை—பணச் சந்தையின் உறுப்புகளிடையே யுள்ள தொடர்பு.

பக்கம்

அழைப்புப் பணச் சந்தை—சீட்டுச் சந்தை—ரிசர்வு வங்கியின் 1951ஆம் ஆண்டுத் திட்டம்—1970-ல் உருவாக்கப்பட்ட புதுத் திட்டம்—சீட்டுச் சந்தைத் திட்டத்தின் நன்மைகள்—ரிசர்வு வங்கி பெறும் நன்மை—வணிக வங்கிகளுக்குக் கிட்டும் நன்மை—திட்டத்தை விரிவுபடுத்த வழிகள்.

கருவூலச் சீட்டு நடவடிக்கை—துணைக்கடன் சந்தை—பணச் சந்தையிலுள்ள வட்டி விகிதங்கள்—வைப்புகளும் வட்டி விகிதமும்—வங்கிகளிடை உடன்பாடு—கடன் மீது வட்டி நிருணயித்தல்—வங்கி வீதமும் வட்டி வீதமும்—பசார் வீதம்—மாற்றுச் சீட்டுச் சந்தை வளராமைக்குக் காரணங்கள்—சீட்டுச் சந்தை வளர வழிகள்—ரிசர்வு வங்கியும் மறு தள்ளுபடி வசதியும்—மலிவுப் பணக்கொள்கையும் அருமைப் பணக் கொள்கையும்.

3. நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும் .... 72

நாட்டு வங்கியர், வட்டித் தொழிலர்—வேறுபாடுகள்—வட்டித் தொழிலர்—கடனளிப்புமுறை—வசூலிக்கும் வட்டி வீதம்—கடும் வட்டி வாங்கக் காரணம்—கடனாளிப் பாதுகாப்புச் சட்டங்கள்—கடனைத் திருப்பிப் பெறக் கையாளும் முறை—வட்டித் தொழிலர் நலிவடையக் காரணம்—வட்டித் தொழிலரின் எதிர்காலம்.

நாட்டு வங்கியர்—ரிசர்வு வங்கியுடன் இணைக்கும் திட்டம்—தொழிலாற்றும் இடங்கள்—நாட்டு வங்கியர் வங்கியரா?—ஷிகார்புரி அல்லது மூல்தானி ஷராப்பு—குஜராத்திய ஷராப்புகள்—தொழில் நடத்தும் முறை—நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள், கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள், மார்வாரி காயர்கள்—நாட்டு வங்கியரிடையே காணப்படும் குறைபாடுகள்—நாட்டு வங்கியரின் உண்டியல்கள்.

4. இந்திய ரிசர்வு வங்கி .... 94

மைய வங்கி தேவைப்படக் காரணங்கள்—மைய வங்கி அமைக்க முயற்சி—பங்குநர் வங்கியா

பக்கம்

அல்லது அரசுடைமை வங்கியா?—பங்குநர் வங்கியாக அமைக்கப்படக் காரணங்கள்—நாட்டுடைமை ஆக்கப்பட்டது ஏன்?

ரிசர்வு வங்கியின் அமைப்பு—வங்கியின் முக்கியப் பணிகள், நோட்டு வெளியீடு—செலாவணிப் பெட்டகங்கள்—அரசினருக்கு வங்கி—வழி வகைக் கடன்கள்—அரசுக்கு அறிவுரையாற்றல்—வங்கிகளின் வங்கி—வங்கி வீதம்—வங்கி வீத மாற்றங்களின் விளைவு—மாற்றத்துக்குரிய காப்பு விகிதம்—வேறுபடும் வட்டி விகிதத் திட்டம்—நிகர எளிவரல் விகிதத் திட்டம்—வெளிச் சந்தை நடவடிக்கைகள்—கடனளிப்புக் கட்டுப்பாடு—முந்துமைத் துறைகளுக்குக் கடனளிப்பு—வங்கியத் தொழிலில்லாக் கம்பெனிகளும் ரிசர்வு வங்கியும்.

பருவகாலக் கடன் தேவை—வங்கிகள் மீது மேற்பார்வை—வங்கிகளுக்கு உரிமம் வழங்கல்—கிளைகள் திறப்பது பற்றிய கொள்கை—வழிகாட்டு வங்கித் திட்டம்—அயல் நாட்டு வங்கிக் கிளைகள்—வங்கிகள் ஆய்வு—வங்கி நிருவாகம் பற்றிய விதிகள்—வங்கிகள் இணைதல், புனரமைப்பு—வங்கி ஊழியர் பயிற்சி.

வைப்புக் காப்பீடு—ரிசர்வு வங்கியும் கிராமக் கடன் வசதிகளும்—ரிசர்வு வங்கியும் தொழில் நிதியமும்—நாணய மாற்று நிருவாகமும் கட்டுப்பாடும்—ரிசர்வு வங்கியும் ஸ்டேட் வங்கியும்—ரிசர்வு வங்கியின் இலாப ஈவு, காப்பு நிதி—ரிசர்வு வங்கியின் இயக்கமும் கொள்கையும்—வங்கியப் பிரிவு—வெளியீட்டுப் பிரிவு மத்திய அலுவலகப் பிரிவுகள்—செயலரின் பிரிவு—நிருவாகம், ஊழியர் பிரிவு—பணிகள் அவை—கணக்குச் செலவுப் பிரிவு—மனைப்பிரிவு—ஆய்வுப் பிரிவு—சட்டப் பிரிவு—அயல்நாட்டுச் செலாவணி மாற்றுக் கட்டுப்பாட்டுப் பிரிவு வேளாண்மைக் கடன் பிரிவு—வங்கிய நடவடிக்கைகள், வளர்ச்சிப் பிரிவு—தொழில் நிதியப்பிரிவு—வங்கியல்லாத கம்பெனிகள் பிரிவு—ஆராய்ச்சிப் பொருளாதார நுண்செய்தி—பொருளாதாரப் பிரிவு—புள்ளியியல் பிரிவு.

பக்கம்

5. இந்திய ஸ்டேட் வங்கி .... 155

மாகாண வங்கிகள்—இம்பீரியல் வங்கி—இம்பீரியல் வங்கி மைய வங்கியாக மாற்றப்படாதது ஏன்?—இம்பீரியல் வங்கிச் செயற்பாட்டில் காணப்பட்ட குறைகள்.

இந்திய ஸ்டேட் வங்கி நிறுவுதல்—ஸ்டேட் வங்கியின் நிருவாகம்—ஸ்டேட் வங்கியின் வளர்ச்சி—ஸ்டேட் வங்கியின் புனரமைப்பு—விவசாயக் கடனளிப்பு.

6. நாணய மாற்று வங்கிகள் .... 183

அயல் நாட்டு வங்கிகள் நிறுவப்படுதல்—இவ்வங்கிகளின் பணி—அயல் நாட்டு வியாபாரக் கடனளிப்பு—ஆதிக்கத்தை ஒடுக்க வேண்டுமா?

7. வணிக வங்கிகள் .... 199

நாட்டுடைமைப்படுத்தல்—புதிய வங்கிகளின் நிருவாகம்.

தி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா—தி பாங்க் ஆப் இந்தியா—தி பஞ்சாப் நேஷனல் பாங்க்—தி அலகாபாத் பாங்க்—தி பாங்க் ஆப் பரோடா—தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க்—தி யூனியன் பாங்க் ஆப் இந்தியா—தி யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா—தி கனரா பாங்க் லிமிடெட்—தேனு பாங்க்—சிண்டிகேட் பாங்க்—தி இண்டியன் பாங்க்—இண்டியன் ஓவர்சீஸ் பாங்க்—வணிக வங்கிகளின் வளர்ச்சி.

கடனளிப்பு முறை—வணிக வங்கிகள் புரியும் பணிகள்—வணிக வங்கிகள் மேற்கொள்ளக் கூடாதன—பல்வகை வைப்புத் திட்டங்கள்—பிற நன்மைகளுடன் இணைந்த வைப்புக்கள்—வைப்பாளர்களுக்கு அளிக்கப்படும் பணிகள்—பல்வகைக் கடன் கோருவோருக்கான திட்டங்கள்—சார்புப் பணிகள்—பழந் திட்டங்கள்—அன்றாடச் சேமிப்புத் திட்டம்—இளவர் சேமிப்புத் திட்டம்—பெண்டிர் கிளை—புதிய திட்டங்கள்—மாதவட்டி வருமானத் திட்டம்—ஆண்டுத் தொகை அல்லது ஓய்வுகாலத் திட்டம்—விவசாயிகள்

பக்கம்

வைப்புத் திட்டம்—காப்பீட்டுடன் இணைக்கப் பெற்ற சேமிப்பு வங்கிக் கணக்கு—வீட்டு வசதி வைப்புத் திட்டம்.

தனி நபர் கடன் திட்டம்—கடனில் பங்கேற்றல்—சிற்றளவுத் தொழில்களுக்கு நிதி வசதி—வேளாண்மைக் கடன்—சாலைப் போக்குவரத்து நடத்துவோர், சிறு கடன் கோருவோர், தாமே தொழில் செய்து பிழைப்போர் முதலானோர்க்குக் கடன்—வரவு மாற்று முறை—வாடிக்கையர் பொருட்டு வசூலித்தலும் செலுத்தலும்—நாணய அட்டைகள்—பயணக் காசோலை—அன்பளிப்புக் காசோலை—பூட்டிய பெட்டி, இரவுக் காப்புப் பணி—வங்கிய நேரத்திற்குப் பின் பணிகள்—வணிக வங்கிகளின் சொத்துப் பொறுப்புகளின் அமைப்பு—கடனளிப்பு முறையில் புதிய நோக்கு—முதன்மை வங்கித் திட்டம் — கிளைகளின் வளர்ச்சி—வங்கிகளின் சமுதாய நோக்கு—வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு—வங்கியருக்குப் பயிற்சி—வங்கித் தீர்வு, இரு தரப்பு ஒப்பிய முடிவுகள்.

8. கூட்டுறவு வங்கிகள் .... 245

வேளாண்மைக் கடன்—காலவாரிக் கடன் பாகுபாடு—குறுந்தவணைக் கடன்—மத்திய காலக் கடன்—நீண்ட காலக் கடன்.

பிரதம சங்கங்கள், மத்திய வங்கிகள், மாநில வங்கி—நிலவள வங்கிகள்—கிராமச் சங்கம்—செயற்பாடு—கடனுக்கு ஈடு—கடன் வசூல்.

கிராமக் கூட்டுறவு வங்கிகள்—கூட்டுறவுக் கூல வங்கிகள்—மத்தியக் கூட்டுறவு வங்கிகள்—மாநிலக் கூட்டுறவு வங்கிகள்—அமைப்பு—கடன் வழங்கல்—உற்பத்தி நோக்குக் கடன்—கூட்டுறவு நில வள வங்கிகள் — அமைப்பு — செயற்பாடு — கடனீட்டுப் பத்திர வெளியீடு—விவசாய மறு நிதிக் கூட்டுரு—நகரக் கூட்டுறவு வங்கிகள்—கடனளிப்பு நோக்கம், பிணை—ஊழியர் கடன் சங்கங்கள்—தொழிற் கூட்டுறவு வங்கிகள்.

பக்கம்

கூட்டுறவு இயக்கத்தில் முக்கிய திருப்பங்கள் —அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு அறிக்கை (வெங்கடப்பையா குழு) 1969, பரிந்துரைகள்.

9. சீட்டுக்கள், 'நிதி'கள், நிதிக் கம்பெனிகள் .... 285

சீட்டுக்கள் அல்லது சீட்டுச் சேர்த்தல்—சாதாரணச் சீட்டு—பரிசுச் சீட்டு—வியாபாரச் சீட்டு—சீட்டு நடத்துவதில் மோசடிகள்—நிதிகள்—வைப்புப் பெறுதல்—ஒழுங்காற்றல்—நிதியக் கார்ப்பரேஷன்—உண்மையில் கூட்டாண்மையே—வைப்புத் திரட்டல்—கடனளிப்பு.

10. அஞ்சலகம், காப்பீட்டு நிலையங்கள், பங்கு மாற்று நிலையங்கள் .... 293

அஞ்சலக சேமிப்பு வங்கி—சேமிப்புத் திட்டங்கள்—7 ஆண்டு தேசியச் சேமிப்புப் பத்திரங்கள்—காலவரை வைப்பு—தொடர் வைப்புத் திட்டம்—உயிர் காப்பீட்டு ஏற்பாடு—காப்பீட்டு நிலையங்கள்—ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு—கூட்டுரு செய்துள்ள முதலீடுகள்—பொதுக் காப்பீடு—பங்குமாற்று நிலையங்கள்—ஒப்புதல் அளிக்கப்பெற்றுள்ள பங்கு மாற்று நிலையங்களின் இன்றைய நிலை—உறுப்பினராகச் சேர்தல்.

11. தொழில் வள வங்கிகள் ... 304

முதலாக்கமும் தொழில் நிதியமும்—இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு—நோக்கங்கள்—பணிகள்—கடனளிப்பு—பொறுப்புறுதி வழங்கல்—ஒப்புறுதியளித்தல்—நேரடியாகப் பங்குகளை ஒப்பியெடுத்தல்—தொழில் வள வங்கிகளைக் கட்டுப்படுத்தல்—அறிவுரை வழங்கல்—பிற பணிகள்—நிருவாகம்—மத்தியக் குழு—ஆலோசனைக் குழு—பங்கு முதல்—கடனீட்டுப் பத்திர வெளியீடு—நாட்டுத் தொழில் வளர்ச்சியில் கூட்டுருவின்

பக்கம்

பங்கு—மாநில நிதியக் கூட்டுருக்கள்—நிறுவப் பெற்றதன் நோக்கம்—கடனளிப்பு முறை—பிற வகை நிறுவனங்கள்—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி—முக்கிய நோக்கங்கள்—முதல் அமைப்பு—வளர்ச்சி உதவி நிதி—தேசியத் தொழில் கடன் (நீண்ட கால நடவடிக்கை) நிதி—வங்கியின் வளர்ச்சி.

இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுரு—நோக்கங்கள் — பணிகள் — கடனளிப்பு — பொறுப்புறுதி—ஒப்புறுதி நடவடிக்கைகள்—நிருவாகம்—பங்கு முதல் அமைப்பு—இந்திய அரசின் உதவி — கூட்டுருவின் செயலாற்றல்.

இந்திய யூனிட் டிரஸ்ட்—சிறப்புக் கூறுகள் — நிருவாகம்—முதலீடு செய்வது பற்றிய விதிகள்—அலகு திட்டம் 1971.

**12.** வங்கியக் குழுவின் அறிக்கை .... **329**

குழு அமைப்பு—பார்வைக்குரிய செய்திகள்—பரிந்துரைகள்—நிலைய அடிப்படை அமைப்பு, கிராமிய வங்கிகள்—தன்னிறைவு பெறுவதற்கு யோசனைகள்—கூட்டுறவு அமைப்பை மாற்றி அமைத்தல்—வணிக—கூட்டுறவு வங்கிகள் ஒருங்கிணைப்பு—நகரக் கூட்டுறவுகள்—சிறப்பு வங்கிய நிலையங்கள்—வங்கியல்லாத நிதிய இடை நிலையர்—சீட்டு நிதி—நிதியக் கூட்டுரு—நாட்டு வங்கியர்—வணிக வங்கிய அமைப்பு மாற்றம் —அனைத்திந்திய—பிராந்திய வங்கிகள்—வங்கிய நடவடிக்கைகள், பணிகளை விரிவுபடுத்தப் பரிந்துரைகள்—நடவடிக்கைகளின் செய்முறை.

வங்கிகளின் நிருவாக மேம்பாடு—ஆள்பலம் திட்டமிடுதல்—ஆள் சேர்ப்பு—பயிற்சி.

சட்டத்தைத் திருத்துவதுபற்றிய பரிந்துரைகள்—மேலும் ஆயவேண்டியவை—குழுவின் பரிந்துரைகளைப் பற்றிய கருத்துகள்.

**கலைச்சொற்கள்** .... **352**

**மேற்கோள் நூற்பட்டியல்** .... **358**

# 1. வங்கி முறை வளர்ந்த வரலாறு

**பண்டைக்கால நிலை**

நம் பரத கண்டத்திலே இன்று காணக் கிடக்கும் வங்கி முறை, கடந்த நூறு ஆண்டுகளில் உருவாக்கப்பட்டதே. எனினும் பலப்பல நூற்றாண்டுகளாக அக்காலத் தேவைகளுக்கு ஏற்ற வகை அமைப்பு இயங்கி வந்ததாக வரலாறு கூறுகின்றது. இற்றைக்கு நான்காயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலந் தொட்டு வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழில் நடந்து வந்தமைக்கு வேத கால இலக்கியங்கள் சான்று கூறுகின்றன. உண்டியல் போன்ற நாணய முறையாவணம் (Credit Instrument) ஐந்தாம் நூற்றாண்டில் வழக்கிலிருந்ததும் வரலாற்றிலிருந்து அறியப்படுகிறது. கௌசாம்பி, அவந்தி, சாம்பா, ராஜகிருகா போன்ற நகரங்களில் புத்த கால இலக்கியங்கள் வாயிலாக சிரேஷ்டிகள் (Sreshtis) அதாவது வங்கியர்கள், செயற்பட்டு வந்ததை அறிகின்றோம். அவ்வங்கியர்கள் வியாபாரிகளுக்கும், கடல் கடந்து வணிகம் செய்ய முற்பட்ட பெருவணிகருக்கும், போரில் ஈடுபட்டுப் பணம் தேவைப்பட்டுக் கொண்டிருக்கும் மன்னர்களுக்கும் கடனளித்தலைத் தம் தொழிலாகக் கொண்டிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்னும் நூலில் எந்த அளவுக்கு வட்டி வசூல் செய்யலாம் என்ற நியதி குறிக்கப்பட்டுள்ளது. பிணையமுள்ள கடனுக்கு 15 விழுக்காடும், பிணையம் ஏதுமில்லாக் கடனுக்கு 60 விழுக்காடும் உயர்ந்த அளவு வட்டியாக வரையறுக்கப்பட்டிருந்தது; நட்ட அச்சம் (Risk) மிகவும் உயர்ந்து காணப்படும் கடனுக்கு 240 விழுக்காடு வட்டி விதிக்க அனுமதி தரப்பட்டிருந்தது.

**இக்கால நிலை**

இவ்வாறு தொன்று தொட்டு வழக்கிலிருந்து வரும் வங்கிய முறை நாளடைவில் மாற்றங்களுக்கு உள்ளாகி, இன்று நாம்

காணக்கிடக்கும் வகையில் பரந்து வளர்ந்துள்ளது. இவ் வளர்ச்சியினை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டம் கி. பி. 1860 வரை நிலவிய முறையைக் குறிக்கும். இரண்டாம் கட்டம் கி. பி. 1860 முதல் கி. பி. 1900 வரை காணப்பட்ட நிலையைக் குறிக்கும். சுதேசி இயக்கத்தையொட்டி இருபதாம் நூற்றுண்டில் அரசியல் துறையில் காணப்பட்ட எழுச்சி வங்கியத் துறையிலும் புதிய பல முயற்சிகளை உருவாக்கியது. கி. பி. 1969-ல் பெரிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட்டன. இருபதாம் நூற்றுண்டில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சியினையும் குறிப்பதே மூன்றும் கட்டமாகும். இனி ஒவ் வொரு கட்டத்திலும் வங்கிய முறை வளர்ந்த வண்ணத்தைக் காண்போம்:

**முதல் கட்டம் கி.பி. 1860 வரை**

பதினேழாம் நூற்றுண்டில் ஆங்கிலேய வியாபாரிகள் இந்தியாவில் வணிக நிலையங்களை நிறுவிய காலந்தொட்டு மேலை நாட்டு வங்கிய முறை நம்நாட்டில் வேரூன்றலாயிற்று எனலாம். இதற்கு முன், மொகலாய அரசினர் ஆண்டு வந்த காலங்களில் பணம் மாற்றித் தரும் தொழிலில் ஈடுபட்டிருந்த நாட்டு வங்கியர் (Indigenous brokers) உள்நாட்டு, அயல் நாட்டு வணிகத்திற்கு பணவசதி அளித்தல் மட்டுமன்றி, அக் கால அரசாங்கத்திற்கு வரி வசூலித்தல், வங்கியராகச் செய லாற்றல், நாணயமடித்தல் போன்ற பணிகளையும் மேற் கொண்டிருந்தனர். நாட்டு வங்கியர்களைப் பற்றி விரிவாகப் பின்னர் வரும் அத்தியாயத்தில் பேசுவோம்.

**முகமை நிறுவனங்கள்**

ஆங்கிலேயர், இந்தியாவில் வணிகம் செய்யும் பொருட்டு ஏற்படுத்திய வணிக நிறுவனங்கள், 'முகமை வணிக நிலை யங்கள்' (Agency Houses) என்று அறியப்பட்டன. இவ் வணிக நிலையங்கள் தேயிலை, அவுரிச்செடி(Indigo) வியாபாரத்தி லேயே நாட்டங் கொண்டிருந்தன. வங்கியத் தொழிலை வியா பாரத்துடன் கூடிய ஓர் இணைத்தொழிலாகவே நடத்தி வந்த னர். அலெக்சாண்டர் & கோ என்னும் வணிக நிலையம் கி. பி. 1770 ஆம் ஆண்டு பாங்க் ஆப் இந்துஸ்தான் (The Bank of Hindusthan) என்ற வங்கியை நிறுவியது. வியா பாரத்தில் நொடித்து, 1832 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் & கோ கலைக்கப்பட்டதன் விளைவாக, அந் நிலையத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த பாங்க் ஆப் இந்துஸ்தா னும் முறிந்து போயிற்று. இதே போன்று, ஜெனரல் பாங்க்

ஆப் இந்தியா (General Bank of India), வங்காள பாங்க் (Bengal Bank) என்ற வங்கிகளும் 1785-ஐச் சுற்றித் துவக்கப் பட்டு, ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் கழித்துக் கலைக்கப் பட்டன. பிற வியாபாரத்துடன் வங்கித்தொழிலையும் கலத்தல் வங்கித் தொழிலுக்குப் பெருங்கேட்டை விளைவிக்கின்றது என் பதை அன்றைய அரசு நன்கு உணர்ந்தது. எனவே, வங்கித் தொழில் மட்டும் மேற்கொள்ளும் தனி நிறுவனத்தை ஏற்பாடு செய்ய அரசு முன் வந்தது. அதன் விளைவாக மாகாண (Presidency) வங்கிகள் தோன்றின.

**மாகாண வங்கிகள் (Presidency Banks)**

மாகாண வங்கிகளுள் முதலாவதாக நிறுவப்பெற்றது பாங்க் ஆப் பெங்கால் (Bank of Bengal) ஆகும். 1806-ல் நிறுவப் பெற்ற இவ் வங்கி 1809-ல் சாசனம் (Charter) பெற்றது. இதன் முதல் ரூ. 50 இலட்சமாக அமைந்தது. இதில் ஐந்தில் ஒரு பங்கான ரூ. 10 இலட்சத்தை அரசாங்கம் வழங்கியது. செலாவணித்தாள் வெளியிடும் உரிமை இவ் வங்கிக்கு 1823-ல் வழங்கப்பட்டது. 1839 ஆம் ஆண்டு கிளைகளைத் திறக்கவும், உள்நாட்டு நாணயமாற்றினை மேற் கொள்ளவும் வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டது. 1840 ஆம் ஆண்டு ரூ. 50 இலட்சம் முதலுடன் பாங்க் ஆப் பாம்பே (Bank of Bombay) என்ற பம்பாய் வங்கியும், 1843 ஆம் ஆண்டு ரூ. 30 இலட்சம் முதலுடன் பாங்க் ஆப் மெட்ராஸ் (Bank of Madras) என்னும் சென்னை வங்கியும் துவங்கப் பெற்றன. இவ் இரு வங்கிகளுக்கும் தலைக்கு ரூ. 3 இலட்சம் அரசாங்கம் முதலாக வழங்கியது. இவ்வங்கிகளுக்கு செலாவணித்தாள் வெளியீட்டு உரிமை வழங்கப்பட்டது. இவை மாகாண அரசு களுக்கு வங்கியராக செயலாற்றி வந்தன. இவ்வங்கிகளின் பங்குநர்கள் பெரும்பாலும் வெள்ளையரே. 1862-ல் இவ் வங்கி களுக்கு அளிக்கப்பட்டிருந்த செலாவணித் தாள் வெளியிடும் அதிகாரத்தை அரசு தன் வசம் எடுத்துக்கொண்டது.

மாகாண வங்கிகள் நல்ல முறையில் செயலாற்றி, தமது வாடிக்கையரின் நன்னம்பிக்கையைப் பெற ஏதுவாக அவற் றின் செயல்முறைகள் மீது பல கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன. அவற்றில் மிக முக்கியமானவை:- (i) அயல் நாட்டு மாற்றுச் சீட்டுக்கள் (Foreign bills) பற்றிய எந்த நடவடிக்கை யினையும் வங்கிகள் மேற்கொள்ளலாகாது; (ii) ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குக் கடன்கள் தரலாகாது; (iii) அசையாச் சொத்தினைப் பிணையாக ஏற்றுக்கொண்டு

கடன் வழங்கலாகாது. இவ் வங்கிகள் பெற்றிருந்த சலுகைகளுள் முக்கியமானது அரசினர் கணக்கில் கிடக்கும் தொகை மீது வட்டி ஏதும் செலுத்த வேண்டியதில்லை என்பதாகும். இம்மூன்று வங்கிகளும் 1920-ல் ஒருங்கிணைக்கப்பட்டு, இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா (Imperial Bank of India) உண்டாயிற்று. 1955-ல் இவ்வங்கி அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (State Bank of India) ஆக ஆயிற்று. இனி, தற்காலத்திய வங்கி முறை வளர்ந்த இரண்டாம் கட்டத்திலேற்பட்ட நிகழ்ச்சிகளைக் கண்ணுறுவோம்:

## இரண்டாம் கட்டம் கி.பி. 1860-1900

இந்திய வங்கிய வரலாற்றில் 1860 ஆம் ஆண்டு சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதற்குக் காரணம் அந்த ஆண்டில்தான் பங்கு அமைப்பு (Joint stock) முறையில் நிறுவப்பெறும் வங்கிகள் பொறுப்பு வரையறுத்து (Limited liability) அமைக்கப்படலாம் என்று சட்டம் இயற்றப்பெற்றது. 1860 ஆம் ஆண்டுக்கு முன் நிறுவப்பெற்ற வங்கிகள் வரையறுப் பொறுப்பு (Unlimited liability) அடிப்படையிலே தான் இயங்கி வந்தன. இவ் வங்கிகளில் பல முறிந்து போனமையால் அவற்றில் பணம்போட்டு வைத்திருந்த வைப்பாளர்கள், அவை வெளியிட்ட பணத்தாளை வைத்திருந்தவர்கள், அவற்றின் பங்குநர்கள் (Share-holders) ஆகியோர் பெரு நட்டத்திற்கு ஆளாயினர். இந்நிலையை மாற்றியமைத்து, வங்கிய முறையில் நம்பிக்கையூட்டி, வங்கிகளைச் செம்மையான வழியில் நிருவாகம் செய்ய 1860 ஆம் ஆண்டுச் சட்டம் வகை செய்தது.

வரையறுப் பொறுப்பு அடிப்படையில் 1860ஆம் ஆண்டுக்கு முன் நிறுவப்பெற்ற பல கூட்டுப் பங்கு வங்கிகள் தவறான நிருவாகத்தாலும், ஊக வணிகத்திலிறங்கியதாலும் முறிந்து போயின. 1860ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம், வங்கிய வளர்ச்சிக்குப் பேராதரவாக அமைந்தும், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் இத்துறையில் காணப்படவில்லை. இதற்கு ஒரு காரணம் அமெரிக்க உள்நாட்டுப் போர் 1862-ல் துவங்கிய போது அமெரிக்கப் பருத்தி இங்கிலாந்திலுள்ள நெசவாலைகளுக்கு அனுப்பப்படுதல் நின்றுபோயிற்று; இந்தியாவிலிருந்து அனுப்பப்படும் பருத்திக்குப் பெரும் கிராக்கி இங்கிலாந்தில் ஏற்படலாயிற்று; இதனால் பருத்தி வியாபாரத்தில் பெரும் ஈடுபாடு ஏற்பட்டு, நாட்டினுள் பொன்னும் வெள்ளியும் வந்து குவிந்தவண்ணமிருந்தன. இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பலர் வங்கிகளை நிறுவலாயினர்; பெருமளவு ஊக வணிகத்திலும் ஈடுபடலாயினர். 1865-ல் போர் முடிந்ததும்

நிலைமை மாறத் தொடங்கி, நெருக்கடி காலத்தில் முளைத்தெழுந்த திடமற்ற வங்கிகள் முறிந்துபட்டன. ஆக, 1865 முதல் 1900 ஆண்டு வரை கூட்டுப் பங்கு வங்கிகளின் வளர்ச்சி மந்த நிலையிலிருந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டு முடிவில் குறைந்தது ரூ. 5 இலட்சம் முதல், காப்புத் தொகை கொண்ட இந்திய கூட்டுப் பங்கு வங்கிகள் 9 மட்டுமே செயலாற்றி வந்தன. இந்த 9 வங்கிகளுடைய மொத்த முதல், காப்புத் தொகை ரூ. 1·28 கோடியாகவும், வைப்புத் தொகை ரூ. 8·07 கோடியாகவும் இருந்தது. இந்த வங்கிகளுள் முக்கியமானவை, 1865-ல் நிறுவப்பெற்ற அலகாபாத் பாங்க் ஆப் இந்தியா (Allahabad Bank of India), 1874-ல் நிறுவப்பெற்ற அல்லையன்சு பாங்க் ஆப் சிம்லா (Alliance Bank of Simla), 1881-ல் நிறுவப்பெற்ற அவுத் கமர்ஷியல் பாங்க் (Oudh Commercial Bank), 1894-ல் நிறுவப்பெற்ற பஞ்சாப் நேஷனல் பாங்க் (Punjab National Bank) ஆகும். இவற்றுள் முதற் குறிப்பிடப்பட்டுள்ள இரு வங்கிகள் வெள்ளையரின் நிருவாகத்திலும் பின்னிரண்டு வங்கிகள் இந்தியரின் நிருவாகத்திலும் இயங்கி வந்தன.

### மூன்றுவது கட்டம் கி.பி. 1900-க்குப்பின் இருபதாம் நூற்றுண்டில் வங்கிய வளர்ச்சி

இருபதாம் நூற்றுண்டின் துவக்கம் வங்கிய வளர்ச்சியில் நல்லதொரு திருப்பத்தைக் கண்டது. இந்திய நாட்டு அரசியல் வரலாற்றில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. நாடெங்கும் சுதேசி இயக்கம் பரவலாயிற்று. இந்தியர் வங்கிகளை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டனர். சிறப்பாக 1906—13 ஆண்டுகளில் பல சிறிய பெரிய வங்கிகள் நிறுவப்பெற்றன. இன்னும் செம்மையாகச் செயலாற்றிவரும் பாங்க் ஆப் இந்தியா (Bank of India), இந்தியன் பாங்க் (Indian Bank), சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா (Central Bank of India), பாங்க் ஆப் பரோடா (Bank of Baroda) முதலிய வங்கிகள் இந்தக் காலத்தில் துவங்கப்பெற்றன. முதலும் காப்பும் (Capital and Reserve) ரூ. 5 இலட்சத்திற்கும் மிகுதியாகவுள்ள வங்கிகளின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து பதினெட்டாக உயர்ந்தது. செலுத்திய முதல், காப்பு ஆகிய ரூ. 4 கோடியாகவும் மொத்த வைப்புக்கள் ரூ. 22 கோடியாகவும் இருந்தன. இதே காலத்தில் துவக்கப்பெற்று, பின்னர் முறிந்து போன வங்கிகளில் குறிப்பிடத்தக்கவை இந்தியன் ஸ்பீசீ பாங்க் (Indian Specie Bank), வங்காள நேஷனல் பாங்க் (Bengal National Bank), பம்பாய் வியாபாரிகள் பாங்க் (Bombay Merchants' Bank), ஸ்டான்டர்டு பாங்க் ஆப் பம்பாய் (Standard Bank of Bombay) முதலியனவாகும்.

**வணிக நெருக்கடியும் வங்கி நொடிப்பும்**

1913—17 ஆண்டுகளில் ஏற்பட்ட வணிக நெருக்கடியின் காரணமாக 87 வங்கிகள் நொடித்துப் போயின. இவற்றில் பல சிறு வங்கிகளேயாயினும், சில பெரு வங்கிகளும் இக்கதிக்கு ஆளாயின. இதன் விளைவாகப் பொதுமக்களுக்கு வங்கிகள்மீது நம்பிக்கை தளரலாயிற்று. வங்கிய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது. இத்தனை வங்கிகள் நொடித்துப்போனதற்கான காரணங்களைக் காண்போம். திடீர் வளர்ச்சி (Mushroom) கண்ட இவ் வங்கிகளில் பல, வங்கிகள் கடைப்பிடிக்க வேண்டிய அடிப் படைக் கோட்பாடுகளனைத்தையும் புறக்கணித்து, தம் மனம் போன போக்கில் செயலாற்றி வந்தன. மக்களை ஏமாற்றும் வகையில் மிகப் பெருந் தொகையொன்றை அனுமதித்த முதல் (Authorised Capital) என்று காட்டி, அதில் மிகச் சிறிய ஒரு பகுதியையே ஒப்பிய முதல் (Subscribed Capital) எனவும், அதனினும் குறைந்த ஒரு பகுதியையே செலுத்திய முதல் (Paid up Capital) எனவும் கொண்டிருந்தனர். மக்களை ஈர்க்கும் வகையில் பெரும் பெயர்களைக்கொண்டும் வங்கிகள் நிறுவப் பெற்றன. இவ்வங்கிகளுக்குப் போதுமான அளவு முதல் இல்லாத காரணத்தால் தமது தொழிலை நடத்தப் பொதுமக்களின் வைப்புத் தொகையினையே இவை நம்பியிருந்தன. வங்கிகளிடையே பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை திரட்டுவதில் கடும் போட்டி ஏற்பட்டது. போட்டியின் காரணமாக ஒவ்வொரு வங்கியும் தான் பிற வங்கிகளைக் காட்டிலும் உயர்ந்த வட்டி வீதமளிப்பதாக மக்களை மயக்கியது. நல்ல முறையில் தொழில் செய்தால் இந்த வட்டி வீதம் மக்களுக்கு அளிக்க முடியுமா என்பதை அவை சிந்திக்கத் தவறின. ஊக வணிகத்திற்குக் கடன் வழங்கல், குறுகிய கால வைப்புக்களைக்கொண்டு நீண்ட காலக் கடன் வழங்கல், ஒரே வகைத் தொழிலுக்குப் பெருமளவு கடன் வழங்கல், தமது பங்குகளையே பிணையமாக ஏற்றுக் கடன் வழங்கல் போன்ற தவறான செயல் முறைகள் இவ்வங்கிகளின் அழிவிற்கு வித்திட்டன.

**நிருவாகக் கோளாறுகள்**

மேற்கூறிய குறைபாடுகள் மட்டுமல்லாமல், இவ்வங்கிகளின் நிருவாகத்திலும் ஊழல்கள் பல மலிந்திருந்தன. பங்குநர்கள் பலருக்கு வங்கியில் நடப்பது என்ன என்றே தெரியாது; சிலர் அதில் அக்கறை ஏதும் எடுத்துக்கொள்வதில்லை. இயக்குநர்களாகவும் மேலாளர்களாகவும் பணியாற்றிய பலர் திறமை, தகுதி, நேர்மை ஏதுமற்றவர்களாக இருந்தனர். தணிக்கையர்க

ளாகப் பணியாற்றியவர்கள் இவர்களுடைய கையாட்களாகி, தணிக்கையைப் பயனற்ற, பொருளற்ற நிகழ்ச்சியாக்கினர். இயக்குநர்கள் தங்களுக்கும், தாங்கள் தொடர்புகொண்டுள்ள நிறுவனங்களுக்கும் கடன்களைத் தாராளமாக வழங்கிக் கொண்டனர். வங்கியின் சொத்துக்களைத் தாம் கவர்ந்துகொண்டு, ஏட்டில் வங்கிக்குச் செலுத்தற்குரிய கடன் என்று காட்டி வந்தனர். தொழில் நிலை மோசமாக இருந்த காலத்தும், கணக்குகளைப் புனைந்து மூலதனத்திலிருந்தும், மூலதனமும் மறைந்து போன நிலையில் வைப்புத் தொகையிலிருந்தும் இலாப ஈவு வழங்கப்பெற்றது. இவ்வங்கிகள் பல மிகக் குறைந்த அளவு ரொக்க இருப்பு (Cash Reserve) மட்டுமே வைத்திருந்தன. வங்கிப் பழக்கம் மக்களிடையே பரவாத நாட்டில், குறைவான அளவு ரொக்க இருப்பு வைத்துக்கொண்டு வங்கித் தொழில் நடத்துவது முடியாத காரியம். இதுகாறும் கண்ட காரணங்களால் திடீர் வளர்ச்சியுற்ற வங்கிகள் நொடித்துப் போனாலும் நல்ல முறையில் நிருவாகம் செய்யப்பட்டு வந்த இந்திய கூட்டுப் பங்கு வங்கிகள் வளர்ந்த வண்ணமிருந்தன. மாகாண வங்கிகள், நாணயமாற்று வங்கிகள் போன்று அவ்வளவு வலிமை பெற்றுத் திகழாவிடினும், இவ் வங்கிகள் நெருக்கடி எதனையும் சமாளிக்கும் திறன்பெற்று விளங்கின. இந்திய கூட்டுப் பங்கு வங்கிகளிடையே ஒத்துழைப்பு இல்லாதிருந்ததும், மாகாண, நாணயமாற்று வங்கிகள் இந்திய வங்கிகளோடு ஒத்துழைக்காமலிருந்ததும் நெருக்கடியினலேற்பட்ட இன்னல்களை மேலும் பெரிதாக்கிற்று. இந்திய கூட்டுப் பங்கு வங்கிகளை ஒன்றுகூட்டி, அவற்றிற்கு வழிகாட்ட மைய வங்கி (Central Bank) ஒன்று இல்லாத குறை உணரப்படலாயிற்று.

### முதல் உலகப் போரும் அதன் விளைவுகளும்

முதல் உலகப் போரின் விளைவாக ஏற்பட்ட திடீர் வளர்ச்சி, மேலும் பல வங்கிகள் நிறுவுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. இவ்வங்கிகளில் சில, தொழில்களுக்கு நிதியுதவி யளிக்கும் பொருட்டு நிறுவப்பெற்றன. இவற்றின் முதன்மையானது, 1917-ல் துவக்கப்பெற்ற டாடா தொழில் வங்கி (Tata Industrial Bank). 1922ஆம் ஆண்டு துவங்கிய பொருளாதார மந்த நிலை (Economic depression) காரணமாக மறுபடியும் வங்கிகள் பெருமளவில் முறிந்து போயின. அலையன்சு பாங்க் ஆப் சிம்லா, டாடா தொழில் வங்கி, பீப்பிள்ஸ் பாங்க் ஆப் நார்தர்ன் இந்தியா (People's Bank of Northern India) போன்ற பல முக்கிய வங்கிகள் நொடித்துவிட்டன. டாடா வங்கி, தொழில்களுக்கு நீண்ட காலக் கடன் அளிக்கக் குறுகிய

கால வைப்புக்களைப் பயன்படுத்தியதால் வைப்பாளர்களின் பணம் முடங்கிப்போய்ப் பின்னர் நெருடிப்பு நிலை ஏற்பட்டது. எனவே, டாடா வங்கி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. 1913 முதல் 1936 வரை முறிந்துபோன 481 வங்கிகளில் 89 பஞ்சாபிலும், 64 ஐக்கிய மாகாணங்களிலும் (United Provinces), 57 பம்பாயிலும் இயங்கிவந்தன. இதற்குக் காரணம் சுதேசி இயக்கத்தின் கிளர்ச்சியில் வங்கித்துறையில் திடீர் வளர்ச்சி கண்ட இடங்கள் பஞ்சாப், ஐக்கிய மாகாணங்கள் ஆகிய நாட்டுக் கோதுமைக் களஞ்சியங்களும், உலக வணிகத்தின் மைய நகராய் விளங்கிய பம்பாய் நகரும் ஆகும். 1937—48 ஆண்டுகளில் மேலும் 620 வங்கிகள் முறிந்து போயின. அவற்றில் குறிப்பிடத்தக்கது திருவாங்கூர் நாஷனல் அண்டு கொய்லான் பாங்க் (Travancore National and Quilon Bank) எனப்படும் திருவாங்கூர் நாட்டில் இயங்கி வந்த வங்கியாகும்.

இந்திய கூட்டுப் பங்கு வங்கிகள் இவ்வாறுக வளர்ந்த வண்ணத்தை அவை திரட்டிய வைப்புத் தொகையைக்கொண்டு அறிந்துகொள்ளலாம்.

## பட்டியல் 1—1

இந்திய பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளின் (இம்பீரியல் அல்லது ஸ்டேட் வங்கி, பின்னிணைப்புப் பட்டியலில் சேர்க்கப்படாத வங்கிகள் நீங்கலாக) மொத்த வைப்புத் தொகை 1913—1969.

| ஆண்டு | மொத்த வைப்பு ரூ. கோடி | ஆண்டு | மொத்த வைப்பு ரூ. கோடி |
|---|---|---|---|
| 1913 | 24 | 1923 | 48 |
| 1914 | 18 | 1924 | 55 |
| 1915 | 19 | 1925 | 58 |
| 1916 | 26 | 1926 | 63 |
| 1917 | 32 | 1927 | 64 |
| 1918 | 42 | 1928 | 66 |
| 1919 | 61 | 1929 | 66 |
| 1920 | 73 | 1930 | 67 |
| 1921 | 80 | 1931 | 67 |
| 1922 | 65 | 1932 | 76 |

பட்டியல் 1—1 (தொடர்ச்சி)

| ஆண்டு | மொத்த வைப்பு ரூ. கோடி | ஆண்டு | மொத்த வைப்பு ரூ. கோடி |
|---|---|---|---|
| 1933 | 76 | 1952 | 572 |
| 1934 | 82 | 1953 | 596 |
| 1935 | 90 | 1954 | 653 |
| 1936 | 104 | 1955 | 727 |
| 1937 | 108 | 1956 | 799 |
| 1938 | 107 | 1957 | 909 |
| 1939 | 113 | 1958 | 1027 |
| 1940 | 130 | 1959 | 1173 |
| 1941 | 155 | 1960 | 1185 |
| 1942 | 223 | 1961 | 1300 |
| 1943 | 365 | 1962 | 1441 |
| 1944 | 510 | 1963 | 1637 |
| 1945 | 644 | 1964 | 1883 |
| 1946 | 673 | 1965 | 2754 |
| 1947 | 669 | 1966 | 3119 |
| 1948 | 640 | 1967 | 3515 |
| 1949 | 581 | 1968 | 3957 |
| 1950 | 596 | 1969 | 4560 |
| 1951 | 587 | | |

மேற்காணும் அட்டவணையை நோக்கினல் 1917 வரை வைப்புக் குறைவாக இருந்தது புலனுகும். முதல் உலகப் போர் முடிந்தவுடன் ஏற்பட்ட விருவிருப்பான வளர்ச்சிக் காலத்தில் வைப்பு வளர்ந்து வந்ததும், பின்னர் 1922 முதல் 1933 வரை வளர்ச்சி குன்றிப் போனதும், பொருளாதார சூழ்நிலை சாதகமாக இல்லாக் காலங்களில் வங்கித் தொழில் எவ்வளவு பாதிக்கப்பட்டது என்பதை விளக்குகிறது. 1947 ஆம் ஆண்டு முதல் 1953 வரை இந்தியா பாகிஸ்தான் என்று இரு நாடுகளாக துணைக்கண்டம் பிரிவினை செய்யப்பட்டது காரணமாக வைப்புத் தொகை குறைந்து சென்றதைக் காண்கிறோம். 1953க்குப் பின்னர், வளர்ச்சி நல்ல முறையில் அமைந்துள்ளதும் நன்கு புலனுகிறது.

**அயல்நாட்டு வங்கிகள் வளர்ச்சி**

இந்திய வங்கிகள் வளர்ந்துவந்த இதே நேரத்தில் நாணய மாற்று வங்கிகளும் நிறுவப்பெற்று வந்தன. இவ்வங்கிகளை அயல்நாட்டு வங்கிகள் என்று கூறுவதும் பொருந்தும். இவற்

றின் தலைமை அலுவலகம் அயல்நாடுகளில் இருக்கும். இந்தியாவில் கிளை அலுவலகங்களை நிறுவி, அவற்றின் வழி வங்கித் தொழிலை நாணயமாற்று வங்கிகள் செய்துவந்தன; இன்றும் (1972 துவக்கத்தில்) 15 நாணயமாற்று வங்கிகள் தமது 130 கிளைகள் வழி வங்கித் தொழில் நடத்தி வருகின்றன. அரசின் சாசனப்படியோ அல்லது இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படியோ ஏற்படுத்தப்பட்ட வங்கிகளில் சில இவற்றில் அடங்கும். 1853 ஆம் ஆண்டு வரை கிழக்கிந்தியக் கம்பெனி (East India Company) யும் மற்றச் செயலாண்மை வணிக நிலையங்களும் (Agency Houses) நாணயமாற்று நடவடிக்கைகள் (Exchange transactions) மூலம் தமக்குக் கிடைத்து வரும் ஆதாயத்தைத் தம்மிடமே தக்க வைத்துக்கொள்ள வேண்டி இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய அயல்நாட்டு வங்கிகள் இந்தியாவில் கிளைகள் துவக்குவதைத் தடைசெய்துவந்தன. இந்திய கூட்டுப்பங்கு வங்கிகளும் மாகாண வங்கிகளும் நாணய மாற்று, அனுப்புகை (Remittance) நடவடிக்கைகளை நட்ட நேர்வுக்கு அஞ்சி மேற்கொள்ளுவதில்லை. இந்தச் சூழ்நிலையில் 1842-ல் ஓரியன்டல் பாங்கிங் கார்ப்போரேஷன் (Oriental Banking Corporation) என்னும் ஆங்கிலேய வங்கி, அரசினர் சாசனம் (Royal Charter) பெற்று, இந்தியாவில் வங்கித்தொழில் செய்யும் உரிமையைப் பெற்றது. நாணயமாற்று நடவடிக்கை இவ்வங்கியின் முற்றுரிமையாகத் திகழ்வது விரும்பத்தக்கதல்ல என்று கிழக்கிந்தியக் கம்பெனி கருதியதால் இவ்வகை வங்கிகள் மேலும் சிலவற்றை நிறுவலாம் என்று ஆங்கில அரசுக்கு அறிவுறுத்தியது. இதன் விளைவாக 1853 ஆம் ஆண்டு அரசினர் சாசனப்படி சார்ட்டர்ட் பாங்க் ஆப் ஏஷியா (Chartered Bank of Asia) நிறுவப்பெற்றது. பிற்காலத்தில் இவ்வங்கி மர்க்கென்டைல் பாங்க் ஆப் இந்தியா, லண்டன் அண்டு சைனு (Mercantile Bank of India, London and China) என்று பெயர் மாற்றம் பெற்றது.

கல்கத்தாவில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட கல்கத்தா பாங்கிங் கார்ப்பொரேஷன் (Calcutta Banking Corporation) 1863 ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. 1864-ல் இவ்வங்கியின் பெயர் நேஷனல் பாங்க் ஆப் இந்தியா (National Bank of India) என மாற்றப்பட்டது. இவ்வங்கியின் தலைமை அலுவலகம் 1886-ல் லண்டனுக்கு மாற்றப்பட்டது. தற்போது இவ்வங்கி நேஷனல் அண்டு கிரின்ட்லேஸ் பாங்க் (National and Grindlays Bank) என்று பெயர் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் இவ்வங்கியும் கிரின்ட்லேஸ் பாங்க்

என்ற மற்ெறாரு வங்கியும் 1958-ல் இணைந்துவிட்டதாகும். பற்பல அயல்நாட்டு வங்கிகள் இந்திய துறைமுகப் பட்டினங்களில் நிறுவப்பெற்று வந்தவண்ணமாயிருந்தும் முதல் உலகப் போர் காரணமாகவும், பொருளாதார மந்த நிலைக்காலத்தில் அதன் காரணமாகவும், பின்னர் இரண்டாம் உலகப்போர் காரணமாகவும் வங்கிகள் பல தமது இந்தியக் கிளைகளை மூடி விட்டன.

நாணயமாற்று வங்கிகள் வளர்ந்த நிலையினைப் பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்தும். 1972 துவக்கத்தில் 15 வங்கிகள் 130 கிளைகள் வழி இந்தியாவில் செயலாற்றி வருகின்றன.

## பட்டியல் 1—2

**அயல்நாட்டு (நாணயமாற்று) வங்கிகளின் வளர்ச்சி**

| ஆண்டு | இந்தியாவில் வைப்புத் தொகை ரூ. கோடி | ஆண்டு | இந்தியாவில் வைப்புத் தொகை ரூ. கோடி |
|---|---|---|---|
| 1870 | ·52 | 1937 | 73·20 |
| 1880 | 3·40 | 1938 | 67·20 |
| 1890 | 7·54 | 1939 | 74·17 |
| 1900 | 10·50 | 1940 | 85·32 |
| 1910 | 24·79 | 1941 | 106·73 |
| 1920 | 74·81 | 1942 | 116·85 |
| 1925 | 70·54 | 1943 | 140·19 |
| 1926 | 71·54 | 1944 | 165·37 |
| 1927 | 68·86 | 1945 | 179·00 |
| 1928 | 71·83 | 1946 | 169·49 |
| 1929 | 66 66 | 1947 | 163·67 |
| 1930 | 68·11 | 1948 | 160·19 |
| 1931 | 67·47 | 1949 | 161·38 |
| 1932 | 73·06 | 1950 | 170·39 |
| 1933 | 70·78 | 1951 | 167·99 |
| 1934 | 71·40 | 1952 | 175·23 |
| 1935 | 76·17 | 1953 | 164·70 |
| 1936 | 75·03 | 1954 | 177·63 |

பட்டியல் 1—2 (தொடர்ச்சி)

| ஆண்டு | இந்தியாவில் வைப்புத் தொகை ரூ. கோடி | ஆண்டு | இந்தியாவில் வைப்புத் தொகை ரூ. கோடி |
|---|---|---|---|
| 1955 | 195·61 | 1963 | 291·61 |
| 1956 | 188·77 | 1964 | 322·11 |
| 1957 | 205·63 | 1965 | 347·32 |
| 1958 | 198·63 | 1966 | 375·68 |
| 1959 | 228·80 | 1967 | 402·84 |
| 1960 | 242·55 | 1968 | 435·22 |
| 1961 | 263·61 | 1969 | 487·22 |
| 1962 | 267·25 | | |

இந்த வகை வங்கிகளின் நடவடிக்கைகளைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

**கூட்டுப்பங்கு வங்கிகள் வளர்ச்சி**

இருபதாம் நூற்றாண்டில் கூட்டுப்பங்கு வங்கிகளின் வளர்ச்சி: இந் நூற்றாண்டின் துவக்கத்தில் வங்கி வசதிகள் சில நகரங்களில் மட்டுமே இருந்தன. 1916ஆம் ஆண்டில் மக்கள் தொகை ஐயாயிரத்திற்கு மேற்பட்ட நகரங்கள் 2,500-ல் 140 நகரங்களில் மட்டுமே வங்கிகள் செயலாற்றி வந்தன. 1926-ல் 339 நகரங்களாகவும், 1936-ல் 514 நகரங்களாகவும் இவ்வெண்ணிக்கை உயர்ந்தது. 1921—36 ஆண்டுகளில் மக்கள் தொகை 10,000 க்கும் குறைவாக உள்ள நகரங்களில் வங்கிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக உயர்ந்த போதிலும், மக்கள் தொகை 20,000-க்கு மேலுள்ள நகரங்களில் 38 விழுக்காடு அளவு இடங்களில் வங்கி வசதி ஏதும் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பஞ்சாப் ஐக்கிய மாகாணங்கள், சென்னை, பம்பாய், வங்காள மாகாணங்கள் ஆகியவற்றில் வங்கிகள் பரவலாகக் காணப்பட்ட போதிலும், மற்ற இடங்களில், அதிலுஞ் சிறப்பாக பீகார், ஒரிசா, அஸ்ஸாம், மத்திய மாகாணங்கள் போன்ற இடங்களிலும் மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல இராச்சியங்களிலும் வங்கி வசதி மிகக் குறைவாகவே இருந்தது. 1936 ஆம் ஆண்டில் மக்கள் தொகை இருபதாயிரத்திற்கு மேற்பட்ட நகரங்களில் 62 விழுக்காடு அளவிற்கு வங்கி வசதிகள் பெற்றிருந்தன.

**சீரான வளர்ச்சி இல்லாமைக்குக் காரணம்**

வங்கிகளின் வளர்ச்சி ஒரு சீரான முறையில் அமையாமல் சில இடங்களில் நிறைய வங்கிகளும், பிற இடங்களில் சில

வங்கிகளும், மற்றும் சில இடங்களில் வங்கி யேதுமில்லாத நிலையையும் காணும்பொழுது இதற்குரிய காரணங்களை ஆராயத் தோன்றுகிறது. வங்கி வசதி யேதுமற்ற ஒரு நகரத்தில் முதன் முதலாகத் துணிவும் முயற்சியும் கொண்ட ஒரு வங்கி தனது கிளையினை நிறுவும். அதைக் கண்டு, உடனே பிற வங்கிகளும் அதே நகரத்தில் தத்தம் கிளைகள் தேவையா, அந்நகரில் வைப்புத் தொகை திரட்ட அத்தனை கிளைகளுக்கும் வாய்ப்பும் ஆற்றலும் உண்டா என்றெல்லாம் ஆராய்வது அக்காலத்தில் அறிந்திடாத ஒரு நிகழ்ச்சியாகும். அக் காலத்தில் (1936 ஆம் ஆண்டில்) பாங்க் ஆப் இந்தியா, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, அலகாபாத் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், பாங்க் ஆப் பரோடா என்ற வங்கிகள் ஐம்பெரும் (Big Five) வங்கிகளென்றும், இவற்றுடன் மேலும் பாங்க் ஆப் மைசூர், இந்தியன் பாங்க் ஆகிய இரண்டையும் சேர்த்து எழு பெரும் (Big Seven) வங்கிகளென்றும் அழைப்பது வழக்கம். இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா (Imperial Bank of India) தனது கிளைகளை ஏற்படுத்தியிருந்த இடங்களில் எழு பெரும் வங்கிகளும் தமது கிளைகளைத் துவக்குவதில் ஈடுபாடு காண்பித்தன. இதன் விளைவாக, பெரு நகரங்களில் இம்பீரியல் வங்கியும் ஐம்பெரும் வங்கிகளும் கிளைகளை நிறுவி, வங்கி வசதிகளை விரிவு படுத்தின. சிறிய நகரங்களில் சிறு வங்கிகள் மட்டுமே செயலாற்றி வந்தன. சுருங்கக் கூறின், பெரு வங்கிகள் பெரு நகரங்களிலும், சிறு வங்கிகள் சிறு நகரங்களிலும் செயலாற்றி வந்தன. வங்கிகளின் வளர்ச்சி நாடு முழுதும் ஒரு சீராக வளராமைக்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் முக்கியமானவை, வங்கித் துறையில் முன்னோடிகளாக விளங்கிய பெரு வணிகர்கள் மிகச்சிலரே. இவர்களில் பெரும்பாலோர் முன்னேற்பாடுடன் திட்டங்களைத் தீட்டி வங்கிகளைத் துவக்கவில்லை. ஏதோ அவரவர் மனத்திற்குப்பட்டவாறு தாம் விரும்பிய இடங்களில், தமக்கு வாய்ப்பிருக்குமே என்று தோன்றிய இடங்களில் வங்கிகளைத் துவக்கினர். இவ்வங்கிகளின் வளர்ச்சி அங்கு நிலவிய போட்டியையொட்டி அமைந்தது. இம்பீரியல் வங்கியும் நாணயமாற்று வங்கிகளும் இவ்வங்கிகளுக்குப் போட்டியாக இருந்தன. இந்திய மன்னர்கள் ஆட்சியிலிருந்த இராச்சியங்களில் ஆங்கில நிருவாகத்திலுள்ள இந்திய வங்கிகள் கிளைகளைத் திறக்கத் தயங்கின. அங்குள்ள நிருவாக, சட்டமுறை சிக்கல்களே இத் தயக்கத்திற்குக் காரணமாயிருந்தன. 1934 ஆம் ஆண்டில் முக்கியமான 108 சுதேசி மன்னர்கள் ஆட்சியிலிருந்த இராச்சியங்களில் 20 இராச்சியங்களில் மட்டுமே வங்கி வசதி அமைந்திருந்தது என்பது கூர்ந்து நோக்கத்

தக்கது. ஐம்பெரு வங்கிகளுள் ஒன்ருன பாங்க் ஆப் பரோடா மட்டுமே தனது கிளைகளுள் 60 விழுக்காடு எண்ணிக்கையை மக்கள் தொகை 20,000 க்குக் குறைவுள்ள இடங்களில் அமைத்திருந்தது.

**அண்மைக்கால நிகழ்ச்சிகள்**

இரண்டாம் உலகப் போரும், அதற்குப் பின் இந்தியா கண்டு வரும் பொருளாதார வளர்ச்சியும் வங்கி வளர்ச்சியில் காணக்கிடந்த இட அமைப்புப் பற்றிய குறைபாடுகளை பெரும் பாலும் அகற்ற உதவியுள்ளனர். 1969 ஆம் ஆண்டு பதினுன்கு பெரு வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்ட பின்னர், வங்கிய வளர்ச்சி மேலும் சீராக அமையலாயிற்று. 1938-லிருந்து 1945 வரை பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள்(Scheduled Banks) அலுவலக எண்ணிக்கை 1128-லிருந்து 2933 ஆக உயர்ந்தது. இக்காலத்தில் முதலும் காப்புநிதியும் ரூ. ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெரு வங்கிகள் (Non Scheduled Banks) அலுவலக எண்ணிக்கை 921-லிருந்து 1934 ஆக உயர்ந்தது. 1948-ல் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளின் அலுவலகங்கள் 3,024-ம் பட்டியலில் இடம் பெரு வங்கிகளின் அலுவலகங்கள் 1767-ம் ஆக இருந்தன. படிப்படியாகப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளின் அலுவலகங்கள் மேலும் பெருகி, 1964-ல் 5,468ஆக நின்றது. இதே ஆண்டில் பட்டியலில் இடம் பெரு வங்கி அலுவலகங்கள் 326 ஆகக் குறைந்து நின்றது. பெரு வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்ட பின் வங்கி வளர்ச்சி மேலும் சீரிய முறையில் ஆக்கம் பெற்று, 1971 ஜூன் இறுதியில் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளின் அலுவலகங்கள் எண்ணிக்கை 9,476ஆக உயர்ந்தது. பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெரு வணிக வங்கிகளின் அலுவலகங்கள் எண்ணிக்கை மேலும் குறைந்து, 121 என்ற அளவில் இருந்தது. எல்லா வகை வங்கிகளின் அலுவலகங்களையும் கணக்கில் சேர்த்துப் பார்த்தால் 1971 அக்டோபர் இறுதியில் 12,434 வங்கி அலுவலகங்கள் செயற்பட்டு வந்தன. 1974 இறுதிக்குள் மேலும் ஐயாயிரம் அலுவலகங்கள் திறக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வணிக வங்கிகளில் பெரிய பதினுன்கு வங்கிகள் ஜூன் 1969-ல் நாட்டுடைமையாக்கப்பட்டது முதல் 1971 அக்டோபர் வரை திறக்கப்பட்ட 4,172 அலுவலகங்களில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட அலுவலகங்கள் வங்கி வசதி ஏதும் இல்லாத இடங்களில் திறக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**வங்கி அலுவலகங்கள் பரவியுள்ள முறைமை**

வங்கி அலுவலகங்கள் மக்கள் தொகை மிகுந்த இடங்களில் மட்டுமே திறக்கப்படுகின்றன; அதிலும் முக்கியமாக நகர்ப் புறங்களில் மட்டுமே திறக்கப்படுகின்றன; கிராமப்புறம் புறக் கணிக்கப்படுகிறது என்ற குறை பலப்பல ஆண்டுகளாக இருந்து வந்தது. ஆனால் இன்று நிலைமை வெகுவாக மாறி விட்டது; இன்னமும் மாறி வரும். கீழே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் நிலையினை நன்கு விளக்கும். 1948 ஆம் ஆண்டு வங்கி அலுவலகங்களில் 44% மக்கள்தொகை 50,000க்கும் அதிக முள்ள 134 நகரங்களில் செயலாற்றி வந்தன; 56% அலுவ லகங்கள் மக்கள் தொகை 50,000க்கும் குறைவான 1,400 இடங் களில் பணியாற்றிவந்தன. அதாவது நகர்ப்புறங்களில் 8,473

## பட்டியல் 1—3

**வங்கி அலுவலகங்கள் பரவியுள்ள முறைமை (விழுக்காடு)**

| | டிசம்பர் 1951 | | டிசம்பர் 1961 | | மே 1971 | |
|---|---|---|---|---|---|---|
| | மக்கள் தொகை | வங்கி அலுவலகங்கள் | மக்கள் தொகை | வங்கி அலுவலகங்கள் | மக்கள் தொகை | வங்கி அலுவலகங்கள் |
| மா நகரங்கள் (ஓர் இலட்சம் மக்கள் தொகைக்கு மேல்) | 9·5 | 42·8 | 8·7 | 39·1 | 10·4 | 30·8 |
| நகரங்கள் (பத்தா யிரம் முதல் இலட்சம் வரை மக்கள் தொகை) | 7·2 | 48·2 | 9·1 | 48·2 | 9·3 | 33·7 |
| கிராமப்புறம் (மக்கள் தொகை 10,000க்குக் குறைவானது) | 83·3 | 9·0 | 83·3 | 12·7 | 80.3 | 35·5 |
| மொத்தம் (எல்லா இடங்களும்) | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 |

நபர்களுக்கு ஒரு வங்கியும், பிற இடங்களில் 6,143 மக்களுக்கு ஒரு வங்கியும் இருந்துவந்தது. நாடு முழுவதையும் கணக்கில் கொண்டால் 65,884 நபர்களுக்கு ஒரு வங்கி செயற்பட்டு வந்தது.

மக்கள் தொகை அடிப்படையில் வங்கிகள் அமைந்திருந்த முறையைக் காண்போம் :

## பட்டியல் 1—4

**பலவகை இடங்களில் வங்கி அலுவல்கள் பரவியுள்ள முறைமை**

| மக்கள் தொகை அடிப் படையில் இடங்கள் பாகுபாடு | 1951 | 1956 | 1961 | 1969 |
|---|---|---|---|---|
| 10 இலட்சத்துக்கு மேல் | 327 | 429 | 677 | 1311 |
| 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை | 211 | 134 | 218 | 433 |
| 2 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை | 294 | 294 | 377 | 740 |
| 1 இலட்சம் முதல் 2 இலட்சம் வரை | 303 | 307 | 445 | 704 |
| 75,000 முதல் 1 லட்சம் வரை | 100 | 120 | 227 | 343 |
| 50,000 முதல் 75,000 வரை | 240 | 286 | 333 | 456 |
| 25.000 முதல் 50,000 வரை | 412 | 479 | 689 | 1001 |
| 10,000 முதல் 25,000 வரை | 524 | 625 | 870 | 1605 |
| 6,000 முதல் 10,000 வரை | 148 | 175 | 271 | 1025 |
| 5,000-க்குக் குறைவாகப் | 78 | 75 | 68 | 608 |
| பாகுபடுத்தா வகை | 10 | 44 | 218 | 600 |
| மொத்தம் | 2,627 | 2,966 | 4,384 | 8,826 |

வணிக வங்கித்துறையில் பெரும்பகுதி நாட்டுடைமையாக் கப்பட்ட பின்னர், வணிக வங்கிக் கிளைகள் பல இடங்களில் பரவியுள்ள நிலையைக் கீழே காணலாம்.

## பட்டியல் 1—5

**வணிக வங்கிகளின் கிளைகள் பரவியுள்ள முறைமை**

| | வங்கிக் கிளைகள் | | கால இறுதியில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 1969 | | ஜூன் 1970 | | டிசம்பர் 1970 | | ஜூன் 1971 | |
| | எண்ணிக்கை | மொத்தத்தில் சதவீதம் | எண்ணிக்கை | மொத்தத்தில் சதவீதம் | எண்ணிக்கை | மொத்தத்தில் சதவீதம் | எண்ணிக்கை | மொத்தத்தில் சதவீதம் |
| மாநகரங்கள் | 3,108 | 37·5 | 3,374 | 33·3 | 3,538 | 31·8 | 3,718 | 31·0 |
| நகரங்கள் | 3,322 | 40·1 | 3,695 | 36·5 | 3,880 | 34·6 | 4.016 | 33·4 |
| கிராமப் புறம் | 1,832 | 22 4 | 3,062 | 30·2 | 3,766 | 33·6 | 4,279 | 35·6 |
| மொத்தம் | 8,262 | 100·0 | 10,131 | 100·0 | 11,184 | 100·0 | 12,013 | 100·0 |

மேற்கண்ட புள்ளி விவரங்கள் புலப்படுத்தும் செய்திகளாவன : 1951ஆம் ஆண்டில் வங்கி அலுவலகங்களில் பெரும்பகுதி நகரங்களிலும் மாநகரங்களிலும் மட்டுமே மண்டிக் கிடந்தன. கிராமப் புறங்களில் மிகச் சில வங்கி அலுவலகங்களே திறக்கப்பட்டிருந்தன. 1961-ல் நிலைமை சிறிது மாறியது. கிராமப் புறங்களிலும் வங்கி அலுவலகங்கள் திறக்கப்பட்டன. கிராமப் புறங்களிலுள்ள வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 226-லிருந்து 339 ஆக உயர்ந்தது. பெரிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுமுன் இவ்வெண்ணிக்கை 1,832 ஆயிற்று. இரண்டே ஆண்டுகளில், அதாவது ஜூன் 1969-லிருந்து ஜூன் 1971க்குள் கிராமப்புறங்களில் மேலும் 2447 வங்கி அலுவலகங்கள் திறக்கப்பட்டது வங்கிய வரலாற்றில் சிறப்பானதொரு நிகழ்ச்சியாகும்.

### கிளைப் பெருக்கம்

வங்கிய வளர்ச்சி பரவிவந்த தன்மையைக் கண்டோம். இனி வங்கிகள் எவ்வண்ணம் கிளைகளைப் பெருக்கி வந்துள்ளன என்பதைக் காண்போம். 1916 முதல் 1936 வரை, கிளைகள்

நான்கு மடங்காகப் பெருகின. 1937—45 ஆண்டுகளில் கிளை களின் எண்ணிக்கை இரட்டிப்பாயிற்று. அயல் நாட்டு வங்கி களின் கிளைகள் எண்ணிக்கை 1916-ல் 45 ஆக இருந்தது. 1926-ல் 77 ஆகி 1945-ல் 81 ஆனது. இக் கிளைகள் பெரும் பாலும் துறைமுகப் பட்டினங்களில் மட்டுமே அமைந்தன. 1948-ல் இக் கிளைகளின் எண்ணிக்கை 62 ஆகவும், 1954-ல் 64 ஆகவும், 1964-ல் 83 ஆகவும், 1971-ல் 130 ஆகவும் இருந்தது.

மாகாண வங்கிகள் மூன்றின் இணைப்பால் ஏற்படுத்தப் பட்ட இம்பீரியல் வங்கி 1921-28-ல் 100 கிளைகளைத் திறந்தது. இதே நேரத்தில் இந்திய வங்கிகள் 250 கிளைகளைத் துவங்கின. அடுத்த 16 ஆண்டுகளில் இந்திய வங்கிகள் 2,000 புதிய கிளை களை ஏற்படுத்தின. இந்தக் காலத்தில் இம்பீரியல் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 433-ஐ எட்டிற்று. 1954-ல் பின் னிணைப்புப் பட்டியலிலுள்ள இந்திய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 2,242 ஆகவும், பட்டியலில் இடம் பெறு வங்கி களின் கிளைகள் 1,199 ஆகவும் இருந்தன. 1964-ல் இவற்றின் எண்ணிக்கை முறையே 4,242 ஆகவும் 326 ஆகவும் இருந்தன. இம்பீரியல் வங்கி தனது கிளைகளை 1954-ல் 455 ஆகக் கொண் டிருந்தது. 1955-ல் வங்கி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்று மாறியது. 1964-ல் வங்கி 1136 கிளைகளைக் கொண் டிருந்தது; 1971 ஜூன் இறுதியில் 2,286 கிளைகளைக் கொண் டிருந்தது.

கீழ்க்காணும் அட்டவணை, கடந்த 14 ஆண்டுகளில் வங்கி அலுவலகங்கள் வளர்ந்துவந்த நிலையினைக் காட்டுகிறது:

## பட்டியல் 1—6

**வணிக வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை**

| | 1957 | 1964 | 1971 ஜூன் 30 |
|---|---|---|---|
| ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா | 622 | 1,136 | 2,286 |
| அயல்நாட்டு வங்கிகள் | 67 | 90 | 130 |
| பிற இந்திய பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் | 2,584 | 4,264 | 9,476 |
| பின்னிணைப்புப் பட்டியலிடம் பெறு வங்கிகள் | 947 | 326 | 121 |
| மொத்தம் | 4,220 | 5,816 | 12,013 |

ஜூன் 1969-ல் பெரு வணிக வங்கிகள் பதினான்கு, நாட்டுடைமையாக்கப்படுமுன் எல்லா வகை வணிக வங்கிகளும் சேர்ந்து 8,262 கிளைகள் கொண்டிருந்தன. அப்போது இருந்த மக்கள் தொகைக் கணக்குப்படி 65,000 நபர்களுக்கு ஒரு வங்கி என்ற நிலை இருந்தது. தற்போது அதாவது ஜூன் 1971-ல் 45,000 நபர்களுக்கு ஒரு வங்கி என்ற அளவில் வங்கிகளின் அலுவலக எண்ணிக்கை வளர்ந்துள்ளது.

**வைப்புத் தொகை வளர்ச்சி**

வங்கிய வளர்ச்சியை எண்ணிக்கை என்ற கோணத்திலிருந்து இதுவரை கண்டோம். இனி வைப்பு (Deposit)த் தொகை வளர்ந்த விவரத்தைக் காண்போம். இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் நாட்டிலுள்ள மாகாண, அயல் நாட்டு இந்திய வங்கிகள் ஆகிய எல்லாம் சேர்த்து ரூ. 30 கோடி அளவே வைப்புத் தொகையாகப் பெற்றிருந்தன. 1914 இறுதியில் இத்தொகை ரூ. 87 கோடியாக வளர்ந்திருந்தது. 1931-ல் மொத்த வைப்புத் தொகை ரூ. 200 கோடியாக இருந்தது. மேலும் பத்து ஆண்டுகள் கழித்து 1941-ல் வைப்பு ரூ. 370, கோடியாக வளர்ந்திருந்தது. 1947 இறுதியில் இத் தொகை

## பட்டியல் 1—7

பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் கிளையொன்றுக்குக் கொண்டிருந்த வைப்புத்தொகை—மக்கள் தொகை அடிப்படையில் இடங்கள் பாகுபடுத்தியவாறு ரூ. ஆயிரக் கணக்கில் அலுவலகம் ஒன்றுக்கு வைப்புத்தொகை.

| டிசம்பர் | மாநகரங்கள் | நகரங்கள் | கிராமப் புறம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1937 | 114,73 | 16,02 | 2,17 | 26,19 |
| 1946 | 157,98 | 30,84 | 3,80 | 40,80 |
| 1950 | 148,73 | 21,01 | 4,73 | 31,17 |
| 1956 | 127,64 | 22,13 | 6,14 | 36,65 |
| 1960 | 138,52 | 24,05 | 7,86 | 37,78 |
| 1966 | 146,91 | 37,05 | 10,47 | 49,89 |
| 1969 | 171,11 | 47,05 | 14,33 | 57,60 |
| செப். 1970 | 183,79 | 45,70 | 15,73 | 55,69 |

ரூ. 1,118 கோடியாக வளர்ந்தது. 1957-ல் ரூ. 1,480 கோடியாக இருந்த வைப்புத் தொகை 1964-ல் ரூ. 2,849 ஆக உயர்ந்து, 1971 இறுதியில் ரூ.6,856 கோடியாக மேலும் வளர்ந்து நின்றது. வணிக வங்கிகளில் பெரும் பகுதி நாட்டுடைமையாக்கப்படும் முன் (ஜூன் 1969) அவை திரட்டியிருந்த வைப்புத் தொகை ரூ. 4,646 கோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

வைப்புத் தொகை திரட்டுவதற்குக் கிராமப் புறங்களில் நல்ல வாய்ப்பு இருக்கிறதென்பதை வங்கிகள் கடந்த சில ஆண்டுகளாகவே உணரத் தொடங்கியுள்ளன. கீழ்க்காணும் புள்ளி விவரம் கடந்த 33 ஆண்டுகளில் சராசரி வங்கி அலுவலகம் ஒன்றிற்கு எவ்வளவு வைப்புத்தொகை திரட்டப்பட்டது என்பதை விளக்கும்.

கிராமப் புறங்களில் வைப்பு அளவு அதிகரித்துள்ளது போன்று, நகர்ப்புறங்களிலும் மாநகரங்களிலும் அதிகரிக்கவில்லை என்பது புலனாகிறது. 1937-ல் கிராமப்புறக் கிளையொன்றில் ரூ.2,17,000 மட்டுமே சராசரி வைப்புத் தொகையாகத் திரட்ட முடிந்தது. 1970-ல் இத்தொகை ரூ. 15,73,000 உயர்ந்திருப்பது கிராமப் புறத்திலுள்ள வாய்ப்பைச் சுட்டிக் காட்டுகிறது. இங்கு நாம் மேலும் நினைவு படுத்திக்கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உண்டு. கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக, வங்கிகள் பெருமளவில் கிராமப் புறங்களில் கிளைகளைத் திறந்துள்ளன என்பதே அச்செய்தி. இத்தனை கிளைகளைத் திறந்தும், அலுவலகம் ஒன்றுக்கு வைப்புத் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது என்றால், அது கிராமப் புறங்களில் பயன்படுத்திக் கொள்ளாத வாய்ப்பு எவ்வளவுள்ளதென்பதை உணரலாம்.

**கடன் வசதியளிப்பு நிலை**

வங்கிய வளர்ச்சியினை அளக்க உதவும் பல அளவுகோல்களில் வங்கிகள் அளிக்கும் கடன் வசதிகளும் ஒன்றாகும். வங்கிகள் கடன் அளிக்கும் திறன், அவை திரட்டும் வைப்புத் தொகையைப் பொறுத்துள்ளது. கிராமப் புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் அளிக்கப்படும் கடன் வசதிகளின் அளவு மாநகரங்களில் அளிக்கப்படுவதைக் காட்டிலும் குறைவாகவே அமைந்துள்ளது. அதாவது கிராமப் புறங்களிலிருந்தும் நகர்ப் புறங்களிலிருந்தும் திரட்டும் வைப்புத் தொகைக்குத் தக்க விழுக்காட்டளவுக்குஅவ்விடங்களில் கடன் வசதிகள் வழங்கப்படுவதில்லை. 1950 ஆம் ஆண்டில் மாநகரங்களில் திரட்டப்பட்ட வைப்புத்

தொகைமொத்தம் திரட்டிய வைப்புத் தொகையில் 45.3% ஆக இருந்தது. அதே ஆண்டு மாநகரங்களில் அளிக்கப்பட்ட கடன் வசதியளவு மொத்தக் கடன்களில் 58.5% ஆக இருந்தது. 1960 ஆம் ஆண்டின் இத்தொகையளவு முறையே 51·8%, 59·6% ஆகவும், 1966-ல் முறையே 46·8%, 60·0% ஆகவும், பின்னர் 1969-ல் முறையே 45·3%, 61·8% ஆகவும் இருந்தது. வைப்புத்தொகை திரட்டுவது ஓரிடமாகவும், கடன் வசதிகள் அளிக்கப்படுவது மற்றோரிடமாகவும் இருந்துவந்தது. இதனால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி பரவலாக ஏற்படுவது அரிதாகியது. இக் குறைபாட்டை நீக்க, தேவைக்கேற்றவாறு பரவலாகக் கடன் வசதியளிக்கும் முறைமை கையாளப்பட்டு வருகிறது. சிறப்பாகப் பெரிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டது முதல் புறக்கணிக்கப்பட்ட கிராமப் புறங்களுக்கு உழவுத் தொழில் பற்றிய கடன்களும், சிறு தொழில்கள் மேற்கொண்டோருக்கும், தாமே தொழில் செய்து பிழைக்க விரும்புவோருக்கும் கடன்களும் கணிசமான அளவுக்கு வழங்கப்படுகின்றன. கிராமப்புற வங்கிகளில் 1950-ல் வழங்கப்பட்ட கடன் ரூ. 7·7 கோடி 1960-ல் ரூ. 22·6 கோடியாக உயர்ந்து, 1966-ல் ரூ. 48·6 கோடியாக மேலும் உயர்ந்தது. 1969-ல் இத்தொகை ரூ. 115·3 கோடியாக மேலும் உயர்ந்து, 1970 செப்டம்பரில் ரூ. 176·4 கோடியாக இருந்தது. கிராமப்புறங்களில் 1956-ல் ரூ. 15·9 கோடி மட்டுமே வைப்பாகத் திரட்ட முடிந்தது. இத்தொகை 1966-ல் ரூ. 108·3 கோடியாக வளர்ந்தது. 1969-ல் இத்தொகை ரூ. 306·3 கோடியாகி, செப்டம்பர் 1970-ல் ரூ. 423·2 ஆயிற்று. அடுத்த பக்க அட்டவணை செய்திகளைத் தெளிவாக விளக்கும்.

நம் நாட்டு வங்கிய வளர்ச்சியில் சில சிறப்புச் செய்திகளைக் காணலாம். பெரிய வங்கிகளில் குறிப்பிட்ட சில பிராந்தியங்கள் தமது நடவடிக்கைகளை மிகுதியாகக் கொண்டுள்ளன. இந்தியன் பாங்க் தமிழ் நாட்டிலும், பாங்க் ஆப் இந்தியா மகாராட்டிரத்திலும் பெருமளவுக்குக் கிளை அலுவலகங்கள் திறந்திருப்பது இதற்கு எடுத்துக்காட்டாகும். இரண்டாம் உலகப் போர் முடிந்ததும், வங்கிகளின் வளர்ச்சி வேகம் மிகுந்து காணப்பட்டது. 1939ஆம் ஆண்டு பின்னிணைப்புப்பட்டியலிலுள்ள வங்கிகள் 51. அவற்றின் கிளைகள் 1,328. அவற்றின் வசமிருந்த வைப்புத்தொகை ரூ. 238 கோடி முறையே 93 வங்கிகளாகவும், கிளைகள் 3,106 ஆகவும், வைப்புத்தொகை ரூ. 1,097 கோடியாகவும், 1946ஆம் ஆண்டு இறுதியில் உயர்ந்தது. 1939—44 ஆண்டுகளில் தவணைவைப்புத் தொகை மொத்த

# பட்டியல் 1—8

**பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வணிக வங்கிகளின் அலுவலகங்கள், வைப்பு, கடனளிப்பு, மக்கள் தொகைப்படி**
(Bank Credit) (ரூ. கோடிகளில்)

| டிசம்பர் | தகவல் தரும் வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை | | | | வைப்புத் தொகை | | | | வங்கிக் கடனளிப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | மாநகர் | நகர்ப்புறம் | கிராமப்புறம் | மொத்தம் | மாநகர் | நகர்ப்புறம் | கிராமப்புறம் | மொத்தம் | மாநகர் | நகர்ப்புறம் | கிராமப்புறம் |
| 1937 | 636 | 74 | 502 | 60 | 166·6 | 84·9 | 80·4 | 1·3 | 79·0 | 51·7 | 26·7 | 0·6 |
| | | (11·6) | (78·9) | (9·5) | | (51·0) | (48·3) | (0·7) | | (65·4) | (33·8) | (0·8) |
| 1946 | 2070 | 218 | 1589 | 263 | 844·5 | 344·4 | 490·1 | 10·0 | 323·9 | 200·8 | 116·6 | 6·5 |
| | | (10·5) | (76·8) | (12·7) | | 40·8) | (58·0) | (1·2) | | (62·0) | (36·0) | (2·0) |
| 1950 | 2486 | 236 | 1950 | 300 | 774·9 | 351·0 | 409·7 | 14·2 | 415·5 | 243·2 | 164·6 | 7·7 |
| | | (9·5) | (78·4) | (12·1) | | (45·3) | (52·9) | (1·8) | | (58·5) | (39·6) | (1·9) |
| 1956 | 2702 | 411 | 2032 | 259 | 990·2 | 524·6 | 449·7 | 15·9 | 748·0 | 487·8 | 252·9 | 7·3 |
| | | (15·2) | (75·2) | (9·6) | | (53·0) | (45·4) | (1·6) | | (65·2) | 33·8 | (1·0) |
| 1960 | 3776 | 527 | 2631 | 618 | 1411·4 | 730·0 | 632·8 | 48·6 | 1024·5 | 611·1 | 390·8 | 22·6 |
| | | (14·0) | (69·6) | (16·4) | | (51·8) | (44·8) | (3·4) | | (59·6) | (38·1) | (2·3) |
| 1966 | 5977 | 949 | 3994 | 1034 | 2982·2 | 1394·2 | 1479·7 | 108·3 | 2064·7 | 1239·2 | 776·9 | 48·6 |
| | | (15·9) | (66·8) | (17·3) | | (46·8) | (49·6) | (3·6) | | (60·0) | (37·6) | (2·4) |
| 1969 | 8372 | 1276 | 4958 | 2138 | 4822·5 | 2183·3 | 2332·9 | 306·3 | 3467·4 | 2143·3 | 1208·8 | 115·3 |
| | | (15·2) | (49·6) | (26·8) | | (45·3) | (48·3) | (6·4) | | (61·8) | (34·9) | (3·3) |
| செப்டம்பர் | 9424 | 1266 | 5467 | 2691 | 5248·3 | 2326·8 | 2498·3 | 423·2 | 4180·6 | 2799·6 | 1204·6 | 176·4 |
| 1970 | | (13·4) | (58·0) | (28·6) | | (44·3) | (47·6) | (8·1) | | (67·0) | (28.8) | (4·2) |

குறிப்பு:—அடைப்புக்களில் உள்ள எண்கள் மொத்த அலுவலகங்கள், வைப்பு, கடனளிப்பு ஆகியவற்றுடன் ஒப்பு நோக்கும் விழுக்காடு அளவைக் குறிக்கிறது.

வைப்புத் தொகையில் கால் பங்குக்கும் குறைவாக இருந்தது. இக்காலத்திற்கு முன் மொத்த வைப்புத் தொகையில் பாதியளவு தவணை வைப்பாக இருந்துவந்தது. இதற்குக் காரணம் போர்க்காலத்தில் மக்கள் தம் பணத்தை முடிந்த அளவு எளிவரல் (Liquid) நிலையில் வைத்திருக்க விரும்பியதும் ஒன்று; மற்றும் தவணை வைப்பின் மீது தரப்பட்ட வட்டி விகிதம் மிகவும் குறைவானதாக இருந்தது; மேலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டி நிறுவனங்களை விரிவு படுத்தவும் புதிதாக நிறுவவும் போர்க்காலத்தில் வாய்ப்பு இல்லாது போனதால், பெருமளவு நடைமுறை முதலைக் கொண்டு வணிகஞ் செய்யச் சேமிப்புப் பயன்பட்டது. வங்கிகளின் சொந்தப் பணம் அதாவது, செலுத்தப்பட்ட பங்கு முதலும் காப்பு நிதியும் ஒரே அளவில் இருந்து வந்த நேரத்தில் வைப்புத் தொகை மிக வேகமாக உயர்ந்து வந்தது. இதனால் வைப்பாளர் (Depositor)களின் நிலை பாதிக்கப் பட்டது. அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் வங்கிகள் எளிவரல் சொத்துக்களை அதிகம் வைத்திருக்கலாயினர். சில வங்கிகள் தம் மூலதனத்தை அதிகப்படுத்தின.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் மாற்றுச் சீட்டுகள் மீதும், சரக்குகள்மீதும் வங்கிகள் கடன் வழங்குவது பெரும்பாலும் குறைந்து வந்ததால் வங்கிகள் தம்மிடமுள்ள பணத்தை அரசினர் பிணையங்கள் (Government Securities) வாங்குவதில் முதலீடு செய்தனர். பெருமளவு தொகையை ரொக்கமாகவும் வைத்திருந்தனர். இம்மாதிரி முதலீடு செய்ததாலும் அதிக ரொக்கம் வைத்திருந்ததாலும் வங்கிகளின் ஆதாயம் குறைந்தது. ஆனால் வைப்புகள் மீது கொடுக்கப்படும் வட்டி வீதத்தை வங்கிகள் குறைத்துவிட்டபடியால் அவற்றின் வருமானம் பாதிக்கப்படவில்லை. போர் முடிந்த சில மாதங்களில் நிலைமை மாற ஆரம்பித்தது. மாற்றுச் சீட்டுகள் மீது பணமளிப்பதும், பிற கடன்கள் தருவதும் வழக்கம் போன்று பெருக ஆரம்பித்தன. வங்கிகளின் முதலீடும் ரொக்கமும் குறைந்த விகிதத்தில் இருந்து வரலாயின. 1947 ஆம் ஆண்டு இந்தியா பிரிவினை செய்யப்பட்டதையொட்டி மேற்குப் பஞ்சாப் மாகாணத்தில் நெருக்கடியுண்டாயிற்று. ரிசர்வு வங்கி தன் அதிகாரங்களைச் சீரிய முறையில் பயன்படுத்தி, நெருக்கடியைப் பாராட்டத்தக்க வகையில் சமாளித்தது. நாட்டுப் பிரிவினையையொட்டி, பொருளாதார மந்த நிலையும் ஏற்பட்டதால் பல சிறிய வங்கிகள் நொடித்துப் போயின. நிருவாகக் கோளாறும், பங்கு மாற்றுச் சந்தையின் ஊக வணிகமும், கண்மூடித்தனமாக கிளைகள் நிறுவியதும் இந்நிலைக்குக் காரணமாக இருந்தன. இந்தச்

சூழ்நிலையில் வங்கிக் கம்பெனிச் சட்டம் 1949 ஆம் ஆண்டு இயற்றப் பெற்றது. தற்போது இச் சட்டம் வங்கிய ஒழுங் காற்றுச் சட்டம் (Banking Regulation Act) என்று பெயர் பெற் றுள்ளது. இச்சட்டம் வங்கிகள் கிளைகளைத் திறப்பது, உரிமம் (Licence) பெறுவது போன்ற நடவடிக்கைகளைப் பெருமள வுக்குக் கட்டுப்படுத்தியது.

**விடுதலைக்குப் பின் வளர்ச்சி**

எண்ணிக்கையளவிலும் பரப்பளவிலும் வளர்ந்து வந்த வங்கித் துறை, 1949 முதல், தரத்திலும் திண்மையிலும் வளரத் துவங்கியது. 1949 முதல் 1953 வரை வங்கிகள் திரட்டிய வைப்புத் தொகையும், அவை ஈட்டிய இலாபமும் குறைந்து வந்தன. பணத்தேவை மட்டும் அதிகரித்து வந்தது. வாழ்க்கைச் செலவும் உற்பத்திச் செலவும் உயர்ந்தன; செல் வர், நடுத்தர நிலையினர் சேமிப்புத் திறன் குறைந்தது; வரிச் சுமை மிகுந்தது; நாட்டின் இறக்குமதிப் பெருக்கத்தால் புழக்கத்திலுள்ள நாணய அளவு குறைக்கப்பட்டது. வதந் திகள் பரவி, வைப்பாளர்களை அச்சம் கொள்ளச் செய்தது போன்ற பலப்பல காரணங்களால் இந்நிலை உண்டானது. பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளின் எண்ணிக்கை 1948-ல் 78 ஆக இருந்தது 1953-ல் 72 ஆகவும், பட்டியலில் இடம்பெறு வங்கிகள் 544-லிருந்து 432 ஆகவும் குறைந்தன. மொத்த வங்கி அலுவலகங்களும் 4,674-லிருந்து 3,943 ஆகக் குறைந்தன. இந்தக் காலத்தில் வங்கிகளின் வருமானம் உயர்ந்து வந்த போதிலும், செலவு மிகுந்து சென்றதால் இலாபம் 1946-ல் ரூ. 9·36 கோடியிலிருந்து ரூ. 6·52 கோடி யாகக் குறைந்து போயிற்று. வங்கி ஊழியர்களுக்கு அதிக ஊதியம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டதாலும், வைப்பாளர் (Depositor) களுக்கு உயர்ந்த வட்டி கொடுக்க வேண்டியிருந்த தாலும் செலவினம் மிகுந்து இலாபம் குறைந்தது.

வங்கி கம்பெனிச் சட்டப்படி, ரிசர்வு வங்கி வணிக வங்கிய முறை திண்மை பெறப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1950-ல் இச் சட்டத்தில் வங்கிகள் இணைந்து, வலுப்பெற வகை செய்வான் வேண்டிப் புது சரத்துக்கள் சேர்க்கப்பட்டன. இப் புதிய சட்டச் சரத்துக்கள் சிறிய வங்கிகள் பெரிய வங்கிக ளோடு இணையவும், வங்கிய சீர்மை குறித்து வங்கிகள் இணைய வும் பெரு வசதியாக அமைந்தன. ரிசர்வு வங்கி, வங்கிகளுக்கு உற்றதோர் அறிவுரையாளராகச் செயலாற்றி, இணைப்புத் திட்டங்களைப் பரிசீலித்து, அவை நிறைவேற உதவிற்று. 1954 முதல் மறுபடியும் வங்கிகள் வளரலாயின. வங்கிகள் கிளை

களைப் பல இடங்களில் நிறுவின. ஐந்தாண்டுத் திட்டங்கள் செயற்படத் துவங்கிப் பணப் புழக்கம் பெருகிற்று. இறக்குமதிக் கட்டுப்பாடு கடுமையாக இருந்ததால் வணிக நிறுவனங்கள் தமது உபரி பணத்தைத் தவணை வைப்புக்களில் போட்டு வைத்தனர். இதற்கிடையே வைப்புக்களைத் திரட்டுவதில் வங்கி களுக்கிடையே கடும் போட்டி நிலவியது. தம் திறனுக்கும் மேலான வட்டி விகிதங்களைத் தருவது வங்கிய வளர்ச்சிக்கு நல்லதல்ல என்பதை உணர்ந்த வங்கிகள், வங்கிகளிடையே உடன்பாடு (Inter Bank Agreement) ஒன்று 1958-ல் செய்து கொண்டு, அதன்படி எல்லா வங்கிகளும் செயற்படத் துவங்கின.

#### அறுபதில் அதிர்ச்சி

நம் நாட்டு வங்கிய வளர்ச்சியில் 1960 ஆம் ஆண்டு ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள இரு வங்கிகள் நொடித்துப் போயின. அவ்வங்கிகள் பாலாய் செண்ட்ரல் பாங்க், லக்ஷ்மி பாங்க் என்பன. இந்நிகழ்ச்சி யால் மக்களுக்கு வங்கிகள் மீது பொதுவாக நம்பிக்கையின்மை தலைதூக்க ஆரம்பித்தது. மத்திய அரசு இந்த நிலையைப் போக்கி, வங்கியத் துறையைப் பலப்படுத்தப் பல நடவடிக்கை களை மேற்கொண்டது. அவற்றில் முக்கியமானது நன்கு நிருவ கிக்கப்படும் வங்கிகளுடன் தரம் குறைவாக உள்ள வங்கிகளைக் கட்டாயமாக இணைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தைச் செய லாற்றும் அதிகாரம் ரிசர்வு வங்கிக்கு வழங்கப்பட்டது. இதன் விளைவாக 1961—64 ஆண்டுகளில் 148 வங்கிகள் பிற வங்கிக ளுடன் இணைக்கப்பட்டன. 1964 ஆம் ஆண்டு இறுதியில் 156 வங்கிகள் செயலாற்றி வந்தன.

கடந்த ஏழு ஆண்டுகளாக, அதாவது 1965 முதல் 1971 வரை வங்கிகள் வளர்ச்சிக்கு அளவுகோலாக விளங்கும் அலுவ லக எண்ணிக்கை, வைப்புத் தொகை, கடனளிப்புத் தொகை ஆகியவற்றைக் கீழ்க்காணும் அட்டவணை எடுத்துக் கூறு கிறது. வைப்புக்கள் ஆண்டுக்கு ஆண்டு 1965-ல் 13·6% என்ற நிலையிலிருந்து 1971-ல் 17·4% என்ற அளவுக்கு உயர்ந்த வண்ணத்தைக் காண்கிறோம். இதேபோன்று ஆண்டுக்கு ஆண்டு வங்கிகள் அளிக்கும் கடன் அளவும் உயர்ந்து வருகின்றது. கடனளிப்பு, கட்டுக் கடங்காமல் போவதைத் தடுக்க ரிசர்வு வங்கி பல நடவடிக்கைகள் 1971—ல் எடுத்ததன் காரணமாக அவ்வாண்டுக் கடனளிப்புப் பெருக்கம் 13.4% ஆக இருந்தது.

## பட்டியல் 1—9

**1965-71 ஆண்டுகளில் பட்டியலிலுள்ள வணிக வங்கிகளின் அலுவலகங்கள், வைப்பு, கடனளிப்பு வளர்ச்சி (ரூபாய் கோடிக் கணக்கில்)**

| | அலுவலகங்கள் எண்ணிக்கை | | வைப்புக்கள் (வங்கிகளிடை வைப்பு நீங்கலாக) | | | | | கடனளிப்பு (வங்கிகளிடைக் கடன் நீங்கலாக) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் இறுதி | மொத்தம் | ஆண்டு வளர்ச்சி | கேட்பு வைப்பு | தவணை வைப்பு | மொத்த வைப்பு | ஆண்டு வளர்ச்சி | வளர்ச்சி விழுக்காடு | வங்கிக் கடனளிப்பு | ஆண்டு வளர்ச்சி | வளர்ச்சி விழுக்காடு |
| 1965 | 5727 | +498 | 1275·1 | 1433·0 | 2708·1 | +323·4 | +13·6 | 2068·4 | +294·6 | +16·6 |
| 1966 | 6139 | +412 | 1477·3 | 1645·9 | 3123·2 | +415·1 | +15·3 | 2271·4 | +203·0 | +9·8 |
| 1967 | 6620 | +481 | 1664·6 | 1852·4 | 3517·0 | +393·8 | +12·6 | 2631·1 | +359·7 | +15·8 |
| 1968 | 7044 | +424 | 1874·8 | 2094·2 | 3969·0 | +452·0 | +12·9 | 6102·9 | +471·8 | +17·9 |
| 1969 | 8045 | +1001 | 2103·5 | 2542·3 | 4645·8 | +676·8 | +17·0 | 3598·8 | +495·9 | +16·0 |
| 1970 | 9938 | +1893 | 2328·8 | 2945·7 | 5274·5 | +628·7 | +13·5 | 4212·7 | +613·9 | +17·1 |
| 1971 | 11892 | +1954 | 2725·1 | 3464·8 | 6189·9 | +915·4 | +17·4 | 4775·8 | +563·1 | +13·4 |

**கடனளிப்பின் புதுமைக் கொள்கை**

வங்கிகள் கடனளிப்புக் கொள்கை, கடந்த சில ஆண்டு களாக மாறிக்கொண்டு வருகிறது. குறுகிய காலக் கடன்களை மட்டுமே அளித்துவந்த வங்கிகள் தொழில் நிலையங்களுக்கு தவணைக் கடன்களும் அளிக்கின்றன. இதற்கு ரிசர்வு வங்கி யும் மறு நிதி (Re-finance) வசதிகள் அளித்து ஊக்கப்படுத்தி வருகிறது.

மற்றொரு புதிய கடனளிப்புக் கொள்கை, சொந்தப்(பிணை)க் கடன் (Personal loan) முறை ஆகும். நிலையான வருவாயுள்ள மக்களுக்கு நெடும்பயன் நுகர்ச்சிப் பொருள்கள் (Durable consumer goods) வாங்க வகைசெய்ய இத்திட்டம் உதவுகிறது. வாடகைக் கொள்முறை (Hire Purchase System) வழி நெடும்பயன் பொருள்களை விற்கும் நிலையங்களுக்கு நிதி வசதியளிப்பதைவிட அதை நுகர விரும்பும் மக்களுக்குக் கடன் வசதி யளிப்பதே சிறந்ததாக வங்கிகளுக்குப் பட்டது. மோட்டார் கார், சைக்கிள், குளிர் சாதனப் பெட்டி, வானொலிப் பெட்டி, மின்விசிறி, இரும்பு மேசை, நாற்காலி, அலமாரி போன்ற பொருள்களை வாங்க, வணிக வங்கிகள் சொந்தக் கடன் அளிக்கின்றன. இதைப் பெருமளவில் பரப்பிய பெருமை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி யைச் சாரும். இவ்வகைக் கடன் 6 முதல் 30 தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும்.

## பட்டியல் 1—10

**வங்கிக் கடனளிப்பு அமைவு (விழுக்காடு)**

| | | டிசம்பர் 31 | | மார்ச்சு 31 | |
|---|---|---|---|---|---|
| | | 1951 | 1961 | 1965 | 1967 |
| தொழில் துறை | .... | 34 | 54 | 61·5 | 64·3 |
| வணிகம் | .... | 41 | 29 | 25·6 | 19·4 |
| நிதி நிலையங்கள் | .... | 12 | 5 | 4·5 | 3·6 |
| சொந்தக் கடன் தொழிலர் (Professional) | .... | 7 | 9 | 5·8 | 4·2 |
| விவசாயம் | .... | 2 | 1 | 0·2 | 2·1 |
| பிற இனங்கள் | .... | 4 | 2 | 2·4 | 6·4 |
| மொத்தம் | | 100 | 100 | 100·00 | 100·00 |

எந்தெந்தத் துறைகளுக்கு வணிக வங்கிகள் கடனளித்து வருகின்றன என்பதை உற்றுநோக்கில், தொழில் வளர்ச்சிக்கே வங்கிகள் மிகுதியாகக் கடன் வசதி யளித்து வருவது புலனாகும்.

### வங்கிகள்மீது சமூகக் கட்டுப்பாடு

நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரு சீராக இருக்க வேண்டுமானால் விவசாயம், தொழில், வணிகம் எல்லாம் ஒருங்கே வளரவேண்டும். அங்ஙனம் வளர, அவற்றிற்குத் தேவைப்படும் நிதி வசதிகளை வங்கிகள் அளிக்க வேண்டும். ஆனால், வங்கிகளோ விவசாயம், சிறு தொழில், ஏற்றுமதி முதலிய துறைகளுக்குத் தேவைப்பட்ட அளவுக்கு நிதி வசதிகள் அளிப்பதில்லை என்ற எண்ணம் பரவலாக இருந்து வந்தது. எனவே, 1967ஆம் ஆண்டில் மத்திய அரசு வங்கிகள் சமூகக் கட்டுப்பாட்டுக்கு உட்பட ஒரு திட்டம் வகுத்தது. இத் திட்டமே வங்கிகளின்மீது சமூகக் கட்டுப்பாடு (Social Control) எனப் பேசப்பட்டு வந்தது. பொருளாதார மேம்பாட்டிற்கு நாட்டு வருமானத்தை உயர்த்தும் வகையில் விவசாயம், சிறு தொழில், தாமே தொழில் செய்வோர் ஆகிய துறையினருக்குத் தக்க கடன் வசதிகள் செய்து தருவதும், செல்வம் ஒரு சிலரிடம் குவிந்து கிடத்தலைத் தவிர்க்கவும், வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும், அயல் நாட்டுச் செலாவணியை ஈட்டவும் சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டம் முனைந்தது. வங்கிகளின் மீதான சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயலாக்கத் தக்க கருத்துரைகள் வழங்க, அரசு தேசிய கடன் திட்டக் குழு (National Credit Council) என்ற ஓர் அமைப்பை உருவாக்கியது. இந்த அமைப்பின் முக்கியப் பணி வங்கிகள் கடனளிப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளை வகுத்துத் தருவதாகும். நாட்டுத் திட்டத்தின்படி, பற்பல துறைகளில் நிருணயித்துள்ள குறியிலக்குகளை அடைய வங்கிகள் ஒவ்வொரு துறைக்கும் என்ன தன்மையான கடன் வசதி, எந்த அளவுக்குத் தர வேண்டுமென்பதை அறுதியிட்டுக் கூறவேண்டியது இக் குழுவின் கடமையாகும்.

### நாட்டுடைமையாக்கல்

வங்கிகள்மீது சமூகக் கட்டுப்பாடு சட்டப் பூர்வமாகக் கொண்டு வருவதற்கு 1968ஆம் ஆண்டு வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தைத் திருத்தினர். அத்திருத்தத்தின்படி வங்கிகளின் இயக்குநரில் பெரும்பான்மையர் வங்கித் துறையைச் சார்ந்த தொழில்களில் நுண்ணறிவும் செயல் அனுபவமும் உள்ளவர்களாயிருத்தல் வேண்டும். வங்கிய நிருவாகத்தில் சிறப்புத்

தேர்ச்சிபெற்ற ஒருவரே அதன் முழு நேர தலைமை நிருவாகராக இருக்கவேண்டும். மற்றும் இயக்குநர் தொடர்புகொண்டுள்ள எவ்வித வணிக நிலையத்திற்கும் கடனளிப்பதில் பலப்பல கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம் வங்கி நிருவாகத்தினைச் சீரமைப்பதுதான். இந்தத் திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கிய ஆறு மாதங்களுக்குள் மத்திய அரசு ரூ. 50 கோடிக்குமேல் வைப்புத் தொகை கொண்டிருந்த பதினான்கு பெரும் வணிக வங்கிகளை 1969 ஜூலை 1ஆம் நாள் நாட்டுடைமையாக்கிற்று. அயல் நாட்டு வங்கி ஏதும் நாட்டுடைமையாக்கப்படவில்லை. இதனால் வங்கித் தொழிலில் 85% அரசுத் துறை வசம் வந்து சேர்ந்தது. மீத

## பட்டியல் 1—11

**நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் 31-12-1968-ல் கொண்டிருந்த அலுவலகங்கள், வைப்பு, கடனளிப்பு**

| | அலுவலகங்கள் எண்ணிக்கை | வைப்புத் தொகை | கடனளிப்பு கோடிகளில் |
|---|---|---|---|
| சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட் | 504 | 433 | 296 |
| பாங்க் ஆப் இந்தியா லிட் | 250 | 395 | 253 |
| பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட் | 544 | 356 | 209 |
| பாங்க் ஆப் பரோடா லிட் | 333 | 314 | 196 |
| யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட் | 323 | 241 | 144 |
| கானரா பாங்க் லிட் | 302 | 146 | 97 |
| யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா லிட் | 178 | 144 | 97 |
| தேனு பாங்க் லிட் | 214 | 122 | 74 |
| சிண்டிகேட் பாங்க் லிட் | 254 | 112 | 71 |
| யூனியன் பாங்க் ஆப் இந்தியா லிட் | 213 | 115 | 69 |
| அலகாபாத் பாங்க் லிட் | 128 | 113 | 70 |
| இந்தியன் பாங்க் லிட் | 190 | 85 | 57 |
| பாங்க் ஆப் மகாராஷ்டிரா லிட் | 140 | 73 | 50 |
| இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் லிட் | 188 | 93 | 58 |

முள்ள 15% வங்கித் தொழில் தனியார் துறையிலிருந்து வரு கிறது. இவ்வாறு தனியார் துறையிலிருக்கும் வங்கிகளின் எண்ணிக்கை 51 ஆகும். இவற்றில் 36 இந்திய வங்கிகளும் 15 அயல்நாட்டு வங்கிகளுமாகும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளைப்பற்றிய சில விவரங்களைக் கீழே காணலாம்:

மேற்கண்ட வங்கிகளை நாட்டுடைமையாக்குவதன் நோக் கம், பொருளாதார ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி, அதன் வழி தேசியக் கொள்கைகட்கும் நோக்கங்களுக்கும் ஏற்பப் பொருளா தார வளர்ச்சிக்கான தேவைகளையளித்து, மேலும் சிறந்த முறை யில் சேவை செய்வதாகுமெனக் கூறப்பட்டது. அதாவது, வங்கிகள் சமுதாய நோக்குடன் செயற்பட வேண்டும். வளர்ச்சி குன்றியுள்ள இடங்கள், சிறு தொழில்கள், விவசாயம், சிறு வணிகம் ஆகியவை மேம்பட்டு முன்னேற வங்கிகள் பேருதவி புரியவேண்டும் என்ற குறிக்கோளும் வற்புறுத்தப்பட்டது. வணிக வங்கிகளில் பெரும்பான்மை நாட்டுடைமையாக்கப் பட்டது முதல் வங்கியத் துறையில் காணப்பெற்று வரும் மாறு தல்கள் பற்றி இந்நூலின் இறுதியில் பேசுவோம்.

### சோதனையிலும் சாதனை

பொதுவாக நோக்குமிடத்து, நம் நாட்டு வங்கிய முறை பற்பல சோதனைகளுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் ஆளானபோதி லும் ஓரளவுக்குத் திடமாகவே வளர்ந்து வந்துள்ளதைக் காண லாம். ஆண்டுக்கு ஆண்டு இத்துறை வலுப்பெற்று செயலாற் றப் பலப்பல வழி முறைகளை ரிசர்வு வங்கி கையாண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. ரிசர்வு வங்கி எல்லா வங்கிகளுக்கும் உற்ற நண்பனுகவும், நல்லாசிரியனுகவும், வழிகாட்டியாகவும் விளங்கி வருகிறது. மிகவும் சிக்கலான பலப்பல சூழ்நிலைகளிலும் பொறுமையுடன் படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, திடமற்ற சிறு வங்கிகளைப் பெரு வங்கிகளுடன் இணைய வைத்து, வங்கிகளிடையே கேடு விளைவிக்கக்கூடிய போட்டி இல்லாமல் தவிர்த்து, சமுதாய முன்னேற்றத்திற்கு உகந்த வகையில் வங்கிகள் செயலாற்ற, ஏற்பாடுகளைச் செய்துள்ளது. வளர்ந்துவரும் கூட்டுறவுத் துறையிலுள்ள வங்கிகளும் 1966 முதல் ரிசர்வு வங்கியின் கண்காணிப்புக்கு உட்பட்டுச் செய லாற்றுவது வங்கியத் துறையில் காணக் கிடக்கும் மற்றதொரு முக்கிய நிகழ்ச்சியாகும். பின்வரும் அத்தியாயங்களில் கூட்டுறவு வங்கிகளைப்பற்றி விரிவாகப் பேசுவோம். கடந்த ஆறு ஆண்டு களாக வணிக வங்கியத் துறை வளர்ந்த முறையினை அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணை சுருக்கமாகக் காட்டும்:

## பட்டியல் 1—12

**வணிக வங்கியத் துறையின் போக்கு—ஒரு கண்ணோட்டம் (ஜூன் இறுதி வெள்ளிக் கிழமையிலுள்ளபடி)**

| | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 |
|---|---|---|---|---|---|---|
| I. வங்கிகள் எண்ணிக்கை | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 76 | 74 | 73 | 73 | 73 | 74 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 31 | 24 | 19 | 16 | 13 | 12 |
| II. அலுவலகங்கள் எண்ணிக்கை | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 6139 | 6620 | 7044 | 8045 | 9938 | 11892 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 240 | 216 | 203 | 217 | 193 | 149 |
| III. மொத்த வைப்பு (ரூ. கோடி) | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 3123·2 | 3517·0 | 3969·0 | 4645·8 | 5274·5 | 6189·9 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 25·0 | 24·5 | 26·2 | 28·0 | 13·8 | 14·7 |
| VI. கேட்பு வைப்பு (ரூ. கோடி) | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 1477·3 | 1664·6 | 1874·8 | 2103·5 | 2328·8 | 2725·1 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 9·1 | 9·1 | 10·2 | 11·7 | 8·4 | 9·3 |
| V. தவணை வைப்பு (ரூ. கோடி) | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 1645·9 | 1852·4 | 2094·2 | 2542·3 | 2945·7 | 3464·8 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 15·9 | 15·4 | 16·0 | 16·3 | 5·4 | 5·4 |
| VI. நாட்டு வருமானத்தில் வைப்பு % விகிதம் | 15·3 | 14·8 | 14·1 | 16·3 | 17·0 | 18·0 |

| | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 |
|---|---|---|---|---|---|---|
| VII. மொத்தக் கடனளிப்பு (ரூ. கோடி) | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 2271·4 | 2631·1 | 3102·9 | 3598·7 | 4212·7 | 4775·8 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 15·0 | 15·1 | 12·8 | 16·4 | 3·5 | 3·1 |
| VIII. கடனளிப்பு—வைப்பு % விகிதம் | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 72·7 | 74·8 | 78·2 | 77·5 | 79·9 | 77·2 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 60·0 | 61·6 | 48·9 | 58·6 | 25·4 | 21·1 |
| IX. அரசு பிணைகளில் முதலீடு (ரூ. கோடி) | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 918·8 | 922·6 | 975·6 | 1126·3 | 1186·1 | 1369·4 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 5·6 | 5·4 | 6·6 | 6·7 | 3·4 | 4·0 |
| X. முதலீடு—வைப்பு விகிதம் % | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 29·4 | 26·2 | 24·6 | 24·2 | 22·5 | 22·1 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 22·4 | 22·0 | 25·2 | 23·9 | 24·6 | 27·2 |
| XI. ரொக்கம், ரிசர்வ் வங்கியிடம் இருப்பு (ரூ. கோடி) | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 195·3 | 258·8 | 269·5 | 380·3 | 357·6 | 393·5 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 1·7 | 1·9 | 2·1 | 2·5 | 0·9 | 1·1 |
| XII. ரொக்கம்—வைப்பு விகிதம் % | | | | | | |
| (i) பி. ப. வங்கிகள் | 6·3 | 7·4 | 6·8 | 8·2 | 6·8 | 8·4 |
| (ii) பி. ப. சேரா வங்கிகள் | 6·8 | 7·8 | 8·0 | 8·9 | 6·5 | 7·5 |

குறிப்பு:—பி. ப. வங்கிகள்—பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் (Scheduled Banks). பி. ப. சேரா வங்கிகள்—பின்னிணைப்புப் பட்டியலில் சேராத வங்கிகள் (Non-Scheduled Banks).

# 2. இந்தியப் பணச் சந்தை

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அந் நாட்டிலுள்ள பணச் சந்தையின் வளர்ச்சியைக் கொண்டு எடைபோடலாம். பணச் சந்தை (Money Market) என்றால் என்ன? பணச் சந்தையின் உறுப்புக்களென்று எவற்றைக் கருதலாம்? இந்தியாவில் பணச் சந்தை எவ்வாறு அமைந்துள்ளது என்பது போன்ற வினாக்களுக்கு இந்த அத்தியாயத்தில் விடை காண்போம்:

**பணச் சந்தையின் பொருள்**

பணச் சந்தை என்பது குறுகிய காலத்திற்கு வேண்டிய பணத்தைக் கடனாகக் கொடுக்கும், கடனாக வாங்கும் சந்தையாகும். பணச் சந்தை என்பதை நிதித் தொடர்புள்ள எல்லா நிலையங்களையும் சுட்டும் சொற்றொடராகப் பயன் படுத்தினாலும், அது குறுகிய கால (Short term) நிதியைக் கொடுக்கல், வாங்கலில் ஈடுபடும் நிலையங்களையே சிறப்பாகக் குறிக்கும். தற்காலிகமாக மிகையாக உள்ள பணத்தை விற்கவும் வாங்கவும் உதவும் நிதி நிலையங்களைக் குறிக்கும் தொடரே பணச் சந்தை எனப்படும். பண நெருக்கடி யேற்படும் காலத்தில் அதன் தாக்குதலை முதன் முதலில் ஏற்பதும், பண நிலை தாராளமாக இருக்கத் துவங்கும் போது முதன் முதலில் அதனை உணருவதும் குறுகிய கால பணச் சந்தையில்தான் என்று கூறுவதுண்டு.

இதுவரை கண்டு வந்த விளக்கப்படி, குறுகிய கால நிதித் தொடர்புள்ள நிலையங்களே பணச் சந்தை என்று பேசப் படுவதுஉறுதியாயிற்று. நீண்ட கால பண வசதிபற்றித் தொடர் புற்ற நிலையங்களை என்னவென்றழைப்பது என்ற கேள்வி எழலாம். நீண்ட கால நிதியோடு தொடர்புற்ற நிலையங்களை மூலதனச் சந்தை (Capital Market) என்று குறிப்பிடுவர். எனவே, பணச் சந்தையென்பது குறுகிய கால நிதியத் தொடர்

புற்ற நிலையங்களையும், மூலதனச் சந்தையென்பது நீண்ட கால நிதியத் தொடர்புற்ற நிலையங்களையும் குறிப்பது புலனாகும்.

### பணச் சந்தையும் மூலதனச் சந்தையும்

பணச் சந்தையும் மூலதனச் சந்தையும் தமக்குள் எவ்விதத் தொடர்பு மில்லாமல் இயங்கும் சந்தைகளென்று கொண்டு விடுதல் தவறு. நடைமுறையில் இரு சந்தைகளும் தொடர்புற்றிருப்பதைக் காணலாம். சில நடவடிக்கைகள் மூலதனச் சந்தையில் துவங்கிப் பணச் சந்தையில் முடிவு பெறக் கூடும். எடுத்துக்காட்டாக, இலாப ஈவு (Dividend) அல்லது வட்டி அளிப்பது மூலதனச் சந்தையில் துவங்கும் நடவடிக்கையாக இருந்தபோதிலும், பணச் சந்தையில் ஒரு வணிக மாற்றுச் சீட்டு (Commercial Bill of Exchange) செலுத்தப்பட்டால் என்ன விளைவு ஏற்படுமோ, அதே விளைவினைப் பணச் சந்தையில் ஏற்படுத்துகிறது. தொழில் நடப்புக்கு வேண்டிய நடைமுறை நிதி வசதியினையும் அரசாங்கத்துக்குத் தேவையான குறுகிய கால நிதி வசதியினையும் செய்து தருவது பணச் சந்தையின் முக்கியப் பணியாகும். தொழிலுக்கும் அரசாங்கத்துக்கும் தேவைப்படும் நீண்ட கால நிதி வசதிகளைச் செய்து வருவது மூலதனச் சந்தையின் நோக்கமாகும். பணச் சந்தையில் ஈடுபட்டுள்ள நிலையங்கள் பல பல. இதே போன்று மூலதனச் சந்தையில் ஈடுபட்டுள்ள நிலையங்களும் பல உண்டு. சில வணிக நிலையங்கள் இரு சந்தைகளோடும் தொடர்புற்றன.

### பணச் சந்தையின் தன்மை

பணச் சந்தை தனித் தன்மை வாய்ந்த ஒரு சந்தையாகும். பண்டச் சந்தை (Commodity Market) போன்று ஒழுங்கமைதி (Organised)யுடைய சந்தையாகப் பணச் சந்தையைக் கருத முடியாது. எங்கெல்லாம் பணம் கொடுக்கல் வாங்கல் குறித்து நபர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரோ, அங்கெல்லாம் பணச் சந்தை இயங்குகிறது. மற்றும் பலவகை நடவடிக்கைகளுக்குப் பணச் சந்தையில் பல பிரிவுகளும் உட் பிரிவுகளும் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவும் உட் பிரிவும் குறிப்பிட்ட ஒருவகை நடவடிக்கையில் ஈடுபடுகின்றது. இருப்பினும், எல்லாப் பிரிவுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புற்றன. ஒரு பிரிவில் ஏற்படும் நிலவரம் மற்றப் பிரிவுகளையும் பாதிக்கும் நிலையுண்டு.

**பணச் சந்தையின் பிரிவுகள்**

நாட்டுக்கு நாடு அந் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வணிக வழக்கு முதலியவற்றை யொட்டிப் பணச் சந்தை பல பிரிவுகளைப் பெற்றுள்ளது. லண்டன் பணச் சந்தையை நோக்கினால், அங்குக் கீழ்க் கண்ட பிரிவுகளிருப்பதைக் காணலாம்: (i) தள்ளுபடிச் சந்தை (Discount Market), (ii) ஏற்புச் சந்தை (Acceptance Market), (iii) குறுகிய கால அரசுப் பிணையங்கள் சந்தை (Short-term Government Securities Market), (iv) பங்கு மாற்றுத் தரகர்களுக்குக் குறுகிய காலக் கடனளித்த வகையில் எடுத்துச் செல் (Carry over) சந்தை. நியூயார்க் பணச் சந்தையை எடுத்துக் கொண்டால், அங்குக் கீழ்க் காணும் நிலையங்கள் செயற்படுவதைக் காண்கின்றோம்: (i) வணிகத் தாள் சந்தை (Commercial Paper Market)-இங்குத் தாள் என்பது மாற்றுச் சீட்டினைக் (Bill of Exchange) குறிக்கும். (ii) ஏற்புச் சந்தை (Acceptance Market), (iii) பிணைக் கடன் சந்தை (Collateral Loan Market), (iv) குறுகிய கால அரசுப் பிணையச் சந்தை(Short-term Government Security Market). இந்தியாவில் பணச் சந்தை நியூயார்க் பணச் சந்தை அளவுக்கோ அல்லது லண்டன் பணச் சந்தை அளவுக்கோ வளர்ச்சி யடையவில்லை; அந்த அளவுக்கு முக்கியத்துவமும் பெறவில்லை. இந்தியப் பணச் சந்தையில் ஒரு பகுதி ஒழுங்கமைதி (Organised) பெற்றதும், பிறிதொரு பகுதி ஒழுங்கமைவற்றதும் (Unorganised) ஆக உள்ளது. ஒழுங்கமைதி பெற்ற பகுதியை மூன்று பிரிவுகளாகப் பார்க்கலாம்: (i) அழைப்புப் பணச் சந்தை (Call Money Market), (ii) மாற்றுச் சீட்டுச் சந்தை (Bill Market), (iii) பிணைக் கடன் சந்தை (Collateral Loan Market). இந்த ஒழுங்கமைதி பெற்ற சந்தைப் பிரிவைப் பணச் சந்தையின்மையப்பகுதி (Central Part) என்று குறிப்பிடுவதும் உண்டு. இங்ஙனம் ஒழுங்கமைதி பெறாத பகுதியை பஜார் பகுதி (Bazaar Part) என்பர். பஜார் பகுதியில் இடம் பெறுவன வட்டித்தொழிலர் (Money lenders), நாட்டு வங்கியர் (Indigenous Bankers), சீட்டு நிறுவனங்கள் (Chit Funds), "நிதி" (Nidhis), கடன் அலுவலகங்கள் (Loan Offices) போன்ற நிலையங்களும் நபர்களும் ஆகும். ஒழுங்கமைதி பெற்ற பகுதியில் இந்திய ரிசர்வு வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பிற பெரிய வணிக வங்கிகள், நாணயமாற்று வங்கிகள் ஆகியவை இடம் பெறுகின்றன. சிறு வங்கிகள், கூட்டுறவு வங்கிகள்முதலியவை இடைநிலையிலுள்ளன. இந்த மூன்று நிலையிலுள்ள நிலையங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செம்மையான முறையில் செயலாற்ற 1935 ஆம் ஆண்டு

வரை ஏற்பாடு ஏதுமே யிருக்கவில்லை. அதுவரை அரசாங்கமே பணச் சந்தையின் நடு நாயகமாக விளங்கி வந்தது. பணம் வெளிப்படுவதை நேரடியாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அர சாங்கத்திடம் இருந்த காரணத்தால் வங்கி வட்டி வீதத்தை இதன்மூலம் இயக்க முடிந்தது.

**பணச் சந்தையின் சிறப்புக் கூறுகள்**

பணச் சந்தையில் குறுகிய கால நிதி கோரப்படுவதும் அளிக்கப்படுவதும் முக்கிய நிகழ்ச்சிகளென முன்னர் கண் டோம். தற்காலிகமாக மிகைப்பணம் பெருமளவில் கிடைக்கக் கூடிய நிலையில்தான் பணச் சந்தை உருவாக முடியும். இதற்கு நல்ல ஒழுங்கமைதி பெற்ற வங்கிய அமைப்பும் மத்திய வங்கியும் பெரிதும் தேவைப்படுகின்றன. வங்கிகள்தாம் குறுகிய காலப் பணத்தோடு தொடர்புற்ற முக்கிய நிதி நிலைகளாகும். வைப் பாளர்கள் (Depositors) தம் பணத்தைப் பல்வகை வைப்புக் களில் வங்கியிடம் செலுத்தி வைக்கின்றனர். இவ்வைப்புக்கள் மீதான தொகை பெரும்பாலும் கோரியவுடன் திருப்பித் தரு வகையினவாக இருக்கும். எனவே, இந்தப் பணம் குறுகிய காலத்திற்குப் பயன்படுத்தக்கூடியதாக அமைகிறது. எந்த நேரத்திலும் வைப்பாளர்கள் தமக்குத் திருப்பித் தரப்பட வேண்டிய தொகையைக் கோரிப் பெறும் உரிமையுள்ளவர்க ளாதலால் வங்கி இத் தொகையை நீண்ட கால முதலீட்டுக்குப் பயன்படுத்த முடியாது. அவசரமாகப் பணம் தேவைப்படும் போது, கொடுத்த கடன்களை வெகு விரைவில் திரும்பிப் பெற பணச்சந்தையில் பெருமளவு பணப் புழக்கமிருத்தல் இன்றி யமையாததாகிறது. வங்கிகள் தம்மிடமுள்ள பணத்தைக் குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தினுல்கூட அவசரமாகப் பணம் தேவைப்படுங் காலத்தில் அம்முதலீடுகளை இடப் பெயர்சி (Shift) செய்கின்றனரேயன்றி விற்றுவிடுவதில்லை. எடுத்துக்காட்டாக, முதல் தரமாற்றுச் சீட்டு அல்லது குறுகிய கால அரசினர் பிணையங்களில் பணம் முதலீடு செய்யப்பட் டிருந்தால், அவற்றை விற்றுத்தான் பணம் எழுப்பவேண்டு மென்பதில்லை. அவசர காலத்தில் அவற்றை இடப்பெயர்ச்சி செய்வதன் வழி, தேவைப்படும் பணத்தைப் பெறலாம். பங்குத் தரகர் (Stock Broker) ஒருவருக்கு வங்கி தான் அளித்துள்ள அரசினர் பிணையத்தின்மீதான குறுகிய காலக்கடனைத் திருப்பிச் செலுத்தக் கோருகிறது எனக் கொள்வோம். பங்குத் தரகர் கடனைத் திருப்பிச் செலுத்தும் பொருட்டுப் பிணையத்தை விற்றுவிடமாட்டார். வேறொரு நபரிடம் கடன் வாங்கி அத் தொகையைக் கொண்டு கடனை அடைப்பார். இதன் விளைவு

முதலில் ஏற்பட்ட கடன் பணச் சந்தையில் அடைபடாமல் ஒரு நபரிடமிருந்து வேறொரு நபருக்கு இடப்பெயர்ச்சி செய்யப்படுகின்றது. பணச்சந்தையில் பெருமளவுக்குப் பண அளிப்பு இருந்தால்தான் இவ்வகைக் கடன் இடப்பெயர்ச்சி (Shifting of Credit) நடைபெற வாய்ப்பு உண்டு. எந்த அளவுக்குப் பணச் சந்தையில் பண அளிப்பு அதிகமாக உள்ளதோ, அந்த அளவுக்குச் சந்தையில் நெருக்கடியான, பாதகமான விளைவு ஏதுமின்றிக் கடன் இடப்பெயர்ச்சி எளிதாக நடைபெறும்.

பணச் சந்தையின் அமைப்பு நல்ல முறையிலிருக்க, மைய வங்கி (Central Bank) ஒன்று அவசியம் நாட்டில் இருக்க வேண்டும். பணச் சந்தை செம்மையாகச் செயலாற்றத் தேவைப்படும் ரொக்கத்தன்மை (Liquidity)யை அளிக்கவல்லது மைய வங்கி என்பதை யாவரும் அறிவர். அவசர நேரத்திலும் நெருக்கடி காலத்திலும் சொத்துக்களை ரொக்கமாக மாற்ற வங்கிகள் எங்கெல்லாம் முயன்றும் இறுதியில் மைய வங்கியிடம் புகலடைந்தே சொத்துக்களைப் பணமாக மாற்றும் வசதி பெற்றுள்ளன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஒரு நாட்டில் ஒழுங்கமைதி கொண்ட வங்கியமைப்பும் மைய வங்கியும் இருந்துவிட்டால் மட்டும் செம்மையானதொரு பணச் சந்தை அந் நாட்டில் நிலவும் என்று கூறிவிட முடியாது.

பணச்சந்தை வலிமை பெற்று வளர முக்கியமாகத் தேவைப்படுவது சந்தையில் தக்க முறை ஆவணங்களின் (Instruments) புழக்கம் தான். மாற்றுச் சீட்டு, கருவூலச் சீட்டு (Treasury Bill), குறுகிய கால அரசினர் கடன் பத்திரம் (Short term Government Bond) போன்ற குறுகிய காலச் சொத்துக்கள் பணச் சந்தையில் வேண்டிய அளவுக்குத் தொடர்ந்து புழக்கத்திலிருந்து வர வேண்டும். இச் சொத்துக்களை உரிமை மாற்றம் செய்து தருவது மிக எளிய முறையிலும் சிக்கனமாகவும் அமையவேண்டும்.

**குறுகிய காலச் சொத்துக்களின் இன்றியமையாமை**

குறுகிய காலச் சொத்துக்களே பணச் சந்தையின் உயிர் நாடி. இந்த நாடி துடித்துக்கொண்டிருக்க ஏற்பாடு செய்யும் நபர்கள் இத் துறையில் சிறப்பீடுபாடு கொண்ட வணிகர்களாவர். இவ்வணிகர்கள் தமது நடவடிக்கைகள் மூலம் குறுகிய காலச் சொத்துக்களை வாங்க, விற்க உதவுகின்றனர். தம்மிடம் மிகையாக உள்ள பணத்தைக் குறுகிய காலத்திற்கு முதலீடு செய்ய விரும்புகிறவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பளிப்பன, பணச் சந்தையில் புழங்கி வரும் குறுகிய காலச்

சொத்துக்களாகும். சரக்கு விற்பவர்கள், வாங்கும் வியாபாரிகள்மீது மாற்றுச் சீட்டு எழுதுகின்றனர்; அரசினர் கருவூலச் சீட்டு வெளியிகின்றனர். இவ்வகைச் சீட்டுக்களை வணிக வங்கிகள் தள்ளுபடி செய்து தருகின்றன.

பணச் சந்தையில் புழங்கும் குறுகிய காலச் சொத்துக்கள் ஒரு நாள், ஒரு வாரம் முதலாக மூன்று அல்லது ஆறு மாதங்கள் வரை தேவைப்படும் கடன்களைக் குறிக்கும் முறையாவணங்களாக இருக்கலாம், தவணைக் காலத்தை யொட்டியும் பிணையினை யொட்டியும் பணச் சந்தையில் சில துணைச் சந்தைகள் (Sub-markets) செயலாற்றி வருகின்றன. இவற்றையே அழைப்புப் பணச் சந்தை, மாற்றுச் சீட்டுச் சந்தை, கருவூலச் சீட்டுச் சந்தை, அயல்நாட்டு நாணயமாற்றுச்சந்தை என்று பல பிரிவுகளாகப் பேசுவதுண்டு. எந்த அளவுக்கு இந்தத் துணைச் சந்தைகள் நன்கு பரவிச் செயலாற்றி வருகின்றனவோ, அந்த அளவுக்குப் பணச் சந்தை வலுவமைந்த வளர்ச்சி கொண்டதாக அமையும். நன்கு வளர்ச்சி பெற்ற பணச் சந்தை இல்லா நாடுகளில் பெரும்பாலும் துணைச்சந்தைகளைக் காண்பது அரிது.

ஒழுங்கமைதி பெற்ற பணச் சந்தையின் சிறப்புக் கூறுகளில் முக்கியமானது, அதில் ஈடுபட்டுள்ள வணிகர் சாதாரண சந்தை நிலையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் பெரு நட்டம் அடையும் நிலை ஏற்பாமல் இருப்பதேயாம். பெருமளவுக்கு நடவடிக்கைகள் இருந்துவரும் நிலையிலும் சந்தையில் நிலவும் வட்டி விகிதத்திலோ அல்லது பிணையங்களின் விலைகளிலோ பெரு மாற்றம் ஏதும் இருக்கக்கூடாது. கேட்பு, அளிப்பு. வாங்கல், விற்றல் முதலிய கணிசமான அளவுக்கு ஒரு சீராக நடந்த வண்ணம் இருத்தல் வேண்டும். பணச் சந்தையில் முதலீடு செய்யும் தொகைக்குக் கிடைக்கும் ஆதாயம் குறைவாக இருந்தபோதிலும், அங்குப் பெருமளவு எளிவரல் சொத்துக்கள் நடமாடுவதும் பணச்சந்தையின் வளர்ந்த நிலைக்கு ஓர் இலக்கணமாகும்.

பல துணைச் சந்தைகள் கொண்ட பணச் சந்தை திறம்படச் செயலாற்ற, அச் சந்தைகளிடையே நல்லதொரு ஒருங்கிணைப்புத்(Co-ordination)தேவை. ஒவ்வொரு துணைச் சந்தையும் பிற துணைச் சந்தைகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டிய நிலை இருக்க வேண்டும். மற்றும், பிற துணைச் சந்தைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஒவ்வொரு துணைச் சந்தையினையும் வினை

வாட்சிக்கு உட்படுத்தும் ஆற்றல் பெற்றதாக இருக்கவேண்டும். ஒரு துணைச் சந்தையிலிருந்து மற்றொரு துணைச்சந்தைக்கு நிதி இடம் பெயருவதற்குத் தக்க வாய்ப்பிருக்க வேண்டும். ஒரு துணைச் சந்தையில் நிலவும் நிலவரம் பிற துணைச் சந்தைகளைப் பாதிப்பதாக அமைவது நல்ல பணச் சந்தையில் காணக் கிடக்கும் பண்பாகும்.

### பொருளாதார வளர்ச்சிக்குப் பணச் சந்தை

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அங்கு இயங்கி வரும் பணச் சந்தை பல வகைகளில் உதவக்கூடும். மிகையாக உள்ள பணத்தை ஒன்று திரட்டும் சாதனமாக இது அமைகிறது; விரைவாகப் பணமாக மாற்றக்கூடிய சொத்துக்களில் தமது தற்காலிக மிகைத் தொகையை முதலீடு செய்ய வணிக வங்கிகளுக்கும் பிற நிதி நிலையங்களுக்கும், நல்லதொரு வாய்ப்பை நல்குகிறது. அவசரமாகப் பணம் தேவைப்படும் நேரங்களில் பணம் பெறவும் பணச் சந்தை உதவுகிறது. மக்களுக்கு வங்கிகள் உதவுவது போன்று, அரசினர்க்கு பணச் சந்தை நற்றொண்டு புரிந்து வருகிறது. தற்காலிக நெருக்கடிகளைச் சமாளிக்க, குறுகிய கால நிதித் திரட்டைப் பணச் சந்தை உதவுகிறது. இவ் வசதி யில்லாவிடில் அரசினர் மைய வங்கியிடமிருந்து கடன் பெற்று அல்லது செலாவணி வெளியிட்டு நிலைமையைச் சமாளிக்க வேண்டும். இவ்விரண்டு முறைகளும் நாட்டில் பண வீக்கத்தை உண்டாக்கிப் பொருளாதார நிலையைப் பாதிக்கும். மற்றும் பணச் சந்தை நல்ல முறையில் அமைவது, மூலதனச் சந்தை நடவடிக்கைகள் சீராக நடக்க உதவுகிறது. மூலதனச் சந்தை (Capital Market)யில் நிலவும் வட்டி விகிதம், பிற நிலவரங்கள் ஆகியவை பணச் சந்தையில் நிலவும் நிலவரங்களைப் பொறுத்துள்ளன,

### பணச் சந்தையின் உறுப்புக்களிடையே யுள்ள தொடர்பு

நம் நாட்டுப் பணச் சந்தை முழுமை பெற்ற ஓர் அமைப்பாகத் திகழவில்லை. ஒரு பகுதியில் ஒழுங்கமைதி பெற்ற நிலையங்களும் மற்றொரு பகுதியில் ஒழுங்கமைதியற்ற பல்வேறு வகை நிலையங்களும் இந்தியப் பணச் சந்தையில் காணப்படுகின்றன. நாம் முன்னரே கண்டவாறு இந்திய ரிசர்வு வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பெரிய இந்திய வணிக வங்கிகள், நாணயமாற்று வங்கிகள் ஆகியவை பணச் சந்தையின் மையப் பகுதியெனப் பேசப்படுகின்றன. வட்டித் தொழிலர், நாட்டு வங்கியர், கடன் அலுவலகம், சீட்டுத் தொழில், நிதி முதலியவை

பணச் சந்தையின் நாட்டுப் பகுதி (Bazaar part) என அறியப் படுகின்றன. இந்த இரு பகுதிகளும் நெருங்கித் தொடர்பு கொண்டு செயற்படுவதில்லை. இவற்றை இணைக்கும் நிலையம் ஏதும் 1935ஆம் ஆண்டு வரை உருவாக்கப்படவில்லை.

இந்தியாவின் மைய வங்கியான இந்திய ரிசர்வு வங்கி (Reserve Bank of India) 1935ஆம் ஆண்டு இயங்கத் துவங்கியது. அதுவரை இந்தியப் பணச் சந்தையில் அரசினரின் ஆதிக்கமே மேலோங்கி யிருந்தது. இந்திய ரிசர்வு வங்கி நிறுவப்படுவதற்குமுன் இம்பீரியல் வங்கி (Imperial Bank) மைய வங்கியின் பணிகள் சிலவற்றைச் செய்து வந்தது. இந்திய வணிக வங்கிகள் தமக்குப் பணம் தேவைப்பட்ட நேரத்தில் தம்மிடமுள்ள அரசினர் பிணையங்களின் ஈட்டின்பேரில் இம்பீரியல் வங்கியிடமிருந்து கடன் பெற்று வந்தன. இக் கடனுக்குச் செலுத்தவேண்டிய வட்டி வீதம் மிகையாக இருந்து வந்த காரணத்தால் வணிக வங்கிகள் இவ் வசதியால் பெரும் பயனடைய முடியவில்லை. மற்றும், அரசு இம்பீரியல் வங்கிக்குப் பல சலுகைகளை வழங்கியதன் காரணமாகப் பிற வங்கிகள் அவ் வங்கியைத் தம் நண்பனாகக் கருதுவதைவிட நியாயமற்ற போட்டியாளராகக் கருதலாயின. நாணயமாற்று வங்கிகளும் இந்திய வங்கிகளுக்குப் பெரும் போட்டியாக இயங்கி வந்தன.

இம்பீரியல் வங்கி அரசினரின் நிருவாகத்தின்கீழ் ஸ்டேட் வங்கியாக மாறிய பின்னரும் நிலைமை அதிகம் மாறவில்லை. மாநிலக் கூட்டுறவு வங்கிகளும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் ஸ்டேட் வங்கியில் கணக்கு வைத்திருக்கின்றன. ஆனால் பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்டேட் வங்கியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

வட்டித் தொழிலர்களும் நாட்டு வங்கியரும் ஸ்டேட் வங்கியுடனோ,அல்லது கூட்டுறவு வங்கிகளுடனோ கணக்கு வைத்திருப்பதில்லை. இவர்களுக்கும் வணிக வங்கிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு எந்நாளும் இருந்ததில்லை. குறிப்பிட்ட சில காலங்களில் சில நிபந்தனைகட்கு உட்பட்டு இவர்கள் தம்மிடமுள்ள உண்டியல்களை (Hundis) வணிக வங்கிகளிடம் மறு தள்ளுபடி (Re-discount) செய்துகொள்ளுவதுண்டு. ரிசர்வு வங்கி, இவர்களைப் பணச் சந்தையில் பிணைத்து,ஓர் ஒழுங்குக்கு உட்பட்டுச் செயலாற்றப் பல திட்டங்களைப் பலமுறை தீட்டியும் நடைமுறையில் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை.

**அழைப்புப் பணச் சந்தை (Call Money Market)**

பணச் சந்தையின் நடு மையமாக விளங்குவது அழைப்புப் பணச் சந்தை யெனின் அது மிகையாகாது. இச் சந்தையில் வங்கிகள் ஒன்றுக்கொன்று கடன் அளித்து வருகின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் இச் சந்தை இயங்கி வருகிறது. பணச் சந்தையில் அவ்வப்போதுள்ள நிலவரத்தைக் காட்டுவது அழைப்புப் பணச் சந்தையே யாகும். பெரிய வணிக நிறுவனங்களும், நிதியாளர் (Financier)களும் நேரடியாகவோ அல்லது தரகர்கள் வழியாகவோ வங்கிகளுக்கு அழைப்புப் பணத்தைக் கடனாகத் தருவதுண்டு. இம்மாதிரி அழைப்புப் பணத்தைக் கடனாகப் பெறக்கூடிய வசதி வங்கிகளுக்கு இருப்பதால் தம் வசமுள்ள சொத்துக்களை அவை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. பணம் மிகையாக வைத்திருக்கும் வங்கிகள் தேவைப்படும் வங்கிகளுக்குக் கடனாக அளிப்பதால் பெரும்பாலும் வெளியாரிடமிருந்து கடன் பெறாமலே வங்கிகள் நிலைமையைச் சமாளிக்க முடிகிறது. வங்கிகளிடையே யுள்ள பணமும் சீராகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தப் பெறுகிறது.

அழைப்புப் பணச் சந்தையிலுள்ள வட்டி விகிதம் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெறும் காலங்களில் மிகுதியாகவும், மந்தமாக வுள்ள காலங்களில் குறைவாகவும் இருக்கும். வங்கிகள் தமது ரொக்க விகிதத்தை (Cash ratio) சட்டம் குறித்துள்ள அளவில் வைத்திருக்க அழைப்புப் பணச் சந்தையில் கடன் வாங்குகின்றன. இக்கடன் வட்டி வீதம் 1971 பெப்ரவரி முதல் வாரத்தில் 13% ஆக இருந்தது. பிறகு படிப்படியாகக் குறைந்து, ஜூன் இறுதியில் $4\frac{1}{2}$% ஆகலாயிற்று. பொருளாதார விரிவாக்கத்தின் காரணமாகக் கடன் தேவைகளும் கடந்த இரு ஆண்டுகளாகப் பெருகி வருங் காரணத்தால் வழக்கமாகக் கருதப்படும் மந்த காலங்களில்கூட, பெருமளவுக்குக் கடன் நடவடிக்கைகள் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. பணச் சந்தையின் அமைப்பு வலுப்பெற்று வளர வளர, அழைப்புப் பணச் சந்தையின் நடவடிக்கைகளும் வளர்ந்து பெருகும் என்று எதிர்பார்க்கலாம்.

**சீட்டுச் சந்தை (Bill Market)**

சரக்கு வாங்கல் விற்றல் நடவடிக்கைகளையொட்டி மாற்றுச் சீட்டு (Bill of Exchange) எழுதப்படுவதை யாவரும் அறிவர். நன்கு வளர்ந்த சீட்டுச் சந்தையில் பல்வகைச் சீட்டுக்களை ஏற்கவும், மாற்றித் தரவும், தயாராக வாங்குநர், விற்பனையர் பலர்

செயலாற்றி வருவர். சரக்கு வாங்குநர், விற்பனையர் தவிர, வணிக வங்கிகள், நாணயமாற்று வங்கிகள். நாட்டின் மைய வங்கி, சீட்டுத் தரகர்கள், ஏற்பு நிலையங்கள், தள்ளுபடி நிலையங்கள், நிதி நிலையங்கள், யூனிட் டிரஸ்டுகள், காப்பீட்டுக் கம்பெனிகள், மிகைப் பணம் கொண்டுள்ள பெரும் கூட்டுருக்கள் போன்ற பற்பல நிலையங்கள் சீட்டுச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. இங்கிலாந்தில் பாங்க் ஆப் இங்கிலாந்து, அயல் நாட்டு வங்கிகள், தீர்வக உறுப்பு வங்கிகள் (Clearing Banks), ஏற்பு நிலையங்கள், தள்ளுபடி நிலையங்கள் (Discount Houses) சீட்டுச் சந்தை நடவடிக்கைகளில் பெரும் பங்கு பெற்றுள்ளன. தள்ளுபடி நிலையங்கள் வங்கிகளிடமிருந்து கடன் பெற்று, சீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. இந்தியாவில் ரிசர்வு வங்கி ஏற்படுத்தியுள்ள சீட்டுச் சந்தையைத் தவிர, வேறோர் ஏற்பாடு ஏதும் கிடையாது. மற்றத் துறைகளில் மேலை நாடுகளைப் பின்பற்றி வளர்ந்துள்ள அளவுக்கு இந்தியா சீட்டுச் சந்தை அமைப்பாக்கத்தில் வளர்ச்சி பெறவில்லை.

**ரிசர்வு வங்கியின் 1951ஆம் ஆண்டுத் திட்டம்**

ரிசர்வு வங்கி 1951ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சீட்டுச் சந்தையொன்றை நிறுவும் திட்டத்தை அறிவித்தது. பட்டியலில் இணைக்கப்பட்ட வங்கிகள் தமது பருவகாலத் தேவைகளையொட்டிப் பணம் தேவைப்பட்ட நேரத்தில் ரிசர்வு வங்கியிடம் அரசினர் பிணையங்களை (Government Securities) விற்றுப் பணம் எழுப்பும் வசதியை இனி எதிர்ப்பார்க்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. பணச் சந்தையில் மாற்றுச் சீட்டுக்கள் புழக்கமில்லாதிருந்த காலம் அது. வணிக வங்கிகள் கடன் பெற விரும்பினுல் ரிசர்வு வங்கியிடம் அரசினர் பிணையங்களைப் பிணையாக வைத்து,குறிப்பிட்ட வட்டி வீதத்திற்குக் கடன்பெற்று வந்தன. இவ்வட்டி வீதம் வங்கி விகிதம் (Bank Rate) எனப்பட்டு வந்தது. இவ்வகைக் கடன் மட்டுமல்லாமல், 1952 ஜனவரி முதல் சீட்டுச் சந்தைத் திட்டமொன்றை ரிசர்வு வங்கி ஏற்பாடு செய்தது. பத்துக்கோடி ரூபாய்க்கும், அதற்கு மேலும் வைப்புக்கள் உள்ள வங்கிகள். தமது வாடிக்கையரின் 90 நாள் தவணை கடனுறுதிச் சீட்டுக்களைப் பிணையாகத் தந்து, ரிசர்வு வங்கியிடம் கேட்புக் கடன் (Demand Loan) பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டன. உண்மையாக வியாபார நடவடிக்கை அடிப்படையில் உண்டான, இரண்டு வகையுள்ள நபர்கள்—அதில் ஒன்று பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கி—கையொப்பமிட்ட மாற்றுச் சீட்டை ரிசர்வு வங்கியிடம் மறு தள்ளு

படி செய்துகொள்ள வகை செய்யப்பட்டது. வங்கி விகிதத்திற்கு அரை விழுக்காடு குறைவான அளவு விகிதத்தின் பேரில் இவ்வகை மாற்றுச் சீட்டின்மீது கடன் தரப்பட்டது. தமது கடன்களை தவணை மாற்றுச் சீட்டாக மாற்றுவதில் வங்கிகள் மேற்கொள்ள வேண்டி வந்த முத்திரை வரி (Stamp Duty)யில் பாதிச் செலவை ரிசர்வு வங்கி ஏற்றுக்கொண்டது. துவக்கத்தில் பத்துக் கோடி ரூபாய் அல்லது அதற்கு மிகுதியாக வைப்புக்கள் பெற்றிருந்த வங்கிகளுக்கு மட்டுமே இந்தத் திட்டத்தின் வசதிகள் தரப்பெற்றிருந்தாலும், நாளடைவில் இது எல்லாப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளுக்கும் அளிக்கப்பட்டது. ஒரு மாற்றுச் சீட்டின் தொகை ரூ. 1 இலட்சம் ; ஒரே நேரத்தில் பெறக்கூடிய கடன் தொகை ரூ. 25 இலட்சம் என்ற குறைந்த அளவு வரையறையைத் தளர்த்தி, ஒரு சீட்டின் தொகை ரூ. 50,000 ; ஒரே சமயத்தில் கோரும் கடன் குறைந்தது ரூ. 10 இலட்சம் என்று திருத்தவும் செய்தனர். இத் திட்டம் 1963 வரை உள்நாட்டு வணிகத்தில் தொடர்புற்ற சீட்டுக்களை மட்டுமே தன்னுள் கொண்டிருந்தது, பின்னர், ஏற்றுமதித் தவணைச் சீட்டுக்களும் இத் திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப் பட்டன. ரிசர்வு வங்கியிடம் கடன் பெற விரும்பும் வங்கிகள், தம்மிடம், கடனளவுக்குச் சமமான 180 நாட்களுக்கு மேற்படாத தள்ளுபடி செய்யப்பட்ட அல்லது புழக்குவிக்கப்பட்ட (Negotiated) ஏற்றுமதித் தவணைச்சீட்டு (Export usance bill)க்களைத் தாம் வைத்திருப்பாக உறுதிகூறி, கேட்புக் கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்துக் கடன் பெற்றுக்கொள்ளலாம். சீட்டுச் சந்தைத் திட்டம் வங்கிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருந்ததால் அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. குறுகிய காலத்திற்குப் பணம் தேவைப்பட்டாலும், மிகையாக வுள்ள பணத்தைக் குறுகிய காலத்திற்கு முதலீடு செய்ய விரும்பினாலும், இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலை உருவாகி வந்தது. மற்றும், உண்மையான வணிக நடவடிக்கைகளுக்கு மட்டுமே குறுகிய காலக் கடன்களை வழங்கவேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பது ரிசர்வு வங்கிக்கு எளிதாயிற்று.

மேற்கண்ட திட்டத்தின் கீழ் இயங்கிவந்த சீட்டுச்சந்தை, வணிக வங்கிகளுக்கு மட்டும் தமது ரொக்கக் கடன் பிரிவில் ஓரளவு பகுதியை மட்டுமே கடனுறுதிச் சீட்டாக மாற்றி, ரிசர்வு வங்கியிடம் மறு நிதி பெறும் வசதியை யளித்தது. இத் திட்டத்தை மேலும் விரிவுப்படுத்திச் சில முயற்சிகள் மேற்கொள்ளப் படலாயின. இதற்கிடையே தெகிஜ்யா குழு (Dehcjia Committee)வினரின் அறிக்கை வெளியாயிற்று. இக் குழு, ரொக்கக்

கடன் முறை (Cash credit system) யிலுள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கி, வணிக வங்கிகள் அளிக்கும் கடன்கள் சரியான வணிக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் பெறும் என்று திட்டமாக நம்பச் சீட்டுக்கள்மீது நிதி வழங்கலே சாலச் சிறந்தது என்று அறிவுறுத்தியது. இதே நேரத்தில் வணிக வங்கியத் துறையிலும் மாறுதல்கள் பல நிகழ்ந்து வந்தன. முதலில், வங்கிகள்மீது சமூகக் கட்டுப்பாடு (Social Control) வேண்டும் என்ற நிலையில் சில நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அடுத்துப் பதினான்கு பெரு வணிக வங்கி கள் நாட்டுடைமை யாக்கப்பட்டன. இதனால் உருவாகிய சூழ் நிலையில் வழக்கமாகக் கடனுதவி அளித்து வந்த துறைகளுக்கு மட்டுமல்லாமல், வணிக வங்கிகள் முந்துமைத் துறை (Priority Sector)களுக்கும் பெருமளவில் கடன் வழங்க வேண்டியிருந்தது. இவ்வண்ணம் மிகப்பெருந் தேவைகளுக்குத் தம்மிடமுள்ள பணத்தைக் கடனாகக் கொடுத்துதவ வணிக வங்கிகள் தமது கடன் சார்ந்த நடவடிக்கைகளில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டினை யும் கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. விலைவாசி ஏறிய வண்ணமும் பணவீக்கம் பெருகிய வண்ணமும் இருக்கும் பொருளாதார நிலையில் எளிய பணக் கொள்கை (Easy money policy) யைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது சரியன்று என ரிசர்வு வங்கியும் உணர்ந்தது. உண்மையான கடன் தேவை களை நிறைவு செய்யவேண்டும்; அதே நேரத்தில் ஒரே நட வடிக்கை அல்லது பண்டம் குறித்து இரட்டிப்புக் கடன்(Double financing) அளிக்கப்பெறுவது தடுக்கப்படவேண்டும் என்று ரிசர்வு வங்கி ஒப்புக்கொண்டது. இனி, கொடுக்கப்படும் தொழிலைச் சார்ந்த கடன்கள் உற்பத்திப் பெருக்க நோக்குடன் திகழவேண்டும்; அக்கடன்கள் சரிவரப் பயன்படுத்தப் பெறுகின் றனவா என்று மேற்பார்வை செய்யவேண்டும், கடன் திருப்பிச் செலுத்தப் பெறுவதும் முறையாக உள்ளதா என்று நோக்க வேண்டும் என ரிசர்வு வங்கி அறிவுறுத்தியது. கூடுதல் உற் பத்திக்கும், அதற்குத் தேவைப்படும் நிதி வசதிக்கும் நெருங்கிய தொரு தொடர்பும் ஒருங்கிணைப்பும் இருத்தலை ரிசர்வு வங்கி விரும்பியது.

### 1970-ல் உருவாக்கப்பட்ட புதுத் திட்டம்

ரிசர்வு வங்கி, மேற்கூறப்பட்ட நோக்கங்களும் முறைகளும் நிறைவேறும் வகையில் ஒரு சீட்டுச் சந்தை நிறுவ இதுவே தக்க தருணம் என்று கருதியது. இதையொட்டி, பிப்ரவரி 1970-ல் ஒரு குழு அமைத்து, கடன் வசதிகளை அளிக்க, மாற்றுச் சீட்டுக்களைப் பெருவகையில் பயன்படுத்துவது பற்றியும், சீட்டுச்

சந்தையொன்றை ஏற்படுத்துவது பற்றியும் ஆராயுமாறு பணித்தது. அக்குழுவின் அறிக்கை ஜூன் 1970-ல் பணித்தனுப்பப்பட்டது. அதையொட்டி ரிசர்வு வங்கிச் சட்டம் பிரிவு 17 (2) (a) படி, புதியதொரு சீட்டுச் சந்தைத் திட்டத்தை ரிசர்வு வங்கி ஏற்பாடு செய்தது. அத்திட்டம் நவம்பர் 1970-ல் அமுலாயிற்று.

இந்தியப் பணச் சந்தையில் பல ஆண்டுகளாகச் சீட்டுக்கள் புழக்கத்திலிருந்து வந்த போதிலும், பெருமளவுக்கு அவை தள்ளுபடி செய்யப்பட்டு வரப்படவில்லை. சரக்குகள்மீது கடன் பெறு முறையே பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இப்புதுத் திட்டத்தின் சிறப்பு, மாற்றுச் சீட்டினை மறுதள்ளுபடி (Re-discounting) செய்தற்கு உள்ள ஏற்பாடேயாகும்.

எவ்வகையான மாற்றுச் சீட்டுக்கள் ரிசர்வு வங்கியிடம் மறு தள்ளுபடி செய்யக்கூடும் தகுதியுள்ளன என்று காண்போம்:

(i) சரக்கு விற்பனை அடிப்படையில் எழுதப் பெற்ற வியாபார மாற்றுச் சீட்டாக, சீட்டு அமையவேண்டும்.

(ii) நடவடிக்கையின் தன்மையும், அதைச் சார்ந்த சரக்குரிமை ஆவணங்கள் (Document of title to goods)பற்றிய விவரமும் மாற்றுச் சீட்டிலேயே குறிக்கப்படல் வேண்டும்.

(iii) மாற்றுச் சீட்டின் தவணை முதிர்வு 120 நாட்களுக்கு மிகாமலும், அஃது ரிசர்வு வங்கியிடம் மறு தள்ளுபடிக்கு அளிக்கப்படும்போது மீதமுள்ள தவணைக் காலம் 90 நாட்களுக்கு மிகாமலும் இருக்கவேண்டும்.

(iv) ரிசர்வு வங்கிச் சட்டப்படி மாற்றுச் சீட்டில் இரு நல்ல கையொப்பங்கள் (Two good signatures) இருக்க வேண்டும்; அவற்றில் ஒன்று உரிமம் பெற்ற பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கியின் கையொப்பமாக இருத்தல் அவசியம். கீழ்க்காணும் நான்கு வகை மாற்றுச் சீட்டுக்கள் மறு தள்ளுபடிக்குத் தகுதி வாய்ந்தன.

(அ) சரக்கு வாங்குவோரின் வங்கியர் மீது எழுதப்பெற்று, அவ்வங்கியரால் ஏற்கப்பெற்ற சீட்டு.

(ஆ) வாங்குவோர், அவரது வங்கியர் ஆகியோர் மீது கூட்டாக எழுதப்பெற்று, அவர்களால் ஏற்கப்பட்ட மாற்றுச் சீட்டு.

(இ) திட்டத்தில் ஒப்பிட்டவாறு, முறிக்க இயலா வாணிக உறுதிக் கடிதம் (Irrevocable letter of credit) ஒன்றினை வாங்குபவர் நன்மைக்குத் துவக்கியுள்ள வங்கி, அந் நபர் எழுதி ஏற்றுள்ள மாற்றுச் சீட்டினைச் சான்றுறுதி யளிக்குமாயின் அம் மாற்றுச் சீட்டு.

(ஈ) வாங்குபவர் மீது எழுதப்பெற்று, அவரால் ஏற்கப்பட்டு, அஃது விற்போரால் தம் மேலெழுதப் பெற்று, உரிமம் பெற்ற பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கியொன்று மேலெழுதுபவர் என்ற முறையில் தவணை முதிர்வுக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகப் பணஞ் செலுத்தப்படும் என்று உறுதி கூறும் மாற்றுச்சீட்டு.

(v) சிறு தொகையைக் கொண்ட பெருமளவு சீட்டுக்கள் மறு தள்ளுபடிக்கு அளிக்கப்படுவதைத் தவிர்க்க, ரிசர்வு வங்கி ஒரு சீட்டின் தொகை குறைந்தது ரூ. 500 ஆக இருக்க வேண்டுமென்றும், ஒரு சமயத்தில் மறு தள்ளுபடிக்காக அளிக்கப்படும் சீட்டுக்களின் மொத்த மதிப்பு ரூ. 50,000 க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனைகள் பின்னர் மேலுந் தளர்த்தப்பட்டன என்பதைப் பின்னர் காண்போம்.

(vi) சீட்டில் சலுகை நாள் ஏதும் கிடையாது என்பது தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்; சலுகை நாட்கள் தரப்பட வேண்டுமெனச் சீட்டுடன் தொடர்புற்ற நபர்கள் விரும்பினுல், அது சீட்டின் தவணைக் காலத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

சீட்டுச் சந்தைத் திட்டத்தின் கீழ் எவ்வகைச் சீட்டுக்கள் மறு தள்ளுபடிக்கு ஏற்றுக்கொள்ளப்படுமெனக் கண்டோம். இனி இத்திட்டத்தில் சேராத சீட்டுக்கள் எவ்வகையின என்று காண்போம். சிலவகைப் பண்டங்கள் மீது வங்கிகள் கடனளிப்பதை ரிசர்வு வங்கி கட்டுப்பாடு செய்துள்ளது. அப் பண்டங்களையொட்டிய விற்பனை நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள மாற்றுச் சீட்டுக்கள் இத் திட்டத்தின் கீழ் வரமாட்டா. அரசினர்க்கு விற்கப்படும் பண்டங்களைச் சார்ந்து எழுதப்பெறும் மாற்றுச் சீட்டுக்களும் நடைமுறையில் இத் திட்டத்தின் பயனைப் பெற முடியாத நிலையிலுள்ளது. ஏனெனில், திட்டத்தின்படி, வாங்குபவரோ அவரது வங்கியரோ மாற்றுச் சீட்டை ஏற்கவேண்டும். வாங்கும் நபர் அரசாங்கமாக இருக்கும்பொழுது, அரசாங்கமோ அதன் வங்கியரோ

மாற்றுச் சீட்டை ஏற்க வேண்டும். இது எளிதான செயலல்ல. மற்றும் வெற்று மாற்றுச் சீட்டுக்கள் (Clean bills of exchange) வாடகைக் கொள்முறைத் திட்டத்தின் கீழ் எழுதப்பெற்ற சீட்டுக்கள் போன்ற பிற சீட்டுக்களும் ரிசர்வு வங்கியின் திட்டத்தின் கீழ் வரா.

**சீட்டுச் சந்தைத் திட்டத்தின் நன்மைகள்**

இத்திட்டத்தினுல் ரிசர்வு வங்கி, வணிக வங்கிகள், வாங்குவோர், விற்போர் ஆகியோர் நன்மை பெறுகின்றனர்.

**ரிசர்வு வங்கி பெறும் நன்மை**

ரிசர்வு வங்கிச் சட்டத்தில் மறு தள்ளுபடிக்கான ஏற்பாடுகள் அமைந்திருந்தும், நடைமுறையில் அவை இதுவரை பயன்படுத்தப்படவில்லை. வங்கிகளுக்கு மிகையாகப் பணமிருந்தாலும் அல்லது தற்காலிகமாக தட்டுப்பாடு ஏற்பட்டாலும், அவை அழைப்புப் பணச் சந்தை (Cal money market) யை அணுகி, தம் தேவையை நிறைவு செய்து கொண்டு வந்தன. ஆனுல் அழைப்புப் பணச் சந்தை சில இடங்களில் மட்டுமே செயலாற்றி வந்தன. மற்றும் அவை ஏற்கக்கூடிய நடவடிக்கைகளும் மிகச் சிறிய அளவிலேயே இருந்துவந்தன. இந்தச் சூழ்நிலையை வணிக வங்கிகள் ரிசர்வு வங்கியைக் கடைநிலை யுதவுவோன் என்று கருதாது, முதல் நிலையிலேயே கடன் தேவைப்படும் போது அணுகலாயின. ரிசர்வு வங்கி இந்த நிலையை விரும்பவில்லை. எந்த முயற்சியும் பலனளிக்காமல், கடன் தேவைப்படும் இக்கட்டான நிலையில் வங்கிகள் நாட்டின் மைய வங்கியை அணுகிக் கடன் பெறுவது உலகெங்கும் நடைமுறையிலுள்ள ஒரு பழக்கமாகும். இப்பழக்கத்திற்கு முரணுக, பணம் தேவைப்பட்டவுடன் மைய வங்கியாகிய ரிசர்வு வங்கியிடம் வங்கிகள் கடன் பெற்று வந்தன. இந் நிலை மாறச் சீட்டுச் சந்தை வகை செய்கிறது. வங்கிகள் தம்மிடம் மிகையாகப் பணமிருந்தால் மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்யவும், தமக்குப் பணம் தேவைப்பட்டால் மாற்றுச் சீட்டுக்களைப் பிறவங்கிகளிடமே மறு தள்ளுபடி செய்துகொள்ளவும் சீட்டுச் சந்தை உதவுகிறது. வேறெங்கும் கடன் எழுப்ப முடியா நிலையில்தான் வணிக வங்கிகள் மைய வங்கியிடம் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்து கடன் பெறும். மற்றும் வளர்ந்துவரும் பொருளாதார தேவைகளுக்கேற்ப, செலாவணித்தாளை வெளியிடுவதற்கு மறு தள்ளுபடி செய்யப்பட்ட சீட்டுக்களை அடிப்படையாகக்கொள்ளும் வாய்ப்பும் ரிசர்வு வங்கிக்குக் கிடைக்கிறது. மேலும் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயன்

படுத்தப்பெறும் கருவியான வங்கி விகிதம் (Bank rate) திற னுடன் செயலாற்றச் சீட்டுச்சந்தை பேருதவி புரியும்.

### வணிக வங்கிகளுக்குக் கிட்டும் நன்மை

வணிக வங்கிகள் சீட்டுச் சந்தைத் திட்டத்தினுல் பல நன்மை களைப் பெறுகின்றன. ரொக்கக் கடன் முறையில் கொடுக்கப் பட்ட கடன் தக்கவாறு பயன்படுத்தப்படுகிறதா என்று கண் காணிப்பது எளிதல்ல. ஆனுலும், மாற்றுச் சீட்டு வணிக நடவடிக்கையின் பேரில் எழுதப்பெறுவதால், அதன் பேரில் எழுப்பப்படும் பணம் தக்க முறையில் பயன்படுத்தப்பெறுவது உறுதி. ரொக்கக் கடன் முறையில் காணப்படும் குறைபாடுகள் பல, சீட்டுக்களைத் தள்ளுபடி செய்து, கடனளிப்பதில் நீக்கப்படு கின்றன. சீட்டுக்களுக்குத் தவணைத் தேதி அறுதியிட்ட ஒரு நாளாக இருப்பதால், கடன் தவணை ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்படவேண்டியுள்ளது. மாற்றுச் சீட்டு எழுதாத நட வடிக்கையில், சரக்கினை வாங்கியவர் குறித்த காலத்தில் பணம் செலுத்தத் தவறினுல், விற்றவர் ஒருவருக்கு மட்டுமே விடை சொல்ல வேண்டிய நிலையிலுள்ளார். ஆனுல், சீட்டு ஒன்றை வாங்குபவர் ஏற்றுவிட்டால், அச்சீட்டை முறைப்படி உடையவர் எவருக்கும் அவர் பொறுப்பாவார். மாற்றுச் சீட்டை அவ மதித்தால், மாற்றுமுறை யாவணச் சட்டப்படி தண்டங்களுக்கு ஆளாக நேரும். மாற்றுச் சீட்டில் இரண்டு நல்ல நபர்கள் கையொப்பமிடுவதால் அது முறைப்படி மதிக்கப்படும் என்ற உறுதி இருக்கிறது. மாற்றுச் சீட்டு அவமதிக்கப்பட்டால், அதன் மீது மறுப்புக் குறிப்பு எழுதப்படும். இதன் வழி கொடுக்கப்பட்ட கடன் கெட்டுப் போகும் நிலையை யடைந்து வருவது உடனுக்குடன் தெரிய வரும். ரொக்கக் கடன்முறை யில் இங்ஙனம் கடன் கெட்டுவரும் நிலையை உடனுக்குடன் அறிவது எளிதன்று.

சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதன் வழி, கடன் கொடுக்கும் நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொள்வது, அவை தம் வச முள்ள பணத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. இத் திட்டத்தின் துவக்கத்தில் வங்கி விகிதத்திற்கு வணிக வங்கிகள் அளிக்கும் மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்து தர ரிசர்வு வங்கி ஒப்பியுள்ளது. வணிக வங்கிகள் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்யும் வட்டி விகிதத்திற்கும், ரிசர்வு வங்கியிடம் மறு தள்ளுபடி செய்து கொள்ளும் வட்டி விகிதத்திற்கும் 3 முதல் 4 விழுக்காடு வேறு

பாடு இருப்பதால் இவ்வசதி வணிக வங்கிகளைக் கவரும் வகையில் அமைந்துள்ளது. இருப்பினும், வங்கிகள் ரொக்கக் கடன் மீது வசூலிக்கும் வட்டி விகிதம் மாற்றுச்சீட்டைத் தள்ளுபடி செய்யும் வட்டி விகிதத்தைவிட மிகுதியாக உள்ளது. எனவே, மாற்றுச்சீட்டைத் தள்ளுபடி செய்வதன்வழி, வங்கிகள் கடனளிப்பது அவ்வளவு ஆதாயந் தருவதாகக் கருதப்படுவதில்லை. புதிய சீட்டுச் சந்தைத் திட்டப்படி, ஏற்றுமதிக் கடன், விவசாயம், சிற்றளவு தொழில், தானியக் கொள்முதல் முதலிய இனங்கள் குறித்துக் கொடுக்கப்படும் கூடுதல் கடன் ஆகியவற்றிற்கு மட்டுமே ரிசர்வு வங்கியின் மறு நிதி வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

சீட்டுச் சந்தைத் திட்டம் சரக்கு விற்போருக்கும் நன்மையளிப்பதாக அமைந்துள்ளது. குறித்த காலத்தில் பணஞ் செலுத்தப்படுமென்ற உறுதி, நல்ல பிணையம் போன்ற நல்ல பண்புகள் இந் நடவடிக்கையில் காணப்படுகின்றன. தள்ளுபடி விகிதம் கடன் வட்டி விகிதத்தைவிடக் குறைவாக இருப்பதால், விற்பவருக்குச் செலவுகள் குறைவாக வுள்ளன. நாளடைவில், கடன் பேரில் விற்பனை செய்வோருக்கு, மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்வதைத் தவிர, வேறு வழியில் நிதி வசதி கிடைப்பது அரிதாகக் கூடும். எனவே, கடன்பேரில் விற்பனை செய்வோர், நிதி வசதி பெற, மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்துகொள்வது இயல்பாகக் கையாளப்படும் முறையாக அமைவது திண்ணம்.

ரிசர்வு வங்கி அமைத்துள்ள இந்தச் சீட்டுச் சந்தைத் திட்டம் 1970 நவம்பர் மாதத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. இத் திட்டம் வணிகர்களிடையே விரைவாகப் பரவத்தக்க சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை என்பது பொதுவாக நிலவும் கருத்தாகும். இதற்கு முக்கியக் காரணம், சீட்டு நடவடிக்கையின் பேரில் ஏற்படும் கடன், குறித்த காலத்தில் தவறாது அடைக்கப் படவேண்டும். வணிகர்கள் இந்தக் கடுமையான நிபந்தனைக்குக் கட்டுப்பட விரும்பவில்லை. சரக்கு வாங்கும் பெரு வணிகர் பலர் சீட்டை ஏற்பதைத் தம் மதிப்புக்குக் குறைவான செயலெனக் கருதுகின்றனர். சில வகை வியாபாரத்தில் 90 நாள் தவணை போதுமானதாக இருப்பதில்லை. மற்றும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்குகளை வாங்கும் அரசு இலாக்காக்கள் சீட்டினை ஏற்கும் வழி வகை இல்லாமையால் அந் நடவடிக்கைகள் இத் திட்டத்தின்கீழ் வர வாய்ப்பில்லை. மேலும், மறு தள்ளுபடி செய்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகள்

தொல்லை தருவனவாகவும், காலந் தாழ்க்கும் வகையினவாக வும் உள்ளன.

### திட்டத்தை விரிவு படுத்த வழிகள்

சீட்டு நடவடிக்கைகளை விரிவு படுத்த, வணிக வங்கிகள் தமது வாடிக்கையாளர்களைப் படிப்படியாக வழிக்குக் கொண்டு வர வேண்டும். வழக்கமாகச் சீட்டு வரம்பு (Traditional Bill Limit) என்று அறுதி செய்யப்பட்டுள்ள அளவுக் கடன்களை இந்தச் சீட்டுத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டும். பின்னர் வெற்றுச் சீட்டு, பண வசதிச் சீட்டு முதலியவற்றைத் தள்ளுபடி செய்ய மறுக்கவேண்டும். தற்போது அமுலிலிருக் கும் ரொக்கக் கடன் வசதிகளைச் சீட்டு அடிப்படையிலுள்ள கடன் வசதியாக மாற்றவேண்டும். சரக்கு வாங்குபவர்களுக்குப் பயன்படுமாறு வங்கிகள் மறுக்க இயலாத வாணிக உறுதிக் கடிதம் துவக்கி, விற்பனையருடைய சீட்டுக்களைத் தள்ளுபடி செய்து, அவர்களுக்குப் பணம் செலுத்துவதன் வழி, சீட்டு நடவடிக்கைகளைப் பெருக்கலாம். அவசரமாகப் பணந் தேவைப்படும்போது இங்ஙனம் தள்ளுபடி செய்த சீட்டுக்களை வணிக வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் மறு தள்ளுபடி செய்து கொள்ளலாம்.

புதிய சீட்டுச் சந்தைத் திட்டத்தைச் செயற்படுத்தி வந்த ஓராண்டு காலத்தில் சில சிக்கல்கள் இருப்பதை ரிசர்வு வங்கி உணர்ந்தது. விதி முறைகளைத் தளர்த்தியும், சில வகைச் சீட்டுக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் படுவதைத் தவிர்த்தும் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### கருவூலச் சீட்டு நடவடிக்கை

வங்கிகள், வியாபார அடிப்படையில் ஏற்படும் சீட்டுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது மட்டுமல்லாமல் கருவூலச் சீட்டுக் (Treasury Bills)கள் வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடு கின்றன. மத்திய அரசும், மாநில அரசாங்கங்களும் வெளி யிடும் இக் கருவூலச் சீட்டுக்கள் மூன்று மாத தவணை கொண் டன. இந்த வகைச் சீட்டுக்களில் வணிக வங்கிகள் தம்மிடம் மிகையாக வுள்ள பணத்தைக் குறுகிய காலத்திற்கு முதலீடு செய்கின்றனர். முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போர்க் காலங்களில் போர்ச் செலவுகளுக்குப் பணஞ் செலுத்த இந்திய அரசாங்கம் கருவூலச் சீட்டுக்களை வெளியிட்டது. பின்னர், அரசாங்க வரவு செலவுத் திட்டப்படி ஏற்படும் பற்றுக் குறைத் தொகையை ஈடு கட்டவும், தவணை முதிர்வடையும்சீட்டுக்

களுக்குப் பணஞ் செலுத்தவும் கருவூலச் சீட்டுக்கள் வெளியிடப் பட்டன. அண்மைக் காலங்களில் நடைமுறை, மூலதனச் செலவுகளுக்கு வழி வகை செய்யவும், பழந் சீட்டுக்கள்மீது பணஞ் செலுத்தவும், கடன்களை மாற்றிக் கொடுக்கவும் கருவூலச் சீட்டுக்கள் வெளியிடப்படுகின்றன.

அரசு வெளியிடும் இக் கருவூலச்சீட்டுக்களை வாங்குவோரைக் கோரி, அரசு அறிக்கை யொன்று வெளியிடப்படும். மிகவும் குறைந்த அளவு தள்ளுபடி கோரியுள்ள நபரின் விலை கோரல் ஏற்கப்படும். சில சமயம் இடைநிலை கருவூலச் சீட்டுக் (Intermediate Treasury Bills)களும் வெளியிடப்படுவதுண்டு. கருவூலச் சீட்டுக்களையும் இடைநிலைக் கருவூலச் சீட்டுக்களையும் பெருமளவுக்கு வாங்கும் நபர்கள் பெரு வணிக வங்கிகளே. ஆகவே, கருவூலச் சீட்டுக்களை வணிக வங்கிகள் வாங்கினால் தான் உண்டு என்ற நிலை நிலவலாயிற்று. ரிசர்வு வங்கி, கருவூலச் சீட்டுக்களைப் பரப்ப, அவற்றை மறு தள்ளுபடி செய்து கொள்ளும் தகுதியினை அளித்தது. இந்த வசதியைக் கருவூலச் சீட்டுக்களுக்கு அளிப்பதன் வழி, பணச் சந்தைமீது மேலும் கட்டுப்பாடு செலுத்த இயலும் என்று ரிசர்வு வங்கி நம்பியது. ஆனால், நம் நாட்டில் தள்ளுபடிச் சந்தை (Discount market) ஏதும் இல்லாமையால் கருவூலச் சீட்டைப் பரப்பும் திட்டம் அவ்வளவு வெற்றி காணவில்லை. மற்றும், ரிசர்வு வங்கியிடம் கருவூலச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்து பணம் பெறுவதை வலிமையற்ற நிலையின் சின்னமாகப் பணச் சந்தையில் கருதுகின்றனர். ஆனால், வேண்டும்போது கருவூலச் சீட்டைத் தள்ளுபடி செய்து பணம் பெற்றுக்கொள்ளும் வசதியில்லாவிடில், வணிக வங்கிகள் தமது பணத்தில் கணிசமானதொரு பகுதியைச் சீட்டுக்களில் முதலீடு செய்ய முன் வரமாட்டா. இந் நிலையை மாற்ற, ரிசர்வு வங்கி, கருவூலச் சீட்டுக்கள் தேவைப் பட்டபோது பணமாக மாற்றிக்கொள்ளப்படலாம் என்று கருத வேண்டும். வணிக வங்கிகள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குத் தமது பணம் முடக்கிப் போடப்படுகிறது என்று கருவூலச் சீட்டுக்களை வாங்கும்போது எண்ணக்கூடாத நிலை உருவாக வேண்டும். பொது மக்களுக்குக் கருவூலச் சீட்டு விற்பனை 1949 டிசம்பர் 20 முதல் 1952 செப்டம்பர் 9 வரையும், 1954 ஏப்ரல் 20 முதல் 1954 நவம்பர் 2 வரையும், 1956 ஏப்ரல் 6 முதல் 1958 ஆகஸ்டு 1 வரையும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. 1965 ஜூலை 12 முதல் வாராந்தர ஏலம் மூலம் கருவூலச் சீட்டுக்கள் விற்பதையும், இடைநிலைக் கருவூலச் சீட்டுக்கள் விற்பதையும் நிறுத்தியாயிற்று. இச் சீட்டுக்கள் வேண்டும் நபர்கள்

முழுவதும் வாங்கிக்கொள்ள ஏற்பாடு தற்போது இருந்து வருகிறது. இச் சீட்டுக்கள் தள்ளுபடி செய்யப்படும் விகிதம் 3·5% ஆகத் தற்போது நிலவுகிறது. கருவூலச் சீட்டுக்கள்மீது கொடுபடவேண்டிய தொகை ரூ. 2,721·94 கோடியாக 1971 நவம்பர் 30-ல் இருந்தது.

**துணைக் கடன் சந்தை** (Collateral Loan Market)

துணைக் கடன் சந்தை, பணச் சந்தையின் முக்கியமானதொரு பகுதியாகும். வணிக வங்கிகளின் சொத்துக்களில் பெரும்பகுதி, துணைக் கடன்களில் ஈடுபடுத்தப்படுகிறது. துணைக்கடன்கள் மூன்று வகைப்படும். அவை ரொக்கக் கடன், மேல்வரைப் பற்று, கடன் என்பன. அரசினர் கடன் பத்திரங்கள், முதல்தரக் கம்பெனிப் பங்குகள், விவசாயப் பொருள்கள், உற்பத்தியான சரக்கு, தங்கம் போன்றவற்றை ஈடாக ஏற்றுக் கொண்டு, வங்கிகள் கடன் தருகின்றன. ஈடாகப் பெறும் பொருள் அல்லது சரக்கின் விலை மதிப்பிற்கும் கடனாகத் தரப்படும் தொகைக்கும் தக்க இடைவெளி இருக்கவேண்டும். அரசினர் கடன் பத்திரங்கள் போன்ற மிக உயர்ந்த பிணையத்திற்கு இடைவெளி 10 முதல் 20 விழுக்காடும், முதல் தரக் கம்பெனிகளின் பங்குகளுக்கு 30 முதல் 40 விழுக்காடும், சரக்குக்கு 30 முதல் 50 விழுக்காடும் இருத்தல் வேண்டுமென வங்கிகள் நிருணயிப்பதுண்டு. மேல் வரைப்பற்றும், ரொக்கக் கடனும் குறுகிய காலக் கடன்களாகும். இவற்றை நோக்க, கடன்கள் (Loans) எனக் குறிக்கப்பெறும் பண வசதி குறுகிய காலக் கடனைவிட மிகுதியான காலத்திற்கு அளிக்கப்படுவதாகும். வணிகர்கள் ரொக்கக் கடன் வசதியையே விரும்புகின்றனர். இதற்குப் பிணையாகச் சரக்குகளை அளிக்கின்றனர். மேல் வரைப் பற்று வேண்டுவோர் கடன் பத்திரங்கள், பங்குகள் முதலியவற்றைப் பிணையாகக் கொடுக்கின்றனர்.

**பணச் சந்தையிலுள்ள வட்டி விகிதங்கள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் பணச் சந்தையென்று ஒன்று இருக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டில் தான், அதிலும் சிறப்பாக நாட்டுக்கு ஒரு மைய வங்கி ஏற்பட்ட பின்னர்தான் பணச் சந்தை செயற்படத் துவங்கியது. பொதுவாகப் பிற நாடுகளில் காணப்படும் பணச் சந்தையில் குறுகிய கால வட்டி வீதம் குறைவாகவும், நீண்ட கால வட்டி வீதம் அதைவிட மிகுதியாகவும் இருக்கும். ஆனால் நம் நாட்டில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் குறுகிய கால வட்டி வீதம் நீண்ட கால வட்டி வீதத்தைவிட ஒரு விழுக்காடு அதிகமாக இருந்தது. ஆனால், நாளடைவில் நிலைமை மாறி,

தற்போது நீண்ட கால வட்டி விதம் குறுகிய கால வட்டி வீதத்தைவிட மிகுதியாக உள்ளது. முன் காலத்தில் நிலைமை வேறு வகையாக இருந்தமைக்குக் காரணங்கள் பல உண்டு. பெரும்பாலான குறிகிய காலக் கடன்கள் விவசாயத்தைச் சார்ந்தனவாக இருந்தன. பெயரளவில் மட்டுமே இவை குறுகிய காலக் கடன்களாகத் திகழ்ந்தன. இவற்றில் பெரும்பான்மை புதுப்பிக்கப்பட்டு வந்த காரணத்தால் அவை நீண்ட காலக் கடன்களாகவே கருதப்பட்டு வந்தன. மற்றும், குறித்த காலத்தில் இக் கடன்கள் திருப்பித் தரப்படுவதும் உறுதியா யிருப்பதில்லை. எனவே, இக் கடன்கள்மீது மிகுதியான வட்டி வசூலிக்கப்பட்டது. இக் கடன்களை நோக்க, நீண்ட காலக் கடன்கள் உறுதியாகக் குறித்த காலத்தில் திருப்பித் தரப்படுமென்ற நிலை இருந்து வந்தமையால், அவற்றின்மீது சற்றுக் குறைவான வட்டி விதமே வசூலிக்கப்பட்டது. மற்றும் அயல் நாட்டுப் பணம் நீண்ட கால முதலீடுகளுக்குக் கிடைப்பது எளிதாக இருந்தது. குறுகிய கால முதலீடுகளில், நீண்ட கால முதலீடுகளில் பெறும் வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான வருமானம் பெறும் வாய்ப்பிருந்தும், மேற்கண்ட காரணங்களால் அயல் நாட்டுப் பணம் நீண்ட கால முதலீடுகளையே நாடிச் சென்றது. படிப்படியாக இந்த நிலைமை மாறிக் குறுகிய கால வட்டி வீதம் நீண்ட கால வட்டி வீதத்தை விடக் குறைவாக நிலவலாயிற்று.

**வைப்புக்களும் வட்டி விகிதமும்**

வங்கிகள் தம்மிடம் வைப்பாகச் செலுத்தப்பெறும் தொகைகள் மீது என்ன வட்டி தருகின்றன என்பதைக் காண்போம்: இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் நடப்பு வைப்புக்கள் (Current deposits) மீது வங்கியர் எப்பொழுதும் வட்டி அளித்ததில்லை. இதற்குக் காரணம் நடப்பு வைப்பில் பணம் போட்டு வைப்பதை வங்கிகள் ஒரு முதலீடாகக் கருதுவதில்லை. பண நடவடிக்கைகளைச் சார்ந்த வசதிகள் பொருட்டே நடப்பு வைப்புத் துவக்கப்படுகிறது. இந்த வகை வைப்புக்கள் மீது வங்கியர் வட்டி வழங்க ஒப்புக்கொண்டால், இவற்றின் வழி கிடைக்கும் தொகையை மந்த காலங்களிலும் கூட முதலீடு செய்து வைக்கும் நிலை ஏற்படும். இச் செய்திகளைக் கருதியே அயல் நாடுகளில் நடப்பு வைப்பின் மீது வட்டி வழங்கப்படுவதில்லை. இந்தியாவிலுள்ள வங்கிகள் 1930 ஆம் ஆண்டு வரை மந்த காலத்தில் 2%-ம், சுறுசுறுப்புக் காலத்தில் $2\frac{1}{2}$%-ம் நடப்பு வைப்பு மீது அளித்து வந்தன. உலகப் பெருமந்தம் ஏற்பட்ட பின்னர், பெரிய வங்கிகள் 1931 முதல் இந்த வட்டி வீதத்தை 1% ஆகக் குறைத்தன. பின்னர், இது அரைச் சத

வீதமாகி, இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் $\frac{1}{4}$ சதவீத மாயிற்று. 1963 முதல் நடப்புக் கணக்கு மீது வட்டி யளிப்பது நின்றது. கூட்டுறவு வங்கிகளும் சில சிறிய வணிக வங்கிகளும் இன்றும் நடப்பு வைப்புக்கள் மீது வட்டி யளித்து வருகின்றன. அவ் வங்கிகளும் இப் பழக்கத்தைக் கைவிடல் நன்று என்று கருதப்படுகிறது.

தவணை வைப்புக்கள் (Fixed deposits) மீது வங்கிகள் அளிக்கும் வட்டி வீதம் பல சூழ்நிலைகளைக் கருதி நிருணயிக்கப் படுகிறது. அரசினர் பிணையங்கள் மீது அளிக்கப்படும் வட்டி வீதம், குறுகிய கால வட்டி வீதம், நடப்பு வைப்புக்களின் அளவு போன்ற செய்திகளைக் கருத்தில் கொண்டே தவணை வைப்புக் கள் மீது தரப்படும் வட்டி வீதம் நிருணயிக்கப்படும். வணிக நிலையை யொட்டி, அரசினர் பிணையங்கள் மீது கிடைக்கும் வருமானத்திற்கும், தவணை வைப்பின் மீது தரப்படும் வட்டி வீதத்திற்கும் வேறுபாடு இருக்கும்.

நம் நாட்டில் 1958 ஆம் ஆண்டு வரை வங்கிகளனைத்தும் ஒரே வகையான வைப்புக்குப் பல வட்டி வீதங்களை அளித்து வந்தன. அவற்றிடையே வைப்புக்களைத் தம்மிடம் ஈர்ப்பதில் கடும் போட்டி இருந்து வந்தமையால், தம் திறனுக்கும் மிகுதி யான வட்டியை அளிப்பதாக ஒப்புக்கொண்டு, இக்கட்டான நிலையில் சிக்கிக் கொண்ட வங்கிகளும் பலப்பல. நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரு சீராக அமையாததால், வளர்ச்சி குன்றிய இடங்களில் வைப்புக்களை ஈர்க்கச் சிறிது கூடுதலான வட்டி விகிதமும், வளர்ச்சி யடைந்த இடங்களில் சிறிது குறைவான வட்டி வீதமும் வங்கிகள் அளிக்கலாமென்று கருதப் பட்டது. வங்கிகளை அவற்றின் அளவுப்படி வகைப்படுத்தி, பெரு வங்கிகள் அனைத்தும் குறிப்பிட்ட வட்டி வீதங்களையும், பிற வங்கிகள் சிறிது கூடுதலான வீதங்களும் தர அனுமதிக்கப் படலாமென்று யோசனை கூறப்பட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் வைப்புக்களின் மீது தரப்படும் வட்டி வீதம் வங்கி வீதத்துடன் (Bank rate) தொடர்புற்றதாக இருக்கும். இதற்குக் காரணம் அந் நாடுகளில் பணச் சந்தை நன்கு வளர்ச்சி யடைந்திருப்பதே யாகும். பணச் சந்தையின் உறுப்புக்கள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண் டுள்ளனவாயுள்ளன. பணச் சந்தையின் தலைமை உறுப்பாகிய மைய வங்கி (Central Bank), உள்ளபடியே தனது வங்கி வீதத் தைப் பொருளாதார நிலையினைக் காட்டும் கருவியாகக் கொண் டுள்ளது. இக்கருவி காட்டும் அளவினை யொட்டியே பிற வட்டி வீதங்கள் நிருணயிக்கப்படுகின்றன.

**வங்கிகளிடை உடன்பாடு**

அகில இந்திய வங்கிகளிடை உடன்பாடு (All-India Inter-Bank Agreement) ஒன்று 1958 அக்டோபர் முதல் அமுலிலிருந்து வருகிறது. பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள பெரும் வங்கிகள் அனைத்தும் தாமாகவே வலிய வந்து, இந்த உடன்பாட்டை ஏற்று, அதிற் கண்ட வட்டி விதத்தைக் கடைப்பிடித்து வருகின்றன. மேற்கண்ட உடன்பாட்டின்படி, வங்கிகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று ரூ. 25 கோடி முதல் ரூ. 50 கோடி வரை வைப்புக்கள் கொண்டுள்ளவை; இரண்டாம் வகை ரூ. 10 கோடி முதல் ரூ. 25 கோடிவரை வைப்புக்கள் கொண்டவை; மூன்றும் வகை ரூ. 10 கோடிக்குக் குறைவாக வைப்புக்கள் கொண்டவை. உடன்பாட்டில் குறிக்கப்பட்ட விதத்திற்கு மேல் இரண்டாம் வகை வங்கிகள் $\frac{1}{8}\%$ வட்டியும், மூன்றும் வகை வங்கியில் $\frac{1}{4}\%$ வட்டியும் அளிக்க அனுமதிக்கப்பட்டன. அயல்நாட்டு வங்கிகளும், ரூ.50 கோடிக்கு மேல்வைப்புக்களை உடைய இந்திய வங்கிகளும் ஒரு வகையாகக் கருதப்பட்டன.

மேற்கூறிய உடன்பாடு தேவைப்படும் போது சீராய்வு (Revise) செய்யப்படுவதுண்டு 1971 ஜனவரி மாதம் வங்கி விதம் (Bank rate) உயர்த்தப்பட்டதை யொட்டி, வைப்புக்கள் மீது அளிக்கப்படும் வட்டி விதங்களும் திருத்தி யமைக்கப்பட்டன. ஜனவரி 11, 1971-ல் அமுலுக்கு வந்த வட்டி விதங்களைக் கீழே காணலாம்:

15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை வைப்பு $2\%$
46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை வைப்பு $3\%$
91 நாட்கள்முதல் 6 மாதங்களுக்குக் குறைவாக வைப்பு $4\frac{1}{4}\%$
6 மாதங்கள் முதல் 9 மாதங்களுக்குக் குறைவாக வைப்பு $4\frac{3}{4}\%$
9 மாதங்கள் முதல் 1 ஆண்டுக்குக் குறைவாக வைப்பு $5\frac{1}{4}\%$
1 ஆண்டு முதல் 2 ஆண்டுக்குக் குறைவாக வைப்பு $6\%$
2 ஆண்டுகள் முதல் 3 ஆண்டுகள் வரை $6\frac{1}{2}\%$
3 ஆண்டுகளுக்கு மேலாக 5 ஆண்டுகளுக்கு உள்ளாக $7\%$
5 ஆண்டுகளுக்கு மேலாக $7\frac{1}{4}\%$

பணச் சந்தையில் நிலவி வந்த பிற வட்டி விதங்களைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம். இந்த அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள வட்டி விதங்கள் குறுகிய காலத்திற்குரியன. நாட்டிலுள்ள முக்கிய வணிக நகரங்களில் அவ்வப்போது நிலவி வந்த வட்டி விதங்களும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

## பட்டியல் 2—1

**பண விதங்கள் (நூற்றுக்கு ஓர் ஆண்டுக்கு)**

| ஆண்டு | வங்கிகளிடமிருந்து அழைப்புப் பணம் | | | நாட்டு வங்கியர் வாங்கும் மாற்றுச் சீட்டு விதம் | | | ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கடனளிப்பு விதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | பம்பாய் | கல்கத்தா | சென்னை | பம்பாய் | கல்கத்தா | சென்னை | |
| 1960–61 | 4·24 | 4·30 | 3·74 | 9·00—12·00 | 9·50—13·00 | 12·00—13·92 | $4\frac{1}{2}$—5 |
| 1965–66 | 6·26 | 6·81 | 6·06 | 12·00—15·00 | 15·00 | 17·40—19·80 | 7—$7\frac{1}{2}$ |
| 1966–67 | 5·16 | 5·51 | 4·57 | 15·00 | 15·00 | 19·80 | $7\frac{1}{2}$ |
| 1967–68 | 4·95 | 4·80 | 4·09 | 15·00 | 15 00—13·50 | 19·80—21 60 | $7\frac{1}{2}$—7 |
| 1968–69 | 3·75 | 4·05 | 4·06 | 15·00 | 13·50 | 21·60—21·00 | 7 |
| 1969–70 | 4·30 | 4·15 | 4·39 | 15·00 | 13·50 | 21·00 | 7 |
| 1970–71 | 6·38 | 6·91 | 6·45 | 15·00 | 13·50 | 21·60—24·00 | 7—$8\frac{1}{2}$ |

'வங்கிகளிடமிருந்து அழைப்புப் பணம்' என்ற தலைப்பு, வங்கிகள் மிகக் குறுகிய காலக் கடன்களுக்கு வசூலித்த வட்டி விதங்களைக் குறிக்கும். சிறிய வியாபாரிகள் சந்தையில் தள்ளுபடி செய்து பணம் பெறும் பொருட்டுக் கொண்டுவரும் மாற்றுச் சீட்டுக்களைப் பெரும்பாலும் ஷராப் (Shroff) எனப்படும் நாட்டு வங்கியர் தள்ளுபடி செய்து வாங்கிக்கொள்வது வழக்கம். இதற்கு முறைப்படி அமைக்கப்பட்ட சந்தை யேதும் கிடையாது. வணிக வங்கிகளில் மூத்த வங்கி போன்று செயலாற்றி வரும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கடைப்பிடித்து வரும் வட்டி விதங்கள், பிற வங்கிகளுக்கு ஒரு வழிகாட்டி போன்று அன்றும் இன்றும் இருந்து வருவதால், அவ் வங்கி கடன்கள் மீது வசூலிக்கும் வட்டி விதமும் குறிக்கப்பட்டுள்ளது.

இனி, வங்கிகள் பொதுமக்களிடமிருந்து எந்த அளவுக்கு எந்த வட்டி விதத்தில் வைப்புக்களைத் திரட்டி வந்துள்ளன என்பதையும், அங்ஙனம் திரட்டிய தொகையை எவ்வளவு வட்டிக்குக் கடனாகக் கொடுத்தன என்பதையும் காண்போம் (பட்டியல் 2—2).

வைப்புக்கள் மூலம் நாம் திரட்டும் தொகையில் ஏறத்தாழ, கால் பங்குக்கு 3 முதல் 4% வட்டி யளிப்பதும், கிட்டத்தட்ட 40% வைப்புக்கள் மீது 5% மேலான வட்டி யளிப்பதும் மேற்கண்ட அட்டவணையிலிருந்து புலனாகும். இங்ஙனம் திரட்டிய வைப்புத் தொகையை வங்கிகள் என்ன வட்டிக்குக் கடனாகக் கொடுக்கின்றன வென்று காண்போம் பட்டியல் (2—3).

ஏறத்தாழ 89% கடன்கள் 6½% முதல் 9½% வட்டிக்குத் தரப்பட்டன என்பதை இந்த 3 அட்டவணை காட்டுகிறது.

**கடன் மீது வட்டி நிருணயித்தல்**

வணிக வங்கிகள் கடன்கள் மீது விதிக்கும் வட்டி விதம் எங்ஙனம் நிருணயிக்கப்படுகிறது? பணச் சந்தையில் அவ்வப் போது நிலவும் பொருளாதார நிலை, பணமுடை அல்லது பண மிதப்பு, பருவ கால வேறுபாடுகள் ஆகியவற்றை யொட்டி வட்டி விதம் நிருணயிக்கப்படுகிறது. பணச் சந்தை சீராக வளர்ந்துள்ள நாடுகளில் வங்கி விதத்திற்கும், பணச் சந்தையிலுள்ள பிற வட்டி விதங்களுக்கும் அறுதியிட்ட தொரு தொடர்பு இருப்பதுண்டு. ஆனால், இந்தியாவில் அவ்விதத் தொடர்பு இல்லை. இதற்குக் காரணம் இந்திய வங்கிய அமைப்புக் கட்டுக்கோப்

## பட்டியல் 2—2

### பல்வேறு வட்டி வீதங்களுக்குப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளின் வைப்புக்கள் 1969 ஏப்ரல் (ரூபாய் இலட்சக் கணக்கில்)

| | ரூ. 100 கோடிக்கு மேல் வைப்புள்ள வங்கிகள் | ரூ. 50 கோடிக்கு மேல் 100 கோடி வரை வைப்புள்ள வங்கிகள் | ரூ. 25 கோடிக்கு மேல் 50 கோடி வரை வைப்புள்ள வங்கிகள் | ரூ. 10 கோடிக்கு மேல் 25 கோடி வரை வைப்புள்ள வங்கிகள் | ரூ. 10 கோடிக்குக் குறைவான வைப்புள்ள வங்கிகள் | அயல் நாட்டு வங்கிகள் | *கடந்த 6 பத்திகளிலுள்ள உடன்பாட்டு வணிக வங்கிகள், ஸ்டேட் பாங்கு ஆகியவற்றின் மொத்தம் | **உடன்பாட்டில் அடங்காத வணிக வங்கிகள் | பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள எல்லா வங்கிகளும் சேர்ந்து மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல் தரும வங்கிகளின் எண்ணிக்கை | 12 | 3 | 7 | 11 | 6 | 13 | 52 | 17 | 69 |
| வட்டி வீதம் ஆண்டுக்கு % | | | | | | | | | |
| 0 | 747,10 | 38,36 | 50,05 | 23,83 | 4 36 | 112,29 | 975,99 | 4,96 | 980.95 |
| 0—1½ | 40,12 | 82 | 1,18 | 1,42 | 16 | 14,82 | 58,52 | 4,34 | 62,86 |
| 1½—3 | 26.08 | 93 | 2,42 | 25 | 1 | 68,23 | 97,92 | 3 | 97,95 |
| 3—4 | 951,03 | 69,00 | 77,53 | 42,47 | 8,48 | 124,00 | 1,272,51 | 10,83 | 1,283,34 |
| 4—4½ | 119,67 | 9,14 | 14,14 | 5,76 | 30 | 15,55 | 164,56 | 4,96 | 169,52 |
| 4½—5 | 51,90 | 3,03 | 12,82 | 5,54 | 50 | 11,89 | 85,68 | 2,29 | 87,97 |
| 5—5½ | 636 33 | 44,77 | 33,24 | 8,51 | 73 | 77,30 | 800,88 | 1,94 | 802,82 |
| 5½—6 | 137,41 | 13,38 | 43,85 | 30,83 | 2,87 | 10,77 | 239,11 | 8,28 | 247,39 |
| 6—7 | 464,63 | 25,47 | 26,74 | 23,59 | 5,90 | 19,62 | 565,95 | 18,94 | 584,89 |
| 7க்கு மேல் | 26,27 | 9,31 | 27,01 | 15,32 | 3,36 | 4,05 | 85,32 | 9,44 | 94,76 |
| மொத்தம் | 3,200,54 | 214,21 | 288,98 | 157,52 | 26,67 | 458,52 | 4,346,44 | 66,01 | 4,412,45 |

* இந்தியப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அயல் நாட்டு வங்கிகள் ஆகியவற்றுள் வங்கிகளிடை உடன்பாட்டை ஏற்ற வங்கிகளே உடன்பாட்டு வங்கிகள் எனப்படும்.

** வங்கிகளிடை உடன்பாட்டில் அடங்காத வணிக வங்கிகள் இப்பெயரால் குறிக்கப்பட்டுள்ளன.

## பட்டியல் 2—3

### பல்வேறு வட்டி விதங்களில் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் 1968–69-ல் அளித்த கடன் (ரூபாய் இலட்சக் கணக்கில்)

| | இந்தியப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் | | அயல்நாட்டு வங்கிகள் | | எல்லாப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளும் சேர்ந்து | |
|---|---|---|---|---|---|---|
| தகவல் அளித்த வங்கிகள் எண்ணிக்கை | 56 | | 13 | | 69 | |
| வட்டி—ஆண்டுக்கு ரூ. நூற்றுக்கு | தொகை | மொத்தத்தில் % | தொகை | மொத்தத்தில் % | தொகை | மொத்தத்தில் % |
| 1. 0 | 20,68 | 0·8 | 2,04 | 0·7 | 22,72 | 0·8 |
| 2. $3\frac{1}{2}$ வரை | 5,87 | 0·2 | 8,69 | 2·8 | 14,56 | 0·5 |
| 3. $3\frac{1}{2}$க்கு மேல் $4\frac{1}{2}$ உட்பட | 6,40 | 0·3 | 66 | 0·2 | 7,06 | 0·3 |
| 4. $4\frac{1}{2}$க்கு மேல் $5\frac{1}{2}$ உட்பட | 10,65 | 0·4 | 1,02 | 0·3 | 11,67 | 0·4 |
| 5. $5\frac{1}{2}$க்கு மேல் $6\frac{1}{2}$ உட்பட | 98,36 | 3·9 | 23,16 | 7·4 | 121,52 | 4·3 |
| 6. $6\frac{1}{2}$க்கு மேல் $7\frac{1}{2}$ உட்பட | 324,17 | 13·0 | 3,14 | 1·0 | 327,31 | 11·7 |
| 7. $7\frac{1}{2}$க்கு மேல் $8\frac{1}{2}$ உட்பட | 475,02 | 19·1 | 170,57 | 54·5 | 645,59 | 23·0 |
| 8. $8\frac{1}{2}$க்கு மேல் $9\frac{1}{2}$ உட்பட | 1,413,39 | 56·8 | 101,22 | 32·3 | 1,514,61 | 54·0 |
| 9. $9\frac{1}{2}$க்கு மேல் $10\frac{1}{2}$ உட்பட | 83,79 | 3 4 | 1,87 | 0·6 | 85,66 | 3·1 |
| 10. $10\frac{1}{2}$க்கு மேல் $11\frac{1}{2}$ உட்பட | 31,22 | 1·3 | 1 | — | 31,23 | 1·1 |
| 11. $11\frac{1}{2}$க்கு மேல் $12\frac{1}{2}$ உட்பட | 12,66 | 0·5 | 16 | 0·1 | 12,82 | 0·5 |
| 12. $12\frac{1}{2}$க்கு மேல் | 7.58 | 0·3 | 33 | 0·1 | 7,91 | 0·3 |
| மொத்தம் | 2,489,79 | 100·00 | 312,87 | 100·00 | 2,802,66 | 100·00 |

பாகச் செயற்படாமல் இருப்பதாகும். மற்றும் நாட்டின் பண, நாணயப் புழக்கத்தை சீரான முறையில் நடத்திச் செல்லும் முழு வலிமை பெற்ற ஆணையம் (Authority) ஏதும் நம் நாட்டில் பல காலமாக இல்லை. மேலை நாடுகளில், வங்கிகளிடையே வீண் போட்டியைத் தவிர்க்க, மரபு நெறிப் (Convention) படியும், உடன்பாட்டுப் படியும் வங்கி வீதத்திற்கும் பணச் சந்தையிலுள்ள பிற பண வீதங்களுக்கும் ஓர் அறுதியிட்ட தொடர்பு நிலவி வருகிறது. லண்டன் பணச் சந்தையில் வங்கியின் எளிவரல் சொத்துக்கள் (Liquid assets) என்று கூறப்படுவன ரொக்கம், தள்ளுபடி செய்யப்பட்ட மாற்றுச் சீட்டுக்கள், அழைப்பு அல்லது குறுந் தவணைப் பணம் ஆகும். முதல்தர வங்கிகளும், நிதி நிலையங்களும் ஏற்புச்செய்துள்ள மாற்றுச் சீட்டுக்கள் மீது ஒரு நாள் அல்லது ஒரு வாரத்திற்குக் கடன் அளிப்பதில் முதலீடு செய்யப்படும் பணமே பெரும்பாலும் குறுந்தவணை அல்லது அழைப்புப் பணம் எனப்படும். அழைப்புப் பணத்தின் மீது விதிக்கப்படும் வட்டி மிகவும் குறைவாக இருக்கும். ஒரு வாரக் கடன் மீது வங்கி வீதத்தை விட 1% குறைவான வட்டி விதிக்கப்படுவது வழக்கு. லண்டன் பணச் சந்தையில் மாற்றுச் சீட்டுத் தரகர்களுக்கு அளிக்கப்படும் ஒரு வாரக் கடன்கள் மீதான வட்டி வீதமே சந்தையில் கடன்கள் மீது விதிக்கப்படும் வட்டியாகக் கருதப்பட்டு வருகிறது. பெரு வணிகர்கள், நிதி நிலையங்கள், வணிக வங்கிகள் ஆகியோர் மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்யும் பொருட்டுத் தேவைப்படும் கடன்களை மாற்றுச்சீட்டுத் தரகர்களுக்கு அளிக்கின்றனர். மாற்றுச் சீட்டுத் தரகர்களையன்றி, பங்குச் சந்தை நடவடிக்கைகளில் தொழில் புரிவோருக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கணக்குக் கட்டத் தேவைப்படும் தொகையினையும், அழைப்பு அல்லது குறுந்தவணைக் கடனுக வணிக வங்கிகள் அளிக்கின்றன. தள்ளுபடிச் சந்தைக்கு வேண்டிய தொகை வங்கிகளிடமிருந்து கிடைக்கவில்லையாயின், மாற்றுச் சீட்டுத் தரகர்கள் (Bill brokers) இங்கிலாந்தின் மைய வங்கியான பாங்க் ஆப் இங்கிலாந்தை அணுகி, தம்மிடமுள்ள சீட்டுக்களை வங்கி வீதத்திற்குத் தள்ளுபடி செய்து, தொகை பெறுவர்.

**வங்கி வீதமும் வட்டி வீதமும்**

இந்தியாவில் நிலவும் நிலைமை வேறு விதமாகவே யுள்ளது. வங்கி வீதத்தை யொட்டியே பிற வட்டி வீதங்கள் அமைய வேண்டும் என்ற மரபோ அல்லது உடன்பாடோ இங்கில்லை. நம் நாட்டில் பங்குச் சந்தையும் பெருமளவுக்கு—வங்கிகளின் பணத்தினை முதலீடு செய்வதைப் பாதிக்கும் அளவுக்கு—நட-

வடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதை ஒரு முதலீடாகக் கருதும் வங்கிகள் அவற்றை மறு தள்ளுபடி செய்துகொள்ளுவதில்லை. இந்திய ரிசர்வு வங்கி 1935-ல் நிறுவப்படும் வரை வங்கி வீதம் (Bank rate) என்ற சொற்றொடருக்குப் பொருளே இல்லாமலிருந்தது. பொதுவாக, மேலை நாடுகளில் மைய வங்கிகள் முதல்தர வியாபார மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்து தரும் வட்டி வீதத்தையே வங்கி வீதமென்பர். ஆனால், நம் நாட்டில் 1935ஆம் ஆண்டுவரை அரசினர் பிணையங்களைப் பிணையாக ஏற்றுக் கொண்டு, இம்பீரியல் வங்கி (Imperial Bank) பிற வங்கிகளுக்குக் கேட்புக்கடன் (Demand loan) அளித்த வட்டி வீதமே வங்கி வீதமாக இருந்தது. அக்காலத்தில் செலாவணி நிருவாகப் பொறுப்பை அரசு இம்பீரியல் வங்கியிடம் ஒப்புவித்திருந்ததால் அரசாங்க ரொக்க இருப்பின் நிலையைக் கருதியே வங்கி வீதம் செயற்பட்டு வந்தது. சுருங்கக் கூறின், இம்பீரியல் வங்கியின் ரொக்க நிலையைக் காட்டும் கருவியாக வங்கி விதம் இருந்து வந்ததேயன்றிப் பணச் சந்தையில் நிலவும் நிலைமையைக் காட்டும் கருவியாக அது திகழவில்லை.

**பசார் விதம்** (Bazaar Rate)

அரசினர் பிணையங்களை ஈடாக ஏற்றுக்கொண்டு, இம்பீரியல் வங்கி வழங்கிய கடன்களுக்கு விதித்த வட்டி சில நேரம் வங்கி வீதத்திற்கு அதிகமாகவும், சில நேரம் குறைவாகவும் இருந்து வந்தது. இதே போன்று உண்டியல்களைத் தள்ளுபடி செய்யும் வீதமும் வங்கி வீதத்துடன் தொடர்புடையதாக இல்லை. நாட்டு வங்கியர்கள் (Indigenous bankers) சிறு வணிகர்களின் உண்டியல் (Hundi) களைத் தள்ளுபடி செய்து தரும் வீதமும் இம்பீரியல் வங்கி வீதத்தினின்றும், ரிசர்வு வங்கி வீதத்தினின்றும் வேறுபட்டதாக இருந்தது. இன்றும் இந் நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. முன் பக்கங்களில் கண்ட அட்டவணையை உற்று நோக்கினால், பசார் வீதம் (Bazaar rate) பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் ஒரே அளவினதாக இருப்பதில்லை என்பதும் புலனாகும். பம்பாய் நகரிலேயே நிலவும் வீதங்கள் பலவாக இருப்பதுண்டு. குஜராத்தி பசார், மார்வாரி பசார், மூல்தானி பசார் முதலிய பசார்களில் வெவ்வேறு வீதங்கள் நிலவுகின்றன. இந்தியாவிலுள்ள பணச் சந்தைகளில் பணப் போக்குவரத்து எவ்வளவு மந்த நிலையிலுள்ளது என்பதை இந்த வங்கி வீதங்கள் உணர்த்துகின்றன. இந்த வட்டி வீதங்களிடையே வேறுபாடுகள் இருக்கக் காரணம், பணச் சந்தையின் மையப் பகுதி ஒழுங்கமைதி பெற்றதாகவும்,

பசார் பகுதி என்னும் நாட்டுப் பகுதி ஒழுங்கமைதி யற்றதாகவும் இருப்பதே யாகும். இவ்விரு பகுதிகளிடையே ஒரு தொடர்பு ஏற்படுத்த வியாபாரச் சீட்டுக்கள் (Trade bills) பெருமளவில் சந்தையில் புழக்கத்திற்கு வர வேண்டும். இச் சீட்டுக்களை பசார் பகுதியில் எளிதில் தள்ளுபடி செய்துகொள்ளும் வசதி யுண்டு. இச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்து தரும் வணிகர் தமக்குப் பணந் தேவைப்படுகையில் மையப் பகுதியிலுள்ள ஒழுங்கமைதி பெற்ற சந்தையில் கடன் பெற்றுக்கொள்ளும் வசதி யிருத்தல் வேண்டும். வைப்புக்களின் மீது தரக்கூடிய வட்டி வீதம் பற்றி வங்கிகளிடை உடன்பாடு ஏற்பட்டது போன்று தாம் வழங்கும் கடன்கள் மீதும் குறைந்தது வங்கி வீதத்திற்கு 2% அதிகம் வட்டி வாங்க வேண்டுமென்று வங்கிகள் உடன்பட்டுள்ளன.

மாற்றுச் சீட்டுச் சந்தை வளராமைக்குக் காரணங்கள்:—

மேலை நாடுகளை நோக்குமிடத்து, இந்தியாவில் மாற்றுச் சீட்டுக்கள் தள்ளுபடி செய்வதில் முதலீடு செய்யப்படும் தொகை குறைவாகவே யுள்ளது. வங்கிகள் திரட்டியுள்ள வைப்புத் தொகையில் 10%க்கும் குறைவான தொகையே சீட்டுத் தள்ளு படி செய்வதில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தமது எளிவரல் நிலை (Liquid position) யினைத் திடமாக வைத்துக்கொள்ள வங்கிகள் தம் பணத்தை அரசினர் பிணையங்களில் ஏராளமாக முதலீடு செய்து வருகின்றன. 1971ஆம் ஆண்டு, ஜூன் இறுதியில் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் தமது வைப்புத் தொகையில் 22·1% த்தினை அரசினர் பிணையங்களில் முதலீடு செய்திருந்தனர்.

வங்கிகள் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்யுமுன் அதில் இரண்டு நல்ல நபர்கள் கையொப்பமுள்ளதா என்று நோக்கும். அந்த நபர்களின் நிதி நிலையை அறிந்து கொள்வதில் தொல்லைகள் ஏற்படுவதுண்டு.

மற்றும் எழுதப்பெற்றுள்ள மாற்றுச் சீட்டு, பண வசதி பெறும் பொருட்டு எழுதப்பெற்றதா அல்லது உண்மையான வணிக நடவடிக்கையின் அடிப்படையில் எழுதப்பெற்றதா என்று அறிவதும் எளிதாக இருப்பதில்லை. சீட்டுக்களுடன் ரெயில்வே ரசீதோ, பண்டக ரசீதோ இணைக்கப் படுவதில்லை.

முன்னரே கண்டபடி, வணிகர்கள் ரொக்கக் கடன் முறை (Cash Credit System)யை வசதியான தொன்றாக இன்றும் கருதி வருகின்றனர். தாம் பயன்படுத்தும் ரொக்கக் கடன் அள

வுக்கு மட்டுமே வணிகர்கள் வட்டி செலுத்த வேண்டியிருக்கிறது. வணிகரின் நிதி நிலை குலைந்துபோனால், ரொக்கக் கடன் வசதிகளை வங்கி உடனே நிறுத்திக்கொள்ளும் வசதியும் உண்டு. ஆனால், சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதில் இரு சாராருக்கும் நன்மை யுண்டு. வணிகர் குறித்த ஒரு கால வரம்பிற்குக் கடன் வசதி பெற முடியும். வங்கி தான் எளிவரல் சொத்து ஒன்றைத் தள்ளுபடி செய்து தருவதன் வழி பெறுகிறது. தேவைப்படும் போது மறு தள்ளுபடி செய்து, சீட்டைப் பணமாக மாற்றிக் கொள்ளும் வசதி வங்கிக்கு உண்டு அல்லவா?

மத்திய அரசு கருவூலச் சீட்டுக்களை (Treasury bills) வெளியிட்டு வருவதும், சீட்டுப் புழக்கத்திற்கு இடையூறாக அமைந்துள்ளது. வியாபாரச் சீட்டுக்களைப் பொறுத்தவரை, பல சட்டச் சடங்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆனால், கருவூலச் சீட்டில் பல வசதிகளும் நன்மைகளும் உண்டு. தேவைப்படும் போது ரிசர்வ் வங்கியிடம் கருவூலச் சீட்டுக்களை விற்றுப் பணம் பெறலாம். அரசினரே வெளியிடுவதால் இச் சீட்டு மிக உயர்ந்த தரத்தினதாகவும், குறிப்பிட்ட தவணையுடையதாகவும், சட்டச் சடங்கு ஏதும் அதிகம் செய்யப்பட வேண்டிய தேவையில்லாததாகவும் உள்ளது.

நாட்டு வங்கியர் தள்ளுபடி செய்து தரும் உண்டியல்கள் (Hundis) ஒரே வகையான பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டதாக இருப்பதில்லை. மற்றும் இவைமீது முத்திரை வரியும் கடுமையான சுமையாக இருக்கின்றது. மொழிக்கு மொழி உண்டியல்கள் எழுதும் முறை மாறுபடுதலால், இவற்றைப் பொருள் விளக்கம் செய்வதில் பல கோளாறுகள் ஏற்படுவதுண்டு.

நல்லதொரு சீட்டுச் சந்தையை ஏற்படுத்த ரிசர்வு வங்கி பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது பற்றி முன்னர் கண்டோம். இம் முயற்சிகள் முழு வெற்றி காணத் தடையாகச் சில சூழ்நிலைகள் இருந்து வருகின்றன. டாக்டர் முரஞ்சன் இவற்றை ஆராயப் புகுந்து, இச் சூழ்நிலைகள் நிலவக் காரணமாயுள்ள செய்திகளையும் விளக்கியுள்ளார். பணத் தட்டுப்பாடு உள்ள இடங்களையும், பணம் மிகையாக உள்ள இடங்களையும் இணைக்கும் பாலம் சீட்டுச் சந்தை ஒன்றுதான் என்று கருதுவது தவறு. பல நாடுகளில் வங்கிகள் சீட்டுச் சந்தையைத் தமது கிளைகள் வழி நடவடிக்கைகளின் மூலம் படிப்படியாக அகற்றி விட்டது வரலாறு கூறும் உண்மை. வங்கிகளின் கிளைகள் நேரடியாகச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதும், வசூல் செய்து தருவதும் சீட்டுச் சந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கும். மற்றும் இந்தியாவில் வங்கிகளுக்கு ஆண்டு முழுவதும்

தொடர்ந்து மிகைப்பணம் இருந்து வருவதில்லை. சில பருவங்களில் மட்டுமே வங்கிகளிடம் மிகையாகப் பணம் கிடக்கிறது. இப் பணத்தைச் சீட்டுத்தரகர்களுக்குக் கடனாக அளிப்பதை விடத் தாமே சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதில் முதலீடு செய்வதை வங்கிகள் விரும்புகின்றன. மேல்வரைப் பற்று, ரொக்கக் கடன் ஆகிய இரு முறைகளின் வழி, கடன்கள் கடன் வசதிகள் பெறுவதைப் பல காலமாக வணிக நிலையங்கள் கடைப்பிடித்து வந்துள்ளன. இந்தப் பழக்கத்தை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல. எந்த வகைக் கடன் வசதிச் செலவு குறைவாக, அதாவது குறைவான வட்டிக்கு அளிப்பது என்பது வங்கிகளின் விருப்பத்தைப் பொறுத்தது. தற்சமயம் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்யும் வட்டிவீதம் மற்றக் கடன் வட்டி வீதங்களைவிடக் குறைவாக உள்ளது.

### சீட்டுச் சந்தை வளர வழிகள்

மைய வங்கியக் குழு (Central Banking Comm'tte), வங்கியத் துறை வல்லுநர் முதலானோர் நம் நாட்டு வங்கிய அமைப்புச் சீரான செம்மையான முறையில் அமையச் சுருசுருப்பான திறன் வாய்ந்த சீட்டுச் சந்தை அவசியம் தேவை என வற்புறுத்தியுள்ளனர். பணச் சந்தையில் காணப்படும் பல்வேறு உறுப்புக்களை ஒருங்கிணைத்து, நாணயம், கடன் ஆகியவற்றை ஒருங்கே கட்டுப்படுத்தக் கூடிய ஏற்பாட்டை அமைத்து, பிற வங்கிகளின் காழ்ப்பு உணர்ச்சியை அகற்றி, உண்மையிலேயே வங்கியர்களுக்கு வங்கியாகச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்யும் பணியினை மேற்கொள்வது ரிசர்வுவங்கியின் தலையாய கடமையாகும். தன்னுடைய ஆதரவான குடை நிழலில் நாட்டு வங்கியர்களைக் கொண்டு வந்து, அவர்கள் அளிக்கக்கூடிய சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்து தந்து, அவர்களைப் பணச் சந்தையில் பிணைக்கும் பொறுப்பு ரிசர்வு வங்கியினதாகும். வியாபாரம் சுருசுருப்பாக உள்ள பருவத்தில் வணிகச் சீட்டுக்களின் பேரில் கூடுதலாகச் செலாவணி வெளியிட்டு, ரிசர்வு வங்கி வட்டி வீதத்தைப் பெருமளவு உயர்த்தாமல் இருப்பின், வணிகர்கள் எளிய வட்டி வீதத்திற்குத் தேவைப்படும் அளவுக்குக் கடன் வசதி பெற இயலும். உண்மையாகவே, வணிக நடவடிக்கை அடிப்படையில் எழுந்துள்ள சீட்டுக்களை மட்டுமே வங்கி வீதப்படி மறு தள்ளுபடி செய்யவோ அல்லது வாங்கவோ ரிசர்வு வங்கி வசதி செய்து தர வேண்டும். வணிக நடவடிக்கையன்றி வேறு காரணமாக எழுதப்பெற்ற சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்யவோ அல்லது மிகச் சிறந்த பிணையங்களை ஈடாகப் பெற்று,அவற்றின் மீது கடன் தரவோ ரிசர்வு வங்கி அதிகமானதொரு வட்டி

விதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நாடெங்கும் கிடங்குகளும் பண்டகங்களும் (Godowns and Warehouses) நிறுவப்பெற வேண்டும். இங்ஙனம் நிறுவப்பெற்ற கிடங்கு அல்லது பண்டகம் தன்னிடம் பாதுகாப்புக்குச் சரக்கு வைக்கப்பட்டதற்குச் சான்றாக வழங்கும் ரசீதுகள் சீட்டுக்களுடன் இணைக்கப் பெற்றால், சீட்டுக்கள் வணிக நடவடிக்கையின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது உறுதிப்படும். விவசாய விளை பொருள்கள் கிடங்குகளில் சேர்க்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் சீட்டுக்கள் எழுதப்பெற்றால், அச்சீட்டுக்களைக் கூட்டுறவு மத்திய வங்கிகள் தள்ளுபடி செய்து தரலாம். கூட்டுறவு வங்கிகள் இச் சீட்டுக்களை வணிக வங்கிகளிடம் மறு தள்ளுபடி செய்துகொள்ளலாம். இங்ஙனமாக விவசாயத் தொழிலைப் பணச் சந்தையுடன் இணைக்கலாம். இதேபோன்று விளைபொருள்களை விற்பதற்கு வேண்டிய நிதி வசதிகளையும் கிராம வியாபாரிகள் அங்குப் புழங்கும் நாட்டு வங்கியர்கள்மீது சீட்டுக்கள் எழுதிப் பெறலாம். நாட்டு வங்கியர் அச் சீட்டுக்களை ரிசர்வு வங்கியிடமோ அல்லது வணிக வங்கிகளிடமோ தள்ளுபடி செய்து பணம் பெறலாம். சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதன்மூலம் வங்கிகள் எளிவரல் சொத்துக்களைப் பெறுவதால் வங்கிகளின் எளிவரல் நிலை (Liquid position) நன்கு உறுதி யடைகிறது.

### ரிசர்வு வங்கியும் மறு தள்ளுபடி வசதியும்

ஒரு நாட்டின் மைய வங்கி, அந் நாட்டின் பணச் சந்தையில் மிகவும் முக்கியமானதோர் உறுப்பாகும். சைக்ஸ் என்னும் ஆசிரியர் லண்டன் பணச் சந்தையை ஒரு சக்கரத்துடன் ஒப்பிட்டு, பாங்க் ஆப் இங்கிலாந்து (இங்கிலாந்து நாட்டின் மைய வங்கி) அதன் அச்சுப் போன்றும், கூட்டுப் பங்கு வங்கிகள் அதன் உள் உருளை (Hub) போன்றும், பிற வங்கிகள் அதன் கம்பிகள் போன்றும், தள்ளுபடி நிலையங்கள் அதன் விளிம்பு (Rim) போன்றும் இருக்கின்றன என்று குறிப்பிடுகின்றார். பணச் சந்தையின் பல உறுப்புக்கள் எங்ஙனம் பிணைக்கப்பட் டிருக்க வேண்டுமென்பதை இந்த எடுத்துக்காட்டு உணர்த்துகிறது. பணச் சந்தை நுட்பமான இயக்கம் அமைந்த ஒரு தொகுப்பாக விளங்குகின்றது. எந்த நாட்டிலும் மைய வங்கி ஒன்று இல்லாமல் சீட்டுச் சந்தை இருக்க முடியாது. தமக்குப் பணந் தேவைப்படும் போது தம்மிடமுள்ள சீட்டுக்களைத் தள்ளுபடி செய்து தர அல்லது வாங்கிக் கொள்ள ஓர் அமைப்பு உள்ளது என்று வங்கிகளுக்கும் வணிகர்களுக்கும் ஒரு நம்பிக்கை யூட்ட வல்லது மைய வங்கியே. ரிசர்வு வங்கி ஒன்றுதான் நம் நாட்டில் இத்தகைய நம்பிக்கை அளிக்க வல்ல நிலையமாகும். பணமுடை ஏற்

படுங் காலத்தில் தேவைப்படும் அளவுக்குச் சீட்டுக்களை ரிசர்வு வங்கி வாங்கிக் கொண்டால், அந்த அளவுக்குப் பணம் சந்தையில் புழக்கத்திற்கு வரும். சீட்டுக்களின் தவணைக் காலம் முடிவடைந்தவுடன் அதன் மீது பொறுப்பு ஏற்றோர் பணத்தைச் செலுத்திவிடுவாராகையால் ரிசர்வு வங்கி முன்னர் புழக்கத்திற்குக் கொண்டுவந்த பணம் திரும்ப அதனிடமே வந்து சேரும். தம்மிடமுள்ள சொத்துக்களில் கணிசமான ஒரு பகுதியைப் பணச் சந்தையின் நிலவரத்தைக் குலைக்காமல், ரொக்கமாக மாற்றிக்கொள்ள வணிக வங்கிகளுக்கு வசதி யளிப்பது ரிசர்வு வங்கியின் மறு தள்ளுபடி ஏற்பாடுகளேயாகும். மறு தள்ளுபடி வசதிகள் இல்லாவிடில், வணிக வங்கிகள் அளிக்கும் குறுகிய காலக் கடன்களை நெருக்கடி நேரங்களில் ரொக்கமாக மாற்றுவது எளிதாக இராது. வங்கிகள் சீட்டுக்களை ரிசர்வு வங்கியிடம் மறு தள்ளுபடி செய்வதால், அவை ரிசர்வு வங்கியிடம் வைத்திருக்கும் இருப்பு அதிகமாகிறது. ரிசர்வு வங்கியிடம் வங்கிகள் வைத்திருக்கும் இருப்பு, அவற்றின் காப்புத் தொகையாகத் திகழ்கிறது. எனவே, கூடுதலாக ஏற்பட்ட இருப்புக்களை ஆதாரமாகக் கொண்டு, வணிக வங்கிகள் தமது வாடிக்கையருக்கு மேலும் கடன்களை வழங்கலாம்.

மறு தள்ளுபடி முறை செலாவணித்தாள் புழக்கத்தைத் தேவைக்கேற்றவாறு பெருக்கவும் சுருக்கவும் வகை செய்வதைக் காண்பது எளிது. வங்கிகள் சீட்டுக்களை ரிசர்வு வங்கியிடம் மறு தள்ளுபடி செய்து பணம் பெறுவதால், ரிசர்வு வங்கியின் பணம் வங்கிகள் வசம் வந்து, வங்கிகள் மூலம் புழக்கத்திற்குக் கொண்டுவரப் படுகின்றது. சீட்டுக்கள் தவணை முதிர்வடைந்ததும், அவற்றிற்குரிய பணத்தை வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் கட்டி விடுகின்றன. புழக்கத்திற்குக் கொண்டு வரப் பட்ட பணம் மீண்டும் புழக்கத்திலிருந்து எடுபட்டு விடுகிறது. இந் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கின், கூடுதலாக பணந் தேவைப்படுங் கால அளவிற்கு மட்டும் மறு தள்ளுபடி செய்வதால் பெறப்படும் பணம் வணிகத்திற்கு உதவுவது புலனாகிறது.

### மலிவுப் பணக் கொள்கை (Cheap Money Policy) யும் அருமைப் பணக் கொள்கையும்

பொருளாதார உலகில் மலிவுப் பணக் கொள்கை ஒரு பெருங் கருவியாக அண்மைக் காலம் வரை கடைப்பிடிக்கப் பட்டு வந்தது. பல பொருளாதாரச் சிக்கல்களுக்கு இது ஓர் அருமருந்து எனக் கருதப்பட்டு வந்தது. பேராசிரியர் கீன்ஸ் போன்ற வல்லுநர்கள் இக்கொள்கை வணிக

மந்த காலங்களில் மட்டு மன்றி, வணிகங் கொழிக்குங் காலங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டு மென்று வற்புறுத்தி வந்தனர். மலிவுப் பணக் கொள்கை என்பது யாது? பணச் சந்தையிலுஞ் சரி, மூலதனச் சந்தையிலுஞ் சரி, தேவைப்படும் பணம் எளிய வட்டிக்குக் கிடைக்க வகை செய்யும் கொள்கையே மலிவுப் பணக் கொள்கையாகும். குறைந்த வட்டிக்குப் பணம் வேண்டிய அளவுக்குக் கிடைக்கச் செய்வது மலிவுப் பணக் கொள்கையின் நோக்கமாகும். இக் கொள்கைக்கு ஒரு வரலாறு உண்டு. முதல் உலகப் போரையொட்டி, மேலை நாடுகள் தாம் எழுப்பிய கடன்களுக்குத் தர வேண்டிய வட்டிச் சுமை அதிகமாக இருந்தது. இதை ஓரளவுக்குக் குறைக்க, அக்கடன்களை மாற்றித் தரும்பொழுது குறைந்த வட்டியுள்ள கடன்களாக்கினர். குறுகிய கால வட்டி வீதம், நீண்ட கால வட்டி வீதம் ஆகிய இரண்டையுமே குறைந்த அளவினதாக நிருணயித்தனர். உலகப் பெரு மந்த நிலை ஏற்பட்ட காலத்தில் வரவு செலவுத் திட்டத்தில் விழுந்த துண்டுத் தொகையைக் கடன் வாங்கிச் சமாளிக்கும் அவசியம் உண்டாயிற்று. அப்போதும் மலிவுப் பணக் கொள்கை கடைப்பிடித்தல் அவசியமாயிற்று. நடைமுறையில் இக் கொள்கை, பொருளாதார மந்த காலங்களில் பயன் தருவதாகவே காணப்பட்டது. மிகவும் குறைவான நிலையிலிருந்த விலைவாசிகளைச் சற்று உயர்த்தவும், பணப் புழக்கத்தை விரிவாக்கவும் இக் கொள்கை வாய்ப்பளித்தது. போர்க் காலத்தில், போரை முன்னிட்டு உண்டான கடன்கள்மீது செலுத்தப்பட வேண்டிய வட்டிச் சுமை அதிகமாகாமல் காக்கப்பட்டது. ஆனல், எல்லா வகைப் பொருளாதார நோய்களுக்கும் கைகண்ட மருந்து என்று மலிவுப் பணக் கொள்கையைப் பலர் கருதியது சரியல்ல என்று பின்னர் கண்ட நிகழ்ச்சிகள் காட்டின.

உலகப் போருக்குப் பின் நாட்டைச் சீரமைக்க மாபெரும் முதலீடு தேவைப்பட்டது. தனியார் துறையும், அரசினரும் பெருமளவுக்குப் பணந் திரட்டி, புதுத் தொழில்களை உருவாக்க வேண்டி யிருந்தது. ஆனல், மூலதனச் சந்தையில் அளிக்கப் படக் கூடிய பணத்தின் அளவு குறைவாகவே இருந்தது. மக்களின் சேமிப்புத் திறன் குறைந்து போனதும், விலைவாசி ஏற்றமும் இதற்கு முக்கியக் காரணங்களாகும். இந்தச் சூழ்நிலையில் வட்டி வீதம் உயரத் துவங்கியது. இந்தச் சூழ்நிலையில் மலிவுப் பணக் கொள்கையைக் கடைப்பிடிப்பது பணவீக்கத்திற்கு ஆக்கந் தருவதாக அமைந்தது. குறைந்த வட்டி வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு கணக்கிட்டதால், பங்கு

கள் (Shares) மூலதன மதிப்பு உயர்ந்து சென்றவண்ணம் இருந்தது. அரசினர் பத்திரங்களுக்குக் குறைந்த வட்டி தரப் பட்டதால், அவற்றை விரும்பி வாங்குவோர் எண்ணிக்கை குறைந்தது. வாங்குவோர் இல்லாமையால் அரசினர் பத்திரங் கள் விலை சரிந்து விழாமலிருக்க, ரிசர்வு வங்கி அரசினரது முக வராக அவற்றை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்குப் பணம் வேண்டுமே! ரிசர்வு வங்கி புதிய செலாவணி நோட்டுக் களைவெளியிட்டு, இதற்குவேண்டிய பணத்தைத் தேடிக்கொள் ளலாயிற்று. பணப் புழக்கத்தைச் சுருக்க வேண்டிய அவசிய மிருந்த நேரத்தில் புதிய நோட்டுக்களை வெளியிடும் சிக்கலான நிலை ஏற்பட்டதால் பண வீக்கம் (Inflation) மேலும் வளர வாய்ப்பு ஏற்பட்டது. வேண்டிய அளவு பணம் அவ்வப்போது சந்தையில் அளிக்கப்பட்டால்தான் மலிவுப் பணக் கொள்கை யைக் கடைப்பிடிக்க இயலுமென்றாலும், அக் கொள்கை நலன் பயக்கப் பொருளாதார நிலை நல்ல கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இயங்க வேண்டும். மூலதனச் சொத்துக்கள் பெருமளவுக்குத் தேவைப்படும் நேரத்தில் வெறும் பணத்தை வைத்துக் கொண்டு எதையும் சாதிப்பது எளிதல்ல. இதனால் பண வீக்கம் மிகுதியானதொன்றுதான் கண்ட பலன். இக் கொள்கையால் பயனடைந்தோர் அரசினரும், ஒழுங்கமைதி பெற்ற பணச்சந் தையினரும், மூலதனச் சந்தையினரும் ஆவர். ஒழுங்கமைதி யற்ற பிரிவினரான நாட்டு வங்கியர், வட்டித் தொழிலர் முதலி யோர் அன்றும், இன்றும், என்றும் மிகுதியான வட்டியே வசூ லித்து வரலாயினர்.

ஐந்தாண்டுத் திட்டங்களை அரசு நிறைவேற்ற இந்த மலி வுப் பணக் கொள்கை உதவுவதாக இல்லை. எனவே, 1957ஆம் ஆண்டு முதல் அருமைப் பணக் கொள்கை (Dear Money Policy) ஏற்றுக்கொள்ளப்படலாயிற்று. ஐந்தாண்டுத் திட்டச் செலவு களுக்குப் பெருமளவு பணம் தேவைப்பட்டது. மக்களின் சேமிப் புக்கு மேல் பணம் தேவைப்பட்டதால், பற்றுக்குறைத் தொகை யளவிற்குத் தாள் நாணயம் அச்சடிக்கப்பட்டது. பொருள் உற்பத்தியும் பணிகளும் பெருகிய அளவுக்குப் பன்மடங்கு மிகுதியாகத் தான் நாணயம் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட் டதால் விலைவாசியும் வாழ்க்கைச் செலவும் விரைவாக ஏற்றம் பெற்றன. மக்கள் விலைவாசி ஏற்றத்தினால் அல்லலுற்றனர். பண வீக்கத்தைத் தடுக்க ரிசர்வு வங்கி பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. வங்கி வீதம் (Bank rate) என்னும் வணிக வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் கடன்பெறச் செலுத்த வேண்டிய வட்டி வீதத்தை உயர்த்திப் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த

முயன்றது. வணிக வங்கிகள் தம் வாடிக்கையாளருக்குக் கடன் அளிக்கும் தொகை மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இவ்வாறாக, பற்பல முயற்சிகளை ரிசர்வு வங்கி மேற்கொண்டும், விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. வங்கிகள் தனியார் துறைக்கு அளிக்கும் நிதி வசதிகளை மட்டுமே ரிசர்வு வங்கியால் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால், பொதுத்துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் நிதி வசதிகள் ரிசர்வு வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டிருந்தன. மற்றும், வட்டித் தொழிலர், நாட்டு வங்கியர், கறுப்புப் பணம் வைத்துள்ளோர் போன்ற நபர்கள் தனியார் துறைக்கு அளிக்கும் நிதி வசதிகள் ரிசர்வு வங்கியின் கண்காணிப்பிற்குள் அடங்குவதில்லை. அரசாங்கச் செலவினங்களும், விலைவாசிகளும் நாளுக்கு நாள் ஏற்றங்கொண்டிருக்கும் நிலையில் பணச் சந்தையில் கடன் கிடைப்பதும் அருமையாகி விட்டது. உயர்ந்த வட்டிக்குப் பணம் கடனாகக் கிடைக்கும் நிலை எங்கும் நிலவலாயிற்று. இந்நிலையையே அருமைப் பணக் கொள்கை என்று பேசுகின்றனர். ஒழுங்கமைதி பெற்ற பிரிவில் நிலவும் வட்டி விகிதம், ஒழுங்கமைதியற்ற பிரிவில் நிலவும் வட்டி விகிதத்தைவிடக் குறைவாக இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாக இவ் வட்டி விகிதம் உயர்ந்த வண்ணம் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. நாட்டிலுள்ள பணச் சந்தையில் ஒழுங்கமைதி பெற்ற பிரிவுக்கும் ஒழுங்கமைதியற்ற பிரிவுக்கும் இடையேயுள்ள வட்டி விகித வேறுபாடு நாளுக்கு நாள் குறைந்து வருவதும், பணச் சந்தையின் பற்பல பிரிவுகளை ஒருங்கிணைக்கும் ஏற்பாடு ஓரளவுக்குப் பலன் அளித்துவருவதும் நினைவிற் கொள்ளத்தக்க நிகழ்ச்சிகளாகும். இவ் விரு பிரிவுகளுக்கிடையே யுள்ள வேறுபாடு நாளடைவில் குறைந்து, பணச் சந்தை ஒருங்கிணைந்து வலுப்பெற்ற ஓர் அமைப்பாகத் திகழும் காலம் வரும்போது ரிசர்வு வங்கியின் கட்டுப்பாடுகள் எதிர் நோக்கும் பயனை நல்கும்.

இந்தியப் பணச் சந்தையின் மற்றொரு கூறு அதன் நெகிழ்ச்சியற்ற, நிலைபேருக்கமற்ற தன்மையாகும். வியாபார மந்த காலங்களில் வங்கி வட்டி விகிதம் குறைவாகவும், வியாபாரச் சுறுசுறுப்புக் காலங்களில் வட்டி விகிதம் மிகுதியாகவும் இருந்துவந்த நிலையை 1932ஆம் ஆண்டு வரை கண்டோம். இந்த நெகிழ்ச்சியற்ற, நிலைபேருக்கமற்ற தன்மை தொழில் வளர்ச்சிக்குக் குந்தகமாக அமைந்தது. துறைமுகப் பட்டினங்களைவிட உள்ளூர்ப் புறங்களே இதனால் மிகவும் பாதிக்கப்பட்டன. சுறுசுறுப்புக் காலத்தில் துறைமுகப் பட்டினங்களில்

உள்ள வணிகர் அதிக வட்டி தர முன் வந்ததால் பண மெல்லாம் உள்ளூர்களை விட்டு, துறைமுகப் பட்டினங்களை நோக்கி வந்தன. வங்கிகள் துறைமுகப் பட்டினங்களில் தொழில் நடத்துவதில் மிக்க அக்கறை காட்டின; உள்ளூர்ப் புறத் தேவைகள் புறக்கணிக்கப்பட்டன. மற்றும், பணத் தேவை, பருவ காலத்தை யொட்டி அமைந்த காரணத்தால், சுருசுருப்புக் காலத்தில் விளை பொருள்களை அறுவடை செய்து வெளியூர்களுக்கு அனுப்பப் பெருமளவு பணம் தேவைப் பட்டது. ஆனல், மந்த காலங்களில் தேவைக்கு மேல் பணம் இருந்து வந்தது.

நம் நாட்டில் மைய வங்கி ஒன்று அமைக்கப்படுமுன், இம்பீரியல் வங்கி மைய வங்கியின் பணிகளைச் செய்து வந்தது. எனினும், அரசினர் நிதி பணச் சந்தையுடன் தொடர்புற்றதாக இருக்கவில்லை. இம்பீரியல் வங்கி 1921-ல் நிறுவப்பெற்றது. அதற்கு முன்னர், அரசினர் தமக்கென்றே தனிக் கருவூலங்கள் அமைத்துத் தம் வரவினங்களை அதில் முடக்கி வைத்திருந் தனர். இம்பீரியல் வங்கி நிறுவப்பெற்ற பின், அரசினர் நிதி களை வட்டி யேதும் தராமல் தம்மிடம் வைத்திருக்கும் உரிமை யினை இவ் வங்கி பெற்றது. இந்த ஏற்பாடு பணத் தட்டுப் பாட்டை ஓரளவு சமாளிக்க உதவியது. இருப்பினும், அரசாங் கமே தனிப்பட்ட முறையில் கணிசமான அளவு வங்கித் தொழிலை நடத்தி வந்ததால் பணச் சந்தை நிலைகுலைந்து கிடந் தது. பண வெளியீட்டைக் கட்டுப்படுத்தும் உரிமை அரசாங் கத்திடம் இருந்தது. கடன் வழங்குவதைப் பெயரளவுக்கேனும் கட்டுப்படுத்தும் ஆற்றல் இம்பீரியல் வங்கியிடம் இருந்தது. ஆக, பண வெளியீட்டிற்கும் கடன் வழங்குதற்கும் தொடர் பேதுமின்றி இருந்தது அன்றைய நிலை.

அரசாங்கத்திற்குப் பண வெளியீட்டினைப் பெருக்கவும் சுருக்கவும் அதிகாரமிருந்த காரணத்தால், அது வங்கி வீதத் தின் மீது ஆதிக்கம் செலுத்த முடிந்தது. இம்பீரியல் வங்கி, பெருமளவு பணத்தை அரசினர் பிணையங்களில் ஈடு செய்த படியால், வங்கி வீதம் உயர்த்தப்பட்ட நேரங்களில் மிகுந்த வட்டிக்கே வணிகர்கள் கடன் வசதிகள் பெற முடிந்தது. நேரத்தின் தேவைக்கேற்ப, தாள் நாணயத்தை மிகுதி யாக்கவோ அல்லது குறைக்கவோ செய்வது அவ்வளவு எளி தானதாக இல்லை. நாட்டில், வங்கிகளில் வைப்புத் தொகை வைப்பதும், காசோலை விடுத்துப் பண நடவடிக்கைகளைத் தீர்த் துக்கொள்ளுவதும் பரவாத காலம் அது. மற்றும், வங்கி

களின் கடனளிப்புக் கொள்கையைப் பயன் நல்கும் வகையில் செயற்படுத்த இன்றியமையாது தேவைப்படும் காப்புக்களைத் (Reserves) திரட்ட ஏற்பாடு ஏதுமில்லை. ஒவ்வொரு வங்கியும் தனக்கென ஒதுக்கிய காப்புத் தொகையைத் தன்னிடமே வைத்திருந்தது. இதனல் நாட்டிலுள்ள காப்புத் தொகை யனைத்தையும் முழு அளவில் பயன்படுத்திக் கடன் வசதிகளை அதிகரிக்க இயலாது போயிற்று. இந்தச் சூழ்நிலையில் நாணய வெளியீட்டையும் கடன் வசதியினையும் ஒருங்கிணைத்து, அவற்றைக் கட்டுப்படுத்த அரசு ரிசர்வு வங்கியை நிறுவியது.

ரிசர்வு வங்கி நாணய வெளியீட்டையும், அதன் வழி, பணப் புழக்கத்தையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளது. பருவ காலத் தேவைக்கேற்ப, பண வெளியீட்டை அதிகரிக்கும் வகையில் பண வெளியீட்டு ஏற்பாடு அமைந்துள்ளபடியால் தள்ளுபடி விகிதத்தை அதிகரித்துத்தான் கூடுதல் பண வசதிகளை அளிக்க முடியும் என்ற நிலை மாறிவிட்டது. மற்றும், அரசினர் தொடர்புற்ற பணம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளனைத்தையும், பிற வங்கியத் தொழிலையும் ரிசர்வு வங்கியின் உதவிகொண்டு செய்து வருவதால், பணச் சந்தை, இந் நடவடிக்கைகள் காரணமாக ஏதும் பாதிக்கப்படுவதில்லை.

# 3. நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும்

நம் நாட்டில் தொன்றுதொட்டு மக்களுக்குக் குறிப்பாக வணிகர்களுக்கும் கிராமிய மக்களுக்கும் தேவைப்படும் நேரத்தில் கடன் வசதிகளை அளித்துவந்த பெருமை நாட்டு வங்கியருக்கும் வட்டித் தொழிலருக்கும் உண்டு. தற்காலப் பாணியில் வணிக வங்கிகள் பெருமளவில் நிறுவப்பெற்றுக் கடன் வசதிகளை அளித்துவரும் இன்றைய நிலையிலும் நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும் வழக்கம் போன்று தொழில் புரிந்து வருவதைக் காண்கிறோம். இதனால், இவர்கள் செய்துவரும் பணி இன்றியமையாததாக அமைந்திருப்பது நன்கு புலனாகிறது.

பணச் சந்தையைப்பற்றி நாம் பேசுகையில், நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும் பணச் சந்தையின் ஒழுங்கமைதியற்ற பிரிவில் இடம் பெற்றிருப்பதைக் கண்டோம். இதற்குக் காரணம், நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும் செவ்வையானதோர் அமைப்பு ஏதும் ஏற்படுத்திக்கொள்ளாமல் இருப்பதேயாகும். நம் இந்திய நாட்டில் தொழில் புரிந்துவரும் நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும் ஒரே வகையான தொழில் முறையையோ அல்லது பழக்க வழக்கத்தையோ கடைப்பிடிப்பதில்லை. தாம் செயலாற்றிவரும் பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபு, பழக்க வழக்கம், தேவைகளையொட்டித் தொழிலை நடாத்தி வந்தனர்.

### நாட்டு வங்கியர், வட்டித் தொழிலர் வேறுபாடுகள்

நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும் கடன் தருவதையே தம் தொழிலாகக் கொண்டிருப்பினும், அவர்களுக்கிடையே சில வேறுபாடுகளுண்டு. நாட்டு வங்கியர் வைப்புத் தொகைகளைப் பெற்றுக்கொள்வதுண்டு; உண்டியல் நடவடிக்கை (Hundi transaction) களிலும் ஈடுபடுவதுண்டு. இவ்விரண்டும் வங்கிய நடவடிக்கைகள் என்பது தெளிவு. வட்டித் தொழிலர் இந்

நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. இரண்டாவதாக, நாட்டு வங்கியர் வியாபாரத்திற்கும் தொழிலுக்குமே பெரும்பாலும் கடன் அளிக்கின்றனர். ஆனால், வட்டித் தொழிலர் குடும்பச் செலவுக்குக் கடன் தருகின்றனர். என்ன காரணத்திற்குக் கடன் வேண்டப்படுகிறது என்பது பற்றி நாட்டு வங்கியர் அக்கறை காட்டுவதுபோன்று, வட்டித் தொழிலர் அக்கறை காட்டுவதில்லை. மூன்றாவதாக, குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் நாட்டு வங்கியரின் கடனாளிகள் பெரும்பாலும் ஒழுங்காக இருப்பதால், அவர்கள்மீது சற்றுக் குறைந்த விகித வட்டியே விதிக்கப்படுகிறது. வட்டித் தொழிலர் விதிக்கும் வட்டி, பெரும்பாலும் உயர்ந்த விகிதத்திலிருப்பது வழக்கம். மேற்கண்ட சில வேறுபாடுகள் இருப்பினும், நாட்டு வங்கியருக்கும் வட்டித் தொழிலருக்குமிடையே சில நேரத்தில் வேறுபாடுகளைக் காண்பது அரிதாக இருப்பதும் உண்டு.

### வட்டித் தொழிலர் (Money-lenders)

வட்டித் தொழிலரை இரு வகையினராகப் பிரிப்பதுண்டு. வட்டிக்குக் கடன் அளிப்பதையே தம் முழுநேரத் தொழிலாகக் கொண்டு செயலாற்றும் சௌகார், மகஜன், பனியா எனப் பல பெயர்களால் வழங்கப்பெறும் வகையினர் ஒருபுறமும், மற்றோர் புறம் வட்டிக்குக் கடன் கொடுப்பதை மட்டுமே தம் தொழிலெனக் கொள்ளாத நிலச் சுவான்தார், வியாபாரிகள், ஓய்வு ஊதியம் பெறுநர் (Pensioner), விவசாயிகள் முதலானோரும் இந் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பின்னர் குறிக்கப்பட்ட வகையினர் வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பினும், தம்மிடமுள்ள உபரி பணத்தை வட்டிக்குக் கடனாக அளிக்கின்றனர்.

### கடனளிப்பு முறை

வட்டித் தொழிலர்கள் கடன் கொடுப்பதற்குக் கடைப்பிடிக்கும் வழி முறை கூர்ந்து நோக்கத் தக்கது. கடன் தொகை சிறிய அளவினதாக இருந்தால், வாய்மொழியாக அளிக்கப்படும் ஒப்புறுதி (Promise) யின்மீது கடன் வழங்கப்படும். சில நேரத்தில் தமது கணக்கு ஏடுகளில் சிறு கடன்களைப் பதிந்து வைப்பர்; சில நேரங்களில் அதையும் செய்வதில்லை. சிறு தொகைக் கடன்களுக்குப் பத்திரம் எழுதி வாங்கிக்கொள்வதென்பதில்லை. சாட்சிகளும் வைத்துக்கொள்ளுவதில்லை. ஆனால், தொகை கணிசமாக இருந்தாலும் அல்லது பழங் கடன் புதுப்பிக்கப்பெற்றாலும் ஒப்புறுதிச் சீட்டு (Promissory note) எழுதி வாங்கிக்கொள்வதுண்டு. விவசாயத் தேவைகளுக்கே

பெரும்பாலும் வட்டித் தொழிலர் கடன் அளிக்கின்றனர். கடன் பெறுபவரின் பிணையின்பேரில் தரப்படும் இந்தக் கடன் சில நிபந்தனைகட்கு உட்பட்டதாகும். விளைவிக்கப் பெறும் பயிர் அடைமானமாகக் கருதப்படுவதுண்டு. அறுவடையான பயிர் வட்டித் தொழிலருக்கு அல்லது அவர் வழியாக விற்கப் பட வேண்டுமென்னும் உடன்பாடு செய்துகொள்வதுமுண்டு. பெருந்தொகை கடனாக இருந்தாலும் சரி, நீண்ட காலக் கடனாக இருந்தாலும் சரி, வீடு, நகை, நிலம் போன்ற சொத்துக்களை அடைமானமாகப் பெறுவது வழக்கம். கடன் ரொக்கமாகவும், பிற இனங்களாகவும் தேவைக்கேற்றவாறு தரப்படும். கடன் பெறுவோர் என்ன காரியத்திற்குக் கடன் கோருகிறார்க ளென்பது பற்றி வட்டித் தொழிலர் உசாவுவதில்லை. குறிப் பிட்ட கால இடைவெளிக்கு ஒரு முறை வட்டித் தொகையை அசல் தொகையுடன் சேர்த்துக் கூட்டு வட்டி வசூலிப்பது இவர்கள் கடைப்பிடிக்கும் வழக்கமாகும்.

எந்த ஒரு சமுதாயத்திலும் வட்டித் தொழிலர் இன்றியமை யாது தேவைப்படுகின்றனரெனினும், அவர்களை மக்கள் இனிய தொரு நண்பராகக் கருதுவதில்லை. தற்காலத்துக் கடனாளி களை வட்டித் தொழிலரின் பிடியிலிருந்து விடுவிக்க, அரசு பலப் பல சட்டங்களை இயற்றி யுள்ளது. இதன் விளைவாக, வட்டித் தொழிலரின் நடைமுறைகளில் கெடுபிடி மிகுந்துள்ளது. தம் முடைய தொழிலில் நட்டம் வராது பாதுகாத்துக்கொள்ள, விரும்பத் தகாத பல நடைமுறைகளை இவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். அவற்றில் சில: கடன் கொடுக்கும் முன்னரே வட்டி வாங்கிக்கொள்ளல்; தொழில் துவங்கும்போது அன் பளிப்பாகத் தொகை கேட்டுப் பெறுதல்; வெற்றுத் தாளில் கடனாளியின் கையொப்பம் அல்லது விரற்குறி பெற்றுக் கொண்டு, கடன் கொடுத்த தொகைக்கும் மிக அதிகமானதொரு தொகையைக் கடனாக அளித்ததாக எழுதிக்கொள்ளுதல்; கடனாளியின் சொத்துக்களைத் தமக்கு விற்பனை செய்ததாகப் பத்திரம் எழுதி வாங்கிக் கொள்ளுதல்; கடனைத் திருப்பித் தர இயலாத கடனாளியைப் பலப்பல ஆண்டுகளுக்கு அடிமை போன்று இலவசமாக உழைக்கும்படி கோருதல் போன்றன. சில இடங்களில் வட்டித் தொழிலருக்கு உதவியாகச் செய லாற்றும் உதவியாளருக்குக் கழிவுத் தொகை யேதும் கொடுத் தால்தான் கடன் பெற முடியும் என்ற நிலையும் இருப்பதுண்டு.

### வசூலிக்கும் வட்டி வீதம்

பல்வேறு மாகாண வங்கியக் குழுக்கள் (Provincial Banking Committees) வட்டித் தொழிலர் வசூலிக்கும் வட்டி விகிதங்களைப்

பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல்வேறு வகை வட்டித் தொழிலர்கள் பல்வேறு விகித வட்டி வசூலிக்கின்றனர். கடன் தொகையின் அளவு, அளிக்கப்படும் பிணை, அக்கம் பக்கத்தில் கிடைக்கக்கூடிய பண வசதி போன்ற பல செய்திகளைப் பொறுத்து வட்டி விகிதம் அமைகின்றது. நகர்ப்புற வட்டித் தொழிலர் வசூலிக்கும் வட்டி வீதம், கிராமப்புற வட்டித் தொழிலர் வசூலிக்கும் வட்டி வீதத்தை விடக் குறைவாக இருப்பது வழக்கம். நல்ல பிணை—தங்க நகை, நிலம் போன்ற சொத்து மீது தரப்படும் கடனுக்கு 12 முதல் 37·5 சதவீதம் வரை வட்டி விதிக்கப்படுவதுண்டு. பிணை யேதுமின்றித் தரப்படும் கடனுக்கு மிக அதிக வட்டி—சில நேரம் 300 சத விகிதம் வரை—வசூலிக்கப்படும். பட்டாணியர், காபூலியர், ரோகில்லர் போன்ற நடமாடும் (Itinerant) வட்டித் தொழிலர் 75 முதல் 360 சத விகிதம் வரை வட்டி வசூலிப்பதுண்டு. இதற்குக் காரணம் இவர்கள் பெரும்பாலும் ஏழை, எளியோர், கூலிகள், சொற்ப வருவாய் பெறும் ஊழியர், ஆலைத்தொழிலாளிகள் போன்ற எளிய நிலையிலுள்ளோருக்குக் கடன் வழங்குவதேயாகும். கடனாளிகள் கடனைத் திருப்பித் தரும் வகையற்று விட்டால், ஏற்படக்கூடிய நட்டத்தையும் ஈடு செய்யக்கூடிய வகையில் இவர்கள் கடும் வட்டி வசூலிக்கின்றனர்.

**கடும் வட்டி வாங்கக் காரணம்**

பொதுவாக, வட்டித் தொழிலர்கள் கடும் வட்டி வாங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றைக் காண்போம்: முதலாவதாக, கிராமப் புறங்களில் பெரும்பாலும் வட்டித் தொழிலர் மட்டுமே கடன் வசதி யளிக்கும் உறுப்பாகத் திகழ்கிறார். கூட்டுறவு நாணயச் சங்கங்கள் செயற்பட்டுவரும் இடங்களில்கூடப் பல்வேறு காரணங்களை முன்னிட்டு மக்கள் வட்டித் தொழிலரிடம் கடன் பெறுவதே எளிது என்று நம்புகின்றனர். ஆக, வட்டித் தொழிலர் தாம் விரும்பியபடி பெருமளவு வட்டி வாங்க முடிகின்றது. இரண்டாவதாக, வட்டித் தொழிலருக்கு அறிமுகமில்லாத அண்மைப்புற கிராம மக்கள் கடன் பெற வரும்போது, அவர்களால் ஏற்படக்கூடிய நட்டத்தையும் ஈடு கட்டும் முகத்தான் கடுமையான வட்டி வாங்குகின்றனர். மூன்றாவதாக, அறியாமை காரணமாக, கிராம மக்கள் கடன் கொடுக்க வேறு பல அமைப்புக்கள் இருந்த போதிலும், வட்டித் தொழிலரை அணுகி, அவர் வழியே மட்டும் கடன் பெறுகின்றனர். நான்காவதாக, கடனாளிகள் பிணையாக அளிக்கும் சொத்தின் மதிப்பு, சிறிய அளவினதாக இருப்

பது வழக்கம். ஆலைத் தொழிலாளிகள், குத்தகைக்குப் பயிரிடுவோர் போன்றோர் தக்க பிணை ஏதும் வழங்க வசதியற்றவராக இருப்பர். ஆகவே, வட்டித் தொழிலர்கள் பெரு நட்டத்திற்கு ஆளாகக் கூடிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளனர். நட்டத்தை ஓரளவுக்குச் சமாளிக்க, கடும் வட்டி வாங்குகின்றனர். ஐந்தாவதாக,பெருமளவு கடனாளிகளுக்குச் சிறு தொகைகளைக் கடனாக அளித்து, அவர்களிடமிருந்து கடனை வசூலிப்பது நடைமுறைச் செலவுகளை அதிகப்படுத்தி விடுகிறது. இச் செலவுகளை ஈடு கட்ட, கடும் வட்டி வசூலிப்பது அவசியமாகிறது. கடைசியாக, வட்டித் தொழிலர்களில் பெரும்பாலோர் தம் வசமுள்ள தொகையினைக் கொண்டே தொழில் செய்துவருகின்றனர். கடன் தேவையில் ஒரு சிறு பகுதியை மட்டுமே இவர்களால் நிறைவு செய்ய முடிகின்றது. வட்டித் தொழிலர் பணச் சந்தையுடன் தொடர்பேதும் வைத்திருப்பதில்லையாதலால், தமக்குப் பணந் தேவைப்படும்போது பெற வழி வகை யேதுமில்லை. எனவே, தம்மிடமுள்ள தொகையை நம்பியே இவர்கள் தொழில் நடத்த வேண்டியிருக்கிறது. இவர்கள் கொடுக்கும் கடன் உறுதியான கால அளவுக்கு உட்படாததால், குறுகிய காலந்திற்குத் தரப்பட்ட கடன் நீண்ட காலக் கடனாக மாறி, பணம் வெகு நாட்களுக்குக் கடனாளிகளிடமே முடங்கிவிடுகிறது. இக் காரணத்தினாலும் தொழில் செய்ய இவர்கள் வசமிருக்கும் பண அளவு குறைந்து போகிறது.

**கடனாளிப் பாதுகாப்புச் சட்டங்கள்**

கடும் வட்டியிலிருந்து கடனாளிகளைப் பாதுகாக்க, நாட்டில் பல வகையான சட்டங்கள் இயற்றப்பெற்றன. எந்த வட்டி விகிதத்திற்கு உடன்பட்டுக் கடன் பெறப்பட்டதோ, அந்த வட்டியே செலுத்தப்படவேண்டும் என்று நீதி மன்றங்கள் 1918ஆம் ஆண்டு வரை தீர்ப்பளித்து வந்தன. கடும் வட்டிக் கடன்கள் சட்டம் (Usurious Loans Act) 1918-ல் இயற்றப்பட்டது. கடன் வாங்குவோருக்கு நியாயமற்ற முறையில் நடவடிக்கை அமைந்திருந்தாலும், விதிக்கப்பட்டுள்ள வட்டி மிகவும் கடுமையாக இருப்பதாக நீதி மன்றம் கருதினாலும், நீதி மன்றம் நடவடிக்கையைப் பரிசீலனை செய்து கடன் வாங்குபருக்கு நியாயமளிக்க இச் சட்டம் வகை செய்தது. இச் சட்டம் முனைப்புடன் செயற்படுத்தப்பட்டால் கடும் வட்டியால் ஏற்படும் தீமை வெகுவாகக் குறைந்துபோகும் என்பது எல்லோருடைய ஒருமித்த கருத்தாகும்.

இந்தியாவிலுள்ள பல மாநிலங்கள், வட்டித் தொழிலரின் விரும்பத் தகா நடவடிக்கைகளை ஒடுக்கும் நோக்கத்துடன் சட்டங்களை இயற்றியுள்ளன. இச் சட்டங்களின்படி வட்டித் தொழிலரனைவரும் தமது நடவடிக்கைகளைத் தக்க ஏடுகளில் பதிவு செய்து வைக்க வேண்டுவது அவசியம், கடனாளி ஒவ்வொருவருடைய கணக்கும் தனியே எழுதப்பெற்று, அவர் செலுத்தும் தொகைக்கு ரசீது வழங்கப்பெற வேண்டும். கடன் தொகையில் அசல் எவ்வளவு, வட்டி எவ்வளவு என்றும் குறிக்க வேண்டும். சில மாநிலச் சட்டங்கள் ஒவ்வொரு கடனாளிக்கும் அவரது கணக்கின் நிலையை அறிவிக்கும் வகையில் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை குறிப்பு ஒன்றை வட்டித் தொழிலர் அனுப்ப வேண்டுமென விதித்துள்ளன. மற்றும் சில மாநிலச் சட்டங்கள், கடனாளிகள் கோரினால் வட்டித் தொழிலர் அவர்களைப் பற்றிய கணக்குக் குறிப்பைத் தர வேண்டும் என விதித்துள்ளன. இச் சட்டங்கள், பிணைக் கடன்கள் மீதும் பிணையற்ற கடன்கள் மீதும் உயர்ந்த அளவு விதிக்கப்படக்கூடிய வட்டி விகிதத்தையும் குறிப்பிடுகின்றன.

பட்டாணியர், காபூலியர் போன்ற நடமாடும் வட்டித் தொழிலர் எளிய நிலையிலுள்ள மக்களுக்குச் சிறிய தொகைகளைக் கடனாக அளிப்பது குறித்து முன்னர் கண்டோம். முற்காலத்தில் இவர்கள் தமது கடனாளிகளிடமிருந்து பத்திரமோ அல்லது வேறு சான்றுச் சீட்டோ பெற்றுக்கொள்வதில்லை. ஆனால், இக்காலத்தில் இவர்கள் கடன் வாங்குவோரின் கையொப்பத்தைத் தமது கணக்கு ஏடுகளில் பெற்றுக்கொள்கின்றனர். சிலர் கடனாளிகளிடமிருந்து ஒப்புறுதிச் சீட்டு எழுதி வாங்கிக்கொள்ளுகின்றனர். இவர்கள் கொடுக்கும் கடனைத் தவணைமுறையில் திருப்பிப் பெறுகின்றனர், குறித்தபடி கடனைத் திருப்பித் தரத் தவறிவிடும் கடனாளிகளை அச்சுறுத்தியே தொகையை வசூலிக்கும் திறன் இவர்களுக்கு உண்டு. கடனைத் திருப்பிப் பெற நீதி மன்றத்தை இவர்கள் பெரும்பாலும் அணுகுவதில்லை.

நல்ல பண வசதி படைத்த நிலக்கிழார்களும் வட்டிக்குக் கடன் கொடுப்பதை மேற்கொள்ளுகின்றனர். விளையப்போகும் பயிரையோ அல்லது நிலத்தையோ பிணையாக ஏற்றுக்கொண்டு கடன் கொடுப்பது இவர்களுடைய வழக்கம். கடனைத் திருப்பித் தர இயலாது போனால், பயிரையும் நிலத்தையும் கைப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பை இவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுவதுண்டு. விளைவிக்கப்படும் பயிரைத் தமக்கு அல்லது தம்

வழி விற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கடன் கொடுப்பதை மேற்கொள்ளும் வியாபாரிகள் வட்டித் தொழிலரில் ஒரு வகையாவர். பயிரை இவர்களுக்கு விற்பது அல்லது இவர்கள் வழி விற்பது இவர்களுக்குப் பெரும் ஆதாயம் தருவதாக அமைவதால், இவர்கள் வேறு கடுமையான நிபந்தனைகளை விதிப்பதில்லை.

மக்கள் பல தேவைகளுக்குக் கடன் வாங்குகின்றனர். வீட்டுச் செலவுக்கும், திருமணம், பிறப்பு, இறப்பு முதலியவற்றையொட்டிய சடங்குகளுக்கும், பழைய கடன்களை அடைப்பதற்கும் பல்வகை மக்களும் கடன் வாங்குகின்றனர். இதுவன்றி, நில வரி, நீர் வரி முதலிய செலுத்தவும், பயிர்ச் செலவுக்கும் விவசாயிகள் கடன் வாங்குகின்றனர்; தங்கள் வியாபாரத் தேவைகளுக்கு வியாபாரிகளும், கச்சாப்பொருள் வாங்குவதற்கு கைத்தொழில் வினைஞரும், மற்றும் மருத்துவம், கல்வி முதலியவற்றிற்காகவும் கடன் வாங்குகின்றனர்.

### கடனைத் திருப்பிப் பெறக் கையாளும் முறை

கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுவதில் வட்டித்தொழிலர் சில வழி முறைகளைக் கடைப்பிடிப்பதுண்டு. விவசாயக் கடன்கள் பெரும்பாலும் அறுவடைக் காலம் முடிந்தவுடன் திருப்பித் தரப்படும். மழையின்மை போன்ற காரணங்களால் விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்தால் கடனைக் குறித்தவாறு அடைத்துவிடும்படி கடனாளிகளை நெருக்குவதில்லை. நிலைமைக்கேற்றவாறு கடன் காலத்தை நீட்டித் தருவர். காலம் தவறாமல் வட்டி செலுத்திவரும் கடனாளிகளிடம் அசலைச் செலுத்தக் காலம் நீட்டித்துத் தருவதிலும் வட்டித் தொழிலர் தயக்கம் காட்டுவதில்லை. முடிந்தவரை, கடனாளிகள் அசலைத் திருப்பித்தர, அவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதையே கருத்தில் கொண்டு, வட்டித்தொழிலர் நீதி மன்றங்களை யணுகி, கடனை வசூலிப்பதை விரும்புவதில்லை.

### வட்டித் தொழிலர் நலிவடையக் காரணம்

கடந்த சில ஆண்டுகளாக வட்டித் தொழிலரின் நடவடிக்கைகள் குறைந்து வந்த வண்ணமிருக்கின்றன. இதற்குப் பல காரணங்களுண்டு. முதலாவதாக, கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுவதில் பல இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன. நீதி மன்றங்களை அணுகி, கடனைத் திருப்பிப் பெற, நடவடிக்கைகள் மேற்கொள்வது கால தாமதத்தை யுண்டாக்குகிறது; செலவும் மிகுதியாகிறது. இரண்டாவதாக, கூட்டுறவு நாணயச் சங்கங்களின்வளர்ச்சி வட்டித் தொழிலரின் நடவடிக்கைகளைக்குறைத்து

விட்டது. மூன்றாவதாக, வணிக வங்கிகளும் பிற நிதி நிறுவனங்களும் பல்வகைத் தேவைகளுக்குக் கடன் வழங்கத் துவங்கி விட்டன. நான்காவதாக, கடன் வாங்குவோரின் நலனைப் பாதுகாக்கும்பொருட்டுப் பல மாநிலங்களில் இயற்றப் பெற்றுள்ள சட்டங்கள் வட்டித் தொழிலரின் இடர்ப்பாடுகளை மேலும் அதிகப்படுத்தியுள்ளன. ஐந்தாவதாக, 'இத்தொழிலை விட, வருவாய் மிகுதியாகக் கிடைக்கக் கூடிய தொழில்களை மேற்கொண்டு, இத்தொழிலைச் சிலர் கைவிடலாயினர். கடைசியாக பொருளாதார மந்த நிலையும் இவர்களது நடவடிக்கைகளைக் குறைத்துவிட்டது. கடன் வாங்குவோருக்கும் வட்டித் தொழிலருக்குமிடையே யிருந்த சுமுகமான உறவு, தற்காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சமுதாயச் சூழ்நிலைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல் காரணமாக வட்டித் தொழிலர்மீது நட்பு உணர்ச்சி பாராட்டுவது அவ்வளவாகக் காணப்படுவதில்லை. சில ஊர்களில் வட்டித் தொழ்லர்கள்மீதும் அவர்கள் சொத்துக்கள்மீதும் வன்முறை கையாளப்படுவதையும் அறிகிறோம்.

வட்டித் தொழிலரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் மாநிலங்கள் பல சட்டங்களை இயற்றியுள்ளதைக் கண்டோம். இச்சட்டங்களின்படி வட்டித் தொழில் மேற்கொள்ள விரும்புவோர் அதற்கென நியமிக்கப்பட்டுள்ள பதிவாளரிடம் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு பெற்ற வட்டித் தொழிலருக்கு உரிமம் (Licence) வழங்கப்படும். உரிமம் பெற்றுத் தொழில் செய்யும் வட்டித் தொழிலர், தமது தொழிலைப் பற்றிய ஏடுகளை ஆய்வு (Inspection) க்கு வழங்கக் கடமைப்பட்டவராகிறார். மாநில அரசு ஆய்வுக்கும் கண்காணிப்புக்கும் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆனால், நடைமுறையில் வட்டித் தொழிலரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது அவ்வளவு எளிதாக இல்லை. அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அமுல் நடத்தத் தக்க ஏற்பாடுகள் செய்வதும் கடினமாக உள்ளது. அவர்களது நடவடிக்கைகளை ஒருபுறம் கட்டுப்படுத்தினால், வேறு வகையாக அக்கட்டுப்பாடுகளை மீறுகின்றனர். பலபல முறைகளைக் கையாண்டு, சட்டவிதிகளை ஏய்க்கின்றனர். எடுத்துக்காட்டாக, கடனாகத் தரும் தொகையை விட அதிகமான தொகைக்கு ஒப்புறுதிச் சீட்டு எழுதி வாங்கிக் கொள்ளுதல்; சட்டத்துக்குப் புறம்பான மிக அதிக வட்டி விகிதத்தின் அடிப்படையில் வட்டியைக் கணக்கிட்டு, கடன் தொகையிலிருந்து அதை முன்னரே கழித்து எடுத்துக்கொண்டு, மீதி தொகையை மட்டுமே அளித்தல்; சட்டம் ஒப்பும் விகிதத்திற்கும் மிகுதியான வட்டியை கடனாளியிட

மிருந்து பெற, மிகுதி வட்டித் தொகைக்குத் தம் உறவினர் அல்லது பணியாளர் பெயரில் மேலுமொரு ஒப்புறுதிச் சீட்டு எழுதி வாங்கிக் கொள்ளுதல்; சட்டம் ஒப்பும் வகையில் கடனாளி யின் நிலத்தைத் தமக்கு விற்பனை செய்தது போன்று விற்பனைப் பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ளுதல் முதலியனவாகும்.

### வட்டித் தொழிலரின் எதிர்காலம்

வட்டிக்குக் கடன் தரும் தொழில் தொன்று தொட்டு நடந்து வரும் தொழில்களில் ஒன்றாகும். பணம் என்றதொரு சாதனம் ஏற்பட்ட நாள் தொட்டு, கடன் வழங்கலும் இருந்து வருகிறது. உழவுக்கும் தொழிலுக்கும் கடன் வசதி செய்து தரப் பலப்பல அமைப்புக்கள் இருந்துவரும் இன்றைய நிலையிலும் வட்டித் தொழிலரின் பணி மக்களுக்குத் தேவைப்படுகின்றது. இவரை மக்கள் இரவும் பகலும் எப்பொழுது தேவைப்பட்டாலும் அணுக முடியும். குறிப்பிட்ட அலுவலக நேரத்தில் மட்டுமே செயற்படுவார் என்ற சட்டதிட்டம் கிடையாது. தமது ஊரி லுள்ள மக்களின் நாணயம், ஒழுக்கம் முதலியவற்றை இவர் நன்கு அறிவார். எனவே, நம்பிக்கையின் அடிப்படையில், சடங்குகளை வற்புறுத்தாது, அவசரத் தேவைகளை நிறைவு செய்யும் சீரிய அமைப்பாக வட்டித் தொழிலர் திகழ்கிறார். இருப்பினும், வட்டித் தொழிலர் மக்களிடமிருந்து கடும் வட்டி வசூலிப்பதால், அவரைச் சுரண்டல் பேர்வழி யென்றும், சமூக விரோதி யென்றும் பலர் கருதுகின்றனர். இவர்களுடைய ஆதிக்கத்தை ஒடுக்க, அரசு கூட்டுறவு அமைப்புக்களை ஏற் படுத்தி, மக்களை வட்டித் தொழிலரின் பிடியிலிருந்து விடுவிக்க முயன்று வருகிறது. வட்டித் தொழிலரும், மாறி வரும் சமுதாயப் போக்கினை யுணர்ந்து, தம்முடைய நடவடிக்கைகளை அரசின் சட்டதிட்டங்களை யொட்டி அமைத்துக்கொண்டு செயற்பட வேண்டுவது அவசியமாகிறது.

### நாட்டு வங்கியர் (Indigenous Bankers)

குறிப்பிட்ட சில இனத்தைச் சேர்ந்த மக்கள் பரம்பரைத் தொழிலாகப் பல்லாண்டுகளாகக் கடன்கொடுக்கும் தொழிலை நம் நாட்டில் மேற்கொண்டு வந்துள்ளனர். வைசியர் எனப் படும் இனத்தினர் இத்தொழிலில் சிறப்பாக ஈடுபட்டுள்ளனர். ஜைனர்கள், மார்வாரிகள், நாட்டுக்கோட்டைச் செட்டிமார் முதலியோர் வைசிய இனத்தைச்சேர்ந்த நாட்டு வங்கியராவர். ராஜபுதனத்தைச் சேர்ந்த மார்வாரிகள் நாடெங்கிலுமுள்ள முக்கிய வியாபார நகர்களனைத்திலும் தொழில் செய்வது காணக் கிடக்கின்றது. இதேபோன்று, நாட்டு வங்கியராக

ஜைனர்களும் நாடெங்கிலும் தொழில் புரிந்து வருகின்றனர். செட்டியார்கள் தமிழ் நாட்டிலும் பர்மாவிலும் வட்டித் தொழிலாற்றி வருகின்றனர். அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் காரணமாக பர்மாவில் இவர்களுடைய நடவடிக்கைகள் மிகவும் குறைந்துபோன நிலையில், தற்போது தமிழ் நாட்டில் மட்டும் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

நாட்டு வங்கிய முறை பல்லாண்டுகளாக தழைத்து வளர்ந்து ஓங்கி நின்ற பெருமை கொண்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டு வரை இவ் வங்கிய முறை இந்தியாவின் நிதிய வரலாற்றில் சிறப்பானதோர் இடம் கொண்டிருந்தது. நாட்டு வங்கியர் வியாபாரிகளுக்கு மட்டுமல்லாமல் அந் நாளைய அரசினருக்கும் கடன் வசதிகளை அளித்து வந்தனர். நம் நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட காலந் தொட்டு நாட்டு வங்கிய முறை நலிவுறலாயிற்று. அரசினர் ஆதரவு ஐரோப்பிய வங்கியருக்கே கிட்டியது. வெளிநாட்டு வியாபாரத் தேவைகளை மேற்குப் பாணியில் அமைந்த வங்கிகள் நிறைவு செய்யலாயின. விவசாயம், கைத்தொழில், உள்நாட்டு வியாபாரம் ஆகியவற்றை யொட்டிய தேவைகளை நாட்டு வங்கியர் நிறைவு செய்யலாயினர். முக்கிய வணிக நகரங்களிலும் மா நகர்களிலும் வணிக வங்கிகள் தொழில் செய்யலாயின; அங்குள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் அக்கறை காட்டின. சிறு நகர்களிலும் கிராமங்களிலும் மக்கள் நாட்டு வங்கியர், வட்டித் தொழிலர் போன்ற அமைப்புக்களையே நாடவேண்டிய நிலை நீடிக்கலாயிற்று.

**ரிசர்வு வங்கியுடன் இணைக்கும் திட்டம்**

நம் நாட்டின் பணச் சந்தையில் ஒழுங்கமைதி பெருத பகுதியின் மிக முக்கிய உறுப்பாகத் திகழ்வது நாட்டு வங்கி என்று கூறினுல் அது மிகையாகாது. இந்திய மைய வங்கிய விசாரணைக் குழு (Indian Central Banking Enquiry Committee)வின் (1931 ஆம் ஆண்டில் வெளியான) அறிக்கை, நாட்டு வங்கியரை ரிசர்வு வங்கியுடன் இணைத்து, அதன் வழிப் பணச் சந்தையின் இரு பெரும் பிரிவுகளையும் ஒருங்கிணைப்பதின் இன்றியமையாமையை வற்புறுத்தியது. கூட்டுறவு வங்கிகளும், வணிக வங்கிகளும் செயற்படத் துவங்கிய நாள் தொட்டு, நாட்டு வங்கியருக்குப் போட்டி ஏற்பட்டபோதிலும் அவர் நலிந்துவிடாமல் காக்கப்படவேண்டும்; அவரை இந்திய வங்கிய அமைப்பில் பயனுள்ள ஓர் உறுப்பினராகத் திகழச் செய்யவேண்டும் என்றும் குழு பரிந்துரைத்தது. நாட்டு வங்கியரையும் ரிசர்வு

வங்கியையும் இணைக்கச் சில உருப்படியான கருத்துக்களையும் குழு தந்தது. குறிப்பிட்ட அளவுத் தொகைக்குக் குறையாத முதல், காப்புப் பெற்றிருந்து, கணக்கு வழக்குகளை முறையாக எழுதி வைத்து, தணிக்கை செய்யப் பெற்றிருந்து, மிகப் பெரும் வட்டி விதிக்காமல் வங்கித் தொழிலைச் செய்துவரும் நாட்டு வங்கியருக்கு ரிசர்வு வங்கி மறு தள்ளுபடி அனுப்புகை (Remittance) வசதிகளைச் செய்து தரவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட பரிந்துரைகளை யொட்டி 1937ஆம் ஆண்டு ரிசர்வு வங்கி, நாட்டு வங்கியரைத் தன்னுடன் இணைக்குமொரு திட்டத்தை உருவாக்கியது. குறைந்த அளவு ரூ. 2 இலட்சம் நடைமுறை முதல் கொண்டுள்ள வங்கித் தொழிலை மட்டுமே மேற்கொண்டிருக்கும் வங்கியர் இத் திட்டத்தின் கீழ்ச் செயற்படுவர் எனத் தீர்மானிக்கப்பட்டது. பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளுக்கு அளிக்கப்பட்டுவந்த மூன்று உரிமைகள் இவ் வங்கியருக்கு வழங்கப்படும் என்று நிருணயிக்கப்பட்டது. அவையாவன, தகுதி பெற்ற உண்டியல்களை மறு தள்ளுபடி செய்துகொள்ளுதல்; அரசினர் பிணைகள்மீது, கடன் பெறும் உரிமை; அனுப்புகை வசதிகள். இத்திட்டம் சோதனை செய்யப்படும் காலத்தில் இவ் வங்கியர் ரிசர்வு வங்கியிடம் வைப்புத் தொகை யேதும் வைத்திருக்க வேண்டுவதில்லை.

மேற்கண்ட திட்டம் ஏட்டளவில் நின்றுவிட்டது. இதற்குக் காரணம், வங்கித் தொழிலல்லாத பிற தொழில்களைக் கைவிட்டு, வங்கித் தொழிலை மட்டுமே கடைப்பிடித்து வரும் வங்கியரே இத் திட்டத்தின்கீழ் இடம் பெறுவர் என்றதாகும். மேலும், அன்றைய சூழ்நிலையில் பிற வணிக வங்கிகளிடமிருந்தும், இம்பீரியல் வங்கியிடமிருந்தும் நாட்டு வங்கியர் தேவையான உதவியைப்பெற்று வந்தனர். எனவே, தம் நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. பிற நடவடிக்கைகளை—முக்கியமாக வங்கித் தொழில் அல்லாத பிற தொழில்களைக் கைவிடாமல் ஏற்படும் நட்டம் ரிசர்வு வங்கி அளிக்கும் வசதிகளால் ஈடு செய்யப்பெறாது என்று எண்ணினர். மேலும், தமது கணக்கு வழக்குகள் எல்லோரும் அறியும் வண்ணம் வைத்திருக்கப்படவேண்டும் என்ற ரிசர்வு வங்கியின் நிபந்தனையை அவர்கள் விரும்பவில்லை. தமது திட்டத்துக்கு வரவேற்பு ஏதும் இல்லாது போனதைக் கண்ட ரிசர்வு வங்கி, அதை அமுலாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. மறுபடியும் 1941ஆம் ஆண்டில் பம்பாய் ஷராப் சங்கத்தினர்

(Bombay Shroffs Association) வேண்டுகோளுக் கிணங்க, ரிசர்வு வங்கி ஷராப்புகள் (Shroffs) முதல் கட்டத்தில் தமது வங்கித் தொழிலைப் பிற தொழில்களிலிருந்து பிரித்துவிட வேண்டுமென் றும், பின்னர் பிற தொழில்களை அறவே விட்டுவிட வேண்டு மென்றும் கோரியது. இந் நிபந்தனையும் ஷராப்புக்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாததாக அமைந்தது. இன்று வரை நாட்டு வங்கியரை ரிசர்வு வங்கியுடன் இணைத்து, அவர்களை ஒழுங்கமைதிபெற்ற பணச் சந்தையின் உறுப்பினராக்கும் முயற்சி ஏதும் வெற்றி பெறவில்லை. கடந்த சில ஆண்டுகளாக, கூட்டுறவு வங்கிகளும் வணிக வங்கிகளும் பயிர்த்தொழிலுக்குக் கடனளிப்பதை மிகப் பெருமளவில் விரிவு படுத்தி யுள்ளதன் காரணமாக, நாட்டு வங்கியரின் முக்கியத்துவம் குறைந்து வரு கிறது என்றும், நாளடைவில் அவர்களில் திறமை யற்றோர் தாமே தொழிலைக் கைவிட்டுவிடுவர் என்றும் ஒருசிலர் நம்பு கின்றனர். மற்றும் சிலர் விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் வழங்க எத்தனை அமைப்புக்களிருந்தாலும், நாட்டு வங்கியரின் சேவை அவர்களுக்குப் பல காரணங்களால் தேவைப்பட்டுக் கொண்டிருக்குமென்றும், அவர்களைப் பணச் சந்தையில் எங்ஙனமேனும் பிணைத்து வைத்தால்தான் நிதி நிலைக் கட்டுப் பாடு செவ்வனே செயலுறும் என்றும் பேசுகின்றனர். நிற்க.

நாட்டு வங்கியரைப்பற்றிய பிற செய்திகளை இனி உற்று நோக்குவோம். வைப்புக்கள் பெறுவது, உண்டியல் நடவடிக் கைகள் மேற்கொள்வது அல்லது கடன் கொடுப்பது ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள தனி நபர் அல்லது தனியார் நிறு வனமே நாட்டு வங்கியர் என அறியப்பட்டது. வட்டித் தொழிலருக்கும் நாட்டு வங்கியருக்குமிடையேயுள்ள முக்கிய வேறுபாடு—வட்டித் தொழிலர் தம் பணத்தையே கடன் கொடுத்துத் தொழில் செய்கிறார்; ஆனால், நாட்டு வங்கியர் வைப்புக்களைப் பெற்று அல்லது வங்கியினிடமிருந்து கடன் பெற்றுத் தம் தொழிலைச் செய்கிறார். அதாவது நிதித் துறை யில் நாட்டு வங்கியர் ஒரு இடைநிலையர் (Intermediary) என்ற முறையில் செயலாற்றுகிறார். தம் தொழிலுக்குத் தேவைப்படும் தொகையில் கணிசமானதொரு அளவினை வெளியாரிடமிருந்து திரட்டிப்பெறும் ஆற்றல் மிக்கவராக இவர் காணப்படுகிறார். மற்றும், வட்டித் தொழிலரின் நடவடிக்கை யனைத்தும் ரொக்க அடிப்படையில் அமைகின்றது. ஆனால் நாட்டு வங்கியர் சரக்கு, பணி ஆகியவற்றை ஆக்கவும் பகிர்ந்தளிக்கவும் தேவைப்படும் குறுகிய காலக் கடன் பற்றிய முறையாவணங்களைச் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். குறிப்பாகச் சொன்னால்,

வியாபார நடவடிக்கைகளின் அடிப்படையில் உண்டாகும் உண்டியல் வணிகத்தில் நாட்டு வங்கியர் ஈடுபடுகின்றனர். முன்னர் கூறியதுபோன்று மூல்தானிகள், குஜராத்தி ஷராப்புக்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள், காயர்கள் எனப்பெறும் அஸ்ஸாம் மாநில மார்வாரிகள் முதலியோர் முன்னணியில் நிற்கும் நாட்டு வங்கியராவர்.

நம் நாட்டில் தொழில் புரிந்துவரும் நாட்டு வங்கியரின் எண்ணிக்கை முறையாகக் கணக்கிடப்படவில்லை 1961ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்குப்படி, வட்டித் தொழிலர், நாட்டு வங்கியர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை 33,939 என்பதாகும். நாட்டு வங்கியர் தமக்கென அமைத்துள்ள சங்கங்களில் 1,200 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சங்கங்களில் உறுப்பினராகச் சேராமலிருக்கக்கூடிய நாட்டு வங்கியரின் எண்ணிக்கை மேலும் சற்றேறப்ப 1,200 எனக் கொண்டால், நாட்டு வங்கியரின் மொத்த எண்ணிக்கை 2,500 எனக் கொள்ளலாம்.

**தொழிலாற்றும் இடங்கள்**

பொதுவாக நோக்குமிடத்து, நாட்டு வங்கியர் நகர்ப்புறங்களில் தம் தொழிலை நடத்தி வருகின்றனரேயன்றி, கிராமப்புறங்களில் ஊடுருவிச் சென்றதாகத் தெரியவில்லை. எங்கெல்லாம் வணிக வங்கி வசதிகள் பெருகியுள்ளனவோ, அங்கெல்லாம் நாட்டு வங்கியர் சுறுசுறுப்பாக இயங்கி வருவது கவனத்துக்குரிய செய்தியாகும். எடுத்துக்காட்டாக, பம்பாய், சென்னை மாநகரங்களில் மூல்தானியரும், குஜராத், மகாராட்டிர மாநிலங்களிலுள்ள நகரங்களில் குஜராத்தி ஷராப்புகளும் தம் நடவடிக்கைகளனைத்தையும் குவித்துள்ளனர். அங்குமிங்குமாகக் காணப்படும் சில நாட்டு வங்கியர் தவிர, வட இந்தியாவில் நாட்டு வங்கியர் வேரூன்றவில்லை என்பதும், மேற்கு இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் அவர்கள் வேரூன்றி வளர்ந்துள்ளனர் என்பதும் தெளிவாகப் புலப்படும் செய்தியாகும்.

**நாட்டு வங்கியர் வங்கியரா ?**

நாட்டு வங்கியரை வங்கியர் என்று குறிப்பிடுவது பொருந்துமா என்ற கேள்வி எழலாம். வணிக வங்கியர் செய்யும் முக்கியப் பணி வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதும், அவ்வகையில் பெற்ற தொகையைத் திருப்பி எடுத்துக்கொள்ளக்

காசோலையைப் பயன்படுத்த வகை செய்வதுமாகும். இந்தப் பணியை நாட்டு வங்கியர் செய்வதில்லை. இருப்பினும், குறுகிய கால முறையாவணமாகிய உண்டியல்களைக் கையாளுதல், அனுப்புகை வசதிகளைச் செய்தல், விலைமதிப்புள்ள பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் போன்ற பணிகளை நாட்டு வங்கியர் செய்து வருவதால் அவரை வங்கியரென்பது சாலப் பொருந்தும். நாட்டு வங்கியரில் பெரும்பாலோர் வங்கித் தொழிலுடன் வியாபாரம், முகமைப் பணி (Agency business), கழிவு முகவர் (Commission Agent) போன்ற தொழில்களையும் செய்து வருகின்றனர். பருத்தி, சர்க்கரை, எண்ணெய் வித்துக்கள் போன்ற விளை பயிர்கள் வியாபாரத்தை யொட்டிய நடவடிக்கைகளுக்குக் கடன் வசதி யளிப்பதே நாட்டு வங்கியரின் முக்கியத் தொழிலாகும். இவர்கள் கைவினைஞர், நகர்ப்புற சிறு வியாபாரிகள் போன்றவர்கட்குக் கடன் வசதி யளிக்கின்றனர். சென்னை, பம்பாய் போன்ற மாநகரங்களில் சில்லறை வியாபாரி (Retail Traders)களுக்கு இவர்கள் கடனளிக்கின்றனர். வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதைவிட நாட்டு வங்கியரிடமிருந்து பெறுவதையே சில சிறு தொழிலதிபர்கள் விரும்புகிறார்கள். இதற்குக் காரணம் நாட்டு வங்கியர் சடங்கு ஏதுமின்றித் தேவைப்படும்போது உடனடியாகக் கடன்கோருவோரின் தன்மையை யறிந்து கடன் தருகின்றனர். அவசியமேற்படும்போது பிணையாகத் தரப்படும் சொத்தினைக் கடனளி வசம் வைத்திருப்பதையும் இவர்கள் அனுமதிக்கின்றனர். வங்கிகள் வாங்கும் வட்டியைவிட மிகுதியான வட்டியை நாட்டு வங்கியர் வாங்குகின்றனரெனினும், கடன் கோருபவரின் தேவைக்கும் தன்மைக்கும் ஏற்பச் சடங்குகளின்றி, பலரறியாவண்ணம் இவர்கள் கடன் தருவதால் இவர்களைத் தேடி வணிகர் செல்வது இயல்பே. இனி, சில முக்கிய நாட்டு வங்கியரின் அமைப்பு, தொழில் முறை பற்றிய செய்திகளைக் காண்போம்.

**ஷிகார்புரி அல்லது மூல்தானி ஷராப்பு** (Shikarpuri or Multani Shroff)

நாட்டு வங்கியர்களிலே ஒழுங்கமைதி பெற்ற பணச் சந்தையுடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளவர்கள் மூல்தானி ஷராப்புக்களாவர். பம்பாயில் மட்டும் 253 மூல்தானியர் நிறுவனங்களும், அனைத்திந்திய அடிப்படையில் 400 நிறுவனங்களும் தற்போது செயற்பட்டு வருவதாக 1972ஆம் ஆண்டு வங்கியக் குழுவின் அறிக்கை பேசுகிறது.

சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமக்கு அடிக்கடி உண்டாகும் குறுகிய காலப் பணத் தேவைகளை மூல்தானி வங்கியரிடமிருந்தே பெறுகின்றனர். மூல்தானியரின் நட வடிக்கை பெரும்பாலும் உண்டியல்களைச் சார்ந்திருப்பது குறிப் பிடத்தக்கது. கடன் வாங்கும் நபரின் நாணயத்தை நம்பியே இத்தொழில் நடைபெற்று வருகிறது. இதற்குப் பிணையாகச் சொத்து ஏதும் பெறப்படுவதில்லை. குறித்த நாளில் கடனாளி உண்டியல் மீது பணஞ் செலுத்திவிடுவார் என்ற முழு நம்பிக் கையின் பேரில் மட்டுமே மூல்தானி உண்டியல் தொழில் நடை பெற்று வருகிறது. உண்டியலை எழுதியவர், அதனை வங்கியில் தள்ளுபடி செய்து, பின்னர் குறித்த நாளன்று பணஞ்செலுத்தத் தவறினால், உடனே அவ்வுண்டியலை மேலெழுதிய மூல்தானி வங்கியர் வங்கிக்குத் தாமே பணஞ் செலுத்திவிடுவார். சுருங் கக் கூறின், மூல்தானி, உண்டியலை ஏற்றவர் பொறுப்பு மேற் கொள்வதுபோன்று நடந்துகொள்ளுகிறார்.

மூல்தானியர் உண்டியல் 90 நாட்கள் தவணை கொண்டன வாகும். தவணை முடிந்தவுடன் கெடு தேதியன்று பணம் உறுதியாகத் தரப்படும் என்ற நிலையிருப்பதால், வணிக வங்கி யர் தயக்கமேது மின்றி, இவ்வுண்டியல்களைத் தள்ளுபடி செய்வதில் தம் பணத்தை முதலீடு செய்கின்றனர்.

தம்மிடமுள்ள முதல் தவிர, மூல்தானியர் தமது உற்றார் உறவினரிடமிருந்தும் வைப்புக்களைப் பெறுகின்றனர். மேலும், வணிக வங்கிகளிடமிருந்து தமக்குத் தேவைப்படும் தொகையில் கணிசமான பகுதியைப் பெறுகின்றனர். ஆக. மொத்தம் ரூ. 40 கோடி அளவிற்கு மூல்தானியர் உண்டியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர் என்று வங்கியக் குழுவின் அறிக்கை குறிப்பிடுகின்றது. உண்டியல் 3 மாத தவணை கொண்டதாக இருப்பதால் ஓர் ஆண்டுக்கு மொத்தம் ரூ. 160 கோடி பெறுமான உண்டியல் நடவடிக்கைகளை மூல் தானியர் நடத்தி வருகின்றனர்.

**குஜராத்திய ஷராப்புகள்** (Gujarati Shroffs)

நாட்டு வங்கியரில் மற்றொரு முக்கிய வகுப்பினர் குஜ ராத்திய ஷராப்புகளாவர். இவர்களில் நன்கு அமைக்கப் பெற்ற 350 நிறுவனங்கள் பம்பாயிலும் அகமதாபாதிலும் செயலாற்றி வருகின்றன. குஜராத்திய ஷராப்புகளை இரு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் வங்கியத் தொழிலில் மட்டும் ஈடுபட்டுள்ளோர்; மற்றொரு பிரிவினர்

வங்கியத் தொழிலுடன் கழிவு முகமைத் (Commission Agency) தொழிலையும் செய்வோர்.

வங்கித் தொழிலில் ஈடுபட்டுள்ள குஜராத்திய ஷராப்புகள் வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றனர்; பிணைமீதும், பிணை யேதுமில்லாமலும் கடன்களை வழங்குகின்றனர். பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பவும், சரக்குக் கொள்முதல் செய்தமைக்குப் பணஞ் செலுத்தவும் இந்த ஷராப்புகள் பணத்தைப் பெற்றுக்கொண்டு அல்லது வெற்றுக் கடன் பேரில் உண்டியல் எழுதித் தருகின்றனர். தம் நிறு வனத்தின் மீது மட்டுமல்லாமல் பிற இடங்களில் தொழில் புரிந்து வரும் ஷராப்புகள் மீதும் இவர்கள் உண்டியல் எழுதித் தருவதன் மூலம் தமது வாடிக்கையருக்குச் சரக்கு வாங்கத் தேவைப்படும் நிதி வசதிகளை அளிக்கின்றனர். மற்றும், தம் வாடிக்கையர் சார்பாக, மூன்றும் நபர்கள் வாடிக்கையருக்குச் சரக்கு விற்றமைக்கு எழுதிய உண்டியல்கள் மீது இந்த ஷராப் புகள் பணஞ் செலுத்துகின்றனர். இங்ஙனமாக, இவர்கள் அளிக்கும் குறுகிய காலக் கடன் வசதிகள் சரக்கு விற்பனைக்கும் அனுப்பலுக்கும் உதவுகின்றது. வங்கியத் தொழிலோடு கழிவு முகமைத் தொழிலைக் கலக்காது செயலாற்றும் நாட்டு வங்கியர் மேற்கண்ட உண்டியல் வசதிகளை அளிக்கின்றனர். அகமதா பாத் நகரிலுள்ள 150 ஷராப்பு நிறுவனங்கள் வங்கியத் தொழி லில் மட்டுமே ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வங்கியத் தொழிலுடன் கழிவு முகமைத் தொழிலையும் மேற் கொண்டு, பம்பாயில் செயலாற்றி வரும் நாட்டு வங்கியரில் பெரும்பாலோர் குஜராத்திய ஷராப்புக்களாவர். ஏறத்தாழ 200 நிறுவனங்கள் இத் தொழில்களைச் செய்து வருகின்றன. கழிவு முகமைப் பணி இவற்றின் முதன்மைத் தொழிலாகவும், உண்டியல் நடவடிக்கை அதற்கடுத்த முக்கியத் தொழிலாகவும் அமைந்துள்ளன. வங்கியத் தொழிலிலிருந்து கிடைக்கும் ஆதாயத்தைவிடக் கழிவு முகமைப்பணி (Commission Agency business) யில் நிரம்ப வருமானம் கிடைப்பதால் குஜராத்திய ஷராப்புகள் இப் பணியை விட்டுவிட ஒப்புக்கொள்ளவில்லை. மேலும், வணிக வங்கிகள் பெருகி வரும் இக்காலத்தில் நாட்டு வங்கியரின் வங்கியப் பணிக்கு முக்கியந்துவம் குறைந்துள்ளது.

**தொழில் நடத்தும் முறை**

குஜராத்திய ஷராப்புகள் தமது தொழிலை நடத்தக் கூட் டாண்மை நிறுவன (Partnership Firm) அமைப்பை மேற்

கொண்டுள்ளனர். இந்த அமைப்புகளுக்குக் கிளைகள் உள்ளூர்களில் உண்டு. இதுமட்டுமல்லாமல் வெளி மாநிலங்களிலும் இவர்கள் எழுதும் உண்டியலை ஏற்கவும் அதன்மீது பணஞ் செலுத்தவும் ஏற்பாடுகள் செய்துள்ளனர். இதனால் பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதாகவும் விரைவாகவும் அனுப்ப முடிகிறது. வியாபார நிமித்தம் அனுப்புகை (Remittance) க்கு மட்டுமல்லாமல் பிற காரணங்களுக்குப் பணம் அனுப்பவும் இந்த ஏற்பாடு வசதியாக உள்ளது.

தமது தொழிலை நடத்துவதற்கு குஜராத்திய ஷராப்புகள் தம்மிடமுள்ள முதல் அல்லது வேறு வழிகளிலும் பணம் திரட்டுகின்றனர்; பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைப் பெறுகின்றனர். தங்களுக்கிடையே கடன் வாங்கிக்கொள்வதுமுண்டு. வணிக வங்கியரிடமிருந்து இவர்கள் பெரும்பாலும் கடன் பெறுவதே கிடையாது. இந்த ஒரு செய்தியில் குஜராத்திய ஷராப்புகள் மூல்தானியரிடமிருந்து வேறுபடுகிறார்கள். குஜராத்திய ஷராப்புகள் தாம் பெற்றுக்கொள்ளும் வைப்புக்கள் மீது கணிசமான வட்டி தருகின்றனர்; கேட்பு வைப்பு (Demand Deposit) மீது 4 முதல் 6 விழுக்காடு வட்டியும், தவணை வைப்புக்கள் மீது 10 முதல் 11 விழுக்காடு வட்டியும் அளிக்கின்றனர். குஜராத்திய ஷராப்புகளிடையே அழைப்புச் சந்தை (Call Market) ஒன்று நிலவி வருவது குறிப்பிடத் தக்கது. உபரியாக உள்ள பணத்தைக் கடன் கொடுக்கவும் ஏற்றுக்கொள்ளவும் அவர்களிடையே இருந்து வரும் இந்த ஏற்பாடு குறுகிய காலச் கடன் வேண்டுவோருக்குத் தக்க வசதிகள் அளிக்க மிகவும் பயன்படுகிறது.

பிற மாநிலங்களிலுள்ள தமது வாடிக்கையர் சார்பாகச் சரக்குகளை வாங்கி அவற்றைக் கடன் பேரில் அனுப்ப குஜராத்திய ஷராப்புகள் ஏற்பாடு செய்கின்றனர். இவர்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 600 கோடியளவுக்கு வியாபாரம் செய்கின்றனர். அகமதாபாதிலுள்ள ஷராப்புகள் ஆண்டொன்றுக்கு ரூ. 300 கோடி மதிப்பளவுக்கு உண்டியல் தொழில் செய்து வருகின்றனர். அண்மையில் குஜராத்திய ஷராப்புகள் சிற்றளவு தொழில்களுக்குக் கடன் வழங்கத் துவங்கியுள்ளனர்.

**நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும், கல்லிடைக்குறிச்சி பிராமணர்களும்**

தென்னிந்தியாவில் நெடுங்காலமாக வங்கியத் தொழில் புரிந்து வரும் வகுப்பினர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களும் கல்லிடைக்குறிச்சிபிராமணர்களும்

ஆவர். கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் பெரும்பாலும் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமே செயலாற்றி வந்தனர். ஆனால் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் தமிழகத்திலுள்ள ராமநாத புரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும், பர்மா, சிலோன் (ஸ்ரீலங்கா), பிரான்சு, இந்தோ-சீனு போன்ற நாடுகளிலும் தொழில் செய்து வந்தனர். இவ் வங்கியர் வட்டிக்குக் கடன் கொடுப்பது மட்டுமல்லாது உண்டியல் எழுதுவது, தள்ளுபடி செய்து கொடுப்பது, வைப்புக்கள் ஏற்றுக்கொள்வது, காசோலைகளை மதிப்பது, பாதுகாவலுக்குத் தரப்படும் விலை மதிப்புள்ள பொருள், பத்திரங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்வது, பொன், நகை ஆகியவற்றைப் பிணையாகக்கொண்டு கடன் வழங்குவது போன்ற வங்கிகள் மேற்கொள்ளும் பல நடவடிக்கைகளைச் செய்து வருகின்றனர்.

செட்டியார்கள் தம் தொழிலில் ஏறத்தாழ ரூ. 100 கோடி ஈடுபடுத்தியுள்ளனர் என்றும், அதில் கிட்டத்தட்ட ரூ.15 கோடி அவர்கள் கடன் வாங்கித் தொழிலில் ஈடுபடுத்தியுள்ள தொகை என்றும் நம்பப்படுகிறது. கல்லிடைக்குறிச்சி பிராமணர்கள் ஏறத்தாழ ரூ. 5.5 கோடி முதல் தம் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக மூல்தானி ஷராப்புகள், செட்டியார்கள் தொழில் செய்து வரும் இடங்களில் போட்டியாகத் தொழில் செய்யத் துவங்கியதாலும், கூட்டுறவு வங்கிகளும், வணிக வங்கிகளும் தீவிரமாகச் செயற்படத் துவங்கியதாலும், பல செட்டியார்கள் வங்கியத் தொழிலைக் கைவிட்டு, வேறு வகை நிதிய நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். முன்காலத்தில் உண்டியல் நிறுவனம் (Hundi Firm) என்று அறியப்பட்ட செட்டியார்களில் தொழிலமைப்புத் தற்போது மறைந்து விட்டது என்று கூறலாம்.

சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாறிய சூழ்நிலையையொட்டி, நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் கல்லிடைக்குறிச்சி பிராமணர்களும் தமது தொழிலினை மாற்றியமைத்து வருகின்றனர். வட்டித் தொழிலர் சட்டம் போன்ற சட்டங்களின் பிடியில் சிக்க விரும்பாதோர் வியாபாரிகளாகவும், தொழிலதிபர்களாகவும், சினிமா திரைப்பட வழங்குநர் (Distributors) களாகவும் பல துறைகளில் ஈடுபடலாயினர். வங்கியத்தொழிலை மட்டும் செய்ய விரும்பிேனோர் கம்பெனி அமைப்பில் வங்கிகளை உருவாக்கி, வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப்படி செயலாற்ற முனைந்தனர்.

**மார்வாரி காயர்கள் (Marwari Kayas)**

அஸ்ஸாம் மாநிலத்தில் தொழில் புரிந்து வரும் நாட்டு வங்கியரில் குறிப்பிடத் தக்கவர்கள் காயர்கள் எனப்படும் மார்வாரிகள். வடகிழக்கு இந்தியாவிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்குக் குறுகிய கால நிதி வசதி யளிப்பதில் காயர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடைய முக்கியப்பணி வியாபாரம் செய்வதேயாகும். தேயிலை வாங்கும், விற்கும் நடவடிக்கைகளில் இவர்கள் கழிவு முகவராகச் செயலாற்றுகின்றனர். தேயிலைத் தோட்டங்களிலிருந்து விளை பொருளை ஏற்றிச்செல்லப் போக்குவரத்து வசதிகளையும் செய்து தருகின்றனர். தேயிலைத் தோட்டத்திற்கு வங்கியராகச் செயலாற்றுவதும் இவருடைய பணிகளில் முக்கியமானதொன்றாகும். தோட்ட மேலாளரின் காசோலை, உண்டியல், பணவிடை முதலியவற்றைப் பெற்றுக்கொண்டு, அவற்றின்மீது ரொக்கம் தருகின்றனர். உண்டியல், காசோலைகளைத் தள்ளுபடி செய்து தருவதன் வழி, இவர்கள் தம் வாடிக்கையாளரான தேயிலைத் தோட்டக்காரர்களுக்கு ஒரு நாள் முதல் இரு வாரங்கள் வரையான கடன் வசதிகளை யளிக்கின்றனர். தோட்ட மேலாளர் மூன்றும் நபர்களுக்கு எழுதித் தரும் காசோலைகள் இவர் ஏற்கின்றார். தோட்டத்தைச் சார்ந்த எல்லா ரொக்க நடவடிக்கைகளையும் இவர் கவனித்துக் கொள்ளுவார். இதற்கு இவருக்கு நூறு ரூபாய்க்கு 20 முதல் 35 பைசே வரை கழிவு தரப்படுகின்றது. தோட்ட மேலாளரின் வைப்புக்களை இவர்கள் பெற்றுக்கொள்ளுகின்றனர்; நெருக்கடி நேரங்களில் பணம் தந்து உதவுகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்குக் கடன் கொடுப்பதுமுண்டு. கடனைச் சரக்காகக் கொடுக்கும் காயர்கள் தாம் விதிக்கும் உயர் விகித வட்டியைச் சரக்கின் விலையைக் கூட்டி வைப்பதன்வழி வசூலித்துக் கொள்ளுகின்றனர்.

வணிக வங்கிகள் கிளைகளைப் பெருக்கிக் கொண்டு வரும் இன்றைய நிலையிலும் கூட, காயர்கள் பணி தேயிலைத் தோட்டங்களுக்குத் தேவைப் படுகின்றது. இதற்குக் காரணம் காயர்கள், தோட்டக்காரர்களின் ரொக்கத் தேவைகளை எதிர்நோக்கி, அவ்வப்போது அவர்கள் வேண்டும் பணத்தை உடனுக்குடன் கடனாகத் தந்து உதவுகின்றனர். ஆனால், சில காலத்துக்கு முன் காயர்கள் இருந்த நிலையை நோக்க, தற்போது அவர்களின் நடவடிக்கை குறைந்து விட்டது.

**நாட்டு வங்கியரிடையே காணப்படும் குறைபாடுகள்**

நாட்டு வங்கியரில் பெரும்பான்மையோர் பத்தாம் பசலிகளாக, பழங்கால நடைமுறையினையே பின்பற்றி வருபவர்

களாக இருக்கின்றனர். இவர்கள் காலத்திற்கேற்றவாறு தம் தொழில் முறைகளை மாற்றிக் கொள்ளத் தயங்குகின்றனர். மற்றும், இவர்களுக்குள் பொறாமையும் போட்டியும் மிகுதி. மேலும், இத் தொழில் ஒரு குறுப்பிட்ட வகுப்பினரால் மட்டும் நடத்திவரப் பெறுவதால், புத்துயிரூட்டக் கூடிய வேறெவரும் இதில் இடம்பெற வாய்ப்பில்லை. ஒழுங்கமைதி பெற்ற வங்கியப் பிரிவுடன் நெருங்கிய தொடர்பேதும் இல்லாத காரணத்தாலும், தம் தொழிலைச் சார்ந்த நடவடிக்கைகளை இரகசியமாக வைத்திருக்கும் காரணத்தாலும் பொது மக்களின் நல்லெண்ணத்தைப் பெற இவர்களுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை.

நாட்டு வங்கியரின் நடவடிக்கைகளால் வட்டித் தொழிலிலுள்ள தீமைகள் மிகுந்துள்ளனவே யன்றி, நாட்டுக்கு நன்மை ஏற்படவில்லை. வியாபாரிகளுக்கு இவர்கள் ரொக்கமாகவே கடன் வசதியளித்து வருகின்றனர்; உண்டியல் நடவடிக்கைகள் மூலம் கடன் வசதி யளிப்பது மிக்க குறைவு.

வணிக வங்கியருக்கும் நாட்டு வங்கியருக்கும் முறையானதொரு தொடர்பு இல்லாத காரணத்தால், நம் நாட்டில் இரு பணச் சந்தைகள் இயங்கிவருகின்றன. இவ் விரு சந்தைகளில் இருவேறு வீதங்கள் (Rates) நிலவிவருகின்றன. நாட்டு வங்கியர் தனித்தனி நிறுவனங்களாகவோ அல்லது நபர்களாகவோ செயற்பட்டு வருகின்றனர். அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஏற்பாடு ஏதும் நடைமுறையில் இல்லை.

தக்க நடவடிக்கைகளை யெடுத்து நாட்டு வங்கியரைப் பிற வங்கியஅமைப்புடன் இணைத்தல் அவசியமெனப் பலகாலமாகக் கருதப்பட்டு வருகிறது. கிராமப் புறங்களிலும் பல சிற்றூர்களிலும் இன்றும் விவசாயிகள், வியாபாரிகள், சிறு தொழில் செய்வோர் போன்றோர் தமது நிதி வசதிகளுக்கு நாட்டு வங்கியரையும் வட்டித்தொழிலரையுமே நம்பியுள்ளனர். இவர்கள் வசூலிக்கும் வட்டி விகிதமும் அவ்வளவு கடுமையாக இருப்பதில்லை. இவர்கள் அமைப்புச் செவ்வையாக இல்லாத காரணத்தால் தம் தொழிலின் தேவைக்கேற்ற நிதியைத் திரட்ட இவர்களால் முடியவில்லை. பல காலமாக உண்டியல் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டிருப்பதால் இவர்களுடைய அனுபவத்தையும் அமைப்பையும் நல்லதொரு மாற்றுச் சீட்டுச் சந்தை (Bill Market) ஏற்படுத்தப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**நாட்டு வங்கியரின் உண்டியல்கள்**

நாட்டு வங்கியரின் நாணய முறையாவணம் (Credit Instrument) என்ற சிறப்புப் பெற்றுத் திகழ்வது உண்டியல் ஆகும்.

பொதுவாக உண்டியல் நம் நாட்டு மொழியில் எழுதப்படுகின்றது. உண்டியலைச் சார்ந்த வழக்காறுகள் (Usages) சில மாற்று முறையாவணச் சட்டத் (Negotiable Instruments Act) தின் விதிகளுக்கு முரணாக அமைந்துள்ளன. இருப்பினும், அண்மைக் காலத்தில் இவ்வழக்காறுகள் சட்டத்தை ஒவ்விய வண்ணம் மாறி வருவது குறிப்பிடத் தக்கது. பணம் எழுப்புவது, பணம் அனுப்புகை செய்வது, உள் நாட்டு வியாபாரத்திற்கு நிதிவசதி யளிப்பது போன்ற நடவடிக்கைகளுக்கு உண்டியல் பயன்படுகின்றது. நாட்டு வங்கியர் இரண்டு வகை உண்டியல்களைப் புழங்குகின்றனர். ஒன்று, தர்சனி உண்டியல் (Darshani Hundi); மற்றது முட்டாட்டி உண்டியல் (Muddati Hundi). கோரியவுடன் அல்லது காண்பிக்கப் பட்டவுடன் பணஞ்செலுத்தப் படவேண்டிய உண்டியலே தர்சனி உண்டியலாகும். உள் நாட்டு வியாபாரத்திற்கு நிதி வசதி அளிக்கும் பொருட்டும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பணம் அனுப்பும் பொருட்டும் தர்சனி உண்டியல் எழுதப்படுகின்றது. பார்வைக்குப்பின் அல்லது குறிப்பிட்ட தேதிக்குப் பின், குறிப்பிட்ட காலங் கழிந்ததும் பணஞ் செலுத்தப்பட வேண்டிய தவணை உண்டியலே முட்டாட்டி உண்டியல் எனப்படுகிறது. தவணைக் காலம் 30 நாள், 60 நாள், 90 நாள் அல்லது 120 நாள் என அமைவது வழக்கம். இவ்வகை உண்டியல் உள்ளூரில் மட்டுமே புழங்கி வருவது வழக்கம். குஜராத்திய ஷராப்புகள் பயன் படுத்தும் உண்டியல்கள் இன்னாருக்குப் பணஞ் செலுத்துக என்ற வாசகங் கொண்டதாக இருக்கின்றன. மூல் தானிய உண்டியல் கடனுறுதிச் சீட்டு (Promissory note) வடிவில் அமைந்துள்ளது. குறிப்பிட்ட நாட்கள் (மகராட்டிரத்தில் 86 நாட்களும் மூன்று சலுகை நாட்களும்; மேற்கு வங்காளம், தென்னிந்தியாவில் 90 நாடகள்) கழிந்தவுடன் பணஞ் செலுத்த உறுதியளித்து, கடன் வாங்குபவர் இச்சீட்டினை எழுதித் தருவார். செட்டியார்கள் நடப்பு உண்டியல் என்ற ஒரு வகை உண்டியலைப் பயன்படுத்துகின்றனர். இவ் வகை உண்டியல் மீது அச் சமயம் நிலவும் வட்டி விகிதம் தரப்பட வேண்டும். தம்முடன் வைப்பாகச் செலுத்தப்பட்ட தொகையினை ஏற்றுக் கொண்டு, செட்டியார்கள் வழங்கும் தவணை உண்டியல்களை தவணை வைப்புக் கடிதம் என்று குறிப்பிடுவதுண்டு.

வங்கியக் குழு 1972-ல் அளித்த அறிக்கையில் நாட்டு வங்கியர்களைப் பற்றிய பரிந்துரையில் நாட்டு வங்கியரின் உண்டியல்களை வணிக வங்கிகள் தாராளமாக, தயக்கமேதுமின்றி, தள்ளுபடி செய்து தரவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. இங்ஙனம்

தள்ளுபடி வசதிகள் பெறும் நாட்டு வங்கியர் தம் வாடிக்கையர் மீது விதிக்கக்கூடிய வட்டி விகிதத்தைப் பற்றி உடன்பாடு ஏதும் இருக்க வேண்டும். குறிப்பிட்ட வட்டிக்கும் அதிகமாக வட்டியை இவர்கள் வசூலிக்காமல் வணிக வங்கிகள் பார்த்துக் கொள்வது அவசியம். தமக்கு உபரியாகப் பணம் இருக்கும் போது தள்ளுபடி வசதிகளைத் தாராளமாகத் தருவது, தமக்கு நெருக்கடி ஏற்படும்போது முதல் நடவடிக்கையாக இந்தத் தள்ளுபடி வசதிகளைக் குறைப்பது என்ற நிலையை வணிக வங்கியர் மாற்றிக்கொள்ள வேண்டும். நாட்டு வங்கியருக்குள்ள திறமையும் அனுபவமும் நாட்டுக்குப் பயன்பட அவர்களை ஒழுங்கமைதி பெற்ற பணச் சந்தையுடன் இணைத்து, நல்ல தள்ளுபடி, ஏற்பு (Discount, Acceptance) நிலையங்களாக உருவாக்கலாம். குறுகிய காலப் பணச் சந்தை சீரிய முறையில் வளர இம் முயற்சி பெரிதும் உதவும்.

## பட்டியல் 3—1

### மூல்தானியர் கடன் கொடுக்கும், வாங்கும் வட்டி வீதங்கள் (1971 இறுதியில்)

| இடம் | வணிக வங்கியரின் உண்டியல் தள்ளுபடி வீதம் | மூல்தானியர் விதிக்கும் வட்டி வீதம் | கடன் கொடுக்கும் வீதத்திற்கும் வாங்கும் வீதத்திற்கும் இடையே இடைவெளி |
|---|---|---|---|
| பம்பாய் | 13 | 17 | 4 |
| சென்னை | 13 | 21·6 | 8·6 |
| பெங்களூர் | 13 | 18 | 5 |

# 4. இந்திய ரிசர்வு வங்கி

நம் நாட்டின் மைய வங்கி (Central Bank)யாக ரிசர்வு வங்கி செயலாற்றி வருகின்றது. இவ்வங்கி 1935ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. இவ் வங்கி அமைக்கப்படுமுன் நிலைமை எவ்வாறிருந்தது; இவ் வங்கியை அமைக்க எவ்வகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பது போன்ற செய்திகளைச் சற்று உற்று நோக்குவோம்.

வாரன் ஹேஸ்டிங்க்ஸ் வங்காள ஆளுநராக இருந்த பொழுது, 1773 ஜனவரி திங்களில் 'வங்காள, பீகார் மாகாணங்களுக்கு ஒரு பொதுவங்கி' (General Bank in Bengal and Bihar) என்ற ஒரு திட்டத்தை வருவாய்க் குழு (Board of Revenue) வினருக்கு அளித்தார். அக்காலத்தில் வங்காளமும் பீகாருமே இந்தியாவிலுள்ள முக்கிய ஆங்கிலேய உடைமைகளாகத் திகழ்ந்தன. இத் திட்டத்தின் அடிப்படையில் ஏப்ரல் 1773-ல் இந்த வங்கி நிறுவப்பெற்றது. ஆனால் இது சிறிது காலத்திற்கே இயங்கி வந்தது. இதற்குப்பின் பலப்பல திட்டங்கள் தீட்டப்பட்டன. அவற்றுள் முக்கியமானது அக் காலத்தில் இயங்கி வந்த மூன்று மாகாண வங்கிகளை ஒன்று சேர்த்து, ஒரு வங்கியை ஏற்படுத்துவதாகும். இந்தத் திட்டத்தின்படி 1921ஆம் ஆண்டில் இந்திய இம்பீரியல் வங்கி (Imperial Bank of India) ஏற்படுத்தப்பட்டது. இம்பீரியல் வங்கி வணிக வங்கி என்ற முறையில் முதன்மையாக இயங்கி வந்த போதிலும், மைய வங்கியின் பணிகள் சிலவற்றையும் செய்து வந்தது. அவற்றுள் முக்கியமானது அரசாங்கத்தினருக்கு வங்கியராகப் பணியாற்றியது. ஆனால், தாள் நாணய வெளியீடு மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்து வந்தது. 1926ஆம் ஆண்டு இந்திய நாணய நிதிபற்றிய அரசினர் குழு (Royal Commission on Indian Currency and Finance)—ஹில்டன்யங் குழு என்றும் அறியப்படுவது — தனது பரிந்துரைகளில்

இங்ஙனம் நிலவிவரும் பொறுப்புப் பகிர்வு மேலும் நீடிக்கக் கூடாது என்றும் ரிசர்வு வங்கி நிறுவப்பட வேண்டுமென்றும் அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிட்டிருந்தது.

**மைய வங்கி தேவைப்படக் காரணங்கள்**

இந்திய வங்கியத்துறை செம்மையாக, திடமாக வளர நாட்டிற்கு மையவங்கி யொன்று தேவை என எல்லோரும் ஒப்புக்கொண்டனர். உள் நாட்டிலும் சரி, வெளி நாடுகளிலும் சரி. நம் நாட்டு நாணயமான ரூபாயின் வாங்குந் திறனை (Purchasing power) நிலைப் படுத்த ரிசர்வு வங்கி தேவைப் பட்டது. தேவைக்கேற்ற அளவில் பணப் புழக்கத்தை உள் நாட்டில் ஒழுங்குபடுத்தி, ரூபாயின் உள் நாட்டு மதிப்பைக் காக்க முடியும். நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சரக்கு, பணி ஆகியவற்றை மாற்றித்தரத் தேவைப்படும் அளவிற்குப் பணப் புழக்கமிருப்பின், பணத்தின் மதிப்பு ஒரு நிலையிலிருக்கும். உள் நாட்டுப் பண மதிப்பு நிலையா யுள்ளதைப் பொறுத்துத் தான் ரூபாயின் அயல்நாட்டுப் பண மதிப்பு அமையும். எனவே, தாள் நாணய வெளியீடு, கடன் வழங்கும் கொள்கை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் முழு அதிகாரம் பெற்ற ரிசர்வு வங்கி ஏற்படுத்தப்பட்டால், பண மதிப்பைத் திட நிலை யில் வைத்திருக்க முடியும். மற்றும், அயல் நாட்டுச் செலா வணி, தங்கம் முதலியவற்றை வாங்குவதிலும், தேவைப்படும் போது விற்பதிலும் ஈடுபடுவதன் வழி ரூபாயின் வெளி மதிப் பினையும் காக்கும் பணியை ரிசர்வு வங்கி மேற்கொள்ளலாம்.

நாட்டில் அமைந்திருந்த வங்கியத் துறைக்குத் திட மானதோர் அடிப்படை 1935 வரை இல்லாதிருந்தது. பல வணிக வங்கிகள் தம்மிடமுள்ள காப்பு ரொக்கம் (Cash Reserve) எளிவரல் சொத்துக்கள் (Liquid assets) ஆகியவற்றிற்குச் சற்றும் பொருந்தா மிகப் பெருமளவுக்குக் கடனளிப்பதில் ஈடு பட்டு வந்தனர். வங்கிய நெருக்கடி (Banking crisis) ஏதும் ஏற்பட்டால், ஒவ்வொரு வங்கியும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயன்றதேயன்றிப் பிற வங்கியருக்கு உதவ முன்வர முடியாத நிலையிலிருந்து வந்தது. வங்கிகளின் காப்பு ரொக்கத்தினை மைய வங்கியிடம் வைத்திருந்தால் நெருக்கடி காலங்களில் அது சமய சஞ்சீவியாக பயன்தரும். மற்றும் மைய வங்கியிடம் வணிக வங்கிகளின் காப்பு ரொக்கம் இருக்கின்றது என்ற நினைப்பே மக்களுக்கு வங்கிகள் மீது நம்பிக்கை யுண்டா கும். மற்றும், வணிக வங்கிகளின் காப்பு ரொக்கத்தின் காவலன் என்ற முறையில் ரிசர்வு வங்கி வணிக வங்கியின்

கடன் கொள்கைகளைக் கட்டுப்படுத்த முடியும். காப்பு ரொக்க மனைத்தும் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருப்பதில் பிறிதொரு நன்மையுண்டு. பணம் மிகுதியாயுள்ள இடத்திலிருந்து பற்றுக் குறையாக வுள்ள மற்ற இடத்திற்கு அனுப்புவது எளி தாகும். அவசர நேரத்திலும் நெருக்கடி காலங்களிலும் வணிக வங்கிகள் ரிசர்வு வங்கியிடமிருந்து கடன் பெற வாய்ப்பு இருக்கும். ஐரோப்பிய நாடுகளில், வணிக வங்கிகள் இவ்வளவு தொகையை மைய வங்கியிடம் காப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற சட்டமோ விதியோ கிடையாது. தாமே ஓர் உடன்பாடு செய்து கொண்டு, அதன்படி வணிக வங்கிகள் மைய வங்கியிடம் காப்புத்தொகை வைத்திருக்கின்றன. அமெரிக்காவில், வணிக வங்கிகள் தம்மிடமுள்ள கேட்பு, தவணைப் பொறுப்புக்களில் குறிப்பிட்ட ஒரு விழுக்காட்டள விற்குக் காப்பு ரொக்கம் வைத்திருக்க வேண்டும் என்று சட்டம் விதிக்கின்றது. இதே பாணியில் நம் நாட்டிலும் சட்ட மிருப்பது வங்கிய வளர்ச்சிக்கு உதவும் என்று கருதப்பட்டது.

பணச்சந்தையின் திடமற்ற நிலையை அகற்றி, தொழிலின் தேவைக்கேற்ப, பணம், கடன் வசதி ஆகியவற்றைப் புழங்க விட்டு, பணத்தின் மதிப்பைக் காத்து வர ரிசர்வு வங்கி தேவைப் பட்டது. வணிக வங்கிகளின் நடவடிக்கைகளைக் கண் காணித்துக் கட்டுப்படுத்த ரிசர்வு வங்கி பயன்படும் என்று கருதப்பட்டது. மேலும் முக்கியப் புள்ளி விவரங்களைச் சேகரித்து வெளியிடவும், அரசிற்கு நிதியைச் சார்ந்த செய்திகள் மீது அறி வுரை வழங்கவும், அரசின் வங்கியராகச் செயலாற்றவும் அது பெரிதும் உதவும் என்று உணரப்பட்டது. இந்தியா கிராமங் கள் மிகுந்த நாடாக இருக்கின்ற காரணத்தால், விவசாய நிதி வசதிகளை மேம்படுத்த ரிசர்வு வங்கி உதவும் என்று நம்பப் பட்டது. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் திறமையாகச் செயற்படும் மையவங்கி எங்ஙனம் உதவுக்கூடு மென்பதை வணிக வளர்ச்சி யடைந்த நாடுகளின் மைய வங்கிகள் எடுத்துக் காட்டின. மையமாக்கப்பட்ட வங்கிய அமைப்பு, உலக நிதியரங்கில் உறுதியானதொரு இடத்தைப் பெற எவ்வளவு இன்றியமையாதது என்பதும் நன்கு உணரப் பட்டது. இந்தச் சூழ்நிலையில் ரிசர்வு வங்கியை ஏற்படுத்தச் சட்ட முறை முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின.

**மைய வங்கி அமைக்க முயற்சி**

ஹில்டன் யங் குழுவின் பரிந்துரைகளையொட்டி 1927 ஆம் ஆண்டில் சட்ட மன்றத்தில் ஒரு மசோதா தாக்கல் செய்யப்

பட்டது. வங்கியினுடைய அமைப்பு, நிருவாகக் குழுவின் அமைப்பு ஆகிய செய்திகள் குறித்து உறுப்பினர்களிடையே பெரும் கருத்து வேறுபாடு தோன்றியதால் மசோதா கைவிடப் பட்டது. மீண்டும் 1933ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப் புச் சீர்திருத்தங்கள் பற்றிய அரசு அறிக்கை (White Paper on Indian Constitutional Reforms), அரசியல் ஆதிக்கத்திற்கு உட்படாத ஒரு ரிசர்வு வங்கி நிறுவப்பெற்று, வெற்றியுடன் செயலாற்றி வருவதைப் பொறுத்தே மத்திய ஆட்சிப் பொறுப்பு, பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியருக்கு மாற்றித் தர, இயலும் என்ற ஒரு நிபந்தனையை விதித்தது. இதையொட்டி இந்தியச் சட்ட மன்றத்தில் 1933 செப்டம்பர் திங்களில் புதிய தொரு மசோதா கொண்டு வரப்பட்டது. இது 1934-ல் கவர்னர் ஜெனரலின் ஒப்புதல் பெற்றது. இந்திய ரிசர்வு வங்கி, ஏப்ரல் 1, 1935-ல் செயற்படத் துவங்கியது.

**பங்குநர் வங்கியா அல்லது அரசுடைமை வங்கியா?**

ரிசர்வு வங்கியின் அமைப்பு எவ்வகையி லிருக்க வேண்டு மென்பது குறித்து இரு வகையான கருத்து நிலவிவந்தது. ஒரு சாரார், இவ் வங்கி அரசுடைமை வங்கியாக இருத்தல் அவசியமென்றும், மற்றொரு சாரார் இது பங்குநர் வங்கி (Share-holders Bank) யாக இருக்க வேண்டுமென்றும் பேசி வந்தனர், இது அரசுடைமையாக இருக்க வேண்டுமென்று கருதியவர்கள் காட்டிய காரணங்களைக் காண்போம்:

(i) நாட்டு மக்களின் நலனும் முதலாளி வகுப்பினரைச் சேர்ந்த பெரும்பான்மை இயக்குநர்கள் நலனும் ஒரே தன்மை யதாக அமைவது அரிது. ஆதலின், தனிப்பட்ட பங்குநர் களிடம் வங்கியின் நிருவாகத்தை ஒப்படைப்பது நல்ல தல்ல.

(ii) நாட்டுக்குத் தேவையான தாள் நாணயத்தை வெளி யிட்டும், பொதுப் பணத்தைப் பயன்படுத்தியும் கிடைக்கும் இலாபம் நாட்டின் நலனுக்காகக் கருவூலத்திற்கே வந்து சேர வேண்டும்.

(iii) பெரும் வணிக அமைப்புக்கள், முக்கியமாகத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புக்கள் நம் நாட்டில் அர சுடைமையாகத் திகழ்ந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக, ரெயில் போக்குவரத்து அரசுடைமையாகத் திகழ்ந்து, செம்மை யாகச் செயற்பட்டு வந்தது,

(iv) பங்குநர் வங்கியாக ரிசர்வு வங்கி துவங்கப் பெற்ருல், அது ஐரோப்பிய வணிகரின் ஆதிக்கத்திற்குட்பட்டு, இந்தியரின் நலனைப் புறக்கணிக்கக் கூடும்.

(v) மைய வங்கிகள், பங்குநர் வங்கிகளாகச் செயற்பட்டு வந்த நாடுகளிலும், அவற்றின் ஆளுநர், துணை ஆளுநர் முதலாஞேர் அரசினரால் நியமிக்கப்பட்டு வந்தனர். நடைமுறையில் கொள்கைகள் அனைத்தும் அரசால்தான் உருவாக்கப்பட்டன.

(vi) மைய வங்கியாகத் திகழும் வங்கியின் பணிகளின் தன்மையே அரசின் கட்டுப்பாட்டினை அவசியமாக்குகின்றது.

**பங்குநர் வங்கியாக அமைக்கப்படக் காரணங்கள்**

மேற்கண்ட காரணங்களிலிருந்தும் ரிசர்வு வங்கி துவங்கப் பெற்றபோது, பங்குநர் வங்கியாகவே அமைக்கப்பட்டது. இதற்குக் கீழ்க்காணும் காரணங்கள் கூறப்பட்டன:

(i) உலகிலுள்ள பல்வேறு நாடுகளில் அச் சமயம் நிறுவப் பெற்றிருந்த 28 மைய வங்கிகளில் 22 வங்கிகள் பங்குநர் வங்கிகளாக அமைந்திருந்தன. மற்ற ஆறு வங்கிகளைப் பொறுத்த வரையிலுங்கூட அரசின் தலையீடு வெகு குறைவாகவே யிருந்தது.

(ii) அரசு அல்லது சட்ட மன்றத்தின் ஆதிக்கத்திற்கு உட்படாமல், நல்ல நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் ரிசர்வு வங்கி அதற்கென இயற்றப்பட்ட சட்டப்படி, செயலாற்றி வருவது இன்றியமையாதது. அரசிற்குப் பணம் தேவைப் பட்ட போதெல்லாம் நாணயத்தை அச்சிட்டு வழங்கும் சீர்கேடான நிலையைத் தவிர்க்க ஒரு சிறந்த வழி ரிசர்வு வங்கியை அரசின் ஆணைகட்கு அப்பாற்பட்ட ஒரு ஆணையத்திடம் ஒப்படைப்பது ஒன்றே.

(iii) தாம் முதலீடு செய்துள்ள பணத்தைப் பொறுப்புடன் நிருவாகிக்கும் கடமை பங்குநர்களுக்கு உண்டு. ஆகவே, பங்குநர்கள் நிருவாகத்தைக் கட்டுப் படுத்தும் ஆற்றல் கொண்டவர்கள் என்பது மறுக்கக் கூடாத உண்மையாகும்.

(iv) பெரும்பாலும் இந்தியர்கள் கொண்ட இயக்குநர் குழு, தம் பெரும் பொறுப்பினையுணர்ந்து வங்கியைச் செம்மையாக நடத்துவதில் அக்கறை செலுத்துவர்.

(v) நிருவாகத் துறையினர் மேற்கொள்ள வேண்டிய முக்கியப் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பது போன்ற செயல்களைச் சட்ட மன்றம் தானே ஏற்றுக்கொள்வது முறையற்ற போக்காகும்.

(vi) வங்கியின் பகுதிகளைப் பரவலாக நாடு முழுவதும் அளித்தும், பங்குகள் மீதான வாக்குரிமை மீது வரம்பு ஏற்படுத்தியும், முதலாளிகள் சிலர் பிடியில் வங்கி அகப்பட்டிருக்கும் என்ற நிலை அகற்றப்பட்டது.

(vii) சட்ட மன்ற உறுப்பினர்கள் வங்கியிலும் இயக்குநராக இருந்தால், அவர்களது நேரத்தை இரண்டிற்குமேல் செலவிட இயலாத நிலை ஏற்படும். எனவே, இவற்றில் ஒன்றில் மட்டுமே ஒருவர் இடம் பெறலாம்.

வங்கி துவக்கப்பட்ட போது பங்கு ஒன்றின் மதிப்பு ரூ. 100/- வீதம், ஐந்து இலட்சம் பங்குகள் கொண்ட ரூ. 5 கோடி பங்கு முதல் இருந்தது. மத்திய இயக்குநர் குழுவில் 16 பேர் இடம் பெற்றனர். மத்திய இயக்குநர் குழுவின் பரிந்துரைப்படி மத்திய அரசு ஆளுநர், இரண்டு துணை ஆளுநர் ஆகியோரை நியமிக்கும் சட்டம் குறிப்பிட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறினால் வங்கியின் மத்தியக் குழுவை அரசு மீற உரிமை பெற்றிருந்தது.

முதல் உலகப் போருக்குப் பின் பாங்க் ஆப் இங்கிலாந்து, பாங்க் ஆப் பிரான்சு போன்ற ஐரோப்பிய மைய வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இதையொட்டி ரிசர்வு வங்கியும் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டுமென கூக்குரல் எழுந்தது. பிப்ரவரி 1947–ல் ரிசர்வு வங்கியை நாட்டுடைமையாக்கும் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் 1948-ல் இதற்கான சட்டம் இயற்றப் பெற்று, 1949 ஜனவரி முதல் நாளிலிருந்து ரிசர்வு வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது. பங்கு ஒன்றுக்கு ரூ.118, அணு 10 வீதம் பங்குநரனைவருக்கும் நிறையீடு வழங்கப்பட்டது. பங்குகளனைத்தும் மத்திய அரசின் உடைமையாயின.

## நாட்டுடைமையாக்கப்பட்டது ஏன் ?

ரிசர்வு வங்கி, பெயரளவில் பங்குநர் வங்கியாக இருந்த போதிலும் நடைமுறையில் அரசினர் வங்கியாகவே செயலாற்றி வந்தது. வங்கியின் ஆளுநர், இரு உதவி ஆளுநர்கள், நான்கு மத்தியக்குழு இயக்குநர் ஆகியோரை நியமிக்கும் அதி

காரம் அரசிடமிருந்தது. மைய வங்கிக்கும் அரசிற்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டாலோ, அல்லது பங்குநர் பெரு மளவு இலாப ஈவு பெற்றுக்கொண்டிருந்தாலோ, பங்குநர் வங்கியாகச் செயலாற்றும் மைய வங்கி நாட்டுடைமையாக்கப் படுவது வழக்கம். ரிசர்வு வங்கியைப் பொறுத்தவரையில் இந்த நிலை ஏற்படவே யில்லை. ரிசர்வு வங்கி அரசுடன் ஒத் துழைத்துச் செயற்பட்டது; அதே நேரத்தில் சுதந்தரமான வங்கியாக இருந்த காரணத்தால் அவ்வப்போது அரசுக்கு எச்சரிக்கைகளைச் செய்து வந்தது. மற்றும் நாட்டின் நலனைப் புறக்கணித்து, பங்குநர் நலனைப் பேணியது என்ற ஏச்சுக்கே இடமின்றி ரிசர்வு வங்கி செயலாற்றி வந்தது. பெரும் இலாபம் ஈட்டிய போதிலும் ரிசர்வு வங்கி தனது பங்குநர்களுக்கு $3\frac{1}{2}$ விழுக்காடு இலாப ஈவே பல காலம் அளித்து வந்தது. பின்னர், இது 4 விழுக்காடாக உயர்த்தப் பெற்றது. பங்குநர் களுக்குத் தரப்பட்ட இலாப ஈவு போக மிகுந்திருந்த இலாபத் தொகையனைத்தும் மத்திய அரசின் கருவூலத்திற்குச் சென்றது. நிலைமை இங்ஙனமிருந்தும், ரிசர்வு வங்கி நாட்டுடைமையாக்கப் பெற்றதற்குக் காரணம் நாடு விடுதலை யடைந்தவுடன் நாட் டுடைமைக் கொள்கையை உற்சாகத்துடன் தழுவியதே யாகும் என்று சிலர் நம்புகின்றனர்.

### ரிசர்வு வங்கியின் அமைப்பு

ரிசர்வு வங்கியின் நிருவாகம் மத்திய இயக்குநர் குழுவிடம் அமைந்துள்ளது. மத்திய இயக்குநர் குழுவில் இடம் பெறு வோர்: (i) ஆளுநர் ஒருவரும் நான்குக்கு மேற்படாத உதவி ஆளுநர்களும் [ரிசர்வு பாங்க் ஆப் இந்தியா சட்டம், பிரிவு 8(i) (a)], (ii) நான்கு தலக்குழுக் (Local board)களிலிருந்து தலக் குழுவிற்கு ஒருவராக மத்திய அரசினரால் நியமனம் செய்யப் பட்ட நான்கு இயக்குநர்கள் பிரிவு 8(i) (b), (iii) மத்திய அர சினரால் நியமனம் செய்யப்பட்ட பத்து இயக்குநர்கள் பிரிவு 8(i) (c), (iv) மத்திய அரசினரால் நியமனம் செய்யப்படும் ஓர் அரசு அலுவலர் பிரிவு 8(i) (d), ரிசர்வு வங்கி ஏற்படுத்தப் பட்ட பொழுது உதவி ஆளுநர் ஒருவர் மட்டுமே இருந்தார். நாளடைவில் வங்கியின் பொறுப்புக்கள் மிகுந்து செல்லச் செல்ல, மேலும் மூன்று உதவி ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். 1964 ஜூலை முதல் நான்கு உதவி ஆளுநர்கள் இருந்து வரு கின்றனர். ஆளுநர், உதவி ஆளுநர்கள் நியமனத்தின் போது மத்திய அரசு அவர்களுடைய பதவிக் காலத்தைக் குறிப்பிடும். பதவிக் காலம் ஐந்தாண்டுக்கு மிகாமலிருக்க வேண்டும். இவர்கள் மறு நியமனம் செய்யப்படலாம். பிரிவு

8 (i) (c) படி நியமனம் செய்யப்படும் இயக்குநர்கள் பதவிக் காலம் நான்கு ஆண்டுகளாகும். தலக்குழுவின் வழி இயக்குநராக நியமிக்கப்படுவோரின் பதவிக் காலம் அவர் தலக்குழுவில் உறுப்பினராக இருக்கு மட்டும் நீடிக்கும். ஓய்வு பெறும் இயக்குநர்கள் மறு நியமனம் செய்யப்படலாம். மத்திய இயக்குநர் அவை காலாண்டுக்கு ஒரு முறையேனும், ஆண்டுக்கு ஆறு முறைக்குக் குறையாதும் கூடவேண்டும். மத்திய இயக்குநர் அவை தனது பணிகளில் சிலவற்றைக் குழுவொன்றிற்கு அளிப்படைவு செய்துள்ளது. இக் குழுவினை மத்திய அவைக் குழு என்று குறிப்பிடுவது வழக்கம். இக் குழுவில் இடம் பெறுவோர் ஆளுநர், உதவி ஆளுநர்கள், கூட்டம் நடக்கும் தலத்தில் வசிக்கும் அல்லது தலத்தின் பிரதிநிதியாக இருக்கும் இயக்குநர், மத்திய அரசின் இயக்குநர், கூட்டம் நடைபெறும் இடத்தில் அங்கு இருக்கும் இயக்குநர் ஆகியோர். இக் குழு வாரத்திற்கு ஒரு முறை, புதன்கிழமைகளில் கூடுகின்றது.

இந்தியா நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, சென்னை, பம்பாய், கல்கத்தா, புது டில்லி ஆகிய இடங்களில் ஒவ்வொரு தலக்குழு அமைக்கப் பெற்றுள்ளது. தலக் குழு (Local board) ஒவ்வொன்றிலும் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுடைய பதவிக் காலம் நான்கு ஆண்டுகளாகும். அந்த மண்டலத்திலுள்ள கூட்டுறவு நாட்டு வங்கிகள், பொருளாதார நலன் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு, உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். தலக் குழுவினருக்கு ஆலோசனை கூறும் உரிமை மட்டுமே உண்டு, ஒரு சமயம் தலக் குழுக்களை நீக்கும் யோசனை இருந்தது. லோக் சபை உறுப்பினர்களில் பலர் இந்த யோசனைக்குப் பலத்த எதிர்ப்பு தெரிவித்தபடியால் இதனை அரசு கைவிட்டு விட்டது. 1948ஆம் ஆண்டுச் சட்டம், பொது நலன் கருதி ஆளுநரைக் கலந்தாலோசித்து, தக்க ஆணைகளை வங்கிக்கு வழங்கும் அதிகாரத்தை மத்திய அரசிற்கு அளித்துள்ளது.

**வங்கியின் முக்கியப் பணிகள் நோட்டு வெளியீடு (Note Issue)**

நம் நாட்டுச் செலாவணியில், ஒரு ரூபாய் நோட்டு, நாணயம், பிற துணை நாணயங்கள் நீங்கலாக, எல்லாத் தாள் நாணய வெளியீடும் ரிசர்வு வங்கியின் முழுப் பொறுப்பிற்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டது. வங்கிய வசதிகளும் பழக்கங்களும் பெருமளவு பரவாத நிலையில் நம் நாட்டில் இன்றும் செலாவணியே முக்கியப் பணமெனக் கருதப்பட்டு வருகிறது.

செலாவணியை ஒழுங்காற்றுதல் பண அளிப்பைக் கட்டுப் படுத்துவதற்கு ஒரு முக்கிய அடிப்படையாக அமைகிறது.

ஒரு ரூபாய் நோட்டு, நாணயம், துணை நாணயங்கள், குறிப் பிட்ட அளவுக்கு மட்டும் வெளியிடப்பட்ட மகாத்மா காந்தி நூற்றுண்டு 10 ரூபாய் வெள்ளி நாணயங்கள் ஆகியவை மத்திய அரசால் வெளியிடப்படுவன. ஒரு ரூபாய் நோட்டும் நாணயமும் வரம்பில்லாத சட்ட முறைப் பணமாகும் (Unlimited legal tender). அரை ரூபாய் நாணயங்கள் பத்து ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கும், பிற சிறு நாணயங்கள் ஒரு ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கும் சட்ட முறைப் பணமாகும். ரிசர்வு வங்கிச் சட்டம் பிரிவு 22-ன் படி வங்கி நோட்டுக்களை (Bank notes) வெளியிடும் தனி யுரிமை ரிசர்வு வங்கிக்கு மட்டுமே உண்டு. தற்போது ரிசர்வு வங்கி இரண்டு, ஐந்து, பத்து, இருபது, நூறு, ஆயிரம், ஐயாயிரம். பத்தாயிரம், ரூபாய் நோட்டுக்களை வெளியிட்டு வருகின்றது. சட்டப்படி, மேற் கண்ட அளவு நோட்டுக்கள் மட்டுமல்லாமல் ஐம்பது ரூபாய், ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களையும் ரிசர்வு வங்கி வெளி யிடலாம். ரிசர்வு வங்கி வெளியிடும் நோட்டுக்களனைத்தும் வரம்பில்லாத சட்டமுறைப் பணமாகும்.

ரிசர்வு வங்கிச் சட்டம், நோட்டு வெளியீட்டைச் சார்ந்த செய்திகளைக் கவனித்துக் கொள்ளவும், பொது வங்கியப் பணிகளைச் செய்து வரவும் இரு தனிப் பிரிவுகளை அமைத்துள் ளது. அவை வெளியீட்டுப் பிரிவு, வங்கியப் பிரிவு எனப் பெயர் பெறுகின்றன. வெளியீட்டுப் பிரிவின் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டே, நோட்டு வெளியீடு மேற் கொள்ளப்படுகின்றது. செலாவணியைப் புழக்கத்திற்குக் கொண்டு வருவதும், அதைப் புழக்கத்திலிருந்து எடுத்து விடுவ தும் வங்கியப் பிரிவின் வழி நடைபெறுகிறது. வெளியீட்டுப் பிரிவின் சொத்துக்கள் எனக் குறிக்கப் பெறுவன தங்க நாணயம், தங்கக் கட்டி, அயல் நாட்டுப் பிணையங்கள் (Foreign securities), ரூபாய் நாணயம், இந்திய அரசின் ரூபாய் பிணையங்கள், வங்கி வாங்கிக் கொள்ளும் தகுதி பெற்ற இந்தி யாவில் செலுத்த இருக்கும் மாற்றுச் சீட்டு, ஒப்புறுதிச் சீட்டுகள் ஆகும். சட்டம் முதன் முதலில் இயற்றப்பட்ட பொழுது நோட்டு வெளியீட்டுக்கு அடிப்படையாக வெளியீட்டின் நாற்பது விழுக்காட்டு அளவுக்குக் குறையாமல் தங்க நாணயம், தங்கக் கட்டி, ஸ்டெர்லிங் (பின்னர், அயல் நாட்டு) பிணையங்கள் வைத்திருக்க வேண்டும்; அப்பொழுதும் நாற்பது கோடி

ரூபாய் மதிப்புக்குக் குறையாத தங்க நாணயமும் கட்டிகளும் வைத்திருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிபந்தனை 20 ஆண்டுகளுக்கு மாற்றப்படாமலிருந்தது. பன்னாட்டு தங்கத் திட்டம் அமுலிலிருந்த காலத்து, நோட்டு வெளியீட்டையும் அயல் நாட்டுப் பிணையங்களையும் பிணைத்து வைக்கும் பழங்காலக் கொள்கைக்குப் பொருளிருந்தது. உலகப் போருக்குப் பின், மைய வங்கியச் சட்டங்களில் நோட்டு வெளியீட்டையும், அயல் நாட்டுப் பிணையங்களையும் பிணைக்கும் கொள்கை கைவிடப்பட்டது. அயல் நாட்டுப் பிணையங்களை வைத்திருப்பதன் நோக்கம் பாதக செலுத்து இருப்பு (Unfavourable Balance of Payments) நிலையைச் சமாளிப்பது தான் என்பது உலகெங்கும் ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மையாகும். வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தும் பொழுது, பொருளாதார முன்னேற்றம் எற்படுகிறது. இந் நிலையில் செலாவணிப் பெருக்கம் அவசியமாகிறது. ஆக, நம் நாட்டின் மைய வங்கியான ரிசர்வு வங்கி பெருகி வரும் செலாவணித் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலையிலிருந்தது. இந்தச் சூழ்நிலையில் 1956ஆம் ஆண்டு ரிசர்வு வங்கிச் சட்டம் திருத்தப் பெற்றது. இத் திருத்தத்தின்படி,நோட்டு வெளியீட்டுக்கு அடிப்படையாக அமைந்த பழைய பகுதிக் காப்பு முறை (Proportional reserve system) கைவிடப்பட்டு, அதற்குப் பதில் குறைந்த அளவு காப்பு (Minimum reserve) முறை மேற்கொள்ளப் பட்டது. எந்த நேரத்திலும் அயல் நாட்டுப் பிணையங்கள் ரூ. 400 கோடிக்குக் குறையாமலும், தங்க நாணயம், கட்டி ரூ. 115 கோடிக்குக் குறையாமலும் ரிசர்வு வங்கியால் அயல் நாட்டு இருப்பாக வைத்திருக்கப்பட வேண்டும். மறுபடியும் 1957ஆம் ஆண்டு மேலுமொரு திருத்தம் ரிசர்வு வங்கிச் சட்டத்திற்குச் செய்யப்பட்டது. இத் திருத்தம், தங்க நாணயம், தங்கக் கட்டி, அயல் நாட்டுப் பிணையங்கள் எல்லாம் சேர்த்து ரூ. 200 கோடிக்குக் குறையாமல் ரிசர்வு வங்கி தனது வெளியீட்டுப் பிரிவுச் சொத்துக்களில் ஒரு பகுதியாக வைத்திருக்க வேண்டும் என விதித்தது. இந்த ரூ. 200 கோடியில் ரூ. 115 கோடிக்குக் குறையாது தங்கம் (நாணயமும் கட்டியும்) இருக்க வேண்டும் என்றும் இத் திருத்தம் விதித்தது. எதிர்பாராத சூழ்நிலைகளில், நோட்டு வெளியீட்டுக்கு அடிப்படையாக அயல் நாட்டுச் செலாவணி வைத்திருக்க வேண்டும் என்ற விதியினைத் தளர்த்தி வைக்கும் அதிகாரம் 1957-ல் செய்யப்பட்ட இரண்டாவது சட்டத் திருத்தத்தால் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முன் அனுமதி பெற்று ரிசர்வு வங்கி அயல் நாட்டுப் பிணையங்களைக் காப்பாக வைத்திருப்பதைத் தவிர்க்கவும் கூடும்; ஆனால்,

ரூ. 115 கோடிக்குக் குறையாத மதிப்புத் தங்கம் எப்பொழுதும் வைத்திருப்பது மட்டும் அவசியமாகிறது.

**செலாவணிப் பெட்டகங்கள் (Currency Chests)**

புதிய நாணயங்களையும் மீண்டும் வெளியிடக் கூடிய நாணயங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் அறைகளையே செலாவணிப் பெட்டகங்கள் என்று கூறுகின்றனர். இப் பெட்டகங்கள் நாட்டிலுள்ள முக்கிய ஊர்களில் அமைக்கப் பெற்றுள்ளன. 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியில் 1968 செலாவணிப் பெட்டகங்கள் இயங்கி வந்தன. ரிசர்வு வங்கியின் அலுவலகங்கள், ஸ்டேட் வங்கி, அதன் துணை வங்கிகள் ஆகியவற்றின் அலுவலகங்கள், மேற் கூறிய வங்கிகள் இல்லாவிடத்து அரசின் கருவூலங்கள் (Government treasuries) ஆகிய இடங்களில் செலாவணிப் பெட்டகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேவைக்கு மிகுதியாகப் பணம் இருக்கும் போது, கருவூலமோ அல்லது வங்கி முகமை (Bank Agency)யோ இப் பெட்டகத்தில் அன்றாடம் உபரியாக வுள்ள தொகையைக் கட்டும் தம் வசமுள்ள பணத்தை விட மிகுதியாகப் பணம் தேவைப் படும் நாட்களில் செலாவணிப் பெட்டகத்திலிருந்து பணம் எடுத்துக்கொள்ளலாம். செலா வணிப் பெட்டகங்களின் முக்கியப் பயன்களாவன: பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அடிக்கடி எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் தவிர்க்கப்படுகிறது. செலா வணிப் பெட்டகம் இருக்குமிடங்களில் வங்கிகளும் கருவூலங் களும் சிறு அளவுப் பண இருப்பு வைத்துக்கொண்டு, தம் கடமைகளைச் செய்து வருவது எளிதாகின்றது. ரூபாய் நாண யங்களை நோட்டாக மாற்றிக் கொள்ளவும், பெரு மதிப்புள்ள நோட்டுக்களுக்கு சிறு மதிப்புள்ள நோட்டுக்களை மாற்றிப் பெறவும், பழைய நோட்டுக்களுக்குப் புதிய நோட்டுக்களைப் பெறவும் செலாவணிப் பெட்டகங்கள் உதவுகின்றன. பொது மக்களுக்கும் வங்கிகளுக்கும் அனுப்புகை வசதிகளைச் செய்து தரவும் செலாவணிப் பெட்டகங்கள் அடிப்படையாக அமை கின்றன. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை செலாவணிப் பெட்டகங்களிலுள்ள இருப்பைச் சரி பார்க்கும் பொறுப்பு ரிசர்வு வங்கிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் உண்டு. வங்கியற்ற கருவூலங்களிலும் (Non banking treasuries), துணைக் கருவூலங்களிலும் உள்ள பெட்டகங்களைச் சரி பார்ப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்கிறார். முகமை (Agency), துணை முகமை (Sub-agency) வங்கிகள் நடாத்தி வரும் செலா

வணிப் பெட்டகங்களை ரிசர்வு வங்கி விரும்பிய போது ஆய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

செலாவணிப் பெட்டகங்களில் வைத்திருக்கப்படும் நாணயங்கள், நோட்டுக்களின் அளவு, அது அமைந்துள்ள ஊரின் தேவைகளைப் பொறுத்திருக்கிறது. வெளியீட்டுப் பிரிவிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை செலாவணிப் பெட்டகங்களுக்குப் பணம் அனுப்பப்படும். அடுத்த அரை ஆண்டுக்கு வேண்டியிருக்கும் தொகையை முன் அரை ஆண்டு இறுதியில் ரிசர்வு வங்கிக்கு கருவூலங்களும் வங்கியின் முகமைகளும் தெரிவிக்கும், அதை ஆராய்ந்து,அங்குள்ள கையிருப்பின் அளவினையும் கருத்தில் கொண்டு, தேவைப்படும் தொகைக்கு அனுப்புகை ஏற்பாடுகளை ரிசர்வு வங்கி செய்கிறது

நம் நாட்டில் செலாவணிப் புழக்கத்தின் அளவு பருவத்துக்குப் பருவம் வேறுபடுகின்றது. மிகுதியாகச் செலாவணி தேவைப்படும் சுருசுருப்புப் பருவம் அக்டோபர், நவம்பரில் துவங்கி, ஏப்ரல் இறுதிவரை காணப்படுகின்றது. இத்தேவையை நிறைவு செய்ய, வங்கிகள் தமது கைவசமுள்ள இருப்புத் தொகையை வாடிக்கையாளருக்குக் கொடுக்க வேண்டி வருகிறது. வங்கிகள் ரிசர்வு வங்கியிடமிருக்கும் தமது ரொக்க இருப்பிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளுகின்றனர். சில நேரம் ரிசர்வு வங்கியிடம் கடன் வாங்குவதும் உண்டு. இதனால் ரிசர்வு வங்கியின் வங்கியப் பிரிவிலுள்ள ரொக்கம் குறைந்துவிடுகிறது. ரொக்கத் தொகையைக் குறிப்பிட்ட அளவில் வைத்திருக்க ரிசர்வு வங்கி வங்கியப் பிரிவிலிருந்து வெளியீட்டுப் பிரிவுக்குத் தக்க அளவு அயல் நாட்டுப் பிணையங்கள், ரூபாய் பிணையங்கள் முதலியவற்றை அளித்து, அவற்றிற்கு ஈடாக ரொக்கம் பெறுகின்றது. மந்த காலத்தில் இந்த நிகழ்ச்சித் தலைகீழாக நடைபெறுகின்றது.

**அரசினருக்கு வங்கி**

மத்திய அரசிற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் ரிசர்வு வங்கி வங்கியராகச் செயலாற்றி வருகிறது. இங்ஙனம் செயலாற்றுவது ரிசர்வு வங்கிச் சட்டம் விதிக்கும் கடமையாகும். ரிசர்வு வங்கிக்கும் மத்திய அரசுக்குமிடையே, ரிசர்வு வங்கி எவ்வகையான நிபந்தனைகட்கு உட்பட்டு, மத்திய அரசின் வங்கியாகச் செயலாற்றும் என்பது பற்றி ஓர் உடன்பாடு இருந்து வருகிறது. இப் பணி புரிவதற்காக ரிசர்வு வங்கிக்கு ஊதியமேதும் தரப்படுவதில்லை. ரிசர்வு வங்கி இந்தப் பணியினால் அடை

யும் நன்மை அரசினர் பண இருப்பை வட்டி ஏதும் கொடுக்காமல் அனுபவித்து வருவதேயாகும். மத்திய அரசின் சார்பாகக் கடன் வெளியிடுவதும், கருவூலச் சீட்டு வெளியிடுவதும் ரிசர்வு வங்கி ஏற்றுள்ள முக்கியப் பணிகளாகும். மேற்கண்ட கடன் நிருவாகத்திற்கு ரிசர்வு வங்கி கழிவு பெறும் உரிமை பெற்றுள்ளது.

மத்திய அரசுக்கு வங்கியராகப் பணியாற்றுவது போன்றே ரிசர்வு வங்கி மாநில அரசுகளுக்கும் வங்கியராகப் பணி புரிந்து வருகின்றது. மாநில அரசாங்கங்கள் திரட்டும் கடன்களை நிர்வாகம் செய்வதும் ரிசர்வு வங்கியே. தனது கிளையோ, வங்கியப் பிரிவின் அலுவலகமோ இல்லாத இடங்களில் ரிசர்வு வங்கி,இந்திய ஸ்டேட் வங்கி அல்லது அதன் துணை வங்கியின் கிளையினைத் தனி முகவராக நியமிக்க வேண்டுமெனச் சட்டம் விதித்துள்ளது. இங்ஙனம் நியமனம் பெற்றுள்ள முகமை வங்கிகளும் துணை முகமை வங்கிகளும் அரசினருடைய வங்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கழிவு பெறுகின்றன. இவ் வங்கிகள் ரிசர்வுவங்கியின் அனுப்புகை வசதித்(Remittance Facility) திட்டப்படி, பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளுக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும், பொது மக்களுக்கும் அனுப்புகை வசதிகளைச் செய்து தருகின்றன.

எந்தச் சமயத்தில் கடன் வெளியீட்டை மேற்கொண்டால் வெற்றிகரமாகப் பணந் திரட்ட முடியுமென்று அரசாங்கங்களுக்குத் தக்க ஆலோசனையை ரிசர்வு வங்கி வழங்குகின்றது. மாநில, மத்திய அரசுகளின் கடன் திரட்டும் திட்டத்தை ஒருங்கிணைத்துச் செயற்பட வைக்கும் பொறுப்பு ரிசர்வு வங்கியினதாகும். மத்திய அரசிற்குத் தேவைப்பட்ட பொழுது குறுகிய காலக் கடன் திரட்டும் பொருட்டு ரிசர்வு வங்கி கருவூலச் சீட்டு (Treasury Bills) களை விற்பதும் உண்டு. கருவூலச் சீட்டு 91 நாட்கள் தவணை கொண்டதாக உள்ளது. தம்மிடம் உபரியாகவுள்ள பணத்தை வணிக வங்கிகளும், மாநில அரசாங்கங்களும் கருவூலச் சீட்டுக்களில் முதலீடு செய்கின்றன. கருவூலச் சீட்டுக்களை முன்பெல்லாம் ஏலம் விட்டு விற்பனை செய்தனர். தற்பொழுது ஏலம் விடும் முறை கடைப்பிடிக்கப் படவில்லை. குறிப்பிட்ட விலைக்குப் பொதுமக்களுக்கும் பிறருக்கும் இவை விற்கப்படுகின்றன. மாநில அரசாங்கங்களுக்கும் பிற அனுமதிக்கப் பெற்ற நிறுவனங்களுக்கும் கருவூலச் சீட்டு மறு தள்ளுபடி செய்து அளிக்கப்படுகிறது.

**வழிவகைக் கடன்கள்** (Ways and Means Advances)

மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு, ரிசர்வு வங்கி, மூன்று மாதங்களுக்கு மிகாத வழி வகைக் கடன்களை வழங்கச் சட்டம் அனுமதித்துள்ளது. இந்த ஏற்பாட்டின் கீழ் மாநில அரசாங்கங்கள் இரு வகைக் கடன்களைப் பெறுகின்றனர். ஒன்று, பிணைகளேதுமின்றிக் குறிப்பிட்ட ஓரளவுக்குள்ளாகப் பெறும் கடன்; மற்றது, மத்திய அரசின் பிணைகளின் பேரில் பெறும் கடன். இக்கடன்கள் மீது, வங்கி வீதத்தை விட ஒரு விழுக்காடு குறைவான வட்டி வசூலிக்கப் படுகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக மாநில அரசாங்கங்கள் தமக்கு அளிக்கப்பட்டுள்ள வழி வகைக் கடன் தொகைக்கும் மிகுதியான அளவிற்குப் பணம் எடுத்து வருகின்றனர். இதனால் அனுமதி பெறாத முறையில் மேல்வரைப் பற்று (Overdraft) ஏற்படுகிறது. இது நல்லதொரு பழக்கமன்று. அடிக்கடி மேல்வரைப் பற்று உண்டாக்கும் மாநில அரசினை, ரிசர்வு வங்கி விரைவில் பற்றினைத் தீர்த்துவிடக் கோரி வற்புறுத்தும். இச் செய்தியை மத்திய அரசிற்கும் ரிசர்வு வங்கி தெரிவிக்கும். சில சமயம், மத்திய அரசு, பல்வேறு வகைகளில் மாநில அரசுகளுக்குச் செலுத்தும் தொகைகளில் ஒரு பகுதியாக இந்த மேல்வரைப் பற்றைத் தீர்க்கும் முறையில் ஏற்பாடு செய்வதுண்டு. அனுமதி பெறாது ஏற்பட்ட மேல்வரைப் பற்றைத் தீர்க்க உதவும் வகையில் மத்திய அரசு மாநில அரசுக்கு வழி வகைக் கடன் உதவி யளிப்பதும் உண்டு. அனுமதி பெறாது உண்டாக்கப் பெறும் மேல்வரைப் பற்றின் மீது வங்கி வீத வட்டி வசூலிக்கப் படும்.

**அரசுக்கு அறிவுரை யாற்றல்**

நிதி திரட்டுதல், திட்டமிடுதல் போன்ற பொருளாதாரச் செய்திகள் குறித்தும், வங்கிய, நிதியச் செய்திகள் குறித்தும் ரிசர்வு வங்கி அரசினருக்கு அறிவுரை வழங்கி வருகின்றது. புதுக்கடன் வெளியீடு, விவசாயத் தேவைகளுக்கு நிதி, கூட்டுறவு அமைப்பு, தொழில் வளர்ச்சிக்கு நிதி போன்ற செய்திகள் குறித்தும் வங்கி, கடன் ஏற்பாடு ஆகியவற்றைச் சார்ந்த சட்டங்கள் இயற்றுவது குறித்தும் ரிசர்வு வங்கிக்குச் சிறப்பானதொரு பொறுப்பு உண்டு. பன்னாட்டு நிதியம் குறித்த செய்திகள் குறித்தும் ரிசர்வு வங்கி, அரசுக்குத் தக்க யோசனைகளை அளித்து வருகின்றது. இங்ஙனமான சிறப்புப் பணிகளைச் செவ்வனே செய்துவர ரிசர்வு வங்கி ஆராய்ச்சி புள்ளி விவர அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

**வங்கிகளின் வங்கி (Bankers' Bank)**

நாட்டின் வங்கிய அமைப்பைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் கடனளிப்பு வசதிகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டும் ரிசர்வு வங்கிக்கு வங்கிகளின் வங்கி என்ற நிலை அளிக்கப் பட்டுள்ளது. வணிக வங்கிகளின் கடனளிப்பு வசதி, அவற் றிடம் உள்ள ரொக்கக் காப்பினைப் பொறுத்திருக்கிறது. இந்த ரொக்கக் காப்பின் பெரும்பகுதி, கையிருப்பு ரொக்கமாகவும் ரிசர்வு வங்கியிடம் இருப்பாகவும் வைத்திருக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. கடனளிப்பு வசதிகளை விரிவு படுத்த விரும்பினுல், ரிசர்வு வங்கி, வணிக வங்கிகளிடையே காப்புத் (Reserves) தொகை கூடுதலாக இருக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்; மாருகக் கடன் வசதிகளைக் குறைக்க விரும்பினுல் காப்புத் தொகையினைக் குறைக்கும் முயற்சிகளில் ஈடுபடும்.

வணிக வங்கிகள், வைப்புக்களை இரு வழிகளில் பெறலாம். வாடிக்கையர், பணஞ் செலுத்தியோ அல்லது பிற வங்கிகள் மீது காசோலை விடுத்தோ துவக்கும் வைப்பு ஒரு வகை வைப்பாகும். வாடிக்கையருக்குக் கடன் வசதி யளிக்கும் பொருட்டு அவருடைய கணக்கில் குறிப்பிட்ட ஒரு தொகையினை வரவு வைத்து, அக் கணக்கில் பணம் வந்தது போல் பாவிப்பது மற்ருெரு வகையாகும். இந்த இரண்டாவது வழி உண்டாகும் வைப்பின் விளைவு, பண அளிப்பைக் கூடுதலாக்குவதாகும். இந்த நடவடிக்கை வழி, பண அளிப்பு (Money supply) கூடுதலடைவதனுல் தான், வங்கிகள் பணத்தை உற்பத்தி செய் கின்றன என்று சில சமயம் பேசப்படுகின்றது. நம் நாட்டிலுள்ள மொத்தப் பண அளிப்பில் ஏறத்தாழ நான்கில் மூன்று பகுதி செலாவணியாக இருந்துவந்தது. அண்மைக் காலத்தில் இவ் விகிதம் மாறுபட்டுக் காணப்படுகின்றது. பொதுமக்களிடமுள்ள செலாவணியின் அளவு 60 விழுக்கா டாகவும்,வங்கி வைப்புத் தொகைப் பணத்தின் அளவு 40 விழுக் காடாகவும் கணக்கிடப்பட்டது. வங்கிகள் அளிக்கும் கடன் வசதியில் ஒரு பகுதி மட்டுமே ரொக்கமாக எடுக்கப்படுகின்றது. வைப்புப் பணத்தைவிட, செலாவணி முக்கியமாகக் கருதப்படும் நாடுகளிலே இங்ஙனம் ரொக்கமாக எடுக்கப்படும் பண அளவு அதிகமாக இருப்பது இயல்பு. இக்காரணத்தால், வங்கிகளின் கடனளிப்பு வசதி உண்டாகும் திறன் குறைந்து போகிறது. ரிசர்வு வங்கி, வணிக வங்கிகளின் ரொக்கக் காப்புத் தொகையைக் கட்டுப்படுத்துவதன் வழி, அவை பணத்தை உற்பத்தி செய்வதை ஒழுங்கு படுத்துகிறது. ஆனுல்

பண அளிப்பு (Money supply) முழுதும் ரிசர்வு வங்கியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதன்று. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தையொட்டிய தடவடிக்கைகள் பண அளிப்பைப் பெரிதும் பாதிக்கக் கூடும். மற்றும், பிற நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய நிலையிலும் பண அளிப்பு வேறுபாடுகளுக்கு ஆளாகும். மேற்கண்ட இரு நிலைகளும் ரிசர்வு வங்கியின் பிடிக்கு அப்பாற்பட்டதாகும்.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் (Banking Regulation Act), ரிசர்வு வங்கிச் சட்டம் ஆகிய இரு சட்டங்களிலும் ரிசர்வு வங்கிக்கு, வணிக வங்கிகளின் கடனளிப்பு முறையை ஒழுங்கு படுத்துதற்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுவாக, கடனளிப்பு அளவைக் கட்டுப்படுத்த, ரிசர்வு வங்கி, வங்கி வீதம் (Bank rate), வெளிச் சந்தை நட வடிக்கைகள் (Open market operations), மாற்றற்குரிய காப்புத் (Variable reserve) தேவைகள் ஆகிய கருவிகளைப் பயன் படுத்துகின்றது. வெளிச் சந்தை நடவடிக்கைகளும், மாற்றற் குரிய காப்புத் தேவைகளும் வங்கிகளின் காப்பு அடிப்படையை நேரடியாகப் பாதிக்கின்றன. வங்கி வீதத்தால் ஏற்படும் விளைவு மறைமுகமானது.

**வங்கி வீதம்** (Bank Rate)

ரிசர்வு வங்கிச் சட்டம், மாற்றுச் சீட்டுக்களை வாங்க அல்லது மறு தள்ளுபடி செய்து தர அல்லது இச் சட்டப்படி வேறு வணிகச் சீட்டு (Commercial paper) களை வாங்க ரிசர்வு வங்கி கடைபிடிக்கும் வீதமே வங்கி வீதம் என்று பேசுகிறது. முன் அத்தியாயங்களில் கண்டவாறு, நம் நாட்டில் சீட்டுச் சந்தை (Bill market) இயங்கி வராத நிலையில் வங்கி வீதத்தின் ஆட்சி வலுவற்று உள்ளது. வணிக வங்கிகள், அரசாங்கம் போன்றவைகட்கு ரிசர்வு வங்கி அளிக்கும் கடன்கள் மீது விதிக்கும் வட்டி வீதமே இன்று வங்கி வீதம் என்ற நிலையில் இருந்து வருகின்றது. வங்கி வீதம், கடனளிப்பு வசதியின் அளவை மட்டுமன்றி, கடனளிப்பு வசதி பெற ஆகும் செலவினையும் பாதிக்கிறது. வணிக வங்கிகள் எந்த எந்த முறைகளில் ரிசர்வு வங்கியிடம் கடன் பெறலாம், கடன் தவணைக் காலம் எவ்வளவு என்பது பற்றிய விதிகள் ரிசர்வு வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ரிசர்வு வங்கிச் சட்டம், பிரிவு 17, ரிசர்வு வங்கி அளிக்கக்கூடிய கடன் வசதிகளை விளக்குகிறது. பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கி (Scheduled bank) கள் மட்டுமே இவ் வசதிகளைப் பெறும் தகுதி

கொண்டன. பொதுவாக, 90 நாட்களுக்கு மிகாத தவணை கொண்ட வணிக மாற்றுச் சீட்டுக்களை ரிசர்வு வங்கி மறு தள்ளு படி (Re-discount) செய்து தரலாம். விவசாய நடவடிக்கைகளை யொட்டிய மாற்றுச் சீட்டுகளுக்குத் தவணை 15 மாதங்களாகவும், ஏற்றுமதி மாற்றுச் சீட்டுக்களுக்குத் தவணை 180 நாட்களாகவும் இருக்கலாம். இந்த மறு தள்ளுபடி வசதி பெரும் வகையில் பயன்படுத்தப் படவில்லை. இதற்குக் காரணம் நம் நாட்டில் செம்மையான தொரு மாற்றுச் சீட்டுச் சந்தை இல்லாதது தான். எனவே, சிலவகைப் பிணைகள் மீது ரிசர்வு வங்கி வணிக வங்கிகளுக்கு கடனளித்து வர வகை செய்யப் பட்டுள்ளது. நடைமுறையில், பொறுப்புரிமையர் பிணையங் கள் (Trustee securities), அதிலும் குறிப்பாக மத்திய அரசினர் பிணையங்கள் மீது பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் கடன் பெறுகின்றன. சரக்குரிமைப் பத்திரங்களை அடிப் படையாகக் கொண்டு எழுதப்பெற்ற கடனுறுதிச் சீட்டின் பேரில் ரிசர்வு வங்கி கடன் தரலாமெனினும், தக்க பண்டக வசதிகள் இல்லாத காரணத்தால் இவ்வகையாகக் கடன் அதிகம் வழங்கப்படவில்லை.

ரிசர்வு வங்கி நிறுவப் பெற்றதிலிருந்து பல ஆண்டுகளுக்கு வணிக வங்கிகள் அதனிடம் கடன்கள் மிகுதியாகப் பெற வில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு. பல காலமாக வங்கிகள் ரிசர்வுவங்கியை அணுகிக் கடன் பெறத் தயக்கம் காட்டி வந்தன. மற்றும் ரிசர்வு வங்கி நிறுவப் பெற்ற பொழுதும் அதற்குப் பின்னர் இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற பொழுதும் பணம் எளிதாகக் கிடைத்து வந்தது. உலகப் போருக்குப் பின், கடனளிப்பு வசதிகள் அதிகம் தேவைப் பட்ட போது, வங்கிகள் ரிசர்வு வங்கியிடமிருந்து கடன் அல்லது மறு தள்ளுபடி வசதி கோராமல், தம்மிடமுள்ள பிணையங்களை விற்று, நிலைமையைச் சமாளித்து வந்தன. 1951-ல் ரிசர்வு வங்கி அரசினர் பிணையங்களை வாங்கிக் கொள்ள மாட்டாது என்ற பொதுக் கொள்கையை அறிவித்த பின்னர் இந் நிலை மாறி, வங்கிகள் ரிசர்வு வங்கியிடமிருந்து கடன் கோருவது மிகுந்துள்ளது.

**வங்கி வித மாற்றங்களின் விளைவு**

இந்தக் கட்டத்தில் வங்கி வீத மாற்றங்களால் ஏற்படக் கூடிய விளைவுகளைக் காண்போம். பணச் சந்தையில் நிலவும் குறுகிய கால, நீண்ட கால வட்டி வீதங்களுக்கும் வங்கி வீதத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. பிற வட்டி வீதங்

களுக்கு ஒரு வழிகாட்டியாக வங்கி வீதம் அமைகிறது. வங்கி வீதம் உயர்த்தப்பட்டால், அதையொட்டிப் பிற வட்டி வீதங்களும் உயர்த்தப்பட்டு, அதன் காரணமாகக் கடன் கோருதல் குறையும். இதனுல் கடனளிப்புக் குறைந்து, வணிக நடவடிக்கைகள் சுருங்கி, பண வீக்கம் கட்டுப்படுத்தப்படும். மாருக, வங்கி வீதம் குறைக்கப்பட்டால், பிற வட்டி வீதங்களும் குறைந்து போகும். வட்டி வீதம் குறைந்துள்ள நிலையில் வணிகர் பெருமளவு தொகை கடன் வாங்க முற்படுவர். இதனுல் வணிக நடவடிக்கைகள் சுருசுருப்பாக விரிவடைந்து உற்பத்திப் பெருக்கத்திற்கு அடிகோலும். ரிசர்வு வங்கி நிறுவப் பெற்ற காலத்து, வங்கி வீதம் $3\frac{1}{2}$ விழுக்காடாக இருந்தது. நவம்பர் 1935-ல் இது 3 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. பிறகு 1951 நவம்பரில் $3\frac{1}{2}$ விழுக்காடாகவும், 1957 மே திங்களில் 4 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டது. பின்னர் வங்கி வீதம் பல முறை உயர்த்தவும் குறைக்கவும் பெற்று, தற்போது (செப்டம்பர் 1972) 6 விழுக்காடாக இருந்து வருகிறது.

வங்கி வீதத்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை யொட்டிப் பணச் சந்தை வீதங்களும் மாறி வருவதை 1951-லிருந்து நம் நாட்டில் காண்கிருேம். சிறப்பாக, வணிக வங்கிகளின் கடனளிப்பு வீதம் வங்கி வீதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. பல்வகை வைப்புக்கள் மீது வணிக வங்கிகள் அளிக்கக் கூடிய உயர்ந்த அளவு வட்டி விகிதத்தை ரிசர்வு வங்கி நிருணயித்துள்ளது. வங்கிகளிடையே தரமற்ற போட்டி நிலவாது இருக்க இந்த ஏற்பாடு பயன் படுகிறது.

பொருளாதார வளர்ச்சி குறைவாக வுள்ள நாடுகளில் வங்கி வீதம் அவ்வளவு பயன் நல்கும் கருவியாக அமைவதில்லே. இதற்கு முக்கியக் காரணம் இந் நாடுகளிலுள்ள பணச் சந்தை ஒழுங்கமைதி யற்று இருப்பதே யாகும். நன்கு அமைக்கப் பெற்ற சீட்டுச் சந்தை இல்லாமையும் இதற்கு மற்ருெரு காரணமாகும். இந்தியாவைப் பொறுத்த வரையில், வங்கி வீதம், வணிக வங்கிகள் கடன் பெறும் வட்டி வீதமென்ற நிலேயில் இருந்து வருகிறது. இங்கிலாந்து போன்ற நாடுகளில் வங்கி வீதம் ஒரு தண்டனே வீதம் (Penal rate) என்று கருதப்பட்டு வருகிறது. அதாவது, வணிக வங்கிகள், மைய வங்கியிடம் கடன் வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற இக்கட்டான நிலே ஏற்படும் பொழுது, மைய வங்கி விதித்துள்ள வட்டி வீதத்

திற்குக் கடன் பெறுவது—கடுமையான வட்டி விதமாக இருப்பினும், வங்கி வீதத்திற்குக் கடன் பெறுவது—தண்டமாகக் கருதப்பட்டது.

வங்கி வீதத்தை உயர்த்துவது சரியான கொள்கையாகாது என்று குறை கூறப்பட்டு வருகிறது. இதனால், அரசாங்கம் கடன் வாங்குவது குறித்த செலவு மிகுதியாகிறது—அதாவது மிகுதியான வட்டி வீதம் கடன் மீது வழங்க வேண்டியுள்ளது. நன் மதிப்புள்ள பிணையங்களின் பண மதிப்புக் குறைந்து போகின்றது. வட்டி வீதம் உயர்த்தப்படும் பொழுது, பங்குகள், கடன் பத்திரங்களின் மதிப்புக் குறைந்து போகின்றன. இவற்றையெல்லாம் விட, நுகர்ச்சிப் பண்டங்களின் விலைவாசி ஏறிவிடுகின்றது. பண்டங்களை உற்பத்தி செய்வோர், கச்சாப் பொருள் வாங்குவது போன்ற செலவினங்களுக்குக் கடன் வாங்குகையில், உயர்ந்த வட்டி கொடுக்க வேண்டியிருக்கின்றது. இந்தச் சுமையை ஈடுகட்ட, உற்பத்தியாளர்கள் உற்பத்திப் பண்டங்களின் விலையை உயர்த்துகின்றனர். நுகர்வோர் பண்டங்களுக்கு மிகுதியான விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது.

நன்கு வளர்ந்துள்ள நாடுகளில் கூட அண்மைக்காலங்களில் வங்கி வீதம் ஒரு பயன் தரும் முக்கியக் கருவியாகக் கருதப்படுவது குறைந்து வருகிறது. இதற்குப் பல காரணங்களுண்டு. பெரிய கம்பெனிகள் தமக்குத் தேவைப் படும் நிதி வசதிகளுக்கு வங்கிகளை மட்டும் நம்பி யிருக்கவில்லை. அரசுத் துறையில் பெருந் தொழில்கள் நடைபெற்று வருகின்றன. அவை கடன் கோரும் பொழுது வட்டி வீதத்தைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. இக் காரணங்கள் ஒரு புறமிருக்க, வணிகச் சீட்டுக் (Commercial bills) களின் முக்கியத்துவம் கடந்த சில காலமாகக் குறைந்து வந்துள்ளது.

நம் நாட்டில் நிலவி வரும் பொருளாதாரச் சூழ்நிலையில் வங்கி வீதக் கொள்கை பயன் தருவதாக உள்ளது என்று தெளிவாகவும் உறுதியாகவும் கூற இயலவில்லை. பெருமளவுக்குப் பொதுத் துறையில் முதலீடு இருப்பதும், தனியார் துறை முதலீடு பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கக் கூடும். இருப்பினும், வங்கி வீதத்தை உயர்த்துவதன் வழி, வங்கிகள் அளிக்கும் கடன் வசதிகள் குறைக்கப்படுகின்றன என்பது எவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய உண்மையாகும். மற்றும், வங்கி வீத

மாற்றம் வணிக உலகில் பரபரப்பான மன நிலையை ஏற்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

**மாற்றத்துக்குரிய காப்பு விகிதம்** (Variable Reserve Ratio)

ரிசர்வு வங்கிச் சட்டத்தின் படி பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளனைத்தும் தமது கேட்பு, தவணைப் பொறுப்புக்களில் குறிப்பிட்ட ஒரு விகிதத்தை ரிசர்வு வங்கியிடம் வைத்திருக்க வேண்டும். தற்சமயம் அமுலில் உள்ள சட்ட விதிகளின் படி, பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள ஒவ்வொரு வங்கியும் தனது மொத்தக் கேட்பு, தவணை வைப்புத் தொகையில் மூன்று சத விகித அளவுக்குக் குறையாத தொகையை ரிசர்வு வங்கியுடன் காப்பாக வைத்திருக்க வேண்டும். இந்த விகிதத்தை மூன்றிலிருந்து பதினைந்து வரை உயர்த்தும் அதிகாரம் ரிசர்வு வங்கிக்கு உண்டு. வங்கிகள் மிகப் பெருமளவுக்கு புதிய வைப்புக்களைச் சேகரிப்பதால் ஏற்படக்கூடிய நிலை குலைவைச் சரிப்படுத்த இந்த அதிகாரம் உதவுகிறது. சட்டம் விதித்துள்ள விகிதத்திற்கு மேல் வைத்திருக்கப்படும் ரொக்கக் காப்புத் தொகை மீது ரிசர்வு வங்கி வட்டி வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

வணிக வங்கிகளின் எளிவரல் ரொக்க நிலை திடமானதாக இருக்கச் சட்டம் ஏற்பாடு செய்துள்ளது. அதாவது, ரொக்கக் காப்பு விகிதத்துடன் கூட வணிக வங்கிகள் தமது கேட்பு, தவணைப் பொறுப்புக்களில் 25 விழுக்காட்டிற்குக் குறையாத அளவிற்கு எளிவரல் சொத்துக்கள் வைத்திருக்க வேண்டும். ரொக்கம், தங்கம், வில்லங்கமில்லாத அனுமதிக்கப் பெற்ற பிணையங்கள் ஆகியவை எளிவரல் சொத்துக்கள் (Liquid assets) என்று கூறப்படுகின்றன.

**வேறுபடும் வட்டி விகிதத் திட்டம்** (System of Differential Rates)

வங்கி விதத்தை உயர்த்தி, அதன் வழி வணிக வங்கிகள் கடன் கோருவதைக் கட்டுப்படுத்துவதை விட்டு, வேறு வழிகளில் இதே விளைவினைப் பெற ரிசர்வு வங்கி முயற்சி செய்தது. அவற்றில் ஒன்று வேறுபடும் வட்டி விகிதத் திட்டமாகும். இத்திட்டப்படி, குறிப்பிட்ட ஒரு வரம்பு வரை வணிக வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் வங்கி வீதத்திற்குக் கடன் பெறலாம். வரம்புக்கு மேல் கோரும் கடன் தொகைக்கு வங்கி வீதத்திற்கும் அதிகமான வட்டி வசூலிக்கப் படும். இந்தத் திட்டம் எதிர் நோக்கிய அளவுக்குப் பலன் தரவில்லை என்று கருதப்பட்டது. இத் திட்டம், பல வங்கிகள் பல்வேறு விதங்களில் தம்

சொத்துக்களை முதலீடு செய்துள்ள முறையைக் கருத்தில் கொள்ளவில்லை. மேலும், வட்டி வித உயர்வால் ஏற்படும் கூடுதல் செலவை வங்கிகள் தமது வாடிக்கையாளரிடமிருந்து உயர்ந்த வட்டி வசூலிப்பதன் மூலம் சரிக்கட்டிக் கொள்ளும் வாய்ப்பிருந்தது.

**நிகர எளிவரல் விகிதத் திட்டம்** (Net Liquidity Ratio System)

இத் திட்டத்தின்படி. ஒவ்வொரு வங்கியும் குறிப்பிட்ட குறைந்த அளவு நிகர எளிவரல் விகிதத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். தற்பொழுது குறைந்த அளவு நிகர எளிவரல் விகிதம் 32 விழுக்காடாக இருந்து வருகிறது. அதாவது, சட்ட முறையான எளிவரல் விகிதத்திலிருந்து ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி, தொழில் வளர்ச்சி வங்கி ஆகிய நிலையங்களிலிருந்து வாங்கியுள்ள கடன் தொகையைக் கழித்தால், எஞ்சி நிற்கும் தொகை வங்கியின் கேட்பு, தவணைப் பொறுப்புக்களின் 23 விழுக்காட்டிற்குக் குறையலாகாது என்பதாகும். நிகர எளிவரல் விகிதம் இந்த விழுக்காட்டளவிற்குக் கீழ்ச் செல்லும் நிலையில், வங்கி ரிசர்வு வங்கியிடம் கோரும் கடனுக்கு வங்கி வீதத்தை விட உயர்ந்த வட்டி செலுத்த வேண்டும். நிகர எளிவரல் விகிதம் எந்த விழுக்காட்டு அளவிற்குக் குறைகிறதோ, அந்த அளவிற்குக் கடன் மீது அதிக வட்டி விதிக்கப் படும்.

**வெளிச் சந்தை நடவடிக்கைகள்** (Open Market Operations)

அயல் நாட்டுச் செலாவணி, தங்கம், அரசினர் பிணையங்கள் போன்ற சொத்துக்களை ஒரு நாட்டின் மைய வங்கி வாங்கல், விற்றலில் ஈடுபடுவதை வெளிச் சந்தை நடவடிக்கைகள் என்று குறிப்பிடுவது வழக்கம். இக் காலத்தில் மைய வங்கிகள் பெரும் பாலும் அரசினர் பிணையங்களை மட்டுமே வாங்கும், விற்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

இந்தியாவில் அரசினர் பிணையங்களுக்குள்ள சந்தை சிறிய அளவினதாகவே உள்ளது. வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், காப்பீட்டுக் கூட்டுருக்கள் (Insurance Companies) ஆகிய நிலையங்களே பெரும்பான்மையளவு அரசினர் பிணையங்களைக் கொண்டுள்ளன. தம்மிடம் உபரித் தொகை இருக்கும் போது வணிக வங்கிகள் அரசினர் பிணையங்களைத் தாராளமாக வாங்கலாம். ஆனால், இப் பிணையங்களை விற்கும்போது தம்முடைய எளிவரலாய விகிதம் (Liquidity ratio) குறைந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையில் வணிக

வங்கிகள் உள்ளன. காப்பீட்டு நிலையங்களும், சேம நிதி (Provident fund) நிலையங்களும் தமது பணத்தை அரசினர் பிணையங்களில் முதலீடு செய்கின்றன அல்லது குறுகிய தவணைப் பிணையங்களை நீண்ட காலத் தவணைப் பிணையங்களாக மாற்றிக் கொள்கின்றன. ஆகவே, இச் சந்தையில் பெருமளவு நடவடிக்கைகள் இல்லாத நிலையை நம் நாட்டில் காண்கிறோம்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கருவூலச் சீட்டுக்களைச் சார்ந்த நடவடிக்கைகளே வெளிச் சந்தை நடவடிக்கைகளில் பெரும் பகுதியாக அமைகின்றன. சீட்டுச் சந்தை செவ்வையாக அமையாத காரணத்தால், நம் நாட்டில் வெளிச் சந்தை நடவடிக்கை அரசினர் பிணையங்களில் மட்டுமே இருந்து வருகிறது. அரசினர் பிணையச் சந்தையில் ஒழுங்கானதொரு நிலைமை நிலவும் பொருட்டும், அரசினர் கடன் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது அவர்களுக்கு உதவும் பொருட்டும் ரிசர்வு வங்கி வெளிச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இந் நடவடிக்கைகள் மூலம், தவணை முதிர்வடையும் பக்குவத்திலுள்ள பிணையங்களை மீட்க வசதியாக அவற்றை வாங்கிக் கொள்ளவும், பல்வேறு தவணைகளுள்ள பிணையங்களைக் கோருவோருக்கு அளித்துச் சந்தையை விரிவு படுத்திக்கொள்ளவும் ரிசர்வு வங்கியால் முடிகிறது. ரிசர்வு வங்கி அரசினருக்கு வங்கியராகச் செயலாற்றுவதால், அரசினர் கடன் வாங்குதல், கடன் திருப்பியளித்தல் போன்ற நடவடிக்கைகள் செம்மையாக நடைபெறுதற்கு வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவது அதன் கடமையாகிறது. பணச் சந்தையும் மூலதனச் சந்தையும் உள்ள நிலையினை ஆராய்ந்து, அதற்கிசைந்தவாறு அரசினரின் கடன் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதும் ரிசர்வு வங்கியின் கடமையாகும். வங்கிகளுக்குத் தேவைப்படும் பருவ கால நிதியினை அளிப்பதும் ரிசர்வு வங்கியே யாகும். மந்த காலத்தில் வங்கிகள் தம்மிடமுள்ள உபரி நிதியினை அரசினர் பிணையத்தில் முதலீடு செய்கின்றன. நிதி வசதி தேவைப்படும் சுருசுருப்பான பருவத்தில் இப்பிணைகளை விற்றோ அல்லது இவற்றை ஈடாக வைத்துக் கடன் பெற்றோ தம் தேவைகளை நிறைவு செய்துகொள்ளுகின்றன. கடந்த சில ஆண்டுகளில் ரிசர்வு வங்கி அரசினர் பிணையங்களைப் பொதுமக்களுக்கு விற்பதுமிகுந்தும், அவர்களிடமிருந்து வாங்குவது குறைந்தும் காணப்படுகின்றது. தவணை முடியும் ஒரு கடன் பத்திரத்தை வாங்கும் அதே நேரத்தில் புதியதொரு கடன் பத்திரத்தை

விற்பது போன்ற மீட்டல் நடவடிக்கை (Switch operations) களைப் பெருமளவுக்கு ரிசர்வு வங்கி மேற்கொண்டுள்ளது.

**கடனளிப்புக் கட்டுப்பாடு**

வங்கி வீதம், மாற்றற்குரிய காப்பு விகிதம், வேறுபாட்டிற்குரிய வட்டி விகிதத் திட்டம், வெளிச் சந்தை நடவடிக்கைகள் ஆகிய பொது அல்லது அளவு குறித்துக் கடனளிப்பு வசதிக் கட்டுப்பாட்டுக் கருவிகள் எனப் பெயர் பெறுகின்றன. குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அல்லது குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குக் கடனளிப்பு வசதிகளைக் கட்டுப்படுத்துவதை, தன்மை குறித்து அல்லது தேர்ந்தெடுத்த கடனளிப்புக் கட்டுப்பாடு (Selective or qualitative credit control) என்று கூறுவர்.

நடைமுறையில், பொதுக் கடனளிப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் கூட, தேர்ந்தெடுத்த கடனளிப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதே நல்ல பலனையளிக்கின்றது என்று அனுபவ வாயிலாக ஒப்புக்கொள்ளப்படுகின்றது. மேலை நாடுகளில் பங்குச் சந்தைக்கு அளிக்கப்படும் கடன் வசதிகளை ஒழுங்காற்றவும், பண வீக்க நிலையினைக் கட்டுப்படுத்தவும் தேர்ந்தெடுத்த கடனளிப்புக் கட்டுப்பாடு பயன் படுத்தப்படுகின்றது. நம் நாட்டில் முக்கியக் கச்சாப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் முடக்கிப் பற்றுக் குறை நிலையை உருவாக்கி, அவற்றின் விலையை உயர்த்தி வருவதைத் தவிர்க்க. இக் கட்டுப்பாட்டு முறை பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பிட்ட தொழில்களை மட்டும் இக் கட்டுப்பாட்டின் வழி ஒழுங்காற்றுவதால் பிற தொழில்கள் இதனல் பாதிக்கப்படுவதில்லை. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் 21ஆம் பிரிவு வணிக வங்கிகள் கொடுக்கும் கடன் வசதிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ரிசர்வு வங்கிக்கு அளித்துள்ளது. உணவுத் தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பஞ்சு, தாவர எண்ணெய் போன்ற சில பொருள்கள் பற்றுக்குறை இருக்குங் காலங்களில் அவற்றின் மீது தரப்படும் கடன் வசதிகளைத் தேர்ந்தெடுத்த கடனளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை வழி ரிசர்வு வங்கி ஒழுங்காற்றி வருவதை நாம் அறிவோம். இந்த வகைக் கட்டுப்பாடு மூன்று வழிகளில் செயற்படுத்தப்படலாம். குறிப்பிட்ட பிணையத்தின்மீது குறைந்தது இவ்வளவு இடைவெளி (Margin) வைத்துக்கொண்டுதான் கடன் வழங்கலாம் என்பது ஒரு வழி. குறித்த நோக்கங்களுக்கு இந்த அளவுக்கு மேல் கடனளிக்கக்கூடாது என்று உத்தரவிடுவது மற்றொரு

வழி. மூன்றும் வழி, குறித்த சில வகைக் கடன்கள்மீது உயர்ந்த வட்டி விதிப்பதாகும். நம் நாட்டில் இம் மூன்று வழிகளிலும் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 1965-ல் கடன் வசதி அனுமதித் திட்டம் (Credit Authorisation Scheme) என்ற புதியதொரு கடன் கட்டுப் பாட்டுத் திட்டத்தை ரிசர்வு வங்கி கொண்டு வந்தது. இப் புதிய திட்டத்தின்படி எந்த ஒரு நபருக்கும் ஒரு கோடி ரூபாய் அல்லது அதற்குமேல் எந்தப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கியும் கடன் தருமுன் ரிசர்வு வங்கியிடம் முன் அனுமதி பெற வேண்டும். சில குறிப்பிட்ட வகைக் கடன் வசதிகளுக்கு மட்டும் இவ் விதியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. ஜனவரி 1970 முதல் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ரிசர்வு வங்கியின் முன் அனுமதி பெற்றே சில வகைக் கடன் வசதிகளை அளிக்கலாம் என்று ஆணை யிடப்பட்டது.

மேற்கண்ட முறைகளில் கடன் வசதிக் கட்டுப்பாட்டினை மேற்கொள்வதுடன், ரிசர்வு வங்கி, அறிவுரைகளை அவ் வப்போது வழங்கியும், வணிக வங்கிகளின் கடனளிப்பினைக் கட்டுப்படுத்துகிறது. வணிக வங்கிகளுடன் அடிக்கடி கலந் துரையாடி, ரிசர்வு வங்கி, அவற்றுடன் நல்லதோர் உறவினை உருவாக்கி, பொருளாதார நிலைக்கேற்றவாறு அவற்றின் கட னளிப்புக் கொள்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கும். இதனை மனந் தொடு வேண்டு கோள் (Moral suasion) என்று குறிப்பிடுவது வழக்கம்.

இந்தியா பொருளாதாரத் துறையில் வளர்ச்சியுற்று வரும் நாடுகளில் ஒன்றாகும். பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்குப் பணமும் கடன் வசதிகளும் பெருமளவுக்குத் தேவைப்படு கின்றன. ஆனல், நம் வசமுள்ள பண வசதி அளவாகவே யுள்ளது. எனவே, உள்ள பண வசதியினை மிகவும் முக்கிய மான, உற்பத்திப் பெருக்கம் தரக்கூடிய துறைகளுக்கு அளிப் பது இன்றியமையாததாகிறது. அப்படி யிருந்தும், பெரும் பயன் அளிக்கக்கூடிய துறைகள் அனைத்திற்கும் தேவைப்படும் பண வசதிகளைச் செய்து தருவதும் எளிதான செய்தியாக இல்லை. இந்த இக்கட்டானதொரு நிலைமையை ஓரளவுக்குச் சமாளிக்க ரிசர்வு வங்கி கடன் வசதித் திட்டம் (Credit Planning) ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்தது. எந்தெந்தத் துறை களுக்குக் கடன் வசதிகள் அளிப்பதில் முதன்மையிடம் தர வேண்டும் என்று ஆராய்ந்து, அறிவுரை கூற, நாட்டுக் கடன் வசதிக் குழு (National Credit Council) என்ற ஓர் உயர்மட்ட

அமைப்பு பெப்ரவரி 1968-ல் ஏற்படுத்தப்பட்டது. வங்கிகளின் மீதான சமூகக் கட்டுப்பாடு (Social Control) செம்மையாகச் செயற்படுவதற்குப் பல முட்டுக்கட்டைகள் இருந்து வந்தபடியால், ரிசர்வு வங்கிக்குப் பல அதிகாரங்களிருந்தும், திட்டம் சரிவரச் செயற்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் 1969 ஜூலை 19ஆம் நாள் பதினான்கு பெரு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இதனால் வங்கி வைப்புக்களில் 85 விழுக்காடு அரசினரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

### முந்துமைத் துறைகளுக்குக் கடனளிப்பு (Financing Priority Sectors)

வணிக வங்கிகள் பெரும்பாலும் வியாபாரத்திற்கும், வணிகத்திற்கும், தொழில்களுக்கும் மட்டுமே கடன் வசதிகள் அளித்து வருகின்றன. வேளாண்மை, சிற்றளவுத் தொழில், ஏற்றுமதி போன்ற துறைகளின் வளர்ச்சியில் போதுமான ஈடுபாடு காட்டவில்லை என்ற குற்றச்சாட்டுப் பல காலமாக இருந்து வந்தது. இந் நிலையை மாற்ற ரிசர்வு வங்கி பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஏற்றுமதியாளர்களுக்குத் தாராளமாகக் கடன் வசதிகளை யளிக்கும் பொருட்டு, 1958-ல் மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டத்தில் ஏற்றுமதிச் சீட்டு (Export Bill) களுக்கும் இடமளித்தது. இந்த வசதியினை வணிக வங்கிகள் பயன்படுத்திக்கொள்ள முடியாது போயிற்று. ஏனெனில், இந்திய ஏற்றுமதியர் அயல் நாட்டவர் மீது எழுதிய மாற்றுச் சீட்டுக்களை அவர்கள் ஏற்கும் பொருட்டும், பின்னர் பணஞ் செலுத்தக் கோரும் பொருட்டும் வெளி நாடுகளுக்கு அனுப்ப வேண்டி யிருந்தது. ஆகவே, ஏற்றுமதியர் தவணைச் சீட்டுக் (Usance Bill) களை எழுதி, மாற்றுச் சீட்டுச் சந்தையில் இடம் பெற வாய்ப்பு ஏற்படவில்லை. இக் குறையை நீக்க ரிசர்வு வங்கிச் சட்டம் 1962-ல் திருத்தப்பெற்றது. இத் திருத்தத்தின் படி, பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் கோரியவுடன் தரப்படும் அல்லது 180 நாட்களுக்கு மிகாத தவணையுள்ள கடனுறுதிச் சீட்டுக்களை எழுதிக் கொடுத்து, அவற்றின் மீது ரிசர்வு வங்கியிடம் கடன் பெறலாம். கடனளவுக்குக் குறையாத தொகைக்குத் தக்க ஏற்றுமதிச் சீட்டுக்கள் தங்கள் வசமுள்ளன என்ற உறுதிக் கூற்றினையும் கடன் கோரும் வங்கிகள் எழுதித் தர வேண்டும்.

ஏற்றுமதி, வேளாண்மை, சிற்றளவுத் தொழில்கள் ஆகிய துறைகளுக்கு வணிக வங்கிகள் தாராளமாகக் கடன் வசதிகளை யளிக்க வேண்டும் என்ற கொள்கை உருவானது முதல், பற்பல திட்டங்கள் வழி, ரிசர்வு வங்கி இக் கொள்கையினைச் செயலாற்ற

முனைந்தது. அவற்றில் குறிப்பிடத்தக்கது ரிசர்வு வங்கியின் மறு நிதியத் திட்டமாகும். குறிப்பிட்ட தகுதி பெற்ற சிற்றளவுத் தொழில் கடன்கள், வேளாண்மைக் கடன்கள் ஆகிய இரு இனங்களுக்கும் சேர்ந்து கொடுக்கப்பட்ட குறுகிய காலக் கடன் தொகையை, வணிக வங்கிகள் ரிசர்வு வங்கியிடமிருந்து குறைந்த வட்டிக்கு (அப்பொழுது 4·5%) மறு நிதியமாகப் பெறலாம். பெப்ரவரி 18, 1970-ல் இத் திட்டம் திருத்தி யமைக்கப்பட்டது. இதன்படி, கூடுதலாகக் கொடுக்கப்படும் கடன்களுக்கு மட்டுமே மறு நிதிய வசதி அளிக்கப்படுகின்றது.

### வங்கியத் தொழிலில்லா கம்பெனிகளும் ரிசர்வு வங்கியும்

பணச் சந்தையில் வங்கியத் தொழிலில் ஈடுபடாத சில நிலையங்களும் இடம் பெற்றுள்ளன. இந் நிலையங்களைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாததெனக் கருதப்படுவதற்குப் பல காரணங்களுண்டு. நாட்டின் நிதிய நிலையைச் சீராகக் கண்காணிக்கவும், நிருவாகம் செய்யவும் வங்கிகளல்லாத பிற நிலையங்களும் ஏதேனும் ஒரு வகையில் ரிசர்வு வங்கியின் கட்டுப்பாடுகட்கு உட்படவேண்டும். இந் நிலையங்களுள் சில பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுகின்றன. எனவே, இவற்றை ஒழுங்காற்றுவது அவசியமாகத் தோன்றியது. வணிக வங்கிகள் அளிக்கும் வட்டி விகிதத்தைவிட உயர்ந்த வட்டியை இந் நிலையங்கள் அளிப்பதாலும், இவற்றிடம் செலுத்தப்பட்டுள்ள வைப்புக்களில் பெரும் பகுதி குறிப்பிட்ட தவணை யேதுமின்றிக் கோரியவுடன் திருப்பித் தரக்கூடியனவாக இருப்பதாலும் பெருமளவு தொகைகளை இவை ஈர்க்கின்றன. வணிக வங்கிகளுடன் இந் நிலையங்கள் தரமற்ற போட்டியில் ஈடுபடாமலிருக்கும்பொருட்டு, வங்கியத் தொழில் செய்யாத பிற நிலையங்கள் குறுகிய கால வைப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாகாது என ரிசர்வு வங்கி தடை விதித்தது; மற்றும், குறிப்பிட்ட ஓர் அளவுக்குமேல் இந் நிலையங்கள் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளலாகாது என்றும் விதிக்கப்பட்டது. இவ்வாறாக வங்கிகள் மீதும் பணச் சந்தையில் இடம் பெற்றுள்ள வங்கிகளல்லாத பிற நிலையங்கள் மீதும் ரிசர்வு வங்கி கட்டுப்பாடுகளை விதித்தும், அவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தியும் நாட்டின் பொருளாதார நிலையினைச் சீராக வைத்திருக்கும் பணியில் ஈடுபடுகின்றது.

ரிசர்வு வங்கியின் பணக் கொள்கை, கடனளிப்பு வசதிகளை ஒழுங்குபடுத்துவதுடன் நின்றுவிடுவ தில்லை; பொருளாதார வளர்ச்சிக்குத் தக்க அடித்தளம் நிறுவி, அதன் வழி

வேளாண்மை, தொழில் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் நிதி வசதிகளை வழங்கும் ஏற்பாடுகளையும் கண்காணிப்பது ரிசர்வு வங்கியின் பொறுப்பாக வுள்ளது.

ரிசர்வு வங்கி தனது பண ஆக்கக் கொள்கையை உருவாக்கும் போது, தனக்கு முரணான இரு பொறுப்புக்கள் இருப்பதை உணரும் நிலையிலிருக்கின்றது. பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் அளவுக்குப் பண அளிப்பினை விரிவாக்க வேண்டிய நிலை ஒருபுறம்; பண அளிப்பு விரிவாக்கம் கட்டுக்கடங்காது போயின் பண வீக்க நிலை முற்றிப் பொருளாதாரச் சீர்க் குலைவு ஏற்படக் கூடுமே என்று அஞ்சும் நிலை மற்றொரு புறம். இந்த இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையை யுணர்ந்து, ரிசர்வு வங்கி செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டி யுள்ளது.

**பருவ காலக் கடன் தேவை**

இந்தியாவில், வங்கிகளிடமிருந்து கடன் கோருவது பருவ காலத்தையொட்டி அமைந்து காணப்படும் ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. இன்றும் நம் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பது நினைவிற் கொள்ளத் தக்கது. தொழில் துறைக்கு வங்கிகள் பெருமளவு கடன் வழங்கி வந்த போதிலும், பல காலமாக இருந்து வரும் பருவ காலத்தை யொட்டிய பெருக்கமும் சுருக்கமும் இன்றும் காணப் படுகின்றன. மற்றும், மொத்தப் பண அளிப்பில் செலாவணி கணிசமான பகுதியாக இருப்பதும் குறிப்பிடத் தக்கது. இதனால் வங்கிகளின் கடன் வசதிகளை உருவாக்கித் தரும் திறன் குறைந்து போகிறது. செலுத்துத் தேவைகளுக்குச் செலாவணியே மிகுதியாகப் பயன்படுத்தப் படுவதால், சுரு சுருப்புப் பருவத்தில் வைப்புக்கள் வளரும் வேகம் குறைந்து காணப்படுகின்றது. ஆனால், இந்தப் பருவத்தில்தான் கடன் வசதி யளிப்பு மிகுதியாகத் தேவைப்படுகின்றது. இந்தச் சூழ் நிலையில் வங்கிய அமைப்பில் வள வசதிப் பற்றுக் குறை ஏற் படுகின்றது. பற்றுக் குறையைச் சமாளிக்க, வங்கிகள் மைய வங்கியிடமிருந்து கடன் பெறலாம். இந் நிலையில், மைய வங்கி வணிக வங்கிகளின் எளிவரல் நிலை குறித்த கட்டுப்பாடுகளைக் குறிப்பிட்ட இடங்களில் தளர்த்தியும், பிற சில இடங்களில் இறுக்கிப் பிடித்தும், வேண்டிய அளவு கடன் வசதிப் பெருக் கத்தை அனுமதிக்கலாம். ரிசர்வு வங்கி தன்னிடம் வணிக வங்கிகள் கடன் பெற வருவதைத் தடுக்க இயலா நிலையில் உள்ளது. எனினும், கடன் வாங்குவதற்கு ஆகும் செலவினை

உயர்த்துவதன் வழி, ரிசர்வு வங்கி கடன் கோருவதைக் கட்டுப் படுத்தலாயிற்று. வணிக வங்கிகள் பெரும்பாலும் அரசினர் பிணையங்களை ஈடாகக் கொடுத்தே கடன் பெற்று வந்தமையால், இப் பிணையங்கள் மீது தரப்படும் கடனளவைக் கட்டுப் படுத்தியும், கடன் மீதான வட்டி வீதத்தை உயர்த்தியும், ரிசர்வு வங்கி கடனளிப்பு வசதிகளைக் கட்டுப்பாடு செய்தது. ஆனால், இந்தக் கட்டுப்பாட்டுத் திட்டம் எதிர் நோக்கிய விளைவினை அளித்தது என்று கூற முடியாது. இதற்குக் காரணம், வணிக வங்கிகள் மந்த காலத்தில் தம்மிடமிருந்த உபரிப் பணத்தினை நீண்ட காலப் பிணையங்களில் முதலீடு செய்யாது, கருவூலச் சீட்டுக்களை வாங்கப் பயன் படுத்தினர். கருவூலச் சீட்டுக்கள் 90 நாள் தவணை கொண்டனவாக இருப்பதால், தவணைக் காலம் முடிவுற்றதும், வங்கிகள் அவற்றைப் பணமாக மாற்றிக் கொள்ள முடிந்தது. நீண்ட காலப் பிணையங்களை வாங்கி, பணந் தேவைப்பட்ட காலத்தில் அவற்றை விற்கும்போது ஏற்படும் நட்டத்தை ஒரு புறம் தவிர்க்கவும், குறிப்பிட்ட அளவு தொகை மட்டுமே அரசினர் பிணையங்களை ஈடாகத் தந்து கடன் பெறலாம் என்ற கட்டுப்பாட்டினால் பாதிக்கப்படாமல் இருக்கவும் இந்த வகை முதலீடு வாய்ப்பளித்தது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தும் அதன் பின்னரும் மலிவுப் பணக் கொள்கை (Cheap Money Policy) கடைப் பிடிக்கப் பட்ட காலத்தில், ரிசர்வு வங்கி வெளிச் சந்தை நட வடிக்கைகளை, அக் கொள்கையை அமுல் படுத்தவும், அரசினர் பிணையங்களின் விலை குறையாமலிருக்கவும் மேற் கொண்டது. ஆனால், தற்காலத்தில் வெளிச் சந்தை நடவடிக்கை ஒரு கடன் கட்டுப்பாட்டுக் கருவியாகச் செயற்பட்டு வருகின்றது என்பது ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மையாகும். ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் பெருமளவு தொகையினைப் பொது மக்களிடமிருந்து கடனாகத் திரட்ட வேண்டியிருக்கிறது. பொதுக் கடன் நிருவாகம் நாட்டின் மைய வங்கியான ரிசர்வு வங்கியின் பொறுப்பு. எனவே, கட னளிப்பு அளவினை ஒழுங்கு படுத்துவதை விட, கடன் நிரு வாகத்தைச் சார்ந்த ஒரு நடவடிக்கையாகவே ரிசர்வு வங்கியின் வெளிச் சந்தை நடவடிக்கை அமைந்துள்ளது என்று பேசப் படுகின்றது.

மாற்றற்குரிய காப்பு விகிதம் எந்த அளவுக்கு நாணயக் கட்டுப்பாட்டுக் கருவியாக ரிசர்வு வங்கியால் கருதப் படுகின் றது என்ற கேள்விக்கு விடை காண்பது எளிதல்ல. இக்

கருவி, வணிகம் சுருசுருப்பாக நடந்து வரும் பருவத்தில் அவ வளவு பயன் தருவதாகக் காணப்பட வில்லை யெனினும், பிற காலங்களில் கடனளிப்புப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த உதவு கின்றது. புதிதாகப் பெறும் வைப்புக்கள் கைப்பற்றப் படுவது வங்கிகள் மேலும் வைப்புக்கள் திரட்டுவதைப் பாதிக்கிறது. அரசினர் பிணையங்களை விற்பதன் வழியும், வணிக வங்கிகள் இக் கட்டுப்பாட்டுக் கருவியின் செயல் திறனைக் குறைத்து விட்டன.

ரிசர்வு வங்கி அவ்வப் போது மேற் கொண்டு வரும் தேர்ந் தெடுத்த கடனளிப்புக் கட்டுப்பாடு (Selective credit control) ஓரளவுக்குப் பயன் நல்குவதாக அமைந்துள்ளது. இக் கருவி யைப் பயன்படுத்தி வெற்றி பெற, வங்கிகள் வழி அளிக்கப்படும் மொத்தக் கடனளவையும் கட்டுப் படுத்துவது அவசியம் என்று உணரப்பட்டுள்ளது. குறித்த காலத்தில் இவ் வகைக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளுவது இவற்றின் வெற் றிக்கு இன்றியமையாதது என்பதும் புலனாகி யுள்ளது.

### வங்கிகள் மீது மேற்பார்வை

இந்திய ரிசர்வு வங்கிச் சட்டமும், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டமும் ரிசர்வு வங்கிக்கு, வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றை மேற் பார்வை செய்யவும், கட்டுப் படுத்தவும் விரிவான அதிகாரங்களை வழங்கியுள்ளன. வங்கி யல்லாத பிற நிலையங்கள் வைப்புக்களைப் பெற்றால், அவற்றை உத்தரவிடவும், அவற்றிடமிருந்து செய்திகளைக் கோரிப் பெறவும் ரிசர்வு வங்கிக்கு அதிகாரமுண்டு.

### வங்கிகளுக்கு உரிமம் வழங்கல்

இந்தியாவில் வங்கியத் தொழிலை மேற் கொள்ள விரும்பும் வங்கி, ரிசர்வு வங்கியிடம் உரிமம் (Licence)பெற வேண்டுமெனச் சட்டம் விதித்துள்ளது. உரிமம் வழங்குமுன் ரிசர்வு வங்கி ஆய்வு (Inspection) ஒன்று நடத்தி, வங்கி வைப்பாளர்கள் செலுத்தியுள்ள அல்லது வைப்பாளராகக் கூடிய வர்கள் செலுத்த வுள்ள வைப்புத் தொகையினைக் குறித்த முறையில் முழுமையாகச் செலுத்தும் திறன் கொண்டது என்றும், வங்கியின் நடவடிக்கைகள் வைப்பாளரின் நலனுக்குக் குந்தகமேதும் விளைவிக்காது என்றும் மன நிறைவு பெற வேண்டும். அயல் நாட்டில் நிறுவப் பெற்ற வங்கி, இந்தியா வில் வங்கியத் தொழில் செய்ய விரும்பினால், அது பொது நலத் திற்கு உகந்ததாக அமைய வேண்டும். அந்த அயல் நாட்டுச்

சட்டமோ அல்லது அரசாங்கமோ இந்தியாவில் நிறுவப் பெற்ற வங்கிகள் மீது எத்தகைய ஓரவஞ்சனையும் காட்டாது இருக்க வேண்டும். ஜூன் 1972 முடிவில் இருந்த நிலையின் படி 46 வங்கிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது. இவை யன்றி, உரிமம் தேவையில்லாப் பொதுத்துறை வங்கிகள் 22 செயற்பட்டு வந்தன. அவை 1969ஆம் ஆண்டு நாட்டுடைமை யாக்கப் பெற்ற 14 வங்கிகளும், இந்திய ஸ்டேட் வங்கியும் அதன் 7 துணை வங்கிகளும் ஆகும்.

உரிமம் வழங்குதற்கு ரிசர்வு வங்கி கீழ்க் காணும் நடை முறையினைக் கையாளுகின்றது. ரிசர்வு வங்கி நடத்திய ஆய்வின் போது உரிமம் கோரும் வங்கியின் செயல் முறை களில் கண்ட குறைபாடுகளை அவற்றிற்கு அறிவித்து, அக் குறைபாடுகளை நீக்கும்படி அறிவுறுத்தும். குறைபாடுகளைக் களைவது பற்றிய அறிக்கையைக் குறிப்பிட்ட காலப்படி கேட்டுப் பெற்று, வங்கி குறைகளை நீக்குவதில் நல்ல முன்னேற்றம் காட்டினால், பெரும் குறை யேதும் இல்லா நிலையில் ரிசர்வு வங்கி உரிமம் வழங்கும். தக்க வாய்ப்புக் கொடுத்தும், குறை களைக் களையாத நிலையில் ரிசர்வு வங்கி உரிமம் வழங்க மறுக்க லாம் அல்லது முன்னர் வழங்கிய உரிமத்தை ரத்து செய்யலாம். 1972 ஜூன் இறுதி வரை ரிசர்வு வங்கி 283 வங்கிகளுக்கு உரிமம் மறுத்துள்ளது.

வங்கிகள் சீரான முறையில் அமைக்கப்பெற்று, செவ்வை யான வகையில் செயலாற்ற வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது. 1962ஆம் ஆண்டுக்குப் பின் நிறுவப்பெறும் எந்த இந்திய வங்கியும் குறைந்தது ரூ. 5 இலட்சம் செலுத்திய முதல், காப்புப் பெற்றிருக்க வேண்டும். பம்பாய் அல்லது கல்கத்தா நகரங்களில் அல்லது ஒன்று மேற் பட்ட மாநிலத்தில் வங்கிக்கு அலுவலகமிருப்பின், மேற்கண்ட தொகை குறைந்தது ரூ. 10 இலட்சமாவது இருக்க வேண்டும். அயல் நாட்டு வங்கி இந்தியாவில் செயலாற்றும் தகுதி பெற, அதன் செலுத்திய முதலும் காப்பும் ரூ. 15 இலட்சத்துக் குறை யாது இருக்க வேண்டும். இவ வங்கியின் அலுவலகம் பம்பாய் அல்லது கல்கத்தா நகரில் இருப்பின், மேற் கூறிய தொகை ரூ. 20 இலட்சத்துக்குக் குறையக் கூடாது. இத்தொகையும் இத் தன் கூட இந்தியக் கிளைகளில் தொழில் செய்து பெற்ற ஆண்டு இலாபத்தில் 20 விழுக்காட்டளவு தொகையும் அயல் நாட்டு வங்கியால் ரிசர்வு வங்கியிடம் வைத்திருக்கப்படல் வேண்டும். இத் தொகை பணமாகவும் அல்லது வில்லங்க

மற்ற அனுமதித்துள்ள பிணையங்களாகவும் அல்லது பகுதிப் பணமாகவும் மீதிப் பிணையங்களாகவும் ரிசர்வு வங்கியிடம் வைத்திருக்கப்படலாம்.

ஆண்டு இலாபத்தில் 20 விழுக்காட்டிற்குக் குறைவிலாத தொகையை வங்கிகள் தம் காப்பிற்கு எடுத்துச் செல்லவேண்டு மென்று சட்டம் விதித்துள்ளது. தம் நிதி நிலையை உறுதிப் படுத்திக்கொள்ள வங்கிகளுக்கு இவ் விதி வகை செய்கிறது. முன்னர் கண்டவாறு பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிக ளனைத்தும் ரிசர்வு வங்கியிடம் தமது கேட்பு, தவணை வைப்புக் களில் மூன்று விழுக்காட்டிற்குக் குறையாத தொகையைக் குறைந்த அளவு இருப்பாக வைத்திருக்க வேண்டும். பட்டிய லில் இடம் பெறு வங்கிகள் இத்தொகையினை ரொக்கமாகத் தம் மிடம் அல்லது ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி, அல்லது அதன் துணை வங்கிகளிடமுள்ள நடப்புக் கணக்கில் அல்லது பகுதி தம்மிடமும் மிகுதி மேற் கூறிய வங்கிகளிடமும் வைத்திருக்க வேண்டும். இஃதன்றி, எல்லா வங்கிகளும் தமது கேட்புக் தவணை வைப்புக்களில் 25 விழுக்காட்டிற்குக் குறையா அளவிற்கு ரொக்கம், பொன் அல்லது வில்லங்கமில்லாத, அனுமதித்துள்ள பிணையங்களை வைத்திருக்க வேண்டும். இந்த விதி, வங்கிகள் தமது வைப்பாளர் கோரியதும், சட்ட முறையாகச் செலுத்த வேண்டிய தொகையைக் கொடுக்க வகையுள்ள நிலையில் சொத்துக்களை முதலீடு செய்து வைக்க ஏற்பாடு செய்துள்ளது. அயல் நாட்டு வங்கிகள் இந்தியாவில் திரட்டும் பணத்தை இந்தியாவிலேயே முதலீடு செய்வதை உறுதிப்படுத்தச் சட்டம் இவ் வங்கிகளின் இந்தியாவிலுள்ள கேட்பு, தவணை வைப்புக்களில் 75 விழுக்காட்டிற்குக் குறை யாத தொகையளவு, சொத்துக்களை இந்தியாவில் வைத்திருக்க வேண்டுமெனப் பணித்துள்ளது.

**கிளைகள் திறப்பது பற்றிய கொள்கை**

இந்தியாவில் அல்லது வெளி நாடுகளில் தொழிலிடம் திறக்குமுன் வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் அனுமதி பெற வேண்டும் என்று வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் பேசுகின்றது. மற்றும், சில சூழ்நிலைகளில் புது இடத்திற்கு அலுவலகத்தை மாற்றுவதற்கும், தற்காலிகமாக அலுவலகம் திறப்பதற்கும் கூட ரிசர்வு வங்கியின் அனுமதி பெற வேண்டும். அனுமதி கோரும் வங்கியின் நிதி நிலையும், நிருவாகமும் திடமாகவுள் ளது; அதன் மூலதன அமைப்புப் போதுமானதாக வுள்ளது; திறக்கவிருக்கும் கிளை போதிய வருவாய் திரட்டும் திறனுள்ள

தாக வுள்ளது; பொதுவாக, புதிய கிளை திறப்பதோ அல்லது
கிளை இடம் மாற்றுவதோ, பொது நலனுக்கு உகந்ததாக
வுள்ளது என்று ரிசர்வு வங்கிக்குத் தோன்றினால் அனுமதி
தரப்படும். இரண்டாம் உலகப்போர் நடந்து வந்தபோது
பெரும்பாலும் ஏற்கனவே வங்கி வசதிகளுள்ள நகர்ப்
புறங்களில் மட்டும் மேலும் வங்கி அலுவலகங்கள் திறக்க
அனுமதி கோரும் நிகழ்ச்சி காணப்பட்டது. 1956 ஆம்
ஆண்டு வரை, கிளை திறப்பு அனுமதி மிகவும் உன்னிப்பாக
ஆய்ந்த பின்னரே கொடுக்கப்பட்டு வந்தது. நாட்டுப்
பிரிவினையாலும், போருக்குப்பின் காலக் கலக்க நிலையாலும்
ஏற்பட்ட நெருக்கடிகளைச் சமாளிக்கவே ரிசர்வு வங்கி இந்த
எச்சரிக்கையான கொள்கையைக் கடைப் பிடித்து வந்தது.
1956-க்குப் பின் கிளைத் திறப்புப் பற்றி ரிசர்வு வங்கி மிகவும்
தாராளமான கொள்கையை மேற்கொள்ளலாயிற்று. இக்
கொள்கையின் முக்கியக் குறிக்கோள் கிராமப் புறங்களிலும் சிறு
நகர்களிலும் வங்கி வசதிகள் ஏற்பட வேண்டுமென்பதேயாகும்.
ஆனால், இக் குறிக்கோள் முழுமையாக நிறைவேறவில்லை.
விரும்பப் பட்ட இடங்களில் கிளைகள் திறக்கலாமென்ற
நிலையில் வங்கிகள் வளர்ச்சி யுற்ற இடங்களில் மட்டுமே
கிளைகளைத் திறக்க முன்வந்தன. நட்டத்திற்கு அஞ்சி, வங்கி
வசதியற்ற இடங்களில் வங்கிகள் திறக்க முன்வந்தார்களில்லை.
இச் சூழ்நிலையில் ரிசர்வு வங்கி 1962ஆம் ஆண்டு வங்கி
அலுவலகத் திறப்பு அனுமதிக் கொள்கையில் மாறுத
லொன்றைக் கொண்டு வந்தது. வங்கி வசதிகள் குறை
வாகவும், வங்கி வசதிகளே இல்லாமலும் உள்ள இடங்களில்
திட்டமிட்ட சீரான முறையில் வங்கி வசதிகளை ஏற்படுத்துவது
என்று தீர்மானிக்கப் பட்டது. அகில இந்திய வங்கிகளும்,
பிராந்திய வங்கிகளும், பிற இந்திய வங்கிகளும் இந்தத் திட்
டத்தில் பங்கு கொள்ளுமாறு தூண்டப்பட்டன. நாட்டில்
வங்கி வசதிகள் இல்லாத நகரங்களில் பட்டியலொன்றும் இவ்
வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. இந் நடவடிக்கைகளின் பயனாக,
கிளை விரிவாக்கத் திட்டம் வேகமாகச் செயற்படத் துவங்கியது.

ஜூலை 1969-ல் பதினான்கு பெரும் வணிக வங்கிகள்
நாட்டுடைமையாக்கப் பட்டது குறித்து முன்னரே பேசியிருக்
கிறோம். இந் நிகழ்ச்சிக்குப் பின் கிளை திறப்புக்கு உரிமம்
வழங்குவதில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. கிராமப்
புறங்களில் உயர்ந்து வரும் வேளாண்மைத் துறை வருவாயில்
ஏற்படக் கூடிய சேமிப்பினைத் திரட்டவும், பயிர்த்தொழில்,
சிற்றளவுத் தொழில், பிற முந்துமைத் துறை ஆகியவைகளுக்குத்

தற்போது கிட்டாத கடன் வசதிகளை அளிக்கவும், பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் பகுதியினை வங்கியத் துறையின் ஒழுங்கிற்குள் கொண்டு வரவும், வங்கி வசதியற்ற இடங்களில் கிளைகளைத் திறக்கவும் வழி செய்யும் வகையில் உரிமம் வழங்கும் கொள்கை மாற்றப்பெற்றது.

## வழிகாட்டு வங்கித் திட்டம் (Lead Bank Scheme)

போதுமான வங்கி வசதிகளற்ற மாவட்டங்களில் வங்கி வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு ஓர் ஒருங்கிணைத்த திட்டத்தை உருவாக்க ரிசர்வு வங்கி, வங்கியர் குழுவொன்றை அமைத்தது. இக் குழு நவம்பர் 1969-ல் அளித்த அறிக்கையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அல்லது பல வங்கிகளை வழிகாட்டு வங்கி (Lead Bank) என்று பெயரிட்டு, அம் மாவட்டத்திலுள்ள நகரங்கள் அனைத்திலும் 1970ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒரு கிளை திறக்கும் பொறுப்பினை அவற்றிடம் அளிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. இந்த அடிப்படையில், ரிசர்வு வங்கி டிசம்பர் 1969-ல் இந்த மாவட்டங்களுக்கு இன்ன வங்கி வழிகாட்டு வங்கியாகப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று அறுதியிட்டது. வங்கிய வளர்ச்சிக்குள்ள வாய்ப்புக்களைக் கணக்கிட்டறிதல், கிளைகளைத் திறத்தல், கடன் வசதிகளை விரிவுபடுத்தல் ஆகிய மூன்று முக்கியப் பொறுப்புகளை இவ் வங்கி ஏற்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. புதுக் கிளைகள் திறப்பது, கடன் வசதிகளைச் செய்து தருவது போன்ற செயல்களில் பிற வங்கிகளுடைய ஒத்துழைப்பையும் பெற்று, அம் மாவட்டத்திலுள்ள எல்லாவங்கிகளையும் தன்னுடன் அணைத்துச் செல்லும் தகைமை பெற்று, வழிகாட்டு வங்கி திகழ வேண்டுமென எதிர்பார்க்கப் பட்டது. இத் திட்டத்தின் பயனாக, 1969-ல் 1369 கிளைகளும், 1970-ல் 2137 கிளைகளும், 1971-ல் 1805 கிளைகளும் ஆக மொத்தம் 5311 கிளைகள் மூன்று ஆண்டுகளில் திறக்கப்பட்டன. அடுத்த மூன்று ஆண்டுகளில், அதாவது 1972 முதல் 1974 இறுதிக்குள் மேலும் 5000 கிளைகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எல்லா வணிக வங்கிகளும் சேர்ந்து 1972 ஜூன் இறுதியில் மொத்தம் 13,620 கிளைகள் கொண்டிருந்தன. இந்த நிலையில், நம் நாட்டில் 40,000 மக்களுக்கு ஒரு வங்கி என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வழிகாட்டு வங்கித் திட்டம் நல்ல முறையில் முன்னேறி வருவது குறிப்பிடத்தக்கது. வளர்ச்சி குறைந்த மாநிலங்களின் தேவைகளைக் கணக்கிட்டு, தக்க திட்டங்களை வகுத்து, அவற்றின் மேம்பாட்டிற்குக் கடன் வசதிகளை ஏற்பாடு செய்வதில் இத்

திட்டம் பெரிதும் முனைந்துள்ளது. மாவட்ட அளவில் ஆய்வுரைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுவில் வங்கிகளும் பிற நிதி நிலையங்களும் இடம் பெற்றுள்ளன. கடன் கோருவோரைப் பற்றிய செய்திகள் குறித்தும், முந்துமைத் துறைகளுக்குக் கடனளித்தல் குறித்தும், வங்கி கடனளிக்கக் கூடிய திட்டங்களுக்கு ஒருங்கிணைந்து, கடன் வசதிகள் அளிப்பது குறித்தும் இக் குழுவில் கலந்துரையாடுகின்றனர்.

### அயல்நாட்டு வங்கிக் கிளைகள்

முன்னரே கண்டவாறு,அயல்நாட்டு வங்கிகள் நம் நாட்டில் அலுவலகங்கள் திறப்பது குறித்துப் பொதுவாகத் தடையேதுமில்லை. ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம். அயல்நாட்டு வணிகருக்கும் இந்திய வணிகருக்கும் தொடர்பு ஏற்படுத்தல், இந்தியத் தொழில் நிலையங்களுக்கு வெளி நாடுகளில் கடன் பெற்றுத் தருதல் போன்ற சில பணிகளுக்கு அயல்நாட்டு வங்கிகள் உதவியாக அமைவதால், ரிசர்வு வங்கி, இவ் வங்கிகள் புது அலுவலகங்களைத் திறக்க உரிமம் வழங்குகின்றது. எனினும், பொதுவாக துறைமுகப் பட்டினங்களில் மட்டுமே கிளைகள் திறப்பு அனுமதிக்கப்படுகின்றது. 1972 ஜூன் இறுதியில் அயல் நாட்டு வங்கிகள் இந்தியாவில் 130 கிளைகள் கொண்டிருந்தன.

### வங்கிகள் ஆய்வு

ரிசர்வு வங்கியின் மேற்பார்வைப் பணிகளில் மிக முக்கியமானது வங்கிகளைச் சட்ட முறையாக ஆய்வது ஆகும். வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 35-ன்படி ரிசர்வு வங்கி எப்பொழுது வேண்டுமானாலும் எந்த ஒரு வங்கியையும் அதன் ஏடுகளையும் கணக்குகளையும் தன் அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்யலாம். அதிலும் குறிப்பாக, போதுமான அளவு முதல் இருப்பது, உரிமம் பெறத் தகுதி, கிளைகள் திறப்பது, பிற வங்கியோடு இணைதல், அலுவல் நிறுத்தம், உறுப்பினர் கடனாளருடன் ஒத்திசைவு (Compromise) அல்லது ஏற்பாடு செய்து கொள்ளுதல், ரிசர்வு வங்கியின் உத்தரவுகளைக் கடைப்பிடித்தல் ஆகிய செய்திகளைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளவும், விசாரணை நடத்தவும், நிலைமையைக் கண்டறியவும் ரிசர்வு வங்கிக்குப் பரந்த அதிகாரங்களுண்டு.

நாட்டில் நல்லதொரு வங்கிய அமைப்புச் செயற்பட்டு வர வேண்டும்; வங்கிகளின் நிருவாகம் சரிவர அமையவேண்டும்; நாட்டின் வங்கியச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு,பொது நலத்திற்கும் நாட்டுமக்கள் நலத்திற்கும் உகந்த முறையில் வங்கிகள்

தொழில் புரியவேண்டும் என்ற அடிப்படை நோக்கங்களுடன் தான் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. வங்கியின் செயல் முறை, முதலீடு, கடன் கொள்கை, சொத்து நிலவரம், நிரு வாகத் தரம், சட்ட விதிகளைக் கடைப்பிடிக்கும் ஒழுங்கு முதலிய செய்திகளை ஆய்வு செய்யும்போது, ரிசர்வு வங்கி பரிசீலிக்கும் ஒவ்வொரு வங்கியையும் ஒருமுறை யேனும் ஆய்வு செய்வது என் பது ரிசர்வு வங்கியின் குறிக்கோளாகும். முன்னறிவிப்பு ஏது மின்றி, திடீரென்று ஆய்வு மேற்கொள்ளும் முறை பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆய்வில் காணப்படும் பலப்பல செய்திகள் குறித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வங்கிக்கொரு வாய்ப்பு வழங்கப் படும். பின்னர், ஆய்வு வழி கண்டறியப்பட்ட செய்திகளின் அடிப்படையில் வங்கியின் செயல்முறைகளைத் திருத்தியமைப் பது, வங்கி நிருவாகத்தை மாற்றியமைப்பது போன்ற நடவடிக் கைகளை ரிசர்வு வங்கி மேற்கொள்ளும். ரிசர்வு வங்கி தனது அதிகாரிகளை அவ்வப்போது அனுப்பி, வங்கியின் செயல்முறை யினைக் கண்காணிக்கும். தேவைப்பட்டால், வங்கியின் இயக் குநர் அவைக் கூட்டங்களில் ரிசர்வு வங்கியின் அதிகாரி பார்வை யாளராகக் கலந்து கொள்ளுவார்; சில சமயங்களில் வங்கியின் சிக்கல்களுக்குத் தக்க அறிவுரைகளும் வழங்குவார். அவசிய மேற்பட்டால், வங்கியைச் சீரான முறையில் நடத்திச் செல்ல உதவும் வகையில் வங்கிய அறிவுரையர் (Adviser)களை, ரிசர்வு வங்கியைக் கலந்து யோசித்து, நியமனம் செய்துகொள்ளுமாறு பணிப்பதுமுண்டு. கடைத்தேற முடியாத நிலைமையில் உழலும் நிலையில் மட்டுமே ரிசர்வு வங்கி, வைப்பாளர்களின் நலனைக் காக்கும் பொருட்டு, மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற் கொள்ளும். உரிமம் ரத்து செய்தல், உரிமம் மறுத்தல், மத்திய அரசிற்கு விண்ணப்பமிட்டு நிறுத்தி வைப்பு (Moratorium) உத்தரவு பெற்றுப் பின்னர் வங்கியைச் சீரமைத்தல் அல்லது பிறிதொரு வங்கியுடன் இணைத்தல், வங்கியைக் கலைத்துவிடக் கோரி உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமிடல் போன்ற நட வடிக்கை எதனையும் ரிசர்வு வங்கி மேற்கொள்ளலாம். மத்திய அரசு ரிசர்வு வங்கியைக்கொண்டு எந்த வங்கியையும் ஆய்வு செய்து, ஆய்வு அறிக்கை மிகவும் மோசமான ஒரு நிலையினை வெளிப்படுத்தினால், வங்கி புது வைப்புக்களைப் பெறக்கூடா தெனத் தடை விதிக்கலாம். அல்லது அந்த வங்கியைக் கலைத்து விடக் கோரி, நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்குமாறு ரிசர்வு வங்கியை வேண்டலாம்; அல்லது அவசியமானால் அவ்வங்கியை எடுத்து நடத்தலாம். வங்கி நிருவாகத்தின் தரத்தை உயர்த்

தவும், வங்கியின் செயல்முறைகளில் காணப்படும் பிழைகளை நீக்கவும் ஆய்வு ஏற்பாடு பயனுள்ளதாக அமைந்துள்ளது.

**வங்கி நிருவாகம் பற்றிய விதிகள்**

கடந்த கால வங்கிய வளர்ச்சியைக் கூர்ந்து நோக்கின், வங்கி நொடித்தலுக்கு முக்கியக் காரணமாக விளங்கியது நிருவாகத்தின் கோளாறுகளே என்பது புலப்படும். ஆகவே, முறையான நிருவாகம் ஒவ்வொரு வங்கியிலும் அமைவது மிகவும் இன்றியமையாததென்பதை வற்புறுத்திக்கூறவேண்டுவதில்லை. வங்கியத் துறையின் தலைவன் என்ற முறையில் வங்கிகளின் நிருவாகம் சரிவர அமைவதில் ரிசர்வு வங்கிக்கு அக்கறையும் பொறுப்பும் உண்டு. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப்படி எந்த ஒரு வங்கியும் நிருவாக முகவரை வேலைக்கு அமர்த்திக்கொள்ளலாகாது; நிருவாக முகவரால் நிருவகிக்கப்படவும் கூடாது. வேறு எந்தத் தொழில் அல்லது பணியில் ஈடுபட்டுள்ளவராலோ அல்லது வேறொரு கம்பெனியில் இயக்குநராக இருப்பவராலோ வங்கி நிருவகிக்கப் படலாகாது. நொடிந்தவர் (Insolvent) எனத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரையும், கடன்களைத் தீர்ப்பதை நிறுத்தி வைப்பவர் அல்லது தம் கடனாளர்(Creditor) களுடன் ஒத்திசைவு (Compromise) செய்து கொண்டவர் எவரையும், ஒழுக்கக் கேடான குற்றத்திற்காகக் குற்றவியல் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட எவரையும் வங்கியில் ஊழியராகச் சேர்த்துக் கொள்ளலாகாது அல்லது தொடர்ந்து ஊழியராக வைத்திருக்கலாகாது. மற்றும், வங்கியை நிருவகிக்கும் எந்த நபரும் ஒரு காலத்தில் சேர்ந்தாற்போல் ஐந்து ஆண்டுகட்கு மேல் அலுவலில் நீடிக்க முடியாது.

ஒரு வங்கியில் இயக்குநராகப் பணியாற்றும் நபர் மற்றொரு வங்கியில் இயக்குநராகப் பணியாற்றக் கூடாது என்று சட்டம் விதித்துள்ளது, மேலும், வங்கியின் பங்குநர் அனைவருடைய வாக்குரிமையில் 20 விழுக்காட்டிற்கும் அதிகமாக வாக்குரிமை பெற்றுள்ள கம்பெனிகளில் இயக்குநராக இருப்பவர் எவரும் வங்கியில் இயக்குநராகச் செயலாற்றக் கூடாது. வங்கிகளின் மீது சமூகக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டபோது 51 விழுக்காட்டிற்குக் குறையாத இயக்குநர்கள் கணக்குப் பதிவியல்,வேளாண்மை, வங்கி யியல், கூட்டுறவு. பொருளாதாரம், நிதி, சட்டம், சிற்றளவுத் தொழில் போன்ற ஒரு அல்லது பல துறைகளில் சிறந்த அறிவு அல்லது செய்முறை அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டுமென விதிக்கப்பட்டது. இதனுடன் வங்கி ஒவ்வொன்றிற்கும் முழு நேரத் தலைவர் ஒருவர் இருக்க வேண்டுமென விதிக்கப்பட்டது. முழு நேரத் தலைவராக

நியமிக்கப்படுபவர் ஒரு தொழிலதிபராக இருத்தலாகாது; வங்கிய, நிதிய, பொருளாதார அல்லது தொழில் நிருவாகத்தில் செய்முறை அனுபவமும் சிறப்பீடுபாடும் உடைய ஒருவரே இப் பதவியை வகிக்கலாம். அவருடைய பதவிக் காலம் ஐந்தாண் டுக்கு மிகக் கூடாது. வங்கி ஊழியர் அல்லது அலுவலர், தலைமை நிருவாக அலுவலர், இயக்குநர், தலைவர் ஆகிய எவரையும் நியமிக்க, நீக்க, பதவியிலிருந்து விலக்க ரிசர்வு வங்கிக்கு அதிகாரமுண்டு. பெரும் பதினன்கு வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்ட பின்னர், அவ் வங்கிகள் நியமித்த தலைவர்கள் மத்திய அரசு விரும்பும் வரை காப்பாளர் (Custodians) களாகப் பதவி வகித்து வருவர்.

தம் வசமுள்ள பணத்தைத் தாறுமாறாக முதலீடு செய்வ திலும், தகுதியற்ற கடன் வழங்குவதிலும் வங்கிகள் விரயம் செய்யாமலிருக்கும்பொருட்டு, ரிசர்வு வங்கி இவற்றின் செயல் முறைகளைக் கடுமையாகக் கண்காணித்து வருகின்றது. வங்கிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது எனச் சட்டம் திட்ட வட்டமாகக் கூறுகின்றது. பிணையாகத் தரப் பட்ட பொருள் அல்லது சொத்துக்களை மட்டுமே வங்கி விற்க லாம். தம் பயனுக்கன்றி, தம் வசமுள்ள அசையாச் சொத்துக் களைப் பெற்றதிலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் விற்று விடல் வேண்டும். தன்னுடைய செலுத்திய முதல், காப்பு ஆகிய வற்றின் மொத்தத் தொகையில் 30 விழுக்காடு அல்லது பிறி தொரு கம்பெனியின் செலுத்திய முதலில் 30 விழுக்காடு அளவு ஆகிய இரு தொகைகளில் எது குறைவோ, அந்த அளவுக்கு மேல் எந்த ஒரு வங்கியும் பிறிதொரு கம்பெனியின் பங்குகளை அடைமானம் வைப்பவர் அல்லது முழு உரிமையாளர் என்ற நிலையில் வைத்திருக்கலாகாது. தன் பங்குகள்மீது எந்த வங்கி யும் கடன் தரலாகாது. காரணம், கடன் திருப்பிச் செலுத்தப் படாவிடில் பிணையாக வுள்ள தன் பங்கினைத் தானே எடுத்துக் கொள்ள முடியாது என்பதுதான். கூட்டாளி அல்லது உத்தர வாதம் அளிப்பவர் என்ற நிலையில் இயக்குநருடன் தொடர் புற்ற எவருக்கும், இயக்குநர்களுக்கு நலனிருக்கும் நிறுவனம் அல்லது கம்பெனி எதற்கும், இயக்குநர் எவருக்கும் வங்கி கடன் தரும் பொறுப்பு ஏற்கலாகாது. ரிசர்வு வங்கியின் அனுமதியின்றி, மேற்கண்ட நபர் எவருக்கும் அவர் திருப்பித் தரவேண்டிய கடனைத் தள்ளி விடலாகாது.

**வங்கிகள் இணைதல், புனரமைப்பு**

வங்கியொன்று தானே விரும்பிப் பிறிதொரு வங்கியுடன் இணைவதற்கு ரிசர்வு வங்கியின் அனுமதி பெற வேண்டும்.

இணைவுத் திட்டம் வைப்பாளர்களின் நலனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்; இணைந்துள்ள வங்கி, அது செயற்படும் எல்லையில் வங்கிய அமைப்பை வலுவூட்டும் வகையில் பணியாற்றும் என்று ரிசர்வு வங்கிக்குத் தோன்றினால், இணைவுத் திட்டத்தை அது ஆதரிக்கும். மற்றும் வலுவற்ற, திடமில்லாத அல்லது சரிவர நிருவகிக்கப்படாத வங்கிகளை, மத்திய அரசுடன் கலந்து ஆலோசித்து, பிற வங்கியொன்றுடன் கட்டாயமாக இணைத்து வைக்கும் அதிகாரம் ரிசர்வு வங்கிக்கு உண்டு. இவ்வகையான கட்டாய இணைப்பில் முதல் கட்டமாக ரிசர்வு வங்கி, மத்திய அரசிற்குக் குறிப்பிட்ட வங்கிக்கு நிறுத்தி வைப்பு (Moratorium) ஆணை வழங்குமாறு விண்ணப்பமிடும். நிறுத்தி வைப்புக் காலத்தில் வங்கியை இணைப்பது அல்லது புனரமைப்பது பற்றிய திட்டமொன்றை ரிசர்வு வங்கி தயாரித்து, அதனை இரு வங்கிகளுக்கும் அனுப்பி, அவற்றின் யோசனைகளையும் மறுப்புக்களையும் கேட்டறியும். இவற்றைக் கருத்தில் கொண்டு, திட்டத்தை அங்கீகரிக்கக் கோரி, மத்திய அரசிற்கு ரிசர்வு வங்கி அனுப்பி வைக்கும்.

ரிசர்வு வங்கி நாட்டின் வங்கியத் துறைக்குத் தலைவன் என்ற நிலையிலிருப்பதால் சட்டம் பலவிதப் பொறுப்புக்களை ரிசர்வு வங்கிமீது சுமத்தியுள்ளது. ஒரு வங்கி தனது கடனாளர்களுடன் ஒத்திசைவு (Compromise) அல்லது ஏற்பாடு ஏதும் செய்துகொண்டால் அதை உயர் நீதிமன்றம் அனுமதிக்குமுன் ரிசர்வு வங்கியின் சான்றிதழ் ஒன்று கொடுக்கப்பட வேண்டும். அந்த ஒத்திசைவு அல்லது ஏற்பாடு செயற்படுத்தக் கூடிய முறையில் அமைந்திருக்கின்றது; அதனால் வங்கியின் வைப்பாளர்களுடைய நலன் பாதிக்கப்படாது என்று ரிசர்வு வங்கி சான்றிதழில் குறிப்பிட்டால் மட்டுமே உயர் நீதிமன்றம் அதனை அனுமதிக்கும். வைப்பாளர்கள் நலங் கருதி அல்லது வங்கியக் கொள்கை நலங் கருதி அல்லது இன்னமும் சிறந்த முறையில் கடன் வசதிகள் அளிக்கக் கருதி அல்லது குறிப்பிட்ட இடம் அல்லது சமுதாயத்திற்கு வசதி யளிக்கக் கருதி, தனது நடவடிக்கைகளைத் திருத்திக்கொள்ளாத ஒரு வங்கியை, ரிசர்வு வங்கியிடமிருந்து ஓர் அறிக்கை பெற்ற பின்னர், மத்திய அரசு எடுத்துக்கொள்ளும் அதிகாரம் பெற்றுள்ளது.

வைப்பாளர்களின் நலனைக் காக்கும் பொறுப்பு, வங்கிகள் நடைபெற்று வரும் காலத்தோடு மட்டும் முடிந்து விடுவதில்லை. வங்கிகள் கலைக்கப்பட்ட பின்னரும், அப் பொறுப்பு ரிசர்வு வங்கிக்குத் தொடர்ந்து இருந்து வருகின்றது. ரிசர்வு வங்கி

யின் விண்ணப்பத்தின் பேரில் ரிசர்வு வங்கியோ அல்லது ஸ்டேட் வங்கியோ அல்லது மத்திய அரசு குறிப்பிடும் எந்த வங்கியோ ஒரு வங்கியின் கலைப்பதிகாரியாக நியமிக்கப்படலாம். ரிசர்வு வங்கி கோரும் எந்தச் சமயத்திலும் கலைப்பு எந்த அளவு நடந்தேறியுள்ளது என்ற விவரத்தைக் கலைப்பதிகாரி தெரிவிக்கக் கடமைப்பட்டவர். கலைப்பிலிருக்கும் வங்கியை ஆய்வு செய்யும் அதிகாரம் ரிசர்வு வங்கிக்கு உண்டு. கலைப்பு நடவடிக்கைகளில் ஒழுங்கீனம் ஏதுமில்லாமல் பார்த்துக்கொள்ளவும், கலைப்புச் செலவுகள் மிகுதியாகப் போய் விடாமல் பார்த்துக்கொள்ளவும் இந்த அதிகாரம் உதவுகிறது.

ஒரே நபர் பல வங்கிகளிடமிருந்து தம் திருப்பிச் செலுத்தும் திறனுக்கும் தம் சொத்து வசதிகளுக்கும் அதிகமாகக் கடன் வாங்கிவிட்டால், அக் கடன்களை திருப்பித் தருவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந் நிலையைத் தவிர்க்க, எல்லா வங்கிகளிடமிருந்தும் அவை அளித்துள்ள கடன் வசதிகளைப் பற்றிய செய்திகளைத் திரட்டிப் பெற, ரிசர்வு வங்கிக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தொகைக்குமேல் அளிக்கப்படும் கடன்களைப் பற்றிய விவரத்தை எந்த வங்கியும் ரிசர்வு வங்கிக்கு விண்ணப்பித்துப் பெறலாம். இதன் வழி எந்த நபரும் தம் தகுதிக்குமேல் வங்கிகளிடமிருந்து கடன் பெறுவது தவிர்க்கப்படுகிறது.

**வங்கி ஊழியர் பயிற்சி**

நல்லதொரு வங்கி நிருவாகம் அமைய, சிறந்த, தரமான வங்கியர்கள் தேவை. உயர்தர வங்கியர்களை உருவாக்கச் செம்மையான பயிற்சி தேவை. இந்த இன்றியமையாத ஏற்பாட்டினை ரிசர்வு வங்கி 1954 முதல் செயற்படுத்தி வருகின்றது. வங்கியர் பயிற்சிக் கல்லூரியொன்று 1954-ல் பம்பாயில் நிறுவப்பெற்றது. இக் கல்லூரியில் வணிக வங்கிகளின் அலுவலர்களுக்குப் பொதுவகைப் பாடங்கள், தொழில் நிதியம், அயல் நாட்டுச் செலாவணி, பணியாளர் நிருவாகம் போன்ற பலப் பல துறைகளில் பயிற்சி யளிக்கப்படுகின்றது. கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் அலுவலர்கட்கு 1969-ல் ரிசர்வு வங்கியால் அமைக்கப்பெற்ற கூட்டுறவு வங்கியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி யளிக்கப்படுகின்றது. தன்னுடைய மேற்பார்வை அலுவலர்களுக்குப் பயிற்சி யளிக்க, ரிசர்வு வங்கி 1963-ல் அலுவலர் பயிற்சிக் கல்லூரி யொன்றைச் சென்னையில் நிறுவியுள்ளது. எழுத்தர் நிலையில் பணியாற்றும் தம் ஊழியர்களுக்குப் பம்பாய், கல்கத்தா, சென்னை, புது டெல்லி ஆகிய இடங்களில் உள்ள

ரிசர்வு வங்கி அலுவலகங்களில் பயிற்சி யளிக்கின்றது. பெருகி வரும் புதுப் பொறுப்புக்களை வணிக வங்கிகள் ஏற்று, சீருடன் செயற்படுத்த நாட்டளவில் வங்கிகள் பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை யுணர்ந்து, 1969-ல் தேசிய வங்கி நிருவாக நிலையம் ஒன்று பம்பாயில் ரிசர்வு வங்கியின் முயற்சியால் உருவாக்கப்பெற்றது. வங்கியத் துறையில் ஆராய்ச்சி, உயர்மட்ட அலுவலர்கட்குப் பயிற்சி, வங்கிகளுக்குத் தனிப்பட்ட முறையில் ஆய்வுரை வழங்கல் போன்ற பற்பல பணிகளை இத் தேசிய நிலையம் மேற் கொள்ளும்.

**வைப்புக் காப்பீடு (Deposit Insurance)**

வைப்பாளர்களுடைய நலனைப் பாதுகாக்க, ரிசர்வு வங்கி மேற்கொண்டுள்ள பலப்பல நடவடிக்கைகளை முன்னர் கண் டோம். ஒரு வங்கி தனது பொறுப்புக்களைத் திருப்பிச் செலுத்த இயலா நிலை யேற்பட்டால், அதனால் பெருமளவு அவதியுறுவது சிறு தொகைகளைச் சேமித்து வங்கியில் வைப்பாகச் செலுத்தி வைத்திருப்பவர்களே. இங்ஙனம் சிறு தொகைகளைச் செலுத்தி யுள்ள வைப்பாளர்களின் நலனைப் பாதுகாக்க, 1962-ல் வைப் புக் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத் திட்டத்தை அமுல்படுத்த வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposits Insurance Corporation) ஏற்படுத்தப்பட்டது. இது ரிசர்வு வங்கிக்குச் சொந்தமான துணை நிலையமாகும். ஒவ்வொரு வங்கியிலு முள்ள ஒவ்வொரு வைப்புக் கணக்கிலும் ரூ. 1,500 வரை காப்பீடு துவக்கத்தில் அளிக்கப்பட்டது. காப்பீட்டின் கீழ்வரும் வைப்புத் தொகை படிப்படியாக உயர்த்தப் பெற்று, தற்போது ரூ. 10,000 வரை வைப்புக்கள் பாதுகாக்கப்படுகின்றன. இத் திட்டத்தின் படி காப்புறுதி பெற்ற வங்கி ஏதும் நொடித்துப் போனால், ஒவ்வொரு வைப்பாளருக்கும் ரூ. 10,000 வரையுள்ள வைப்புத் தொகை முழுமையாகத் திருப்பித் தரப்படும். இத் திட்டத்தின் பயனைக் கூட்டுறவு வங்கிகளும் பெற வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு அந்தந்த மாநிலங்களில் அமுலிலிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தை அம் மாநிலங்கள் தக்க முறையில் திருத்த வேண்டும்.

**ரிசர்வு வங்கியும் கிராமக் கடன் வசதிகளும்**

இந்தியப் பொருளாதாரம் வேளாண்மையின் அடிப்படை யில் அமைந்துள்ளதை யாவரும் அறிவர். வேளாண்மைத் துறைக்கு வேண்டிய கடன் வசதிகளை விரிவு படுத்தவும் ஒருங் கிணைக்கவும் ரிசர்வு வங்கி பொறுப்பேற்பது இயல்பே. இன்றி

யமையாத இப் பணியினை மேற் கொள்ள, ரிசர்வு வங்கிச் சட்டம் பிரிவு 54-ல், ரிசர்வு வங்கி விவசாயக் கடன் துறை (Agricultural Credit Department) ஒன்றை நிறுவ வேண்டுமெனப் பணித்துள்ளது. இத் துறையின் முக்கியப் பணிகளாவன: விவசாயக் கடன் தொடர்புற்ற எல்லாச்செய்திகளையும் ஆராய்ந்து, மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பிற வங்கிகள், மாநில அரசு, மத்திய அரசு முதலியோருக்கு ஆய்வுரை வழங்க, வல்லுநர்களைக் கொண்டிருத்தல், வேளாண்மைக் கடன் தொடர்புற்ற மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பிற வங்கிகள் ஆகியவற்றின் செயலாற்றலை ஒருங்கிணைத்தல், விவசாயக் கடன் பற்றிய ரிசர்வு வங்கியின் அனைத்து நடவடிக்கைகளும் ஒருங்கிணைத்தல் என்பன. மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அல்லது பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் வழி, ரிசர்வு வங்கி வேளாண்மைக் கடன் வசதிகள்—குறிப்பாகப் பயிர்க் கால நடவடிக்கைகளுக்கும் விளை பொருள் விற்பனை யேற்பாட்டிற்கும் தேவையான கடன் வசதிகள் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ரிசர்வு வங்கி நிறுவப் பெற்ற அதே நேரத்தில் விவசாயக் கடன் துறையும் அமைக்கப் பெற்றது. விவசாயக் கடன் தொடர்புற்ற பிரச்சினைகள் அனைத்தையும் ஆய்வதே அத்துறையின் முதற் பணியாக அமைந்தது. இந்த ஆய்வின் முடிவுகளைக் கொண்ட இரு அறிக்கைகள் மூலம் ரிசர்வு வங்கி இந்திய அரசாங்கத்திற்கு அன்றிருந்த வேளாண்மைக் கடன் நிலையினை உணர்த்திற்று. விவசாயிகட்குத் தேவையான நிதி வசதியில் மிகப் பெரும் பகுதி வட்டித் தொழிலரிடமிருந்து கிடைத்து வந்தது; கூட்டுறவு நிலையங்களும் பிற நிலையங்களும் மிக மிகக் குறைவாகவே இதில் பங்கு கொண்டன. வட்டித் தொழிலர் மிகக் கடுமையான வட்டி வசூலிப்பது மட்டுமன்றி, விரும்பத் தகாத பல செயல் முறைகளையும் கையாண்டு வந்தனர். ஆகவே தக்க நடவடிக்கைகளை மேற் கொண்டு கூட்டுறவு இயக்கத்தை வலுவடையச் செய்ய வேண்டும். ரிசர்வு வங்கி இந் நோக்கத்தை யடைய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

துவக்க நிலையில் ரிசர்வு வங்கி, கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்பு கொண்டு, நாட்டிலுள்ள கூட்டுறவுக் கடன் வழங்கு அமைப்பை வலுப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. ஆனால், 1954ஆம் ஆண்டு வரை வேளாண்மைத் துறைக்குக் கடன் வழங்குவதில் பெரும் முன்னேற்றம் ஏதும் காணவில்லை. அகில இந்தியக் கிராமியக் கடன் ஆய்வுக் குழு (All India Rural Credit Survey Committee) தன் அறிக்கையை 1954ஆம் ஆண்டு

வெளியிட்டது. இந்த அறிக்கை வெளியான ஆண்டு முதல் கிராமியக் கடன் வசதி யளிப்பதில் ரிசர்வு வங்கியின் பங்கு பெருமளவுக்கு விரிவடைந்தது.

கிராமியக் கடனாய்வுக் குழு, சரியான அளவு கடன் தேவைப் படும் நேரத்தில் ஒழுங்கான முறையில், குறித்த நபருக்குப் போய்ச் சேராத ஒரு வருந்தத் தக்க நிலை யிருந்து வருவதைச் சுட்டிக் காட்டி, 'கூட்டுறவு தோல்வி யடைந்துளது. ஆனால் கூட்டுறவு அவசியம் பெற வேண்டும்' என்ற முழக்கத்தை எழுப்பியது. விவசாயிக்குத் தேவைப் படும் கடன்களில் 3 விழுக்காடு அளவு மட்டுமே, அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் வழங்கப்படுவதைக் குறிப்பிட்டு, இதில் முன்னேற்றம் காண இணைந்த கிராமியக் கடன் திட்டம் (Integrated scheme of rural crdit) ஒன்றைப் பரிந்துரைத்தது. இத் திட்டத்தைச் செயற் படுத்துவதில் ரிசர்வு வங்கிக்கு மிகப் பெரியதொரு பங்கு ஒதுக்கப்பட்டது.

இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் ஆகிய வற்றுடன் கலந்து, வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பது, பல மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு நாணய நிலையங்களுக்குப் பங்கு முதல் வழங்க, மாநில அரசாங்கங்களுக்கு நிதி வசதி யளிப்பது, குறுகிய, மத்திய, நீண்ட காலக் கடன்களை வழங்கு வதற்குக் கூட்டுறவு நாணய அமைப்பினுக்கு நிதி வசதி யளிப்பது ஆகிய மூன்று பணிகளையும் ரிசர்வு வங்கி இக் கட்டத்தில் மேற்கொள்ளலாயிற்று. பின்னர்; 1960-ல் வெளியான கூட்டுறவுக் கடன் பற்றிய குழு (Committee on co-operative credit) போன்ற குழுக்களின் பரிந்துரைகளைச் சார்ந்து, ரிசர்வு வங்கி மேலும் பல பொறுப்புக்களை ஏற்றது. கிராமியக் கடன் வசதிகளைக் கூட்டுறவுத் துறை மூலம் வழங்க, முறையான கொள்கைகளையும் செயல்முறைகளையும் உருவாக்கு வதிலும், தக்க அமைப்புள்ள நிலயங்களை வளர்ப்பதிலும் ரிசர்வு வங்கி மிகுந்த அக்கறை காட்டலாயிற்று. தீவிரச் சாகுபடித் திட்டம், உயர் ரக விளைச்சல் திட்டம் போன்ற உற்பத்திப் பெருக்கத் திட்டங்களுக்குவேண்டிய கடனுதவிகளைச் செய்வதில் ரிசர்வு வங்கி பெரும் ஈடுபாடு கொண்டது.

அன்றைய நில அடைமான வங்கிகள் வெளியிட்ட கடன் பத்திரங்களை வாங்கி, நீண்ட கால நிதி வசதிகளை ஓரளவுக்கு அளித்துவந்த ரிசர்வு வங்கி, 1963 ஆம் ஆண்டு விவசாய மறு நிதியக் கூட்டுரு (Agricultural re-finance corporation) என்ற

ஒரு துணை நிலையத்தை ஏற்படுத்தி, நீண்ட காலக் கடன் வசதிகளை மேலும் பரப்பலாயிற்று.

சிற்றளவுத் தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்குங் கூட ரிசர்வு வங்கியின் கடன் வசதிகள் கிட்ட வேண்டுமென்று கருதி, 1953 ஆம் ஆண்டு ரிசர்வு வங்கிச் சட்டம் திருத்தப் பெற்றது. மாநில கூட்டுறவு வங்கி அல்லது மாநில நிதியக் கூட்டுரு மூலம், மாநில அரசு தரும் பொறுப்புறுதியின் மீது, உற்பத்தி, விற்பனை ஏற்பாடுகளுக்குச் சிற்றளவுக் குடிசைத் தொழில்களுக்கு ரிசர்வு வங்கி கடன் கொடுக்க இத் திருத்தம் வகை செய்தது. 1956 ஆம் ஆண்டு முதல் கைத்தறி, பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், 1968—69 முதல் இருபத்திரண்டு வகைச் சிற்றளவுக் குடிசைத் தொழில்களுக்கும் நிதி யுதவி ரிசர்வு வங்கி வழங்கி வருகிறது. தொழிற் கூட்டுறவு களுக்கும் கடனுதவி வழங்க ரிசர்வு வங்கி பல நடைமுறைகளை மேற்கொண்டுள்ளது.

அண்மைக் காலத்தில் கிராமியக் கடன் நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை ஆய்வு செய்யவும், 1954 க்குப் பின் கிராமியக் கடன் துறையில் உருவாகியுள்ள மாற்றங்களை மதிப்பீடு செய்யவும் ரிசர்வு வங்கி 1966 ஆம் ஆண்டு அனைத்திந்திய கிராமியக் கடன் மறு ஆய்வுக் குழு (All—India rural credit review committee) ஒன்றை அமைத்தது. இந்த மறு ஆய்வுக் குழுவின் அறிக்கை 1969-ல் வெளிவந்தது. இந்த அறிக்கை, விவசாயக் கடன் வசதிகள் அளிக்க, கூட்டுறவுத் துறை மட்டுமன்றி, வணிக வங்கிகளும் முன்வர வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இக் குழு, இரு புது அமைப்புக்களை ஏற்படுத்துமாறு பரிந்துரைத்தது. ஒன்று கிராமிய மின்சாரக் கூட்டுரு (Rural Electrification Corporation) என்பது. மின் வாரியங்கள், கிராமிய மின்சாரக் கூட்டுறவுகள் மூலம் இக் கூட்டுறவுக் கிராமப் புறங்களில் மின்வசதி ஏற்படுத்த நிதி யுதவி வழங்கும். மற்றது சிறு விவசாயிகள் வளர்ச்சி முகமை (Small Farmers Development Agency) என்பதாகும். இவ்வமைப்புச் சிறு விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவர்களுக்கு விவசாய உள்ளீடுகள் (Inputs), பணிகள், கடன் வசதிகள் முதலியவை சரிவரக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யுமென எதிர் பார்க்கப் பட்டது. கூட்டுறவுத் துறையில் ரிசர்வு வங்கி மேலும் பெரியதொரு பங்கை ஏற்க வேண்டுமென இக் குழு பரிந்துரைத்தது.

கூட்டுறவுக் கடன் அமைப்பு, செவ்வையாகவும் திடமாகவும் அமைந்தால்தான் கூட்டுறவு இயக்கம் வலுவடையும்; மேலும் மேலும் விரிவடையும் என்ற காரணத்தால் மாநில, மாவட்ட வங்கிகள் பிரதம சங்கங்கள் ஆகியவற்றின் நடைமுறைகளை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வர, ரிசர்வு வங்கி பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உச்சி (Apex) வங்கி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மத்திய (Central) வங்கி என்ற பாணியில் சீரமைப்பு மேற்கொள்ளப் பட்டது. பிரதம சங்கங்கள் தன்னிறைவு பெற்றவையாக இருத்தல் வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, செயல்முறை மேற்கொள்ளப்பட்டது.

உற்பத்தி நோக்குடன் கடன் வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துமாறு பயிர்க் கடன் திட்ட (Crop Loan System)த்தை உருவாக்கி, அத்திட்டத்தின்படி, கடனில் பெரும் பகுதி பொருளாகவும், ஒரு பகுதி ரொக்கமாகவும் வழங்கி, பருவத்தே கடனளித்து, பருவத்தே வசூலித்து, வேளாண்மையைப் பெருக்குவதில் கூட்டுறவு, சிறப்பு மிக்க முறையுடன் செயலாற்றப் பல வழி வகைகளை ரிசர்வு வங்கி வகுத்தது. அனைத்திந்தியக் கிராமியக் கடன் மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரைப்படி, கிராமியக் கடன் வசதிகள் குறித்துக் கொள்கைகளை வகுக்கவும் மறு ஆய்வு செய்யவும் உயர் அதிகாரம் அமைந்த 'வேளாண்மைக் கடன் வசதி அவை' (Agricultural Credit Board) 1970-ல் ஏற்படுத்தப்பட்டது. ரிசர்வு வங்கியின் கவர்னர் இந்த அவையின் தலைவராவார்.

வேளாண்மைத் துறைக்கு ரிசர்வு வங்கி கடன் வசதிகளை அளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது எனக் கண்டோம். நேரடியாக விவசாயிகளுக்கு ரிசர்வு வங்கி கடன் வழங்குவதில்லை. கூட்டுறவுத் துறையின் மூலமே விவசாயக் கடன்கள் அளிக்கப்படுகின்றன. குறுகிய, மத்திய காலக் கடன்கள் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மூலமும், நீண்ட காலக் கடன்கள் மத்தியக் கூட்டுறவு நில வள வங்கிகள் மூலமும் வழங்கப்படுகின்றன. மாநில அரசாங்கங்கள் பொறுப்புறுதியுடன் வெளியிடப்படும் மத்தியக் கூட்டுறவு நில வள வங்கிகளின் கடன் பத்திரங்களை வாங்கிக்கொள்ளுவதன் வழி, ரிசர்வு வங்கி நீண்ட காலக் கடன் வசதிகளுக்கு நிதி யளிக்கின்றது. இவை யன்றி, கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற்றுள்ள சிற்றளவுக் குடிசைத் தொழில்களுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நடைமுறை முதல் தேவைகளுக்கு நிதி வசதி யளிக்கப்படுகின்றது.

வங்கியச் சட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தும் என்று 1965-ல் சட்டம் இயற்றப்பட்ட பின், ரிசர்வு வங்கி சட்ட முறையாகக் கூட்டுறவு வங்கிகளை ஆய்வு செய்யும் உரிமை பெற்றது. இச் சட்டம் இயற்றப்படுமுன் கூட்டுறவு வங்கிகளின் இசைவின்பேரில் ரிசர்வு வங்கி ஆய்வு நடத்தி வந்தது. ஆய்வின்போது வங்கியின் செயல் முறைகளில் காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை நீக்குதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ரிசர்வு வங்கி அறிவுரை வழங்கும். திருத்திய சட்ட விதிகளின்படி, மாநிலக் கூட்டுறவு வங்கிகள் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் என்ற தகுதியைப் பெறும் அருகதை பெற்றுள்ளன. நெருக்கடி எதனையும் சமாளிக்கக் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வு வங்கியிடம் கடன் வாங்கிக்கொள்ளலாம். வங்கியச் சட்டங்களைக் கூட்டுறவு வங்கிகள்மீது அமுல் படுத்தும்போது தொடர்புள்ள மாநில அரசாங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள், ரிசர்வு வங்கியின் ஆலோசனைக் குழு முதலானவர்களைக் கலந்து கொண்டு, முக்கியக் கொள்கைகளை ரிசர்வு வங்கி உருவாக்கும் என இச் சட்டங்களை இயற்றும்போது உறுதி கூறப்பட்டது.

### ரிசர்வு வங்கியும் தொழில் நிதியமும்

இந்திய நாடு ஒரு வேளாண்மை நாடு என்ற காரணத்தால் ரிசர்வு வங்கி வேளாண்மை முன்னேற்றத்தில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளது என்று கண்டோம். இந்திய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தொழில் வளர்ச்சி மிக இன்றியமையாததாகத் தேவைப் படுகின்றது. நம் நாட்டு மைய வங்கியான ரிசர்வு வங்கி, தொழில் வளர்ச்சிக்கு நிதி வசதியளிப்பதில் பெரும் அக்கறை காட்டி வருகின்றது. அனைத்திந்திய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் தொழில்களுக்கு மத்திய, நீண்ட காலக் கடன்கள் வழங்க, சட்ட முறையாகக் கூட்டுருக்கள் (Corporation) அமைக்க, ரிசர்வு வங்கி முயற்சிகளை மேற்கொண்டது. முதன் முதலில் 1948ஆம் ஆண்டு இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு (Industrial Finance Corporation of India) நிறுவப்பெற்றது. இதை யடுத்து, 1949-ல் அன்றைய சென்னை மாநிலத்தில், சென்னை மாநிலத் தொழில் முதலீட்டுக் கூட்டுரு (Madras Industrial Investment Corporation) தொழில்களுக்கு மத்திய, நீண்ட காலக் கடன்கள் அளிக்கும் பொருட்டுத் துவங்கப்பெற்றது. 1953ஆம் ஆண்டிலிருந்து பல மாநிலங்களில் மாநிலத் தொழில் நிதியக் கூட்டுருக்கள் ஏற்படுத்தப் பட்டன. 1958 ஆம் ஆண்டில் பெரும் வணிக வங்கிகளுடன் கூடி, தொழில் மறு நிதியக் கூட்டுரு என்ற தனி வரையறுத்த

அமைப்பினை (Re-finance Corporation for Industry Private Limited) நிறுவியது. குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டு, உறுப்பு வங்கிகள் தொழில் துறைக்கு வழங்கும் மத்திய காலக் கடன்களுக்கு இக் கூட்டுரு, மறு நிதி வழங்கும் நோக்கத்துடன் நிறுவப் பெற்றது. சிற்றளவுத் தொழில்களுக்குக் கடன்கள் வழங்குவதை ஊக்குவிக்கக் கடன் பொறுப்புறுதித் திட்டம் (Credit Guarantee Scheme) ஒன்றை மத்திய அரசின் சார்பாக 1960ஆம் ஆண்டிலிருந்து ரிசர்வு வங்கி செயற்படுத்தி வருகின்றது.

மேற்கண்ட தொழில் நிதிய நிலையங்களல்லாமல், இந்தியத் தொழில் நிதிய முதலீட்டுக் கூட்டுரு (Industrial Credit and Investment Corporation of India Limited) என்ற உலக வங்கியும் பிற வெளி நாட்டினரும் கூட்டாக அமைந்த நிலையமும், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation of India)வும் தொழில் வளர்ச்சிக்கு நிதி யுதவி யளிக்கின்றது, மற்றும் 1964-ல் அமைக்கப்பெற்ற யூனிட் டிரஸ்ட் (Unit Trust of India) என்னும் நிலையமும் தொழில் கம்பெனிகள் வெளியிடும் பங்கு, கடன் பத்திரங்களை வாங்கல், ஒப்புறுதி (Underwrite) யளித்தல் போன்ற செயல்களை மேற்கொள்வதன் மூலம் தொழிலுக்கு நிதி வசதி யளிக்கின்றன. இத்துணைத் தொழில் நிதிய நிலையங்களுடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், அவற்றிடை இரட்டிப்புக் கடன் வழங்கு வாய்ப்புக்களைத் தவிர்க்கவும் ஒரு புது மத்திய நிலையம் தேவைப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் ஜூலை 1964-ல் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Developmont Bank of India) என்ற ரிசர்வு வங்கிக்கு முழுதும் சொந்தமான துணை நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இந்தியத் தொழில் நிதியக் கூட்டுருவின் பெரும்பான்மைப் பங்குகளும், தொழில் மறு நிதியக் கூட்டுருவும் இந்தியத்தொழில் வளர்ச்சி வங்கிக்கு 1964-ல் மாற்றப்பெற்றது. தொழில் கடன்கள் வழங்கும் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், தொழில் நிதியக் கூட்டுருக்கள் ஆகியவற்றிற்கு மறு நிதி வழங்குதல், மத்திய கால ஏற்றுமதிக் கடன்களுக்கு மறு நிதி வழங்குதல், பெரிய முக்கியத் தொழிலமைப்புக்களுக்கு நேரடியாகக் கடன் வழங்குதல், அல்லது அவை வெளியிடும் பங்கு, கடன்பத்திரம் முதலியவற்றை ஒப்புறுதி செய்தல், ஏற்றுமதி வணிகத்தை ஊக்குவிக்க, பிற வங்கிகளுடன் கூடி, ஏற்றுமதிச் சரக்குத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு நேரடிக் கடன் வசதியளிப்பது, நம்நாட்டில் தயாரிக்கப்படும் இயந்திரங்களைப் பின் செலுத்து முறை (Deferred Payment System) வசதி யளித்து, விற்பனை செய்யும் இயந்திரத்

தயாரிப்பாளர்களுக்கு அவர்கள் எழுதிய மாற்றுச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்தல் போன்ற பல பணிகளை மேற்கொண்டு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி நம் நாட்டின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றது.

**நாணயமாற்று நிருவாகமும் கட்டுப்பாடும்**

நாட்டின் செலாவணியான ரூபாயின் புற மதிப்பு (External Value) மாறுபடாமல் காக்கும் பொறுப்பு மைய வங்கியான ரிசர்வு வங்கியின் பொறுப்பேயாகும். இது காரணமாக, நாட்டிலுள்ள அயல்நாட்டுச் செலாவணியின் இருப்பில் பெரும்பகுதி ரிசர்வு வங்கி தன்னிடம் வைத்திருக்கிறது. நாட்டுச் செலாவணியின் புற மதிப்பும் அக மதிப்பும் நெருங்கிய தொடர்புள்ளன. நாட்டின் பொருளாதார வலிமை, பொருளாதார, நாணய நிருவாகம் ஆகியவற்றைப் பொறுத்தே செலாவணியின் அக மதிப்பு (Internal Value) அமைகின்றது. உள்நாட்டுக் கொள்கைகளின் ஆட்சிக்கு அப்பாற்பட்ட உலக உற்பத்தி-விலைத் தொடர்புகள் காரணமாக, செலாவணியின் புற மதிப்புப் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்பதும் நினைவிலிருத்தத் தக்கது.

தக்க பணவியற் கொள்கைகளைக் கடைப்பிடித்து, நாட்டின் பொருளாதார நிலை சீராக இருக்கவும், அதன் வழி நாணயமாற்று நிலை சீராக இருக்கவும், ரிசர்வு வங்கி பொறுப்பேற்றுக் கொள்வதுடன், வியாபாரத்தில் இயல்பாகக் காணப்படும் குறுகிய கால ஏற்றத் தாழ்வுகளால் பன்னாட்டு நாணய நிதி (International Monetary Fund)க்கு அறிவித்துள்ள நாணய மாற்று விகிதம் பாதிக்கப்படாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் குறிக்கோளை யடைய, நம் நாட்டின் மொத்த அயல் செலாவணி இருப்பும் ரிசர்வு வங்கியிடம் மையப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது, பொன், அயல்நாட்டுச் சொத்துக்கள், வெளி நாடுகளிலுள்ள அரசு இருப்புக்கள் ஆகியவை, புறக் காப்புக்கள் (External Reserves) எனக் கருதப்படுகின்றன. செலுத்து நிலை (Balance of Payments)யில் ஏற்படும் தற்காலிக சமனற்ற நிலையினைச் சமாளிக்க இந்தப் புறக் காப்புக்கள் போதவில்லையாயின், ஓர் உறுப்பு நாடு என்ற முறையில் இந்தியா, பன்னாட்டு நாணய நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கடன் வசதி படிப்படியாகத் தாராளமாக வழங்கப்பட்டு வருவதுடன், 1970ஆம் ஆண்டு முதல் தனி எடுப்புரிமை (Special Drawing Rights) என்னும் வசதியும் தரப்படலாயிற்று. இதனைப் பொன் தாள் (Paper Gold) என்றும் குறிப்பிடுவர். இத்தனை ஏற்பாடுகளிருந்தும், வளர்ச்சி பெற்று வரும் இந்தியா போன்ற நாடு

களுக்குப் பெருமளவு அயல் செலாவணி வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவைப்படுவதால் இந்தக் கடன் வசதி போதுமானதாக இல்லை. இந்தியா பாதுகாப்பு விதிகளின்படி 1939-ல் கொண்டுவரப்பட்ட நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள், பின்னர் அயல்நாட்டு நாணய மாற்று ஒழுங்காற்றுச் சட்டம் என்ற பெயரில் 1947-ல் சட்டமாக இயற்றப்பட்டது.

தன் கணக்கிலும், அரசின் சார்பிலும் அயல்நாட்டு நாணய மாற்று நடவடிக்கைகளை ரிசர்வு வங்கி மேற்கொள்ளச் சட்டம் வகை செய்துள்ளது. ரிசர்வு வங்கி அனுமதித்துள்ள நாணய மாற்று விகிதங்கள்படி மட்டுமே அயல் நாட்டு நாணயமாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

அயல்நாட்டுச் செலாவணியின் அளிப்பு அளவாக இருந்த போதிலும், அதற்குத் தேவை மிகுந்திருக்கின்ற காரணத்தால் நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள் அவசியமாகின்றன. செலுத்தங்கள் மீது கட்டுப்பாடு, தேவையினைக் குறைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. நாட்டிற்குள் வரும் அயல் நாட்டுச் செலாவணி அனைத்தையும் மையப்படுத்தி, ஒன்று திரட்டிப் பின்னர் அதைச் செலுத்தங்களுக்குப் பயன்படுத்தும் பொருட்டு வரத்தின் மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வு வங்கி அயல்நாட்டுச் செலாவணி வாங்கல், விற்றலில் பொதுமக்களிடம் நேரடித் தொடர்பு ஏதும் கொள்ளுவதில்லை. ரிசர்வு வங்கியின் அனுமதி பெற்ற வணிகரே அயல் நாட்டு நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடலாம். அயல் நாட்டு நாணயமாற்று நடவடிக்கைகளைத் திறம்பட நடத்தவும் ஈர்க்கவும் தகுதியுள்ள சில பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளுக்கு மட்டுமே ரிசர்வு வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இவ் வங்கிகளன்றி. அனுமதி பெற்ற பணமாற்றுநர் (Authorised money changers) எனப்படும் உரிமம் பெற்ற வணிகரும் அயல்நாட்டுச் செலாவணித்தாள், நாணயங்களை வாங்கவும் விற்கவும், அயல்நாட்டுச் செலாவணி பயணக் காசோலைகளை வாங்கவும் செய்கின்றனர்.

**ரிசர்வு வங்கியும் ஸ்டேட் வங்கியும்**

ரிசர்வு வங்கி, இன்றைய ஸ்டேட் வங்கி எனப்படும் அன்றைய இம்பீரியல் வங்கியுடன் 15 ஆண்டு கால உடன்பாடு ஒன்று செய்துகொண்டது. இரு தரப்பில் எவரும் ஐந்தாண்டு முன்னறிவிப்புக் கொடுத்து உடன்பாட்டை முடிவுக்குக்கொண்டு

வரலாம். இந்த உடன்பாட்டின்படி ஸ்டேட் வங்கி, இந்தியாவில் ரிசர்வு வங்கியின் கிளை யில்லாத இடங்களில், ரிசர்வு வங்கியின் தனி முகவர் (Sole Agent) என்ற நிலையில் செயலாற்றும். அரசாங்கத்தின் சார்பாக வரத்து, பட்டுவாடா செய்யப்படும் தொகையின் பேரில் ஆண்டுக்குக் குறிப்பிட்ட ஒரு சத விகிதப் படிக் கழிவு வழங்கப்படும். அரசாங்கத்திற்காகச் செய்யும் இப் பணிகளுக்குத் தரப்படும் கழிவு விகிதம், ஐந்தாண்டுக் கொரு முறை இப் பணிகளுக்கு ஆகும் செலவினையொட்டி மாற்றியமைக்கப்படும்.

ரிசர்வு வங்கி 1960ஆம் ஆண்டு ஸ்டேட் வங்கியுடனும், ஸ்டேட் வங்கி தன் எட்டுத் துணை வங்கிகளுடனும் புதிய முகமை உடன்பாடு (Agency agreement)களைச் செய்துகொண்டன. கருவூலங்களும் துணைக் கருவூலங்களும் உள்ள இடங்களில் ரிசர்வுவங்கியின் சார்பாக ஸ்டேட் வங்கியின் முகவராகத் துணை வங்கிகள் அனுப்புகை, மாற்று வசதிகளைப் பொதுமக்களுக்குச் செய்து தரல் வேண்டும் என்று உடன்படிக்கை பணிக்கின்றது. இந்தத் துணை வங்கிகள் முகவர் பணி புரியும் பொருட்டு, அவற்றின் கிளைகளில் படிப்படியாகச் செலாவணிப் பெட்டகங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. உடன்பாட்டின்படி துணை வங்கிகளுக்கு ஸ்டேட் வங்கி கொடுக்கும் கழிவுத் தொகையை ரிசர்வு வங்கி ஈடுசெய்து கொடுக்கிறது.

**ரிசர்வு வங்கியின் இலாப ஈவு, காப்பு நிதி**

துவக்கத்தில் ரிசர்வு வங்கி பங்குநர் வங்கியாக இருந்தது. 1934ஆம் ஆண்டுச் சட்டம், கவர்னர் ஜெனரல் நிருணயிக்கும் 5 விழுக்காட்டிற்கு மிகாத குவிந்த இலாப ஈவு, பங்கு முதல் மீது தரப்படலா மென்றும், உபரித் தொகையில் கூடுதல் இலாப ஈவு, குறிப்பிட்ட ஓர் அளவுப் படி தரப்படலாமென்றும், மீதமுள்ளது கவர்னர் ஜெனரலுக்குத் தரப்பட வேண்டுமென்றும், காப்பு நிதி பங்கு முதலுக்கும் குறைவாக இருக்கும் வரை, ரூபாய் 50 இலட்சத்துக்குக் குறையாத உபரித் தொகையைக் காப்பு நிதிக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் விதித்தது. பங்குகளை வெளியிட்ட காலத்தில் இலாப ஈவு $3\frac{1}{2}$ விழுக்காடாக இருக்குமென்று நிருணயிக்கப் பட்டது. 1939-ல் வங்கியின் நிகர இலாபம் ரூ. $22\frac{1}{2}$ இலட்சமாக இருந்தது. இதில் $3\frac{1}{2}\%$ இலாப ஈவு கொடுக்க, ரூ. $17\frac{1}{2}$ இலட்சம் தேவைப் பட்டது. மீதித் தொகை, காப்பு நிதிப் பங்கு முதலான ரூ. 5 கோடியை எட்டி விட்டதால், இந்திய அரசினர்க்குச் செலுத்தப்பட்டது. 1943-ல் இலாப ஈவு விகிதம் 4% ஆக உயர்த்தப் பெற்றது.

1941 ஜூன் இறுதியில் கிடைத்த ரூ. 2·79 கோடி இலாபம் 1945-ல் ரூ. 14·87 கோடியாக உயர்ந்து போயிற்று. கடந்த சில ஆண்டுகளாக இலாபம் உயர்ந்த வண்ணமிருந்து வருகிறது. ரிசர்வு வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது முதல் இலாபத் தொகை முழுதும் இந்திய அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்டு வருகிறது. 1935 ஜூன் இறுதியில் அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 48 கோடி, 1972 ஜூன் இறுதியில் இது ரூ. 120 கோடியாக உயர்ந்துள்ளது. இதே நாளில் காப்பு நிதியிலுள்ள தொகை ரூ. 150 கோடியாகும்.

**ரிசர்வு வங்கியின் இயக்கமும் கொள்கையும்**

ரிசர்வு வங்கி துவங்கப் பெற்ற போது அதனைச் சிலர் மன மூவந்து வரவேற்கத் தயாராக இல்லை; வெளியிலிருந்து ஒட்டுவிக்கப்படும் ஒரு நிறுவனமாக அதைக் கருதினர். அரசினரின் முகவர் என்ற சலுகை, பிற வங்கிகளும் அரசினரும் தமது நிதியினை வட்டி யேதும் பெறுமல் ரிசர்வு வங்கியிடம் வைத்திருத்தல், செலாவணித் தாள் வெளியிடும் தனி யுரிமை முதலியவை ரிசர்வு வங்கிக்கு அமைந்த காரணத்தால் அதைத் தமக்குப் போட்டியாக ஏற்பட்ட நிறுவனமென்று பல வங்கிகள் கருதலாயின. இந்தச் சூழ் நிலையில், பணச் சந்தையின் பல்வேறு உறுப்புக்களை ஒருங்கிணைத்து, அவற்றிடையே கூட்டுறவை வளர்த்துப் பணச் சந்தையினை வலுப்படுத்த ஏற்படுத்தப்பட்ட ரிசர்வு வங்கி, இக்கட்டான நிலையைச் சமாளித்துப் படிப்படியாக, தன் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டியிருந்தது. எதிர்ப்பும் மனக் கசப்பும் இல்லாமல் வங்கிகளனைத்தையும் தமது தலைவனாக ஏற்றுக்கொள்ளும்படி நடந்துகொண்டு, அதே நேரத்தில் வங்கிய நலன்களை வளர்க்கும் கட்டுப்பாடுகளையும் அமுல் செய்து கொண்டு, ரிசர்வு வங்கி செயற்பட வேண்டியிருந்தது.

நல்ல வலுவான தொரு வங்கிய முறையை வளர்க்கவும், பொருளாதார நிலையை மேம்படுத்த உதவும் பல் வகை நிதி நிலையங்களை உருவாக்கவும், பிற நாட்டில் மைய வங்கிகள் உழைத்தது போன்று இந்திய ரிசர்வு வங்கியும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குவது, அவற்றைக் காலந்தோறும் ஆய்வு செய்வது, அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துவது போன்ற அதிகாரங்களைப் பயன் படுத்தி, சீரான, செம்மையான வணிக வங்கிய முறை அமைய ரிசர்வு வங்கி உதவியது. இந்தியப் பொருளாதாரத்திற்குத் தூணாக விளங்கும் வேளாண்மை

உயர்வுற, வேளாண்மைக் கடன் வசதிகளை யளிக்கும் நிலையங்களுக்குப் புத்துணர்ச்சி யூட்டி, கூட்டுறவுத் துறையினைச் சீராக்கி, நிதி நிலையின் பற்றுக் குறைகளை நிறைவு செய்ய, முயற்சிகளை ரிசர்வு வங்கி மேற் கொண்டது. தொழில் துறையில் தேவைப் படும் மத்திய, நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கத் தனி வகை நிதி நிலையங்களை ஏற்படுத்தவும் வளர்க்கவும் ரிசர்வு வங்கி உதவியது. சமூக நீதியை வளர்க்க, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்ற, வங்கிகள் முனைந்து செயற்படும் வகையில், வங்கியக் கொள்கைகளை வகுத்து, அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் ரிசர்வு வங்கி பெரும் ஆர்வமும் அக்கறையும் காட்டி வருகின்றது.

கடந்த 37 ஆண்டுகளாக ரிசர்வு வங்கி செயலாற்றி வந்துள்ள முறையினை நோக்குங்கால், அது நம் நாட்டின் நிதிய, வங்கியத் துறைகளில், புதியதோர் யுகத்தைத் துவக்கியுள்ளது புலனாகும். பணச் சந்தை ஒன்றை உருவாக்கவும், திடமான வங்கிய முறையை நிறுவவும், ரிசர்வு வங்கி வெற்றிப் பாதையில் சென்றுகொண்டிருப்பதும், எவரும் ஒப்புக்கொள்ளும் ஓர் உண்மையாகும். மத்திய, மாநில அரசுகளுக்கு மிகவும் குறைந்த வட்டிக்குக் கடன்களைத் திரட்டித் தருவதிலும் ரிசர்வு வங்கி வெற்றி கண்டிருக்கிறது. கருவூலச் சீட்டுக்களை விற்பதிலும், இந்திய அரசின் சார்பாக வெளி நாடுகளுக்குப் பணம் அனுப்புகை செய்வதிலும் ரிசர்வு வங்கி முக்கியப் பங்கேற்றுள்ளது. நிதிப் பிரச்சினைகள், வங்கியப் பிரச்சினைகள் குறித்து அவ்வப்போது மத்திய அரசுக்கு ரிசர்வு வங்கி வழங்கி வரும் அறிவுரை பெரிதும் போற்றப்படுகிறது. சிலர், தற்காலத்தில் காணப்படும் பெருமளவு பண வீக்கத்திற்கு ரிசர்வு வங்கியைக் குறை கூறுகின்றனர். இது நியாயமானதாகத் தோன்றவில்லை. முதலில் உலகப் போருக்காகவும், பின்னர் ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயற்படுத்தவும் அரசுக்குத் தேவைப்பட்ட பணத்தை அளிக்கும் பொறுப்பு ரிசர்வு வங்கிக்கு இருந்ததை மறத்தலாகாது. இருந்தும், பண வீக்கத்தினால் விளையக் கூடிய கேடுகளை ஓரளவுக்கேனும் தவிர்க்க ரிசர்வு வங்கி அவ்வப்போது பல நடவடிக்கைகளை மேற்கொண்டது; உண்மையாகவே, வியாபாரத்திற்குத் தேவைப்படும் கடன் வசதிகளை மட்டுமே வணிக வங்கிகள் செய்து தரலாமென்றும், ஊக வணிகத்திற்கும், சரக்கு முடங்கலுக்கும் பண வசதிகள் செய்து தரப்படலாகாது என்றும் அவ்வப்போது அறிவுறுத்தி வந்துள்ளது. வங்கி வசதிகளை நாடு முழுதும் பரப்பி, வங்கி தரும் கடன் வசதிகளைப் பொருளாதார நிலையில் மிகவும் நலிந்

துள்ளோரும் பெறும் வகையில் சட்ட திட்டங்களைச் செயற் படுத்தி வருகின்றது.

ரிசர்வு வங்கியின் முக்கிய நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள, அதன் வெளியீட்டு இலாகா, வங்கிய இலாகா ஆகிய வற்றில் இடம் பெறும் சொத்து, பொறுப்புக்களைக் கவனிக்க வேண்டும். இது குறித்த செய்திகள் வெள்ளிக்கிழமை தோறும் திரட்டப்பட்டு, முக்கியச் செய்தித் தாள்களிலும், பிற பணவியல் தொடர்புள்ள இதழ்களிலும் வெளியிடப்படு கின்றன. ரிசர்வு வங்கி வெளியிடும் மாத இதழான ரிசர்வு வங்கி செய்தி யறிக்கை (Reserve Bank of India Bulletin) யிலும் நுணுக்கமான புள்ளி விவரங்களனைத்தும் இடம் பெறுகின்றன. இவ்விதழில் காணப்படும் செய்திகள் ஆராய்ச்சிக்கும், திட்டம் தீட்டவும், கொள்கை வகுக்கவும் பயன்படுகின்றன.

## பட்டியல் 4—1

**இந்திய ரிசர்வு வங்கி (ரூ. கோடிக்கணக்கில் 29—9—1972)**
**வெளியீட்டு இலாகா (Issue Department)**

| | |
|---|---|
| வங்கிய இலாகாவில் வைத்திருக்கும் நோட்டு | 26·78 |
| புழக்கத்திலிருக்கும் நோட்டு | 4,503·37 |
| மொத்தம் வெளியிடப்பட்ட நோட்டு | 4,530·15 |
| *பொன் நாணயம், கட்டி | 182·53 |
| அயல்நாட்டுப் பிணைகள் | 211·65 |
| ரூபாய் நாணயம் | 36·67 |
| இந்திய அரசின் ரூபாய் பிணைகள் | 4,099·29 |
| **வங்கிய இலாகா (Banking Department)** | |
| மத்திய அரசின் வைப்புக்கள் | 125·05 |
| மாநில அரசுகளின் வைப்புக்கள் | 16·75 |
| பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வணிக வங்கிகளின் வைப்புக்கள் | 263·06 |
| பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புக்கள் | 12·15 |
| பின்னிணைப்புப் பட்டியலில் இடம்பெரு மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புக்கள் | 1·00 |
| பிற வங்கிகளின் வைப்புக்கள் | 0·44 |

*1969 ஜனவரி 31 வரை வெளியீட்டு இலாகாவிலிருந்த பொன் காப்பு 10 கிராம் ரூ. 53·58 என்றும், அதன்பின் 10 கிராம் ரூ. 84·39 என்றும் மதிப்பீடு செய்யப்பட்டது.

பட்டியல் 4—1 (தொடர்ச்சி)

| | |
|---|---|
| பிற வைப்புக்கள் | 84·25 |
| பிற பொறுப்புக்கள் | 951·54 |
| மொத்த பொறுப்புக்கள் அல்லது சொத்துக்கள் | 1,454·26 |
| நோட்டுக்களும் நாணயங்களும் | 26·90 |
| அயல்நாட்டில் வைத்திருக்கும் இருப்பு | 140·60 |
| **கடன்கள்** | |
| (i) மத்திய அரசுக்கு | …….. |
| (ii) மாநில அரசுகளுக்கு | 55·93 |
| பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வணிக வங்கிகளுக்கு | 3·67 |
| மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு | 254·01 |
| பிற கடன்கள் | 101·53 |
| வாங்கிய, தள்ளுபடி செய்த உள்நாட்டுச் சீட்டு | 1,21 |
| அரசினர் கருவூலச் சீட்டு | 591·42 |
| முதலீடுகள் | 242·76 |
| பிற சொத்துக்கள் | 36·24 |

ரிசர்வு வங்கியின் அமைப்புப் படம்



**மத்திய அலுவலகப் பிரிவுகள் :**

செயலரின் பிரிவு
நிருவாகம், ஊழியர் பிரிவு
கணக்கு, செலவுப் பிரிவு
மனைப் பிரிவு
ஆய்வுப் பிரிவு
சட்டப் பிரிவு
நாணய மாற்றுக் கட்டுப்பாட்டுப் பிரிவு
வங்கிய நடவடிக்கைகள், வளர்ச்சிப் பிரிவு
வங்கியல்லாப் பிற கம்பெனிகள் பிரிவு
வேளாண்மைக் கடன் பிரிவு
தொழில் நிதியப் பிரிவு
பொருளாதாரப் பிரிவு
புள்ளியியல் பிரிவு
இந்திய ரிசர்வு வங்கிப் பணிகள் அவை

அலுவலகங்கள் : பம்பாய்
கல்கத்தா
சென்னை
புது டெல்லி

கிளைகள் : பெங்களூர்
பைகுல்லா (பம்பாய்)
ஐதராபாத்
கான்பூர்
நாக்பூர்
பாட்னு

பிராந்திய அலுவலகங்கள் : ஜெய்பூர்
திருவனந்தபுரம்
அகமதாபாத்
புவனேசுவரம்
கௌஹாத்தி
இந்தூர்
ஜம்மு/ஸ்ரீநகர்
சண்டிகார்

ரிசர்வு வங்கியின் தலைமை அலுவலகம் பம்பாயில் உள்ளது. வங்கியல்லாத பிற கம்பெனிகள் பிரிவு மட்டும் கல்கத்தாவில் செயற்பட்டு வருகிறது. மேலே காணப்படும் படம் வங்கியின் உள்ளமைப்பை விளக்குகிறது. அலுவலகம் அல்லது கிளை எனப்படும் இடங்களில் வங்கிய வெளியீட்டுப் பிரிவுகளின் கிளைகள் தனித்தனியாக இயங்கி வருகின்றன. வங்கியப் பிரிவின் தலைவர், மேலாளர் வெளியீட்டுப் பிரிவின் முதல் அதிகாரி, செலாவணி அலுவலர் (Currency officer) என்றாலும் மொத்த அலுவலகத்திற்கும் மேலாளரே தலைவராவார்.

### வங்கியப் பிரிவு

வங்கியப் பிரிவு நான்கு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை பொதுக் கணக்குப் பிரிவு, பொதுக் கடன் அலுவலகம், வைப்புக்கணக்குப் பிரிவு, பிணையங்கள் பிரிவு என்பனவாகும்.

### வெளியீட்டுப் பிரிவு

இந்தியா செக்யூரிடி அச்சகம் (நாசிக்கில் அமைந்துள்ளது) வெளியிடும் செலாவணி நோட்டுக்களைப் பெற்று, கருவூலங்களுக்கும், துணைக் கருவூலங்களுக்கும், வங்கியின் முகமையர்க்கும், துணை முகமையர்க்கும் அனுப்பும் பொறுப்பு வெளியீட்டுப் பிரிவினதாகும். இப்பணியைத் திறம்படச் செய்ய இப்பிரிவினைப் பொதுப் பிரிவு என்றும் ரொக்கப் பிரிவு என்றும் இரண்டாகப் பிரித்துள்ளனர். பொதுப்பிரிவு நோட்டுக்களைச் செலாவணிப் பெட்டகங்களுக்கு அனுப்பும் பொறுப்புக் கொண்டதாகும். ரொக்கப் பிரிவு, ரொக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, வங்கியிலிருந்து செலாவணிப் பெட்டகங்களுக்குப் பணம் அனுப்புகை செய்யும்.

### மத்திய அலுவலகப் பிரிவுகள்

பம்பாயிலுள்ள மத்திய அலுவலகத்தின் உள் அமைப்பைச் சுருக்கமாகக் காண்போம்:

### செயலரின் பிரிவு (Secretary's Department)

வங்கியின் கொள்கையுடன் தொடர்புற்ற பல்வேறு செய்திகளைக் கவனிப்பது இப்பிரிவின் முக்கியப் பணியாகும். வங்கியின் வெளிக் சந்தை நடவடிக்கைகள், கருவூலச் சீட்டுகள், மத்திய, மாநில அரசுகளுக்குக் கடன் திரட்டுதல் பற்றிய கொள்கை, பன்னாட்டு நாணய நிதி, உலக வங்கி போன்ற பன்னாட்டு நிலையங்களுடன் நடவடிக்கைகள், மத்திய அவை, அதன் குழு ஆகியவற்றின் கூட்டங்களோடு தொடர்புற்ற

அலுவலகப் பணி; வங்கியின் பிரிவுகளில் ஒன்றுக்கு மேல் தொடர்புற்ற செய்திகள் குறித்துப் பரிசீலனை செய்து, அவற்றை ஒருங்கிணைத்தல், பருவ காலத்திற்குத் தக்க நாணயக் கொள்கை உருவாக்குதல், மத்திய, மாநில அரசினரின் வரவு செலவுத் திட்டங்களைப் பொருளாதாரப் பிரிவுடன் கலந்து பரிசீலனை செய்து, இயக்குநர் அவை அல்லது நிருவாக மேலாண்மையினர் அளிக்கும் கருத்துக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்தல், பணச் சந்தையிலும், மூலதனச் சந்தையிலும் அவ்வப்போது காணப்படும் நிலவரங்களைக் குறித்து விளக்கமான அறிக்கைகளை அரசிற்குத் தயாரித்தளித்தல் போன்ற பணிகள் இப்பிரிவில் மேற்கொள்ளப் படுகின்றன. பொதுமக்கள், பத்திரிகையாளர்களுடன் தொடர்பு கொள்ளு வதும் இப்பிரிவே.

**நிருவாகம், ஊழியர் பிரிவு** (Department of Administration and Personnel)

பொது நிருவாகம், ஊழியரின் பயிற்சி, பணியாண்மையர்—பணியாள் உறவு ஆகிய செய்திகளை முதல் மேலாளர் (Chief Manager) பொறுப்பில் இயங்கும் நிருவாக, ஊழியர் பிரிவு கவனித்து வருகிறது. மேற்பார்வை செய்யும் அதிகாரிகள், அலுவலர் நீங்கலாகப் பிற ஊழியர்களை வேலைக்குச் சேர்ப்பது, பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஊழியர்களுக்குப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வது, ஊழியரின் பணி நிலை குறித்த நடவடிக்கைகளைக் கவனிப்பது, ஊழியர் ஊதியம், பிற நலந் தரு திட்டங்களைக் கவனிப்பது எல்லாம் இப் பிரிவின் பொறுப் பாகும்.

இப் பிரிவின் ஒரு முக்கியப் பகுதியாக விளங்குவது அமைப்பு, செய்முறைப் பகுதி (Organistation and methods division) எனப் படும் புதியதொரு ஏற்பாடாகும். வங்கியிலுள்ள பல்வேறு பிரிவுகளில் செய்யப்படும் பணிகளின் செய்முறை, நடைமுறைகளைத் தொடர்ந்து ஆராய்ந்து, அவற்றை மேலும் சீராகவும் திறனுகவும் செய்ய வழி முறைகளைப் பரிந்துரைப்பது இப்பகுதியின் பெரும் பொறுப்பாகும்.

**பணிகள் அவை** (Services Board)

அலுவலர், மேற்பார்வை அதிகாரிகளை நியமிக்க, தேர்வு, நேர்முகப் பேட்டி முதலியவற்றைப் பயன்படுத்தி, அலுவலர் தேர்ந்தெடுக்கும் முறை போன்ற செய்திகளில் அறிவுரை கூற அமைக்கப்பட்டிருப்பது பணிகள் அவை.

**கணக்குச் செலவுப் பிரிவு**

வங்கியின் வெளியீட்டு வங்கியப் பிரிவுகளின் கணக்குகளை எழுதிவைப்பது, மேற்பார்வை செய்வது, அப் பிரிவுகளின் வாராந்தர ஆண்டுக் கணக்குகளைத் தயாரிப்பது, வங்கியின் எல்லாப் பிரிவுகளிலும் ஆகும் செலவைக் கட்டுப்படுத்தல் போன்ற செய்திகளைக் கவனிப்பது இப்பிரிவின் பொறுப்பாகும். செலாவணித் தாள் (கரன்சி நோட்டு) அச்சிட்டு வெளியிடுவது, நாணயங்கள் தயாரிப்பது, செலாவணிப் பெட்டகங்கள் நிறுவுவது போன்ற செய்திகள் குறித்த கொள்கை, நடைமுறை முதலியவற்றை இப்பிரிவு கவனித்துக்கொள்கிறது.

**மனைப் பிரிவு** (Premises Department)

வங்கியின் அலுவலகங்கள், பயிற்சி நிலையங்கள், ஊழியர் குடியிருப்பு முதலியவற்றிற்குத் தேவைப்படும் கட்டடங்களைக் கட்டும் பொறுப்பு மனைப் பிரிவினதாகும்.

**ஆய்வுப் பிரிவு** (Inspection Department)

வங்கியின் ஆய்வாளர் தலைமையில் இயங்கி வரும் இப்பிரிவு வங்கியின் பல்வேறு அலுவலகங்களையும் குறிப்பிட்ட கால முறைப்படி உள் ஆய்வு செய்து, அறிக்கையைக் கணக்கு, செலவுப் பிரிவுக்கு அனுப்பும் வங்கியின் கணக்குகளை அகத்தணிக்கை (Internal audit) செய்ய, பெரிய அலுவலகமுள்ள இடங்களில் பிராந்திய தணிக்கைக் குழாம் (Regional audit cell) நிறுவப் பட்டுள்ளது.

**சட்டப் பிரிவு** (Legal Department)

வங்கியின் பல பிரிவுகள் கோரும் சட்ட அறிவுரைகளை ஆய்ந்து வழங்கும் கடமை சட்டப் பிரிவினதாகும். இந்திய ரிசர்வு வங்கிச் சட்டம், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், அயல் நாட்டுச் செலாவணி மாற்று ஒழுங்காற்றுச் சட்டம், பொதுக் கடன் சட்டம் (The Public Debt Act) போன்ற சட்டங்களின் பிரிவுகளைத் தெளிவு படுத்தவும், அவற்றைத் திருத்தச் சட்டங்களை வரையவும் இப் பிரிவு உதவுகின்றது.

**(அயல் நாட்டுச்) செலாவணி மாற்றுக் கட்டுப் பாட்டுப் பிரிவு** (Exchange Control Department)

வங்கிய நடவடிக்கைகள் வளர்ச்சிப் பிரிவுடன் கூடி இப் பிரிவு அனுமதி பெற்ற வணிகரின் அயல்நாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை ஆய்வு செய்கிறது. இப் பிரிவில்

செய்யப்படும் பணிகளையொட்டி, ஏற்றுமதி, வியாபாரம், உரிமம் — முகமை ஏற்பாடுகள், கடன் — மேல்வரைப் பற்று, தனியார் பயணம், பொதுத்துறைப் பயணம், அயல்நாட்டுச் செலாவணிக் கணக்கு, புள்ளியியல், கொள்கை-ஒருங்கிணைப்பு, வெளியீடுகள் என்று பல உட்பிரிவுகள் இயங்கி வருகின்றன.

**வேளாண்மைக் கடன் பிரிவு** (Agricultural Credit Department)

இப் பிரிவின் சிறப்பான பணிகளைப் பற்றி முன்னரே கண்டுள்ளோம். கிராமியக் கடன் துறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதால், இப் பிரிவின் செயற்பாடும் பெருமளவு விரிவு பெற்றுள்ளது. பன்னிரண்டு உட்பிரிவுகள் கொண்டு விளங்கும் இப்பிரிவுக்கு 16 பிராந்திய அலுவலகங்கள் உள்ளன.

**வங்கிய நடவடிக்கைகள், வளர்ச்சிப் பிரிவு** (Departmnet of Banking Operation Development)

வணிக வங்கிகள் வளர்ச்சி, அவற்றை ஆய்வு செய்வது, அவற்றின் நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கட்டுப்பாடு செய்தல் ஆகியவற்றைக் குறித்த பொறுப்பு வங்கிய நடவடிக்கைகள் வளர்ச்சிப் பிரிவாகும். வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தையும், வணிக வங்கிகளுக்குப் பொருந்தும் இந்திய ரிசர்வு வங்கிச் சட்ட விதிகளையும் அமுல் செய்வது இப் பிரிவேயாகும். இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டம், இந்திய ஸ்டேட் வங்கி (துணை வங்கிகள்) சட்டம், வங்கியக் கம்பெனிகள் (மாற்றி எடுத்துக் கொள்ளும்) சட்டம் முதலிய சட்டங்கள் ரிசர்வு வங்கிக்கு அளித்துள்ள அதிகாரங்களை இப் பிரிவு பயன் படுத்தும். இப் பிரிவின் முக்கியப் பணிகளாவன:-(i) வங்கியத் தொழில் துவங்க, தொடர்ந்து செய்துவர, புதிய அலுவலகங்கள் திறக்கப் பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலித்தல்; (ii) நாட்டின் தேவைக்கேற்பவும் வங்கியச் சட்டங்கள்படியும் தக்க நிருவாகத்தின் கீழ் வேண்டுமளவு நிதி வசதிகளுடன் நல்ல திடமான வங்கிய அமைப்பின் ஓர் உறுப்பாக ஒவ்வொரு வங்கியும் திகழ்கின்றதா என்று கால முறைப்படி ஆய்வு நடத்தி, அதைச் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; (iii) வங்கிகள் கடன் வசதிகள் அளிப்பதை ஒழுங்காற்றிக் கட்டுப் படுத்தல்; (iv) வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன் விண்ணப்பங்களைக் கவனிப்பது; (v) தம் விருப்பப்படி இணையும் வங்கிகளுக்கும், கட்டாய இணைப்புக்குத் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் தேவைக்கேற்ப உதவிசெய்வது;

(vi) கலைக்கப்பட்டிருக்கும் வங்கிகள், பகிர்வு ஏற்பாட்டுத் திட்டத்தின் கீழ்ச் செயற்படும் வங்கிகள் ஆகியவற்றைக் கண் காணித்தல்; (vii) அரசுக்கும் வங்கிகளுக்கும் வங்கிய நிதியச் செய்திகள் குறித்து அறிவுரை வழங்கல்; (viii) வங்கிகளின் தலைமை நிருவாக அதிகாரிகள், பெருந்தலைவர் முதலியோர் நியமனம் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கல், வங்கிகளின் இயக்குநர் அவை அமைப்புக் குறித்து அறிவுரை வழங்கல்; (ix) வங்கிகள் மேலூதியப் பங்குகள் (Bonus shares) வெயிளிடு வது குறித்து அறிவுரை வழங்கல்.

**தொழில் நிதியப் பிரிவு** (Industrial Finance Department)

மாநில நிதியக் கூட்டுருக்களைக் குறித்து ரிசர்வு வங்கிக்கு உள்ள பொறுப்புக்களைத்தையும் மேற்கொண்டு செயலாற்று வது தொழில் நிதியப் பிரிவாகும். இந்திய அரசாங்கத்தின் முகவராக இப் பிரிவு நாணயப் பொருப்புறுதித் திட்ட (Credit Guarantee Scheme)த்தை நடத்தி வருகின்றது. நடவடிக்கைகள், ஆய்வு, திட்டம், பொறுப்புறுதி என்று நான்கு உட்பிரிவுகள் இப் பிரிவில் அடங்கியுள்ளன. சிற்றளவுத் தொழில்களின் வளர்ச்சிக்கு நிதி வசதி ஏற்பாடு செய்வதில் இப்பிரிவு மிகுந்த அக்கறை காட்டி வருவது குறிப்பிடத் தக்கது.

**வங்கியல்லாத கம்பெனிகள் பிரிவு** (Department of Non-banking Companies)

வங்கியல்லாத பிற கம்பெனிகள் வைப்புக்கள் ஏற்றுக் கொள்வதை ஒழுங்கு படுத்துவதே வங்கியல்லாத கம்பெனிகள் பிரிவின் முக்கியப் பணியாகும். வங்கியல்லாத நிதியத் தொழி லில் ஈடுபடாத கம்பெனி வைப்புக்கள் ஏற்றுக் கொள்வதை இப் பிரிவு கட்டுப்பாடு செய்கிறது. ரிசர்வு வங்கி அவ்வப்போது வெளியிடும் உத்தரவுகளை இக் கம்பெனிகள் சரிவரக் கடைப் பிடிக்கின்றனவா என்று அவை அனுப்பும் விவர அறிக்கை, இருப்பு நிலைக் குறிப்பு முதலியவற்றை ஆராய்ந்து இப்பிரிவு சரிப் பார்க்கும்.

**ஆராய்ச்சிப் பொருளாதார நுண் செய்தி** (Research and Economic Intelligence)

மைய வங்கி நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை உரு வாக்குவதிலும், அரசுக்கு நிதி பற்றி அறிவுரை வழங்குவதிலும் பெரும் பங்கு கொண்டுள்ளது என்று கண்டோம். இப் பொறுப்பைச் செவ்வையாகச் செயற்படுத்த, தொடர்ந்து விரி வான முறையில் பொருளாதார, நிதிய, வங்கிய புள்ளி விவரங்

களைச் சேகரித்து, பணவாக்கப் போக்கு (Monetary trends), அதைச்சார்ந்த பிரச்சினைகள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து, நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் பொருளாதார, நிதிய நிலை எவ்வண்ணமிருந்து வருகிறது என்ற ஆராய்ச்சிகளை மேற் கொள்ளுகிறது.

**பொருளாதாரப் பிரிவு** (Economic Department)

ஆராய்ச்சி செய்வதும், புள்ளி விவரங்களின் பொருளை விளக்குவதும் இப் பிரிவின் பெரும் பணியாகும். ஒன்பது உட் பிரிவுகளைக் கொண்டுள்ள இப்பிரிவு, வங்கியின் அறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றது. வங்கியப் பிரச்சினைகள், விலை வாசி, செலாவணி-பணப் புழக்கம், பண மூலதனச் சந்தைகள், தொழில் உற்பத்தி, மத்திய மாநில அரசுகளின் வரவு செலவுத் திட்டங்கள், திட்டங்களுக்கு நிதி திரட்டுதல், பன்னாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள், செலுத்து இருப்பு நிலை, அயல் நாட்டு வணிகம், கிராமியப் பொருளாதாரப் பிரச்சினைகள், கிராமியப் புற மதிப்பீடு—புலனாய்வு போன்ற பலப் பல துறை களில் தொடர்ந்து ஆராய்ச்சிக்கள் நடத்தி, அவற்றின் பயனாகக் கிடைக்கும் அரிய செய்திகளைக் கருத்தில் கொண்டு, நாட்டு நலனுக்கான கொள்கைகளை வகுக்க ரிசர்வு வங்கியின் இப் பிரிவு உறு துணையாக வுள்ளது. வெளியீடுகள், பத்திரி கைத் தொடர்பு ஆகியவற்றைக் கவனிக்கும் உட்பிரிவு, வங்கி யின் கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் பற்றித் தேவைப் படும் அளவுக்கு விளம்பரம் அளிக்கும்.

**புள்ளியியல் பிரிவு** (Department of Statistics)

பொருளாதாரப் பிரிவின் நடவடிக்கைகளைச் சார்ந்தே புள்ளியியல் பிரிவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இப் பிரிவில் செய்யப்படும் ஆராய்ச்சி மிகவும் நுட்பமானதாகவும், புது வகை நுண் ஆராய்ச்சி முறைகளைக் கையாண்டு ஆராய்ச்சி முடிவுகளைத் தெளிவு படுத்துவதாகவும் அமைவது குறிப்பிடத் தக்கது. வங்கியின் வெளியீடுகளில் இடம் பெறும் புள்ளி விவ ரங்களைத் தயாரித்தளிப்பது இப் பிரிவே. கூட்டுப் பங்கு கம்பெனிகளின் தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலைக் குறிப்பு, இலாப நட்டக் கணக்கு முதயவற்றை விளக்கமாக ஆராய்ந்து, அவற்றின் நடவடிக்கைகள் பற்றிய காலவாரி அறிக்கைகளைத் தயார் செய்வதும் இப் பிரிவின் பணியாகும்.

ரிசர்வு வங்கியைப் பற்றிய இந்த அத்தியாயத்தை முடிக்கும் முன் அது வெளியிடும் அருமையான, பொருள் பொதிந்த, பல்

வகை அறிக்கை, இதழ், நூல் முதலியன பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகிறது. மாத இதழாக விளங்கும் இந்திய ரிசர்வு வங்கி அறிக்கை, வாராந்தரப் புள்ளி விவர இணைப்பு, வங்கி யின் நடவடிக்கை குறித்த மத்திய இயக்குநர் அவையின் ஆண் டறிக்கை, செலாவணி—நிதிய அறிக்கை, இந்தியாவில் வங்கிய வளர்ச்சியும் போக்கும் பற்றிய அறிக்கை, இந்தியக் கூட்டுறவு இயக்கம் பற்றிய மதிப்பீடு, இந்தியாவிலுள்ள வங்கிகளைக் குறித்துப் புள்ளியியல் அட்டவணை, இந்தியக் கூட்டுறவு இயக் கத்தைக் குறித்த புள்ளியியல் அட்டவணை ஆகியவை தொடர்ந்து வெளியிடப் பட்டு வருவனவாகும். அவ்வப் போது வெளியிடப்பட்டுள்ள சில வெளியீடுகள் இந்திய ரிசர்வு வங்கியின் பணிகளும் நடைமுறையும், இந்தியாவில் செலாவணி மாற்றுக் கட்டுப்பாடு, 1935-51 ஆண்டுகளில் ரிசர்வு வங்கியின் வரலாறு, இந்திய வங்கிய—பணவியல் புள்ளி விவரங்கள் முதலியன.

# 5. இந்திய ஸ்டேட் வங்கி

இன்று இந்திய ஸ்டேட் வங்கி என அறியப்படும் வங்கி 1955 ஜூலை முதல் இயங்கி வருகின்றது. இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டம் (State Bank of India Act) என்ற சட்டத்தின் வழி தோற்றுவிக்கப்பட்டதே இவ்வங்கி. 1921ஆம் ஆண்டு முதல் இந்திய இம்பீரியல் வங்கி (Imperial Bank of Indla) என்ற பெயருடன் இயங்கி வந்த இவ்வங்கியே 1955-ல் இந்திய ஸ்டேட் வங்கி என்று மாற்றி யமைக்கப்பெற்றது. எனவே, இந்திய ஸ்டேட் வங்கியைப்பற்றி நாம் அறிந்துகொள்ள, அதன் முன் ஞேனை இம்பீரியல் வங்கியைப் பற்றிய செய்திகளையும் காண வேண்டும்.

சென்ற அத்தியாயத்தில் நம் நாட்டின் மைய வங்கியாகத் திகழும் ரிசர்வு வங்கி 1935ஆம் ஆண்டிலிருந்தே இயங்கி வரு கின்றது எனக் கண்டோம். அதற்கு முன் மைய வங்கி என்ற பெயர் கொள்ளாத போதிலும், இம்பீரியல் வங்கி மையவங்கிகள் மேற்கொள்ளும் சில பணிகளைச் செய்து வந்தது. அதே நேரத் தில் அது ஒரு வணிக வங்கியாகவும் இயங்கி வந்தது.

**மாகாண வங்கிகள்**

பத்தொன்பதாம் நூற்றுண்டிலிருந்து இயங்கி வந்த சென்னை, பம்பாய், கல்கத்தா மாகாண வங்கிகள் 1862 வரை பல சட்ட திட்டங்கட்கு உட்பட்டு, அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்பட்டு வந்தன. பிற தனியார் வங்கி களுடன் இம் மூன்று மாகாண வங்கிகளும் நோட்டு வெளி யீட்டு உரிமை பெற்றிருந்தன.

இவ் வங்கிகளிடமிருந்து 1862-ல் நோட்டு வெளியிடும் உரிமை பறிக்கப்பட்டது. இருப்பினும், அரசின் முகவர்களாகப் புதிய நோட்டுக்களை இவ் வங்கிகள் வெளியிட அனுமதிக்கப்

பட்டன. 1868ஆம் ஆண்டு முதல், செலாவணித் தாள் வெளியீட்டைத் தானே அரசு மேற்கொண்டது.

முதல் உலகப்போர், வங்கிகளிடையே ஓர் ஒத்துழைப்பு மனப்பான்மையை வளர்த்தது. போரினால் ஏற்பட்ட சிக்கல்களையும் இன்னல்களையும் அனுபவித்த வங்கிகள், தம் நலனைக் காக்கவும் பேணவும் இணைந்து செயற்படுதல் நன்று என்று உணர்ந்தன. இந்தச் சூழ் நிலையில் 1920-ல் இயற்றப்பட்ட இம்பீரியல் வங்கிச் சட்டம் (Imperial Bank of India Act), வங்காள வங்கி, சென்னை வங்கி, பம்பாய் வங்கி என்ற மூன்று மாகாண வங்கிகளை (Presidency Banks) ஒன்றாக இணைத்து, இந்திய இம்பீரியல் வங்கியை ஏற்படுத்தியது. அச்சமயம் இம் மூன்று வங்கிகளுக்கும் சேர்ந்து 68 கிளைகளிருந்தன.

**இம்பீரியல் வங்கி**

இம்பீரியல் வங்கியின் அமைப்பிலேயே அதன் பொதுத் தன்மையும் பெரும் பொறுப்பும் வலியுறுத்தப்பட்டன. இவ் வங்கியின் மத்திய இயக்குநர் அவையில் இடம் பெற்றோர்: (i) கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்ட இரு நிருவாக கவர்னர்கள்; (ii) கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்ட இந்திய சமூகத்தினர் நலனைக் காட்டும் நான்கு அலுவல் முறையில்லா கவர்னர்கள்; (iii) சென்னை, பம்பாய், கல்கத்தா உள் அவை (Local Board) களின் செயலர்கள் மூவர்; (iv) இந்திய அரசின் பிரதிநிதியாக செலாவணிக் கட்டுப்பாட்டு அலுவலர் (Controller of Currency), அரசின் நிதியக் கொள்கையைச் செயற்படுத்த அல்லது அரசின் இருப்புக்களைப் பாதுகாக்க, கவர்னர் ஜெனரல் அவ்வப்போது வங்கிக்கு உத்தரவுகள் இடலாம். இஃதன்றி, மத்திய அரசு கோரும் எவ்விதச் செய்தி, ஆவணம் முதலியவற்றை வங்கி வழங்கக் கடமைப்பட்டது. இவ் வங்கியின் கணக்குகளைத் தணிக்கை செய்ய, தணிக்கையரை மத்திய அரசு நியமிக்கலாம். மேலும் உள் தலைமை அலுவலகங்களை ஏற்படுத்தவும், உள் அவையினரை நியமிக்கவும் மத்திய அரசின் முன் அனுமதி பெறவேண்டும்.

இந்திய அரசின் பொது வங்கிய நடவடிக்கைகள் அனைத்தையும் இம்பீரியல் வங்கி மேற்கொண்டது. கருவூல இருப்புக்கள் அனைத்தும் வங்கி வசம் வைத்திருக்கப்பட்டது. இம்பீரியல் வங்கி ஏற்படுத்தப்பட்டது முதல் ஐந்தாண்டுகளுக்குள்ளாக நூறு கிளைகளை அமைக்க ஒப்புக்கொண்டது. கிளைகளை எந்த இடங்களில் திறப்பது என்ற செய்தியில், நான்கில் ஒரு கிளையை

அரசு விரும்பும் இடத்தில் நிறுவப்படும் என்று உடன் பாடாயிற்று, பொதுமக்களுக்குப் பணத்தை ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு, செலாவணிக் கட்டுப்பாட்டு அலுவலர் அனுமதித்த கட்டணத்தின் பேரில் மாற்றி யனுப்பும் வசதிகளை வங்கி செய்து தர ஒப்பியது.

மார்ச்சு 1926க்குள் இம்பீரியல் வங்கி 102 புதுக் கிளைகளைத் திறந்து, தன் சட்டப் பிணைப்பை நிறைவேற்றியது. பொதுப் பணத்தைப் பாதுகாப்பதும், வங்கிய வசதிகளைப் பெருக்குவதும் அரசின் வங்கியக் கொள்கையின் அடித்தளமாக விளங்கியது. இந்த நேரத்தில் ஹில்டன் யங் குழு (Hilton-Young Commission) இந்தியாயுக்கு மைய வங்கி ஒன்று ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்திற்று. எல்லோரும் இம்பீரியல் வங்கியே மைய வங்கியாக அமைவிக்கப்படும் என்று எதிர்பார்த்தனர், ஆனால், 1935-ல் ரிசர்வு வங்கி அமைக்கப்பட்டதும், இந் நிலைவுக்கு இடமில்லாமல் போயிற்று. இருந்தாலும், இம்பீரியல் வங்கி நாட்டின் வங்கிய வரலாற்றில் தனக்கென்று ஓர் இடத்தைத் தேடிக்கொண்டது; இதற்குக் காரணம், வங்கியத் தொழிலில் அந்த நாளில் இம்பீரியல் வங்கி மிகவும் வலிமை வாய்ந்த, செல்வாக்கு மிகுந்த வங்கியாகத் திகழ்ந்ததுதான்.

நாட்டிலுள்ள வங்கி வைப்புக்கள் மொத்தத்திலும் மூன்றிலொரு பகுதி இம்பீரியல் வங்கியிடம் தனியார் வைப்புக்களாக இருந்தன. 1926ஆம் ஆண்டிறுதியில் இந்தியக் கூட்டுப்பங்கு வங்கிகளின் கிளைகளில் மூன்றிலொரு பங்கு இம்பீரியல் வங்கியின் கிளைகளாக இருந்தன. இவ்வளவு நிதியும், வாடிக்கையும், பரப்பும் பெற்றிருந்த வங்கி, பிற வங்கிகளின் தலைவன் போல் செயலாற்றி, அவற்றைத் தன் வழியைப் பின்பற்றச் செய்வது எளிதல்லவா? மேற்கண்ட பெரும் வலிவுள்ள நிலைமை மட்டுமல்லாமல், அரசின் முகவர் என்ற நிலையும் இவ் வங்கிக்கு மேலும் ஆக்கத்தைத் தந்தது.

இந்தியாவிலுள்ள பெரு வங்கிகள் அனைத்தும் தம் ரொக்க இருப்பின் ஒரு பகுதியை இம்பீரியல் வங்கியுடன் வைப்பாக வைத்திருந்தனர். இம்பீரியல் வங்கி, வங்கிகளின் வங்கியாகச் செயலாற்றி வந்தது. இந்தியாவிலுள்ள முக்கிய 11 நகரங்களில் தீர்வகங்கள் (Clearing Houses) ஏற்படுத்தி, அவற்றை இம்பீரியல் வங்கி நிருவாகம் செய்து வந்தது. பொதுமக்களுக்கும் பிற வங்கிகளுக்கும் தனது கிளைகள் ஒன்றிலிருந்து வேறொன்றிற்கு அரசு விதித்த கட்டணத்திற்குப் பணம் அனுப்

பும் வசதிகளைச் செய்து தந்தது. இந்தப் பணி செய்வதற்குச் சலுகையாக, வங்கி தனது பணத்தை இந்தியாவிற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கட்டணம் ஏதுமில்லாமல் அரசினர் கருவூலத் துறை (Government Treasury Department) வழி மாற்றம் செய்ய அனுமதிக்கப்பட்டது. அரசு விரும்பிய இடங்களில் கிளைகள் திறந்ததற்குக் கைம்மாறாக அரசாங்க இருப்புக்களைக் கட்டணம் ஏதுமின்றிப் பயன்படுத்திக் கொள்ளும் சலுகை அளிக்கப்பட்டது.

இந்திய ரிசர்வு வங்கி இயங்கத் துவங்கியதும், இம்பீரியல் வங்கிக்கு வங்கிகளின் வங்கி, அரசினருக்கு வங்கி என்ற உரிமைகள் இல்லாது போயின. இம்பீரியல் வங்கியின் நிருவாகத்திலும் அரசின் தலையீடு மிகவும் குறைந்து போயிற்று. இம்பீரியல் வங்கி சிறப்பு மிக்கதொரு வகையில் வங்கிய நிதிய நலன்களைக் காத்துவந்ததைப் போற்றும் முறையில். அதன் மத்திய அவைக்கு கவர்னர் ஜெனரல் இரு அலுவல் வழியில்லா நபர்களையும், ஓர் அரசு அலுவலரையும் நியமிக்கும் உரிமை காத்துக்கொள்ளப்பட்டது. கடனளிப்பது, அயல்நாட்டுச் செலாவணி மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவது, வெளி நாடுகளில் கிளைகள் திறப்பது போன்ற செயல்கள் மீது இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. ரிசர்வு வங்கியின் கிளையில்லாத இடங்களில் அதன் முகவராக இம்பீரியல் வங்கி செயலாற்றும் என ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டது.

இம்பீரியல் வங்கி, அனுமதி பெற்ற நாட்டு வங்கியர் அளிக்கும் உண்டியல்களைத் தள்ளுபடி செய்துகொடுத்து, உள்நாட்டு வியாபாரத்திற்கு உதவி புரியலாயிற்று; தன்னுடைய கிடங்குகளில்வைக்கப்பட்ட விளைபொருள்கள் மீதும்,பஞ்சாலைகளுக்குப் பொறுப்புச் சீட்டில் இரு நபர்கள் கையொப்பம் அல்லது பங்குநரின் தனிமுறை பொறுப்புறுதியின் பேரிலும் குறுகிய காலக் கடன்களை வழங்கி வந்தது.

தன்னுடைய சொத்துக்களில் பெருமளவினை எளிவரல் (Liquid) நிலையில் இம்பீரியல் வங்கி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. இவ் வங்கி தள்ளுபடி செய்த மாற்றுச் சீட்டுக்கள் சராசரி 60 நாட்கள் மட்டுமே தவணை கொண்டிருந்தன. இது அளித்திருந்த ரொக்கக் கடன் வசதிகள் பெரும்பாலும் கோரியதும் திருப்பித்தரும் வகையில் அமைந்திருந்தன.

விளை பொருள்கள் இருப்புக்களைப் பிணையாகக் கொண்டு கடனளித்து, அவற்றின் போக்குவரத்துக்கு இவ்வங்கி வழி

செய்தது. தன் உண்டியல் வீதத்திற்கும், பஜார் உண்டியல் வீதத்திற்கும் உள்ள வேறுபாட்டை வெகுவாகக் குறைத்த பெருமை இம்பீரியல் வங்கிக்கு உண்டு. சென்னை, பம்பாய், கல்கத்தா சந்தைகளில் நிலையானதொரு நிலைமை உருவாகவும் இம்பீரியல் வங்கி உதவியது. இம்பீரியல் வங்கி குறைந்த வட்டிக்கு உண்டியல்களைத் தள்ளுபடி செய்து கொடுத்ததால், நாட்டு வங்கியரும் உண்டியல்களைக் குறைந்த வட்டிக்கே தள்ளுபடி செய்து தரவேண்டிய நிலை யேற்பட்டது. இம்பீரியல் வங்கியின் கிளைகளில்லாத ஊர்களிலுங்கூட நாட்டு வங்கியர் குறைந்த வட்டிக்கு உண்டியல்களைத் தள்ளுபடி செய்து கொடுத்தனர். இதற்குக் காரணம், அந்த ஊர்களிலும் இம்பீரியல் வங்கி கிளைகளை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சமே. பிற கூட்டுப் பங்கு வங்கிகளும்கூட இம்பீரியல் வங்கியின் போட்டிக்கு அஞ்சித் தமது வட்டி விகிதங்களைக் குறைத்து வைத்திருந்தன. இதனால் பொதுவாக வணிகர்களுக்கும் விவசாயிகளுக்கும் நன்மை யேற்பட்டது.

வங்கிகளின் வங்கி என்ற நிலையில் 1935 ஆம் ஆண்டிற்கு முன் செயலாற்றி வந்தபோது, இம்பீரியல் வங்கி, பிற வங்கிகள் நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்ட நேரங்களில் தக்க உதவி யளித்து வந்தது. சிம்லாவின் அல்லயன்சு வங்கி நொடித்த போது, இந்திய அரசின் உத்தரவின்பேரில், கடனாளர்கள் கோரிய தொகையில் பாதி அளவுக்கு வேண்டிய தொகையை இம்பீரியல் வங்கி அளித்து உதவியது. டாட்டா தொழில் வங்கி, வங்காள தேசிய வங்கி, இந்திய சென்ட்ரல் வங்கி முதலிய வங்கிகளில் நெருக்கடி ஏற்பட்ட காலங்களில் இம்பீரியல் வங்கி தானே முன்வந்து, இவ் வங்கிகளுக்குத் தக்க உதவி யளித்தது. இந்தியக் கூட்டுப் பங்கு வங்கிகளும், நாணய மாற்று வங்கிகளும் தங்கள் இருப்புக்களைக் கணிசமான அளவிற்கு இம்பீரியல் வங்கியிடம் வைத்திருந்தனர். தம்மிடம் தேவைப்படாத ரொக்கத்தைக் கையில் வைத்திருப்பதைக் குறைக்க, பிற வணிக வங்கிகள் அவசியமேற்படும்போது, இம்பீரியல் வங்கியிடம் அனுமதி பெற்ற பிணையங்கள் மீது கடன் வாங்கியோ அல்லது ரொக்கக் கடன் வசதிகள் பெற்றோ, தேவைகளை நிறைவு செய்துகொள்கின்றன.

பிற வணிக வங்கிகளுடன் இம்பீரியல் வங்கி கடும் போட்டியிட்டு வந்தது என்ற பொதுவான எண்ணம் அக் காலத்தில் பரவலாக இருந்து வந்தது. புள்ளி விவரங்களுடன் இந்தக் கூற்றை ஆராய்ந்து பார்த்தால், இது ஒரு தோற்றமாகவே

இருந்தது. உண்மையில், மக்களிடையே இவ் வங்கி பெற்றிருந்த செல்வாக்கும் நம்பிக்கையுமே அதிகமான அளவுக்கு வைப்புக்களைத் திரட்ட உதவியது. நடப்பு வைப்புக்கள் மீது இவ் வங்கி வட்டியேதும் அளிக்காமலிருந்தும், இதனிடமிருந்த வைப்புத் தொகையில் பெருமளவு நடப்பு வைப்புத் தொகையாக இருந்தது குறிப்பிடத் தக்கது. அரசின் நிதியனைத்தையும் வட்டி யேதும் கொடுக்காமல் தன்னிடம் வைத்திருக்கும் உரிமை பெற்றிருந்த காரணத்தினலேதான் மிகக் குறைந்த வட்டிக்கு—கட்டுப்படி யாகாத அளவுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்க முடிகின்றது என்று பிற வங்கிகள் கூறி வந்தன. இது முழுதும் உண்மையான கூற்று என்று கொள்ள முடியாது. ஏனெனில், அரசின் பண இருப்புக்களை வட்டியின்றி வைத்திருப்பதற்குப் பதிலாக வங்கியின் நடைமுறையில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனுல், வங்கியின் செலவுகள் மிகுந்து வந்தன. படிப்படியாக, இம்பீரியல் வங்கி தமக்குப் போட்டியாக விளங்கும் வங்கி என்ற எண்ணத்தை நீக்கி, பிற வங்கிகள் அதனுடன் கூடி, வங்கிய அமைப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டன.

ரிசர்வு வங்கி அமைக்கப்பட்ட பின்னருங்கூட, இம்பீரியல் வங்கி ஒரு தனிப் பெருஞ் சிறப்புடனே இயங்கி வந்தது. நாணய மாற்று வங்கிகளின் மொத்த இந்திய வைப்புக்களை விட மிகுதியான வைப்புக்களை, அரசினர் இருப்புக்கள் ரிசர்வு வங்கிக்கு மாற்றப்பட்ட நிலையிலும், இம்பீரியல் வங்கி பெற்றிருந்தது. அதே நேரத்தில், எல்லா இந்திய வங்கிகளின் வைப்புத் தொகையின் மொத்தமும் சேர்ந்து, இம்பீரியல் வங்கியின் மொத்த வைப்புத் தொகையைவிட அவ்வளவு மிகுதியாக இல்லை. ரிசர்வு வங்கி அளித்த கடன்கள், இம்பீரியல் வங்கி அளித்த கடன்களை நோக்கும்போது, மிகவும் குறைவாகவே இருந்தன. கருவூலச் சீட்டுக்களைத் தவிர, வேறு சீட்டுக்கள் ரிசர்வு வங்கியின் நடவடிக்கையில் இடம் பெறவில்லை. ஆனுல், இம்பீரியல் வங்கி பெருமளவுக்குச் சீட்டுக்கள் மீது கடனளித்து வந்தது. பணச் சந்தைக்கும் ரிசர்வு வங்கிக்கும் இடையே இம்பீரியல் வங்கி உறுதியான தடுப்பான் (Buffer) போன்று இயங்கி வந்தது. ரிசர்வு வங்கி, இம்பீரியல் வங்கியுடன் சேர்ந்தே பணச் சந்தையைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. இன்றும், ரிசர்வு வங்கி, இம்பீரியல் வங்கியின் பின் வந்த இந்திய ஸ்டேட் வங்கியின் துணைகொண்டே தனது வங்கியக் கொள்கைக்ளைச் செயற்படுத்திப் பணச் சந்தையைக் கட்டுப்படுத்தி வருகின்றது. ரிசர்வு வங்கி, தனது நடவடிக்கைகள்

பற்றி வாராந்தர அறிக்கை வெளியிடுவது போன்று இம்பீரியல் வங்கியும் தனது நடவடிக்கைகள் பற்றிய வாராந்தர அறிக்கை ஒன்றை வெளியிட்டு வந்தது. இங்ஙனம் இம்பீரியல் வங்கி அறிக்கை வெளியிட வேண்டுமென்ற சட்டவிதி ஏதுமில்லாத போதிலும் வங்கி இதனை வெளியிட்டு வந்தது அதன் தனித் தன்மையை வலியுறுத்தியது. மேலும், பணச் சந்தையின் நிலையினைச் சரிவரப் புரிந்துகொள்ள இது உதவிற்று.

**இம்பீரியல் வங்கி மைய வங்கியாக மாற்றப்படாதது ஏன்?**

வணிக வங்கியப் பணிகளைத் துறக்காமல் இம்பீரியல் வங்கியை நாட்டின் மைய வங்கியாக மாற்றுவது எளிதான செயலாக இல்லை. மைய வங்கி எளிவரல் நிலை மிக்க முறையில் சொத்துக்களை வைத்திருத்தல் அவசியம். வணிக வங்கி பொதுமக்களிடம் வைப்புக்களை ஏற்றுக்கொண்டு, அவற்றின் மீது வட்டியும் செலுத்த வேண்டியிருப்பதால் பணத்தைத் துணிந்து பலவித நடவடிக்கைகளில் முதலீடு செய்ய வேண்டியிருந்தது. இங்ஙனமான நடவடிக்கைகளில் மைய வங்கி ஈடுபட்டால் சொத்துக்கள் எளிவரல் நிலையிலிருக்க முடியாது. மற்றும் வங்கியரின் வங்கி என்ற முறையில், பிற வங்கிகளுக்குத் தேவைப்பட்ட காலத்தில் உதவியளிப்பதில் சில சிக்கல்கள் உண்டாக இடமிருந்தது. வைப்புக்களைத் திருப்பிச் செலுத்தும் அதே நேரத்தில் வாடிக்கையருக்குக் கடனளிப்பது, அதுவும் பெரும்பான்மையான பிணையங்கள் எளிவரல் நிலையிலில்லாத போது கடனளிப்பது இயலாத செய்தி. மைய வங்கி என்பதற்காகத் தனக்குத் தரப்பட்டுள்ள சலுகைகளைப் பிற வணிக வங்கிகளுடன் போட்டி போடப் பயன்படுத்துவது முறையாகாது. இம்பீரியல் வங்கியை மைய வங்கியாக மாற்றினால் ஒன்றுக்கொன்று முரணான நோக்கமுள்ள செயல்களில் அது ஈடுபட வேண்டியிருக்கும் என்று கருதப்பட்டது. ஒரு நாட்டின் மைய வங்கி, நாட்டின் நலனை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றது. ஆனால், வணிக வங்கியோ இலாபம் ஈட்டும் நோக்குடன் செயலாற்றுகின்றது. இரண்டு நோக்கங்களும் ஒரே வங்கியின் வழி நிறைவேற வேண்டி, இம்பீரியல் வங்கியை மைய வங்கியாகவும் ஆக்கினால் பல இக்கட்டான நிலைகள் ஏற்படுவது திண்ணம். தானும் ஒரு வணிக வங்கியாகச் செயற்படும்போது, பிற வணிக வங்கிகளுக்கு நெருக்கடி ஏற்படும்போது, அவற்றிற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தைவிட, நமது போட்டியாளனுக்கு நாம் ஏன் உதவ வேண்டும் என்ற எண்ணமே தலைதூக்கி நிற்கக்கூடும்.

இவையேயன்றி, ஒரே வங்கி மைய வங்கியாகவும் வணிக வங்கியாகவும் செயலாற்றுவது, அதன்மீது தாங்க முடியாத சுமையைத் திணிப்பது போலாகும். இதனால், திறமையும் திண்மையும் குறைந்துபடும். மேற்கண்ட காரணங்களைச் சிந்தித்துச் சீர்தூக்கி ஆராய்ந்து, அரசு மைய வங்கியப் பணிகளைச் செய்வதற்குத் தனியொரு நிலையம் வேண்டும்; இம்பீரியல் வங்கி வேறு வணிக வங்கிகள் போன்று தனிப்பட்ட கட்டுப்பாடு ஏதுமின்றி, நல்ல முறையில் இயங்கி, நாட்டில் மேலும் சிறந்த, சீரிய, மலிவான வங்கிய வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று முடிவு செய்தது. இந்த முடிவின் பலனாக உருவாகியது ரிசர்வு வங்கி.

### இம்பீரியல் வங்கிச் செயற்பாட்டில் காணப்பட்ட குறைகள்

இம்பீரியல் வங்கியின் செலுத்திய முதலில் பெரும்பான்மை இந்தியரல்லாதார் வசமிருந்தது. வங்கியின் உயர் அதிகாரிகள் பெரும்பாலும் இந்தியரல்லாதாராக இருந்தனர். 1930ஆம் ஆண்டு வரை உயர்நிலைகளில் இந்தியரை நியமிப்பது மிகவும் குறைவாக இருந்தது. இந்தியரல்லாதாருக்குக் கிடைத்த அளவுக்கு வசதிகளும் சலுகைகளும் இந்திய வணிகர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற எண்ணமும் சில காலம் நிலவி வந்தது. இம்பீரியல் வங்கி, நாணய மாற்று (அயல் நாட்டு) வங்கிகளோடு இணைந்து செயற்பட்ட அளவுக்கு இந்திய வங்கிகளிடம் ஈடுபாடு காட்டவில்லை. மேல்வரைப் பற்று அளிப்பதிலும், நாணய மாற்று வங்கிகளின் சீட்டுக்கள், காசோலைகளை அவற்றின் முகவர் என்ற நிலையில் உள் நாட்டு இடங்களில் வசூலிப்பதிலும், தீர்வக வசதிகளை யளிப்பதிலும் இம்பீரியல் வங்கி நாணய மாற்று வங்கிகளுக்குப் பேருதவி செய்து வந்தது, நாட்டின் உட்பகுதிகளில் திறந்த கிளைகளில் வைப்புக்களைத் திரட்டுவதில் கவனஞ் செலுத்திய அளவுக்கு இம்பீரியல் வங்கி அவ்வூர்களிலுள்ள வியாபாரத் தேவைகளுக்குக் கடன் வசதிகளைத் தந்து உதவவில்லை என்று சிலர் கருதினர்.

இம்பீரியல் வங்கியை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கோரிக்கை, இந்தியா விடுதலை பெற்றவுடன் நாடெங்கிலும் காணப்பட்ட உற்சாகத்தில் வற்புறுத்தப்பட்டது. ஆனால், வங்கியின் பங்குநர்கள் நாட்டுடைமையாக்கும் யோசனையை வன்மையாக எதிர்த்தனர். அரசின் முகவராகப் பணி செய்வதை விட்டுவிடத் தயாரென்றும், பிற வணிக வங்கிகள் போன்று இம்பீரியல் வங்கியும் தொழில் செய்ய அனுமதித்தால்

போதுமென்றும் இயக்குநர் அவை மத்திய அரசுக்குத் தெரிவித்தது; பாகிஸ்தான், பர்மா, இலங்கை முதலிய நாடுகளில் வங்கியின் கிளைகளிருந்ததால், இந்திய வணிகர் இந்த அண்டை நாடுகளுடன் வியாபாரம் செய்ய அவை உதவியாக இருக்கும் என்றும் நிலைமையை விளக்கியது.

இதற்கிடையில் இம்பீரியல் வங்கியை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கூக்குரலின் வேகம் தணிந்தது. 1949-ல் அறிக்கை வெளியிட்ட கிராம வங்கிய விசாரணைக் குழு (Rural Banking Enquiry Committee) அடுத்த ஐந்து ஆண்டுகளில் இம்பீரியல் வங்கி 270 கிளைகளைத் திறக்கவேண்டுமெனப் பரிந்துரைத்தது. அரசின் கருவூலங்கள் எங்கெல்லாம் ரொக்க வேலை செய்து வருகின்றனவோ, அங்கெல்லாம் இம்பீரியல் வங்கியின் கிளைகள் செயற்படவேண்டும்; இனி இம்பீரியல் வங்கி ரிசர்வு வங்கியின் துணை அங்கமாகச் செயலாற்றவேண்டும் என்றும் குழு பரிந்துரைத்தது.

ரிசர்வு வங்கி நியமித்த அகில இந்திய கிராமக் கடன் விசாரணைக் (All-India Rural Credit Survey) குழு 1954ஆம் ஆண்டிறுதியில் வெளியிட்ட அறிக்கையில், இம்பீரியல் வங்கியின் கிளை திறப்புக் கொள்கை கிராம வங்கிய விசாரணைக் குழுவின் பரிந்துரையில் பாதி அளவினைக் கூட எட்டுவதாக இல்லை என்று சுட்டிக் காட்டியது. முன்னர் கண்டதுபோல் குழு 270 கிளைகள் ஐந்தாண்டுகளில் திறக்கப்படவேண்டுமெனக் கூறியும், வங்கி ஜூலை 1951 முதல் ஐந்தாண்டுகளுக்குள் 114 கிளைகளை மட்டுமே திறக்கத் திட்டமிட்டது. விரைவாகக் கிளைகளைத் திறந்து, கிராமியச் சிறு நகர்ப்புறங்களில் வங்கிய, கடன் அனுப்புகை வசதிகளை ஏற்படுத்தி, அதன் வழிப் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவது இம்பீரியல் வங்கியின் தலையாய கடமை என்று கிராமக் கடன் விசாரணைக் குழு குறிப்பிட்டது. ஆனால் இந்த முயற்சிகளை மேற்கொண்டால் வங்கியின் இலாபம் பாதிக்கப்படும்; பங்குநர் இலாப ஈவு குறையும்; நிருவாகச் செலவு மிகுதியாகும். எனவே, இம்பீரியல் வங்கியை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (State Bank of India) என்னும் இந்திய ஸ்டேட் வங்கியாக மாற்றி, அதனுடன் பெரிய அரசு தொடர்புள்ள பத்து வங்கிகளை இணைத்து விடலாமென்று பரிந்துரைத்தது. வங்கியல்லாத கருவூலங்களின் ரொக்க வேலையினை எடுத்துச் செய்யவும், கூட்டுறவு வங்கிகளுக்கும் பிற வங்கிகளுக்கும் மிகப் பெருமளவுக்கு விரிவான அனுப்புகை வசதிகளை யளிக்கவும், மேலும் வங்கிகளைத் திறக்க ஊக்குவிப்பா

ளுகவும் ஒரு வலிவான, இணைக்கப் பெற்ற அரசு ஏற்பாடு செய்த வணிக வங்கி—நாடெங்கிலும் கிளைகள் கொண்டு விளங்கிடும் வங்கி, உருவாக்கப்படுதலே நோக்கமாக அமைய வேண்டுமெனக் குழு கூறியது.

## இந்திய ஸ்டேட் வங்கி நிறுவுதல்

இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டப் படி 1955 ஜூலை முதல் நாளிலிருந்து இந்திய ஸ்டேட் வங்கி செயலாற்றத் துவங்கியது. இம்பீரியல் வங்கியின் பங்குகள் ரிசர்வு வங்கிக்கு மாற்றப்பட்டன. பங்குநர்களுக்கு முழுதும் செலுத்தப் பட்ட பங்கு ஒன்றுக்கு நிறையீடு ரூ. 1,765-10-0; பகுதி செலுத்தப்பட்ட பங்கு ஒன்றுக்கு இதில் கால் பகுதி நிறையீடும் வழங்கப்பட்டது. ரூ. 10,000க்கும், அதற்குக் குறைவான நிறையீட்டிற்கு ரொக்கமும், அதற்கு மேற்பட்ட தொகைக்கு இந்திய அரசு 1965-ல் $3\frac{1}{2}\%$ கடன் பத்திரங்களும் தரப்பட்டன. நிறையீட்டிற்குப் பதிலாக நூறு ரூபாய் மதிப்பு உள்ள இந்திய ஸ்டேட் வங்கி பங்கினை ரூ. 350 என்ற கணக்கில் விரும்பியவர் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டனர். வெளியிட்ட முதல் ரூ. 5,62,50,000 ஆக இருந்தது. இதை உயர்த்தும் முன் ரிசர்வு வங்கிக் கைவசம் உள்ள வெளியிட்ட முதல் பங்குகள் 55% க்குக் குறையாது இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். மத்திய அரசின் முன் அனுமதியின்றி வெளியிட்ட முதல் ரூ. 12,50,00,000 என்ற தொகைக்கு மிகுதியாகக் கூடாது. ரிசர்வு வங்கி ஒரு கூட்டுரு. காப்பீட்டுக் கம்பெனி, உள்ளாட்சி ஆணையம், கூட்டுறவுச் சங்கம், பொது அல்லது தனியார் மத, அறப் பொறுப்புரிமை ஆகியவை நீங்கலாக, எவரும் தம் பெயரிலோ வேறொருவருடன் கூட்டாகவோ 200 பங்குகளுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது.

## ஸ்டேட் வங்கியின் நிருவாகம்

இந்திய ஸ்டேட் வங்கியின் மத்திய அலுவலகம் பம்பாயில் உள்ளது. பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர், அகமதாபாத், ஹைதராபாத் முதலிய இடங்களில் உள்ளூர் தலைமை அலுவலகங்கள் உள்ளன. ரிசர்வு வங்கியையும் ஸ்டேட் வங்கியையும் கலந்து ஆலோசித்து, மத்திய அரசு வகுக்கும் திட்டப்படி ஸ்டேட் வங்கி நிறுவப் பெற்ற ஐந்து ஆண்டுகளுக்குள் 400 கிளைகளைத் திறக்கக் கடமைப்பட்டது. இதுகாறும் இம்பீரியல் வங்கியின் கிளைகள், முகமைகள் (Agencies) ஆகிய அனைத்தையும் ஸ்டேட் வங்கி தனது கிளைகள், முகமைகளாக நடத்தி வர வேண்டும்; ரிசர்வு வங்கியின் முன் அனுமதி யின்றி

எந்தக் கிளையும் மூடப்படக் கூடாது. வெளி நாடுகளில் கிளைகளை நிறுவ ஸ்டேட் வங்கிக்குச் சட்டம் இடமளித்தது. பொது நலனை யொட்டி, வங்கியத் தொழிலின் தத்துவப்படி, வங்கியை மத்திய இயக்குநர் அவை நடத்திச் செல்ல வேண்டு மென்று சட்டம் விதித்துள்ளது. ரிசர்வு வங்கியின் கவர்னரை யும், ஸ்டேட் வங்கியின் பெருந்தலைவரையும் கலந்து, பொது நலன் குறித்த கொள்கைகளைக் கடைபிடிக்கும்படி ஸ்டேட் வங் கியை மத்திய அரசு உத்தரவிடலாம். ஸ்டேட் வங்கி இக் கொள்கைகள்படி நடந்தே யாகவேண்டும்.

முதன் முதலில் மத்திய அவை அமைக்கப்பட்ட போது எல்லா இயக்குநர்களும் மத்திய அரசால் நியமிக்கப்பட்டனர். பெருந் தலைவர், துணைப் பெருந் தலைவர் நிருவாக இயக்கு நர்கள் நீங்கலாக, பிற எல்லா முதல் நியமன அவை இயக்குநர் களும் இரண்டு ஆண்டுகள் கழித்து ஓய்வு பெற வேண்டி யிருந்தது. மத்திய அவையில் இடம் பெறுவோர் விவரம் வரு மாறு: (i) மத்திய அரசால் நியமிக்கப் பெறும் பெருந் தலைவர் (Chairman), துணைப் பெருந் தலைவர், ரிசர்வு வங்கியைக் கலந்து கொண்டும், மத்திய அவையின் பரிந்துரையை கருத்தில் கொண்டும் மேற்கூறிய நியமனங்கள் செய்யப்படும்; (ii) மத்திய அரசின் ஒப்புதலுடன் மத்திய அவை நியமிக்கும் இரண்டுக்கு மேற்படாத நிருவாக இயக்குநர்கள்; (iii) ரிசர்வு வங்கி யல் லாத பிற பங்குநர் தேர்ந்தெடுக்கும் ஆறு இயக்குநர்கள்; (iv) ரிசர்வு வங்கியைக் கலந்தாலோசித்து, கிராமப் பொருளா தாரம், கூட்டுறவு நிலையங்களின் நடைமுறை பற்றித் தேர்ந்த அறிவு பெற்றவர் இருவருக்குக் குறையாத, வணிகம், தொழில் வங்கியத் துறை, நிதியம் ஆகியவற்றில் எதிலும் அனுபவம் பெற்றவர்களையும் சேர்த்து, மத்திய அரசால் நியமிக்கப்படும் எட்டு இயக்குநர்கள், நாட்டின் பற்பல பகுதிகளையும், பொருளாதார நலன்களையும் குறிப்பவர்களாக அமைய வேண்டும்; (v) மத்திய அரசு நியமிக்கும் ஓர் இயக்குநர்; (vi) ரிசர்வு வங்கி நியமிக்கும் ஓர் உறுப்பினர்.

பெருந் தலைவரும், துணைப் பெருந் தலைவரும், நிருவாக இயக்குநர்களும் மத்திய அரசு நிருணயித்தவாறு ஐந்தாண்டு களுக்கு மிகாத காலத்திற்குப் பதவி வகிப்பர். இவர்கள் மறு நியமனம் செய்யப்படலாம். பல பகுதிகளையும் பொருளாதார நலன்களையும் குறிக்க, மத்திய அரசால் நியமிக்கப்படும் இயக்கு நர்கள் நான்கு ஆண்டு பதவிக் காலம் உள்ளவர்கள். இவர்கள் மறு முறை தேர்ந்தெடுக்க அல்லது நியமிக்கப்

படலாம். பிற நியமனம் செய்யப்பெற்ற இயக்குநர்கள், நியமனம் செய்பவரின் விருப்பப்படி பதவி வகிப்பர்.

உள்ளூர்த் தலைமை அலுவலகமுள்ள இடங்களில் ஓவ்வோர் இடத்திற்கும் ஓர் உள்ளூர் அவை (Local board) அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் அவையில் இடம் பெறுவோர், மத்திய அவையில் உள்ளூர் எல்லை, பொருளாதார நலனைக் குறிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப் பட்ட அல்லது நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்களும், மத்திய அரசு ரிசர்வு வங்கியுடன் கலந்து ஆலோசித்து, நியமனம் செய்த அல்லது உள்ளூர் பங்குநர்கள் தேர்ந்தெடுத்த, நான்குக்கு மேற்படாத இயக்குநர்களுமாவர். மத்திய அவை அளித்துள்ள அதிகாரங்களை உள்ளூர் அவை பயன்படுத்தலாம். உள்ளூர் அவையின் கடமைகளையும் மத்திய அவையே நிருணயிக்கின்றது. மத்திய அவை உள்ளூர் குழுவினை நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

வேருெரு வங்கியக் கம்பெனியில் இயக்குநர் அல்லது மேலாளர் என்ற பதவி வகிக்கும் எவரும், அல்லது இயக்குநராக இருக்க, மத்திய அரசின் சிறப்பு அனுமதி பெருத அரசு அலுவலர் எவரும், அல்லது கையூட்டு வாங்கிய குற்றத்துக்காக அரசு பணியிலிருந்து நீக்கப்பட்ட எவரும், அல்லது ஸ்டேட் வங்கியின் பெருந்தலைவர், துணைப் பெருந்தலைவர் அல்லது நிருவாக இயக்குநர் என்ற ஊதியம் பெறும் அலுவல் தவிர பிற அலுவலில் ஸ்டேட் வங்கியில் பணியாற்றும் எவரும், அல்லது நொடித்தவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் எவரும், அல்லது தனது கடனுளர்களுடன் ஏற்பாடு செய்து கொண்ட எவரும், அல்லது சம மன நிலையற்ற எவரும், அல்லது ஒழுக்கக்கேட்டுக் குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்ட எவரும் மத்திய அவையில் இயக்குநராகவும் உள்ளூர் அவையிலோ அல்லது உள்ளூர் குழுவிலோ உறுப்பினராகவும் இருக்கத் தகுதியற்றவராகிருர். தேர்ந்தெடுக்கப்படும் இயக்குநர் எவரும் குறைந்தது ரூ. 5,000 இயல்பு மதிப்புள்ள பங்குகள் வில்லங்கமற்ற ஸ்டேட் வங்கியின் பங்குகள் வைத்திருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எவரும் ரூ. 1,000 இயல்பு மதிப்புள்ள பங்குகள் வைத்திருக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் எவரும் மத்திய அவை இயக்குநர் அல்லது உள்ளூர் அவை அல்லது உள்ளூர் குழு உறுப்பினர் என நியமிக்கப் பட்டாலும் அல்லது தேர்ந்தெடுக்கப் பட்டா

லும் இரண்டு மாதங்களுக்குள் நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினாலன்றி, வங்கியின் இயக்குநர் அல்லது உறுப்பினர் என்ற தேர்தல் அல்லது நியமனம் செல்லாது போகும்; இயக்குநர் அல்லது உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றம் அல்லது மாநில சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க அல்லது நியமிக்கப்பட்டால் அவர் இயக்குநர் அல்லது உறுப்பினராக இருக்க இயலாது.

இந்திய ஸ்டேட் வங்கியுடன் பிற அரசு தொடர்புற்ற வங்கிகளும் இணைக்கப்பட வேண்டுமென அனைத்திந்திய கிராமியக் கடன் விசாரணைக் குழு பரிந்துரைத்தது என்று முன்னமே கண்டோம். இதற்கு வகை செய்யுமாறு 1959 ஆம் ஆண்டில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (துணை வங்கிகள்) சட்டம் [State Bank of India (Subsidiary Banks) Act] இயற்றப் பட்டது. இந்தச் சட்டத்தின் படி, எட்டு அரசு தொடர்புற்ற வங்கிகள் ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளாயின. அவை பிக்கானிர் வங்கி ( Bank of Bikaner), இந்தூர் வங்கி (Bank of Indore), ஜெய்ப்பூர் வங்கி (Bank of Jaipur), மைசூர் வங்கி (Bank of Mysore), பாட்டியாலா வங்கி (Bank of Patiala), திருவாங்கூர் வங்கி (Bank of Travancore), ஹைதராபாத் ஸ்டேட் வங்கி (State Bank of Hyderabad), சௌராஷ்டிர ஸ்டேட் வங்கி (State Bank of Saurashtra) என்பன. 1963ஆம் ஆண்டு பிக்கானிர் வங்கியும், ஜெய்ப்பூர் வங்கியும், பிக்கானிர்—ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கி (State Bank of Bikaner and Jaipur) என்ற பெயருடன் இணைக்கப் பெற்றன. தற்போது இந்த ஏழு துணை வங்கிகளும் தனித்து இயங்கி வருகின்றன. ஸ்டேட் வங்கி இவற்றின் கொள்கைகளை வகுக்கின்றது. இவ்வங்கிகள் ஸ்டேட் வங்கியின் முகவராகப் பணியாற்றுகின்றன. ஸ்டேட் வங்கி ரிசர்வு வங்கியின் முகவராகப் பணியாற்றுகின்றது. ஆகவே இவ் வங்கிகள் செலாவணிப் பெட்டகங்களை நிருவகிப்பது, கருவூலப் பணிகள், அனுப்புகை வசதிகள் போன்ற ஏற்பாடுகளுக்குப் பொறுப்பேற்பது ஆகிய செயல்களை மேற்கொண்டுள்ளன.

மார்ச்சு 1972 இறுதியில் இத் துணை வங்கிகள் 1,357 கிளைகளைக் கொண்டிருந்தன. இவை ரூ. 414·3 கோடி வைப்புக்களைத் திரட்டியிருந்தன. மேற்கூறிய தேதியில் இவ் வங்கிகள் அளித்திருந்த கடன் ரூ. 329·8 கோடியாக இருந்தது. 1972 ஜூலை மாத இறுதியில் இவ் வங்கிகள் அரசினர் பிணையங்களில் ரூ. 92·5 கோடி முதலீடு செய்திருந்தன.

**ஸ்டேட் வங்கியின் வளர்ச்சி**

வங்கி துவங்கிய போது இருந்த வைப்புக்கள் ரூ. 187 கோடி அளவில் காணப்பட்டது. இந்தத் தொகை படிப்படியாக உயர்ந்து, 1972 ஆகஸ்டு 25-ல் ரூ. 1,738·7 கோடியாக நின்றது. இவ் வங்கி கொடுத்திருந்த கடன்கள் மேற்கூறிய தேதியில் ரூ. 1,137·9 கோடியாக இருந்தது. அரசினர் பிணையங்களில் ரூ. 620·8 கோடி முதலீடு செய்யப்பட்டிருந்தது. பின்னிணைப் புப் பட்டியலிலுள்ள வணிக வங்கிகளின் மொத்த வைப்புக் களோடு ஸ்டேட் வங்கியின் வைப்புக்களை ஒப்பிட்டுப் பார்த்தால் சற்றேறப்ப 22·6% வைப்புக்கள் ஸ்டேட் வங்கி வசமுள்ளது புலனாகும்.

இதுகாறும் புறக்கணிக்கப் பட்டு வந்த சில துறைகளுக்கு, வணிக வங்கிகள் சமுதாய நீதி கருதியும், நாட்டின் பொரு ளாதார வளர்ச்சி கருதியும் கணிசமான கடன் வசதிகள் அளிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையை 1968ஆம் ஆண்டிலிருந்து பெரும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் செயற்படுத்தி வருகின்றன. 1972 மார்ச்சு இறுதியில் ஸ்டேட் வங்கி வழங்கி யிருந்த கடன்கள் ரூ. 1,094·8 கோடிகளாக இருந்தன. இவற்றில் சிற்றளவுத் தொழில்களுக்கு ரூ. 271·76 கோடியும், விவசாயத்திற்கு நேரடியாக ரூ. 64·57 கோடியும், மறைமுகமாக விவசாயத்திற்கு ரூ. 94·51 கோடியும் கடனாக அளிக்கப் பட் டிருந்தது. ஏற்றுமதித் துறைக்கு ரூ. 118·13 கோடி கடன் வசதி அளிக்கப்பட்டிருந்தது. ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளும் முந்துமைத் துறைத் (Priority sector) தொழிலுக்குக் கணிசமான கடன் வசதிகள் அளித்து வருகின்றன. மார்ச்சு 1972 இறுதியில் வழங்கப்பட்டிருந்த ரூ. 329·8 கோடி கடன்களில் சிற்றளவுத் தொழில்களுக்கு ரூ. 96·57 கோடியும், விவசாயத்திற்கு நேரடியாக ரூ. 31·13 கோடியும், விவசாயத்திற்கு மறைமுகமாக ரூ. 16·97 கோடியும், ஏற்றுமதித் துறைக்கு ரூ. 15·11 கோடியும் கடனாக அளித்திருந்தன. கடன் அளிப்பதற்குத் தக்க பிணை தரப்படுகின்றதா என்பதை விட, உற்பத்திப் பெருக்கத்திற்கு இக் கடன் உதவுமா என்பதையே கருத்துடன் கவனித்து வருகின்றனர்.

இந்திய ஸ்டேட் வங்கி 1955-ல் நிறுவப்பெற்ற போது, நிறுவிய ஐந்தாண்டுகளுக்குள் 400 கிளைகளை அது திறக்க வேண்டுமெனப் பணிக்கப்பட்டது. பின்னர் 1960 ஜூலை முதல் ஜூன் 1965 வரையும், ஜனவரி 1964 முதல் டிசம்பர் 1968

வரையும் இரண்டு கிளைகளைப் பெருக்கும் திட்டங்கள் தீட்டப் பெற்றன. இவ்விரு திட்டங்களையும் செயற் படுத்தக் கால வரம்பு டிசம்பர் 1969 வரை நீடிக்கப்பட்டது. முதன்மை வங்கித் திட்டம் (Lead Bank Scheme) அமுலாக்கப் பட்டதி லிருந்து மேலும் கூடுதல் கிளைகளைத் திறக்கும் பொறுப்பு ஸ்டேட் வங்கிக்கு ஏற்பட்டது. மேற்கண்ட திட்டங்களின் பயனாக மார்ச்சு 1972 இறுதியில் ஸ்டேட் வங்கிக்கு 2,532 கிளைகளும், அதன் துணை வங்கிகளுக்கு 1,357 கிளைகளும் திறக்கப் பட்டிருந்தன.

ஸ்டேட் வங்கி நிறுவப்பெற்ற போது 477 கிளைகளே கொண்டிருந்தது. கடந்த 17 ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி கண்டுள்ள இவ் வங்கி இன்று (1972-ல்) 2,500 கிளைகளுக்கு மேல் விரிவடைந்துள்ளது. வெகு தொலைவில் அமைந்துள்ள கிளைகளைச் சரிவரக் கண்காணிப்பதற்குத் தக்கதொரு அமைப் பினை உருவாக்க வேண்டுமென்று வங்கியின் நிருவாகத்தினர் எண்ணினர்.

**ஸ்டேட் வங்கியின் புனரமைப்பு**

தற்போது ஸ்டேட் வங்கி ஏழு வட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஓர் உள்ளூர் தலைமை அலுவலகம் (Local Head Offiee) உண்டு. மத்திய அலுவலகம் உள்ளூர் தலைமை அலுவலகங்களின் செயல் முறைகளைக் கண் காணிக்கும் உரிமை பெற்றது. அமைப்பின் உச்சியில் மத்திய இயக்குநர் அவையும், ஏழு உள்ளூர் தலைமை அலுவலகங்களில் உள்ளூர் இயக்குநர் அவைகளும் செயலாற்றி வருகின்றன.

எல்லா இயக்குநர் அவைகளுக்கும் தலைவராக இருப்பவர் வங்கியின் பெருந்தலைவர் (Chairman) ஆவார். இவரே வங்கியின் தலைமை நிருவாக அதிகாரியுமாவார். இவருக்குத் துணையாக நிருவாக இயக்குநர், முதுநிலை அலுவலர் (Senior Officers) ஆகியோர் உள்ளனர். கணக்கு, பொருள் வளர்ச்சி, தொழில் துறைக் கடன், முதலீடு, சிற்றளவுத் தொழில், சிறு வணிகம், வேளாண்மை, அயல் நாட்டு வணிகம், கிளைகள் பெருக்கம், நிருவாகம், பணியர் (Personnel), மனை (Premises), பொதுமக்கள் தொடர்பு, திட்டம், பொருளாதாரப் புள்ளியியல் ஆராய்ச்சி போன்ற பலப்பல பிரிவுகள் தக்க அலுவலர் தலைமையில் இயங்கி வருகின்றன. உள்ளூர் தலைமை அலுவ லகத்தின் தலைவர், செயலர், கருவூலர் (Secretary and Treasurer) என்று பெயர் பெறுகிறார். மத்திய அலுவலகம் கொள்கைகளை

வருக்கின்றது. உள்ளூர் தலைமை அலுவலகங்கள் நடைமுறைச் செய்திகளைக் கவனித்து வருகின்றன.

தமது எல்லையில் செயலாற்றி வரும் பல கிளைகளனைத்தையும் நிருவகிப்பது உள்ளூர் தலைமை அலுவலகமே. நிருவாகம் செம்மையாக நடைபெற, 40 அல்லது 50 கிளைகளை ஒரு நிருவாகக் கோட்டத்தில் அடக்கி, அவற்றைக் கண்காணிக்க ஒரு மேற்பாவை யலுவலர் (Superintendent) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உதவிச் செயலாளர்-கருவூலரின் கீழ்ப் பணி புரிந்து வருகிறார், தலைமை வளர்ச்சி அலுவலர், பணியர் அலுவலர், பொதுமக்கள் தொடர்பு அலுவலர் போன்ற அலுவலர்கள் வட்ட மட்டத்தில் செயல் எல்லை உடையவர்களாவர்.

விரைவாக வளர்ந்து வரும் வங்கியத் தொழிலில், அதிகாரம், தலைமை அதிகாரிகளிடம் மட்டுமே குவிந்திருந்தால், செய்தித் தொடர்பு ஏற்படுவதில் கால தாமதம் ஏற்படுகின்றது; நேரம் வீண் போகின்றது. இத் தீமையைக் குறைக்க, அதிகாரத்தைப் பரவலாக்கலாயினர். பிற அதிகாரிகளுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் பட்டன. அவ்வப்போது ஏற்பட்ட பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குத் தற்காலிக விடைகள் போதுமானவையாக இருந்தன. ஆனால், நீண்ட காலத் தேவைகளுக்குத் தக்க அமைப்பு ஒன்று உருவாக்க, வங்கியின் நிருவாகம், நிருவாகத்துறை வல்லுநர்களின் உதவியை நாடியது.

வங்கி எந்தக் குறிக்கோள்களைத் தனது முக்கிய இலட்சியமாகக் கொண்டுள்ளது என்பதை ஆராய்ந்து, வளர்ச்சி, ஆதாயம் என்ற இரு நோக்கங்களை முக்கிய நோக்கங்களாகத் தேர்ந்தெடுத்தனர். இந் நோக்கங்களை அடைய, ஊழியர் அனைவரும் முனைந்து செயற்பட வேண்டும். பழம்பாணியில் வேலைகளைப் பிரித்து வகைப்படுத்துவதை நீக்கி, என்ன வகை வாடிக்கையர்என்ற அடிப்படையில் வேலைகளைப் பிரித்துச் செயலாற்ற வேண்டுமென்று பரிந்துரைக்கப் பட்டது. வாடிக்கையர் அனைவரும் ஐந்து பெரும் பிரிவுகளில் கொண்டு வரப்பட்டனர். அப்பிரிவுகளாவன:— (i) பெரிய வணிக பிற நிலையங்கள்—தொழில் நிலையங்கள், பல்கலைக் கழகம் போன்றன; (ii) தனி நபர்கள்; (iii) சிற்றளவுத் தொழில், சிறு வணிகர்; (iv) விவசாயிகள்; (v) அரசினர், பெரிய கிளைகளில் ஒவ்வொரு வாடிக்கையர் குழுவினையும் கவனித்து, அவர்களது வங்கியத் தேவைகளை நிறைவு செய்யத் தனித்தனிப் பிரிவுகள் இருக்கும். நடுத்தரச் சிறு கிளைகளில் இத்தனைப் பிரிவுகள்

தேவைப்படா. ஓரிரு பிரிவுகள் மட்டுமே வாடிக்கையரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் செயலாற்றும்.

கிளையின் முழுப் பொறுப்பையும் ஏற்கும் 'முகவர்' என்று இதுகாறும் பெயர்கொண்ட அலுவலர், 'கிளை மேலாளர்' (Branch Manager) எனப் பெயர் பெறுவார். கணக்குப் பிரிவைக் கவனிக்கும் அலுவலர் கணக்காளர் (Accountaut) என்றும், பிற பிரிவுகளைக் கவனிக்கும் அலுவலர்கள் மேலாளர் என்றும் அழைக்கப்படுவர். இந்த ஏற்பாட்டின்படி வாடிக்கையர் தன்மைக் கேற்பப் பணிகளைச் செய்வதில் அலுவலர் சிறப்புத் தேர்ச்சி பெறுவர்; ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சிக்குத் திட்டமிட்டுச் செயலாற்ற முடியும்; வாடிக்கையருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு, அவர்களுக்கு மன நிறைவு தரும் வகையில் பணியாற்றலாம்; கிளை மேலாளர் நிலைக்குக் கீழேயுள்ள அலுவலர்களும் நிருவாகத் திறனை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்புப் பெறுவர்.

உள்ளூர் தலைமை அலுவலகங்கள் ஏற்று நடத்தவேண்டிய முக்கிய நடவடிக்கைகளாவன :- (i) திட்டமிடுதல்; (ii) பல்வகை வாடிக்கையரை ஈர்க்கும் ஏற்பாடுகளில் ஈடுபடுதல்; (iii) ஊழியர், சட்டம், மக்கள் தொடர்பு போன்ற செய்திகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அறிவுரையினை மேலாளருக்கு வழங்கல்; (iv) கிளைகள் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

உள்ளூர் தலைமை அலுவலகத்தில் இரண்டு துணைச் செயலர்—கருவூலர் நியமிக்கப்படவேண்டும். ஒருவர் வங்கிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பார். மற்றவர் திட்டமிடுதல், பணியாளர் (Staff) ஆகியவற்றைக் கவனிப்பார். ஏறத்தாழ 75 கிளைகள் அடங்கியுள்ள மண்டலங்களாகப் பிராந்தியங்களைப் பிரித்து. ஒவ்வொரு மண்டலத்துக்கும் மண்டல மேலாளர்கள், துணைச் செயலர் (நடவடிக்கைள்) கீழ்ப் பணி புரிவர். மண்டல மேலாளருக்கு உதவியாக வட்டார மேற்பார்வை யலுவலர்கள் (Area Superintendents) தலைக்குச் சுமார் 25 கிளைகளுக்குப் பொறுப்பேற்றுச் செயற் படுகின்றனர். கிளை மேலாளரை அடிக்கடி சந்தித்து, அவர்களது பணிகளைச் செவ்வனே செய்யத் தேவையான அறிவுரைகளை வழங்கி, அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டியது வட்டார மேற்பார்வை யலுவலர் பொறுப்பாகும்.

**இந்தப் புனரமைப்புத் திட்டத்தில் மத்திய அலுவலகத்தின் இடம் யாது? அதன் பொறுப்புக்கள் யாவை? மேற்கண்ட**

கேள்விகட்கு இனி விடை காண்போம். கொள்கைகளை வகுப்பது, திட்டமிடுவது, வட்டங்களின் செயல்முறைகளைக் கட்டுப்படுத்துவது, மிகப் பெருந் தொகைகளைக் கடனாக வழங்குவது போன்ற செய்திகள் மட்டுமே மத்திய அலுவலகத்தில் கவனிக்கப்பட வேண்டும். தணிக்கை, முதலீடு, ஆராய்ச்சி, ஏழு துணை வங்கிகளின் நடப்பு ஆகியவற்றையும் மத்திய அலுவலகம் கவனிக்கும்.

வங்கியின் தலைமை நிருவாக அதிகாரியாக விளங்கும் பெருந் தலைவருக்கு உதவியாக ஒரு நிருவாக இயக்குநர் இருப்பார். இவர், நடைமுறைப் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயற்படுமாறு கவனித்துக் கொள்ளுவார். இதனால் பெருந்தலைவர் அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, முக்கியக்கொள்கை தொடர்புற்ற செய்திகளில் தம் கவனத்தைச் செலுத்த ஏதுவாகிறது. வங்கிய நடைமுறை. பணிகள்—பணியர், திட்டம்—ஆராய்ச்சி ஆகிய முப்பெரும் செய்திகளைக் கவனிக்க மூன்று துணை நிருவாக இயக்குநர்கள் (Deputy Managing Directors) நியமிக்கப்படவேண்டும். பணியர் துறை, மனை, பொதுமக்கள் தொடர்பு, பொருளாதார ஆராய்ச்சி போன்ற வங்கியின் பல்வகை நடவடிக்கைகளைக் கவனிக்க முதன் மேலாளர்கள் (Chief Managers) நியமிக்கப்படுவர். இவர்கள் துணை நிருவாக இயக்குநர்களின் கீழ்ப் பணி புரிவர்.

இவ்வளவு விரிவாகத் திட்டமிட்டு, வங்கியின் நிருவாகக் கூட்டை மாற்றியமைத்தால் மட்டும் எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சியும் திறனும் மிகுந்து செல்லும் என்று கொள்ளுவது சரியாகாது. ஆயிரக்கணக்கில் கிளைகளும், பல்வகைப்பட்ட வங்கியப் பணிகளும் செவ்வனே செயலாற்றி வர, நிதிய, நிருவாக அதிகாரங்களைப் பல மட்டங்களில் அளிப்படைவு (Delegation) செய்யவேண்டும். பொதுவாக எந்த ஒரு மட்டத்திலும் வேலை செய்பவர் தமது வேலையில் 80% அளவு வேலையை மேலிடத்து உத்தரவை எதிர்நோக்கி நிற்காது செய்து முடிக்குமளவுக்கு அதிகாரம் அளிப்படைவு செய்யப்பட வேண்டும் என்பது நிருவாகத்துறை வல்லுநரின் கருத்து. இக் கருத்தையொட்டி, கிளை மேலாளர்களுக்குப் பெருமளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

நிருவாகத்தைச் செம்மைப்படுத்தி, நிறுவனத்தை மேலும் வளர்ச்சி பெறும் வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக உள்ள நிலையில் வைத்திருக்க ஒவ்வோர் அலுவலருக்கும் கிளைக்கும் இன்ன இன்ன பொறுப்பு உண்டு

என்பதை அறுதியிட்டுக் கூறவேண்டும். மத்திய அலுவலகத்திலும், உள்ளூர் தலைமை அலுவலகங்களிலும், பெருங் கிளைகளிலும் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்ள நிருவாகக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். மத்திய அலுவலகத்தில் பெருந்தலைவர், நிருவாக இயக்குநர், மூன்று துணை நிருவாக இயக்குநர்கள் ஆக ஐவரும் நிருவாகக் குழுவில் இடம்பெறுவர். உள்ளூர் தலைமை அலுவலகங்களில் செயலர்—கருவூலர், இரு உதவிச் செயலர்கள் ஆக மூவர் மட்டுமே நிருவாகக் குழுவினராவர். பெருங் கிளைகளில் கிளை மேலாளர், கணக்கலுவலர், பிரிவுகளின் மேலாளர்கள் ஆகியோர் நிருவாகக் குழுவில் இடம் பெறுவர். திட்டங்களைத் தீட்டுவது, செயற்படுத்துவது போன்ற முக்கியச் செய்திகளனைத்தையும் இக்குழுவினர் கலந்து பேசி முடிவு செய்த பின்னரே எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

புனரமைப்புத் திட்டத்தைப் படிப்படியாகச் செயற்படுத்தத் திட்டமிட்டு, 1971-ல் முதன்முதலாக அகமதாபாத், பம்பாய் வட்டங்களில் இதனை நடைமுறைக்குக் கொண்டுவந்தனர். பல்வகை வாடிக்கையரின் பல்வகைத் தேவைகளை நிறைவு செய்ய இத் திட்டம் பெரிதும் உதவியது. வங்கியின் ஒவ்வொரு கிளையின் தொழிலளவு, வருமானம், செலவு, இலாபம் முதலியன ஆண்டு அளவில் திட்டமிடப்படுகின்றன. புனரமைப்புத் திட்டத்தின் உயிர் நாடியாய் விளங்குவது வரவு செலவுக் கட்டுப்பாட்டு முறை (Budgetary Control System) ஆகும். ஒவ்வொரு கிளையின் செயல் திறனும் குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டமிட்ட அளவுக்குச் செயல் திறன் எட்டவில்லை யெனில், குறைப்பாடுக்கான காரணங்களை ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தம் வசமுள்ள பொருள் வளங்களை, மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப, வங்கியத் தொழில் பெருக்கத்திற்கு வகை செய்யுமாறு பயன்படுத்துவதில் செய்முறை அலுவலர்களும், அவர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து, தம் கிளைக்கென்று ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்ளும் தனிச் சிறப்பு இப் புனரமைப்பின் சாரமெனலாம். முதலில் துவக்கப்பட்ட இரண்டு வட்டங்களிலும் பெற்ற அனுபவத்தையொட்டி, நடைமுறைகளையும் செயல் முறைகளையும் மேலும் சீர்ப்படுத்தி, 1972 ஜூலை முதல் ஸ்டேட் வங்கியின் எல்லா வட்டங்களிலும் புனரமைப்புத் திட்டம் அமுல் செய்யப்பட்டது. ஸ்டேட் வங்கியின் புனரமைப்புத் திட்டத்தை விளக்கும் படங்களை அடுத்த பக்கங்களில் காணலாம்.

[படம் I]

**மத்திய அலுவலக அமைப்பு**



[படம் II]

**உள்ளூர் தலைமை அலுவலக அமைப்பு**



[படம் III] நடைமுறை நிருவாகம்



[படம் IV]

## பெரிய கிளையின் அமைப்பு

கிளை மேலாளர்

| மேலாளர் வணிக, நிறுவன வங்கியப் பிரிவு | மேலாளர் தனி நபர் வங்கியப் பிரிவு | மேலாளர் சிற்றளவுத் தொழில், சிறு தொழில் வங்கியப் பிரிவு | மேலாளர் வேளாண் வங் [மை கியப் பிரிவு | மேலாளர் அரசு, முகமைப் பிரிவு | மேலாளர் வங்கியப் பணிகள் பிரிவு | கணக்கு அலுவலர் கணக்குப் பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| வைப்பு<br>கடன்<br>வசூல்<br>வாங்கல்<br>அனுப்புகை<br>அயல் செலாவணி<br>பாதுகாப்பு வைப்பு | வைப்பு<br>கடன்<br>வசூல்<br>அனுப்புகை<br>பாதுகாப்புப் பெட்டகம்<br>பயணக் காசோலை<br>பாதுகாப்பு வைப்பு | வைப்பு<br>கடன்<br>வசூல்<br>அனுப்புகை | வைப்பு<br>கடன்<br>வசூல்<br>வாங்கல்<br>அனுப்புகை | அரசு வரத்தும் செலுத்தமும்<br>தொழிலாளர் அரசு காப்பீட்டு விலை<br>பொது சேம நிதி<br>அரசு தவணை வைப்பு<br>அனுப்புகை | நிறைவேற்ற ளர், பொறுப் புரிமையர்<br>வருமான வரி ஆலோசனைப் பணி | ரொக்கம்<br>வெற்று ரொக்க ஏடு<br>பொதுப் பேரேடு<br>அலுவலகங்க ளிடைக் கணக்கு<br>தீர்வகம்<br>பட்டியல்கள்<br>அஞ்சல் மாற் பணவிடை [றம்<br>தந்திவழி மாற் அனுப்பல் [றம்<br>எழுதுபொருள்<br>ஆவணங்கள் |

கடந்த 17 ஆண்டுகளில் இந்திய ஸ்டேட் வங்கி பலப்பல புதிய திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றது: பொருளாதார ஆதிக்கத்தைப் பரவலாக்கவும், வேலை வாய்ப்புக் களைப் பெருக்கவும் சிற்றளவுத் தொழில்கள் பெரிதும் உதவக் கூடும் என்பதை யுணர்ந்து, 1956-ல் இவற்றிற்குக் குறைந்த வட்டிக்குக் கடன் வசதிகளை அளிக்கும் திட்டத்தைத் துவங் கியது; கச்சாப் பொருள் வாங்குவதிலிருந்து முடிவுற்ற பொருள்களை விற்பது வரை தேவைப்படும் முதல் தொகை யினைக் கடனாக அளித்தது. இத் திட்டத்தின் பயனாக 1972 மார்ச்சு இறுதிவரை 39,299 சிற்றளவுத் தொழில்கள் ரூ. 271·76 கோடி அளவுக்கு நிதி வசதி பெற்றன.

சிறிய தொழில் திட்டங்களை உருவாக்கும் திறம் படைத்த ‘தொழில் முயல்வோர்’ (Entrepreneur) தமது திட்டத்தைச் செயற்படுத்த நிதி வசதி யில்லாக் குறையால் இடர்ப்பட்டால், ஸ்டேட் வங்கி அக் குறையினைக் களைய, ‘தொழில் முயல்வோர் திட்டம்’ ஒன்றை ஏற்படுத்தி, நிதி யுதவி யளிக்கலாயிற்று. 1967-ல் ஏற்படுத்திய இத் திட்டத்தின் வழி 807 தொழில் முயில்வோர் ரூ. 10 கோடி வரை நிதி யுதவி பெற்றிருந்தனர் என்பதை 1971 இறுதியில் கணக்கெடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் வேலையில்லாத் திண் டாட்டம் நிலவி வருவதை—அதிலும் கல்வியறிவு பெற்றவர்கள் தக்க வேலை கிடைக்காது அவதிப்பட்டு வருவதை — ஓரளவுக் குப் போக்க, கை வினைஞர், தொழிற் கலைஞர் முதலியோருக்குத் தாமே வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள வழி செய்யும் வகையில் ஸ்டேட் வங்கி கடன் வசதிகளைச் செய்து தருகின்றது; இம் முயற்சியைப் பரவலாகச் செயற்படுத்து முன் 60 இடங் களில் முன்னோடியாக இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் வெற்றி பெற அரசினரின் முழு ஆதரவும், நிதி நிலை யங்களின் ஒத்துழைப்பும், மிகவும் சீரான திட்டமிடும் திறனும் தேவைப்படுகின்றன.

**விவசாயக் கடனளிப்பு**

விவசாயத் தேவைகளுக்குக் கடன் வசதி யளிப்பது ஸ்டேட் வங்கியின் நெடுங்காலக் கொள்கையாக இருந்து வருகிறது. கூட் டுறவுத் துறையிலுள்ள பதனிடும் விற்பனை நிலையங்களுக்கும், உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றை வாங்கத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் ஸ்டேட் வாங்கி பல கால மாக உதவி வருகின்றது.

முதன் முதலாக 1966ஆம் ஆண்டில் ஸ்டேட் வங்கி விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கத் துவங்கியது; நிலத்தை வளப்படுத்தவும், விவசாய இயந்திரங்கள் வாங்கவும், விதை, உரம் போன்ற உள்ளீடு (Input)களை வழங்கவும் கடன் வழங்குவதென 1968-ல் முடிவு செய்தது. ஒருவருக்கொருவர் பொறுப்புறுதி (Guarantee) வழங்கும் சில விவசாயிகள் ஒரு குழுவாகக் கூடி, குடிசைத்தொழில், கால்நடைப் பராமரிப்புப் போன்ற காரியங்களுக்குக் கடன்வாங்க ஸ்டேட் வங்கி 1969-ல் ஒரு திட்டத்தை உருவாக்கியது. இத் திட்டம் 'கிராம ஏற்பு நோக்கு' (Village Adoption Approach) என்று பெயர் பெற்றது. சில குறிப்பிட்ட கிராமங்களைத் தத்து எடுத்து, அங்குள்ள தன்னிறைவு பெற்ற, பெறும் வாய்ப்புள்ள விவசாயிகளுக்குக் கடனுதவி வழங்குவதே இத் திட்டத்தின் சாரமாகும். 1971ஆம் ஆண்டு முடிவில் 2,400 கிராமங்கள் இத் திட்டத்தின் கீழ், தத்து எடுத்துக்கொள்ளப்பட்டன.

விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 1972 மார்ச்சு இறுதிவரை 1,85,095 கணக்குகள் திறக்கப்பட்டு, அவற்றின் வழி ரூ. 64·57 கோடி கடன் வசதி யளிக்கப்பட்டது. விவசாயத்திற்கு மறைமுகமாக 906 கணக்குகள் வழி ரூ. 94·51 கோடி யளவுக்குக் கடன் ஏற்பாடுகளை ஸ்டேட் வங்கி செய்திருந்தது.

விவசாயத்திற்கு மேலும் கடன் வசதிகளைச் செய்து தரும் பொருட்டு 150 இடங்களில் தீவிரமான ஒரு திட்டத்தை மேற்கொள்ள ஸ்டேட் வங்கி முடிவு செய்தது. ஓர் இடத்தில் அமைக்கப்படும் கிளை சற்றேறப்ப, 100 கிராமங்களைக் கவனித்துக் கொள்ளுமென எதிர் பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு தீவிர மையவிடத்திலும் ஒரு வேளாண்மை வளர்ச்சிக் கிளை (Agricultural Development Branch) அமைக்கப்படுகின்றது. இக் கிளையில் தொழில் நுட்பப் பணியரும், களப் பணியரும் செயலாற்றுவர்; விவசாயிகளுக்கு உபரி வருமானம் கிடைக்க, வங்கி யளிக்கும் கடன் எங்ஙனம் முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து, திட்டம் தீட்டுவர். இந்த உபரி வருமானத்தினால் விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த வழி யேற்படுவதுடன் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும்; அந்த வட்டாரத்தில் பொருளாதார வளர்ச்சியும் மேம்படும்.

ஏற்றுமதிப் பெருக்கத்திற்கு ஸ்டேட் வங்கி கணிசமான உதவி யளித்து வருகின்றது; 1971ஆம் ஆண்டு ஏற்றுமதித் துறைக்கு ரூ. 108 கோடி கடனுதவி வழங்கிற்று. மொத்தக்

கடன்களில், ஸ்டேட் வங்கி 32·8 விழுக்காட்டளவு கடன்களை முந்துமைத்துறை (Priority Sector)க்கு 1971-ல் அளித்திருந்தது. 1971 டிசம்பர் இறுதியில் ஸ்டேட் வங்கியில் 75·021 ஊழியர்கள் பணியாற்றி வந்தனர். வங்கியத் துறையின் வளர்ச்சிக்கு ஒரு பெரிய பாடாக இருப்பது பயிற்சி பெற்ற பணியாளர்கள் கிடைப்பது அரிதாக இருப்பதேயாகும்.

ஸ்டேட் வங்கி 1971ஆம் ஆண்டில் கொடுத்த கடன்களைவிட, திரட்டிய வைப்புத் தொகை அதிகமாக இருந்தது. இதனால் வங்கி ரிசர்வு வங்கியிடம் பெற்றிருந்த கடன்களைத் தீர்த்துக் கொண்டு, அரசினர் பிணையங்களில் மேலும் முதலீடு செய்ய முடிந்தது. வங்கியின் வைப்புக்கள் 1970-ல் 18·6% கூடுதலாயிற்று; 1971-ல்22·9% கூடுதலாயிற்று. ஆனால் கடனளிப்பு 1970-ல் 31·7% ஆக இருந்தது 1971-ல் 7·1% ஆகக் குறைந்தது. அரசினர் பிணையங்களில் வங்கி 1970ஆம் ஆண்டு முதலீடு செய்தது ரூ. 30 கோடியாக இருந்தது 1971ஆம் ஆண்டில் ரூ. 78 கோடியாக உயர்ந்தது. ரிசர்வு வங்கியிடமிருந்து ஸ்டேட் வங்கி கடன்பெற்றது, 1970-ல் ரூ. 122 கோடியளவுக்குக் கூடியிருந்தது. 1971-ல் ரூ. 49 கோடியளவுக்குக் குறைந்தது குறிப்பிடத்தக்கது.

வைப்புத் தொகை வளர்ச்சியிலும் ஸ்டேட் வங்கி புதியதொரு போக்கினைக் கண்டது. 1970ஆம் ஆண்டில் ரூ. 192 கோடி வைப்புத்தொகை திரட்டப்பட்டது. 1971-ல் இது ரூ, 280 கோடியாக உயர்ந்தது. மொத்த வைப்புக்களில் கேட்பு வைப்பு 32·8% ஆகவும், தவணை வைப்பு 67·2% ஆகவும் இருந்தது. ஆனால் 1971-ல் வங்கி யளித்த தொழிற் கடன்கள் ரூ. 71 கோடியளவுக்கு மட்டுமே இருந்தன. 1970-ல் இத் தொகை ரூ. 250 கோடியாக இருந்தது. ஸ்டேட் வங்கியின் கடனளிப்பு வட்டி விகிதம் 1971 இறுதியில் 8·5% ஆக இருந்தது.

இந்திய வங்கிய அமைப்பில் ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருப்பதால்தான் அவற்றைப்பற்றிச் சற்று விரிவாகப் பேசவேண்டியிருந்தது. வணிக வங்கிகளின் மொத்த வைப்புக்களில் 27%-ம் அவை யளிக்கும் கடன் வசதிகளில் 30%-ம் ஸ்டேட் வங்கி, அதன் துணை வங்கிகளின் பங்காக இருப்பதால் இவ் வங்கிகளின் நடவடிக்கை வங்கியத் துறையைப் பாதிக்கவல்லன. மேலும், பொதுத்துறையில் முதன்முதலில் நிறுவப்பட்ட வங்கியாக இது இருந்து வருவதாலும், வணிக வங்கிகளிடையே பெரும் வலிமை வாய்ந்த தலைவன் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட

## பட்டியல் 5—1

**ஸ்டேட் வங்கி, துணை வங்கிகளின் வளர்ச்சி**

(ஆண்டு இறுதி விவரங்கள்) (ரூ. இலட்சக் கணக்கில்)

| | 1955 | 1960 | 1965 | 1969 | 1970 | 1971 |
|---|---|---|---|---|---|---|
| **இந்திய ஸ்டேட் வங்கி** | | | | | | |
| செலுத்திய முதலும் காப்பும் | 11,98 | 13,08 | 16,19 | 20,14 | 21,23 | 23,23 |
| வைப்புக்களும் பிற கணக்குகளும் | 225,99 | 576,32 | 735,12 | 1,227,30 | 1,440,95 | 1,747,90 |
| கடன்கள் | 105,81 | 232,24 | 481,22 | 839,87 | 1,114,53 | 1,138,43 |
| சிறு தொழில் கடன் | | 3,66 | 3,66 | 103,87 | 151,76 | 176,88 |
| வேளாண்மைக் கடன் | | | | 91,86 | 122,37 | 88,77 |
| கூட்டுறவுகளுக்குக் கடன் | | 4,70 | 17,17 | 62,68 | 114,28 | |
| ஏற்றுமதி நிதி யுதவி | | | | 68,91 | 92,93 | 108,05 |
| முதலீடுகள் | 116,97 | 299,71 | 264,45 | 358,14 | 447,58 | |
| அலுவலகங்களின் எண் | 497 | 907 | 1,276 | 1,673 | 2,122 | 2,488 |
| ஊழியர்கள் எண் | 14,682 | 24,664 | 37,996 | 59,916 | 67,221 | 75,021 |
| **துணை வங்கிகள்** | | | | | | |
| செலுத்திய முதலும் காப்பும் | | 7,07 | 8,06 | 8,80 | 8,91 | |
| வைப்புக்களும் பிற கணக்குகளும் | | 103,52 | 211,39 | 342,99 | 387,22 | |
| கடன்கள் | | 58,88 | 112 38 | 279,50 | 302,98 | |
| சிறு தொழில் கடன் | | 1,14 | 6,28 | 32,75 | 44,54 | 50,19 |
| வேளாண்மைக் கடன் | | | | 24,90 | 35,45 | 28,12 |
| கூட்டுறவுகளுக்குக் கடன் | | 1,40 | 3,45 | 15,20 | 27,19 | |
| ஏற்றுமதி நிதி யுதவி | | | | 11,94 | 11,86 | 14,03 |
| முதலீடுகள் | | 50,38 | 69,46 | 89,43 | 104,12 | |
| அலுவலகங்களின் எண் | | 381 | 658 | 947 | 1,149 | 1,304 |
| ஊழியர்கள் எண் | | 7,835 | 14,767 | 18,224 | 22,264 | |

நிலையிலிருந்து வருவதாலும் இன்னுப் பலப்பல ஆண்டுகளுக்கு இவ் வங்கிகளின் தனித்தன்மையும் சிறப்பு இடமும் தொடர்ந்து இருந்துவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969-ல் நாட்டுடைமை யாக்கப்பட்ட 14 பெரும் வணிக வங்கிகளும் தனித் தனி நிறுவனங்களாகவே செயலாற்றி வருவதாலும், அவற்றின் செய்முறைக்கும் ஸ்டேட் வங்கியின் செய்முறைக்கும் சில வேறுபாடுகள் இருந்து வருவதாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஸ்டேட் வங்கி போன்ற தனித் தன்மையும் சிறப்பும் இதுகாறும் பெறவில்லை.

# 6. நாணய மாற்று வங்கிகள்

(Exchange Banks)

நாணயமாற்று வங்கிகள் எனப்படுவன அயல் நாட்டு வங்கிகள் (Foreign Banks) என்றும் பேசப்படுகின்றன. அயல் நாட்டில் தமது தலைமை அலுவலகங்களைக் கொண்டிருக்கும் இவ் வங்கிகள் இந்தியாவில் சில இடங்களில், குறிப்பாகத் துறை முகப் பட்டினங்களில் தமது கிளைகளை நிறுவியுள்ளன. இந்தியாவின் அயல் நாட்டு வணிகத்தை யொட்டிய நடவடிக்கைகளுக்கு அயல் நாட்டுச் செலாவணி வாங்கல், விற்றல் போன்ற செயல்களில் இவ் வங்கிகள் சிறப்பாக ஈடுபட்டிருந்த காரணத்தால். இவை நாணயமாற்று வங்கிகள் என்ற சிறப்புப் பெயர் பெற்றன. ஆனால், இன்றைய நிலையில் இவ் வங்கிகளை நாணய மாற்று வங்கிகள் என்று குறிப்பிடுவதைவிட, அயல் நாட்டு வங்கிகள் எனக் குறிப்பிடுவதே சாலவும் பொருந்தும். ஏனெனில், பலப்பல இந்திய வங்கிகள் தற்போது நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. மேலும், அயல் நாட்டு வங்கிகளனைத்தும் பிற வணிக வங்கிகள் போன்று எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதுடன், உள்நாட்டு வணிகத்திற்கும் நிதி யுதவி வழங்குகின்றன. 1969 ஜூலையில் பெரும் பதினான்கு வணிய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டபோது அயல் நாட்டு வங்கிகள் நாட்டுடைமைத் திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. 1972 மார்ச்சு இறுதியில் 14 அயல் நாட்டு வங்கிகள் இந்தியாவில் செயலாற்றி வந்தன. அவை மொத்தம் 130 கிளைகள் கொண்டிருந்தன,

இந்தியாவுடன் வணிகத் தொடர்புள்ள பிற நாடுகளிலுள்ள வணிகர், வங்கியத் தொழிலை நல்ல ஆதாயத்துடன் நடத்த, இந் நாட்டில் வாய்ப்பு நிறைய இருக்கிறது என்பதையுணர்ந்து, இங்கு வங்கிக் கிளைகளைத் திறக்கலாயினர். தற்

போது இந்தியாவில் செயலாற்றி வரும் அயல்நாட்டு வங்கிகளின் பெயர்கள் வருமாறு:

1. அல்ஜிமின் பாங்க் நெதர்லண்ட் N. V. (நெதர்லண்ட் பொது வங்கி) ([Algemene Bank Netherland N.V. (General Bank of the Netherlands)].

2. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்டர்நாஷனல் பாங்கிங் கார்ப்பொரேஷன் (American Express International Banking Corporation).

3. பாங்க் ஆப் அமெரிக்கா நேஷனல் டிரஸ்ட் அண்டு சேவிங்ஸ் அசோசியேஷன் (Bank of America National Trust and Savings Association).

4. பாங்க் ஆப் டோக்கியோ (Bank of Tokyo).

5. பாங்க் நேஷனல் டி பாரிஸ் (Banque Nationale de Paris).

6. பிரிட்டிஷ் பாங்க் ஆப் தி மிடில் ஈஸ்ட் (British Bank of the Middle East).

7. சார்ட்டர்ட் பாங்க் (Chartered Bank).

8. ஈஸ்ட்டர்ன் பாங்க் (Eastern Bank).

9. பர்ஸ்ட் நேஷனல் சிட்டி பாங்க் (First National City Bank).

10. ஹாங்காங் அண்டு ஷாங்காய் பாங்கிங் கார்ப் பொரேஷன் (Hongkong and Sanghai Banking Corporation).

11. மெர்க்கன்டைல் பாங்க் (Mercantile Bank).

12. மிட்சுயி பாங்க் (Mitsui Bank).

13. நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் (National and Grindlays Bank).

ஹபீப் பாங்க் லிமிடெட் (Habib Bank Limited), நேஷனல் பாங்க் ஆப் பாகிஸ்தான் லிமிடெட் (National Bank of Pakistan Ltd.) என்ற இரு பாக்கிஸ்தானிய வங்கிகளும் எதிரிச் சொத்துக் காப்பாளர் (Custodian of enemy property) வசம் 1965 செப்டம்பர் 7ஆம் நாள் முதல் இருந்து வருவதால் அவை செயலாற்ற மாட்டாத நிலையிலுள்ளன. 1969ஆம் ஆண்டு இறுதியில் அயல் நாட்டு வங்கிகள் ரூ.481 கோடி வைப்புக்களைத் திரட்டியிருந்தன. இத் தொகை நாட்டிலுள்ள மொத்த வைப்புத் தொகையில் 10 விழுக்காடாக இருந்தது.

### அயல் நாட்டு வங்கிகள் நிறுவப்படுதல்

முதல் உலகப்போர் துவங்கிய போது ரஷ்ஷோ—ஏஷியாடிக் பாங்க் (Russo - Asiatic Bank) என்ற வங்கியும் டூஷ் ஏஷியாடெஷ் பாங்க் (Deutsche Asiatesche Bank) என்ற வங்கியும் தமது கிளைகளை மூடிவிட்டன. 1932-ல் சுமிட்டோமோ பாங்க் (Sumitomo Bank) கிளையும் 1834-ல் இம்பீரியல் பாங்க் ஆப் பெர்சியா (Imperial Bank of Persia) கிளையும் மூடப்பட்டன. 1939-ல் சார்ட்டர்ட் வங்கி பி.& ஓ. பாங்க் (P. & O. Bank) என்ற வங்கியைச் சேர்த்துக் கொண்டது. 1941-ல் பிரிட்டனுடன் ஜப்பான் போருக்கு இறங்கிய போது யோகோகாமா ஸ்பீசி பாங்க், மிட்சுயி பாங்க், பாங்க் ஆப் டைவான் (Yokohana Specie Bank, Mitsui Bank, Bank of Taiwan) ஆகிய மூன்று வங்கிகளும் மூடப்பட்டன. தாமஸ் குக் அண்டு சன் (Thomas Cook and Son) செய்து வந்த வங்கியப் பணிகளை கிரிண்ட்லேஸ் பாங்க் (Grindlays Bank) ஏற்றுக்கொண்டது. பிரிட்டிஷ் பாங்க் ஆப் தி மிடில் ஈஸ்ட் (British Bank of the Middle East) என்னும் மத்தியக் கிழக்குப் பிரிட்டிஷ் வங்கி 1950-ல் மூடப்பட்ட நெதர் லண்ட்ஸ் இந்தியன் கமர்ஷியல் பாங்க் (The Netherlands Indian Commercial Bank) என்ற வங்கியின் தொழிலை ஏற்றுக் கொண்டது. பாங்கோ நேஷனல் அல்ட்ராமரீனோ (Banco National Ultramarino) என்ற வங்கியின் இந்தியக் கிளை 1952-ல் மூடப்பட்டது. நேஷனல் பாங்க் ஆப் இந்தியா (National Bank of India) என்ற வங்கியும், கிரிண்ட்லேஸ் பாங்க் (Grindlays Bank) என்ற வங்கியும் 1958-ல் இணைந்து, நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் (National and Grindlays Bank) என்று பெயர் பெற்றது.

### இவ் வங்கிகளின் பணி

இந்தியாவின் வெளி நாட்டு வியாபாரத்திற்குக் கடனுதவி வழங்குவதே இவ் வங்கிகளின் முக்கியப் பணியாக இருந்து வருகிறது. 1935ஆம் ஆண்டு வரை இம்பீரியல் வங்கி நாட்டின் மைய வங்கி மேற்கொள்ளக்கூடிய பல பணிகளைச் சட்ட முறையாகச் செய்து வந்த காரணத்தால், அயல் நாட்டுச் செலாவணியில் அது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பல கட்டுப்பாடுகள் இருந்து வந்தன. வெளி நாட்டில் செலுத்தம் செய்ய வேண்டிய மாற்றுச் சீட்டைச் சார்ந்த எந்த நடவடிக்கைகளிலும் இம்பீரியல் வங்கி ஈடுபட அனுமதிக்கப் படவில்லை. வாடிக்கையரின் சொந்த நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் வெளி நாட்டு அனுப்புகை (Remittance) மட்டும் மேற்கொள்ள இம்பீரியல் வங்கி அனுமதிக்கப்பட்டது.

இந்தியக் கூட்டுப் பங்கு வங்கிகள் அயல் நாட்டுச் செலாவணி மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடத் தடையேதுமில்லை. இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் அல்லையன்சு பாங்க் ஆப் சிம்லா (Alliance Bank of Simla), டாடா இண்டஸ்டிரியல் பாங்க் (Tata Industrial Bank) ஆகிய வங்கிகள் வெளி நாட்டு வணிகத்திற்கு நிதி வசதிகள் செய்து தரும் பணியைக் கணிசமான அளவுக்கு மேற்கொண்டன. கடந்த சில ஆண்டுகளாக இந்திய வங்கிகள் அயல்நாட்டு நாணயமாற்று நடவடிக்கைகளில் படிப்படியாக ஈடுபட்டு வருகின்றனர். 1969ஆம் ஆண்டு இறுதியில் இந்திய வங்கிகள் அயல் நாடுகளில் 56 கிளைகளைக் கொண்டிருந்தன. ஸ்ரீலங்கா (இலங்கை), கயானு, பிஜித் தீவு, ஹாங்காங், ஜப்பான், கென்யா, மலேசியா, மரீஷஸ், சிக்கிம், சிங்கப்பூர், தாய்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இக் கிளைகள் அமைந்துள்ளன. பாகிஸ்தானிலுள்ள கிளைகள் செப்டம்பர் 1965 முதல் எதிரிச் சொத்துக் காப்பாளர் வசம் இருந்து வருகின்றன. வெளிநாட்டு வியாபாரத்தைச் சார்ந்த வங்கிய நடவடிக்கைகளனைத்தும் அயல் நாட்டு வங்கிகளின் தனி யுரிமையாகப் பல காலமிருந்து வந்தது. இந்தியா விடுதலை பெற்ற பின்னர் நிலைமை சிறிது மாறிற்று என்றாலும், இன்றும் இந்த நடவடிக்கைகள் பெரும் பகுதி அயல் நாட்டு வங்கிகளின் வசமுள்ளன என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் அயல் நாட்டு வங்கிகளிடம் பெருமளவு மூல தனமும் காப்பு நிதியும் இருப்பதுடன், குறைந்த வட்டிக்கு பெருமளவு நிதியை லண்டன் தள்ளுபடிச் சந்தை (London discount market) யில் திரட்டக்கூடிய வசதியும் உண்டு. முக்கிய வெளிநாட்டு நகரங்களனைத்திலும் இந்திய வங்கிகளுக்குக் கிளைகள் இல்லாத காரணத்தால் இந்திய வங்கிகள் நேரடி நாணய மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை. இந்தியாவிற்குள் தேவைப்படும் தொழில், வேளாண்மை, வணிகம் போன்ற துறைகளுக்குக் கடன் வழங்கக் கூடப் போதுமான நிதி வசதியில்லாத போது இந்திய வங்கிகள் அயல் நாட்டு வணிகத்துக்கு உதவுவது கடினமாக உள்ளது.

அயல் நாடுகளில் இந்திய வங்கிகள் கிளைகள் நிறுவுவதும் அவ்வளவு எளிதாக இருப்பதில்லை. கிளை திறக்க விரும்பும் இடத்தில் உள்ள பணச் சந்தையில் நல்ல செல்வாக்குப் பெற, பெருமளவு முதல் தேவைப்படும். வங்கிக் கிளை துவங்கப்பட்டதிலிருந்து சில காலத்திற்கு நட்டமேற்பட்டாலும் தொடர்ந்து நடத்தத் தயாராக இருக்க வேண்டும். அயல் நாட்டுச்

செலாவணிமாற்று நடவடிக்கைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களே இக் கிளைகளைத் திறம்பட நிருவகிக்க முடியும். இத் துறையில் தேர்ச்சி பெற்ற, மிகவும் நம்பிக்கையுள்ள நபர் களைக் கொண்டுதான் அயல் நாட்டுக் கிளைகளை வெற்றிகரமாக இயக்க முடியும். வெளி நாட்டுக் கிளைகளில் பொதுமக்கள், வணி கர்கள், தொழில் நிலையங்கள் வழி,வைப்புக்கள் திரட்டுவது அவ் வளவு எளிதல்ல. அந்த நாட்டிலுள்ள வங்கிகளின் போட்டி யைச் சமாளிக்கவும் தயாராக இருக்க வேண்டும். லண்டன் போன்ற உலக நிதிய மையவிடத்தில் அன்றி, வேறு இடங்களில் தலைமை அலுவலகமுள்ள வங்கிகள், பன்னாட்டுப் பணவாக்க நிலையினைக் கூர்ந்து கவனித்து வர, ஏற்றுமதி, இறக்குமதிச் சீட்டுக்களை வாங்க, வசதிக் குறைவால் தொல்லைப் படுகின்றன.

**அயல் நாட்டு வியாபாரக் கடனளிப்பு**

அயல்நாட்டு வணிகத்திற்கு நிதி வசதி அளிப்பது இரண்டு கட்டங்களாகப் பிரித்துப் பேசப்படும். சரக்கினை இந்தியத் துறைமுகத்திலிருந்து வெளி நாட்டுத் துறைமுகத்திற்கும், வெளி நாட்டுத் துறைமுகத்திலிருந்து இந்தியத் துறைமுகத் திற்கும் எடுத்துச் செல்ல நிதி வசதி ஏற்பாடு செய்வது ஒரு கட்டம். உள்ளூர்களிலுள்ள இடங்களிலிருந்து இந்திய துறை முகங்களுக்கும், துறைமுகங்களிலிருந்து உள்ளூர்களுக்கும் அச் சரக்கினை எடுத்துச் செல்ல நிதி வசதி ஏற்பாடு செய்வது மற்றொரு கட்டம். அயல் நாட்டுச் செலாவணி மாற்று நட வடிக்கைகளை மேற்கொள்ள ரிசர்வு வங்கியால் அனுமதிக்கப் பெற்ற வணிகர், அயல் நாட்டுச் சீட்டுக்களை வாங்குவது அல்லது தள்ளுபடி செய்வதன் வழி, அயல் நாட்டு வணிகத் திற்குப் பண வசதி செய்து கொடுத்தனர்.

ஏற்றுமதியர் தாம் அனுப்பும் சரக்கின் மதிப்புக்குத் தக்க மாற்றுச் சீட்டை இறக்குமதியர் மீது எழுதி, அதனுடன், அச்சரக்குக் குறித்த கப்பல் ரசீது, காப்பீட்டு ஒப்பந்தம், விலைப் பட்டியல், தோற்றுவாய்ச் சான்று ஆகியவற்றைத் தம் வங்கியரிடம் ஒப்படைப்பர். ஏற்றுமதியரின் வங்கியர் இறக்கு மதியரின் நாட்டிலுள்ள தம் முகவருக்கு இவற்றை யனுப்புவார். முகவர் இந்த ஆவணங்களை இறக்குமதியரிடம் அளிக்குமுன் ஏற்றுமதியர் எழுதிய மாற்றுச் சீட்டின் மீதான பணத்தைச் செலுத்தக் கோருவோர், தவணைமாற்றுச் சீட்டாக எழுதப் பட்டிருப்பின், இறக்குமதியர் மாற்றுச் சீட்டை ஏற்றவுடன் சரக்குரிமை ஆவணங்களை அவரிடம் அளிப்பார். தவணை பெரும்பாலும் 60 அல்லது 90 நாட்களாக இருப்பது வழக்கம்.

வங்கி மாற்றுச் சீட்டை வசூல் செய்து தரும்வரை ஏற்றுமதியர் பணத்திற்குக் காத்திருக்க வேண்டுவதில்லை. அம்மாற்றுச் சீட்டை ஏற்றுமதியர் தம் வங்கியிடம் தள்ளுபடி செய்து பணம் பெறலாம். அதாவது இந்த மாற்றுச் சீட்டை ஏற்றுமதியரின் வங்கியர் வாங்கிக்கொண்டு, அதன் மதிப்புக்குரிய தொகையைத் தள்ளுபடி கட்டணம் போக, மீதித் தொகையை, ஏற்றுமதியர் கணக்கில் வரவு வைத்து விடுவர். இவ்வகையாக ஏற்றுமதி வணிகத்துக்கு வங்கிகள் நிதி வசதி தந்து உதவுகின்றன.

வங்கிகள் ஏற்றுமதி வணிகத்திற்கு வேறொரு வகையாகவும் உதவுவதுண்டு. ஆவணங்கள் சேர்ந்த மாற்றுச் சீட்டுடன் வாணிக உறுதிக் கடிதம் (Letter of credit) ஒன்று இணைக்கப் படும். இறக்குமதியர் தம் வங்கியரை அணுகி, ஏற்றுமதியரின் பெயருக்கு ஓர் ஆவணத்துடன் சேர்ந்த நாணய உறுதி (Documentary credit) ஏற்படுத்தக் கோருகிறார். வாணிக உறுதிக் கடிதத்தை வெளியிடும் இறக்குமதியரின் வங்கி, ஏற்றுமதியரின் நாட்டிலுள்ள தனது தொடர்பு வங்கி (Correspondent Bank)யை, இறக்குமதியர் சார்பாக ஏற்றுமதியர் பெயருக்கு ஆவணஞ் சேர்ந்த நாணய வசதியை ஏற்படுத்தித் தரும்படி வேண்டுகிறது. ஏற்றுமதியர் சரக்கினைக் கப்பலில் சேர்த்ததும், மாற்றுச் சீட்டையும் பிற ஆவணங்களையும் தன் ஊரிலுள்ள தொடர்பு வங்கியிடம் அளிக்கிறார். வாணிக உறுதிக் கடிதத்தில் கண்டுள்ள சரத்துப்படி வங்கி ஏற்றுமதி யருக்கு மாற்றுச்சீட்டின் மீதான பணத்தை உடனே செலுத்தி விடுகிறது. ஏற்றுமதியரின் வங்கி, வாணிக உறுதிக் கடிதத்தை வெளியிட்ட இறக்குமதியரின் வங்கிக்கு மாற்றுச் சீட்டையும் பிற ஆவணங்களையும் அனுப்பி, தனக்குச் சேரவேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்ளுகிறது. இறக்குமதியரின் வங்கி, அவருடன் செய்து கொண்டுள்ள ஏற்பாட்டின்படி மாற்றுச் சீட்டின்மீதான பணத்தைப் பெற்றுக்கொண்டோ அல்லது வேறு முறையினைக் கடைப்பிடித்தோ, பின்னர் சரக்குரிமை ஆவணங்களை இறக்குமதியருக்குத் தரும். இறக்குமதியரின் வங்கி, தொடர்பு வங்கிக்கு வாணிக உறுதி யினைத் தெரிவிப்பதுடன் ஏற்றுமதியருக்கும் இதனைத் தெரிவிப் பதுமுண்டு. இதனை உறுதி செய்யப்பட்ட நாணய ஏற்பாடு என்பர்.

சில சமயம், ஏற்றுமதியர் நாணய ஏற்பாட்டின்படி சரக்கினைக் கப்பலில் ஏற்றிவிட்டு, கப்பல் ரசீது முதலான ஆவணங்களுடன் வங்கியின் மீது எழுதிய பணவிடை (Draft)

ஒன்றையும் தன் வங்கியிடம் அளிப்பார். பார்த்தவுடன் அல்லது ஏற்றபின் பணஞ்செலுத்தும் வகையில் இந்த ஏற்பாடு அமைந்திருக்கின்றது. இந்த ஏற்பாட்டைச் செய்து தந்த வங்கியிடம் பணவிடை காண்பிக்கப்பட்டதும், அதன்மீதான பணம் ஏற்றுமதியருக்குத் தரப்படும். ஏற்புக்குப் பின் செலுத்தும் ஏற்பாடு இருக்குமானல் குறிப்பிட்ட தவணைக்குப் பின் வெளியிட்ட வங்கியோ அல்லது அதன் முகவரோ அப்பண விடை மீது பணஞ் செலுத்துவர்.

ஏற்றுமதி செய்யுமுன் சரக்கின் மொத்த விலையையும் முன் பணமாகப் பெற்றுக்கொள்ளும் முறையும் சில நேரங்களில் கையாளப்படுகின்றது. சில பண்டங்கள் அனுப்பீடு (Consignment) முறையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சரக்கு ஏற்றுமதியரின் முகவர் அல்லது பிரதிநிதிக்கு ஏற்றுமதியர் பொருளை அனுப்பிவைப்பார். ஏற்றுமதியரின் வங்கியர் ஒரு பொறுப்புரிமை ரசீது (Trust Receipt) ஏற்றுமதியரின் முகவர் அல்லது பிரதிநிதிக்கு அனுப்பி வைப்பார். இதைக் கையொப்பமிட்டு வங்கியருக்கு முகவர் அல்லது பிரதிநிதி அனுப்பி வைப்பார். சரக்கு விற்பனையானதும், கழிவு, செலவினங்களைக் கழித்துக்கொண்டு, மீதியை ஏற்றுமதியரின் வங்கிக்கு முகவர் அனுப்பி வைப்பார். வங்கி, ஏற்றுமதியருக்குப் பணத்தைச் செலுத்திவிடும்.

அயல் நாட்டு நிறுவனங்களின் இந்தியாவிலுள்ள துணை நிறுவனங்கள் சில குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஒரு முழுத் தொகையினை அனுப்பவோ, பெற்றுக்கொள்ளவோ ஏற்பாடு செய்திருக்கும். இங்ஙனம் அனுப்பும் அல்லது பெறும் தொகையினை இறக்குமதி, ஏற்றுமதி நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்திக்கொள்வர். அண்மைக் காலத்தில் அயல் நாட்டு நிதி உதவி வழிப் பல இறக்குமதிகள் செய்யப்படுகின்றன. இறக்குமதி செய்யும் இந்தியர், சரக்கை அனுப்பும் ஏற்றுமதி யருக்குப் பணத்தை நேரடியாகச் செலுத்துமாறு ஏற்பாடு செய்வார்.

மேற்கண்ட பல அயல் நாட்டுச் செலாவணி செலுத்து - வரத்து நடவடிக்கைகளில் பெருமளவுக்கு ஆவணங்கள் சேர்ந்த மாற்றுச் சீட்டு, வாணிக உறுதிக் கடிதம் வழி நடை பெறுகின்றன. இதனல் அயல் நாட்டு வணிகத்திற்கு வங்கி களின் உதவி மிகுதியும் தேவைப்படுவது புலனகிறது.

சரக்குகளைத் துறைமுகங்களில் இருந்து உள்ளூர்களுக்கு எடுத்துச் செல்லவும், உள்ளூர்களில் திரட்டி வைக்கப்பட்டுள்ள சரக்குகளைத் துறைமுகங்களுக்கு எடுத்து வரவும் நிதி வசதிகள் தேவைப்படுகின்றன. அயல்நாட்டு வங்கிகள் உள்நாட்டிலுள்ள முக்கிய இடங்களில் கிளைகள் கொண்டிருந்தால், இந்த வசதியையும் அளிப்பது எளிதாகும். ஆனால், இந்தத் தேவையைப் பெரும்பாலும் இந்திய வங்கிகளும் நாட்டு வங்கியரும் நிறைவு செய்கின்றனர். ஏற்றுமதியரும் இறக்குமதியரும், ஒரே வங்கி, உள்ளூரிலிருந்து சரக்கை வெளிநாட்டிலுள்ள துறைமுகத்தில் கொண்டு சேர்க்கும் வரை தேவைப்படும் கடன் வசதிகளைச் செய்துகொடுத்தால், தங்களுக்குச் செலவு குறையும் என்று நம்புகின்றனர். ஒவ்வொரு கட்டத்திற்கும் வெவ்வேறு வங்கிகள் கடன் வசதியளிக்குமானால் செலவு மிகுதியாகும்.

அயல் நாட்டு வாணிகத்திற்கன்றி, உள் நாட்டு வாணிகத்திற்கும் இவ் வங்கிகள் நிதி வசதி அளிக்கின்றன. பிற வணிக வங்கிகள் செய்துவரும் எல்லாப் பணிகளையும் அயல் நாட்டு வங்கிகளும் செய்து வருகின்றன. இவை கணிசமான அளவுக்கு வைப்புகளைத் திரட்டுவதுடன் மாற்றுச் சீட்டு நடவடிக்கைகளையும் கடன் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றன. அடுத்த பக்கத்தில் காணப்படும் அட்டவணை நிலையினை நன்கு விளக்கும்.

நாணயமாற்று வங்கிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், அவற்றின் பணிகள் தரம் மிக்கன. அவற்றோடு போட்டியிடும் வங்கிகளை அவை வரவேற்பதில்லை. நாணயமாற்றுத் தொழில் நல்ல ஆதாயம் தருவதாக இருந்தும், புதிதாக அத் தொழிலை நடத்த வங்கிகள் அமைக்கப்படாததற்கு இதுவே காரணமாகும்.

பல காலமாக அயல் நாட்டு வங்கிகளின் மீது பல குற்றச் சாட்டுக்களும் குறைபாடுகளும் கூறப்பட்டு வருகின்றன. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் வருவதற்குமுன் இவ் வங்கிகளின் நடவடிக்கைகள் பற்றிப் பொதுமக்கள் ஏதும் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. தணிக்கை செய்யப்பட்ட கணக்கு, வங்கியின் மொத்த நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களைத் தந்தபடியால், இந்தியாவில் இவ் வங்கியின் நடவடிக்கை எவ்வளவினதாயுள்ளது என்று அறிய முடியாத நிலையிலிருந்தது. மற்றும் அண்மைக் காலம்வரையில் வைப்பாளர்களின் நலனைப் பாதுகாக்க எந்த வகையான விதிகளோ நடைமுறைக் கட்டுப்பாடுகளோ இல்லை. இந்த வங்கிகள் பல காலம் மிகக் குறைந்த

# பட்டியல் 6—1

## முக்கியச் சில அயல் நாட்டு வங்கிகளின் சொத்துக்கள்—பொறுப்புக்கள்

(1969 டிசம்பர் 31-ல் இருந்த நிலை)

இந்தியாவில் ஏற்பட்ட நடவடிக்கைகள் மட்டும் [ரூ. ஆயிரக்கணக்கில்]

| வரிசை எண் | வங்கியின் பெயர் | மொத்த வைப்புக்கள் | பிற வங்கிகளிடம் இருந்து கடன் | பிற பொறுப்புக்கள் | மொத்தப் பொறுப்புக்கள் | ரொக்கம்: கையிருப்பு | ரொக்கம்: வங்கிகளில் | அழைப்பு, குறுந் தவணைப் பணம் | வாங்கிய, தள்ளுபடி செய்த மாற்றுச் சீட்டு | அளித்த கடன்கள் | அரசாங்கப் பிணையங்களில் முதலீடு | நடப்பு ஆண்டு ஆதாயம் அல்லது நட்டம் (—) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நேஷனல் & கிரிண்ட்லேஸ் பாங்க் | 219,81,87 | 11,38,50 | 48,07,11 | 279,27,48 | 1,89,82 | 10,27,37 | ... | 39,70,22 | 139,14,00 | 52,04,11 | 72,70 |
| 2 | பர்ஸ்ட் நேஷனல் சிட்டி பாங்க் | 85,00,43 | 11,28,79 | 13,69,69 | 89,99,89 | 61,03 | 3,44,06 | 60,00 | 4,50,34 | 49,00,47 | 15,18,70 | 70,38 |
| 3 | சார்ட்டர்ட் பாங்க் | 57,50,58 | 5,13,30 | 19,94,08 | 82,62,74 | 50,12 | 2,96,16 | 2,53,00 | 12,43,77 | 31,54,89 | 13,79,69 | 6,72 |
| 4 | மெர்கன்டைல் பாங்க் | 36,06,88 | 5,68,84 | 11,42,30 | 53,18,02 | 49,52 | 1,41,68 | 30,00 | 6,43,51 | 24,99,26 | 8,39,02 | —53 |
| 5 | பாங்க் ஆப் அமெரிக்கா நேஷனல் டிரஸ்ட் & சேவிங்ஸ் அசோசியேஷன் | 33,93,22 | .... | 6,27,00 | 40,20,22 | 10,90 | 96,58 | 11,00 | 2,15,53 | 22,60,86 | 7,87,53 | 38,02 |
| 6 | அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்டர் நேஷனல் பாங்கிங் கார்பரேஷன் | 33,85,64 | 64,14 | 4,28,49 | 38,78,27 | 12,33 | 2,19,40 | 42,00 | 1,67,82 | 22,05,77 | 9,15,11 | 26,11 |

ரொக்கக் காப்புத் தொகையுடன் இயங்கி வந்தமையால் இவை இந்தியப் பணச் சந்தையில் நலிந்த நிலையினை யுண்டாக்கின. முதலாம் உலகப்போர் துவக்கமானபோது, இவ்வங்கிகள் இக்கட்டான நிலைமைக்கு ஆளாயின. இந்த அனுபவத்தால் பக்குவம் பெற்ற வங்கிகள் பின்னர் கணிசமான அளவு ரொக்கக் காப்பு (Cash Reserve) வைத்திருக்கலாயினர். தற்போது சட்ட முறையாக இவ் வங்கிகள் ரொக்கக் காப்பு வைத்திருப்பதுடன் கணிசமான முதலீடுகளை அரசினர் பிணையங்களில் ஈடுபடுத்தி யுள்ளனர்.

நாணயமாற்று வங்கிகள் அயல் நாட்டு வணிகத்திற்குக் கடன் வசதிகள் செய்து தருவது இந்தியாவுக்கு இரண்டு வகையில் இழப்பாகும் என்று சிலர் கருதுகின்றனர். இந்திய மக்களின் பணத்தை வைப்புகளாகத் திரட்டித் தொழில் செய்வதால் இந்த அளவுக்கு இந்திய வங்கிகளுக்கு வங்கியத் தொழில் குறைந்து போகிறது. இங்ஙனம் திரட்டிய பணத்தைக் கொண்டு தொழில் செய்து இலாபம் பெறுவது இந்திய வங்கிகளுக்குக் கிட்டாமல் போகிறது. அயல் நாட்டு வணிகம் பெருகப் பெருக, இந்த இழப்பு அதிகரிக்கிறது. மற்றும், தரகு, காப்பீட்டுக் கட்டணம், பிற கட்டணங்கள் யாவும் இந்தியரல்லாத பிற தொடர்புற்ற நிலையங்கட்குக் கிட்டுமாறு நாணயமாற்று வங்கிகள் ஏற்பாடு செய்து வந்தன. இந்திய வணிகர்களைப் பற்றி அயல் நாட்டு வணிகருக்கு நல்லெண்ணம் ஏற்படும் வகையான உண்மை நிலையைத் தெரிவிப்பதில்லை. ஆனால் எளிய நிலையிலுள்ள அயல் நாட்டுத் தொழில் நிலையங்களைப் பற்றி மிக உயர்ந்த எண்ணத்தைத் தெரிவித்து வந்தன. இது பற்றி உசாவியபோது, அயல் நாட்டு வங்கிகளின் மேலாளர்கள் அயல் நாட்டினராக இருந்த காரணத்தால் அவர்கள் தம் இந்திய வாடிக்கையரைப் பற்றி மிகுதியாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. எனவே அவர்களிடம் பணி புரியும் நபர்கள், தரகர் போன்றவர்கள் தரும் செய்தியை அடிப்படையாகக் கொண்டே தம் கருத்தைத் தெரிவித்தனர் என்று தெரியவந்தது.

அயல் நாட்டு வணிகத்தில் மற்றொரு வகையிலும் இந்தியர் பாதிக்கப்பட்டனர். இறக்குமதிச் சரக்குக்கான பணத்தைச் செலுத்திய பின்னரே சரக்குரிமை ஆவணங்கள் இந்திய வணிகருக்குத் தரப்பட்டன. வெளிநாட்டுத் தொழிலகங்கள் இறக்குமதி செய்யும்போது மாற்றுச் சீட்டை ஏற்ற மாத்திரத்திலேயே சரக்குரிமை ஆவணங்களைப் பெறும் வசதியைப் பெற்

திருந்தன. இந்திய ஏற்றுமதியாளர்களின் மாற்றுச் சீட்டு களைத் தள்ளுபடி செய்து தருவதிலும் இவ் வங்கிகள் பல நிபந்தனைகளை விதித்தன. இந்தியரல்லாத ஏற்றுமதியருக்கு மிக எளிதாக மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்து தந்தன. இதற்குப் பலப்பல காரணங்களை அயல் நாட்டு வங்கிகள் சமாதானமாகக் கூறினலும், இவற்றல் இந்திய ஏற்றுமதியரும் இறக்குமதியரும் பாதிக்கப்பட்டனரென்பது உண்மை. அயல் நாட்டு வணிகர், தொழிலகங்கள் பற்றிய செய்திகள் இந்திய வணிகருக்குக் கிடைக்க இவ் வங்கிகள் ஏதும் உதவவில்லை. ஆனல் இந்தியாவிலுள்ள அயல் நாட்டுத் தொழில் நிலையங் களின் அலுவலகங்கள் தமக்குத் தேவைப்பட்ட செய்திகளை எளிதில் பெற முடிந்தது. அயல் நாட்டு வங்கிகள் இது குறித்து இந்திய வணிகருக்கு உதவி யேதும் செய்ய முடியாத நிலையிலிருந்தன.

வரலாற்றின் காரணமாக, நம் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி, ஸ்டெர்லிங் சீட்டுக்கள் உதவியுடன் நடைபெற்று வருகின்றது. உலகப் பணச் சந்தையின் மையமாக லண்டன் விளங்கியதாலும், ரூபாய் ஸ்டெர்லிங்குடன் பிணைக்கப்பட்டிருப் பதாலும், இவ் வகையான நிலை தொடர்ந்து இருந்து வரு கின்றது. இந்திய ஏற்றுமதியருக்கு இதனல் ஆதாயம் கிடைக் கின்றது. இவர்கள் எழுதும் ஸ்டெர்லிங் சீட்டுக்களை லண்டன் சந்தையில் தள்ளுபடி செய்து கொள்ளலாம். ஆனல் இந்திய இறக்குமதியருக்கு ஆதாயம் ஏதும் கிடைப்பதில்லை. மாருக, ஸ்டெர்லிங் சீட்டை ஏற்கும் இறக்குமதியர் கூடுதலாகச் செலவு களை ஏற்க வெண்டியுள்ளது. இந்தயாவில் வணிகம் செய்யும் அயல் நாட்டுத் தொழில் நிலையங்கள் சரக்கு ஏதும் இறக்குமதி செய்ய விரும்பினல், அவர்களது லண்டன் அலுவலகம் ஏற்றுமதியர் எழுதும் ஸ்டெர்லிங் சீட்டை ஏற்று, அதை லண் டன் சந்தையிலேயே குறைந்த வட்டிக்குத் தள்ளுபடி செய்து கொள்ளுகின்றன. இதன் காரணமாக இவர்கள் நயமான விலைக்குச் சரக்கினை இறக்குமதி செய்ய ஏதுவாகிறது. இந்த வசதி இந்திய இறக்குமதியருக்குக் கிட்டுவதில்லை.

இந்தியக் கூட்டுப் பங்கு வங்கிகளின் வளர்ச்சி நாணய மாற்று வங்கிகளின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டது என் றும் குறை கூறப்பட்டது. பொதுவாக, இறக்குமதி செய்யும் நாட்டின் செலாவணியில்தான் இறக்குமதிச் சீட்டு எழுதப்பட்டு, அந் நாட்டிலுள்ள தள்ளுபடிச் சந்தையில் அது தள்ளுபடி செய்யப்படுவது வழக்கம். ஆனல் இந்திய இறக்குமதிக்கான

சீட்டுக்கள் ஸ்டெர்லிங்கில் எழுதப்படுவதால், இவை இந்தியப் பணச் சந்தையில் இடம் பெறுவதில்லை. இந்திய வங்கிகள் இச் சீட்டுக்களில் முதலீடு செய்யும் வாய்ப்பினையும் இழந்துவிடுகின்றன. ரூபாயல்லாத பிற செலாவணியில் இறக்குமதிச் சீட்டுக்கள் எழுதப்படுவதால், இலாபம் பெறுவது அயல் நாட்டு வங்கிகள் தாம் என்பது மறுக்கவொண்ணாத உண்மையாகும்.

உள் நாட்டு வியாபாரத்திற்குப் பெரும்பாலும் இந்திய வங்கிகளே கடன் வசதிகள் செய்து வருகின்றன என்றாலும், நாணயமாற்று வங்கிகளும் இத் துறையில் இந்திய வங்கிகளோடு போட்டியிடுகின்றன என்று கூறப்படுகிறது. அயல் நாட்டு வணிகத்திற்கு நிதி வசதி செய்துதருவதற்கு வேண்டிய தொகைக்குப் பன்மடங்குத் தொகையினை நாணயமாற்று வங்கிகள் வைப்புக்களாகத் திரட்டுவது, அவை உள் நாட்டு வணிகத்திற்கும் நிதி வசதி யளிக்க உதவுகிறது. இதனால் இந்திய வங்கிகளின் தொழில் பாதிக்கப்படுகிறது. நம் நாட்டில் மட்டும் தான் பணச் சந்தை ஐரோப்பியப்பகுதி என்றும், இந்தியப்பகுதியென்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எந்த ஒரு முன்னேறிய நாட்டிலும் அயல் நாட்டு வங்கிகளுக்கு முதலிடமும், அந் நாட்டு வங்கிகளுக்கு இரண்டாம் இடமும் அளிக்கப்படுவதாகக் கேள்விப்படுவது அரிது. அண்மைக் காலம் வரை நாணயமாற்று வங்கிகளின் உயர் அலுவலர் அனைவரும் இந்தியரல்லாதாராகவே இருந்தனர். இந்தியர்களுக்கு எழுத்தர் பதவி மட்டுமே அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் சிறிது காலமாக நாணயமாற்று வங்கிகள் சில இந்தியர்களை உயர் பதவிகளுக்கெனத் தேர்ந்தெடுத்து, அயல் நாடுகளிலுள்ள தம் தலைமை அலுவலகங்களில் சிறப்புப் பயிற்சியும் அளித்து, அவர்களை இந்தியாவிலுள்ள தம் கிளைகளில் அலுவலராக நியமித்து வருகின்றன.

மைய வங்கியக் குழு, அயல் நாட்டு வங்கிகள் இந்தியாவில் இயங்குவதற்குப் பல சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இந்திய ரிசர்வு வங்கியின் அனுமதி பெற்றே எந்த ஓர் அயல் நாட்டு வங்கியும் இந்தியாவில் தொழில் செய்யலாம் என்ற நிலை அவசியம் ஏற்படவேண்டும். இந்திய வைப்பாளர்களின் நலனைப் பாது காக்கவும், ரிசர்வு வங்கி நாட்டில் தொழில் புரியும் எல்லா வங்கிகளையும் கட்டுப்படுத்தவும், நம் நாட்டு வங்கிகளுக்குப் பிற நாடுகளில் நாம் அளிக்கும் உரிமைகள் அளிக்கப்படவும் ரிசர்வு வங்கி தக்கதொரு உரிமம் வழங்கு முறை (Licensing System)

யினை மேற்கொள்ள வேண்டும். தற்போது வழக்கிலிருக்கும் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், மேற்கண்ட கருத்துக்களை யொட்டிய விதிகளைக் கொண்டுள்ளது. குழுவினர் நாணய மாற்று வங்கிகள் எவ் வகையில் இந்திய ஏற்றுமதி இறக்குமதி வணிகருக்கு உதவலாம் என்று சில யோசனைகளையும் தெரிவித்தனர். நாணயமாற்று வங்கிகள் இந்திய இறக்குமதியின் சீட்டுக்களை வாங்குவதற்குப் பதிலாக அவற்றை ஏற்ருல், இச் சீட்டுக்களை லண்டன் சந்தையில் தள்ளுபடி செய்து, குறைவான செலவில் இறக்குமதியர் பண வசதிகளைப் பெறலாம். மற்றும், அயல் நாட்டு ஏற்றுமதியர் சீட்டுக்களை ரூபாய்களில் எழுத வேண்டுமென இந்திய இறக்குமதியர் விரும்பினுல், நாணயமாற்று வங்கிகள் இதற்கு வேண்டிய வசதிகளை அளிக்க வேண்டும். அயல் நாட்டு வங்கியின் கிளை ஒவ்வொன்றுக்கும் ஓர் உள்ளூர் அறிவுரை அவை ஏற்படுத்தி, கிளை மேலாளருக்குக் கடன்கள் அளிக்கும் செய்தி குறித்துத் தக்க யோசனை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த ஏற்பாடு செயற்படுத்தப்பட்டால் இந்திய வாடிக்கையரைப் பற்றிச் சரியான செய்திகளை அயல் நாட்டு வங்கியின் கிளை மேலாளர்கள் தெரிந்துகொள்ள முடியும்.

**ஆதிக்கத்தை ஒடுக்க வேண்டுமா?**

நாணயமாற்று வங்கிகளின் ஆதிக்கத்தை ஒடுக்க வேண்டுமென்று சிலர் சில யோசனைகளைத் தெரிவித்துள்ளனர். இவ் வங்கிகள் தமது நடைமுறை முதலில் பாதியையேனும் தம் நாட்டிலிருந்து கொண்டுவர வேண்டும்; இந்தியாவின் அயல் நாட்டு வணிகத்திற்குத் தேவைப்படும் நிதி வகதிகளின் அளவிற்கு மட்டுமே இந்தியாவில் இவை வைப்புக்களைத் திரட்ட அனுமதிக்கப்பட வேண்டும்; இந்தியாவில் ரூபாய் மூல தனத்தோடு பதிவு செய்யப்பட்ட கம்பெனியொன்றை நிறுவி, இந்தியர்களை இயக்குநர்களாக நியமித்தால், இந்தியக்கம்பெனி, நிறுவனங்கள், தனி நபர்களிடமிருந்து வைப்புக்களைப்பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படலாம். துறைமுகப் பட்டினங்களில் மட்டுமே இவ் வங்கிகள் கிளைகள் நிறுவ அனுமதிக்கப்படலாம் என்பது ஒரு சாராரின் கருத்து. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த அயல் நாட்டு வங்கியும் இந்திய வங்கி ஏதனையும் கட்டுப்படுத்தும் அளவுக்கு அதன் பங்குகளை வாங்கக் கூடாது. ஓரிரு அலுவலர் தவிர, பிறரனைவரும் இந்தியர்களாக இருத்தல் வேண்டும் என்பது மற்ருேர் யோசனை. இவ் வங்கிகளின் நடவடிக்கை பற்றிய முழு விவரமும் உரிமம் வழங்கும் ஆணையத்திற்குச் சட்டமுறையாக அனுப்பப்படல் வேண்டும்.

இவ் வங்கிகளுக்குத் தீர்வக வசதிகள், மறு தள்ளுபடி வசதிகள் போன்றவற்றை அளிப்பது உரிமம் வழங்கும் ஆணையின் விருப்பத்திற்கு விடப்படல் வேண்டும்.

உலக நாடுகளில் இந்தியா முக்கியமானதொரு வணிக நாடாகத் திகழ, அதன் அயல் நாட்டு வணிகத்திற்குக் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து தர, இந்திய வங்கிகள் தயாராக வேண்டும். நாணய மாற்று வங்கிகளை நம்பி, அயல் நாட்டு வணிகம் நடைபெறும் நிலை மாற வேண்டும். அயல் நாட்டு வங்கிகள் தம் நாட்டவர்களின் நலனைப் பாதுகாக்க, அவர்களுக்குச் சிறப்பு வசதிகளைச் செய்து தருவதில் வியப்பேது மில்லை. அயல் நாட்டு வங்கிகள், அதிலும் குறிப்பாக பிரிட்டிஷ் வங்கிகள் பிரிட்டிஷாரல்லாத நபர்களுக்குக் கடன் வசதிகள் அளிப்பதில் மிகவும் கடுமையாக இருக்கின்றன. இது கருதியே, ஜெர்மன், ஜப்பான் நாட்டினர் தமது வங்கிகளின் கிளைகளை அயல் நாடுகளில் நிறுவி, தம் அயல் நாட்டு வணிகத்தைச் செழிக்கச் செய்தனர். இதே போன்று, இந்திய வங்கிகளும் அயல் நாடுகளில் தம் கிளைகளை நிறுவி, தம் அயல் நாட்டு வணிகப் பணிகளைப் பெருக்கவும் வளர்க்கவும் செய்யலாம். இந்திய அரசும், அரசு போன்ற நிறுவனங்களும், தமது அயல் நாட்டு வணிகத் தொடர்பு அனைத்தையும். நாணயமாற்று நடவடிக்கைகள் அனைத்தையும் இந்திய வங்கிகள் வழியே செய்து, அவற்றை ஊக்குவிக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளாகச் சில இந்திய வங்கிகள் அயல் நாட்டு நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு, நல்ல முறையிலே சிறப்பாகச் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இந்திய வங்கிகள் இந் துறையில் தலையெடுத்தது முதல் அயல் நாணயம் வாங்கும் விலை, விற்கும் விலை ஆகியவற்றிற் கிடையேயுள்ள இடைவெளி வெகுவாகக் குறைந்து விட்டது. இதற்கு முன் கடுமையான இடைக்கால வட்டி வசூலித்து வந்த நாணயமாற்று வங்கிகள் இப்போதெல்லாம் பணச் சந்தை நிலவரத்தை யொட்டி, நியாயமான வட்டியையே வசூலிக்கின்றன. வங்கியப் பழக்கம் படிப்படியாக வளர்ந்து வரும் நம் நாட்டில், ஆண்டுக்கு ஆண்டு வைப்புக்களின் தொகை மிகுந்த வண்ணமிருந்து வருவது நாம் காணக் கிடக்கும் உண்மையாகும். இந்நிலையில், அயல் நாட்டு வணிகத் தேவைகட்கு நிதி யுதவி செய்ய வேண்டுமளவுக்குப் பணம் இந்திய வங்கிகளுக்குக் கிடைக்குமா என்ற ஐயத்திற்கு இடமே யில்லை.

பொதுத் துறை (Public Sector) பெருமளவுக்கு வளர்ந்து வரும் நம் நாட்டில் ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில்

கணிசமான ஒரு பகுதி அரசினரைச் சார்ந்திருக்கிறது. இதற்கு வேண்டிய நிதி வசதிகளனைத்தையும் இந்திய வங்கிகள் மூலமே ஏற்பாடு செய்வது என்ற நிலை ஏற்பட்டால், இவ் வங்கிகளுக்கு இத் துறையில் இன்னும் பெருமளவுக்கு வாய்ப்புக்கள் ஏற்படும். இன்றைய நிலையில், பெரும் வணிக வங்கிகளனைத்தும் பொதுத்துறை வங்கிகளாகச் செயற்பட்டு வருவதால் இந்தக் கொள்கையை நிறைவேற்றுவது எளிது.

தனியார் துறை நிதியக் குழு (Commitee on Finance for Private Sector) இது தொடர்பாகச் சில யோசனைகளைக் கூறியுள்ளது. ரிசர்வு வங்கி, நம் நாட்டு வங்கிகளின் அயல் நாட்டுக் கிளைகளுடன் கணக்கு வைத்துக் கொண்டு, அவற்றிற்குத் தக்க உதவியளிக்க வேண்டும். ஸ்டேட் வங்கி அயல் நாணய மாற்று நடவடிக்கைகளில் பெருமளவுக்கு ஈடுபடுவதில் இடர்ப்பாடு ஏதுமிருப்பின், அரசு, இந்திய நாணயமாற்று வங்கி (Indian Exchange Bank) ஒன்றை நிறுவ வேண்டும், அரசும், இந்தியக் கூட்டுப் பங்கு வங்கிகளும் சேர்ந்து, இதற்கு முதல் வழங்க வேண்டும். நாளடைவில் அரசு எடுத்துக் கொண்ட பங்குகளைப் பொது மக்களுக்கு விற்றுவிடல் வேண்டும். மூன்று கோடி ரூபாய் முதலுடன் துவங்கப் பெறும் இந்த வங்கிக்கு ரிசர்வு வங்கி தாராளமாக நிதியுதவி வழங்க வேண்டும். இவ் வங்கி, அரசின் அனுப்புகை நடவடிக்கைகளை ரிசர்வு வங்கியின் முகவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். இந் நடவடிக்கைகளை ஆதாயம் ஏதும் எதிர்பாராது செய்து வரவேண்டும்.

மத்திய வங்கியக் குழு, இந்தியரும் இந்தியரல்லாதாரும் சேர்ந்து, 'கூட்டு வங்கி' (Joint Bank) யொன்றை ஏற்படுத்தி, நிருவாகத்தைக் கூட்டாக மேற்கொண்டு, இதன் இலாபத்தை இரு சாராரும் பகிர்ந்து கொள்ளலாம் என்ற யோசனையைத் தெரிவித்தது. இந்த ஏற்பாடு இந்திய வங்கிகளுக்கும் நாணய மாற்று வங்கிகளுக்கும் இடையேயுள்ள வீணான போட்டியினைத் தவிர்த்து, அவற்றை ஒருங்கிணைந்துச் செயற்பட உதவும். இந்தத் திட்டத்தை நாணயமாற்று வங்கிகள் ஏற்காது என்ற எண்ணம் அப்போதே நிலவி வந்தது.

மேற்கண்ட யோசனைகளில் ஒன்றேனும் முழுமையாக இது வரை செயற்படுத்தப் படவில்லை. நாணயமாற்று வங்கிகள் மாறி வரும் பொருளாதார, அரசியல் சூழ்நிலையினை நன்கு புரிந்துகொண்டு, இந்திய வங்கிகளுக்குத் தம் ஒத்துழைப்பை

நல்கி வருகின்றன. நாணயமாற்று வங்கிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும், ரிசர்வு வங்கிக்கு மிகப் பரவலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயலாற்றும் எந்த வங்கிக்கும் உரிமம் மறுக்கவும் ரத்து செய்யவும் ரிசர்வு வங்கிக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. நாணய மாற்று வங்கிகள் உள்ளூர்களில் கிளைகள் திறப்பது குறித்தும் ரிசர்வு வங்கி அவ்வளவு எளிதாக அனுமதி தருவதில்லை. வங்கிய அமைப்பின் மிகப் பெரும் பகுதி அரசின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததிலிருந்து நாணய மாற்று வங்கிகள் தமது வலுக் குறைந்த நிலையினையுணர்ந்து, செயற்பட்டு வருகின்றன. நாட்டின் பொருளாதார நலங் கருதியே இவ் வங்கிகள் நாட்டுடைமைத் திட்ட சட்டத்தினால் பாதிக்கப்படாது விடப்பட்டன என்ற செய்தியினையும் யாவரும் அறிவர்.

# 7. வணிக வங்கிகள்

இந்த அத்தியாயத்தின் தலைப்பைப் பற்றிச் சில சொற்கள் துவக்கத்திலேயே கூறுவது அவசியமாகிறது. ஏனெனில், முன் அத்தியாயங்களில் கண்ட ஸ்டேட் வங்கி, அதன் துணை வங்கிகள் நாணய மாற்று வங்கிகள் ஆகியவையும் வணிக வங்கி களே. முன்னரே விளக்கப்பட்ட காரணங்களுக்காக அவற் றைத் தனியே படித்தோம். இந்தியாவில் நிறுவப்பட்டுச் செய லாற்றும் வங்கிகளைப் பற்றிய செய்திகளை இந்த அத்தியாயத்தில் காண்போம். இந்த வங்கிகளும், மூன்று வகையினவாகப் பிரிக்கப்படலாம். முதல் வகை, துவக்கத்தில் தனியார் வங்கி யாக இருந்து, 1969-ல் நாட்டுடைமையாக்கப்பட்ட பதினான்கு பெரும் வணிக வங்கிகள். இரண்டாம் வகை, இன்றும் தனியார் துறையிலிருக்கும் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் (Scheduled Banks). மூன்றும் வகை, பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெறு வங்கிகள் (Non - Scheduled Banks). இம் மூன்றும் வகை வங்கிகளும் தனியார் துறையில்தான் செயற்பட்டு வரு கின்றன.

### நாட்டுடைமைப் படுத்தல்

1969 ஜுலை 19ஆம் நாள், நம் நாட்டு வங்கிய வரலாற்றில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. ஐம்பது கோடி ருபாயும், அதற்கும் மிகுதியான தொகையும் வைப்புக்களாகக் கொண் டிருந்த பதினான்கு தனியார் துறை வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டன. வேளாண்மையை வளர்க் கவும், பின் தங்கிய பிராந்தியங்களை முன்னுக்குக் கொண்டு வரவும், இதுகாறும் புறக்கணிக்கப்பட்டு வந்த பிரிவினருக்குக் கடன் வசதிகளை அளிக்கவும், மக்களின் சேமிப்புக்களைப் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய உற்பத்தித் துறைகளில் ஈடுபடுத்தவும் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏதோ ஒரு சில பங்குநர் சேர்ந்து, தம் விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்து, தம் நலன் கருதிச் சில கடன்களைக் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் கொடுத்து வாங்கி வந்தால், நாட்டின் பொருளாதாரத் திட்டங்கள் நிறைவேறிவிடா. ஊக நடவடிக்கைகளுக்கும் உற்பத்தி நோக்கற்ற செயல்களுக்கும் கடனளிப்பதை வங்கிகள் நிறுத்த வேண்டும் என்று கருதப்பட்டது. தொழில் முயற்சியில் புதிதாக இறங்குபவர்களை ஊக்குவிக்கவும், எல்லாருக்கும் சமமான வாய்ப்பளித்து, சமூக நீதியுடன் கூடிய சமதர்ம சமுதாயமொன்றை உருவாக்கவும் வங்கிகளை நாட்டுடைமையாக்குதல் அவசியமாயிற்று.

நாட்டுடைமைச் சட்டம் முறையானதல்ல என நாட்டு உச்ச நீதி மன்றத்தின் முன் வழக்குத் தொடரப்பட்டது. உச்ச நீதி மன்றம் நாட்டுடைமைச் சட்டம் செல்லுபடியாகும் என்றும், அதிலுள்ள சில சரத்துக்கள் மட்டுமே செல்லாதவை என்றும் தீர்ப்புக் கூறியது. நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப்படி வங்கிகள் மேற்கொள்ளக் கூடாத தொழில் எதனையும் செய்யக் கூடாது என்ற சரத்தும், அவ் வங்கிகளுக்குத் தரப்படும் நிறையீடு (Compensation) சரியான முறையில் கணக்கிடப்படாததால் பெயரளவுக்கு நிறையீடு என்ற முறையில் அமைந்த சரத்தும் செல்லுபடியாகாதென உச்ச நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. இவ்விரு சரத்துக்களையும் திருத்தி மீண்டும் ஒரு சட்டம் 1970-ல் கொண்டு வரப்பட்டது.

கீழ்க்காணும் அட்டவணை இத்த 14 வங்கிகள் பற்றிய சில விவரங்களைக் கொண்டுள்ளது.

வங்கியக் கம்பெனிகள் (ஏற்றலும் நிறுவன மாற்றலும்) சட்டம் [Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act] 1970, நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிறையீடு இவ்வளவு தொகையாகும் என்று குறிப்பிட்டது.

மேற்கண்ட பதினான்கு வங்கிகள், அதே பெயர்கள் கொண்ட புது வங்கிகளுக்கு மாற்றித் தரப்படும் எல்லா வங்கிகளின் பெயர் இறுதியிலும் இருந்த லிமிடெட் (வரையறுத்தது) என்ற சொல்லும், சில வங்கிகளின் பெயரின் முன் சுட்டெழுத்தாக விளங்கிய 'The' என்ற சொல்லும் புது வங்கிகளின் பெயர்களில் நீக்கப்பட்டன. மத்திய அரசு இப் பதினான்கு

## பட்டியல் 7—1

### நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்

### 1969 ஜூன் 27-ல் இருந்த நிலை

| வங்கி | நிறுவப்பட்ட ஆண்டு | அலுவலகங் களின் எண்ணிக்கை | மொத்த வைப்புக்கள் (ரூ. கோடியில்) | அளித்திருந்த கடன்கள் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா | 1911 | 564 | 448 | 323 |
| 2. பாங்க் ஆப் இந்தியா | 1906 | 274 | 364 | 243 |
| 3. பஞ்சாப் நேஷனல் பாங்க் | 1894 | 570 | 355 | 243 |
| 4. பாங்க் ஆப் பரோடா | 1908 | 372 | 280 | 180 |
| 5. யுனைடெட் கமர்ஷியல் | 1943 | 348 | 203 | 137 |
| 6. கானரா பாங்க் [பாங்க் | 1906 | 325 | 149 | 108 |
| 7. யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா | 1950 | 175 | 146 | 108 |
| 8. தேனா பாங்க் | 1938 | 234 | 124 | 76 |
| 9. யூனியன் பாங்க் ஆப் இந்தியா | 1919 | 240 | 115 | 74 |
| 10. அலகாபாத் பாங்க் | 1865 | 153 | 112 | 87 |
| 11. சிண்டிகேட் பாங்க் | 1925 | 307 | 111 | 91 |
| 12. இந்தியன் பாங்க் | 1907 | 217 | 80 | 60 |
| 13. பாங்க் ஆப் மகாராட்டிரா | 1935 | 153 | 77 | 54 |
| 14. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் | 1936 | 198 | 68 | 45 |
| | | 4,130 | 2,632 | 1,829 |

வங்கிகளின் முழு உரிமையாளராயிற்று. ஒவ்வொரு வங்கிக்கும் தலைமை நிருவாக அதிகாரியாகச் செயலாற்றி வருபவர் காப்பாளர் (Custodian) என அழைக்கப்பட்டார். இவர் அரசின் சார்பாக வங்கியை நிருவகித்து வருவார். நிறையீட்டுத் தொகையினை ரொக்கமாகவோ அல்லது மத்திய அரசுப் பிணையங்களாகவோ வங்கியினர் விரும்பியவாறு தருவது என ஒப்புக் கொள்ளப்பட்டது. ரொக்கமாகப் பெற விரும்புவோருக்கு

மொத்தத் தொகையும் மூன்று தவணைகளில் 4% வட்டியுடன் தரப்படும். மத்திய அரசுப் பிணையங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பிய வங்கிகட்கு 10 ஆண்டு தவணையுள்ள 4·5% பிணையங்கள் அல்லது 30 ஆண்டு தவணையுள்ள 5·5% பிணையங்கள் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. பகுதியை ரொக்கமாகவும், பகுதியைப் பிணையங்களாகவும் ஏற்றுக் கொள்ள விரும்புவோருக்கு அவ் வசதியும் தரப்பட்டது.

## பட்டியல் 7-2

**நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகளுக்குத் தரப்படவேண்டிய நிறையீடு**

| வங்கியின் பெயர் | | நிறையீட்டுத் தொகை (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| தி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட் | .... | 17,50 |
| தி பாங்க் ஆப் இந்தியா லிமிடெட் | .... | 14.70 |
| தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிமிடெட் | .... | 10,20 |
| தி பாங்க் ஆப் பரோடா லிமிடெட் | .... | 8.40 |
| தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட் | .... | 8,30 |
| கானரா பாங்க் லிமிடெட் | .... | 3,60 |
| யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட் | .... | 4,20 |
| தேனு பாங்க் லிமிடெட் | .... | 3,60 |
| சிண்டிகேட் பாங்க் லிமிடெட் | .... | 3,60 |
| தி யூனியன் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட் | .... | 3,10 |
| அலகாபாத் பாங்க் லிமிடெட் | .... | 3,10 |
| தி இந்தியன் பாங்க் லிமிடெட் | .... | 2,30 |
| தி பாங்க் ஆப் மகாராஷ்டிரா லிமிடெட் | .... | 2,30 |
| தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட் | .... | 2,50 |

### புதிய வங்கிகளின் நிருவாகம்

புதிய வங்கிகளின் நிருவாகம் பற்றியும் சட்டம் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது. புதிய வங்கிகளின் நிருவாகம், கண்காணிப்பு முதலியன இயக்குநர் அவையினரிடம் அமையும். மத்திய அரசு ரிசர்வு வங்கியைக் கலந்து ஆலோசித்து, 7 நபர்களுக்கு மேற்படாத இயக்குநர் அவை யொன்றை ஒவ்வொரு

வங்கிக்கும் நியமனம் செய்யும். வங்கியின் நலன் கருதி நிய மிக்கப்பட்ட ஒருவரை நீக்கிவிட்டு, வேறொருவரை நியமிக்கவும் மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. இச் சட்டம் வருமுன் வங்கி யின் பெருந்தலைவராக இருந்த நபர்களே அவ் வங்கியின் காப் பாளராக இருப்பாரென்றும், பெருந்தலைவராக இருந்தவர் காப்பாளராகச் செயலாற்ற விரும்பாவிடினும், புது வங்கியின் நலங் கருதி வேறொருவரைக் காப்பாளராக நியமிக்க வேண்டிய நிலையிலும் மத்திய அரசு காப்பாளராக வேறெவரையும் நிய மிக்கலாம். மத்திய அரசின் விருப்பப்படி காப்பாளரின் பதவிக் காலம் நிருணயிக்கப்படும். இப் புதிய வங்கிகளின் முதல் இயக் குநர் அவை 1970 ஜூலையில் மத்திய அரசால் நியமிக்கப் பட்டது.

இந்தச் சட்டத்தின் கீழ், மத்திய அரசு ரிசர்வு வங்கியைக் கலந்து ஆலோசித்துக் கீழே காணப்படும் திட்டம் எதனையும் வகுக்கலாம்:

(i) புது வங்கியின் முதல் தொகை ரூ. 15 கோடிக்கு மிகக் கூடாது;

(ii) புது வங்கியின் இயக்குநர் அவையின் அமைப்பு;

(iii) புது வங்கியை இரண்டு அல்லது அதற்கும் அதிக மான கூட்டுருக்க (Corporation)ளாக மாற்றி யமைப்பது. வேறொரு வங்கியுடன் அல்லது பிற புது வங்கியுடன் ஒரு புது வங்கியை இணைப்பது, வங்கி முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ வேறு வங்கிக்கு மாற்றுதல் அல்லது புதிய வங் கிக்கு மாற்றுதல்.

உழவர், தொழிலாளர், கைவினைஞர், வைப்பாளர், வங்கி ஊழியர் ஆகிய பிரிவினர்களின் பிரதிநிதிகளும் நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கியின் இயக்குநர் அவையில் இடம் பெறுவர்.

பிற வங்கிகளைப் போன்று ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 31ஆம் நாள் இவ் வங்கிகளின் கணக்குக் கட்டப்பெற்று, ரிசர்வு வங்கியுடன் கலந்துகொண்டு, மத்திய அரசு நியமிக்கும் தணிக் கையரால் தணிக்கை செய்யப்படும். தணிக்கையரின் அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்படும். அறிக்கையின் நகல் ரிசர்வு வங்கிக்கும் தணிக்கை செய்யப்பட்ட புது வங்கிக்கும் அனுப்பப் படும். நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை வைக்கபபடும். எல்லா விதமான ஒதுக்கல்களும் செய்த பின்னர், மீதமுள்ள இலாபத்தை வங்கி மத்திய அரசுக்கு மாற்றித் தர வேண்டும்.

நாட்டுடைமை யாக்கப்படுமுன் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, பாங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் பாங்க், பாங்க் ஆப் பரோடா, யுனைடெட் கமர்ஷியல் பாங்க் ஆகிய ஐந்து வங்கிகளும் ஐம்பெரு (Big Five) வங்கிகளென்று அழைக்கப்பட்டு வந்தன. வணிக வங்கிகளில் தலைசிறந்து விளங்கும் சிலவற்றின் துவக்கம், வளர்ச்சி பற்றிய சில விவரங்களைக் காண்போம்:

**தி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**

டிசம்பர் 1911-ல் சர் பெரோர்ஜ்ஷா மேஹ்தாவின் தலைமையில், சோரப்ஜி போச்கானவாலாவின் அரும்பெரும் முயற்சியால் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா துவங்கப்பெற்றது. டிசம்பர் 1912-ல் முதல், காப்பு, வைப்பு எல்லாம் சேர்ந்து மொத்தம் ரூ. 77 இலட்சம் மட்டுமே கொண்டிருந்த இவ் வங்கி, டிசம்பர் 1920-ல் இந்த இனங்களின் மொத்தம் ரூ. 10 கோடியாகவும், 1938-ல் ரூ. 31 கோடியாகவும், 1968-ல் ரூ. 429 கோடியாகவும் வளரக் கண்டது.

இவ் வங்கியின் வரலாற்றில் 1923ஆம் ஆண்டு முக்கியமான தொரு நிகழ்ச்சி நடந்தது. இவ் வங்கியுடன் டாடா இன்டஸ்டிரியல் பாங்க் என்னும் டாடா தொழில் வங்கி இணைந்தது. இதனால் வங்கியின் நிலை மேலும் வலுவடைந்தது. துவக்கத்திலிருந்தே இவ் வங்கி கிளைகள் திறப்பதில் பெரும் ஈடுபாடு காட்டியது.

துவங்கியது முதல் 25 ஆண்டுகளுக்குள்ளாக. இவ் வங்கி ஒன்பது முறை நெருக்கடி நிலைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. 1968ஆம் ஆண்டு இறுதியில் இவ் வங்கி இந்தியாவில் 504 கிளைகளையும் வெளி நாடுகளில் 6 கிளைகளையும் கொண்டிருந்தது அந்த ஆண்டில் பங்குநர்களுக்கு 20% இலாப ஈவும் வழங்கிற்று. ஜூலை 1969-ல் இது நாட்டுடைமை யாக்கப்பட்டது.

**தி பாங்க் ஆப் இந்தியா**

தி பாங்க் ஆப் இந்தியா 1906ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. சர் சஸ்ஸூன் டேவிட், சர் கௌவாஸஜி ஜெகாங்கீர், ராம் நாராயண் ஹர் நந்த்ராய் ஆகியோர் முயற்சியால் இவ் வங்கி உருவாகியது. 1906ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 70 இலட்சம் இவ் வங்கியின் நடைமுறை முதலாக இருந்தது. துவக்க காலந்தில் இவ் வங்கி மிகவும் உன்னிப்பான, திடமான, உறுதியான

வங்கிக் கொள்கையினைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வந்தது. இதன் பயனாக, பலப்பல வங்கிகள் நெருக்கடிக்கு ஆளாகி, நொடித்த நேரத்திலும் பாங்க் ஆப் இந்தியா எவ்வித நெருக்கடிக்கும் ஆளாகாமல் உரத்துடன் நின்றது. பிப்ரவரி 1920-ல் முதன் முதலாக இவ் வங்கி அகமதாபாத்தில் கிளை யொன்றைத் திறந்தது. 1925-ல் முதன் முதலாக பம்பாய் மாகாணத்துக்கு வெளியில், கல்கத்தா நகரில் இவ் வங்கியின் கிளை திறக்கப்பட்டது. பெருங் கிளைகள் உள்ள ஊர்களிலுள்ள வாடிக்கையரின் நலனைப் பேண, உள்ளூர் குழுக்களை இவ் வங்கி அமைத்தது. 1939-ல் இவ் வங்கிக்கு 19 கிளைகள்—பம்பாயில் 7, கல்கத்தாவில் 3, அகமதாபாத், நாக்பூர். பூனை ஆகிய இடங்களில் 2, ஜாம்ஷெட்பூர், ராஜ்கோட், சூரட் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று—இருந்தன.

1943ஆம் ஆண்டில் ஜுனகாத் ஸ்டேட் வங்கியை பாங்க் ஆப் இந்தியா எடுத்துக்கொண்டது. 1946-ல் லண்டனில் ஒரு கிளையும், 1950-ல் டோக்கியோ, ஓசாகா நகரங்களில் கிளைகளும், 1951-ல் சிங்கப்பூரில் ஒரு கிளையும், 1953-ல் ஏடன், மொம்பாசா, கம்பாலா கிளைகளும் திறக்கப்பட்டன. இவற்றையடுத்து ஜின்ஜா, நைரோபி, டார்எஸ்ஸலாம் கிளைகள் திறக்கப்பட்டன. 1956-ல் வங்கி பொன்விழா கொண்டாடிய போது, 36 உள்நாட்டுக் கிளைகளும், 11 அயல் நாட்டுக் கிளைகளும் செயற்பட்டு வந்தன.

குறைந்த அளவுக் கிளைகளும், பெரிய தொழில் நகரங்களில் அலுவலகங்களும், உயர்ந்த அளவு எளிவரல் நிலை (Lquidity) யும் இவ் வங்கியின் சிறப்புக் கூறுகளாக விளங்கி வந்தன,

வங்கிகளின் மீது சமூகக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது முதல், இவ் வங்கியும் தனது கொள்கைகளைச் சமூகத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைத்து வந்தது; கிராமப் புறங்களில் கிளைகளைத் திறக்கலாயிற்று; முந்துமைத் துறைகளுக்குக் கடன் வசதியளிப்பதில் ஈடுபாடு காட்டியது. 1968ஆம் ஆண்டு இறுதியில் 234 இந்தியக் கிளைகளும் 16 அயல் நாட்டுக் கிளைகளும் இயங்கி வந்தன. பங்குநர்களுக்கு 18% இலாப ஈவு அளிக்கப்பட்டது. ரூ. 10·02 கோடி செலுத்திய முதலும் காப்பும் கொண்டிருந்த இவ் வங்கி ரூ. 390·07 கோடி வைப்புக்களை 1968 இறுதியில் பெற்றிருந்தது. 1969 ஜுலையில் இவ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது.

**தி பஞ்சப் நேஷனல் பாங்க்**

பலப்பல இடர்ப்பாடுகளையும் கடந்து, கடந்த நூற்றுண்டி லிருந்து செயற்பட்டு வரும் இந்தியர்களால் துவங்கப்பட்ட, உண்மையிலேயே இந்திய வங்கியாக விளங்குவது பஞ்சாப் நேஷனல் வங்கி யாகும். 1894ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இவ் வங்கி 1905 வரை மந்தமாக வளர்ந்தது. நாட்டின் சுதேசி இயக்கம் துவங்கியது முதல் இவ் வங்கியின் வைப்புக்கள் வள ரத் தொடங்கின. முதல் உலகப்போர் துவக்கத்தில் ஏற்பட்ட வங்கிய நெருக்கடியில் (1913–14) இவ் வங்கியும் துவண்டு எழுந் தது; தன் சொந்த நிதியினைப் பலப்படுத்திக் கொள்வதில் பெரும் முனைவு காட்டியது. 1895-ல் ரூ. 41 ஆயிரமே செலுத்திய முதலாகப் பெற்றிருந்த வங்கி 1916-ல் ரூ. 16 இலட்சம் செலுத் திய முதலும், காப்புநிதி ரூ. 11 இலட்சமும், வைப்புக்கள் ஒரு கோடி ரூபாய்க்கு மேலும் பெற்றிருந்தது. ஜனவரி 1940-ல் செயற்பட்டு வந்த பக்வான்தாஸ் பாங்கினை இது ஏற்றுக் கொண்டது.

இந்தியாவின் கோதுமைக் களஞ்சியமாகிய பஞ்சாபில் அமைந்துள்ள இவ்வங்கி, வேளாண்மைத் துறையில் நொடிப்பு ஏற்பட்ட 1928ஆம் ஆண்டில், சில இக்கட்டான நிலைகளுக்கு ஆளாகியது. இவ் வங்கியின் மொத்த வைப்புக்களில் ஏறத் தாழ 75% தவணை வைப்புக்களாகப் பலகாலம் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. 1958-ல் இவ் வங்கிகளுக்கு 48 கிளைகள் இருந்தன. இவற்றில் பெரும்பான்மையானவை பஞ்சாபில் இருந்தன. 1939-ல் நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகளில் இதுவும் ஒன்று. 1968 இறுதியில் இதன் செலுத்திய முதல் ரூ. 2 கொடியாகவும், காப்பு ரூ. 4·81 கோடியாகவும், மொத்த வைப்புக்கள் ரூ. 349·45 கோடியாகவும் இருந்தன. அவ் வாண்டுக்கு இவ் வங்கி 22 சத விகித இலாப ஈவு அளித்தது. 1968ஆம் ஆண்டு முடிவில் இந்தியாவில் 531 கிளைகளும், அயல் நாடுகளில் 2 கிளைகளும் இவ் வங்கிக்கு இருந்தன.

**தி அலகாபாத் பாங்க்**

இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட வங்கிகளில் மிகப் பழைமை யானது அலகாபாத் வங்கியாகும். அலகாபாத் நகரில் 1865ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இவ் வங்கி ரூ. 1·9 இலட்சம் செலுத்திய முதல் கொண்டிருந்தது. படிப்படியாக இத் தொகை உயர்ந்து, 1900 ஆண்டில் செலுத்திய முதல் ரூ. 5 இலட்சமாகவும், காப்பு நிதி ரூ. 10 இலட்சமாகவும்

வளர்ந்து நின்றது. இந்த வங்கி துவக்கக் காலத்தில் அதிக வைப்புக்களைத் திரட்ட முடியவில்லை. 1890 ஆம் ஆண்டு ரூ 59 இலட்சமாக இருந்த வைப்புத் தொகை 1900 ஆண்டில் ரூ. 2 கோடியைத் தாண்டியது.

கிளைகள் திறப்பதிலும் இவ் வங்கி மிகவும் உன்னிப்பாக இருந்து வந்தது. தனது முதல் கிளையை 1888 ஆம் ஆண்டு கான்பூரில் நிறுவியது. 1917-ல் 12 கிளைகளும் 1938-ல் 56 கிளைகளும் கொண்டிருந்த இவ் வங்கியின் செயற்பாடு பஞ்சாப், ஐக்கிய மாகாணங்களிலும் குவிந்திருந்தது.

துவக்கத்திலிருந்தே இவ் வங்கி ஐரோப்பிய ஆதிக்கத்திற்கும் நிருவாகத்திற்கும் உட்பட்டிருந்தது என்றாலும், 1922-ல் உண்மையாகவே ஐரோப்பியரின் முழு நிருவாகக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அந்த நாளில் செயற்பட்டு வந்த பி. & ஓ. பாங்க்கிங் கார்ப்பொரேஷன் (P. & O. Banking Corporation) என்ற ஐரோப்பிய வங்கி அலகாபாத் வங்கியின் பங்குகளைக் வாங்கிக்கொண்டு அதனுடன் இணைந்து விட்டது. மற்றுமொரு நிகழ்ச்சி 1927-ல் இவ் வங்கியின் வரலாற்றில் நிகழ்ந்தது. தி சார்ட்டர்ட் பாங்க் ஆப் இந்தியா, ஆஸ்திரேலியா அண்டு சைனு (The Chartered Bank of India, Australia and China) என்னும் வங்கி பி. & ஓ. பாங்கிங் கார்ப்பொரேஷனின் பெரும்பான்மைக்கும் அதிகமான பங்குகளை வாங்கியது. இதன் வழி மிகப் பெரிய நாணயமாற்று வங்கி யொன்று இந்தியாவில் உறுதியானதொரு இடத்தைப் பிடித்தது.

அலகாபாத் வங்கி எப்பொழுதும் நல்லதொரு எளிவரல் நிலையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. இவ் வங்கியின் வைப்புக்களில் 70 சத விதம் தவணை வைப்புக்களாக இருந்தும், இது எளிவரல் நிலையைக் கவனமாகக் காத்து வந்தது குறிப்பிடத் தக்க செய்தியாகும். இவ் வங்கியின் நடவடிக்கைகள் பெரும்பாலும் பஞ்சாப், ஐக்கிய மாகாணங்களைச் சுற்றி அமைந்துள்ளன. இவ் வங்கியின் தலைமை அலுவலகம் கல்கத்தா நகரில் உள்ளது. 1969 ஜூலையில் இவ் வங்கி நாட்டுடைமை ஆக்கப்பட்டது, 1968 இறுதியில் இவ் வங்கியின் செலுத்திய முதலும், காப்பும் ரூ 2.53 கோடியாகவும், வைப்புக்கள் ரூ. 107.82 கோடியாகவும் இருந்தன. அவ்வாண்டில் பங்குநர்களுக்கு 13 சத வீத இலாப ஈவு அளித்திருந்தது. இந்தியாவில் 132 கிளைகள் இவ் வங்கிக்கு இருந்தன.

**தி பாங்க் ஆப் பரோடா**

பரோடா மாநில மன்னருடைய ஆதரவுடன் 1908ஆம் ஆண்டு பாங்க் ஆப் பரோடா ஏற்படுத்தப்பட்டது. அம் மாநிலத்தின் வரவு செலவு நிருவாகம் இவ் வங்கியிடம் ஒப் படைக்கப் பட்டதால், துவக்கத்திலிருந்து இதற்கு வேண்டிய நடைமுறை முதல் இருந்து வந்தது. துவங்கிய மூன்றாண்டுகளுக்குள் இவ் வங்கி ஒரு கோடி ரூபாய் வைப்புக் களைப் பெற்றது. வைப்புத் தொகைக்கும், வங்கியின் சொந்தப் பணத்திற்கும், நல்லதொரு விகிதம் இருக்க வேண்டுமென வங்கி உணர்ந்ததால் தனது செலுத்திய முதல் தொகையையும் காப்பு நிதியையும் கூட்டிக் கொண்டு வந்தது. 1919-ல் இவ் வங்கி பம்பாயில் தனது முதல் கிளையைத் திறந்தது. குஜராத், கத்தியவார் ஆகிய இடங்களில் தனது பெரும்பான்மை நட வடிக்கைகளைக்கொண்டிருந்த இவ் வங்கி, 1938 ல் 23 கிளைகளைக் கொண்டிருந்தது. அவ்வப்போது மாநில அரசு பணத்தை வங்கியில் போடுவதும் எடுப்பதும் சில வீண் வதந்திகளைக் கிளப்புவதற்குக் காரணமாக அமைந்தன. இதன் விளைவாக, 1925-லும், நவம்பர் 1933-லும் இவ் வங்கி நெருக்கடிகளுக்கு ஆளாயிற்று.

1968ஆம் ஆண்டு இறுதியில் இவ் வங்கி 314 கிளைகளைக் கொண்டிருந்தது. வெளி நாடுகளில் 19 கிளைகளிருந்தன. அச் சமயம் வங்கியின் செலுத்திய முதல் ரூ 2·50 கோடியாகவும், காப்பு நிதிகள் ரூ. 3·16 கோடியாகவும், வைப்புக்கள் 313·05 கோடியாகவும் இருந்தன. 1968ஆம் ஆண்டுக்கு இவ் வங்கி 18 சத வீத இலாப ஈவு அளித்தது. இவ் வங்கி 1969 ஜூலை 19ஆம் நாளன்று நாட்டுடைமை ஆக்கப்பட்டது.

**தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க்**

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் எனப்படும் வங்கி 1943-ல் பிர்லா சகோதரர்களால் துவக்கப்பட்டது. துவங்கிய ஐந்து ஆண்டுகளுக்குள் இவ் வங்கி நாட்டின் அறு பெரும் வங்கி களுள் ஒன்ருகத் திகழ்ந்தது. இந்தியா—பாகிஸ்தான் பிரிவினை செய்யப்பட்ட 1947ஆம் ஆண்டில் இவ் வங்கிக்கு இந்தியாவில் 58 கிளைகளும், பாகிஸ்தானில் 24 கிளைகளும் இருந் தன. சிறப்பான உன்னிப்பான நிருவாகத்தால் இவ் வங்கி மிக விரைவில் நிலைபேருக்கம் பெற்று, பெரு வளர்ச்சி கண்டுள்ளது. 1968 ஆம் ஆண்டு இறுதியில் இவ் வங்கி ரூ. 2·80 கோடி செலுத்திய முதலும், ரூ. 4·15 கோடி காப்புக்

களும், ரூ. 217.94 கோடி வைப்புக்களும் பெற்றிருந்தது; அந்த ஆண்டு பங்குநர்களுக்கு 14 சத விகிதம் இலாப ஈவும் அளித்திருந்தது. அச் சமயம் இவ் வங்கிக்கு இந்தியாவில் 814 கிளைகளும், அயல் நாடுகளில் 10 கிளைகளும் இருந்தன.

### தி யூனியன் பாங்க் ஆப் இந்தியா

கணிசமான அளவு செலுத்திய முதலுடன் (ரூ. 40 இலட்சம்) 1919-ல் துவக்கப் பெற்ற இவ் வங்கி, ஆரம்ப காலத்தில் மெதுவாகத்தான் இயங்கியது. 1929ஆம் ஆண்டு வங்கியின் வைப்புக்கள் அரைக்கோடி எல்லையைத் தாண்டின. இவ் வங்கி 1968ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 1·25 கோடி செலுத்திய முதலும் ரூ. 1·15 கோடிக் காப்புக்களும், ரூ. 115·21 கோடி வைப்புக்களும் கொண்டிருந்தது. அவ்வாண்டில் 213 இந்தியக் கிளைகள் கொண்டிருந்த இவ் வங்கி பங்குநருக்கு 12 சதவீதம் இலாப ஈவு அளித்திருந்தது.

### தி யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா

கோமில்லா பாங்கிங் கார்ப்பொரேஷன், கோமில்லா யூனியன் பாங்க், தி பெங்கால் சென்ட்ரல் பாங்க், தி ஹூக்லி பாங்க் ஆகிய நான்கு நிறுவனங்களையும் இணைத்து உருவாக்கப் பட்டது யுனைடெட் பாங்க் ஆப் இந்தியாவாகும். 1950 ஆம் ஆண்டு நிறுவப் பெற்ற இவ் வங்கி விரைவில் வளர்ந்து, 1968 இறுதியில் ரூ. 2·68 கோடி செலுத்திய முதலும், ரூ. 1·33 கோடி காப்புக்களும், ரூ. 139·97 கோடி வைப்புக்களும் கொண்டிருந்தது. 1968 ஆம் ஆண்டில் 7·5% இலாப ஈவு வழங்கிய இவ் வங்கிக்கு நாட்டிற்குள் 164 கிளைகளும் அயல் நாடுகளில் 15 கிளைகளும் இருந்தன. 1969 ஜூலை 19-ல் இவ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது.

### தி கனரா பாங்க் லிமிடெட்

தென்னிந்தியாவில் பெரும்பான்மை நடவடிக்கைகளைக் கொண்டிருக்கும் கனரா வங்கி 1906-ல் நிறுவப் பெற்றது. 1968 டிசம்பர் 31-ல் இவ் வங்கியின் செலுத்திய முதல் ரூ, 1·50 கோடியாகவும், காப்பு நிதி ரூ. 1·53 கோடியாகவும், வைப்புக்கள் ரூ. 142·78 கோடியாகவும் இருந்தன. இவ் வங்கி பங்குநருக்கு 15 சத வீதம் இலாப ஈவு அளித்து வந்தது. 1968 இறுதியில் இவ் வங்கிக்கு 302 கிளைகள் நம் நாட்டிலிருந்தன. இவ் வங்கியும் ஜூலை 19, 1969-ல் நாட்டுடைமை ஆக்கப்பட்டது.

### தேனு பாங்க் (தி தேவ்கரன் நான்ஜி பாங்கிங் கம்பெனி லிமிடெட்)

பம்பாயில் திரு. பிரான்லால் தேவ்கரன் நான்ஜியால் 1938-ல் துவக்கப் பெற்ற இவ் வங்கி குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் நன்கு பரவியுள்ளது. 1968 இறுதியில் இவ் வங்கிக்கு இந்தியாவில் 214 கிளைகளிருந்தன. இதன் செலுத்திய முதல் ரூ. 1·25 கோடியாகவும், காப்பு ரூ 1·61 கோடியாகவும், வைப்புத் தொகை ரூ. 120·11 கோடியாகவும் 1968 ஆம் ஆண்டு முடிவிலிருந்தது. அவ்வாண்டில் வங்கி பங்குநருக்கு 12 சத வீதம் இலாப ஈவு வழங்கியது. இவ் வங்கியும் ஜூலை 1969-ல் நாட்டுடைமையாக்கப்பட்டது.

### சிண்டிகேட் பாங்க்

தென் கன்னட நாட்டில் மணிப்பால் நகரில் 1925 ஆம் ஆண்டு திரு. உபேந்திர ஆனந்த் பாய், திரு. வி. எஸ். குட்வா, டாக்டர். டி. எம். ஏ. பாய் ஆகியோரின் முயற்சியால் நிறுவப் பெற்ற 'கனரா இன்டஸ்டிரியல் அண்டு பாங்கிங் சிண்டிகேட்' என்ற வங்கியே 1964 முதல் சிண்டிகேட் வங்கி என்னும் பெயருடன் இயங்கி வருகின்றது. செலுத்திய முதல் ரூ. 8,000 மட்டுமே துவக்கத்தில் கொண்டிருந்த இவ் வங்கி, முதல்ஆண்டு இறுதியில் ரூ. 5, 758 வைப்புக்கள் மட்டுமே கொண்டிருந்தது. 1928-ல் இவ் வங்கி உடுப்பியிலிருந்து 8 கல் தொலைவிலுள்ள பிரம்மவர் என்ற கிராமத்தில் தன் முதல் கிளையைத் திறந்தது. இதே ஆண்டில் வங்கி, 'பிக்மி சேமிப்புத் திட்டம்' (Pigmy Savings Scheme) ஒன்றை உருவாக்கியது.

முதல் பத்து ஆண்டுகளில் இவ் வங்கி 16 கிளைகளைத் திறந்தது. வைப்புத் தொகை ரூ. 14·13 இலட்சமாக உயர்ந்தது. செலுத்திய முதலும் ரூ. 2·15 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

1950 ஆம் ஆண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரை இவ் வங்கியுடன் 18 வங்கிகள் இணைந்தன. 1949 இறுதியில் 79 கிளைகள் மட்டுமே கொண்டிருந்த இவ் வங்கி, 1965 இறுதியில் 204 கிளைகள் கொண்டிருந்தது. 1968 ஆம் ஆண்டு இறுதியில் இவ் வங்கிக்கு 254 கிளைகளிருந்தன. அச் சமயம் வங்கியின் செலுத்திய முதல் ரூ. 1·29 கோடியாகவும், காப்பு ரூ. 1·37 கோடியாகவும், வைப்புத் தொகை ரூ. 111·17 கோடியாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த ஆண்டு வங்கி தனது பங்குநர்களுக்கு 20 சத வீதம் இலாப ஈவு அளித்தது. ஜூலை 1969-ல் இவ் வங்கியும் நாட்டுடைமையாக்கப் பெற்றது.

**தி இண்டியன் பாங்க்**

தென்னிந்தியாவில் நிறுவப்பட்ட வங்கிகளுள் நன்கு வளர்ந்து பெரும் வங்கியாகத் திகழ்ந்து வருவது இண்டியன் பாங்க் என்னும் இந்தியன் வங்கியாகும். இவ் வங்கி 1907-ல் நிறுவப் பெற்றது. துவங்கிய முதல் சில ஆண்டுகளில் வங்கியின் வளர்ச்சி மந்தமாக இருந்தது. 1908 ஆம் ஆண்டில் இவ் வங்கியின் செலுத்திய முதல் ரூ. 10 இலட்சமாகவும், அதே நேரத்தில் வைப்புக்கள் ரூ. 8 இலட்சமாகவும் இருந்தது. 1925 ஆம் ஆண்டில் வைப்புக்கள் ஒரு கோடி ரூபாயாக உயர்ந்து, 1932-ல் சற்றெப்ப இரண்டு கோடியாக மேலும் பெருகின.

கிளைகள் திறப்பதில் இவ் வங்கி மிகுதியாக ஈடுபாடு கொள்ளவில்லை. எனவே, 1935 ஆம் ஆண்டு வரை இவ் வங்கிக்கு 6 கிளைகளே இருந்தன. பின்னர் சில கிளைகள் திறக்கப்பட்டதன் காரணமாக, 1938-ல் 40 கிளைகள் மொத்தம் மூன்றரை கோடி ரூபாயளவுக்கு வைப்புக்களைப் பெற்றிருந்தன.

படிப்படியாக இவ் வங்கி வளர்ந்து, 1968 ஆம் ஆண்டு இறுதியில் இந்தியாவில் 216 கிளைகளும் அயல் நாடுகளில் 5 கிளைகளும் கொண்டிருந்தது. அவ்வாண்டில் பங்குநருக்கு 12 சத வீதம் இலாப ஈவு அளித்தது. அவ்வமயம் வங்கியின் செலுத்திய முதல் ரூ. 0·88 கோடியாகவும், காப்பு ரூ. 1·16 கோடியாகவும், வைப்புக்கள் ரூ. 82·24 கோடியாகவும் இருந்தன. 1969 ஜூலை 19 ஆம் நாள் இவ் வங்கி நாட்டுடைமையாக்கப் பட்டது.

**இண்டியன் ஓவர்சீஸ் பாங்க்**

அண்மையில் துவக்கப்பட்டுப் பாராட்டத்தக்க முறையில் முன்னேற்றம் கண்டுள்ள வங்கிகளுள் முக்கிய இடம்பெறுவது இண்டியன் ஓவர்சீஸ் வங்கியாகும். இது 1636 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது. 1968 ஆம் ஆண்டு இறுதியில் செலுத்திய முதல் ரூ. 1·00 கோடியாகவும், காப்பு நிதிகள் ரூ. 1·15 கோடியாகவும், வைப்புக்கள் ரூ. 90·34 கோடியாகவும் இருந்தன. தன் பங்குநர்களுக்கு 1968-ல் இவ் வங்கி 11 சத வீதம் இலாப ஈவு அளித்தது. 1969 ஜூலையில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுள் இதுவும் ஒன்று.

**வணிக வங்கிகளின் வளர்ச்சி**

இந்தியப் பொருளாதாரத்தின் மிகமுக்கிய உறுப்புக்களான வணிக வங்கிகள் கடந்த இருபதாண்டுகளாகச் செயலாற்ற

வந்துள்ள முறையினை இரு கோணங்களிலிருந்து ஆராய்வது அவசியமெனத் தோன்றுகிறது. ஒன்று, நாடு விடுதலையடைந்த பின்னர் பிரிவினையாலேற்பட்ட அதிர்ச்சிகள் அடங்கிய நிதி நிலையங்கள் தமது புதிய பொறுப்புக்களை யுணர்ந்து செயற்படத் துவங்கியது 1950 முதல் தான் என்பது. மற்றது, நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல் செய்யப்பட்டது 1951 முதல் தான் என்பதாகும்.

கடந்த இருபதாண்டுகளில் வணிக வங்கிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. ஆனால் அதே நேரத்தில் மிகப் பெருமளவுக்கு கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. இலாபகரமாக இயங்க இயலாத வங்கிகளைக் களைந்தெடுக்கும் கொள்கையினை 1956ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தத் துவங்கியும், 1960 முதல்—பெரிய இரு பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் நொடித்த ஆண்டு முதல் தான்—இக் கொள்கை தீவிரமாக அமுல் செயப்படலாயிற்று. சிறு நகரங்களில் துவங்கப் பெற்ற சிறு வங்கிகள் பல பெரிய வங்கிகளால் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன் விளைவாகச் சிறிய வங்கிகளின் எண்ணிக்கை குறைந்து, பெரிய வங்கிகளின் கிளைகளது எண்ணிக்கை கூடியது. 1951 ஆம் ஆண்டு இயங்கி வந்த மொத்த வங்கிகளின் எண்ணிக்கை 566; இருபதாண்டுகள் கழித்து (ஜூன் 1971) 85 ஆகக் குறைந்து போயிற்று. அயல் நாட்டு வங்கிகளின் முக்கியத்துவமும் வெகுவாகக் குறைந்து போயிற்று. 1951 இறுதியில் மொத்த வங்கிகள் வைப்புத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கும், வங்கிகள் அளித்த கடன்களில் நான்கில் ஒரு பங்கும் கொண்டிருந்த அயல் நாட்டு வங்கிகள் 1971 ஜூன் இறுதியில் மொத்த வங்கி வைப்பு, கடனளிப்பில் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்க மாறுதலாகும்.

வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 1951 ஆம் ஆண்டில் 4,151 ஆக இருந்தது 1970 ஆம் ஆண்டு இறுதியில் 11,184 ஆக உயர்ந்து, 1972 மார்ச்சு இறுதியில் 13,309 ஆக மேலும் வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சியின் முக்கியச் சிறப்பு, பெரும்பாலான அலுவலகங்கள் கிராமப் புறங்களிலும் வளர்ச்சியடையாத வட்டாரங்களிலும் திறக்கப்பட்டதேயாகும். பிற வணிக வங்கிகள் நகரங்களிலும் மாநகரங்களிலும் அலுவலகங்களைத் திறப்பதில் முனைந்து நிற்கும்போது, ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் திட்டமிட்டு, கிராமப் புறங்களிலே சிறப்பாகக் கிளைகளைத் திறப்பதில் முனைந்திருந்தன.

வணிக வங்கிகள் அனைத்தும் 1951 இறுதியில் திரட்டியிருந்த வைப்புத் தொகை ரூ. 909 கோடி மட்டுமே. 1970 இறுதியில் இந்தத் தொகை ரூ. 5,699 கோடியாகி, 1962 ஆகஸ்டில் ரூ. 7,672 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த வைப்புத் தொகையளவு 1951-ல் நாட்டு வருமானத்தில் 9 சத வீதம் ஆக இருந்தது 1970-ல் 18 சத வீதம் உயர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதே.

வங்கிகள் தந்து வந்துள்ள கடன் வசதி, அவை கூடுதலாகத் திரட்டிய வைப்புக்களை விட மிகுதியாக உள்ளது, 1951 முதல் 1970 வரை வைப்புக்களின் அளவு 6 மடங்கு பெருகிற்று. ஆனால் வங்கிகள் அளித்த கடனளவு, 1951-ல் இருந்ததைக் காட்டிலும் 7 மடங்கு அதிகமாக 1970-ல் இருந்தது. ஆகவே, வங்கிகளின் கடன் வைப்பு விகிதம் அதிகரித்துள்ளது. 1951-ல் இந்த விகிதம் 69 சத வீதம் ஆக இருந்து, 1970-ல் 78 சத வீதம் ஆக மாறி, 1972 மார்ச்சு இறுதியில் 74·04ஆக நின்றது. வங்கிகளின் கையிருப்பு ரொக்கத்தையும் ரிசர்வு வங்கியிடம் இருப்பையும் சேர்த்து மொத்த வைப்புத் தொகையுடன் ஒப்பிட்டபோது 1951-ல் 11 சத வீதமாக இருந்த விகிதம் 1970-ல் 6 சத விகிதமாகக் குறைந்து நின்றது. இதே போன்று வைப்பு முதலீடு விகிதமும் 1951-ல் 41 சத விகிதமாக இருந்தது 1960-ல் 30 சத விகிதமாகக் குறைந்து விட்டது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வங்கிகள் தொழிலுக்கும் வணிக நடவடிக்கைக்கும் ஏறத்தாழ ஒரே அளவு விகிதக் கடன் வசதிகள் அளித்து வந்தன. ஆனால், நிலைமை தற்போது பெரிதும் மாறிவிட்டது. பெரும்பான்மையான கடன் வசதி தொழில் நிலையங்களுக்கும், ஓரளவு வணிக நடவடிக்கைகளுக்கும், மீதி முந்துமைத் துறைகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது.

வங்கிகளின் சொத்து, பொறுப்புக்களில் காணப்படும் மாற்றம், அவற்றின் வருமானம், செலவினங்களில் கண் கூடாகத் தெரிகின்றது. 1951-ல் வங்கிகளின் மொத்த வருமானம் ரூ. 45 கோடியாக இருந்தது 1969-ல் ரூ. 427 கோடியாக உயர்ந்தது. இந்தக் காலத்தில் செலவு ரூ. 31 கோடியிலிருந்து ரூ. 379 கோடியாக வளர்ந்தது. வருமானத்தில் பெரும்பகுதி கடன்கள் மீதும் மாற்றுச் சீட்டுக்களைத் தள்ளுபடி செய்வதன் மீதும் வசூலிக்கப்பட்ட வட்டியாகும். வங்கி ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், அவ்வப்போது

வங்கி ஊழியரின் சம்பளத்தைத் தீர்ப்பாளரின் முடிவுப் (Award) படி உயர்த்த வேண்டியிருந்ததாலும், புதிய கிளைகள் திறக்கப் பட்டு வந்ததாலும் செலவு விரைவாக மிகுந்து வந்தது. இந்தக் காரணங்களால் வங்கிகளின் இலாப-வருமான விகிதம் 1951-ல் 29 சத வீதமாக இருந்தது 1969-ல் 11 சத வீதமாகக் குறைந்து போயிற்று. 1956-ல் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கி களின் ஊழியர் எண்ணிக்கை 79 ஆக இருந்தது, 1969-ல் 2,20,000 ஆகப் பெருகிற்று.

பொதுவாக நோக்குமிடத்து, இந்தியாவின் வங்கிய அமைப்பில் வணிக வங்கிகள் நல்ல முறையிலேயே செயலாற்றி வருகின்றன என்பது எல்லோரும் ஒப்பும் கூற்றுகும். வைப்புக் களைத் திரட்டி, வியாபாரம், தொழில் ஆகிய தேவைகளுக்குக் குறுகிய காலக் கடன் வசதிகளை அளிப்பது இவ் வங்கிகளின் முக்கியப் பணியாகும். ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்திற்குச் சரக்குகளை உள்நாட்டிலிருந்து துறைமுகத்திற்குக் கொண்டு செல்லவும், துறைமுகத்திலிருந்து உள்நாட்டிற்குக் கொண்டு செல்லவும் நிதி வசதிகளையும் இவ் வங்கிகள் அளிந்துவரு கின்றன. அண்மைக்காலம் வரை விவசாயத் துறையில் பெரும் விவசாயிகள், தோட்டக்கால் அதிபர்கள் (Plantation owners), தரமான பிணையங்களைத் தரக்கூடிய நபர்கள் ஆகியோர்க்கு மட்டுமே இவ் வங்கிகள் கடன் வசதிகள் அளித்து வந்தன. இவ் வங்கிகள் தமக்குள் ஒப்பிய ஓர் உடன்பாட்டின்படி பல்வகை வைப்புக்கள்மீது குறிப்பிட்ட விகிதத்திற்கு மிகாத வட்டி யளிக்கின்றன. நடப்புக் கணக்கின் மீது வட்டி வழங்கும் பழக்கம் கைவிடப்பட்டு விட்டது. இதுதான் சரியான கொள்கையாகும். நடப்புக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ள தொகை எந்த நேரத்திலும் திரும்ப எடுக்கப்படலாம். ஆகவே, அத் தொகையினை வங்கியர் நல்ல ஆதாயம் தரும் எந்த முதலீட்டிலும் ஈடுபடுத்த வாய்ப்பு இல்லாது போகிறது. இந் நிலையில், வங்கியர் நடப்புக் கணக்கின் மீது எங்ஙனம் வட்டி கொடுப்பது இயலும்?

**கடனளிப்பு முறை**

பெரிய நகரங்களில் வணிக வங்கிகள் பங்கு மாற்றுப் பிணையங்களைப் (Stock Exchange Securities) பிணையாகப் பெற்றுக் கொண்டு கடன் வழங்குகின்றன; இப் பிணையங்கள் கிடைக்காத உள்ளூர்ப் புறங்களில், விளை பொருள்களை அடை மானமாக ஏற்றுக்கொண்டு கடன் வழங்குகின்றன. வியாபாரி

களுக்குச் சரக்குமீதும் பிற சொத்துக்கள்மீதும் கடன் வழங்கப் படுகின்றது.

கடன் வாங்கும் நபருடைய சொந்த ஈட்டின் பேரில் - இரு நபர்கள் கையொப்பத்துடன் கூடிய கடனுறுதிச் சீட்டுக்களின் பேரில், வங்கிகள் வெற்றுக் கடன்கள் (Clean advanees) அளிக்கின்றன. இரு நபர்கள் கையொப்பத்துடன் கூடிய சீட்டு எனப்படுவது உண்மையில் நாட்டு வங்கியர் எழுதித் தரும் உண்டியல்களே யாகும். மொத்தக் கடன்களில், இவ் வகைக் கடன்களின் அளவு மிகவும் சிறியதொரு விகிதமாகவே இருந்து வருவது குறிப்பிடத் தக்கது. உள்நாட்டு வியாபார, தொழில் தேவைகளுக்கு வங்கிகள் நான்கு வழிகளில் கடன் வழங்கு கின்றன. அவை ரொக்கக் கடன், மேல்வரைப் பற்று, கடன், சீட்டுத் தள்ளுபடி என்று பேசப்படுகின்றன. கடன் வாங்கு பவரின் கணக்கில் கடன் தொகையை வரவு வைப்பது அல்லது தொகையை ரொக்கமாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்வது என்ற முறையில் வங்கிகள் தமது வாடிக்கையருக்குக் கடன் வசதிகளை யளிக்கின்றன. குறிப்பிட்ட தவணைகளில் கடன் திருப்பி அடைக்கப்படுகின்றது. உற்பத்தி செய்யப்பட்ட சரக்கு, கச்சாப் பொருள், விளைபொருள், பங்குகள் போன்ற பிணைகள் மீது, கடன் வாங்கும் நிறுவனத்தில் இயக்குநர் இருவர் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு, கடன் வரம்பை அனுமதிப்பது இவ் வங்கிகள் மேற்கொள்ளும் நடைமுறையாகும். எந்த அளவுத் தொகை கடனாகப் பயன்படுத்தப்படுகின்றதோ அந்தத் தொகைமீது மட்டுமே வட்டி செலுத்தப்படவேண்டும். ஆண்டுக்கொரு முறை இக் கடன் வரம்பு மறு ஆய்வு செய்யப் பட்டு, தேவைப்பட்டால் மீண்டும் புதுப்பிக்கப்படும். கடனாளியின் நிலை ஐயப்பாட்டிற்கு இடந்தருவதாக இருந்தாலும், அல்லது பெருமளவுக்கு மாறி இருந்தாலும், கடன் வரம்பைப் புதிதாகப் பரிசீலனை செய்து நிருணயிப்பது வழக்கம். நம் நாட்டில் இவ் வகையாகக் கடன் பெறுவதே பெரும்பாலும் கையாளப்படும் செய்முறையாக இருக்கின்றது.

மாற்றுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி, நிதி வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளும் முறை இந்தியாவில் அவ்வளவாகப் பரவவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. நாட்டில் கிடங்கு வசதிகள், போக்குவரத்துத் தொடர்பு வசதிகள் ஆகிய தேவைப்படுமளவுக்கு இல்லாத நிலையில், மாற்றுச் சீட்டு எழுதுவதில் நாடெங்கும் ஓரே வகையான பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்படாத நிலையில், மாற்றுச்

சீட்டு வரைவதும், அதன் வழி நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதும் பெருவகையில் மேற்கொள்ளப்படவில்லை. இருந்தாலும், உள்நாட்டு வியாபாரத்தில் உண்டியல் (Hundi) என்று அறியப்படும் மாற்றுச் சீட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்தது. வியாபாரி அல்லது உற்பத்தியாளர், சரக்கு வாங்கியதும் பணஞ் செலுத்துவதற்குப் பதிலாக நாட்டு வங்கியர் பெயருக்கு உண்டியல் எழுதித் தந்து விடுவார். நாட்டு வங்கியருக்கு இவ் வுண்டியல் மீதான பணம் தவணைக் காலம் முடிந்தவுடன் செலுத்தப்படும். தவணைக் காலம் பெரும்பாலும் 90 நாட்களாக இருப்பது வழக்கம். சில சமயம் கடன் வாங்கும் பொருட்டு மட்டுமே தவணை உண்டியல்கள் தயார் செய்யப் படுவதுண்டு. நாட்டு வங்கியர் சில சமயங்களில் வணிக வங்கிகளிடம் இவ் வுண்டியல்களைத் தள்ளுபடி செய்துகொள்வதும் உண்டு. இவ்வகையாக நாட்டு வங்கியர் வியாபாரிகளுக்கும் வங்கிகளுக்குமிடையே ஒரு பிணைக்கும் சங்கிலி போன்று செயலாற்றுகின்றனர். கடன் வாங்குவோரையும் கடன் வழங்கும் நாட்டு வங்கியரையும் பிணைக்க, தரகர்கள் ஆங்காங்கு உள்ளனர். வணிக வங்கிகளில் சில வங்கிகள் மட்டுமே நாட்டு வங்கியரின் உண்டியல்களைத் தள்ளுபடி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

**வணிக வங்கிகள் புரியும் பணிகள்**

வணிக வங்கிகள் எந்தெந்தப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் பேசுகிறது. கடன் வழங்கும் பொருட்டு அல்லது முதலீடு செய்யும் பொருட்டு, கோரியதும் அல்லது வேறு வகையாகத் திருப்பிச் செலுத்தும் வகையிலும், காசோலை, பணவிடை, உத்தரவு அல்லது வேறு முறையில் பணத்தை எடுக்கும் வகையிலும், பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதே வங்கியத் தொழில் எனப்படும். வைப்புக்களை ஏற்றுக் கொள்வது, கடன்கள் வழங்குவது தவிர பலப்பல பணிகளை வங்கிகள் மேற்கொள்ளச் சட்டம் இடளித்துள்ளது. அவற்றை வ்ழங்கிய ஒழுங்காற்றுச் சட்டப் பிரிவு 6 (1)-ல் காணலாம் அவையாவன ,

(1) பணம் பெற்றுக் கொள்ளல், கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல், பிணைமீது அல்லது பிணையில்லாதது கடன் வழங்குதல்;

(2) மாற்றித் தரவல்ல அல்லது மாற்றுமுறையுள்ள அல்லது இவையல்லாத ஆவணங்கள், பிணையங்கள், மாற்றுச் சீட்டுக்

கள், உண்டியல்கள், கடனுறுதிச் சீட்டுக்கள், வெட்டுச் சீட்டுக் கள் (Coupons), பணவிடைகள், கப்பல் ரசீது, ரெயில்வே ரசீது, உத்தரவுச் சீட்டு (Warrant), கடனீட்டுப் பத்திரம், சான்றிதழ், குறுஞ்சீட்டு (Scrips) போன்ற பிறவற்றையும் குறித்து வரை வது, எழுதுவது, ஏற்பது, தள்ளுபடி செய்வது, வாங்குவது, விற்பது, வசூலிப்பது, போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது;

(3) வாணிக உறுதிக் கடிதம், பயணக் காசோலைகள், சுழலும் தாள்கள் (Circular Notes) ஆகியவற்றை அளித்தல், வெளியிடுதல்;

(4) பொன், தங்கம் ஆகியவற்றை வாங்கல், விற்றல், அவற்றைக் குறித்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(5) அயல்நாட்டு வங்கித் தாள் (Foreign bank notes) உட்பட, அயல்நாட்டு நாணயங்களை (செலாவணியினை) வாங்கல், விற்றல்;

(6) பங்குகள், நிதிகள், கடனீட்டுப் பத்திரம், பங்குத் தொகுப்பு, கடனீட்டுப் பத்திரத் தொகுப்பு, கடன் பத்திரப் பிணைப்பு (Obligations), பிணையங்கள், பிற முதலீடுகள் வாங்கல், வைத்திருத்தல், கழிவு பெற்றுக்கொண்டு வெளி யிடல், ஒப்புறுதியளித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(7) கடன்கள் வழங்க ஏற்பாடு செய்தல், வாடிக்கையர் சார்பாகவும் பிறர் சார்பாகவும் கடன் பத்திரங்கள், பங்குகள், பிற வகைப் பிணையங்கள் வாங்கல், விற்றல்;

(8) பாதுகாவல் பொருட்டும் அல்லது வேறு பொருட் டும் பல்வேறு பத்திரங்கள், மதிப்புயர்ந்த பொருள்கள் ஆகிய வற்றைத் தம் வசம் பெற்று வைத்தல்;

(9) பாதுகாப்பு வைப்புப் பெட்டகம் அமைத்தல்;

(10) பணம், பிணையங்களை வசூலித்தல், அனுப்புகை செய்தல்;

(11) அரசினர், உள்ளாட்சி ஆணையர் அல்லது வேறு எந்த நபர் அல்லது நபர்களுக்கு முகவராகச் செயலாற்றுதல்;

(12) கம்பெனி எதற்கும் நிருவாக முகவர், செயலர், கருவூலர் என்ற பணிகளைத் தவிர வாடிக்கையரின் வக்காலத்தார் அல்லது பகர வுரிமையர் (Attorney) என்ற முறையில் ரசீதுகளைத் தரல் அல்லது பொறுப்புக்களைத் தீர்த்தல், சரக்கெடு எடுத்தல், அனுப்பல் உள்ளிட்ட பல்வகை முகவர் பணிகளை மேற்கொள்ளல்;

(13) பொதுத் தனிக் கடன்களுக்கு ஒப்பந்தம் செய்தல், ஏற்பாடுகள் செய்து வெளியிடுதல் ;

(14) கம்பெனி, கூட்டுரு அல்லது சங்கம், பொது அல்லது தனி, அரசு அல்லது உள்ளாட்சி அல்லது பிற கடன்கள் அல்லது பங்கு, பங்குத் தொகுப்பு, கடனீட்டுப் பத்திரம் அல்லது கடனீட்டுப் பத்திரத் தொகுப்பினை வெளியிடல், காப்புறுதி செய்தல், பொறுப்புறுதி யளித்தல், ஒப்புறுதி யளித்தல், வெளியீட்டை நிருவகிப்பதில் பங்கேற்றல், இது போன்ற வெளியீட்டிற்குக் கடனளித்தல்;

(15) எல்லா வகைப் பொறுப்புறுதி, இழப்பீடு (Indemnity) நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(16) தனக்குத் தரப்படவேண்டிய தொகைக்குப் பதிலாக அல்லது ஓரளவு தொகைக்கு ஈடாகக் கிடைக்கக் கூடிய சொத்துக்களை நிருவகித்தல், விற்றல்;

(17) கடன்களுக்குப் பிணையாகத் தரப்பட்ட சொத்து, உரிமை, உடைமை யுரிமை, பாத்தியதை ஆகிய எதனையும் பெற்றுக் கொள்ளல், வைத்திருத்தல், அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளல் ;

(18) பொறுப்புரிமை (Trust) ஏற்றுக்கொள்ளல், நிறைவேற்றுதல் ;

(19) பொறுப்புரிமையர், நிறைவேற்றுளர் என்ற நிலையில் அல்லது வேறு நிலையில் சொத்து நிருவாகத்தை மேற்கொள்ளுதல்.

**வணிக வங்கிகள் மேற்கொள்ளக் கூடாதன**

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தில் குறிக்கப்படாத எந்த நடவடிக்கையினையும் வணிக வங்கிகள் மேற்கொள்ளக் கூடாது. வங்கியத் தொழிலல்லாத வியாபாரம் போன்ற நடவடிக்கைகளில் வணிக வங்கிகள் ஈடுபடுவதை இந்தச் சட்டம் தடுக்

கின்றது என்றாலும், சில புதிய வகைப் பணிகளை வங்கிகள் மேற்கொள்ளுவதற்கு இது முட்டுக்கட்டையாக உள்ளது. எடுத்துக்காட்டாக, மேலை நாடுகளில் தளவாடங்கள், வாடகைப் (Equipment leasing) பணியினை வணிக வங்கிகள் மேற்கொண்டுள்ளன. வங்கிகள் விலையுயர்ந்த தளவாடத்தை (உதாரணம்: டிராக்டர்) வாங்கி, அதனைப் பயன்படுத்துவோருக்கு வாடகைக்கு விடுகின்றன. மற்றும், வைப்புக்களைச் செலுத்தியுள்ளவர்களுக்கு மாற்று முறைச் சான்றிதழ் (Negotiable certificates) அளிப்பதற்கு நம் நாட்டு மாற்று முறை ஆவணச் சட்டம் இடந் தரவில்லை. ஆகவே, மாற்று முறை ஆவணங்கள் (Negotiable Instruments) குறித்துச் சட்டம் வங்கிகளுக்கு அளிக்கும் காப்பு ஏதும் இவ்வகைச் சான்றிதழ்களுக்குக் கிட்டவில்லை.

வைப்புக்களைப் பெற்றுக்கொள்வது, கடன் வழங்குவது தவிர, வணிக வங்கிகள் பல பணிகளைச் செய்து வருகின்றன. இப்பணிகளை (i) வைப்பாளர் பணிகள், (ii) கடன் கோருவோருக்குப் பணிகள், (ii) சார்பு (Ancillary) பணிகள் என்று வகைப்படுத்தலாம்.

**பல்வகை வைப்புத் திட்டங்கள்**

1. நடப்புக் கணக்கு (Current account).

2. சேமிப்புக் கணக்கு. (Savings)

3. தவணை வைப்பு.

4. மாத வட்டி வருமான வைப்பு (Monthly interest income deposit).

5. ரொக்கச் சான்றிதழ் (Cash certificates).

6. ஆண்டுத் தொகை அல்லது ஓய்வு காலத் திட்டம் (Annuity or retirement scheme).

7. விவசாயிகள் வைப்புத் திட்டம் (Farmers' deposit scheme).

8. அன்றாடச் சேமிப்புத் திட்டம்.

9. இளவர் சேமிப்புத் திட்டம் (Minors' saving scheme).

10. திருமணம் / கல்வி சேமிப்புத் திட்டம் (Marriage / educational savings plan).

11. தொடர் வைப்புத் திட்டம் (Recurring deposit scheme).

**பிற நன்மைகளுடன் இணைந்த வைப்புக்கள்**

1. காப்பீடு இணைந்த சேமிப்பு வங்கிக் கணக்கு.

2. வீடு கட்ட வைப்புத் திட்டம் (Housing scheme).

3. ஊதிய ஒதுக்குத் திட்டம் (Salary reserve scheme).

**வைப்பாளர்களுக்கு அளிக்கப்படும் பணிகள்**

1. உள்நாட்டு, அயல்நாட்டு, ஆவணஞ் சேர்ந்த வெற்று மாற்றுச் சீட்டுக்கள், உண்டியல், காசோலை, கேட்புப் பண விடை, மாற்றுச் சீட்டு, கடனுறுதிச் சீட்டு முதலியவற்றை வசூலித்தல்.

2. கடிதத் தொடர்புள்ள வங்கியரும் கிளைகளும் ஏற்படுத்தித் தந்துள்ள உள்நாட்டு அயல்நாட்டு வாணிக உறுதிக் கடிதங்களைப்பற்றி அறிவுறுத்தல், உள்நாட்டுச் செலாவணியிலும் அயல்நாட்டுச் செலாவணியிலும் அமைந்துள்ள வெற்று, ஆவணஞ் சேர்ந்த மாற்றுச் சீட்டுக்களை வாங்குதல், உள்நாட்டு, அயல்நாட்டு வாணிக உறுதிக் கடிதங்களின் படி மாற்றுச் சீட்டுக்களைப் புழக்கிவிடுதல்.

3. காப்பீட்டுக் கட்டணம் செலுத்தல், சந்தா செலுத்தல், வரிகள் செலுத்தல், நொடை அனுப்பல் போன்ற பணிகளை வாடிக்கையர் அளிக்கும் அமுலிலிருக்கும் உத்தரவுப் (Standing instructions) படி செய்தல்.

**பல்வகைக் கடன் கோருவாருக்கான திட்டங்கள்**

1. அழைப்புக் கடன் (Call loan).

2. தவணைக் கடன் (Term loan).

3. ரொக்கக் கடன் (Cash credit).

4. மேல்வரைப் பற்று (Overdraft).

5. வாணிக உறுதிக் கடிதம் (Letter of credit).

6. தனி நபர் கடன் :

(i) நெடும் பயன் நுகர்வுப் பொருள் (Durable consumer goods).

(ii) குடியிருக்க வீடு கட்டுதல் ;

(iii) மின் வசதி, சமையல் வளி (Cooking gas) ஏற்பாடு போன்ற தேவைகளுக்காக ;

7. சேர்ந்தளி கடன் (Participation loan);

8. விவசாயிகளுக்குக் கடன்:

(i) குறுகிய காலம் ;

(ii) மத்திய காலம் ;

9. சிற்றளவுத் தொழில்களுக்குக் கடன் ;

10. சாலைப் போக்குவரத்து நடத்துவோருக்குக் கடன்;

11. தாமே வேலை செய்து பிழைப்புத் தேடுவோர் (Self—employed) களுக்குக் கடன்;

12. தொழில் முயற்சியாளர் (Entrepreneurs), தொழில் வல்லுநர், தொழிற் கலைஞர், தொழில் வினைஞர் (Technician) முதலியோருக்குக் கடன்;

13. சில்லறை வியாபாரத்திற்குக் கடன்;

14. கல்வி வசதிக் கடன்:

(i) இந்தியாவில் பட்ட, மேல் பட்டப் படிப்பிற்கு ;

(ii) வெளி நாடுகளில் உயர் படிப்பு ;

15. தொழிற் பேட்டைகளுக்குக் கடன் .

**சார்பு பணிகள்** (Ancillary sesvices)

பொறுப்புறுதி (Guarantee) :

(i) செயலுறுதி பொறுப்புறுதி (Performance guarantee);

(ii) நிதி குறித்த பொறுப்புறுதி (Financial guarantee);

2. பத்திரங்கள், பிணையங்களைப் பாதுகாத்தல்.

3. பாதுகாப்புப் பெட்டகம்.

4. பிணையங்கள் வாங்கல், விற்றல்.

5. பங்குகள் மீது இலாப ஈவு, கடனீட்டுப் பத்திரங்கள், பிணையங்கள்மீது வட்டி வசூலித்தல், ஓய்வு ஊதியச் சீட்டுக்கள் வசூலித்தல்.

6 வங்கிப் பணவிடை (Bank draft), அஞ்சல் வழி மாற்றம் (Mail transfer), தந்தி வழி மாற்றம் (Telegraphic transfer) முதலிய சாதனங்கள் மூலம் நாட்டின் பிற பகுதிகளுக்கும் அயல் நாடுகளுக்கும் பணம் அனுப்புகை.

7. நிறைவேற்றுளர் (Executor), பொறுப்புரிமையர் (Trustees) பணிகள்:

(i) உயில் (Will) ஒன்றில் குறிப்பிட்டவாறு நிறை வேற்றுளர்—பொறுப்புரிமையர் ;

(ii) அடைமானக் கடனீட்டுப் பத்திரங்களுக்குப் பிணையாக வுள்ள பொறுப்புரிமை ஆவணத்தின் கீழ்ப் பொறுப் புரிமையர்;

(iii) அறுதி ஆவணம் (Deed of settlement) ஒன்றின்படி பொறுப்புரிமையர்;

(iv) திருமணமான பெண்டிர் சொத்துச் சட்டம் 1874-ன் கீழ் ஆயுள் காப்பீட்டுப் பாலிசிகளின் பொறுப்புரிமையர்.

8. வருமான வரி, விற்பனை வரி, செல்வ வரி, கணக்குகளைத் தயாரிக்கத் தனி நபர் வாடிக்கையருக்கு உதவி.

9. முதலீடு செய்ய வசதிகள் — ஒப்புறுதி யளித்தல், புது வெளியீடுகளுக்கு வங்கியராகப் பணியாற்றல், முதலீடு செய் வோருக்கு அறிவுரை, பங்கு மாற்று உதவி.

10. நாணய அட்டைகள் (Credit cards).

11. பயணக் காசோலை (Travellers cheques)

12. அன்பளிப்புக் காசோலை (Gift cheques)

13. தேசியச் சேமிப்புச் சான்றிதழ், யூனிட் டிரஸ்ட்டின் அலகுகள் (Units) இவைகளை விற்றல்.

இனி, வணிக வங்கிகள் செய்து வரும் மேற்கண்ட பணிகளில் முக்கியமான சில பணிகளை விளக்கமாகக் காண்போம்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாது தேவைப்படுவது மக்களின் சேமிப்பாகும். மக்களின் சேமிப்பைத் திரட்டுவதில் வணிக வங்கிகளின் பங்கு மிக்க சிறப்புடையதாக அமைந்திருப்பதன் காரணம் வங்கிகளின் கிளைகள் நாடு முழுவதும் நன்கு பரவியிருப்பதே. பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள, வேறுபட்டுள்ள வருவாய் பெறும் பலதரப்பட்ட வாடிக்கையரின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வங்கிகள் புதுப்புது வகைத் திட்டங்களைச் செயற்படுத்தி மக்களின் சேமிப்பைத் திரட்டுகின்றனர்.

**பழந் திட்டங்கள்**

ரொக்கச் சான்றிதழ் (Cash certificate): குறிப்பிட்ட காலத்துக்குத் தவணை வைப்பாக விளங்குவது இந்த ரொக்கச் சான்றிதழ். தவணைக்காலம் முடிவுற்றதும் தவணைப் பணமும் வட்டியும் சேர்த்துத் திருப்பி யளிக்கப்படும். தவணைக்காலம் முடிவுறு முன்னரும் தக்க தள்ளுபடித் தொகையைக் கழித்துக் கொண்டு, பணத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளும் வசதியும் உண்டு.

**அன்றாடச் சேமிப்புத் திட்டம்**

அன்றாடக் கூலி பெற்றுவரும் மக்களுக்குச் சேமிப்புப் பழக்கத்தை அறிமுகப்படுத்த இந்தத் திட்டம் உருவாக்கப் பட்டது. சிண்டிகேட் பாங்க் இத் திட்டத்தைத் தனது பிக்மி வைப்புத் திட்டம் (Pigmy deposit scheme) மூலம் பெருமளவுக்கு விளம்பரப் படுத்திற்று. சிறு தொகையைச் சேமிக்கும் திறனுள்ள வைப்பாளர்களுக்கு இது நல்லதொரு திட்டமாக அமைந்தது.

**சிறுவர் சேமிப்புத் திட்டம் (Minors' savings scheme)**

குழந்தைகளிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்க்க இத் திட்டம் பெரிதும் உதவுகின்றது.

**பெண்டிர் கிளை**

பெண்டிர், சேமிப்பு இயக்கத்தில் மிகப் பெரும் பங்கு ஏற்கக்கூடிய நிலையிலுள்ளனர். ஊழியர்கள் அனைவரும் பெண் மக்களே என்ற ஏற்பாட்டுடன் சில வங்கிகள் கிளைகளைத் துவங்கியுள்ளன. இதன் வழி மாதர்கள் வங்கிக்கு ஈர்க்கப்படு கின்றனர்.

## புதிய திட்டங்கள்

**மாத வட்டி வருமானத் திட்டம்**

ஆண்டுக் கொருமுறை அல்லது அரை யாண்டுக்கு ஒரு முறை வட்டி வழங்குவதற்குப் பதிலாக, திங்கள் தோறும் தவணை வைப்புக்கள்மீது வட்டி வழங்கும் ஏற்பாட்டினையே மாத வட்டி வருமானத் திட்டம் என்று குறிப்பிடுகின்றனர். வட்டி ரொக்கமாக வேண்டுமானாலும் செலுத்தப்படும் அல்லது வைப் பாளரின் நடப்பு அல்லது சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப் படும். வைப்பாளர் விரும்பினால் தொடர் வைப்பு (Recurring deposit) அல்லது திருவிழா வைப்பு (Festival deposit) கணக்கில் மாத வட்டி வரவு வைக்கப்படும். இவ் வகை வைப்புக்கள் மீது கடன் பெறும் வசதிகளையும், தவணை முதிருமுன் பணத்தைத் திருப்பிப் பெறும் வசதிகளையும் வங்கிகள் அளிக்கின்றன.

**ஆண்டுத்தொகை அல்லது ஓய்வுக்காலத் திட்டம்**
**(Annuity or Retirement Scheme)**

குறிப்பிட்ட ஒரு தொகையினை மாதமாதம் குறிப்பிட்ட சில ஆண்டு காலத்திற்கு வைப்பாக ஏற்றுக்கொண்டு, அக் காலம் முடிவுற்றதும், பெற்ற தொகையையும் அதன் மீதான வட்டி யினையும் மாதாந்தரத் தவணைகளில் திருப்பிச் செலுத்துவதும் வங்கிகள் செயற்படுத்தும் ஒரு திட்டமாகும்.

**விவசாயிகள் வைப்புத் திட்டம் (Farmers' Deposit Scheme)**

அறுவடைக்குப் பின் பணம் கிடைக்கும் விவசாயிகளுக்கு ஏற்ற விவசாயிகள் வைப்புத் திட்டம், ஆண்டுக்கு ஓரிரு முறை மட்டுமே சேமிக்குந் திறனுடைய இம் மக்களுக்குப் பயனளிக் கின்றது. இங்ஙனம் வைப்பில் செலுத்திய தொகையில் பத்தி லொரு பங்கு வரை மாதந்தோறும் திருப்பி எடுத்துக்கொள்ள இத் திட்டம் வகை செய்கிறது.

**காப்பீட்டுடன் இணைக்கப் பெற்ற சேமிப்பு வங்கிக் கணக்கு (Insurance Linked Savings Bank Account)**

கணக்கு வைத்திருப்பவரின் ஆயுள் பாதுகாப்பின் பொருட்டு, ஆயுள் காப்பீட்டிற்கு வகை செய்வது காப்பீட்டுடன் இணைக்கப் பெற்ற சேமிப்பு வங்கிக் கணக்கு என்ற சிறப்புத் திட்டம். தமது கணக்கில் குறிப்பிட்ட ஒரு குறைந்த அளவு இருப்பு வைத்திருக்க உடன்படும் 18 வயதிற்கு மேற்பட்ட 49 வயதிற்கு மிகாத ஆண்களும், தனிப்பட்ட முறையில் ஊதியம், தொழில் வருவாய், வாடகை, பங்குகள் மீது இலாப ஈவு போன்ற நிலையான வருமானம் உள்ள மேற்கண்ட வயதிற்குட்பட்ட பெண்களும் இத் திட்டத்தின் கீழ்க் கணக்குத் துவங்கலாம். நெருங்கிய உறவினர் இருவர் சேர்ந்து கூட்டாகவும் கணக்குத் துவங்கலாம். ஆனால் இருவரில் ஒருவர் மட்டுமே காப்பீடு செய்யப்படுவார். கிராமப் புறங்களில், அதாவது, மக்கள் தொகை 10,000-க்குக் குறைவான இடங்களில், கணக்கு வைத்திருப்பவர் குறைந்தது ரூ. 500 வட்டி ஈட்டும் இருப்பாக (Interest bearing balance) வைத்திருக்க வேண்டும்; பிற இடங்களில் கணக்கில் குறைந்தது ரூ. 1,000 வைத்திருக்க வேண்டும். ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation) வுடன் வங்கி செய்துகொண்டுள்ள சிறப்பு ஏற்பாட்டின் படி, காப்பீடு வசதி அளிக்கப்படுகிறது. வங்கி ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவிற்கு 1·25 முனைமம் (Premium) செலுத்துகிறது. குறைந்த அளவு இருப்பாக வைத்திருக்கும் தொகை மீது வங்கி ஆண்டுக்கு 4% வட்டி அளிக்கிறது. கணக்கிலுள்ள இருப்புத் தொகையைத் திருப்பிப் பெறுவதுடன், கணக்கு வைத்திருப்பவர் கீழ்க்காணும் நன்மைகளையும் பெறும் உரிமை பெற்றுள்ளார் :

(i) கணக்கு வைத்திருப்பவர் 41 வயதடையுமுன் அகாலமாக இறந்துபோனால், உயர்ந்த அளவு ரூ. 10,000 க்கு மிகாமல், இறந்த நாளுக்கு முன்னர் இருந்த அரையாண்டுக் கணக்குக் காலத்தில் கணக்கில் வைத்திருந்த வைப்புத் தொகையைப் போன்ற இரு மடங்கு தொகை எஞ்சியிருக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கு அளிக்கப்படும்;

(ii) அகாலமாக இறந்தவரின் வயது 41க்கு மேலிருப்பின், உயர்ந்த அளவு ரூ. 5,000 க்கு மிகாமல், இறந்த நாளுக்கு முன்னர் இருந்த அரையாண்டுக் கணக்குக் காலத்தில் சராசரி மாத மாதம் குறைந்த அளவு வைப்புத் தொகை கணக்கில் வைத்திருந்தாரோ அதற்குச் சமமான தொகை எஞ்சியிருக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கு அளிக்கப்படும்;

(iii) கணக்குத் துவங்கிய இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரே இந்தக் காப்பீட்டுடன் இணைந்த சேமிப்பு வங்கிக் கணக்கின் நன்மைகளை முழுமையாகப் பெற முடியும். இரண்டு ஆண்டுகள் கழியுமுன் கணக்கு வைத்திருப்பவர் இறந்து விட்டால், நன்மைகள் கால அளவுக்கு ஏற்பக் குறைந்துபடும்.

**வீட்டு வசதி வைப்புத் திட்டம் (Housing Deposit Scheme)**

சொந்தமாக வீடு வாங்க அல்லது கட்டிக்கொள்ள விரும்புவோருக்குப் பயனளிப்பது வீட்டு வசதி வைப்புத் திட்டமாகும். குறிப்பிட்ட காலத்திற்கு மாதந்தோறும் குறிப்பிட்ட ஒரு தொகையை வைப்பாகச் செலுத்தி வந்தால், கால முடிவில் வைப்பாகச் செலுத்தியுள்ள தொகையைப் போன்று இரு மடங்கு தொகையைக் குறைந்த வட்டிக்கு வங்கி கடனாக அளிக்கும்.

வங்கிகள் செய்துவரும் சில புதிய பணிகளைப் பற்றிச் சிறிது காண்போம்:

**தனி நபர் கடன் திட்டம் (Personal Loan Scheme)**

வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள மக்களனைவரும் விரும்பும் இன்றைய நாளில், அவர்கள் கனவுகளை நனவாக்க, நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவு செய்துகொள்ள, வசதிகளுடன் வாழ்க்கை நடத்த, தனி நபர் கடன் திட்டம் என்னும் தவணைக் கடன் திட்டம் (Instalment loan scheme) பெரிதும் உதவுகிறது. குளிர் சாதனப் பெட்டி (Refrigerators), தையல் பொறி (Sewing machine), மின் விசிறி, இரும்பு அலமாரி போன்ற நெடும்பயன் பொருள்களை வாங்க, நிலையான வருமானமுள்ள நபர்களுக்குப் பண வசதி யளிப்பது இத் திட்டம். குறைந்த வருவாயுள்ளவர்கள் கூட, விலை மிகுந்த பொருள்களை வாங்க வகை செய்வது இத் திட்டம். கடன் வாங்குபவர் தவணைத் திட்டப்படி கடனை யடைக்கத் தவறினால், வங்கி, கடன் வழி வாங்கப்பட்ட பொருள் மீது பற்றுரிமை செலுத்தவும், கைப்பற்றவும் செய்யலாம். தவணைக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுதல் நம் நாட்டின் குற்றவியல் சட்டப்படியான குற்றமாகாது; தவணை கட்டத் தவறுபவர் மீது உரிமையியல் வழக்கு (Civil action) மட்டுமே தொடர முடியும். பல முறை தவணை கட்டத் தவறும் நிலையும் ஏற்படுவதுண்டு. வருங்காலத்தில் இத் திட்டம் பெருமளவுக்கு வளர வாய்ப்புண்டு.

**கடனில் பங்கேற்றல் (Loan participation)**

பெருமளவுத் தொகையைக் கடன் வாங்குபவர் கோரும் போது, அக் கடனைப் பல நிறுவனங்கள் சேர்ந்து கொடுப்ப துண்டு. இதற்குக் காரணம் ஒரே நிறுவனம் அவ்வளவு பெருந் தொகையினைக் கொடுக்க இயலாதிருக்கலாம் அல்லது ஒரு கடன் கோருபவருக்கு அவ்வளவுத் தொகையைக் கடனாகக் கொடுக்க விரும்பாதிருக்கலாம். முன்னரே தம் வாடிக்கையர் ஒருவருக்குக் கொடுத்துள்ள கடனை மூன்றும் நபர் (Third party) ஒருவருக்கு விற்கப் பங்கேற்புச் சான்றிதழ் (Participation Certificate) களை வங்கிகள் வெளியிடுகின்றன. ஜூலை 1970-ல் அயல் நாட்டு வங்கியொன்று நம் நாட்டில் பங்கேற்புச் சான் றிதழை அறிமுகப்படுத்தியது. இது ஒரு வகை நாணய முறை யாவணம் (Credit instrument) ஆகும். கடன் வாங்கியுள்ளவ ரின் அடைமானம் செய்யப்பட்டுள்ள தற்போதுள்ள அசையும் சொத்துக்களின் உரிமையைச் சட்ட முறையாக மாற்றித் தரும் ஆவணம் இந்தப் பங்கேற்புச் சான்றிதழ் என்பது குறிப்பிடத் தக்கது. பங்கேற்புச் சான்றிதழை வெளியிடும் வங்கி அது முதிர்வடைந்ததும் நேரடியாகக் கடனைச் செலுத்த உறுதி யளிக்கின்றது. பங்கேற்பவர் கடன் பெற்றுள்ள வாடிக்கைய ரிடம் பணத்தைத் திருப்பிப் பெறக் கோர வேண்டுவதில்லை. பங்கேற்புச் சான்றிதழ் ஒன்றின் குறைந்த அளவு மதிப்பு ரூ. 1 இலட்சமாக நிருணயிக்கப்பட்டது. தவணைக் காலம் 30 நாட்கள், 60 நாட்கள், 90 நாட்கள் என வகைப்படுத்தப்பட்டது. முத்திரை வரியினை வங்கி ஏற்றுக்கொண்டது. இந்திய வங்கி களும் பங்கேற்புத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றன.

**சிற்றளவு தொழில்களுக்கு நிதி வசதி**

சிற்றளவுத் தொழில் நிறுவனங்களுக்கு விரிவாக்கம், புதுமையாக்கம் (Modernisation), புதுப்பித்தல் (Renovation) போன்ற தேவைகளுக்குத் தவணைக் கடன் (Term loan) களை யும், நடைமுறைச் செலவுக்குக் கடன்களையும் வங்கிகள் அளிக் கின்றன. தொழிற் கலைஞர், தொழில் வல்லுநர், தொழில் வினைஞர், தொழில் முயல்வோர் ஆகியவர்கட்குச் சிற்றளவுத் தொழில் அமைக்கக் கடன் வசதிகளை வங்கிகள் வழங்கு கின்றன. தொழிற்பேட்டை (Industrial Estate) களுக்குத் தேவைப்படும் நிலம் வாங்க, தொழிற்கூடங்கள் கட்ட வங்கிகள் கடனளிக்கின்றன.

**வேளாண்மைக் கடன்**

பருவத்தே பயிர் செய்யப் பயனளிக்கும் வகையில் வங்கிகள் விவசாயிகளுக்கு குறுகிய காலப் பயிர்க்கடன் அளிக்கின்றன. இதில் உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து போன்ற உள்ளீடுகள் (Inputs) அடங்கியுள்ளன. டிராக்டர் போன்ற தளவாடங்களை வாங்கவும், பம்பு செட் வாங்கவும், கிணறு தோண்டவும், கிணற்றை ஆழப்படுத்தவும், நிலத்தைப் பண்படுத்தவும் வங்கிகள் மத்திய காலக் கடன்களை அளிக்கின்றன. வட்டார வளர்ச்சித் திட்டப்படி, சில வங்கிகள் சில கிராமங்களை ஏற்றுக் கொண்டு, அக் கிராமங்களில் ஈடுபட்டுள்ள எல்லா உற்பத்தி நோக்குள்ள (Productive purpose) செயல்களுக்கும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. நிலத்தை வாங்கி, முற்போக்கான விவசாய முறைகளைக் கடைப்பிடித்து, வேளாண்மை செய்து வர, வேளாண்மைத்துறைப் பட்டதாரிகளுக்குச் சிறப்பான ஒரு கடன் திட்டத்தைச் சில வங்கிகள் செயற்படுத்தியுள்ளன. கோழிப் பண்ணை, பால் பண்ணை, மீன் பிடிப்புப் போன்ற தொழில்களுக்கும் கடன்கள் அளிக்கப்படுகின்றன.

குறுகிய காலக் கடன்களுக்கு வளரும் பயிர் பிணையாகவும், நிலம் துணைப் பிணையாகவும் தேவைப்பட்டால், இரண்டு நபர்கள் பொறுப்புறுதியும் பெறப்படுகின்றது. கடனைக் கொண்டு டிராக்டர், பம்பு செட் போன்ற பொருள்கள் வாங்கப்பட்டால், அப்பொருள்களே கடனுக்குப் பிணையாகவும், நில அடைமானம் மேலும் ஒரு பிணையாகவும், மேலுந் தேவைப்பட்டால் நபர் பொறுப்புறுதியும் வேண்டப்படுகின்றது. சில வங்கிகள் விவசாயத் தேவைகளுக்குப் பொன் நகைகள் அடகின் பேரில் கடன் வழங்குகின்றன. நல்ல புள்ளிகளாக இருப்பின், இரு நபர்களின் பொறுப்புறுதியின் பேரில் பிணையில்லாக் கடன் அளிக்கப்படுவதுமுண்டு.

**சாலைப் போக்குவரத்து நடத்துவோர், சிறு கடன் கோருவோர், தாமே தொழில் செய்து பிழைப்போர் முதலானோருக்குக் கடன்**

சைகிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, ஸ்கூட்டர், வாடகை மோட்டார் கார் (Taxi), டிரக் (Truck) முதலிய சாலைப் போக்குவரத்துச் சாதனங்கள் வாங்க, அச் சாதனங்களையே அடைமானமாக ஏற்றுக்கொண்டு வங்கிகள் கடன் வழங்குகின்றன. மருத்துவர், வழக்கறிஞர், கட்டடக் கலைஞர் போன்ற தொழில் வல்லுநர்களுக்குத் தொழிலைத் துவங்கவும், விரிவு படுத்தவும். இயந்திரங்கள், கருவிகள், மனையணியங்கள் (Furniture) முதலிய வாங்கவும் கடன்கள் அளிக்கப்படுகின்றன. சில்லறை வியாபாரி

களுக்குச் சரக்கு வாங்க, கடைகளைத் திருத்தியமைக்க, பழுது பார்க்க, துணைக் கருவிகள் வாங்க, வங்கிகள் கடனளிக்கின்றன. வேலை யில்லாது அல்லலுறும் பட்டதாரிகளுக்கு ஒப்பந்தத்தின் பேரில் கட்டடம் கட்டுதல், மின் வசதி அமைத்தல் போன்ற தொழில்களை மேற்கொள்ளக் கடன் வசதி யளிக்கப்படுகின்றது. காய்கறி, பழம், பூ வியாபாரம் செய்பவர்களுக்குச் சில வங்கிகள் கடனளித்து வருகின்றன. இந்தியாவிலேயே பட்டப் படிப்புக்கும், மேல்பட்டப் படிப்புக்கும்; வெளி நாடுகளில் உயர் பட்டப் படிப்புக்கும் சில வங்கிகள் நிதி வசதி செய்து தருகின்றன. 'சம்பள ஓதுக்குத் திட்டம்' என்ற புதியதொரு திட்டப்படி தம் நிகர ஊதியத்தைத் தம் சேமிப்புக் கணக்கில் கட்டிவரும் வாடிக்கையருக்கு ரூ. 500க்கு மிகாமல் ஒரு திங்கள் ஊதியம் கடனாக வழங்கப்படும்.

### வரவு மாற்று முறை (Credit Transfer System)

வாடிக்கையருக்குப் பணம் அனுப்புகை வசதிகளை அளிக்கும் பொருட்டுச் சில வங்கிகள் சிறப்பு வரவு மாற்று முறை (Special credit transfer system) என்ற திட்டத்தை உருவாக்கி யுள்ளார். இத் திட்டத்தின்படி எந்த ஒரு நபரும் கட்டணம் ஏதுமின்றி வங்கியின் ஒரு கிளை யிலிருந்து பிறிதொரு கிளை யிலுள்ள தனி நபர் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு ரூ. 2,500 வரை அனுப்பலாம். சிறப்புக் காசோலை மாற்று முறை (Special Cheque Transfer Scheme) என்ற மற்றொரு திட்டத்தின் கீழ், தனது கிளைகள் மீது எழுதப்பட்டுள்ள எந்தத் தனி நபர் கணக்குக் காசோலையும் ரூ. 2,500க்கு மேற்படாமலிருப்பின் கட்டணமேது மின்றிப் பெறுபவர் அல்லது கடைசி மேலெழுதிப் பெறுபவர் சார்பாக வசூலிக்கப்படும்.

### வாடிக்கையர் பொருட்டு வசூலித்தலும் செலுத்தலும்

அரசு, பொதுப்பயன் நிறுவனங்கள் (Public utility concerns), கூட்டுப் பங்கு கம்பெனிகள், தனி நபர்கள் சார்பாக பணஞ் செலுத்தல், வசூலித்தல் பணிகளை வங்கிகள் செய்து வருகின்றன. கம்பெனிகள் புதிய பங்குகளை வெளியிடும்போது பங்கு முதல் குறித்து அனுப்பப்பெறும் ஒப்புதல் தொகையை வங்கிகள் வசூலிக்கின்றன. ஏற்றுக் கொள்ளப்படாத பங்கு விண்ணப்பங்களுக்குரிய தொகையைக் கம்பெனியின் சார்பாக உரியவர்களுக்குத் திருப்பி யனுப்புவதும் வங்கிகளே. சில வங்கிகள் தமது வாடிக்கையர் கம்பெனி சார்பாக அக் கம்பெனி யின் ஊழியர்களுக்கு ஊதியம் செலுத்துகின்றன, கம்பெனி

சார்பாக இலாப ஈவுச் சீட்டுக் (Dividend warrant)கள் மீது பணஞ் செலுத்துகின்றன; மின் வசதி வாரியங்கள் சார்பாக மின் கட்டணத்தையும் வசூலித்துத் தருகின்றன. நமது இராணுவ ஊழியர்களுக்கு ஊதியம், காசோலை முதலியவற்றை வசூலித்துத் தரப் பல வங்கிகள் ஏற்பாடு செய்துள்ளன.

**நாணய அட்டைகள் (Credit Cards)**

இந்திய வங்கிகளில் சில நாணய அட்டைகளை வெளியிட்டு வருகின்றன. பெரு மதிப்புள்ள வாடிக்கையருக்கு அடையாளச் சீட்டு (Identification card) போன்று நாணய அட்டை பயன் படுகின்றது. இந்த நாணய அட்டையைக் காட்டி, வாடிக்கையர் தமது கணக்கின் பேரில் தாம் எழுதியுள்ள காசோலைகளைக் குறிப்பிட்ட ஒரு தொகைவரை வங்கியின் எந்தக் கிளையிலும் எந்த ஒரு நாளிலும் பணமாக மாற்றிக் கொள்ளலாம். இத் திட்டம் போன்ற மற்றொரு திட்டப்படி, குறிப்பிட்ட தொகை களுக்கு எழுதப்பட்ட வாடிக்கையர் கையொப்பமிட்ட காசோலை களை அந்த வாடிக்கையர் தமக்கு அளிக்கப்பட்டுள்ள நாணய அட்டையினைக் காட்டி, சிறப்பு அங்காடி(Super-market) போன்ற நிறுவனங்களில் பணமாக மாற்றிக் கொள்ளலாம். இக் காசோலைகள் மீதான பணத்தை வங்கி பின்னர் செலுத்தும்.

**பயணக் காசோலை.**

வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளுபவர்கள் பெருமளவுக்கு பணத்தை எடுத்துச் செல்வதால் ஏற்படக்கூடிய நட்டம், தொல்லைகளைத் தவிர்க்கப் பயணக் காசோலைகளை வங்கிகள் வழங்குகின்றன. குறிப்பிட்ட தொகையளவுக்கு வெளியிடப் படும் இக் காசோலைகளை வெளியிடும் வங்கியின் எந்த அலுவல கத்திலும் பணமாக மாற்றிக்கொள்ளலாம். சில வங்கிகள் தம் வாடிக்கையருக்கு மட்டும் பயண முகவர் (Travelling Agent) பணிகளையும் செய்து வருகின்றன.

**அன்பளிப்புக் காசோலை (Gift Cheque)**

அழகிய கண்ணைக் கவரும் வண்ண உறைகளிலிட்டு வங்கிகள் அன்பளிப்புக் காசோலைகளை விற்கின்றன. திருமணம், பிறந்த நாள் போன்ற விழாக்களில் பரிசளிக்க விரும்புவோர், இக் காசோலையை வங்கியில் வாங்கிப் பரிசாகத் தரலாம். வெளியிடும் வங்கியின் அலுவலகம் எதிலும் முழு மதிப்பளவிற்கு இக் காசோலைகள் வசூலிக்கப்படும்.

### பூட்டிய பெட்டி, இரவுக் காப்புப் பணி (Lock-Box and Night Safe Service)

குறிப்பிட்ட சில இடங்களில் சில வங்கிகள் பூட்டிய பெட்டி வசதியை அளிக்கின்றன. வங்கி அலுவலக நேரத்திற்குப் பின்னர், வியாபாரிகள் பெறும் காசோலை, பணம் முதலியவற்றைப் பாதுகாவலாக வைத்திருக்க வங்கி கிளையில் வைக்கப் பட்டுள்ள இப் பெட்டி உதவுகிறது. மறுநாள் காலை வங்கி இவற்றை எடுத்துக் கணக்கிட்டு, உரிய பதிவுகளைச் செய்யும். வாடிக்கையர், தமது அலுவலக நேரத்தில் வங்கிக்குப் போக வேண்டிய அவசியமில்லாமல் செய்கிறது இப் பணி.

### வங்கிய நேரத்திற்குப் பின் பணிகள்

வங்கி அலுவலக நேரத்திற்குப்பின் வாடிக்கையர் தமது காசோலைகளைப் பணமாக மாற்ற விரும்பினுல் அதற்கும் ஓர் ஏற்பாடு உள்ளது. இதனை அவசர ஆதாரச் சீட்டுத் திட்டம் (Emergency vouchers scheme) என்பர். சில வங்கிகள் மட்டுமே இத் திட்டத்தை உருவாக்கியுள்ளன. இந்த ஆதாரச் சீட்டுகள் (Vouchers) வங்கியில் விற்கப்படுகின்றன. இவற்றை வங்கி அலுவலக நேரங்களில் அதன் கிளைகளிலும், அலுவலக நேரங் கழிந்த காலத்தில் குறிப்பிட்ட சில பர்மா ஷெல் நிலையங்களிலும் (Burmah Shell Stations) பணமாக மாற்றிக் கொள்ளலாம். வாடிக்கையரின் தேவைகளையொட்டி, வங்கிகள் பல இடங்களில் காலையும் மாலையும் தமது அலுவலக நேரங்களைக் கொண்டுள்ளன.

### வணிக வங்கிகளின் சொத்துப் பொறுப்புக்களின் அமைப்பு

வணிக வங்கிகள் மேற்கொள்ளக்கூடிய தொழிலின் தன்மை, கொடுக்கக்கூடிய கடன்களின் வகை, அளவு போன்றன அதன் பொறுப்புக்கள் அமைந்துள்ள விதத்தைப் பொறுத்துள்ளது.

ஒரு வங்கியின் முதலும் காப்பும் அதனுடைய சொந்தப் பணமாகும். கடனாளர் (Creditor)களுக்கு பொறுப்புறுதி அளிப்பது போன்று அமைவது இந்தப் பணமே. வங்கி கடனாகப் பெற்ற பணத்தை முதலீடு செய்ய முடியாத இனங் களில் இந்தப் பணத்தை முதலீடு செய்ய வாய்ப்புப் கிடைக் கின்றது. முதல், காப்பு ஆகியவற்றிற்கும் மொத்த வைப்புக் களுக்கும் இடையேயுள்ள விகிதம், வங்கியக் கொள்கை, சட்ட விதிகள், பொருளாதார நிலை ஆகியவற்றையொட்டி அமைந் துள்ளது. 1906 ஆம் ஆண்டில் இவ் விகிதம் 18 சத விகிதம்

ஆக இருந்தது 1948-ல் 5·5 சத விகிதம் ஆகக் குறைந்து, 1969-ல் 2 சத விகிதம் என்ற நிலைக்கு வந்தது. வைப்புக்கள் வளர வளர, இவ் விகிதம் குறைந்து வரலாயிற்று.

காசோலைப் பழக்கம் நம் நாட்டில் பெருமளவில் பரவாத நிலையில் மொத்த வைப்புக்களில் கேட்பு வைப்பின் விகிதம் குறைந்த அளவாகவே இருக்கின்றது. 1969ஆம் ஆண்டு இறுதியில் மொத்த வைப்புக்களில் 25 சதவீதம் கேட்பு வைப்பாகவும், 25 சதவீதம் சேமிப்பு வைப்பாகவும், 50 சத வீதம் தவணை வைப்பாகவும் இருந்தன.

வங்கிகள் திரட்டக்கூடிய நிதியின் தன்மையும், அவை முதலீடு செய்யப்படும் முறையும், அந்தந்த நாட்டிலுள்ள பொருளாதார, நிதிய அமைப்பினைப் பொறுத்துள்ளது. ஒவ்வொரு வங்கியும், வங்கிய அமைப்பும், உயர்ந்த அளவு எளிவரல் நிலையும், உயர்ந்த அளவு இலாப நிலையும் ஒன்றுக் கொன்று சமமாக இருக்கும் வகையில் வைத்திருக்க முயலுகின்றது. தொடர்ந்து மாறி வரும் சூழ்நிலையின் தேவைகளுக்கேற்ப வங்கிய அமைப்பு வளைந்து கொடுத்து, விழிப்பாகச் செயற்பட்டு வந்தால்தான் வெற்றி நடை போட முடியும்.

சிறிதும் ஆதாயம் தராத சொத்து, வங்கிகள் கை வசம் வைத்திருக்கும் ரொக்கமே யாகும். ஆனால் வாடிக்கையர் எழுதும் காசோலைகளுக்குப் பணம் செலுத்த வங்கியருக்கு ரொக்கம் தேவைப்படுகிறது. அனுபவ முறையில் வங்கிகள் தம்மிடமுள்ள மொத்த வைப்புக்களில் எத்தனை விகிதம் ரொக்கமாக வைத்திருப்பது அவசியமென்று அறிவர். வங்கியச் சட்டமும் குறைந்த அளவு ஒவ்வொரு வங்கியும் மொத்த வைப்புத் தொகைக்கு இவ்வளவு ரொக்கம் வைத்திருக்க வேண்டுமெனப் பணிக்கின்றது. சட்டம் குறிப்பிட்ட அளவுக்கும் பன்மடங்கு மிகுதியாகவே வங்கிகள் ரொக்கம் வைத்திருப்பது வழக்கம். நம் நாட்டிலுள்ள வணிக வங்கிகள் 1969ஆம் ஆண்டு மொத்த வைப்புக்களில் 8 சதவீதம் கையிருப்பு ரொக்கமாகவும், ரிசர்வு வங்கியிடம் இருப்பாகவும் வைத்திருந்தன. மொத்த வைப்புக்களில் 24 சதவீதம் அரசினர் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. அரசினர் பிணையங்கள் மிகச் சிறந்த உயர்ந்த எளிவரல் நிலையுடைய சொத்துக்களாகக் கருதப்படுவதாலும், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப்படி வங்கிகள் வைத்திருக்க வேண்டிய எளிவரல் சொத்துக்களில் அரசினர் பிணையங்களும் ஒன்று என்பதாலும் அரசினர் பிணையங்களில் இவ்வளவு அதிகம் முதலீடு செய்யப்படுகிறது.

### கடனளிப்பு முறையில் புதிய நோக்கு

மக்களிடமிருந்து திரட்டிய வைப்புத் தொகையைக் கடனாக அளித்தே வங்கியர் தமக்கு வருமானத்தைத் தேடிக் கொள்ளுகின்றார் என்பது யாவரும் அறிந்த செய்தியே. மொத்த வைப்புக்களுக்கும் வங்கி அளிக்கும் கடன்களுக்கும் இடையேயுள்ள விகிதம் 72 சதவீதமாக 1969-ல் இருந்தது. வங்கிகள் வணிகத் தேவைகளுக்குக் கடன்வசதி யளிக்கக் கடைப்பிடிக்கும் முறைகளை முன்னரே கண்டோம்.

கடன் அளிக்கப்படும் நோக்கம் என்ன என்பதை ஆராய்ந்து, அந்த நோக்கத்திற்குக் கடன் பயன்படுத்தப்படுகின்றது என்று உறுதிப்படுத்திக் கொள்ள வங்கிகள் பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. சமுதாயத் தேவைகளுக்கு ஒப்பியுள்ள காரணங்களுக்குக் கடன் வழங்குவது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையாகும். இங்ஙனம் கடன் வழங்குவதில் ஓரளவுக்கு நட்டம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதால் இதைத் தவிர்க்க ஏதேனும் ஒரு வகையான பொறுப்புறுதி அமைப்புத் தேவைப்பட்டது. இது காரணமாகவே இந்தியக் கடன் பொறுப்புறுதிக் கூட்டுரு (Credit Guarantee Corporation of India Limited) என்ற நிறுவனம் அமைக்கப்பெற்றது.

முந்துமைத் துறை (Priority Sector) களுக்கு அளிக்கப்பட்டு வரும் கடன் வசதி பெருகிவருகிறதென்பதைக் கீழ்க்காணும் புள்ளிவிவரங்களால் அறியலாம்:

### பட்டியல் 7-3

(ரூ. கோடிக்கணக்கில்)

| | | ஜூன் 1969 இல் உள்ள படி | டிசம்பர் 1971 இல் உள்ள படி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| 1. | மொத்த வங்கிக் கடன் | 3399 | 5052 | 1653 |
| 2. | முந்துமைத் துறைகளுக்கு வங்கிகள் அளித்த கடன்:- | 768 | 1562 | 794 |
| | (அ) வேளாண்மை | 188 | 395 | 207 |
| | (ஆ) சிற்றளவுத் தொழில் | 286 | 545 | 259 |
| | (இ) ஏற்றுமதி | 263 | 459 | 196 |
| | (ஈ) பிற முந்துமைத் துறைகள் | 31 | 163 | 132 |
| 3. | (1)-ல் (2)-ன் விகிதம் | 22 9 | 31·5 | 48·0 |

வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுமுன் அதாவது ஜூன் 1969-ல் முந்துமைத் துறைகளுக்கு அளிக்கப்பட்ட கடன் 23 சத வீதமாக இருந்தது, 1971 இறுதியில் 48 சத வீதமாக உயர்ந்தது புலனுகிறது.

முதன்மை வங்கித் திட்டம் (Lead Bank Scheme)

பெருமளவில் வைப்புகளைத் திரட்டும் பொருட்டும், பொருளாதார வளர்ச்சிக்காக வங்கிகள் கடனளிப்பதை அதிகரிக்கவும் 1969ஆம் ஆண்டு ரிசர்வு வங்கி முதன்மை வங்கித் திட்டத்தைக் கொண்டு வந்தது. டாக்டர் காட்கில் தலைமையில் 1968-ல் அமைக்கப்பட்ட தேசியக் கடன் அவை (National Credit Council) யின் ஆய்வுக் குழு (Study group) அளித்த பரிந்துரைகளை யொட்டி இத் திட்டம் வரையப்பட்டது. குறிப்பிட்ட வட்டாரங்களை வணிக வங்கிகள் தேர்ந்தெடுத்து, அவ் வட்டாரத்திற்குத் தேவைப்படும் கடன் வசதிகளனைத்தையும் அளிக்கத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. இத் திட்டம் மாவட்ட அடிப்படையில் அமைவதாயிற்று. வங்கி வசதி யில்லாத, வங்கி வசதி குறைவாக வுள்ள மாவட்டங்களில் இத் திட்டம் செயற்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இத் திட்டம் வழிகாட்டி வங்கித் திட்டம் என்றும் குறிக்கப்படுவதுண்டு.

மேற்கண்ட பரிந்துரைகளின் பேரில் இந்திய ஸ்டேட் வங்கி, அதன் துணை வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வங்கிகள், தனியார்துறை வங்கிகள் இரண்டு (ஆந்திரா வங்கி, பாங்க் ஆப் ராஜஸ்தான்) ஆகியவற்றிற்கு முதன்மை வங்கித் திட்டம் முடிவு செய்யப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 336 மாவட்டங்கள் (மாநகரங்கள் நீங்கலாக) இவ் வங்கிகளிடையே பிரித்துத் தரப்பட்டன. முதன்மை வங்கி எனக் குறிக்கப்பட்ட வங்கி, தனக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டத்தில் முதன்மையான பங்கு ஏற்றுக்கொண்டு, அம் மாவட்டத்தில் உள்ள கடன் தேவைகளை முறையாகக் கணக்கெடுத்தல், வங்கிகளை நிறுவுதல், கடன் வசதிகளை விரிவு படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பினைச் செயற்படுத்த வேண்டும். மாவட்ட அதிகாரிகளுடன் தக்க தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, எங்கெங்கு வங்கிக் கிளைகளை எந்த முறையில் திறப்பது என்பதை நிருணயிக்க வேண்டும். வைப்புத் திரட்டும் வாய்ப்பு, கடன்வசதி கிடைக்காததுறை முதலியவற்றை மதிப்பீடு செய்து, தக்க நடவடிக்கைகள் வழி, படிப்படியாக வட்டித் தொழிலர் போன்றவர்களின் ஆதிக்கத்தை நீக்க வேண்டும். சுருங்கக்

கூறின், உள்ளூர் பொருளாதாரத் தேவைகளுக்குத் தக்கவாறு வங்கிய வளர்ச்சி அமையவேண்டும் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### கிளைகளின் வளர்ச்சி

கடந்த மூன்று ஆண்டுகளாக, அதாவது ஜூன் 1969 முதல் ஜூன் 1972 வரை வணிக வங்கிகள் வளர்ந்துள்ள வேகம் மெச்சத் தக்கதாக வுள்ளது. கீழ்க்காணும் பட்டியல் கூர்ந்து கவனிக்கத் தக்கது.

பட்டியல் 7—4

| | 30-6-1969-ல் வங்கி அலுவலகங்கள் | 30-6-1972—ல் வங்கி அலுவலகங்கள் | கூடுதல் | கூடுதல் விகிதம் |
|---|---|---|---|---|
| இந்திய ஸ்டேட் வங்கி | 1569 | 2575 | 1006 | 64•12 |
| ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகள் | 893 | 1383 | 490 | 64•87 |
| நாட்டுடைமை வங்கிகள் 14 | 4133 | 7189 | 3055 | 73•94 |
| பிற பின்னிணைப்புப் பட்டியலில் உள்ள வங்கிகள் | 1320 | 2238 | 918 | 69•54 |
| அயல் நாட்டு வங்கிகள் | 130 | 130 | — | — |
| பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் மொத்தம் | 8045 | 13515 | 5470 | 67•99 |
| பின்னிணைப்புப் பட்டியலில் சேராத வங்கிகள் | 217 | 105 | — 112 | —51•61 |

நாட்டுடைமை வங்கிகள் 74 சத வீதம் அளவில் கிளைகள் வளர்ச்சி கண்ட அதே நேரத்தில் நாட்டுடைமையாக்கப்படாத வங்கிகள் 70 சத வீதம் அளவுக்குக் கிளைகளைப் பெருக்கியது குறிப்பிடத்தக்கது. 1969 ஜூன் இறுதியில் 1832 கிராமப்புறக் கிளைகளே இருந்த வங்கிய அமைப்பில் 1972 ஜூன் இறுதியில் 5267 கிராமப்புறக் கிளைகள் இருந்தன.

எண்ணிக்கையின் பெருமளவு வளர்ச்சியும் முன்னேற்றமும் கண்டுள்ள வங்கிகள், இனித் தரத்திலும் திறமையிலும் உயர்வு காணவேண்டுமெனக் கருதப்படுகிறது. மூன்றாண்டு காலத்தில் 5470 கிளைகளைத் திறந்தது அரியதொரு சாதனையே. இக் கிளைகளைச் சரிவரப் பேணி வரத்தக்க ஊழியர்களை உருவாக்குவது எளியதொரு செய்தியல்ல. வங்கிகள் வளர்ச்சிச் சாதனங்களாகச் செயலாற்ற வேண்டிய இன்றைய நிலையில் திறமை மிக்க ஊழியர்கள், நல்ல பயிற்சியும் தொழிலில் ஈடுபாடும் கொண்ட ஊழியர்கள் தேவைப்படுகின்றனர், இதை யுணர்ந்துள்ள வங்கிகள் தமது நிருவாக முறையில் பெரியதொரு புரட்சிகரமான மாறுதலைச் செய்துவருகின்றன.

இந்திய வணிக வங்கிகளின் செயற்பாடு குறித்து, பல குறைகள் கூறப்படுகின்றன. இவ் வங்கிகள் பல இடர்பாடுகளால் இன்னலுகின்றன வென்றும் பேசப்படுகிறது. இவற்றை இனிக் காண்போம்.

பல காலமாக அரசினரும், உள்ளாட்சி ஆணையங்களும், பொறுப்புறுதி அமைப்புக்களும் இந்திய வங்கிகளுக்கு ஆதரவு தரவில்லை என்று குறை கூறப்பட்டது, இவ்வங்கிகள் அண்மைக் காலம் வரை நாணயமாற்றுப் பணியினை மேற்கொள்ள இயலா நிலையிலிருந்தன. பண மனுப்புகைக்கு இவ் வங்கிகள் வசூலிக்கும் கட்டணம் மிகுதியாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. மாற்றுச் சீட்டு நடவடிக்கைகளில் இந்திய வங்கிகள் மிகுதியான ஈடுபாடு காட்டுவதில்லை. ‘அகில இந்திய வங்கிகளிடை உடன்பாடு’ ஏற்படு முன்னர் வங்கிகள் தமக்கிடையே விரும்பத்தகாத போட்டியில் ஈடுபட்டு, வைப்புக்கள் மீது தமது திறனுக்கு அதிகமான வட்டியை யளித்துவந்தன. 1960-க்கு முன் போட்டி காரணமாக வங்கிகள் தாம் அளிக்கும் கடன்கள் மீது சரியான அளவு வட்டி விதிப்பதில்லை. வட்டியை உயர்த்தினால் வாடிக்கையர் வேறு வங்கிகளுக்குப் போய்விடுவார்களென அஞ்சி, குறைவான வட்டியே வசூலித்த காலமும் உண்டு. போதுமான அளவுக்கு இந்திய வங்கிகள்

உள்ளிடைக் காப்புச் (Inner Reserves) சேர்த்து வைப்பதில்லை என்ற எண்ணம் பரவலாக இருந்து வந்தது. இந்தியா விடுதலை பெற்ற பின், வங்கிகளுக்கும் அவற்றின் ஊழியர்களுக்கு மிடையே பல தொழில் தகராறுகள் ஏற்பட்ட வண்ணம் இருந்தன. இவற்றிற்குத் தீர்வு காண அவ்வப் போது தீர்ப் பாயங்கள் (Tribunals) நியமிக்கப்பட்டு, தகராறுகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

கடன் கோருவோருடைய நிதி, நாணய நிலைபற்றி நம்பத் தக்க செய்திகளைத் திரட்டித் தரும் நிறுவனம் நம் நாட்டில் இல்லாதது ஒரு பெருங் குறையாக இருக்கிறது. கடன் கோருவோரும் தம்முடைய நிதி நிலை பற்றிய விவரங்களனைத்தையும் தெரிவிப்பதில்லை என்ற பொதுவான எண்ணம் பரவியிருப்பதால் வெற்றுக் கடன்கள் (Clean advances) நம் நாட்டில் மிகுதியாக அளிக்கப்படுவதில்லை.

வங்கிகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே தமது நடவடிக்கைகளை நடத்தி வருவதால், கல்வியறிவு மிகவும் குறைவாக இருந்துவரும் நம் நாட்டில் மக்கள் பலர் வங்கிப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலையிலுள்ளனர். சில வங்கிகள் பணஞ் செலுத்துஞ் சீட்டு, காசோலை, பணவிடை விண்ணப்பம் போன்ற சிலவற்றை ஆங்கிலத்திலும் வட்டார மொழியிலும் அச்சடித்துப் புழங்குகின்றனர். வாடிக்கையரை வட்டார மொழியில் காசோலைகளில் கையொப்பமிடுவதை ஏற்றுக் கொள்ளுகின்றனர். இந்தப் போக்கு மேலும் வளர வேண்டும்.

### வங்கிகளின் சமுதாய நோக்கு

இதுகாறும் வணிக வங்கிகள் பொது மக்களிடமிருந்து திரட்டிய வைப்புத் தொகையைப் பெரும் புள்ளுகளுக்கும் தொழில்களுக்கும் கடன் அளித்து, அதனால் நல்ல ஆதாயம் பெற்று, தம் செயற்பாடு குறித்து மன நிறைவு கொண்டிருந்தன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படும் சேமிப்புக்களை நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள ஊர்களுக்கும் சென்று திரட்டவேண்டும். திரட்டிய தொகையை நாடெங்கிலும் பல்வேறு நிலைகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பாமரர் முதல் பலகோடி மதிப்புள்ள தொழில் அதிபர் வரை அனைவருக்கும் ஆக்க முயற்சிகளுக்குக் கடனுக அளிக்க வேண்டுமென்பது இன்றைய நோக்கு. வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும், பொருளாதார வளர்ச்சிக்கு

அடித்தளமாக விளங்கும் வசதிகளைப் பெருக்கவும் வங்கிகள் கடன்களைத் தந்து உதவ வேண்டும். பொருளாதார ஆதிக்கம் ஒரு சிலர் கையில் குவிந்து, குறிப்பிட்ட ஒரு சிலருக்கே கடன் வசதிகள் அளிக்கப்படுவது பழங்கதை யாகிவிட்டது. வங்கியத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களே வங்கி நிருவாகத்தை நடத்துவது என்ற நிலை சட்ட முறையாகவே அமைந்து விட்டது. நிதி வசதி யில்லை என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் எந்த ஒரு தொழில் முயற்சியும் தடைப்பட்டு நிற்கக் கூடாது என்பது இன்றைய வங்கியக் கொள்கை யாகும்.

## வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposit Insurance Corporation)

கடந்த நூற்றுண்டிலும் இந்த நூற்றுண்டின் முதற்பாதியிலும் வங்கிகள் ஆங்காங்கு நொடித்து வந்ததை வங்கிய வரலாற்றில் காண்கிறோம். வங்கிகளின் நொடிப்பால் மிகவும் பாதிக்கப்படுவது வைப்பாளர்களே. பல தொல்லைகளுக்கிடையே அரும்பாடு பட்டுச் சேமித்த பணம் பறி போய்விடுமோ என அஞ்சி, நம் நாட்டு மக்கள் பலர் வங்கிகளில் தம் பணத்தை வைப்பாகச் செலுத்திவைக்கத் துணிவில்லா திருந்த காலமும் உண்டு. இந்த அச்சத்தை நீக்கி, வைப்பாளர்களுக்குக் காப்பு வழங்கத் தக்கதொரு ஏற்பாடு தேவை என்பதை கிராமிய வங்கிய விசாரணைக் குழுவினரும் 1950-ல் வெளியிட்ட தம் அறிக்கையில் வற்புறுத்தினர். இரு பெரிய வங்கிகள் (பாலாய் சென்ட்ரல் வங்கி, லட்சுமி வங்கி) 1960-ல் நொடித்தது, வைப்புக்களைக் காப்பீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

வங்கி யொன்று தன் வைப்பாளர்களுக்குத் தரவேண்டிய பொறுப்புக்களைச் செலுத்த இயலா நிலைக்கு ஆளானுல், வைப்பாளர்களுக்கு ஓரளவேனும் பாதுகாப்பளிக்கும் பொருட்டு, நாடாளுமன்றம் இயற்றிய சட்டப்படி 1962 ஜனவரித் திங்களில் வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு நிறுவப்பெற்றது. துவக்கத்தில் ஒரு கோடி ரூபாய் அனுமதித்த முதல் கொண்டிருந்த இக்கூட்டுருவின் முதல் 1968-ல் ரூ. 5 கோடியாக உயர்த்தப்பட்டது. இத் திட்டம் துவக்கப்பெற்ற போது ஒவ்வொரு வைப்பாளருடைய கணக்கிலும் உள்ள தொகையில் ரூ. 1,500 வரை பாதுகாப்புப் பெற்றது. வைப்பாளர் வங்கியருக்கத் தொகையேதும் தரவேண்டுவதிருந்தால், இந்தத் தொகையிலிருந்து அது கழித்துக் கொள்ளப்படும். மத்திய அரசின் முன் அனுமதியுடன் இந்தக் காப்பளிக்கப்பட்ட தொகை உயர்த்தப்படலாம். காப்புப்பெறும் வங்கிகள் செலுத்த வேண்டிய கட்டணம், ஒரு விழுக்காட்டில் இருபதில் ஒரு பங்கு. அதாவது,

காப்புப் பெறும் நூறு ரூபாய் வைப்புக்கு ஆண்டுக்கு ஐந்து பைசா என நிருணயிருக்கப்பட்டது. இத் திட்டம் துவங்கிய போது காப்பீடு செய்யப்பட்ட வங்கிகள் எண்ணிக்கை 287 ஆக இருந்தது, வங்கிகள் இணைந்ததாலும் பல வங்கிகளுக்கு உரிமம் ரத்து செய்யப்பட்டதாலும் 1970 இறுதியில் 83 வங்கிகளாகக் குறைந்து நின்றது.

காப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1,500 லிருந்து 1968 ஜனவரி முதல் நாள் தொடங்கி ரூ. 5,000 ஆக உயர்த்தப் பட்டது. இத் தொகை ரூ. 10,000 ஆக, மேலும் 1970 ஏப்ரல் முதல் உயர்த்தப்பட்டது. காப்பீட்டுக் கட்டணம் பழையபடியே, அதாவது நூறு ரூபாய் வைப்புக்கு ஆண்டுக்கு 5 பைசாவாக இருந்து வருகிறது. கடத்த பத்து ஆண்டுகளாக (1961-71) இக் கூட்டுரு எந்த அளவுக்குக் காப்பீடு அளித்து வந்துள்ளது என்பதை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை விளக்கும்.

காப்பளிப்புத் திட்டத்தின் கீழ் வராத வைப்புக்கள் மொத்த வைப்புக்களில் 4·3 சத வீதமாக 1970 ஆம் ஆண்டு இறுதியில் இருந்தன. வெளிநாட்டு அரசாங்கம், மத்திய அரசு, மாநில அரசு, வணிக வங்கி ஆகியவற்றின் வைப்புக்களும் வெளி நாட்டில் பெறப்பட்ட வைப்புக்களும் இத் திட்டத்தின் கீழ் வாரா. சட்டமுறை நிறுவனங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், உள்ளாட்சி ஆணையங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் கூட்டுருக்கள் போன்றவற்றின் வைப்புக்கள் காப்புப் பெறும் தகுதி பெற்றுள்ளதால், அவற்றின் மீது கட்டணமும் விதிக்கப் பெறுகிறது.

காப்பீடு அளிக்கப்பட்ட வைப்புத் தொகையின் அளவு ரூ. 1,500-லிருந்து படிப்படியாக ரூ. 10,000-க்கு உயர்த்தப்பட்ட தன் விளைவாக மொத்த வைப்புத் தொகையில் காப்பீடு செய்யப் பட்ட வைப்புத் தொகை 1967-ல் 26·2 சத வீதம் ஆக இருந்தது 1970-ல் 62·6 சத வீதம் ஆக வளர்ந்தது. இதே போன்று முழுதும் காப்பளிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 1967 ஆம் ஆண்டு 76·4 சத வீதம் ஆக இருந்தது 1971-ல் 96·3 சத வீதம் ஆக உயர்ந்தது.

ஜூலை 1971 முதல், வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு திருத்தச் சட்டத்தின்படி மகராட்டிரம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கோவா, டாமன், டையூ யூனியன் பரப்பு ஆகிய பகுதிகளிலுள்ள கூட்டுறவு வங்கிகளும் இத் திட்டத்தால் பய னடைய வழி வகை செய்யப்பட்டது. பிற மாநிலங்களும் தத்தம்

## பட்டியல் 7—5

### வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு

### காப்பளிக்கப்பட்ட வைப்புக்கள் விவரம்

| கடைசி வெள்ளிக் கிழமையிலிருந்த நிலை | | தகவல் தரும் வங்கிகள் | முழுமையாகக் காப்பளிக்கப் பட்ட வைப்புக் கணக்கு (ஆயிரங்களில்) | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (ஆயிரங்களில்) | 3 இன் விகிதமாக 2 | காப்பளிக் கப்பட்ட வைப்புத் தொகை (கோடி ரூ.) | கட்டணம் வசூலிக்கத்தக்க வைப்புக்களின் மொத்தத் தொகை (கோடி ரூ.) | 6 இன் விகித மாக 5 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| டிசம்பர் | 1961 | 285 | 55,42 | 70,58 | 78·5 | 392 | 1,694 | 23·1 |
| செப்டம்பர் | 1965 | 117 | 88,98 | 1,15,76 | 76·9 | 691 | 2,744 | 25·2 |
| ,, | 1966 | 103 | 1,03,64 | 1,35,64 | 76·4 | 824 | 3,236 | 25·5 |
| ,, | 1967 | 93 | 1,18,67 | 1,55,26 | 76·4 | 943 | 3,603 | 26·2 |
| ,, | 1968 | 88 | 1,59,52 | 1,75,48 | 90·9 | 2,023 | 4,012 | 50·4 |
| ,, | 1969 | 86 | 1,86,09 | 2,05,01 | 90·8 | 2,374 | 4,670 | 50·8 |
| ,, | 1970 | 83 | 2,30,39 | 2,39,79 | 96·1 | 3,411 | 5,448 | 62·6 |
| ,, | 1971 | 423* | 2,98,86 | 3,10,20 | 96·3 | 4,224 | 6,801 | 62·1 |

* இவற்றில் 81 வணிக வங்கிகள் 342 கூட்டுறவு வங்கிகள்.

** 1967 இறுதிவரை இருப்பு ரூ. 1,500க்கு மேற்படாத, 31-3-1970 வரை ரூ. 5000க்கு மேல் இருப்புப் போகாத, பின்னர் ரூ. 10,000க்கு மிகாத இருப்புள்ள கணக்குகளின் எண்ணிக்கை.

1967 இறுதிவரை ரூ. 1,500 வரையுள்ள வைப்புக்களனைத்தும், 31-3-70 வரை ரூ. 5,000 வரையுள்ள வைப்புக்கள், பின்னர் ரூ. 10,000 வரையுள்ள வைப்புக்கள்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தைத் தக்கவாறு திருத்தினுல் மேலும் பலப்பல கூட்டுறவு வங்கிகளும் இத் திட்டத்தின் பயனைப் பெறலாம். வைப்பாளர்களும் நலம் பெறுவர்.

வைப்புக் காப்பீட்டுத் திட்டத்தின் சிறப்பு, வங்கிகள் காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்துவதே. வைப்பாளர்கள் தம் கையிலிருந்து கட்டணமேதும் கட்ட வேண்டுவதில்லை. காப்பீடு பெறும் வங்கிகள் செலுத்தும் முனைமம் (Premium) ஒரு நிதியாக வைக்கப்பட்டு வருகிறது. 1970 ஆம் ஆண்டு இறுதியில் வைப்புக் காப்பீட்டு நிதி (Deposit Insurance Fund) ரூ. 1,731·27 இலட்சமாக இருந்தது. இந் நிதியை முதலீடு செய்த வழி பெற்ற வருமானம் 1970-ல் ரூ. 84·80 இலட்சமாக இருந்தது. 1970 இறுதி வரை முனைமம் ரூ. 1,484·3 இலட்சமும், முதலீடுகளின் மீது வருமானம் ரூ. 302·14 இலட்சமும் பெறப்பட்டிருந்தது. இக் கூட்டுரு துவங்கியது முதல் 1969 ஆம் ஆண்டு வரை ரூ. 57·03 இலட்சம் மட்டுமே கோருரிமைத் தொகை (Claim amount) யாகச் செலுத்தியிருந்தது. 1970 ஆம் ஆண்டு நேஷனல் பாங்க் ஆப் லாகூர், பாங்க் ஆப் பீகார் என்ற இரு வங்கிகளின் வைப்பாளர்களுக்குத் தரவேண்டிய தொகை ரூ. 56·09 இலட்சமெனக் கணக்கிடப்பட்டதால், துவக்க முதல் 1970 முடிய மொத்தம் ரூ. 113·12 இலட்சம் காப்பளிப்புத் திட்டத்தின் கீழ்க் கூட்டுரு செலுத்த நேர்ந்தது.

தற்போதுள்ள நிலையில் காப்பீடு பெறும் வங்கியின் வைப்பாளர் ஒருவர் அவ் வங்கியில் வைப்பாகச் செலுத்தியுள்ள மொத்தத் தொகையில் ரூ. 10,000 வரையுள்ள தொகை முழுமையாகக் காப்பீடு செய்யப்படுகிறது. வங்கி கலைக்கப்பட்டாலும், மாற்றி யமைக்கப்பட்டாலும், பிற வங்கியுடன் இணைக்கப்பட்டாலும் கூட்டுரு காப்பீட்டுத் திட்டத்தின்படிப் பொறுப்பு ஏற்று, வைப்பாளருக்குச் சேர வேண்டிய தொகையைச் செலுத்த ஏற்பாடு செய்யும்.

வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு ரிசர்வு வங்கிக்கு முழுதும் உரிமையான துணை நிறுவனமாகும். இதன் நிருவாகம் ஐவரடங்கிய இயக்குநர் அவையிடம் அமைந்துள்ளது. ரிசர்வு வங்கியின் ஆளுநர் இதன் பெருந் தலைவராவார். ரிசர்வு வங்கியின் உதவி ஆளுநர், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட அதன் அதிகாரி ஒருவர், ரிசர்வு வங்கியுடன் கலந்து ஆலோசித்து, மத்திய அரசு நியமிக்கும் வணிகம், தொழில் அல்லது நிதி அல்லது வணிக வங்கிகள் பற்றிய சிறப்பான நுண்ணறிவு

கொண்ட இருவர் ஆகிய நால்வரும் பிற இயக்குநர்களாவர்.

**வங்கியருக்குப் பயிற்சி**

வளர்ந்து வரும் வங்கியத் துறை நுணுக்கம் மிகுந்து நாளுக்கு நாள் புதுமைத் திட்டங்களைச் செயலாற்றும் வகையில் தன்னைத் தயார் செய்து கொள்ளத் தனது ஊழியருக்குத் தக்க பயிற்சி யளிக்க வேண்டும். ரிசர்வு வங்கி இது குறித்து ஆற்றி வரும் அரிய பணியினை முன்னர் கண்டோம். வணிக வங்கிகளில் ஸ்டேட் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, யுனைடெட் கமர்ஷியல் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கானரா வங்கி, சிண்டிகேட் வங்கி, பாங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி, பாங்க் ஆப் பரோடா, தேனு வங்கி முதலியன தத்தம் ஊழியருக்கெனப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி, பலவகைப்பட்ட பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றனர்.

தேசிய வங்கி நிருவாக பயிற்சிக்கூடம் (National Institute of Bank Management) என்ற உயர் பயிற்சி நிலையம் வணிக வங்கிகளின் உயர் அலுவலர்களுக்குச் சிறந்த பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறது. வங்கியத் தொழிலில் அடங்கியுள்ள பல பணிகளையும் நடைமுறைகளையும் மிக நுணுக்கமாகவும், விளக்கமாகவும், ஆழமாகவும் ஆராய்ந்து, பலப்பல கருத்தரங்குகள், பயிற்சிப் பண்ணைகள் முதலிய ஏற்பாடு செய்து, வங்கிய அறிவை அலுவலரிடையே வளர்த்து வருகிறது இந் நிலையம்.

பயிற்சி என்பது தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒரு நிகழ்ச்சி. அடித்தளத்தில் பணி புரியும் எழுத்தர், காசாளர் முதல் உயர்மட்டத்தில் செயலாற்றும் மேலாளர், செயலர், பெருந்தலைவர் ஈறாக எல்லோருக்கும் பயிற்சி தேவைப்படுகிறது. பயிற்சி பெற்றவர்கள் தமது வேலையைப் புரிந்துகொண்டு, திறமையுடன் விரைவாகத் தன்னம்பிக்கையுடன் எளிதாகச் செயலாற்ற முடியும். புதிய பல திட்டங்களை வங்கிகள் ஏற்றுச் செயற்படுத்து முன், அத் திட்டத்தைத் தம் ஊழியருக்கு அறிமுகப்படுத்தி, அவர்களை அதில் ஈடுபாடு காட்ட ஊக்குவிக்கவும் பயிற்சி தேவைப்படுகிறது. இந்த அடிப்படை உண்மைகளை நன்கு உணர்ந்துள்ள வங்கிகள் தம் ஊழியருக்குப் பலப்பல நிலைகளில் பயிற்சியும், மறு பயிற்சியும், புத்தொளிப் பயிற்சியும், புதுமுகப் பயிற்சியும் அளித்து வருகின்றனர்.

## வங்கித் தீர்வு, இரு தரப்பு ஒப்பிய முடிவு (Bank Award, Bipartite Settlements)

இரண்டாம் உலகப் போர் துவங்கியது முதல் விலைவாசிகள் ஏறிய வண்ணமிருந்தன. இதனால் நிலையான வருவாயுள்ள வகுப்பினர் மிகவும் பாதிக்கப்பட்டனர். வங்கி ஊழியர்கள் இவ் வகுப்பைச் சேர்ந்தவர்கள். தமது ஊதியத்தை உயர்த்தக் கோரியும், வாழ்க்கைத் தரத்தை வளப்படுத்தக் கோரியும் தத்தம் நிருவாகத்தினருக்கு முறையிடச் சங்கங்களை அமைத்தனர். நாடு முழுவதுமுள்ள பலப்பல வங்கி ஊழியர் சங்கங்களை ஒன்றாக இணைத்த அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் 1946-ல் உருவாயிற்று. வங்கிய ஊழியர் பிரச்சினைகளை மாநில அளவில் தீர்ப்பது பல சிக்கல்களை யுண்டாக்கியது. பெரிய வங்கிகளுக்குப் பல மாநிலங்களில் கிளைகளிருந்தன. ஒரே வங்கியில் பணி புரியும் ஒரு சில ஊழியர்களுக்கு மட்டும் பொருந்தும் வகையில் எந்த ஏற்பாடும் நியாயமானதாக அமையாது. மேலும் வங்கி ஊழியர் பல மாநிலங்களிலுள்ள பல ஊர்களுக்கு மாற்றப் பெறும் நிலையிலுள்ளனர். இந்தக் காரணங்களால் இந்திய அரசு வங்கியத் தொழில் தகராறுகளை அகில இந்திய ரீதியில் தீர்த்து வைக்கச் சட்ட முறை ஏற்பாடுகளைச் செய்தது.

ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கே. சி. சென் தலைமையில் 1949-ல் மத்திய அரசு தொழில் தீர்ப்பாயம் (Industrial Tribunal) ஒன்றை அமைத்து, வங்கியத் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைக்க ஏற்பாடு செய்தது. இந்தத் தீர்ப்பாயம் 1950ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பே "சென் அவார்டு" (Sen Award) என அழைக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பாய அமைப்பில் சில சட்ட முறையான குறைபாடுகள் இருந்த காரணத்தால் உச்சநீதி மன்றம் (Supreme Court) இதைச் செல்லாது என்று தீர்ப்பளித்தது. பின்னர் 1951-ல் திரு. எச். வி. திவேடியா தலைமையில் மற்றொரு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. இதன் உறுப்பினர் மூவரும் தம் பதவியைத் துறந்துவிட்டதால் இது செயற்படாது மடிந்தது.

மறுபடியும் 1952-ல் திரு. பஞ்சாபகேச சாஸ்திரியின் தலைமையில் மீண்டுமொரு தீர்ப்பாயத்தை மத்திய அரசு அமைத்தது. மார்ச்சு 1953-ல் சாஸ்திரி தீர்ப்பாயம் தனது முடிவுகளை அறிவித்தது. இம் முடிவுகளை எதிர்த்து, தொழில் மேன்முறையீட்டுத் தீர்ப்பாயம் (Labour Appellate Tribunal) ஒன்று ஊழியர்களுக்கு மேலும் சாதகமான பல அம்சங்கள்

கொண்ட தீர்ப்பு அளித்தது. மத்திய அரசு இத் தீர்ப்பின் சில பகுதிகளைத் திருத்தியது. ஊழியர்கள் இதனை எதிர்க்கலாயினர். மத்திய அரசு பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஜி. எஸ். ராஜதயாக்ஷா என்பவரைக் கொண்ட ஒரு நபர் ஆணைக் குழுவினை அமைத்தது. இவர் தமது பணியினைத் துவங்கிய சில நாட்களில் இறந்து போனார். இவருக்குப் பதிலாக அந் நாள் பம்பாய் உயர் நீதி மன்ற நீதிபதி திரு.பி. பி. கஜேந்திரகட்கர் நியமிக்கப்பட்டார். இவர் தமது அறிக்கையை 1955-ல் வெளியிட்டார். இந்தத் தீர்ப்பின் முடிவுகள் 1959ஆம் ஆண்டு வரை செல்லும் என்று எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அகில இந்திய வங்கி ஊழியர் கூட்டிணைப்பும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும் புதுக்கோரிக்கைகளைக் கொண்ட ஓர் அறிக்கை தயாரித்து, அதனை வங்கி நிருவாகத்தினர் கவனிக்க வேண்டுமென்று கோரினர். இதன் பயனாக அரசு 1990 ஆம் ஆண்டு, நீதிபதி திரு. கே. டி. தலைமையில் தேசிய தொழில் தீர்ப்பாயம் ஒன்றை மத்திய அரசு அமைத்தது. வங்கி ஊழியருக்கும் வங்கி நிருவாகத்தினருக்கும் இடையே யுள்ள அத்தனை தகராறுகளும் தீர்ப்புக்கு விடப்பட்டது. திரு. தேசாய் 1962-ல் அளித்த தீர்ப்பு, "தேசாய் அவார்டு" (Desai Award) என்று அழைக்கப்பட்டது.

### இரு தரப்பினர் ஒப்பிய முடிவுகள் (Bipartite Settlements)

வங்கி நிருவாகத்தினரும் வங்கி ஊழியரும் தத்தம் பிரதிநிதிகளைக் கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்தி, இரு தரப்பினரும் ஒப்புக் கொள்ளும் ஒரு முடிவை 1966-ல் கண்டனர். இது மூன்றாண்டுக்கு இரு தரப்பினரையும் கட்டுப்படுத்தும் என்றும், அதன் பின்னும் கூட எவரேனும் ஒரு தரப்பினர் இரண்டு மாத கால அறிவிப்புக் கொடுத்து,இம்முடிவை முடிந்து விட்டது என்று கருதக் கோரும் வரை இது அமுலிலிருக்கும் என்று ஏற்றுக் கொண்டனர். மறுபடியும் 1970 முதல் நான்கு ஆண்டுகளுக்கு அமுலிலிருக்கும் ஓர் ஒப்பிய முடிவு இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டது.

வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைப் பெரிதும் ஆதரித்த வங்கி ஊழியர் இனி நாட்டுடைமை நாட்டிற்கு நலந்தரும் என்பதை மெய்ப்பிக்கச் சிறந்த முறையில் முழு ஈடுபாடுடன் செயலாற்றுவர் என்றும், தொழில் தகராறுகள் வங்கியத் துறையில் வெகுவாகக் குறைந்து, தரமான சேவை பெருகுமென்றும் கருதப்படுகிறது.

# 8. கூட்டுறவு வங்கிகள்

இந்தியாவில் இயங்கிவரும் வங்கியத் துறை பற்றிப் பேசுகையில், கூட்டுறவு வங்கிகளைப் பற்றிச் சிறப்பாக அறிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு அவை வளர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கூட்டுறவு என்பது மனித சமுதாயத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று என்று கூறுவது மிகையாகாது. தாமே விரும்பி, தம்மிடையே சிக்கனம், ஒருவருக்கொருவர் உதவி போன்ற பண்புகளை வளர்க்க, எல்லோரும் சமம் என்ற நிலையில் தமது பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் பொருட்டு உருவாக்கப்படும் அமைப்பே கூட்டுறவு எனப்படும். கூட்டுறவு முறையில் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுவதே முதன் முதலில் இன்றியமையாததெனக் கருதப்பட்டது. வட்டித் தொழிலரின் இறுக்கமான பிடியிலிருந்து கிராமிய மக்களை விடுவித்து, அவர்களுக்கு எளிய முறையில் குறைந்த வட்டிக்குக் கடன் வசதிகள் செய்து தருவதே கூட்டுறவு ஆற்றக் கூடிய முதல்பணி என்று நம்பப்பட்டது. எனவே, கிராம நாணயச் சங்கங்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்படலாயின. 1904ஆம் ஆண்டில் இயற்றப் பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், இச் சங்கங்களைப் பதிவு செய்ய வகை செய்தது. அரசு மேற்கொண்ட முயற்சிகளாலும், அரசு அளித்த கடன்களைக் கொண்டும் இவ் வியக்கம் வளரலாயிற்று.

விவசாயக்கடன் வழங்க, பிரதம நாணயச் சங்கங்களை மட்டுமே ஏற்படுத்த, 1904 ஆம் ஆண்டு சட்டம் வகை செய்தகால், மத்திய நிலையங்களையும் (Central Institutions) கடன் சார்பற்ற கூட்டுறவு நிலையங்களையும் ஏற்படுத்தவும் பதிவு செய்யவும் 1912-ல் புதியதொரு சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின் கீழ்ப் பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப் பெற்றன. 1919 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியல்

சீர்திருத்தங்களின்படி, கூட்டுறவு மாநில அரசின் பொறுப்பில் வந்தது. புதியதொரு எழுச்சியுடன் கூட்டுறவு நிலையங்கள் நிறுவப்படலாயின. விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் வசதிகள் அளிக்க நில அடைமான வங்கிகள் உருவாக்கப் பெற்றன.

கூட்டுறவு வங்கிகளைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். வேளாண்மைத் துறைக்குக் கடன் தரும் வங்கிகள் ஒரு புறம், சிறு வணிகர், கைவினைஞர் போன்றோருக்குக் கடனளிக்கும் நகர வங்கிகள் ஒரு புறம், பல்வகை நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், அரசினர் அலுவலகங்களில் பணியாற்றுவோருக்குக் கடன் வழங்கும் ஊழியர் கூட்டுறவு வங்கிகள் ஒரு புறம் எனப் பலவகை வங்கிகளைக் காண்கிறோம். இவற்றில் மிகப் பெருமளவுக்குப் பரவியுள்ளவை வேளாண்மைத் துறைக்குக் கடன் வழங்கும் வங்கிகளே. இனி, இவற்றைப் பற்றிய சில விவரங்களைக் காண்போம் :

கூட்டுறவுத் துறையில் வேளாண்மைக்கு அளிக்கப்படும் கடன் வசதி இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று குறுகிய கால, மத்தியக் காலக் கடன்; மற்றது நீண்ட காலக் கடன். குறுகிய கால மத்தியக் காலக் கடன்களை அளிப்பது, மூன்றடுக்கு அமைப் (Three - tier stucture)புள்ள மாநிலக் கூட்டுறவு வங்கி (உச்சி வங்கி என்றும் பேசப்படும்), மத்தியக் கூட்டுறவு வங்கி, பிரதம கூட்டுறவு நாணயச் சங்கம் ஆகியவாகும். நீண்டகாலக் கடன்களை அளிக்க இரண்டு அடுக்கு அமைந்து உள்ளது. உச்சியில் மாநில நில வள வங்கிகளும், அடுத்து, பிரதம நில வள வங்கிகளும் செயற்பட்டுவருகின்றன.

**வேளாண்மைக் கடன்**

வேளாண்மைத் துறைக்குத் தேவைப்படும் கடனளவு பலப்பல வல்லுநர்களால் அவ்வப்போது கணக்கிடப் பெற்று வந்துள்ளது. 1924-ல் சர் மால்கம் டார்லிங் வேளாண்மைக் கடன் தேவையினை ரூ. 600 கோடி என மதிப்பிட்டார்; மைய வங்கிய விசாரணைக் குழு 1930-ல் இத் தொகை ரூ. 900 கோடி என மதிப்பிட்டது. 1935-ல் பொருளாதார வல்லுநர் பி. ஜே. தாமஸ் என்பார் இதனை ரூ. 1,200 கோடி என மதிப்பிட்டார். இந்திய ரிசர்வு வங்கி 1937-ல் கிராமக் கடன் தேவைகளை ரூ. 1,800 கோடியாக மதிப்பீடு செய்தது. அண்மையில் அகில இந்திய கிராமியக் கடன் மறு ஆய்வுக்குழு செய்த மதிப்பீட்டின் படி 1973-74 ஆம் ஆண்டில் நம் நாட்டின் குறுகிய கால


கூட்டுறவு வங்கிகள்
விவசாயச் சார்புற்றவை
விவசாயச் சார்பற்றவை
குறுகிய, மத்திய காலக் கடன் வழங்குபவை
நீண்டகாலக் கடன் வழங்குபவை
ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கங்கள்
கூட்டுறவு நகர வங்கி
உச்சித் தொழிற் கூட்டுறவு வங்கி
மாநிலக் கூட்டுறவு வங்கி (உச்சி வங்கி)
மாநில நிலவளக் கூட்டுறவு வங்கி
மத்தியக் கூட்டுறவு வங்கி
பிரதம நிலவளக் கூட்டுறவு வங்கி
மத்தியக் கூட்டுறவு வீட்டு அடைமான வங்கி
பிரதமத் தொழிற் கூட்டுறவு வங்கி
கிராம வங்கி, விவசாய வங்கி, பிரதம நாணயச் சங்கங்கள், கூல வங்கிகள் (Grain banks)
பிரதமக் கூட்டுறவு வீட்டு அடைமான வங்கி

விவசாயக் கடன் தேவைகள் மட்டும் ரூ. 2,000 கோடி யளவில் இருக்கும். இக் குழு நீண்ட காலக் கடன் தேவைகள் 1968-69 முதல் 1973-74 வரையுள்ள காலத்திற்கு ரூ. 1,600 கோடியாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. இங்ஙனம் வளர்ந்து வரும் விவசாயத் தேவைகளுக்குக் கடன் வழங்குவதில் முக்கிய மானதொரு பங்கினை ஏற்றிருப்பது கூட்டுறவு வங்கிகள் என்று கூறுவது மிகையாகாது. விவசாயத் தேவைகளுக்கு வாங்கப் பட்ட கடன்களில் 3 சத விகிதம் அளவு மட்டுமே கூட்டுறவு நிலையங்களால் தரப்பட்டன என்று 1951-ல் கணக்கிடப்பட்டது. இந்த அளவு ஏறத்தாழ 30 சத விகிதம் ஆக உயர்ந்தது என்று 1969-ல் கணக்கிடப்பட்டது.

**காலவாரிக் கடன் பாகுபாடு**

கடன் தவணை மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது. ஒன்று குறுந்தவணை அல்லது குறுகிய காலக் கடன்; மற்றது மத்திய காலக் கடன்; மூன்றும் வகை நெடுந்தவணை அல்லது நீண்ட காலக் கடன்.

குறுந்தவணைக் கடன்: பருவத்தை யொட்டிய பயிரை விளை விக்கத் தேவைப்படும் கடன் குறுகிய காலக் கடன் எனப்படு கின்றது. இக் கடனைப் பயிர்க்கடன் என்று குறிப்பிடுகின்றனர். பயிர்க் கடன் திட்டத்தின் கீழ்க் குறிப்பிட்ட ஒரு பயிரை விளை விக்க, குறிப்பிட்ட ஒரு கடன் விகிதப்படிக் கடன் தரப்படுகின் றது. விவசாய உள்ளீடு ((Input) களான விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளும் ரொக்கமும் வழங்கப்படுகின்றன. அதாவது, கடனில் ஒரு பகுதி ரொக்கமாகவும், மற்றப் பகுதி பொருள்களாகவும் வழங்கப்படுகின்றது. உள்ளீடுகளைப் பயன்படுத்தும் வகையில் உண்டாகும் கூடுதல் செலவினை மேற் கொள்ள, கூடுதல் ரொக்கம் கடனுகத் தரப்படுகின்றது. குடும் பப் பராமரிப்பிற்காக ஒரு குறிப்பிட்ட தொகையும், கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வழி உற்பத்தியாகும் விளைபொருளை விற் கத் தூண்டுகோலாக மேலும் கூடுதலான கடன் தொகையும் கொடுக்கப்படுகின்றது. கடன் வழங்குவதிலும் வசூலிப்பதிலும் பயிரின் பருவம் கருத்தில் கொள்ளப்படும். பயிரிடத் துவங் குங்காலை, கடன்களை வழங்கி, அக் கடன் உதவி கொண்டு எழுப் பப்படும் விளைபொருளை, அதை அறுவடை செய்த சில வாரங் களுக்குள் விற்றுக் கடனைத் திரும்ப வசூல் செய்வது பயிர்க் கடன் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். அறுவடை செய்த உடனேயே விற்ருல் விவசாயிக்கு நல்ல விலை கிடைக்காமல் போகக் கூடுமாதலால், அறுவடைக்குப்பின் ஓரிரு திங்கள்

கழித்தே கடனைத் திருப்பிச் செலுத்தும் நாள் தீர்மானிக்கப்படுகின்றது. குறுகிய காலக் கடனின் தவணை, பயிர் விளைவிக்கத் தேவைப்படும் காலத்தையொட்டி அமைகிறது. பெரும்பாலும் தவணை 12 திங்களுக்கு மேல் இருப்பதில்லை எனினும், கரும்பு போன்ற விளைபொருள்களுக்கு 15 திங்கள் வரை தவணை தரப்படுவதுண்டு.

### மத்திய காலக் கடன்

ஓராண்டுக்கு மேல் ஆனால் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மிகாத தவணை கொண்ட கடன் மத்திய காலக் கடன் என்று அறியப்படுகின்றது. நிலத்தைப் பண்படுத்தல், கனித்தோட்டம்,தோட்டக்கால் ஏற்படுத்த நிலத்தைத் தயார் செய்தல், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், வளப்படுத்தல், பராமரித்தல், கால்நடை வாங்குதல், விவசாய இயந்திரங்கள், தளவாடங்களை வாங்குதல், கால்நடைக் கொட்டில், களத்தில் வீடு போன்றன கட்டுதல், தோட்டமிடுதல், வேலியிடுதல் போன்ற செயல்கள், கறவை மாடுகள் வாங்கல், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பங்கு வாங்குதல் போன்ற பலப்பல காரியங்களுக்கு மத்திய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

### நீண்ட காலக் கடன்கள்

நெடுந்தவணை அல்லது நீண்ட காலக் கடன்கள் ஏழாண்டுகள் முதல் 15 அல்லது 20 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுவன. முன்காலத்தில் பழங்கடன்களை அடைக்கும் பொருட்டுத் தரப்பட்ட இக்கடன் இன்றைய நாளில் உற்பத்திப் பெருக்க நோக்கங்களுக்கு—அதிலும் கண்டு கொள்ளத்தக்க (Identifiable) பயன்களுக்கு மட்டுமே பெரும்பாலும் அளிக்கப்படுகின்றது. கிணறு, குளம் தோண்டல், ஆழப்படுத்தல், பழுது பார்த்தல், நீர்ப்பாசனத்திற்கு நிலத்தைத் தயார் செய்தல், நிலத்தை மீட்டல், கரை கட்டல், சீர்திருத்தம் செய்தல்; இயத்திரத்தை வைத்திருக்கக் கூடம், கால்நடைக் கொட்டில், களமனை (Farm house) முதலிய கட்டுதல், தோட்டமிடுதல், எண்ணெய்ப் பொறி (Oil engine) வாங்கல், டிராக்டர் வாங்கல், விவசாயத் தேவைக்கு கனரக இயந்திரங்கள் வாங்கல், வெல்லம், பழுப்புச் சர்க்கரை தயாரிக்க கரும்பைப் பிழிந்தெடுக்கும் இயந்திரம் வாங்கல், கைவசமுள்ள நிலத்தை ஓர் ஒழுங்கான நிலைக்குக் கொண்டுவரக் கூடுதல் நிலம் வாங்கல், விவசாயத்திற்குத் தேவையான வீடுகளைப் பழுது

பார்த்தல், குத்தகைக்காரர்கள் குத்தகை நிலத்தை வாங்கல், பழங்கடனை அடைத்தல் போன்ற பலப்பல தேவைகளுக்கு நீண்டகாலக் கடன்கள் தரப்படுகின்றன.

### பிரதம சங்கங்கள், மத்திய வங்கிகள், மாநில வங்கி

விவசாயிகளுக்குக் குறுகிய கால, மத்தியகாலக் கடன் வசதி களை நேரடியாக அளிப்பது பிரதமக் கூட்டுறவு நாணயச் சங்கங் களாகும். இவ்வகைக் கூட்டுறவு நிலையங்கள் பலவகைப் பெயர்கள் கொண்டு நாடெங்கிலும் இயங்கி வருகின்றன. கூட்டுறவு விவசாய வங்கி, கூட்டுறவுக் கிராமிய வங்கி, கூட்டுறவுப் பல நோக்குச் சங்கம், கூட்டுறவுக் கடன் சங்கம் என்ற பல பெயர்களைத் தாங்கிச் செயற்பட்டு வரும் அடித்தளத்தில் அமைந் துள்ள இக் கூட்டுறவு நிலையங்கள் கூட்டுறவு இயக்கத்தின் ஆணிவேராகும். இவை துவங்கப்பட்டது முதல் சில ஆண்டு களுக்குத் தாம் திரட்டிய நிதியினைக் கொண்டு மட்டுமே கடன் வழங்கி வந்தன. ஆனால் பெருகி வந்த கடன் தேவைகளை நிறைவு செய்ய இச் சங்கங்கள் தாமே திரட்டிய நிதி போது மானதாக இல்லை. இந் நிலையில் இப் பிரதம சங்கங்களின் கூட்டிணைப்பாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிறுவப்பெற்றன. இம் மத்திய வங்கிகள் தமது உறுப்புச் சங்கங்களின் உபரித் தொகையை வைத்திருக்கவும், அவைகளுக்குப் பற்றுக்குறை ஏற்படுங் காலங்களில் நிதி வசதிகளை அளிக்கவும் உதவின.

மத்திய வங்கிகளின் எண்ணிக்கை வளர வளர, அவற்றிற்கு அறிவுரை கூற, அவற்றை மேற்பார்வை செய்ய, அவற்றின் வளர்ச்சிக்கு உதவ, தக்கதொரு கூட்டுறவு நிலையம் தேவைப் பட்டது. மத்திய வங்கிகளின் செயல்முறைகளைக் கூட்டிணைத்து, அவற்றை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, மாநில அளவில் கூட்டுறவு நிதியத்தின் உயிர் நாடி போன்று விளங்க, கூட்டுறவு உச்சி வங்கி (Apex Bank) நிறுவப் பெற்றது. இந்த உச்சி வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கி என அழைக்கப்பட்டது. இவ் வங்கி நாட்டின் மைய வங்கியான ரிசர்வு வங்கியுடன் தொடர்பு கொண்டு, கூட்டுறவு நிதிய வசதிகளை ஏற்பாடு செய்கிறது.

மாநில வங்கிகள் பெரும்பாலும் மத்திய வங்கிகளின் கூட்டிணைப்பாக இருந்து வருகின்றன. சில இடங்களில், மாநில அளவில் செயற்படும் பிரதம சங்கங்கள், மத்திய வங்கிகள், பொறுக்கி யெடுத்த சில தனி நபர்கள் ஆகிய உறுப்பினர்களைக்

கொண்டு மாநில வங்கிகள் இயங்கி வருகின்றன. அரசாங்கம் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதும் படிப்படியாக பங்கு கொள்ளும் தத்துவத்தை யொட்டி இன்றைய நாளில் அரசாங்கம் தனி நபர் உறுப்பினரை நீக்கி வருவதும் குறிப் பிடத்தக்க போக்குகளாகும்.

## நில வள வங்கிகள்

வேளாண்மைத் துறையில் நீண்டகாலக் கடன் வசதிகளை அளிப்பதற்குக் கூட்டுறவு நில வள வங்கிகள் செயற்பட்டு வருகின்றன. சில காலத்திற்கு முன் இவை நில அடைமான வங்கிகள் என அறியப்பட்டு வந்தன.

பழங்கடன்களை அடைக்கவும், நிலையான வகையில் நிலத்தைப் பண்படுத்தவும் வளப்படுத்தவும் நீண்ட காலக் கடன் தேவைப்படுகின்றது. இக் கடனைத் திருப்பிச் செலுத்த அதிக ஆண்டுகள் தவணை வேண்டும். வட்டியும் குறைவாக இருத்தல் வேண்டும். விவசாயிகள் தமது நிலத்திலிருந்து கிடைக்கும் சிறு உபரித் தொகையினைக் கொண்டுதான் இந்த நீண்ட காலக் கடன்களைச் சிறுகச் சிறுக அடைக்க முடியும். குறுகிய காலக் கடன் வழங்கும் சங்கங்கள் மத்திய வங்கி களிடமிருந்து பெறும் கடன் குறுகிய காலத்திற்கு மட்டுமே கிடைப்பதால், இந்தக் கடன் தொகையைக் கொண்டு நீண்ட காலக் கடன் வழங்குவது இயலாது போயிற்று. மற்றும், நீண்ட காலக் கடன்களை வழங்கத் தேவைப்படும் பணத்தைத் திரட்டக் கடனீட்டுப் பத்திரங்களை (Debentures) வெளியிட வேண்டியிருந்தது. கடனீட்டுப் பத்திர வெளியீடு அடை மானங்களின் அடிப்படையில் அமைந்தது. இந்தச் சடங்குகளை யெல்லாம் குறுகிய காலக்கடன் வழங்கு நிலையங்கள் ஏற்றுக் கொண்டு நடத்துவது இயலாத செயலென்று உணரப்பட்டது. இந்த நிலையில் நீண்ட காலக் கடன்களை வழங்க, தனியொரு அமைப்பு உருவாகியது. இவ் வமைப்பே பிரதம நில வள வங்கி என்று துவக்க காலத்தில் அறியப்பட்டது. குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் தமது நடவடிக்கைகளை இவ் வங்கிகள் செய்து வந்தன. பெரும்பாலும் தாலுக்கா எல்லையை அடிப்படையாகக் கொண்டு, இவ் வங்கிகள் இயங்கி வந்தன. தமக்குத் தேவைப் படும் நிதியினைத் திரட்ட ஒவ்வொரு பிரதம நில அடைமான வங்கியும் கடனீட்டுப் பத்திரத்தை வெளியிட ஆரம்பித்ததால் இப்பத்திரங்களை விற்பது கடினமாயிற்று. எனவே, பிரதம நில அடைமான வங்கிகள் அனைத்திற்கும் தேவைப்பட்ட தொகையினை ஒன்று சேர்த்துக் கணக்கிட்டு, அத்தொகையைத்

திரட்ட ஒரு கூட்டுறவு அமைப்பு முயற்சியினை மேற்கொண்டால் போதும் எனக் கருதப்பட்டது. இந் நிலையில்தான் மாநில அடைமானக் கூட்டுறவு வங்கிகள் உண்டாயின. மாநிலத்திற்கு ஒன்று என்ற முறையில் அமைக்கப்பெற்றுள்ள இவ் வங்கி சில இடங்களில் மத்தியக் கூட்டுறவு நில அடைமான வங்கி என்றும் அறியப்படுகின்றுது. பிரதமக் கூட்டுறவு நில அடைமான வங்கிகளின் சார்பாகக் கடன் பத்திரங்களை வெளியிட்டுப் பணம் திரட்டுவது இவ் வங்கியே.

கூட்டுறவு இயக்கத்தில் நீண்ட காலக் கடனளிக்கும் நிலையங்கள் இரண்டு அடுக்காக அமைந்துள்ளன. அடித்தளத்தில் பிரதமக் கூட்டுறவு நில அடைமான வங்கிகளும் உச்சியில் மாநிலக் கூட்டுறவு நில அடைமான வங்கிகளும் செயற்பட்டு வருகின்றன. கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், உரிமைப் பத்திரங்களைச் சரி பார்த்தல், நில மதிப்பை நிருணயித்தல், கடனைச் சரியான முறையில் பயன்படுத்துகின்றனரா எனக் கண்காணித்தல் போன்ற செய்திகளைப் பிரதம வங்கிகள் கவனித்துக்கொள்ளுகின்றன. மத்திய நில அடைமான வங்கிகள் பணச் சந்தையுடன் தொடர்புகொண்டு, தக்க நேரத்தில் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டுப் பணந் திரட்டல், பிரதம வங்கிகளுக்கு அறிவுரை வழங்கல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றன.

இனி, கூட்டுறவு வங்கிகளின் அமைப்பு, செயல்முறை, பணிகள் ஆகிய செய்திகளைக் கவனிப்போம்.

அடித்தளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு விவசாய வங்கிகள் நாம் முன்னரே கண்ட வண்ணம் பலப்பல பெயர்கள் கொண்டிருப்பினும், குறுகிய மத்திய காலக் கடன்களை விவசாயிகளுக்கு அளிப்பதையே தம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. இவ் வங்கிகளின் சிறப்புக் கூறுகளாவன:

(i) குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் அமைந்துள்ள கிராமங்களை மட்டும் தமது செயல் எல்லையாக நிருணயித்துக் கொள்ளுவது. இந்த ஓர் ஏற்பாட்டின் வழி உறுப்பினர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவர்களாக இருக்க வகை செய்யப்படுகிறது.

(ii) பங்குகளின் மதிப்பு மிகச் சிறிய தொகையாகவே அமைந்துள்ளது.

(iii) பிரதம நாணயச் சங்கங்கள் பெரும்பாலும் வரையருப் பொறுப்பு அடிப்படையிலே அமைந்துள்ளன. ஆனால் விவசாய வங்கிகள் என்று பெயர் பெறும் கூட்டுறவுகள் வரையறுத்த பொறுப்பு (Limited liability) என்ற அடிப்படையில் அமைந்துள்ளன.

(iv) உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்படுகிறது.

(v) முழு நேர ஊழியர் அல்லது ஊதியம் பெறும் செயலர் தவிர, பிற நிருவாகத்தினர்—நிருவாகக் குழிவினர் ஊதியம் பெருது செயலாற்றுகின்றனர்.

(vi) உற்பத்தி நோக்கங்களுக்கு மட்டுமே கடன் அளிக்கப் பெறுகின்றது.

(vii) கடன் ரொக்கமாகவும், உள்ளீடு (Inputs) களாகவும் வழங்கப்படுகின்றது.

(viii) இலாப நோக்கின்றிச் செயற்படும் இக் கூட்டுறவுகள் தமது உறுப்பினருக்கு அவர்களுடைய பங்குத்தொகை மீது குறிப்பிட்ட அளவுக்கு மிகாத விகிதத் தொகையினையே இலாப ஈவாக வழங்குகின்றன.

**கிராமச் சங்கம்**

கிராம அளவில் செயற்படும் இக் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்குச் சில வழி முறைகள் உண்டு. சங்கம் அமைக்க விரும்பும் கிராம வாசிகள் இதற்கான விண்ணப்பம் ஒன்றைத் தயாரித்து, அந்த ஊர் எந்த அலுவலரின் அதிகார எல்லைக்கு உட்பட்டுள்ளதோ, அந்த அலுவலருக்கு — கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் அல்லது உதவிப்பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். சட்டப்படி எல்லாச் சடங்குகளும் நிறைவேற்றப் பட்டுள்ளனவென்று பதிவு செய்யும் அலுவலர் கருதினால், சங்கத்தைப் பதிவு செய்து, ஒரு பதிவுச்சான்றிதழ் (Certificate of registration) வழங்குவார். பதிவுச் சான்றிதழ் பெற்றது முதல் சங்கம் சட்ட முறையாக ஓர் ஆள் என்று கருதப்படும்.

ஒரு கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கம் அல்லது வங்கி எத்தனை உறுப்பினர்களைக் கொண்டிருக்கலாம்; அதன் அதிகார எல்லை ஒரு கிராமத்திற்கு மட்டும் அமைவதா அல்லது சில கிராமங்களுக்கு ஒரு நாணயச் சங்கம் அமையலாமா போன்ற

கேள்விகள் பல காலமாக உரையாடப்பட்டு வருகின்றன. தன்னிறைவு பெற்ற சங்கம்—அதாவது தனக்கென முழுநேரச் செயலர், ஓர் அலுவலகம், தேவைப்பட்ட காப்பு நிதிகள், இலாப ஈவு கொடுக்கும் திறன் முதலிய இன்றியமையாத செலவுகளைச் சமாளிக்கப் போதுமான அளவு கடன் வழங்கும் சங்கம்—அமைக்கப் பட்டால் கூட்டுறவு அடித்தளம் வலிமை மிக்கதாக மிளிரும் என்று அனைவரும் ஒப்புகின்றனர்.

### செயற்பாடு

கிராமச் சங்கங்கள் எங்கிருந்து நிதி பெறுகின்றன வென்று காண்போம். உறுப்பினர்களின் செலுத்திய பங்கு முதல், வைப்புக்கள் (Deposits), கடன்கள், காப்பு நிதி ஆகிய இனங்களே கிராமச் சங்கங்களின் நடைமுறை முதலுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. அடுத்த பக்கம் உள்ள அட்டவணை பிரதம விவசாயக் கடன் சங்கங்களின் தற்போதைய நிலையைத் தெளிவாக விளக்குகிறது.

அடுத்துள்ள அட்டவணை வழி, பிரதம நாணயச் சங்கங்கள் தமக்குள்ள நடைமுறை முதலில் 6% அளவே வைப்புக்களாகப் பெறுவதும், பெரும்பான்மைத் தொகையினை மத்திய வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறுவதும் புலப்படும். எனவே, கிராமச் சங்கங்கள் கணிசமான அளவுக்கு வைப்புக்களைத் திரட்ட இயலா நிலையிலிருப்பது வெள்ளிடை மலை. எந்த அளவுக்குக் கிராமச் சங்கம் கடன் பெறலாம் என்பதை நிருணயிக்கப் பல முறைகள் கையாளப்படுகின்றன. உறுப்பினர்களின் மொத்தச் சொத்துக்களின் மதிப்பில் எட்டிலொரு பங்கு அல்லது ஆறிலொரு பங்கு கடனை வரையறுப் பொறுப்புள்ள சங்கங்கள் பெறலாம். உச்ச அளவு வாங்கக் கூடிய கடன் தொகை சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் நிருணயிக்கப்படுகிறது. வரையறுத்த பொறுப்புள்ள சங்கங்களின் கடன் வாங்கும் திறன் (Borrowing power) அவை பெற்றிருக்கும் சொந்த நிதியினைப் பொறுத்தது. சங்கத்தின் செலுத்திய முதலும் காப்பு நிதிகளும் சேர்ந்து சொந்த நிதி (Owned fund) என அழைக்கப்படுகிறது. இந்தச் சொந்த நிதியைப் போன்று எட்டு அல்லது பத்து மடங்குத் தொகையை வரையறுத்த சங்கங்கள் கடனைப் பெறலாம் என்று சங்க விதிகளில் குறிக்கப் பட்டிருக்கும். முன்னரே சங்கம் வாங்கி யுள்ள கடன்களில் குறிப்பிட்ட ஒருவிகித அளவுக்கு மேல் தவணைப்பாக்கி(Overdue) இருப்பின், மத்திய வங்கி அச்சங்கத்திற்குக் கடன்களை வழங்க மறுக்கக்கூடும்.

## பட்டியல் 8-1

**பிரதம விவசாயக் கடன் சங்கங்கள்**

ரூ. இலட்சத்தில்

| | 1960-61 | 1965-66 | 1968-69 | 1969-70 | 1970-71 |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| மொத்த எண்ணிக்கை | 212,129 | 191,904 | 167,760 | 162.700 | 160,780 |
| செயற்படுவன | 171,124 | 168,224 | 146,699 | 143,709 | 140,546 |
| செயலற்றிருப்பன | 41,005 | 23,680 | 21,061 | 18,991 | 20,234 |
| அரசு பங்கேற்றுள்ளன | 6,539 | 20,579 | 24.512 | 26,134 | 29,159 |
| செயற்படும் சங்கங்கள் அணைத்துள்ள கிராமங்களின் சத விகிதம் | 66 | 82 | 86 | 85 | 86 |
| செயற்படும் சங்கங்கள் அணைத்துள்ள கிராம மக்களின் சதவிகிதம் | 24 | 33 | 33 | 33 | 33 |
| உறுப்பினர் (ஆயிரத்தில்) | 1,70,41 | 2,61,35 | 2,91,73 | 2,97,66 | 3,09,63 |
| கடன்பெறும் உறுப்பினர் எண்ணிக்கை (ஆயிரத்தில்) | 89,70 | 1,08,71 | 1,10,89 | 1,17.36 | 1,12,33 |
| மொத்த உறுப்பினரில் கடன் பெறுவோர் % | 53 | 42 | 38 | 39 | 36 |
| செலுத்திய முதல் | 57.75 | 1,15,32 | 1,67,31 | 1,86,52 | 2,05,74 |
| இதில் அரசு வழங்கியது | 5,71 | 10,48 | 13,03 | 14,80 | 16,94 |
| காப்பு நிதிகள் | 17,80 | 33,59 | 47,85 | 52,33 | 59,57 |
| வைப்புக்கள் | 14,59 | 34,49 | 56,84 | 62,67 | 69.46 |
| நடைமுறை முதலில் சத விகிதம் | 4·9 | 5·6 | 6 | 6 | 6 |
| பிற கடன் இனங்கள் | 1,83,78 | 3,63,15 | 5,40,22 | 6,17,94 | 6,75,19 |
| நடைமுறை முதல் | 3,00,13 | 6,17,48 | 9,18,90 | 10,45,67 | 11,53,40 |
| **கடன் வழங்கல்** | | | | | |
| கடன் வழங்கும் சங்கங்களின் எண்ணிக்கை | 169,919 | 152,658 | 124,946 | 121,722 | 117,063 |
| வழங்கிய கடன் (மொத்தம்) | 2,02,75 | 3,41,98 | 5,03,87 | 5,40,11 | 5,77,88 |
| குறுகிய காலக் கடன் | 1,82,82 | 3,05,18 | 4,56,39 | 4,87,777 | 5,19,34 |
| மத்திய காலக் கடன் | 19,93 | 36,80 | 47 48 | 52,34 | 58,54 |

உறுப்பினராக வுள்ள தனி நபர் ஒவ்வொருவருக்கும் சங்கம் எவ்வளவு கடன் வழங்கலாம் என்பது கடன் கோருவதன் நோக்கம், விண்ணப்பதாரின் ஒழுக்கம், அவரது திருப்பிச் செலுத்தும் திறன் (Repaying capacity), அவர் கொடுக்கும் பிணை, அவர் சங்கத்தில் எடுத்துக் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை முதலியவற்றைப் பொறுத்துள்ளது. பல சங்கங்களில் ஒரு நபருக்குத் தரக்கூடிய உச்சக் கடன் தொகை இவ்வளவு என்றும் நிருணயிக்கப்பட்டிருக்கும்.

**கடனுக்கு ஈடு**

குறுகிய காலக் கடன்களுக்கு ஈடாக என்ன பிணையம் அளிக்கப்படுகிறது என்பதைக் காண்போம். குறிப்பிட்ட ஒரு தொகைக்கு மிகாத அளவு கடன் ஓர், இரு அல்லது மேற்பட்ட நபர்களின் பொறுப்புறுதி (Guarantee) யின் மீது தரப்படு கின்றது. இக் கடனை ஜாமின் கடன் (Surety loan) என்பர். குறிப்பிட்ட தொகைக்கு மேல் தரப்படும் கடனுக்கு நிலத்தை அடைமானமாகப் பெறுவது வழக்கம். இக் கடனை அடைமானக் கடன் (Mortgage loan) என்று கூறுவர். பயிர்க் கடன் (Crop loan) திட்டத்தின் கீழ், கடனுக்குப் பிணையாக அமைவது விளைவிக்கப்படும் பயிர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. சில மாநிலங்களில் விளைபொருள் (Produce), பொன் நகை (Gold jewel) முதலியவற்றை ஈடாக ஏற்றுக்கொண்டு, விவசாய வங்கிகள் (பெரிய கிராம நாணயச் சங்கங்கள்) குறுந்தவணைக் கடன் வழங்குவதுண்டு.

மத்திய காலக் கடன்களுக்குப் பிணையாக நிலம் அடைமானம் செய்யப்படுகிறது.

**கடன் வசூல்**

உறுப்பினர்களுக்குத் தந்த கடனைக் குறித்த காலத்தில் வசூலிக்கும் பொறுப்பு, சங்கத்தின் நிருவாகக் குழுவினரதாகும். இவர்களுக்கு வங்கியின் மேற்பார்வையாளர்களும், அரசு அலுவலர்களும் உறு துணையாக நின்று உதவி செய்வர். குறித்த தவணைப்படிக் கடனைத் திருப்பிச் செலுத்தாத உறுப் பினர்கள் மீது நடவடிக்கை யெடுத்துக் கடனை வசூலிக்க, சட்டம் வகை செய்துள்ளது. இதற்குச் சுருக்கமான வழி முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. வழக்கமான நீதி மன்ற நடவடிக்கைகள் காலந்தாழ்க்கக் கூடுமாதலால், பதிவாளர் அல்லது அவர் நியமித்துள்ள அலுவலர்கள் தவணைப்பாக்கித் தொகையை எளிய வழி முறைகளைக் கடைப்பிடித்து, வசூலிக்கச் சட்டம் வகை

செய்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை பதிவாளரின் பொறுப்பாக அமைந்துள்ளது.

கிராமத்திற்கொரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட வேண்டுமென்ற பழங்கால எண்ணம் நடைமுறைக்கு ஒவ்வாதது என்பது அனுபவத்தில் உணரப்பட்ட உண்மை. ஒன்றுக்கொன்று அருகிலுள்ள சில கிராமங்களை ஒன்று சேர்த்து, அவற்றில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாத உறுப்பினர்களும், குறிப்பிட்ட தொகைக்குக் குறையாத லேவாதேவியும் இருக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது எனத் தோன்றினால், அச் சூழ்நிலையில் அந்தக் கிராமங்களுக்கு ஒரு சங்கம் அமைக்கலாமென்று முடிவு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டின்படி உருவான சங்கங்களைத் தன்னிறைவு பெற்ற சங்கங்கள் (Viable societies) என்று குறிப்பிடலாயினர். இக் காரணத்தால்தான் பிரதம சங்கங்களின் எண்ணிக்கை 1960—61 முதல் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. முன்னர் கண்ட அட்டவணை இந் நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது.

**கிராமக் கூட்டுறவு வங்கிகள் (Rural Co-operative Banks)**

கிராமப் புறங்களில் சேமிப்புக்களைத் திரட்டவும், கிராம மக்களுக்கு வங்கிய வசதிகளைச் செய்து தரவும் கிராம வங்கிகள் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட வேண்டும் என்று பல கூட்டுறவாளர்கள் கருதினர். இம் முயற்சியின் காரணமாக உருவாகிய நிலையங்களே கூட்டுறவுக் கிராம வங்கிகளாகும். அக் காலத்திய சென்னை மாகாணத்தில் இவை அமைக்கப் பெற்றன.

கிராம வங்கிகள் விவசாயத் தேவைகளுக்கான கடன்களையும் பிற உற்பத்தி நோக்கக் கடன்களையும் வழங்கலாயின. பொறுப்புறுதியின் பேரிலும், நில அடைமானத்தின் பேரிலும் கடன்கள் தரப்பட்டன. பம்பு செட் வாங்க, கிணறு தோண்ட, கால்நடை வாங்க, விவசாயத் தளவாடங்கள் வாங்க, இன்னோரன்ன உற்பத்தி நோக்கங்களுக்கு அசையாச் சொத்தின் அடைமானத்தின் பேரில் மத்திய காலக் கடன்களையும் இவ் வங்கிகள் வழங்கின. விளைபொருள் அடைமானத்தின் பேரிலும் கடன் தரப்பட்டது. வங்கிகள் பொதுவாக அளிக்கும் பணஞ் செலுத்துகை வசதிகள், பணவிடை வசூலித்தல், காசோலை, மாற்றுச்சீட்டு வசூலித்தல் போன்ற பணிகளையும் கிராம வங்கிகள் செய்து வந்தன; இரசாயன உரம், கலப்பு உரம், பூச்சிக் கொல்லி மருந்து, உயர் ரக விதை போன்ற

உள்ளீடுகளையும் வழங்கி வந்தன. இவ் வங்கிகள். சுருங்கக் கூறின் சேவைக் கூட்டுறவுகள் (Service co-operatives) போன்றே கிராம வங்கிகள் இயங்கி வந்தன.

**கூட்டுறவுக் கூல வங்கிகள் (Co-operation Grain Banks)**

ஆந்திரப் பிரதேசம், மகராட்டிரம், கர்நாடகம், ஓரிசா மாநிலங்களில் காணப்படும் கூல வங்கிகள் ஆதி வாசிகளின் (பழங்குடி மக்களின்) நலங்கருதி அமைக்கப்பட்டன. பன்னெடுங்காலமாக இம்மக்கள் வட்டித்தொழில் செய்து வந்த பெருநிலக் கிழார்களின் சுரண்டலுக்கு ஆளாயிருந்தனர். மழைக் காலங்களில் தமது அன்றாட உணவுத் தேவைகளுக்கு இவர்களிடமிருந்து விளைபொருள்களைக் கடனாகப் பெறுவது வழக்கம். இவ் விளைபொருள்களின் விலையைப் பெருமளவு உயர்த்திக் கணக்கிட்டு, அதன்மீது வட்டியும் சேர்த்து, திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை இவ்வளவு என்று நிருணயித்துப் பின்னர் இத்தொகைக்கு ஈடாக விளைபொருள் கோருவர். இந்த நடவடிக்கைகளால் பழங்குடி மக்கள் செலுத்தும் வட்டி 100%ஆக உயர்ந்து செல்வதுண்டு. விளைபொருளைக் கடனாகக் கொடுத்து, விளைபொருளையே திருப்பித் தருமாறு கோரப்படும் நடவடிக்கைகளில் ஒரு பங்கு கடனுக்கு, ஒன்றரை அல்லது இரண்டு பங்கு விளைபொருளைத் திருப்பித்தருமாறு கோருவதுண்டு. அறுவடை நேரத்தில் மிகக் குறைந்த விலைக்குத் தானியங்களை விற்று, அதே தானியங்களைப் பின்னர் மிக உயர்ந்த விலைக்கு வாங்கும் கொடுமையான நிலைக்கு இம்மக்கள் ஆளாயினர். இந்தக் கொடுமையிலிருந்து பழங்குடி மக்களைக் காப்பாற்ற, கூல வங்கிகள் பீகார், ஓரிசா மாநிலங்களில் துவங்கப் பெற்றன.

கூல வங்கியில் உறுப்பினர்கள் அறுவடை முடிந்ததும் தம்மிடம் உபரியாயுள்ள தானியங்களைச் சேமித்து வைப்பார். தமக்குத் தேவைப்படுங் காலத்தில் இச் சேமிப்பிலிருந்து தானியங்களை எடுத்துக்கொள்ளுவர். தம் சார்பாகத் தானியத்தை நல்ல விலைக்கு விற்குமாறு கூல வங்கியை உறுப்பினர்கள் கோருவதுமுண்டு. தேவைப்படும் உறுப்பினர்கள் கூல வங்கியிலிருந்து தானியம் கடனாகப் பெறலாம். அடுத்த அறுவடையின் போது இக் கடனைத் தானியமாகவே திருப்பித் தரவேண்டும். வட்டி போன்ற இனங்களுக்குக் கடன் பெற்ற அளவுடன் கூடுதலாக 25% தானியமும் தரப்படுதல் உண்டு.

தரமான நல்ல விதைகளையும் கூல வங்கிகள் தம் உறுப்பினருக்கு விதை விதைக்குங் காலத்தில் தருகின்றன. சில கூல

வங்கிகள் பிற விவசாய உள்ளீடுகளையும் தம் உறுப்பினருக்கு வழங்கி வருகின்றன. 1971 ஜூன் இறுதியில் 1,316 கூல வங்கிகள் செயற்பட்டு வந்தன. இவை 7,858 கிராமங்களுக்குப் பணி செய்து வந்தன. அவ் வங்கிகளில் 2,75,307 உறுப்பினர்களிருந்தனர். இவ்வங்கிகள் அளித்த கடன்களில் ரூ 1,66,46,000 நிலுவையாக நின்றது. 1970—71-ல் மட்டும் ரூ. 73,83,000 கடன் வழங்கப்பட்டது. 1971 ஜூன் இறுதியில் 3,741 கூல வங்கிகள் செயலற்று கிடந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது. கூல வங்கிகள் தானிய வியாபாரத்துடன் ரொக்கம் கொடுத்து வாங்கலை மேற்கொள்வது ஆபத்தானதொரு நடவடிக்கையெனக் கருதப்பட்டது. தானிய நடவடிக்கைகளில் ஏற்படும் நட்டம் ரொக்கப் பிரிவினையும் பாதிக்கும். மற்றும் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைக்கத் தக்க ஏற்பாடுகளும் மிகக் குறைவாக இருந்தன. வங்கித் தொழிலையும் வியாபாரத்தையும் ஒரு நிறுவனம் மேற்கொள்வது இரண்டிற்குமே நல்லதல்ல.

**மத்தியக் கூட்டுறவு வங்கிகள்** (Central Co-opeartive Banks)

கூட்டுறவு வங்கிகளில் மிகவும் சிறப்பான இடம் பெற்றுள்ளவை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் என்று கூறினால் அது மிகையாகாது. பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள் தேவைப்படுமளவுக்கு முதல், வைப்புக்கள் திரட்ட இயலாது தவித்த நேரத்தில் தாம் கட்டுக்கோப்பான எல்லையை அடிப்படையாகக் கொண்டு, வங்கிய ஒன்றியங்களாக (Banking unions) இணைந்து, மத்திய வங்கிகளாக உருவாயின. இந்த அடிப்படையில் மாவட்டம் (District) ஒவ்வொன்றிற்கும் ஒரு அல்லது அதற்கு மேற்பட்ட மத்திய வங்கிகள் அமையப்பெற்றன. மாவட்டத்திற்கு ஒரு மத்திய வங்கி செயற்பட்டு வந்தால் போதும். அந்த அளவில்தான் வலுவான மத்திய வங்கிகள் உருவாகும் நல்வாய்ப்பு உண்டு என்று பரவலாகக் கருதப்பட்டு வருகிறது.

மத்திய வங்கிகளின் முக்கிய நோக்கங்களாவன: தன் எல்லையிலுள்ள பிரதம சங்கங்களுக்குத் தேவை நேரத்தில், கடன் வசதியளித்தல், அவற்றிலுள்ள உபரித்தொகையினைப் பெற்றுக்கொள்ளல், வைப்புக்களைத் திரட்டல், பிரதம சங்கங்களின் காப்பு நிதியைத் தாம் பெற்று, நல்ல முதலீடுகளில் போட்டு வைத்தல், கிராமப் புறங்களில் வங்கிய வசதிகளை வளர்த்தல், உறுப்புச் சங்கங்களின் நடப்பைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்பாடு செய்தல், மாவட்டத்தில்

கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பனவாகும்.

மத்திய வங்கிகள் பெரும்பாலும் பிரதம சங்கங்களின் கூட்டிணைப்பாகவே செயற்பட்டு வருகின்றன எனினும், பல வங்கிகளில் தனி நபர் (Individual)களும் பங்குதாரர்களாக இருந்து வருகின்றனர். இவற்றை உண்மையாகவே கூட்டுறவு சங்கங்களின் கூட்டிணைப்பாக மட்டும் திகழச் செய்யப் படிப்படியாக, தனி நபர் பங்குகளை இவ் வங்கிகள் மீட்டு வருகின்றன. மத்திய வங்கிகளில் தனி நபர்களை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் கைவிடப்பட்டு விட்டது.

தன்னிறைவு பெற்று ஒரு மத்திய வங்கி திகழ, அது போதுமான இலாபம் ஈட்டக்கூடிய திறன் பெற்று விளங்க வேண்டும்; காப்பு நிதிக்குப் போதுமான தொகை வழங்கும் நிலையிலிருக்க வேண்டும்; நியாயமான இலாப ஈவு வழங்கும் வாய்ப்புப் பெற்றிருக்க வேண்டும்.

தமக்குத் தேவைப்படும் நடைமுறை முதலை மத்திய வங்கிகள் எங்கிருந்து பெறுகின்றன வென்பதைக் காண்போம். பங்குகள் மீது செலுத்தப்படும் பங்கு முதலும், வைப்புக்களும், காப்பு நிதியும், கடன்களும் மத்திய வங்கிகளுக்கு நடைமுறை முதலாக அமைகின்றன. மத்திய வங்கிகளின் பங்கு முதல் திடமாக இருக்கும் பொருட்டு, மாநில அரசு கணிசமானதொரு தொகையைப் பங்கு முதலாக அளிப்பது குறிப்பிடத் தக்கது. மத்திய வங்கியின் எல்லைக்குள் செயற்படும் பிரதமச் சங்கங்கள் அவ் வங்கியிடமிருந்து கடன் வாங்கக் கூடிய அளவு அச் சங்கங்கள் மத்திய வங்கியில் எத்தனை பங்குகள் எடுத்துள்ளன என்பதைப் பொறுத்துள்ளது. அதாவது, பிரதம சங்கங்கள் பெறக்கூடிய உச்சக் கடனளவு அச் சங்கங்களின் உறுப்பினர்களின் சொத்துக்களில் ஒரு பகுதியாக அல்லது அவற்றின் சொந்த நிதியைப் போன்று பல மடங்காக இருப்பது ஒருபுறமிருக்க, மற்றொரு புறம் அவை மத்திய வங்கியில் எடுத்துக் கொள்ளும் பங்குகளின் மடங்குகளாகவும் அமைகின்றது.

மத்திய வங்கிகளின் நடைமுறை முதலில் சொந்த நிதியைவிட வெளியிலிருந்து திரட்டப்படும் கடன் பகுதியே மிகுதியாகும். மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்தும், அரசாங்கத்திடமிருந்தும் மத்திய வங்கிகள் கடன் பெறுகின்றன. சில நேரங்களில் இந்திய ஸ்டேட் வங்கியிடமிருந்தும், பிற வணிக வங்கிகளிடமிருந்தும் கூட இவ் வங்கிகள் கடன் பெறுவதுண்டு. இந்திய

ரிசர்வு வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மூலம், மத்திய வங்கிகளுக்குக் குறுகிய கால மத்திய காலக் கடன்களைக் குறைந்த வட்டிக்கு அளிக்கின்றது. இந்தக் கடன் தொகையை மத்திய வங்கிகள் பிரதமக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கடனாக வழங்குகின்றன. மத்திய வங்கிகள் மாநில வங்கியிடமிருந்து கடனாகப் பெறக்கூடிய தொகையின் அளவு மத்திய வங்கியின் சொந்த நிதியைப் போன்று இத்தனை மடங்கு என்று நிருணயிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட சில நோக்கங்களுக்கு அரசாங்கம் மத்திய வங்கிகள் மூலம் அல்லது மத்திய வங்கிகளுக்குக் கடனளிப்பதுண்டு. வங்கியின் நடைமுறை முதலில் இது மிகச் சிறியதொரு விகிதமாகவே இருந்து வருகிறது.

பிரதம விவசாயக் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமல்லாமல், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முதலிய நிலையங்களுக்கும் மத்திய வங்கிகள் கடன் வழங்குகின்றன. அடுத்துக் காணும் அட்டவணை மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் முக்கிய நடவடிக்கைகளைக் காட்டுகிறது.

**மாநிலக் கூட்டுறவு வங்கிகள் (State Co-operative Banks)**

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் உச்சி வங்கிகள் (Apex Banks) என்றும் அறியப்பட்டு வருகின்றன. ஒரு மாநிலத்தின் கூட்டுறவுத்துறை வளர்ச்சி, அங்குள்ள உச்சி வங்கியின் ஆற்றலையும் முயற்சியினையும் பொறுத்துள்ளது என்று கூறுவது சாலப் பொருந்தும். உச்சி வங்கி நேரடியாக மத்திய வங்கிகளோடு தொடர்பு கொண்டிருந்தாலும் மொத்தக் கூட்டுறவுக் கடன் நடவடிக்கைகளையும் கண்காணித்து, கட்டுப்படுத்தி, எல்லாக் கடன் சார்புற்ற கூட்டுறவு நிலையங்களுக்கும் உற்ற நண்பனாய், வழிகாட்டியாய், நல்லாசிரியனாய்த் திகழ்ந்து வருகின்றது.

இந்திய ரிசர்வு வங்கிக்கும் கூட்டுறவுத் துறைக்கும் இடையே ஒரு பிணைக்கும் சங்கிலியாக மாநில வங்கி செயற்பட்டு வருகின்றது. கூட்டுறவு வங்கிகளுக்காக, கூட்டுறவு வங்கிகளால், கூட்டுறவு வங்கிகளின் வங்கியாக ஏற்படுத்தப்பட்டது உச்சி வங்கியான மாநில வங்கி. நகர்ப்புறங்களில் வைப்புக்களைத் திரட்டிக் கூட்டுறவு இயக்கத்திற்கும் பணச் சந்தைக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தவும் மாநில வங்கி

## பட்டியல் 8—2

**கூட்டுறவு மத்திய வங்கிகள்**

ரூ. இலட்சத்தில்

| | 1960-61 (1) | 1965-66 (2) | 1968-69 (3) | 1969-70 (4) | 1970-71 (5) |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 390* | 346 | 341 | 340 | 341 |
| அலுவலகங்களின் எண்ணிக்கை | 1,445 | 2,475 | 3,124 | 3,438 | 3,775 |
| உறுப்பினர் எண்ணிக்கை, கூட்டுறவு நிலையங்கள் | 235,166 | 258,166 | 237,426 | 234.902 | 235,200 |
| தனி நபர்களும் பிறரும் | 152,530 | 103,990 | 102,839 | 76.603 | 75,292 |
| செலுத்திய முதல் | 38,92 | 76,32 | 1,15,24 | 1,27,92 | 1,41,13 |
| இதில் அரசு வழங்கியது | 10,31 | 19.27 | 29,88 | 33,19 | 37,50 |
| காப்பு நிதி (மொத்தம்) | 11,94 | 25,62 | 39,63 | 46.23 | 57,92 |
| வைப்புகள் (மொத்தம்) | 1,12,02 | 2,36,59 | 3,50,84 | 3,81,71 | 4 38,55 |
| இதில் கூட்டுறவுச் சங்கங்கள் | 45,30 | 1,05,08 | 1,47,50 | 1,53,39 | 1 73 64 |
| தனி நபர்கள், பிறர் | 66,71 | 1,31,51 | 2.03.34 | 2.28,32 | 2,64,91 |
| வகை: நடப்பு வைப்பு | 31,88 | 62.63 | 84.31 | 81,82 | 94,60 |
| சேமிப்பு | 32,00 | 77,17 | 1,18,16 | 1,31,03 | 1,47,99 |
| தவணை | 37,38 | 75,31 | 1,21,90 | 1.33,11 | 1,56 33 |
| காப்பு நிதி | | 11,12 | 13,86 | 18,39 | 20,73 |
| பிற வகை | 10,75 | 10,36 | 12,59 | 17,36 | 18,90 |
| பிற இடங்களில் பெற்ற கடன் (மொத்தம்) | 1,41,17 | 2,44,99 | 3,24,75 | 3,71,94 | 3,93 14 |
| இதில் மாநிலக் கூட்டுறவு வங்கி அளித்தது | 1,34,89 | 2,29,67 | 2,91,22 | 3,31,09 | 3,53.35 |
| அரசு அளித்தது | 4,84 | 14,61 | 9,42 | 7,64 | 9,43 |
| பிற வகை | 1,43 | 71 | 24,11 | 33.21 | 30,36 |
| நடைமுறை முதல் | 3,18,32 | 6,15,71 | 8,81,24 | 9,79,72 | 10,81,41 |
| வழங்கிய கடன்கள், மொத்தம் வழங்கியது | 2,90,10 | 5,44,96 | 8,23,08 | 8,54,07 | 8,66,39 |
| இதில் குறுகிய காலம் | 2,69,92 | 5,04,67 | 7,70,18 | 7,95.68 | 8,02,08 |
| மத்திய காலம் | 20,19 | 40,29 | 52,90 | 59.29 | 64 31 |
| நிலுவை நிற்பது மொத்தம் | 2,20,03 | 4,37,72 | 6,41,04 | 7.39,79 | 8,13,40 |
| குறுகிய காலம் | | 3,64,34 | 5,33,49 | 6,14,14 | 6,67,58 |
| மத்திய காலம் | | 73,39 | 1,07,55 | 1,25,65 | 1,45,82 |
| தவணை கடந்தது | 27,43 | 87,05 | 1,72,97 | 2,15.28 | 2,74,19 |
| நிலுவைக்கும் தவணை கடந்த கடனுக்கும் % | 12·5 | 19·9 | 26·9 | 29·1 | 33·7 |

* பத்துத் தொழிற் கூட்டுறவு வங்கிகளும் சேர்ந்து

பயன்படுகின்றது. மாநில அளவில் கூட்டுறவுத் துறையில் தேவைப்படும் கடன் அளவு என்ன என்று ஆராய்ந்தறிந்து, மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒழுங்காற்ற உச்சி வங்கி பெரிதும் உதவுகின்றது. மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி, நடவடிக்கைகள் பற்றிய அட்டவணையை அடுத்த பக்கத்தில் காண்போம்.

## அமைப்பு

உச்சி வங்கி மத்திய வங்கிகளின் வங்கியாக அமைக்கப்பட வேண்டும். அது பிரதம சங்கங்களுடனும், தனி நபர்களுடனும் நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் கூடாது என்ற கருத்துப் பல காலமாக நிலவி வருகின்றது. எனினும் துவக்க காலத்தில் உச்சி வங்கிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் இன்றும் தனி நபர் உறுப்பினர் என்ற நிலையில் இருந்து வருகின்றனர். படிப்படியாக இவர்களுடைய பங்குகளைத் திரும்ப எடுத்துக்கொண்டு, சில காலம் கழித்து, தனி நபர் உறுப்பினர் என்று எவரும் இல்லாத நிலை உருவாக்கப்பட்டு வருகின்றது. உச்சி வங்கியின் நிருவாகத்தில் பெரும்பான்மை இடம் மத்திய வங்கிகட்கும், ஓரளவுக்குக் கூட்டுறவு, கூட்டிணைப்புக்கள் (Federations), மாநில நில வள வங்கி, அரசு, நலிந்த நிலை வகுப்பினர் (Waker sections) போன்ற நிலையங்களுக்கும் மக்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

## கடன் வழங்கல்

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் பங்குகளை வெளியிடுவதன் வழியும், வைப்புகளைத் திரட்டுவதன்மூலமும் அரசு, ரிசர்வு வங்கி ஆகியோரிடமிருந்து கடன்களைப் பெற்றும் தமக்குத் தேவைப்படும் நடைமுறை முதலை எழுப்புகின்றனர். விவசாயத் தேவைகளுக்காக மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி வங்கி விகிதத்திற்கு 2% குறைவான விகித வட்டிக்குத் குறுகிய கால கடன்களை அளித்து உதவுகிறது. ஓராண்டு காலத்திற்கு மிகாத இக் கடன்கள் பருவகால வேளாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பயிர் விற்பனை யேற்பாடுகளை மேற்கொள்ளவும் தரப்படுகின்றன. ரிசர்வு வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தரக்கூடிய குறுகிய காலக் கடன் அளவு அவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட கடன்வரம்பினைப் பொறுத்திருக்கும். மத்திய வங்கிகளின் நிதி நிலை, அவை கடன் வழங்க வகுத்துள்ள திட்டம், அவற்றின் செயல்முறை முதலிய பல செய்திகளைச் சார்ந்தே ரிசர்வு வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கியின் கடன் வரம்பை நிருணயிக்கும்.

## பட்டியல் 8 - 3

### மாநில கூட்டுறவு வங்கிகள்

ரூ. இலட்சத்தில்

| | 1960-61 | 1965-66 | 1968-69 | 1969-70 | 1970-71 |
|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 |
| எண்ணிக்கை | 21 | 22 | 25 | 25 | 25 |
| உறுப்பினர் கூட்டுறவு நிலையங்கள் | 22,515 | 12,918 | 12,711 | 11,905 | 11.756 |
| தனி நபர், பிறர் | 7,069 | 8,092 | 8,558 | 6.955 | 6.839 |
| செலுத்திய முதல் | 18,24 | 28,83 | 37,68 | 37,60 | 42,63 |
| இதில் அரசு வழங்கியது | 6,46 | 9,86 | 11,60 | 11.77 | 13,37 |
| காப்பு நிதி (மொத்தம்) | 5,76 | 16,13 | 37,78 | 43.22 | 50,05 |
| வைப்புக்கள் (மொத்தம்) | 72,33 | 1,46,51 | 2,15,63 | 2,34,31 | 2,78,70 |
| இதில் கூட்டுறவு (நிலையங்கள்) | 44,36 | 1,00,51 | 1,44,64 | 1,65.33 | 1,96 04 |
| தனி நபர், பிறர் | 27,97 | 46,26 | 70,99 | 68,98 | 82,66 |
| வகை:- நடப்பு வைப்பு | 25,62 | 58,33 | 72,20 | 56,46 | 61,92 |
| சேமிப்பு | 6,61 | 12,10 | 18,54 | 21,55 | 25.44 |
| தவணை | 24,73 | 69,56 | 1,18,88 | 1,42 35 | 1.76 48 |
| காப்பு நிதி | .... | 3,59 | 4,50 | 7,60 | 10,76 |
| பிற | 15,38 | 2,94 | 1.55 | 6 35 | 4.10 |
| பிற வழிகளில் திரட்டிய கடன் (மொத்தம்) | 1,25,32 | 1,98,52 | 2,75,44 | 3,02,32 | 2,94.45 |
| இதில் ரிசர்வு வங்கி | 1,14,89 | 1,74,47 | 2,24.90 | 2,43,02 | 2,41 91 |
| அரசு | 6,00 | 20,30 | 17,22 | 16,32 | 19,66 |
| பிற | 4,42 | 3,74 | 33,32 | 42.91 | 32 88 |
| நடைமுறை முதல் | 2,27,06 | 4,10,54 | 5,87,80 | 6,38,24 | 6,85,21 |
| அளித்த கடன்கள் வழங்கியுள்ள (மொத்தம்) | 1,95,07 | 4,07.89 | 6,63,60 | 7,22 86 | 7,47 59 |
| குறுகிய காலம் | 1,83,82 | 3,81,36 | 6,27,57 | 6,88,88 | 7,01,29 |
| மத்திய காலம் | 11,25 | 26,52 | 36,03 | 33.98 | 46,30 |
| நிலுவை (மொத்தம்) | 1,66,69 | 3,07.63 | 4,58,95 | 5 09,78 | 5 34,27 |
| குறுகிய காலம் | .... | 2,50,98 | 3,87,86 | 4,31.37 | 4,38,66 |
| மத்திய காலம் | ... | 56,95 | 71,09 | 78,39 | 95,61 |
| தவணை கடந்தது | 6,97 | 9 34 | 23,11 | 27,55 | 35,86 |

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வு வங்கியிடமிருந்து மத்திய காலக் கடன்களையும் பெறுகின்றன. இக் கடன்கள் மீது வங்கி விகிதத்திற்கு $1\frac{1}{2}\%$ குறைவான வட்டி விகிதம் வசூலிக்கப் படுகிறது. மாநில வங்கிகளின் சொந்த நிதியளவுக்கு ஈடான தொகையே பெரும்பாலும் மத்திய காலக் கடன் தொகையின் உச்ச வரம்பாக நிருணயிக்கப்படுகிறது.

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் தம்முடன் இணைக்கப்பெற்ற மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் பிற கடன் சார்பற்ற உச்சிக் கூட்டுறவு நிலையங்களுக்கும் கடன் வழங்குகின்றன. தவணை வைப்பு ரசீதின் ஈட்டின் பேரில் வைப்பாளர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கோரும் கடனளவில் 5% அளவுக்கேனும் மத்திய வங்கி மாநில வங்கியின் பங்குகளை வைத்திருக்க வேண்டும், நடைமுறையிலுள்ள விதிகளின்படி மத்திய வங்கிக் கடன் கோரும் விண்ணப்பத்தை முறைப்படி தயாரித்து, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருடைய பரிந்துரை பெற்று, உரிய ஆவணங்களை எழுதித் தந்து, கடன் பெற்றுக் கொள்ள வேண்டும். குறுகிய காலக் கடன் 12 திங்கள் காலத்திற்கும், மத்திய காலக் கடன் 3 ஆண்டு காலத்திற்கும் தரப்படுகின்றது.

**உற்பத்தி நோக்குக் கடன்**

கூட்டுறவுத் துறையில் வழங்கப்படும் கடன்கள் உற்பத்திப் பெருக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை அண்மைக் காலத்தில் பெரிதும் வற்புறுத்தப்பட்டு வருகின்றது. ஏனெனில், உற்பத்திப் பெருக்கத்தை எதிர் நோக்கி ரிசர்வு வங்கி கூடுதல் செலாவணியை வெளியிட்டு, அதனைக் கூட்டுறவு நிலையங்களுக்குக் கடனாக—குறைந்த வட்டிக்குக் கடனாக—அளித்து வருகின்றது. இக் கடன் தொகை உற்பத்திப் பெருக்கப் பணிகளில் ஈடுபடுத்தப்படாது, வேறு வகையில் பயன்படுத்தப் பட்டால், நாட்டில் பணவீக்கம் உயர்ந்து செல்லுமேயன்றி உற்பத்தி பெருகாது. இதனால் பொருளாதார நிலையில் சீர்குலைவு ஏற்படும். எனவே, உச்சி வங்கி, தான் அளிக்கும் கடன்கள் குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனவா என்று கண்காணிப்பதில் தீவிர மாக இருப்பது இயற்கையே.

ரொக்கக் கடன், மேல்வரைப்பற்று ஆகிய உருவங் களில் கடன்கள் வழங்கப்படுகின்றன. விளைபொருள், சரக்கு, அரசு கடனீட்டுப் பத்திரம், அடைமானக் கடன்பத்திரம் போன்ற பிணைகள் மீது கடனளிக்கப்படுகின்றது. இக்

கடன்கள் மீது வசூலிக்கும் வட்டி விகிதம் கூட்டுறவுப் பதிவாளர், இந்திய ரிசர்வு வங்கி ஆகியோரைக் கலந்து பேசி நிருணயிக்கப்படுகிறது. பல மாநிலங்களில் தொழிற் கூட்டுறவு களுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கிகள் கடனளித்து வருகின்றன. சில மாநிலங்களில் தொழிற் கூட்டுறவுகளுக்குக் கடன் வழங்கத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுகாறும் கண்ட குறுகிய கால. மத்திய காலக் கடன்களை வழங்கும் மூன்றடுக்குக் கூட்டுறவு அமைப்பின்-அதாவது பிரதமச் சங்கங்கள், மத்திய வங்கிகள் உச்சி வங்கிகள் என்ற அமைப்பின் செயலாற்றலைச் சற்றுக் காண்போம்.

1971 ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் இருந்த நிலையை நோக்கின் 1,60,780 பிரதம சங்கங்கள் இருந்தன. இதற்கு முன் ஆண்டு 1,62,700 சங்கங்கள் இருந்தன. தன்னிறைவு பெற்ற சங்கங்களை யமைக்கும் முயற்சி இன்னமும் நடைபெற்று வருவதால் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்து வந்துள்ளது. இவற்றில் 1,40,546 சங்கங்கள் இயங்கி வருகின்றன. செயலற்ற நிலையில் 20,234 சங்கங்கள் இருந்தன. உறுப்பினர்களின் எண்ணிக்கை 3·10 கோடியாக இருந்தது என்றாலும், கடன் வசதி பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 1·12 கோடியாக இருந்தது. அதாவது உறுப்பினர்களில் 36% மட்டுமே கடன் வாங்கியிருந்தனர். 1970-71 ஆம் ஆண்டில் இச் சங்கங்கள் ரூ. 577·9 கோடி கடன் வழங்கியிருந்தன.

நாட்டில் செயற்பட்டு வந்த 314 கூட்டுறவு மத்திய வங்கிகள் 1971 ஜூன் இறுதிக்கு முடிந்த ஆண்டில் மொத்தம் ரூ. 866·4 கோடி கடன் அளித்திருந்தன. இவ் வங்கிகளுடைய மொத்த நடைமுறை முதல் ரூ. 1,081·4 கோடியில் சொந்த நிதி ரூ. 199 கோடி. வைப்புக்கள் ரூ. 438·6 கோடி, பிற இடங்களில் பெற்ற நிதி, பொறுப்புக்கள் ரூ. 443 8 கோடியாக இருந்தது.

மாநிலக் கூட்டுறவு வங்கிகள் 25, 1970-71 ஆண்டில் செயற் பட்டு வந்தன. இவ் வங்கிகள் அளித்த கடனளவு ரூ.747·59 கோடியாக இருந்தது. நடைமுறை முதல் ரூ. 685·2 கோடியாக இருந்தது. இதில் 40·7% வைப்புக்களாக இருந்தது. இவ் வங்கிகள் வாங்கியிருந்த மொத்தக் கடன் ரூ. 294·4 கோடியில் ரிசர்வு வங்கியிடமிருந்து பெற்றிருந்த தொகை ரூ. 241·9 கோடியாக இருந்தது.

### கூட்டுறவு நில வள வங்கிகள்

விவசாய வளர்ச்சிக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை அளிக்கும் பொருட்டு நிலவள வங்கிகள் துவங்கப் பட்டன. அண்மைக் காலம் வரை இவை நில அடைமான வங்கிகள் என அறியப்பட்டு வந்தன. விவசாய நிலத்தை அடைமானமாகப் பெற்றுக் கொண்டு, இவை கடன்களை வழங்கி வந்ததால், நில அடைமான வங்கிகள் எனப் பெயர் பெற் றிருந்தன. முற்காலத்தில், பழங் கடன்களை அடைக்கவே இவ் வங்கிகள் கடன் அளித்து வந்தன. எந்த நோக்கத்திற்குக் கடன்தொகை பயன்படுத்தப் படுகிறது என்பதைப்பற்றி அவ்வளவு அக்கறை காட்டவில்லை. ஆனல் அண்மையில் இந் நிலை மாறிவிட்டது. உற்பத்தி நோக்கமுள்ள ஆக்கப் பணிகளுக்கு மட்டுமே கடன் வழங்கப்படுவது இன்றைய நிலை. வங்கி அளிக்கும் கடனைக் கொண்டு நில வளத்தைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்தும் வகையில் வங்கியின் பெயரும் மாற்றப்பெற்றது. அன்றைய நாளில் கடனுகக் கொடுத்த பணத்திற்குத் தக்க ஈடாக நில அடைமானம் அமைந்ததைக் குறிக்கும் வகையில் வங்கியின் பெயர் நில அடைமான வங்கியென அமைந்தது.

### அமைப்பு

கூட்டுறவு நில வள வங்கிகளின் அமைப்பு இரண்டு அடுக்கு (Two-tier) முறையிலிருப்பதை முன்னரே கண்டோம். உச் சத்தில் மாநில அளவில் செயற்படும் மாநில நில வள வங்கி களும், அடித்தளத்தில் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்ட அமைப்புள்ள வங்கிகளும் காணப்படுகின்றன. பல மாநிலங் களில் தாலுக்கா அளவில் செயற்படும் பிரதம நில வள வங்கி களின் கூட்டிணைப்பாக மாநில நிலவள வங்கி அமைந்துள்ளது. பிரதம வங்கிகளுக்கும் மாநில வங்கிகளுக்கும் இடையே வேறு நிலையம் இருப்பதில்லை. சில மாநிலங்களில் நில வள வங்கிகள் தனித்த அமைப்பு (Unitary structure) முறையில் இயங்கி வரு கின்றன. இம் முறையில் மத்திய அமைப்பு முதலில் உருவா கின்றது. பின்னர் இது கிளைகளைப் படிப்படியாகத் திறந்து, அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வருகின்றது. அண்மைக் காலத்தில் நிலவி வரும் கருத்து நில வள வங்கி களுக்குக் கூட்டிணைப்பு (Federal) அமைப்பு மிகவும் உகந்தது என்பதாகும்.

### செயற்பாடு

பிரதம நில வள வங்கிகள் தமக்கு வேண்டிய நிதியை எங்ஙனம் பெறுகின்றன என்று நோக்குவோம். பங்கு மூல

தனம், சேர்ப்புக் கட்டணம் (Admission fees) போன்ற வழக்கமான வழிகளில் பெறும் நிதி மிகச் சிறியதொரு அளவிலும், மாநில நில வள வங்கியிடமிருந்து பெறும் நிதியே மிகப் பெரும் அளவிலும் பிரதம நில வள வங்கிகளுக்குத் தேவைப்படும் நடைமுறை முதலை நல்குகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் நில வள வங்கிகள் வளர்ந்து வந்துள்ள வகையினைப் பற்றிய புள்ளி விவரத்தினைக் கீழ்க் காணும் அட்டவணை தருகின்றது.

## பட்டியல் 8—2

### பிரதம நில வள வங்கிகள்

ரூ. இலட்சக் கணக்கில்

| | 1960-61 | 1965-66 | 1968-69 | 1969-70 | 1970-71 |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| எண்ணிக்கை | 463 | 673 | 740 | 809 | 865 |
| உறுப்பினர்கள் | 669,212 | 1,844,653 | 2,841,747 | 3,121,086 | 3,536,535 |
| செலுத்திய முதல் | 1,97 | 11,18 | 25,26 | 33,64 | 41,55 |
| காப்பு நிதி | 49 | 1,55 | 2,98 | 3,94 | 6,13 |
| வாங்கிய கடன்கள் | 24,53 | 1,24,20 | 2,81,52 | 3,66,39 | 4,49,13 |
| நடைமுறை முதல் | 28,47 | 1,51,70 | 3,45,45 | 4,49,96 | 5,50,66 |
| அளித்துள்ள கடன்கள் | 7,17 | 41,23 | 1,03,76 | 1,13,22 | 1,18,94 |
| நிலுவையிலுள்ள கடன்கள் | 24,66 | 1,24,33 | 2,85,56 | 3,66,87 | 4,48,27 |
| தவணை கடந்த கடன்கள் | 64 | 4,42 | 7,06 | 7,79 | 17,47 |

உறுப்பினர்களுக்கு நீண்ட காலக் கடன் வசதி யளிக்கும் பிரதம நில வள வங்கிகள் தம் தேவையில் மிகப் பெரும் பான்மையான நிதியினை மாநில நில வள வங்கி (மத்திய நில வள வங்கி யென்றும் அழைக்கப்படுவதுண்டு) யிடமிருந்து பெறுகின்றது எனக் கண்டோம். மாநில நில வள வங்கி தனக்கு வேண்டிய நிதியை எங்கிருந்து திரட்டுகின்றது என்று காண்போம். ஓரளவுக்குப் பங்கு முதல், சேர்ப்புக் கட்டணம் போன்ற வழிகளில் மத்திய நில வள வங்கி நிதி திரட்டினாலும் மிகப் பெருமளவுக்கு கடனீட்டுப் பத்திரங்களை (Debentures) வெளியிட்டே தனக்குத் தேவையான நிதியைத் திரட்டுகின்றது.

கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டுப் பணம் திரட்டப் பல சட்டச் சடங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கின்றது. கால தாமதமும் ஏற்படுகின்றது. இடைக் காலத்தில் பணத்தேவை கட்கு இந்திய ஸ்டேட் வங்கியிடம், மாநில அரசின் பொறுப் புறுதியின் பேரில், தற்காலிகக் கடன் வசதியினை மாநில நில வள வங்கி பெறுகின்றது. மாநில நில வள வங்கி களின் வளர்ச்சியை அடுத்த பக்கத்து அட்டவணை விளக்கு கின்றது.

### கடனீட்டுப் பத்திர வெளியீடு

மாநில நிலவள வங்கிகள் கடனீட்டுப் பத்திரங்களை வெளி யிட்டுப் பணந் திரட்டி, தம்மோடு இணைக்கப்பெற்ற பிரதம நில வள வங்கிகளுக்குக் கடன் வழங்குகின்றன என்று கண்டோம். கடன் வாங்க விரும்பும் உறுப்பினர்கள் தமது நிலத்தைப் பிரதம நில வள வங்கிக்கு அடைமானம் வைக் கின்றனர். இந்த அடைமானம் பிரதம வங்கியால் மாநில வங்கிக்கு உரிமை செய்து தரப்படுகின்றது. இங்ஙனம் உரிமை மாற்றம் செய்யப்பட்ட அடைமானங்கள், மாநில வங்கியின் பிற சொத்துக்கள் ஆகியவற்றின் பிணையின் பேரில் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன. வெளியிடப் படும் கடனீட்டுப் பத்திரங்களின் தொகை மொத்த அடை மானங்கள், வங்கியின் பிற சொத்துக்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுமுன் மாநில நில வள வங்கி மாநில அரசின் பொறுப்புறுதி (Guarantee) பெற வேண்டும். கடனீட்டுப் பத்திரங்களின் நலனைப் பாதுகாக்க அரசு பொறுப் புரிமையர் (Trustee) ஒருவரை நியமிக்கின்றது. பெரும்பாலும் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பொறுப் புரிமையராக நியமிக்கப் படுகிறார். வங்கியும், பொறுப் புரிமையரும் பொறுப்புரிமை யாவணம் (Trust deed) ஒன்றில் கையொப்பமிட்டு, தத்தம் பொறுப்புக்களை உறுதிப்படுத்து கின்றனர். மாநில வங்கியின் சொத்துக்களும், முதல் அடை மானங்களும் பொறுப்புரிமையர்பால் சட்ட முறையாக அமைவுறுகின்றன. இந்திய ரிசர்வு வங்கியின் அனுமதி யுடனும் பொறுப்புரிமையரின் அனுமதியுடனும் ரிசர்வு வங்கி நிருணயிக்கும் வட்டி வீதத்திற்கு கடனீட்டுப் பத்தி ரங்கள் வெளியிடப் படுகின்றன. இப் பத்திரங்கள் 10 முதல் 20 ஆண்டுகள் தவணை கொண்டிருப் பதுண்டு. இப் பத்திரங்கள் "பொறுப்புரிமையர் பிணையங்கள்" (Trustee securities) என்ற தகுதி பெற்றுள்ளன. இதில்

## பட்டியல் 8—5

மாநில நில வள வங்கிகள் — ரூ. இலட்சக் கணக்கில்

| | 1960-61 (1) | 1965-66 (2) | 1968-69 (3) | 1969-70 (4) | 1970-71 (5) |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 18 | 18 | 19 | 19 | 19 |
| செலுத்திய முதல் | 4,33 | 15,39 | 30,94 | 38,86 | 48 88 |
| இதில் அரசு வழங்கியது | 2,09 | 5,48 | 7,26 | 8,06 | 10,68 |
| காப்பு நிதிகள் | 1,11 | 2,65 | 5,49 | 6,69 | 9,10 |
| கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிட்டது | 10,33 | 50,25 | 1,30,64 | 1,51,97 | 1,58 44 |
| நிலுவை நிற்பது | 36,53 | 1,78,37 | 4,26,11 | 5,70,80 | 7,24,90 |
| பிற வழிகளில் திரட்டிய கடன்கள் | 5,63 | 10,18 | 25,66 | 21,97 | 24,59 |
| நடைமுறை முதல் | 49,74 | 2,16,13 | 5,12,38 | 6,68,74 | 8,41,22 |
| மீட்பு நிதி முதலீடுகள் (Sinking Fund Investments) | 6,91 | 38,07 | 84,99 | 1,18,13 | 1,57,54 |
| அளித்த கடன்கள் கொடுத்தது | 11,62 | 56,41 | 1,43,62 | 1,53,26 | 1,68,28 |
| நிலுவை நிற்பது | 36,61 | 1,63,26 | 3,95,06 | 5,11,98 | 6,37,28 |
| தவணை கடந்தது | 1,22 | 3,05 | 3,81 | 5,41 | 11,06 |
| கடன் நோக்கங்கள் பழங்கடன் மீட்க | 3,08 | 3,37 | 1,83 | 1,16 | 84 |
| நிலம் வாங்க | 9 | 42 | 27 | 19 | 1,48 |
| நிலம் சீர்படுத்த | 4,65 | 14,39 | 35,47 | 9,49 | 8,96 |
| கிணறு தோண்ட, ஆழப்படுத்த | .... | 17,05 | 68,58 | 59,11 | 57,32 |
| இயந்திரம் வாங்க | 3,45 | 16,13 | 29,13 | 57,28 | 74,10 |
| பிற நோக்கங்கள் | 36 | 5,05 | 8,34 | 26,03 | 25,58 |

முதலீடு செய்யப்படும் பணம் மிகவும் பத்திரமாக, திடமாக உள்ளது என்பதும், இப் பத்திரங்கள் முதல் தரமான முதலீட்டுச் சாதனங்கள் என்பதும் இதனால் விளங்கும். இப் பத்திரங்கள் மீதான அசலும் வட்டியும் குறித்தவாறு திருப்பித் தரப்படுதற்கு அரசு பொறுப்புறுதி யளிக்கின்றது.

மாநில நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை இந்திய ரிசர்வு வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்திய ஸ்டேட் வங்கி, அரசு, வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் போன்ற நிலையங்கள் வாங்குகின்றன. இங்ஙனம் கடனீட்டுப் பத்திரம் வெளியிட்டுத் திரட்டிய பணத்தை மாநில நிலவள வங்கி பிரதம வங்கிகளுக்குக் கடனாக அளிக்கின்றது. பிரதம வங்கிகள் இத் தொகையைக் கொண்டு தம் உறுப்பினர்களுக்குக் கடன் அளிக்கின்றது.

கடன் வாங்க விழையும் உறுப்பினர் அதற்கான விண்ணப்பத்தைத் தயாரித்து, அதில் அவர் பெயர், வயது, முகவரி, கிராமம், குடியிருப்பு, தேவைப்படும் கடன் தொகை, கடன் பெறும் நோக்கம், அடைமானமாக வைக்கப்பெறும் சொத்து, குடும்பக் கொடிவழி (Genealogy), நிலத்தின் வழி வருமானம், பிற வருமானங்கள், பெற்றுள்ள பிற கடன்கள் முதலியவற்றைக் குறிப்பிட்டு, கீழ்க்காணும் ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் அனுப்புவார். சர்வே எண்ணைக் குறிக்கும் உரிமைப் பத்திரத்தின் நகல், பயிர் ஆய்வுப் பதிவேட்டின் நகல், நிலத்தைக் குறிக்கும் வரைபடம், விண்ணப்பதார் உரிமையாளர் என்று காட்டும் ஆவணங்கள், வில்லங்கச் சான்றிதழ், அறுதி ஆவணத்தி (Settlement record) லிருந்து எடுக்கப்பட்ட கொடிவழி அட்டவணையின் நகல் ஆகியன. இவற்றைச் சரி பார்த்து, அடைமானத்தைப் பதிவு செய்து, பின்னரே கடன் வழங்கப்படுகிறது.

### விவசாய மறு நிதிக் கூட்டுரு (Agricultural Re-finance Corporation)

நிலவள மேம்பாட்டிற்காக அண்மைக் காலத்தில் நிறுவப்பட்ட முக்கிய நிறுவனங்களில் விவசாய மறு நிதிக் கூட்டுரு ஒன்றாகும். விவசாய மறு நிதிக் கூட்டுருச் சட்டம் என்ற 1963-ல் இயற்றப்பெற்ற சட்டத்தின் கீழ் இக் கூட்டுரு 1963 ஜூலை முதல் நாள் நிறுவப் பெற்றது. இதன் அனுமதித்த முதல் ரூ. 25 கோடி. இதில் ரூ. 5 கோடி மட்டுமே வெளியிடப்பட்டது. இதில் 50% பங்குகளை ரிசர்வு வங்கி எடுத்துக் கொண்டது; 27% பங்குகளை கூட்டுறவு உச்சி வங்கிகளும் நில அடைமான

வங்கிகளும் எடுத்துக்கொண்டன; மீதமுள்ள 23% பங்குகளை காப்பீட்டுக் கம்பெனிகளும் பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெற்ற வங்கிகளும் எடுத்துக்கொண்டன. மத்திய அரசு இதன் முதல், $4\frac{1}{4}$ %க்குக்குறையாத ஆண்டு இலாப ஈவு ஆகிய செலுத்தப்படுவதற்குப் பொறுப்புறுதி யளித்துள்ளது. இந்திய அரசு இக் கூட்டுருவிற்கு ரூ. 10 கோடி வட்டியில்லாக் கடனை அளித்துள்ளது, கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டும், நீண்ட கால வைப்புகளை ஏற்றும் மேலும் நிதி திரட்டிக்கொள்ளக் கூட்டுரு அனுமதி பெற்றுள்ளது.

வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதி யளிப்பதே இக் கூட்டுருவின் நோக்கமாகும். நில வள வங்கிகளும், பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளும் சரிவர உதவி யளிக்க முடியாத பெருந்திட்டங்களுக்கு அவ் வங்கிகள் மூலமே இக் கூட்டுரு நிதி யளிக்கின்றது. செலவிடும் முதலுக்கேற்ற வருவாய் உள்ளதும், அடக்கமான ஒரு பகுதியாக அமைந்துள்ளதும், பல சிறு விவசாயிகளுக்குப் பயன் தருவதும், நன்கு மேற்பார்வையிடும் தன்மை பெற்றதுமான திட்டங்களுக்கே மறு நிதிவழங்கப் படுகின்றது.

விவசாய மறுநிதிக் கூட்டுரு (i) நில மீட்பு (Land reclamation), (ii) சிறு நீர்ப்பாசனம், (iii) தோட்டக்கால் (Plantation), (iv) மண் வளப்பாதுகாப்பு, மீன் வளம், கோழிப்பண்ணை போன்ற திட்டங்களுக்கே பெரும்பாலும் நிதி வசதி வழங்குகிறது.

தமிழ் நாட்டில் பரம்பிக்குளம்-அளியாறு, ஆந்திர நாட்டில் நாகார்ஜுனசாகர் போன்ற திட்டங்களுக்கு விவசாய மறு நிதிக் கூட்டுரு நிதி யுதவி நல்கி வந்துள்ளது. புதிதாகக் கால்வாய், நீர் வழங்கு திட்டம் உருவாக்கி, அதன் வழி நில வளத்தை மேற்கொள்ள இக் கூட்டுரு உதவுகிறது. தொழில் நுட்ப வல்லுநர்களை கொண்டு, திட்டம் வெற்றி பெறும் வாய்ப்புள்ளதா, பொருளாதார கண்ணோட்டப்படி, பயன் நல்கக் கூடியதா என்றெல்லாம் ஆராயத் தகுதி வாய்ந்த பலர் இக் கூட்டுருவில் பணியாற்றுகின்றனர். நிலமட்டத்தின் கீழ் நீர் எவ்வளவு கிடைக்கக்கூடும் என ஆராய்ந்து, கணிசமான அளவு நீர் கிடைக்கக்கூடிய திட்டங்களுக்கு மட்டுமே நிதி யுதவி அளிக்கப்படுகிறது.

தோட்டக்கால் தொழிலில் போட்ட முதலுக்குப் பலன் காண, பல ஆண்டுகள் காத்திருக்கவேண்டும். நிலத்தை வளப்படுத்த

செலவும் மிகுதி. எனவே, புதுத் தோட்டங்களை நிறுவவும், காலி யாயுள்ள இடங்களில் செடிகளைப் பயிரிடவும், முதிராச் செடி களைப் பராமரிக்கவும், பதனிடும் இயந்திரங்களை வாங்கவும், நீர்ப்பாசன இயந்திரங்களை வாங்கவும் தேவைப்படும் நிதி வசதிகளை இக் கூட்டுரு அளிக்கின்றது. கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் (Repaying capacity) கடன் கோரும் நபருக்கு உள்ளது என்று உறுதியாகத் தோன்றினல் தான் கடன் அளிக்கப்படும்.

1972 ஜூன் 30 ஆம் நாளுடன் விவசாய மறு நிதிக் கூட்டுருவுக்கு ஒன்பது ஆண்டுகள் நிறைவுற்றன. இந் நாள் வரை 711 திட்டங்களுக்கு இக் கூட்டுரு நிதியுதவி அளித்துள்ளது. இந்தத் திட்டங்களுக்கு அளித்துள்ள உதவித் தொகை ரூ. 404·75 கோடியாக இருந்தது.

மேற்கொண்ட 711 திட்டங்களில் 485 திட்டங்கள் மத்திய நில வள வங்கிகள் மூலமும், 193 திட்டங்கள் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் மூலமும், 33 திட்டங்கள் மாநில கூட்டுறவு வங்கிகள் மூலமும் அனுமதிக்கப்பட்டன. மொத்த நிதி யுதவி முறையே ரூ. 349·34 கோடி ரூ. 29·62 கோடி, ரூ. 25·79 கோடி என்ற அளவில் அமைந்தது.

மேற்கண்ட திட்டங்கள் வழி 1,25,281 கிணறு, குழாய்க் கிணறு (Tube well)கள் தோண்டப்பட்டு உள்ளன அல்லது தோண்டப்பட்டு வரும் நிலையிலுள்ளன. இவற்றில் பெரும்பான் மைக் கிணறுகளுக்கு 1,31,778 பம்பு செட்டுகள் பொருத்தப் பட்டன. இதனல் 9,14,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உறுதியாகக் கிடைக்கலாயிற்று. கால்வாய்கள் மூலம் 7,89,287 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிட்டியது. தென்னை, காபி, ரப்பர், டீ, ஏலக்காய், ஆப்பிள் போன்ற தோட்டங்கள் நிறுவப் பெற்றன. சற்றேறப்ப 60,800 ஏக்கர் அளவு, புதிய தோட்டங்கள் உருவாகியுள்ளன. இக் கூட்டுருவின் மறு நிதி வசதியால் மீனவர்கள் 141 விசைப் படகுகள் பெற்றுள்ளனர்; விவசாயிகள் 1,645 டிராக்டர்கள் வாங்கியுள்ளனர். பஞ்சாப் மாநிலத்தில் 2,06,000 டன் அளவுக்குச் சேமித்து வைக்கக் கூடிய 129 கிடங்குகளும் குஜராத் மாநிலத்தில் 2,000 டன் அளவு திறனுள்ள 4 கிடங்குகளும் கட்டப்பட்டன. அரியானவில் 30 கிடங்குகளும், மைசூரில் 11 கிடங்குகளும் கட்டப்பட்டு வருகின்றன. பால் வளத் திட்டங்களின் கீழ் 1,8000 கால் நடைகள் வாங்கப்பெற்றன. கோழிப் பண்ணை வளர்ச்சித்

திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட மறு நிதி யுதவி கொண்டு 34,200 கோழிக்குஞ்சுகள் வாங்கப்பட்டன; 23 கோழிப் பண்ணைக்குத் தேவையான கூடங்களும் தளவாடங்களும் வாங்கப்பட்டன.

ஜூன் 1972 வரை, கூட்டுரு ரூ. 124·69 கோடிப் பணம் வழங்கி யுள்ளது.

உலக வங்கியின் இணைப்பு நிறுவனமான அனைத்துலக வளர்ச்சிக் கழகம் (International Development Association) இந்தியாவிலுள்ள விவசாயத் திட்டங்களுக்கு அளித்துள்ள கடனில் பெரும்பகுதி விவசாய மறு நிதிக் கூட்டுறவின் வழி வழங்கப்படும். ஒன்பது பெருந்திட்டங்கள் இந்த ஏற்பாட்டின் படி கூட்டுருவின் வழி மறு நிதி பெறும். இத் திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ. 186·98 கோடி. இக் கூட்டுருவின் மூலம் வழங்கப்பட இருக்கும் தொகை ரூ. 169·63 கோடியாகும். கூட்டுரு இத்தொகையை இந்திய அரசிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ளும்.

கூட்டுறவு நகர வங்கிகள், ஊழியர்கள் கடன் சங்கங்கள் போன்றன விவசாயத் தொடர்பற்ற கடன் சங்கங்கள் என அழைக்கப்படுகின்றன. 1970—71-ல் இவ் வகையில் மொத்தம் 15,346 சங்கங்கள் இருந்தன. இதில் 920 நகர வங்கிகள் ஆகும்.

**நகரக் கூட்டுறவு வங்கிகள் (Urban Co-operative Banks)**

நகரக் கூட்டுறவு வங்கிகள்.சிறு வணிக வங்கிகள் போன்றே செயலாற்றுகின்றன. தமது உறுப்பினர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் கடன்கள் வாங்கி — அதாவது பல்வகை வைப்புக்களைப் பெற்றுப் பணந்திரட்டி, அப்பணத்தைக் கடன் தேவைப்படும் உறுப்பினர்களுக்கு அளிப்பதே இவ் வங்கிகளின் முக்கியப் பணியாகும். உறுப்பினர்களிடையே சிக்கனம், தன்னுதவி, கூட்டுறவு போன்ற பண்புகளை வளர்த்தல், மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்து கொடுத்தல், விலை மதிப்புள்ள பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல், வாடிக்கையர் சார்பாக முகவர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பணமனுப்புகை (Remittance) வசதிகளைச் செய்து தருதல் போன்ற பணிகளையும் இவ் வங்கிகள் செய்து வருகின்றன.

பொதுவாக, நகரக் கூட்டுறவு வங்கிகள் ஒற்றையடுக்கு அமைப்பாகக் காணப்படுகின்றன. இவற்றிற்கு மாவட்ட

அளவிலோ, மாநில அளவிலோ, நாட்டளவிலோ கூட்டிணைப்பு ஏதும் இதுவரை உருவாகவில்லை. இவற்றில் பெரும் பாலானவை வெளியார் உதவியை நாடாமல் தம் வசமுள்ள நடைமுறை முதலைக் கொண்டே தொழில் நடத்துகின்றன. மகாராட்டிர மாநிலத்திலுள்ள அகமத் நகர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு நகர வங்கி மட்டும் அம்மாவட்டத்திலுள்ள பிரதம நகர சங்கங்கள், ஊதியம் ஈட்டுவோரின் சங்கங்கள் (Salary Earners' Societies) ஆகியவற்றின் கூட்டிணைப்பாக விளங்கு கின்றது. இம்மாதிரியான கூட்டிணைப்பு இந்திய நாட்டில் வேறெங்கும் காணப்படவில்லை.

கூட்டுறவு நகர வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி எவ்வகையான சலுகைகளையும் அளிப்பதில்லை.

**கடனளிப்பு நோக்கம், பிணை**

நகர வங்கிகள், கைவினைருக்கும், வியாபாரிகளுக்கும், முன் கடனை அடைக்கவும், வாழ்க்கைச் செலவுகட்கும், கட்டடம் கட்டல், பழுது பார்த்தல் போன்ற செலவுகட்கும் கடன் வழங்கு கின்றன. நகைகளின் ஈட்டின் பேரிலும், வீட்டு அடை மானத்தின் பேரிலும், தரமான பிணையங்கள் பேரிலும், தவணை வைப்பு ரசீதின் பேரிலும் கடன் வழங்கப்படுகின்றது. பொறுப் புறுதியின் பேரில் சிறு கடன்கள் வழங்கப்படுவதும் உண்டு. உறுப்பினர் ஒருவருக்குத் தரப்படக் கூடிய உச்ச அளவுக் கடன் இவ்வளவுதான் என்று நிருணயிக்கப்பட் டிருக்கும்.

கூட்டுறவு நகர வங்கிகள் சிறு தொழில்களுக்குக் கடன் வசதிகள் அளிக்க வேண்டுமென்ற செய்தி அண்மையில் பெரிதும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. இதனால், வேலை வாய்ப்புப் பெருகுவதுடன் பொருளாதார ஆக்கத்திற்கு ஊக்கமும் உண்டாகிறது. இஃதன்றி, சிறு தொழில்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மீது உத்தரவாதம் வழங்கும் ஏற்பாடும் செயற்பட்டு வருகின்றது.

ஆக்கப் பணிகளுக்கு மட்டுமே கடன் வழங்குவது என்ற நோக்கம் இவ் வங்கிகளுக்கு இல்லையாதலால் இவற்றின் செயற் பாட்டைச் சிலர் குறை கூறுகின்றனர். மற்றுஞ் சிலர், இன்றியமையாக் குடும்பச் செலவு, சடங்கு, படிப்பு, திருமணம் போன்ற தேவைகளுக்கு இவ் வங்கிகள் கடன் தராவிட்டால் நடுத்தர வாழ்க்கை நிலையிலுள்ள மக்கள் வட்டித் தொழிலர் பிடியில் அகப்பட்டுத் திண்டாட நேரிடும் என்று கருது கின்றனர்.

## பட்டியல் 8-6

பிரதமக் கூட்டுறவு வங்கிகள் ரூ. இலட்சத்தில்

| | 1968-69 | 1969-70 | 1970-71 |
|---|---|---|---|
| எண்ணிக்கை | 954 | 923 | 920 |
| உறுப்பினர்கள் | 3,693,339 | 3,717,001 | 3,559,939 |
| செலுத்திய முதல் | 37,23 | 34,29 | 36,41 |
| காப்பு நிதி | 19,28 | 18,27 | 20,33 |
| வைப்புக்கள் | 1,88,03 | 1,78,67 | 2,17,13 |
| நடைமுறை முதல் | 2,67,92 | 2,63,55 | 3,07,02 |
| கடன்கள் | | | |
| வழங்கப்பட்டது | 2 27,27 | 2,69,82 | 2,77,51 |
| நிலுவை நிற்பது | 1,81,43 | 1,77,00 | 1,97,34 |
| தவணை கடந்தது | 9,78 | 10,67 | 11,10 |

மேற்காணும் அட்டவணை, கூட்டுறவு நகர வங்கிகளின் செயற்பாட்டை விளக்குகின்றது.

### ஊழியர் கடன் சங்கங்கள்

ஊழியர்களின் கடன் சங்கங்கள் எனப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் 1971 ஜூன் இறுதியில் 10,713 இருந்தன. இவற்றில் 1993 செயற்படாமல் இருந்தன. இச் சங்கங்கள் அனைத்திலும் சேர்ந்து, மொத்தம் 46,87,000 உறுப்பினர்கள் இருந்தனர். இவற்றின் நடைமுறை முதல் ரூ. 250·73 கோடியாக இருந்தது. இவை ரூ. 119·81 கோடி வைப்புக்களைத் திரட்டியிருந்தன. பிற வழிகளில் இவை ரூ. 14·59 கோடி கடன் பெற்றிருந்தன; தமது உறுப்பினர்களுக்கு ரூ. 182·30 கோடி கடன் வழங்கியிருந்தன. இக் கடன் சங்கங்களின் சிறப்பு, கடன் தொகையைத் தவணை முறையில் ஊழியரின் ஊதியத்திலிருந்து பிடித்து வசூலிப்ப தாகும். இந்த ஏற்பாட்டினால் கடன் தொகை உறுதியாக வசூலிக்கப்படுகின்றது. அளிக்கப்படும் கடன் தொகை உறுப் பினரின் ஊதியத்தைப் போன்று இத்தனை மடங்கு என்றும், உச்ச வரம்பு இவ்வளவு என்றும் நிருணயிக்கப்பட் டிருக்கும். இதற்கு உட்பட்ட தொகையே கடனாக வழங்கப்படும். கடன் தொகைக்குத் தகுந்த அளவு பங்குகளைச் சங்கத்தில் உறுப்பி னர் எடுத்துக்கொள்ள வேண்டும். உறுப்பினரின் பிணையின் பேரில் கடன் வழங்கப்படுவதால் ஒரு அல்லது இரு உறுப் பினரின் பொறுப்புறுதியும் பெறப்படுகின்றது.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஊழியர்கள் நாணயச் சங்கங்களுக்குக் கடன் வசதி யளிக்கின்றன. இச் சங்கங்களில் சில வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் கீழ் செயலாற்றுகின்றன. சில உறுப்பினர்களிடமிருந்து மட்டும் வைப்புப் பெற்று, வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் விதிகளிலிருந்து விலக்குப் பெற்றுச் செயலாற்றுகின்றன. உறுப்பினரல்லாதாரிடமிருந்து வைப்பு ஏற்றுக் கொள்ளும் சங்கங்கள் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப்படி செயலாற்ற வேண்டும்.

### தொழிற் கூட்டுறவு வங்கிகள்

நம் நாட்டில் இங்கும் அங்குமாகச் சில தொழிற் கூட்டுறவு வங்கிகள் செயற்பட்டு வருகின்றன. பணந் திரட்டித் தம் உறுப்பினர்களான தொழிற் கூட்டுறவு நிலையங்கட்கு நீண்ட, மத்திய, குறுகிய காலக் கடன்களை வழங்குவதே இவ் வங்கிகளின் நோக்கமாகும்.

தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு இயந்திரம், தளவாடங்கள், கருவிகள் வாங்கவும், பட்டறை கட்டவும், தொழிற் கூடத்திற்கு இடம் வாங்கவும் நீண்ட கால, மத்திய காலக் கடன் தேவைப்படுகின்றது. கச்சாப் பொருள் வாங்கவும், கூலி கொடுக்கவும், உற்பத்தியான பொருள்களை விற்கும் வரை வைத்திருக்கவும், பிற செலவுகட்கும் குறுகிய காலக் கடன் இச் சங்கங்களுக்குத் தேவைப்படுகின்றது. அரசு, கதர், கிராமத் தொழில் குழு, அகில இந்திய கைத்தறி குழு, அனைத்திந்தியக் கைவினைக் குழு மத்தியப் பட்டுக் குழு, மாநில நிதியக் கூட்டுரு, மத்தியக் கூட்டுறவு வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய ரிசர்வு வங்கி போன்ற நிலையங்களும் இவற்றின் தேவைகளை ஓரளவுக்கு நிறைவேற்றுகின்றன எனினும், சிதறிக் கிடக்கும் சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கண்ட நிலையங்களை யணுகி, கடன் வசதி பெறுவது அவ்வளவு எளிதன்று. எனவே, தொழிற் கூட்டுறவுகளுக்கு மட்டும் நிதி வசதி யளிக்கும் பொருட்டுச் சில மாநிலங்களில் தொழிற் கூட்டுறவு வங்கிகள் நிறுவப்பெற்றன. இவை அவசியம் தானு? மாநிலக் கூட்டுறவு வங்கியும் மத்திய வங்கிகளும் தொழிற் கூட்டுறவுகளுக்கும் நிதி வசதியளித்தால் போதுமே. இவற்றிற்குத் தனி யொரு அமைப்புத் தேவையற்றதே எனப் பலப்பல வாதங்களும் எதிர் வாதங்களும் இன்றும் இருந்து வருகின்றன. வங்கியத் துறையில் இக் கூட்டுறவு வங்கிகளின் நிலையை மட்டுமே நாம் காண்போம்.

முன்னர் கூறியது போன்று தொழில் கூட்டுறவு வங்கி, குடிசைத் தொழில், கிராமத் தொழில், சிற்றளவுத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தம் உறுப்பினர் சங்கங்களுக்கு நிதி யுதவி செய்வதும், கைவினைஞர், தொழிலாளரிடையே சிக்கனம், தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி என்ற பண்புகளை வளர்ப்பதும் தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. வைப்புக்களைத் திரட்டியும், அரசு, இந்திய ஸ்டேட் வங்கி, மாநில நிதியக் கூட்டுரு போன்ற பல நிறுவனங் களிடமிருந்து கடன் பெற்றும் தமக்குத் தேவைப்படும் முதலைப் பெறுகின்றன.

கடனுக்குப் பிணையாக உறுப்பினர் பொறுப்புறுதி, உறுப் பினரின் அசையாச் சொத்தை அடைமானம் செய்து வாங்குதல், சரக்கு இருப்பினை அடைமானம் செய்து வாங்குதல், இயக்குநர் அவையினரின் தனி நபர் பொறுப்புறுதி போன்ற ஏற்பாடு களைத் தொழிற் கூட்டுறவு வங்கி செய்துகொள்ளுகிறது.

இந்தியாவில் 1971 ஜூன் இறுதியில் மாநில அளவில் 4 தொழிற் கூட்டுறவு வங்கிகளும், மத்திய (மாவட்ட) அளவில் 45 வங்கிகளும் செயற்பட்டு வந்தன. மைசூரில் ஒரு மாநில வங்கியும் 25 மத்திய வங்கிகளும், ராஜஸ்தானில் 2 மாநில வங்கிகளும், தமிழ் நாட்டில் ஒரு மாநில வங்கியும், குஜராத்தில் 2 மத்திய வங்கிகளும், மகாராஷ்டிரத்தில் ஒரு மத்திய வங்கியும், பஞ்சாப் மாநிலத்தில் ஒரு மத்திய வங்கியும் செயற்பட்டு வந்தன. மாநில வங்கியும் கூட்டுறவுச் சங்கங்கள் 824-ம், தனி நபர்கள் 265 பேரும், மத்திய வங்கிகளில் 3,103 சங்கங்களும் 21,120 தனி நபர்களும் உறுப்பினராக இருந்தனர். மாநில வங்கிகள் நான்கும் ரூ. 1·60 கோடி முதலும், ரூ. 1·23 கோடி வைப்புக்களும், நடைமுறை முதல் ரூ. 5·63 கோடியும் கொண் டிருந்தன. அதே நாளில் (1971 ஜூன் 30) மத்திய வங்கிகள் 45-ம் முதல் ரூ. 1·86 கோடியும், வைப்புக்கள் ரூ. 5·34 கோடியும், மொத்த நடைமுறை முதல் ரூ. 13·06 கோடியும் கொண்டிருந்தன. இவை உறுப்பினர்களுக்கு ரொக்கக் கடன், மேல்வரைப்பற்று (Overdraft), கடன் என்ற மூன்று வகைக் கடன்களை அளித்து வந்தன.

மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் 1971 ஜூன் இறுதி யில் ரொக்கக் கடன், மேல்வரைப்பற்று என்ற தலைப்பில் ரூ. 2·77 கோடியும், கடன்கள் என்ற தலைப்பில் ரூ. 0·43 கோடியும் கடனாக அளித்திருந்தன. மத்திய வங்கிகள் இதே நாளில் முடிவுற்ற

கணக்கின்படி ரூ. 37·48 கோடி ரொக்கக் கடன், மேல்வரைப் பற்றும், ரூ. 2·56 கோடி கடனும் கொடுத்திருந்தன.

இதுகாறும் பல்வகைக் கூட்டுறவு வங்கிகள், அவற்றின் அமைப்பு, செயல்முறை முதலிய பற்றிக் கண்டோம். பொதுவாக, கூட்டுறவு நிலையங்களின் செயல்முறையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. பல குணங்களும் இருக்கின்றன. அவ்வப்போது நியமிக்கப் பட்ட குழுக்கள் இவற்றை ஆராய்ந்து தம் பரிந்துரையை வழங்கியுள்ளன. இப் பரிந்துரைகளின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கூட்டுறவு இயக்கம் உறுதி பெற்று வளமுற வளரப் பற்பல திட்டங்களும் நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

**கூட்டுறவு இயக்கத்தில் முக்கியத் திருப்பங்கள்**

அனைத்திந்திய கிராமக் கடன் விசாரணைக் குழுவின் அறிக்கை (Report of the Committee of direction of the All-India Rural Credit Survey) இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் ஒரு முக்கியத் திருப்பத்திற்குக் காரணமாக அமைந்தது. 1954–ல் வெளியான இவ் வறிக்கை, விவசாயிகளின் கடன் தேவைகளில் 3 1% மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களால் தரப்படுகின்றது என்ற உண்மையை உலகறியச் செய்தது. அக்காலத்தில் சென்னை, பம்பாய் மாநிலங்கள் தவிர, பிற மாநிலங்களில் கூட்டுறவு இயக்கம் நன்கு வேரூன்றவில்லை. கடன்கள் வழங்குவதில் மிகவும் காலதாமதம் காணப்பட்டது. நீண்ட காலக் கடன், கடன் நோக்கத்தையும் திருப்பிச் செலுத்தும் திறனையும் கருத்தில் கொள்ளாது, ஒரே வகையான தவணைக் காலத்திற்கே கொடுக்கப்பட்டது. பழங்கடன்களை அடைக்கவே இக் கடன்கள் பயன்படுத்தப்பட்டன.

கடன் வழங்கும் சங்கங்கள் விற்பனைச் சங்கங்களுடன் பின்னிப் பிணைந்து செயற்படுதலின் இன்றியமையாமையை விசாரணைக் குழுவின் அறிக்கை வற்புறுத்தியது. கடன் வாங்கி விளைவிக்கும் பயிரை நல்ல விலைக்கு விற்கத் தக்க ஏற்பாடு இல்லாத காரணத்தால் விவசாயி உழைப்பின் பயனைப் பெறக் கூடவில்லை. அதுமட்டுமல்ல. விவசாயி நிரந்தரக் கடனாளியாக இருக்கும் நிலையும் காணப்பட்டது, கிராமச் சமுதாயம், வங்கிய முறை, வியாபார ஏற்பாடு முதலியவற்றிடையே நெருங்கிய ஒரு பிணைப்பில்லாத காரணத்தால் கிராமப் பொருளாதாரம் நலிந்த நிலையிலிருந்தது. இக் குறைகளைக் களையக் கீழ்க்காணும் பரிந்துரைகளைக் குழு தந்தது.

கூட்டுறவுகளின் மூலதன அடித்தளத்தை வலுப்படுத்த அரசு மூலதனம் அளித்து உதவ வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படத் தொழில் நடத்த, அவற்றின் அளவு சரியான முறையில் அமைதல் அவசியம். பெரிய அளவு பிரதம விவசாயச் சங்கங்கள் உருவாக்கப்படுதல் அவசியம். உற்பத்தி நோக்கத்திற்கு மட்டுமே கடன் தரப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட பருவத்தில் விளைவிக்கப்படும் பயிருக்கு வேண்டிய செலவுகட்கு மட்டுமே கடன் தரப்படவேண்டுமேயன்றி, சொத்து வேண்டிய அளவுக்கு இருக்கிறது என்ற அடிப்படையில் கடன் வழங்கப்படலாகாது. இந்திய ரிசர்வு வங்கி, கணிசமான அளவிற்குக் குறுகிய மத்திய காலக் கடன்கள் வழங்கி, கூட்டுறவு இயக்கத்திற்கு உதவ வேண்டும். கூட்டுறவுக் கடனுடன் தொடர்புற்ற விற்பனை, பதப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கிடங்குகள் கட்டுவதற்கும், கூட்டுறவு வளர்ச்சிக்கும் அனைத்திந்திய அளவிலும், மாநில அளவிலும் முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வணிக வங்கியத் துறை, கிராமியக் கூட்டுறவுக் கடன் துறைக்கு நல்ல துணையாகவும், உற்ற இணைந்து செயற்படும் நிலையமாகவும் இருக்கும் பொருட்டு, அரசு தொடர்புற்ற ஒரு வங்கி நிறுவப்படுதல் அவசியம். இம்பீரியல் வங்கியைப் பிற அரசு தொடர்புற்ற வங்கிகளுடன் இணைத்து, இந்திய ஸ்டேட் வங்கி உருவாக்கப் படலாம் என்றும் பரிந்துரைத்தது. நாட்டளவிலும் மாநில அளவிலும், கூட்டுறவு நிலையங்கள் அளவிலும் பற்பல நிதிகள் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட பரிந்துரைகள் எந்த அளவுக்கு செயற் படுத்தப்பட்டன; எதிர்பார்த்த விளைவுகள் ஏற்பட்டனவா; விவசாய முன்னேற்றத்திற்கு மேலும் என்ன ஏற்பாடுகள் தேவை என்ற செய்திகளை விசாரிக்க, 1966-ல் அகில இந்திய கிராமியக் கடன் மறு ஆய்வுக் குழு ரிசர்வு வங்கியால் அமைக்கப் பட்டது. இக் குழு 1969-ல் தன் அறிக்கையை வெளியிட்டது. அவ் வறிக்கையின் முக்கியப் பரிந்துரைகளைக் காண்போம்.

**அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு அறிக்கை (வெங்கடப்பையா குழு) 1969**

கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்பு நலிந்த நிலையிலிருக்கும் மாநிலங்களில் விவசாயக் கடன் கூட்டுருக்கள் அமைக்கப்

படலாம். அதே நேரத்தில் அங்குள்ள கூட்டுறவுக் கடனளிப்பு அமைப்பை வலுப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

மாநிலக் கூட்டுறவு வங்கி கூட்டுறவுக் கடனளிப்புத் துறையிலுள்ள குறைபாடுகளைக் களைவதில் பெரும் பங்கு ஏற்க வேண்டும். மாநில அரசு, மாநிலக் கூட்டுறவு வங்கி, நன்கு இயங்காத மத்திய வங்கிகள் ஆகியவற்றுக்கு மூலதனத்திற்குப் பணம் வழங்க வேண்டும். தேவைப்பட்டால், இயக்கமேது மில்லாத மத்திய வங்கிகள் உள்ள இடங்களில் மாநில வங்கி கிளைகளைத் திறந்து, நல்ல நிலையிலுள்ள சங்கங்களுக்குக் கடன் வழங்கலாம். இதே போன்று, உறங்கிக் கிடக்கும் அல்லது கலைப்பு நடவடிக்கைகளின் நடுவிலிருக்கும் கிராமச் சங்கங்களின் எல்லையில் மத்திய வங்கிகளின் கிளைகள் வழி விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கப்படலாம். இந் நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாகவே மேற்கொள்ளப்படலாம்.

கடனளிப்புப் பின் தங்கிய நிலையிலுள்ள இடங்களிலுள்ள கூட்டுறவு மாநில, மத்திய வங்கிகளைத் தக்க முறையில் நிருவாகம் செய்து, அவற்றைச் சீர்மை நிலைக்குக் கொண்டுவரப் பல நிலையில் அலுவலர்களை அமைத்து, பரிந்துரையில் கண்ட வாறு அதைச் செயற்படுத்தவேண்டும்.

மாவட்டத்திற்கு ஒரு மத்திய வங்கி என்ற ஏற்பாடு ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால், ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கடனளித்துள்ள வங்கிகள் தொடர்ந்து இருந்து வரலாம்.

தன்னிறைவு பெற்ற சங்கங்களை விரைவில் அமைத்து முடிக்கவேண்டும். விவசாயி எளிதில் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சங்கம் மூன்று அல்லது நான்கு கல்லுக்கு மிகாத தொலைவில் அமைந்திருக்க வேண்டும். ஒரு சங்கத்தின் செயல் எல்லையின் மக்கள் தொகை மூவாயிரத்திற்கு மிகாமலிருக்க வேண்டும் என்ற நிபந்தனை தேவைப்பட்ட இடங்களில் தளர்த்தப்படலாம். பிரதம சங்கங்கள் வெறும் கடனளிக்கும் பணியில் மட்டும் ஈடுபடாது, வைப்புக்களைத் திரட்டல், பிற வங்கியப் பணிகள் ஆகியவற்றிலும் ஈடுபட வேண்டும். எல்லா விவசாயச் சங்கங்களையும் பொறுப்பு வரையறுத்த சங்கங்களாக மாற்றியமைக்க வேண்டும். கடன் சார் பற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சங்கங்களுக்கு அரசு பங்கு மூலதனம் வழங்கலாம். மேலும், சங்கங்களுக்கு நிருவாக மானியத் தொகை வழங்கி, முழு நேரச் செயலரை நியமிக்க வகை செய்யலாம்.

பயிர்க்கடன் திட்டத்தைத் தீவிரமாக அமுல் படுத்த வேண்டும்; முழுமையாக அமுல் படுத்தவேண்டும். உறுப்பினர்களின் நில உரிமைபற்றிய சான்றுகள் தாமதமில்லாது கிடைக்கத்தக்க ஏற்பாடு வருவாய்த்துறை அலுவலர் செய்து தர வேண்டும். தொழில் நுட்பம் தெரிந்த குழுவினர் ஏக்கருக்கு இன்ன பயிருக்கு இவ்வளவு கடன் தரப்படவேண்டும் என்று நிருணயிக்கவேண்டும். முன் போல் களப்பணியாளர் கூட்டம் கூட்டி இதை நிருணயிக்க வேண்டுவதில்லை. கடனில் ஒரு பகுதி ரொக்கமும் மறுபகுதி உள்ளீடுக (Input) ளாகிய உரம், விதை, பூச்சிக் கொல்லி மருந்து போன்ற இனமாக (Kind) வும் இருத்தல்வேண்டும்.

சிறிய விவசாயிகளுக்கு முழு அளவுப் பயிர்க்கடனும், நடுத்தர விவசாயிகளுக்கு முழு அளவில் ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டும் கடனும், பெரும் விவசாயிகளுக்கு இன்னும் குறைவான அளவுக் கடனும் கொடுத்தல் வேண்டும். பெரும் விவசாயிகள் முடிந்தவரை, தம் பணத்தைப் பயிர்ச் செலவுக்குப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். சிறிய கடன்களுக்குக் குறைவான வட்டி விகிதமும், பெரிய கடன்களுக்கு மிகுதியான வட்டி விகிதமும் வசூலிப்பதைச் சங்கங்கள் மேற்கொள்ளலாம்.

பயிரின் பருவத்தையொட்டிக் கடனளிப்பது உற்பத்திக் கடனின் உயிர்நாடி போன்ற கொள்கையாகும். பல பயிர்களை விளைவிக்கும் விவசாயிகளுக்கு ரொக்கக் கடன் வசதிகளை அளிக்கலாம். பயிரை இலாபகரமாக விற்கும் வசதியைக் கருத்தில் கொண்டு, தவணைத் தேதியை நிருணயிக்கவேண்டும். குறுகிய கால உற்பத்திக் கடனுக்கு நிலத்தை அடைமானம் செய்து தரக் கோரக் கூடாது. இங்ஙனம் செய்வது விவசாயி நீண்ட காலக் கடன் பெறுவதைத் தடுக்கும். விவசாயி தரும் எந்தப் பிணையினையும் ஏற்றுக் கொள்வதற்குச் சங்கத்திற்குத் தடையேதும் விதிக்கப்படலாகாது.

கடன் பெறும் விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். கடனை எவ்வளவு துரிதமாக வழங்க முடியுமோ, அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகள் தனித்தனி விண்ணப்பம் செய்து, கடன் பெறுவதைக் கைவிட்டு, சங்கத்தில் கடன் பெறுபவர்கள் அனைவருக்கும் சேர்த்து ஒரு விண்ணப்பம் தயாரித்து, அதை நேரத்தில் மத்திய வங்கிக்கு அனுப்பி, வங்கியின் அனுமதி கிடைத்ததும் பணத்தைப் பெற்று, விவசாயிகளுக்கு வழங்க

வேண்டும். பணத்தை விரைவாகப் பட்டுவாடா செய்யும் பொருட்டு, கூட்டுறவு வங்கிகள் கிளைகளைத் திறக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் அட்டை ஒன்று அளித்து, அதில் விவசாயிக்குத் தரப்படும் எல்லா வகைக் கடன்களையும் பதிவு செய்து தரவேண்டும் என்ற கருத்து இன்றைய நிலையில் எளிதாகச் செயற்படுத்த முடியாது.

கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் கடன்கள் தவணை கடந்து செல்லாதிருக்க,கடன் பெறுபவர்களுக்கும், விரிவாக்க அலுவலர் களுக்கும், நிருவாக அலுவலர்களுக்கும், அரசியல் தலைவர் களுக்கும் தக்க கல்வி புகட்ட வேண்டும். தவணைத் தேதிக்குப் பல நாட்களுக்கு முன்னரே கடனைத் திருப்பிப் பெறும் முயற்சி களில் ஈடுபட வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் களுக்கு எக் காரணங் கொண்டும் மேலும் கடனளிக்கக்கூடாது. பயிர் விளையாக் காரணத்தால் கடனை அடைக்கத் தவறும் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றித் தரலாம் அல்லது விதி முறைகளுக்குட்பட்டு, காலம் நீட்டித்துத் தரலாம்.

சிறு விவசாயிகள் வளர்ச்சி முகமை (Small Farmers' Development Agency) என்ற புதியதோர் அமைப்பை நிறுவி, சிறு விவசாயிகள் நலனைச் சிறப்பாகக் கவனிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விவசாய உள்ளீடுகள், நீர்ப்பாசனம், இயந்திரங்கள் முதலிய சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கத்தக்க திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். சிறு விவசாயிகளுக்குக் கூடுதலாக அளிக்கப்படும் கடன்கள் திருப்பிச் செலுத்தாமற் போனால், ஏற்படக் கூடிய நட்டத்தை ஈடுசெய்ய இம் முகமை குறிப்பிட்ட விகிதங்களில் தனி நட்ட நிதி (Special risk fund) ஒன்றுக்குப் பணம் ஒதுக்கிவரும்.

வணிக வங்கிகள் விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் கொடுக்க வேண்டும். உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடு வோருக்கு முதலில் இக் கடன் வசதியைக் கொடுக்கலாம். படிப் படியாக எல்லா வகை விவசாயிகளுக்கும் இந்த வசதி தரப்பட வேண்டும். நேரடிக்கடன் மட்டுமல்லாது மறைமுகமாகவும் விவசாய மேம்பாட்டுக்கு வணிக வங்கிகள் கடன் தர வேண்டும். உரம் வாங்க, விநியோகிக்க, இருத்தி வைக்க, விளை பொருள்களைப் பதப்படுத்த, விவசாய தளவாடங்கள் வாடகைக்கு அளிக்க, போன்ற பல பணிகளுக்கும் வணிக வங்கிகள் கடன் தர வேண்டும். ரிசர்வு வங்கி, வணிக வங்கிகள்

அளிக்கும் விவசாயக் கடன்களுக்கு மறு நிதி வசதிகளை அளிக்க வேண்டும். வணிக வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் விவசாயக் கடனளிக்கும் செய்தியில் ஒருங்கிணைந்து செயற் படுதல் மிகவும் இன்றியமையாதது.

கூட்டுறவு வங்கிகள் வைப்புக் காப்பீட்டுத் (Deposit insurance) திட்டத்தின் நன்மைகளைப் பெற, மாநிலங்கள் தத்தம் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தைத் திருத்தி யமைக்க வேண்டும்.

விவசாய மறு நிதிக் கூட்டுரு, தன் நடவடிக்கைகளைப் பெருக்க வேண்டும். உலக வங்கி போன்ற அனைத்துலக நிறு வனங்களிடம் கடன் பெற்று, டிராக்டர்கள், குழாய்க் கிணறு தோண்ட கருவிகள், மீன் வள, பால் வள மேம்பாட்டுத் திட்டங் களுக்குக் கருவிகள் வாங்க ஏற்பாடு செய்யலாம். கூட்டுருத் தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு திட்டங்களை ஆய்வு செய்து, அறிவுரை வழங்கலாம்.

கிராமிய மின்சாரக் கூட்டுரு ஒன்றை நிறுவி, விவசாய வளர்ச்சிக்கு உறு துணையாக விளங்கும் மின் விசையை கிராமங் களுக்கு விரைவாக அளிக்க வேண்டும். பம்புச்செட்டுகள் அமைத்து, நீர்ப்பாசன வசதியை யுண்டாக்க இத் திட்டம் பயனளிப்பதுடன், சிற்றளவுக் கிராமத் தொழில்கள், ஆறுகளி லிருந்து இறைவைப் பாசனம், வீட்டு விளக்கு, கரும்பு, புகையிலை, தேயிலை போன்ற பயிர்களின் வளர்ச்சிக்கும் நீர்ப் பாசனம் போன்ற தேவைகளுக்கும் மின் வசதி பேருதவியாக அமையும். விவசாய மறு நிதிக் கூட்டுரு ஒப்புதல் அளித்த திட்டங்களை நிறைவேற்ற, அத் திட்டங்கள் அமைந்துள்ள இடங்களில் மின் வசதி கிடைக்க, மின்சாரக் கூட்டுரு முதலில் முயலும்.

இதுகாறும் கூறப்பட்ட பரிந்துரைகளைத் தக்கபடி செயற் படுத்த, நல்ல பயிற்சி பெற்ற பணியரும் அலுவலரும் தேவை. கூட்டுறவு இயக்கத் தலைவர்களும் பயிற்சி பெற வேண்டும். இதற்குக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களும், ரிசர்வு வங்கியும், கூட்டுறவு வங்கிகளும் ஒன்று கூடிக் கருத்தரங்குகளும், புத்தொளிப் பயிற்சி முகாம்களும், குறுகிய காலப் பயிற்சி வகுப்புக்களும் நடத்த ஏற்பாடு செய்வது அவசியம். வணிக வங்கிகளின் பணியரும் அலுவலரும் தாம் மேற்கொள்ளும் புதிய விவசாயக் கடன் திட்டங்களை வெற்றிகரமாக நிறை வேற்றத் தக்க பயிற்சி பெற வேண்டும்.

# 9. சீட்டுக்கள், 'நிதி'கள், நிதிக் கம்பெனிகள்

வங்கியத் துறையைச் சாராத, ஆனல் நிதிய நடவடிக்கைகளைச் சார்ந்த, நம் நாட்டுக்கே உரித்தானதொரு பாணியில் நடைபெற்று வரும் சில வகை நிறுவனங்களைப் பற்றி இவ் வத்தியாயத்தில் சுருக்கமாகக் காண்போம்.

**சீட்டுக்கள் அல்லது சீட்டுச் சேர்த்தல் (Chits or chit funds)**

குறி என்றும் அறியப்படும் சீட்டு முறை நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகின்றது. சிறியதொரு தாளில் குறிப்பதையே சீட்டு என்று கூறுவர். எனவே, சிறிய குறிப்பு ஒன்று கொண்டு நடத்தப் பட்ட காரணத்தால் இப் பெயர் வந்தது போலும். சீட்டுப் பிடித்தல் என்று அறியப்படும் இம் முறையில் ஒரு சிலர் ஒன்று கூடிக் குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை (நாடோறும் அல்லது வாரந்தோறும் அல்லது மாதந்தோறும்) குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, ஒவ்வோர் உறுப்பினரும் சீட்டுத் தொகையைக் குறித்த ஏற்பாட்டின் படி பெற வகை செய்யப்படுகின்றது. சீட்டுச் சேர்த்தலில் பல முறைகள் கையாளப்படுகின்றன. அவற்றைச் சாதாரணச் சீட்டு, பரிசுச் சீட்டு, வியாபாரச் சீட்டு என்று வகைப்படுத்தலாம்.

**சாதாரணச் சீட்டு (Simple chit)**

ஒரு சிலர் ஒன்று சேர்ந்து பணம் சேமிக்க விரும்பி நடத்துவது சாதாரணச் சீட்டு எனப்படும். இதில் உறுப்பினர்கள் குறிப்பிட்டதொரு தொகையைக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை செலுத்த ஒப்புகின்றனர். குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டு, எவர் பெயர் தேர்ந்தெடுக்கப் படுகிறதோ, அவருக்கு அந்த முறை வசூலித்த தொகை அளிக்கப்படும். பின்னரும் அவர் தமது சீட்டுப் பணத்தைச் சீட்டுக் காலம் முடிவுறும் வரை கட்டி வரவேண்டும்.

ஒரு முறை எவர் பெயர் தேர்ந்தெடுக்கப் படுகின்றதோ, அவர் பெயர் பின்னர் நடக்கும் குலுக்கலில் இடம் பெறுது. இந்தச் சீட்டு முறையில் எல்லா உறுப்பினருக்கும் முழுத் தொகையும் கிடைக்கும். முதலுக்கு எவ்வித நட்டமுமில்லை. பொதுவாக, இதை நடத்தத் தனி நிருவாகரோ அல்லது முயற்சியாளரோ தேவையில்லை. சிறுகச் சிறுகப் பெரியதொரு தொகையைச் சேமிப்பின் வழி பெற விரும்புவோரின் கூட்டு முயற்சியே சாதாரணச் சீட்டாக மலர்கிறது.

### பரிசுச் சீட்டு (Prize chit)

பரிசுச் சீட்டு என்னும் வகைச் சீட்டை நடத்துவதையே தொழிலாகக் கொண்டு இயங்குவது ஒரு நபராகவோ, கம்பெனி யாகவோ இருக்கலாம். உறுப்பினர்களிடமிருந்து சீட்டுப் பணம் வசூலிக்க இவர் கழிவு ஏதும் வசூலிப்பதில்லை. அவ்வப் போது நடக்கும் குலுக்கலில் பெயர் தேர்ந்தெடுக்கப் படும் நற்பேறு பெற்ற நபர் பரிசு ஒன்றைப் பெறுவார். அப் பரிசு ரொக்கமாகவோ, அல்லது நகைகளாகவோ அல்லது வேறு பொருளாகவோ இருக்கலாம். ஒரு முறை பரிசு பெற்றவர் மேலும் கட்ட வேண்டிய தவணைகளைக் கட்ட வேண்டுவதில்லை. அவர் பெயர் பின் வரும் குலுக்கல்களில் இடம் பெறுது. பரிசு கிடைக்காத நபர் சீட்டுக்காலம் முடிவு பெற்றதும் முழுத்தொகையையும் திருப்பிப் பெறுவார். சீட்டை நடத்துபவருக்கு ஆதாயம், காலந்தோறும் வசூலாகும் சீட்டுப் பணத்தைத் தன் தொழிலில் பயன் படுத்துவதேயாகும். உறுப்பினர் எண்ணிக்கை பெருகப் பெருக இது மிகுந்த ஆதாயம் தரும்.

### வியாபாரச் சீட்டு (Business chit)

இந்த வகைச் சீட்டு ஏலச் சீட்டு (Auction chit) என்றும் அறியப்படும். இச் சீட்டை நடத்துபவர் குறிப்பிட்ட எண்ணிக்கை நபர்களை ஒன்று சேர்த்துக் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட தவணைகளுக்குக் குறிப்பிட்ட தொகையை வசூலிப்பர். சீட்டுத் திட்டத்தில் சேர்ந்தவர் எண்ணிக்கையும் தவணை எண்ணிக்கையும் ஒன்ருக இருக்கும். ஒவ்வொரு தவணையிலும் வசூலிக்கப்படும் சீட்டுப்பணம் ஏலத்தில் விடப்படும். எந்த நபர் பணத்தை மிகவும் தள்ளிக் கேட்கிருரோ, அவருக்குச் சீட்டுத்தொகை (தள்ளிக் கேட்ட தொகையைக் கழித்த தொகை) அளிக்கப்படும். இச் சீட்டை நடத்துபவர் தமது பணிக்குக் கழிவு பெறுகிருர். சீட்டுத் தொகைக்கும் தள்ளிக் கேட்ட தொகைக்கும் உள்ள வேறுபாட்டில் நடத்துபவர் கழிவு போக

மீதமுள்ள தொகை 'பரிசு' அல்லது தள்ளுபடி என்று அறியப் படும். இந்தத் தள்ளுபடித் தொகை எல்லாச் சீட்டுதாரர்களுக் கும் பகிர்ந்தளிக்கப்படும். நடத்துபவர் மொத்தச்சீட்டுத்தொகை யினையும் முதல் தவணையிலோ, இரண்டாம் தவணையிலோ பெற்றுக்கொள்ளும் உரிமையை இருத்திக் கொள்வதுண்டு. சில சீட்டுக்களில் குறிப்பிட்ட ஒரு தொகை பரிசு பெரு உறுப் பினர்களுக்கு ஒதுக்கப் படுவதுண்டு. சில மாநிலங்களில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் சீட்டுதாரர் தள்ளுபடி கேட்கக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பரிசு பெறும் உறுப்பினர் மீதமுள்ள தவணைகளைக் கிரமப்படி கட்டி வர வேண்டும். இந்தப் பொறுப்பை உறுதிப் படுத்திக்கொள்ள நடத்துபவர் பரிசு பெறுபவரிடம் தக்க பிணையினைக் கோருவ துண்டு.

கேரள மாநிலத்திலும் தமிழ் நாட்டிலும் பெருமளவுக்கு சீட்டுப் பிடிக்கும் தொழில் நடந்து வருகின்றது. இத்தொழிலில் ஆண்டுக்கு ரூ. 40 கோடி முதல் ரூ. 110 கோடி வரை பணம் புழங்குகிறது என்று 1966-ல் மதிப்பிடப்பட்டது.

இந்த முறை சேமிப்பில் எந்த ஒரு சீட்டுதாரும் தான் செலுத்தும் பணம் முழுவதையும் முழுமையாகப் பெற இயலாது. நடத்துபவரின் கழிவுத் தொகையளவுக்காவது சீட்டுதாரின் செலுத்திய தொகை திருப்பிப் பெறுகையில் குறைந்து படும். ஆனால், பரிசு பெறும் ஒரு சிலர் தாம் செலுத்தும் சீட்டுப் பணத்தை விடக் கூடுதல் தொகையைப் பெறுகின்றனர். எந்த நிலையிலும் எல்லாச் சீட்டுதாரர்களும் தாம் கட்டிய சீட்டுப் பணத்திற்கும் அதிகமான தொகையைப் பெற முடியாது. இதற்குக் காரணம் சீட்டு நடத்துபவருக்கு முதல் மீது உறுப் பினரல்லாத பிறரிடமிருந்து ஏதும் வருமானம் கிடைப் பதில்லை.

**சீட்டு நடத்துவதில் மோசடிகள்**

சீட்டு நடத்தும் சிலர் சமூக விரோத செயல்களில் ஈடுபடு கின்றனர் என்று தெரிய வருகின்றது. வருமான வரியை ஏய்க்கும் பொருட்டு, கறுப்புப் பணமுள்ள சிலர், சீட்டுத் திட் டத்தில் பரிசு விழுந்ததாகக் காட்டி, கறுப்புப் பணத்தைக் கணக்குக்குக் கொண்டுவருகின்றனர். இச் செயலில் சீட்டு நடத் துபவர் முக்கியப் பங்கு ஏற்பதால், அவருக்கு வரி ஏய்ப்போர் நல்ல சன்மானம் வழங்குகின்றனர். மற்றுஞ் சில இடங்களில் சீட்டு நடந்துவோர் குலுக்கல்களில் மோசடி செய்வதுண்டு.

சீட்டுக் கட்டுபவர்களில் பெரும்பாலோருக்குக் குலுக்கல் நேரத்தில், அங்கு வந்து என்ன நடக்கிறது என்பதைக் காண வாய்ப்பிருப்பதில்லை. இம்மாதிரி நேரத்தில் குலுக்கல் நேரத்தில் வராத ஒருவருக்குப் பரிசு விழுந்தால், அதை அவருக்கு அளிக்காது, நடத்துவோர் தமது நண்பர் அல்லது உறவினருக்குக் கொடுப்பதுண்டு.

சீட்டுச் சேர்த்தல் வழிச் சேமிக்கும் பணம் எவ்வழியில் பயன் படுத்தப்படுகிறது என்று தெளிவாகத் தெரியக் கூடவில்லை. பெரிய தொகைச் சீட்டுதாரர்கள் தமக்குக் கிடைக்கும் பரிசுத் தொகையினைத் தொழில், விவசாயம், வியாபாரம், போக்குவரத்துப்போன்ற துறைகளில் பெரும்பாலும் ஈடுபடுத்துகின்றனர். நடு அளவுச் சீட்டுத் தொகை கட்டுபவர்களில் சிறுபான்மையினரும் (20% அளவினர்), சிறுதொகைச் சீட்டு கட்டுபவர்களில் பெரும்பான்மையினரும் (57%) ஆக்கமற்ற அல்லது நுகர்வு குறித்த நோக்கங்களுக்கே தமது பரிசுத் தொகையைப் பயன் படுத்துகின்றனர் என வங்கியக் குழுவினருக்கு அளிக்கப்பட்ட ஓர் அறிக்கை பேசுகிறது.

ஆந்திரம், கேரளம், தமிழ் நாடு, டெல்லி, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் சீட்டுச் சேர்த்தலை ஒழுங்காற்றும் சட்டங்கள் அமுலில் உள்ளன. உறுப்பினர்களின் நலனைப் பாதுகாப்பதே இவற்றின் நோக்கமாகும். அனைத்திந்திய அளவிலும் இது போன்ற சட்டம் அவசியம் தேவைப்படுகிறது. பரிசுச் சீட்டுத் (Prize chit) திட்டம் நடத்துவது லாட்டரி நடத்தும் குற்றமாகக் கருதப்படுவதால், இதை ஒழுங்காற்ற, சட்டம் ஏற்பாடு செய்யவில்லை.

வணிக வங்கிகள் சீட்டு நடத்தும் தொழிலை ஒரு முகமைப் பணி (Agency service) யாக மேற்கொள்ளலாம். சில கூட்டுறவு வங்கிகள் இதனை மேற்கொண்டுள்ளன. வங்கிகள் சீட்டு நடத்துவதில் உள்ள நன்மை அது நேர்மையாக, நாணயமாக நடத்தப்படும்; சீட்டு தாரர்கள் வங்கிய நடவடிக்கைகளை அறிந்துகொள்ளும் வாய்ப்புப் பெறுவர் ; வங்கி, நடத்துபவருக்கான கழிவுத் தொகையைப் பெறுகிறது; வங்கிக்கு இதில் பணத்தை முதலீடு செய்யும் அவசியமில்லை; வைப்புக்களைத் திரட்டவும் இது உதவுகிறது. கேரளத்தில் அரசுத்துறையில் சீட்டு நடத்த, கம்பெனி யொன்று நிறுவப்பட்டுளது. தனியார் நடத்தும் சீட்டுகளுக்குப் போட்டியாக அமைவது மட்டு மல்லாது இக் கம்பெனி அவற்றை ஒழுங்காக நடத்துவிக்க ஒரு தூண்டு கோலாகவும் அமைகிறது.

நிதிகள் (Nidhis)

தென்னிந்தியாவில், அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில், பரஸ்பர உதவி நிதி (Mutual benefit fund), சாசுவத நிதி (Parmanent fund) என்று பல பெயர்களால் அறியப் படும் நிதியக் கம்பெனிகள் பல காணப்படுகின்றன. இவை இந்தியக் கம்பெனிச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப் பட்டுள்ளன; தமது உறுப்பினர்களோடு மட்டுமே நட வடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. தமது உறுப்பினர்க ளிடமிருந்து தவணை வைப்புக்களையும் தொடர் வைப்புக் களையும் இந் நிதிகள் ஏற்றுக்கொள்கின்றன. வீடு கட்ட, வீடு பழுதுபார்க்க, திருமணச் செலவு, வைத்தியச் செலவு, பழங் கடனைத் தீர்க்க என்பன போன்ற காரியங்களுக்கு நியாய மான வட்டியின் பேரில் உறுப்பினர்களுக்கு நிதிகள் கடனளிக் கின்றன. வீடு, தங்க நகை, கம்பெனிப் பங்குகள், உறுப்பினர் வைப்புக்கள், ஆயுள் பாலிசி போன்ற பிணைகள் மீதே இவை கடனளிக்கின்றன. குறிப்பிட்ட கடனை யடைக்க, கடன் வாங்கு பவரை ஒரு தொடர் வைப்புக் கணக்குத் துவங்கச் சொல்லுவ துண்டு. கணக்குக் காலம் முடிவடைந்ததும், கடன் தீர்ந்து போகிறது. சொத்தும் திருப்பிப் பெறப்படுகிறது. ஓரளவுக்கு நிதிகள் நகரக் கூட்டுறவு வங்கிகளைப் போன்று காணப் பட்டாலும், இவற்றிற்கிடையே முக்கியமான வேறுபாடு ஒன்று உண்டு. கூட்டுறவு நகர வங்கியில் கோரும் கடனளவுக்கு ஏற்ற அளவுக்கு வங்கியில் பங்குகள் எடுக்க வேண்டும். நிதி களில் இந்தப் பங்கெடுப்புத் தேவைப் படுவதில்லை.

வைப்புப் பெறுதல்

உறுப்பினர்கள் பணம் சேமிக்க, அவர்களது சேமிப்பை முதலீடு செய்ய, நியாயமான வட்டியில் கடன் அளிக்க 'நிதிகள்' பெரிதும் உதவுகின்றன. இவற்றை நிருவாகம் செய்பவர்கள் உள்ளூரில் நல்ல நாணயஸ்தர்கள் என்றும், வகையுள்ள புள்ளிகள் என்றும், நல்ல அந்தஸ்து உள்ளவர்களென்றும் பெயர் பெற்றிருப்பது வழக்கம். குறிப்பிட்ட ஓரிடத்தில் மட்டுமே இவை செயலாற்றி வருவதால் அவ்வூர் மக்களிடம் நல்ல செல்வாக்குப் பெற்று, உறுப்பினர்களுக்கு நன்கு பயன் தருகின்றன.

1968ஆம் ஆண்டில் ரூ. 25 கோடி வைப்புக்கள் பெற்றிருந்த 150 நிதிகள் செயலாற்றி வந்தன. ஐக்கிய அமெரிக்க நாட்டில் காணப்படும் சேமிப்பு, கடன் சங்கங்கள் (Savings and Loan

Associations) நம் நாட்டு 'நிதிகள்' போன்று காணப்படு கின்றன. உறுப்பினர் வீடு வாங்க உதவுவதை இருவகை நிறுவனங்களும் தமது நோக்கங்களில் முக்கியமான தொன்றாகக் கொண்டுள்ளன. சீட்டுக் குலுக்கலில் இருப்பது போன்று சூது மனப்பான்மை இந் நிறுவனங்களில் கிடையாது. பெரும்பாலும் நிதிகள் நல்ல முறையில் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு ரூபாய் மதிப்புள்ள ஒரு பங்கு வாங்கி எவரும் நிதியில் உறுப்பினராகச் சேரலாம். வைப்புக்களைத் திரட்டி, கடன்களை வழங்கும் பணியினை இந் நிதிகள் மேற்கொண்டிருப்பதால் இவை வணிக வங்கிகள் போன்றும் காணப்படுகின்றன. ஆனால், வங்கியக் கம்பெனிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் இவற்றிற்குப் பொருந்தா. வைப்பாளர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் இவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் நன்மை யளிக்கும். நிதிகளுக்கும் வணிக வங்கிகளுக்கும் ஏதும் தொடர்பே இல்லாமலிருக்கிறது. நிதிகள் வணிக வங்கிகளிடமிருந்து பெரும்பாலும் கடன் ஏதும் பெறுவதில்லை. இதனால் உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் கடன்கள் அனைத்தையும் தந்துதவ, நிதிகளுக்குப் பண வசதி இருப்பதில்லை. நிதிகளுக்கும் வணிக வங்கிகளுக்குமிடையே பிணைப்பு ஏதுமிருப்பின், வணிக வங்கிகள் நிதிகள் மூலமாக சிறு கடன்களை அளிக்கலாம். உள்ளூரில் செல்வாக்குள்ள நிதிகள் மூலம் கடனளித்தால் திருப்பிப் பெறுவது எளிதாக இருக்கும். வணிக வங்கிகளின் வைப்பாளர்கள் பெறும் வரிச் சலுகைகள் நிதியில் வைப்புப் போட்டிருப்பவர்களுக்குக் கிட்டுவ தில்லை.

### ஒழுங்காற்றல்

கேட்பு வைப்பு ஏற்றுக் கொள்ளும் நிதிகள் வணிக வங்கி களுக்கான விதிகளின்படி ஒழுங்காற்றப்பட வேண்டும். ரிசர்வு வங்கியோ அல்லது பிற ஆணையமோ வழங்கும் உரிமம் பெற்றே நிதிகள் இயங்கலாம். மேலும் எளிவரல் சொத்துக் களின் குறைந்த அளவு விகிதம் இலாபத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு விகிதத்தைக் காப்பு நிதிக்கு ஒதுக்கல் போன்ற செய்தி களிலும் இவை ஓர் ஒழுங்கைக் கடைப்பிடிக்கலாம். குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஒழுங்காற்றும் ஆணையத்தினால் இவை ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகளை மேற் கொண்டால், நிதிகள் மேலும் வளர்ச்சி பெற வாய்ப்புக்கள் உண்டு.

**நிதியக் கார்ப்பரேஷன் (Finance Corporation)**

நிதியக் கம்பெனி (Finance Company), கடன் கம்பெனி (Loan Company), நிதியக் கார்ப்பரேஷன் (Finance Corporation) என்று பல பெயர்களால் அறியப்படும் கம்பெனிகள் மைசூர், ஆந்திரம், குஜராத் மாநிலங்களில் சில இடங்களில் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் துவங்கப் பெற்றுள்ளன. மிகவும் கவர்ச்சிகரமான வட்டி யளித்து, பொதுமக்களின் சேமிப்புக்களைத் திரட்டும் இந்திய நிறுவனங்கள் சில சமயம் ரொக்கமாகவோ அல்லது வேறு வகையிலோ பரிசுகளை வழங்குவதும் உண்டு.

**உண்மையில் கூட்டாண்மையே**

நிதியக் கார்ப்பரேஷன் எனப்படும் நிறுவனம் உண்மையில் ஒரு கூட்டாண்மை நிறுவனமாகும். பத்து அல்லது அதற்குக் குறைவான நபர்கள் கூட்டாகச் சேர்ந்து, ஓர் இலட்சம் ரூபாய்க்கு மிகாத தொகையுடன் இந் நிறுவனத்தைத் துவக்குகின்றனர். கூட்டாளிகள் பெரும்பாலும் வணிகர்களாக இருப்பர். முதல் ஓர் இலட்சத்துக்குக் குறைவாக இருப்பதால் இந் நிறுவனம் ரிசர்வு வங்கியின் ஆட்சிக்கு உட்படுவதில்லை.

**வைப்புத் திரட்டல்**

முப்பது நாட்கள் முதல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் வரை தவணையின் பேரில் இந் நிறுவனங்கள் வைப்புக்களைப் பெறுகின்றன. குறுகிய கால வைப்புக்கள் மீது 4 முதல் 6 சத வீத வட்டியும், ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணை வைப்புக்கள் மீது 13 முதல் 14 சத வீத வட்டியும், சேமிப்பு வைப்புக்களின் மீது 7 முதல் 8 சத வீத வட்டியும் இவை அளிக்கின்றன. பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஈர்க்க, இந்த நிதியக் கூட்டுக்கள் புதுப்புதுத் திட்டங்களை உருவாக்கி வருகின்றன.

**கடனளிப்பு**

மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் போன்றவர்கட்கு இந் நிறுவனங்கள் கடனளிக்கின்றன. இவை கடன் மீது 18 சத விகிதம், ஆனால் உண்மையில் 24 முதல் 36 சதவிகிதம் வட்டி இவற்றால் வசூலிக்கப்படுகின்றன என்று சிலர் கூறுகின்றனர். இவை அளிக்கும் கடன்களுக்குப் பெரும்பாலும் பிணையேதும் இருப்பதில்லை. வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெற முடியாதவர்கள், வணிக வங்கிகளின் நடைமுறை தொல்லை

மிக்கது, தாமதமுண்டாக்குவது என்ற காரணங்களால் வணிக வங்கிகளிடம் கடன் கோர விரும்பாதவர்கள் போன்றோர் இக் கூட்டுருக்களிடமிருந்து கடன் பெறுகின்றனர்.

வங்கியத் தொழிலான வைப்புத் திரட்டலையும், கடனளித் தலையும் முக்கியப் பணிகளாகக் கொண்டு திகழும் இந் நிறு வனங்கள் வங்கிக் கம்பெனிகள் என்ற நிலை பெறுமையால், வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருச் சட்டத்தின் நன்மை இவற் றிற்குக் கிடைப்பதில்லை. இந் நிறுவனங்களின் முதல் மிகக் குறைவாகவும், அதை நோக்க இவை திரட்டும் வைப்புத்தொகை மிகப் பல மடங்காக இருப்பதும் கவனிக்கத் தக்க செய்தியாகும். நிறுவனத்தின் கூட்டாளிகளின் நாணய நிலையை நம்பி, பெரும் பாலரோர் வைப்புக்களைச் செலுத்துவது உண்மை யெனினும் இந் நினைப்பு அவ்வளவு சரியானதல்ல. ஏனெனில், ஒவ்வொரு கூட்டாளியும் தானே தொழில் ஒன்று நடத்தி வருவதுண்டு; ஆகவே, அவரிடம் உபரித் தொகை ஏதும் இருப்பது கடினம். மற்றும் கூட்டாளிகள் அனைவருடைய நிகரச் சொத்தைக் கணக் கிடுவதும் எளிதன்று. மிக உயர்ந்த வட்டிக்கு இந் நிறு வனங்கள் கடனளிப்பதே, கடன் பெறுபவர்கள் நட்டவச்சம் மிகுந்துள்ள தொழில்களை மேற்கொள்ளுகின்றனர் என்பதைக் காட்டுகின்றது. ஒரே கடன் கோரும் பேர்வழி பல நிதியக் கூட்டுருக்களிடம் கடன் வாங்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் வைப்பாளர்களின் நலன் பாதிக்கப்படலாம்.

நிதியக் கம்பெனிகள் வட்டித் தொழிலர் சட்டத் (Money-lenders' Act) தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆகவே, இவை கடன்கள் மீது குறிப்பிட்ட விகிதத்திற்கு மேல் வட்டி வசூலித்தல் சட்ட விரோதமாகும். இந்த ஒரு கட்டுப்பாட்டைத் தவிர, இந் நிறுவனங்களின் நடவடிக்கைகளை வேறு எவரும் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், வைப்பாளர்களின் நலனைப் பாதுகாக்க ஏற்பாடுகள் அவசியம் தேவை. இந் நிறுவனங் களின் நடவடிக்கைகளை வணிக வங்கிகளின் நடவடிக்கைகளை ஒழுங்காற்றுவது போன்றே ஒழுங்காற்ற வேண்டும். மிகவும் உயரிய வட்டி கிடைக்கிறதென்று, பேராசையால் நடுத்தர நிலையிலுள்ள மக்கள், இதில் ஏற்படக் கூடிய ஆபத்தினையும் (முதலே முழுகிப் போய்விடக் கூடிய ஆபத்து) பொருட்படுத் தாது பணத்தை வைப்புக்களில் செலுத்துவதுண்டு. இந் நிறு வனங்களின் நடவடிக்கைகளைச் சட்டங்களாலும் விதிகளாலும் ஒடுக்குவது முடியாத செயலாகும். வணிக வங்கிகள் தமது கடனளிப்பைச் சீரமைத்து, இந் நிறுவனங்களுடன் போட்டி யிட்டு, இவற்றின் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டும்.

# 10. அஞ்சலகம், காப்பீட்டு நிலையங்கள், பங்குமாற்று நிலையங்கள்

### அஞ்சலக சேமிப்பு வங்கி

தொன்று தொட்டு அரசு அமைத்த சேமிப்பு நிலையமாக நம் நாட்டில் விளங்கி வருவது அஞ்சலகச் சேமிப்பு வங்கி. சேமிப்பு வங்கியில் வைப்புக்களைச் செலுத்துவது மட்டுமன்றி, அஞ்சலக ரொக்கச் சான்றிதழ் (Postal Cash Certificates) பெற லாம்; அரசினர் பிணையங்களைச் செலவேதுமின்றி வாங்கலாம், விற்கலாம்; ஆயுள் காப்பீட்டுப் பாலிசிகளைப் பெறலாம். சிறு சேமிப்புத் துறையில் அஞ்சலக சேமிப்பு வங்கி பெரியதொரு முன்னோடியாகத் திகழ்ந்து வந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 1883ஆம் ஆண்டில் அஞ்சலகச் சேமிப்பு வங்கி நிறுவப்பெற்றது. இவ்வங்கிகள் நாளடைவில் வளர்ந்து, சிறு சேமிப்பு இயக்கத்தின் முக்கியமானதோர் அங்கமாக தற் போது விளங்கி வருகின்றன.

நாடெங்கிலும் உள்ள தலைமை, உப, கிளை அஞ்சலகங்களில் அஞ்சலகச் சேமிப்பு வங்கிகள் இயங்கி வருகின்றன. நடுத்தர வகுப்பினரிடையே சேமிப்புப் பழக்கத்தையும் சிக்கனத்தையும் வளர்க்கும் பொருட்டு இவை நிறுவப்பட்டன.

இந்தியா விடுதலை பெற்ற பின்னர், அஞ்சலகச் சேமிப்பு வங்கிகள் வெகுவாக வளர்ச்சியுற்றன. 1947-ல் 9,000 அஞ்ச லகங்களில் மட்டும் சேமிப்பு வங்கி வசதியிருந்தது. ஆனால் தற் போது (1972) ஓர் இலட்சத்துக்கும் கூடுதலான அஞ்சலகங்கள் சேமிப்பு வங்கிகளைக் கொண்டுள்ளன. இவற்றில் 80 சதவீதம் கிளை அஞ்சலகங்கள் கிராமப் புறங்களில் அமைந்துள்ளன. 1968—72-ல் மட்டும் 40,000 கிளை அஞ்சலகங்களில் சேமிப்பு வங்கி வசதிகள் செய்து தரப்பட்டன.

வைப்பாளர்களின் எண்ணிக்கை 1947-ல் 3·15 மில்லியனாக இருந்தது, 1972-ல் 24 மில்லியனாக உயர்ந்தது. வைப்புத் தொகையும் 1947-ல் ரூ. 128 கோடியாக இருந்தது, 1927-ல் ரூ. 978 கோடியாக வளர்ந்தது. குவிந்த தவணை வைப்பு, தவணை வைப்பு, சேமிப்புச் சான்றிதழ் போன்ற இனங்களில் ரூ. 1,242 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் அஞ்சலகச் சேமிப்பு வங்கி ரூ. 2,220 கோடி தன் வசம் கொண்டுள்ளது.

**சேமிப்புத் திட்டங்கள்**

அஞ்சலகச் சேமிப்பு வங்கிகளில் அவ்வப்போது புதுப்புதுத் திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. புது வகைக் கணக்குகளும் சான்றிதழ்களும் வழங்கப் பெறுகின்றன. வட்டி ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. காசோலை விடுத்து, பணத்தைத் திருப்பிப் பெறும் வசதி 17,000 அஞ்சலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வைப்பாளர்கள் பிற நபரொருவருக்கு வைப்பைத் தருமாறு ஏற்பாடுகள் செய்ய வசதியுண்டு.

அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கு, சான்றிதழ் முதலியவற்றைச் செலவின்றி ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு மாற்றிக் கொள்ளலாம். சேமிப்புச் சான்றிதழை எந்த அஞ்சலகத்திலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம். குவிந்த தவணை வைப்பு, தொடர் வைப்பு ஆகியவை வழி ஐந்து, பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் முடிந்தவுடன், மொத்தமாக ஒரு தொகையைப் பெற வாய்ப்பளிக்கின்றன. ஊதியம் பெறுவோர் எளிதில் சேமிக்க, ஊதியச் சேமிப்புத் திட்டம் அமுலிலுள்ளது. திங்கள் தோறும் ஊதியத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு தொகை பிடிக்கப்பட்டு, ஊழியரின் கணக்கில் வரவு வைக்கப் பெறும்.

ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பணந் திரட்ட அஞ்சலகச் சேமிப்பு வங்கி பேருதவியாக உள்ளது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ரூ. 1,214 கோடி அஞ்சலகங்கள் வழி சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் திரட்டப்பட்டது. நான்காவது திட்ட காலத்திற்கு ரூ. 770 கோடி குறியீடாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. சிறு சேமிப்புத் திட்டத்தின்படி செய்யும் வசூல் திட்டங்களுக்குப் பணம் நல்குவது மட்டுமன்றிப் பணவீக்கத்தையும் ஓரளவுக்குக் குறைத்துப் பொருளாதார நிலையை மேம்படுத்துகிறது.

1970 ஆம் ஆண்டு முதல் அஞ்சலக வங்கிகளில் புதுமைச் சேமிப்புத் திட்டங்கள் பல கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

1. 7 ஆண்டு தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் (இரண்டாவது வெளியீடு) [7 Year National Savings Certificates—Second Issue]

இப்பத்திரங்கள் ரூ. 10, ரூ. 100, ரூ. 1,000, ரூ. 5,000 தொகைகளாகக் கிடைக்கின்றன.

ஏழு ஆண்டு முதலீட்டுத் தொகையுடன் 5 சதவிகிதம் கூட்டு வட்டி சேர்க்கப்பட்டு, ரூ. 100, ரூ. 141 ஆகத் திருப்பி அளிக்கப்படுகிறது.

இப் பத்திரங்களில் செய்யும் முதலீடுகளில் ரூ 1·5 இலட்சம் வரை செல்வ வரி (Wealth Tax) விலக்கு உண்டு.

மூன்று ஆண்டுகள் முடிந்த பிறகு, முதலீட்டுத் தொகையுடன் மூன்று ஆண்டுக்கான வட்டியையும் திரும்பப் பெறலாம்.

பதினான்கு ஆண்டுகளில் முதலீட்டுத் தொகை ஏறத்தாழ இரு மடங்கு ஆகிறது.

2. 7 ஆண்டு தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் மூன்றுவது வெளியீடு.

இப் பத்திரங்கள் ரூ 100, ரூ. 1,000, ரூ 5,000 தொகைகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் மீது அளிக்கப்படும் 5 சத விகிதம் வட்டி ஓவ்வோர் ஆண்டும் வழங்கப்படும். வட்டிக்கு வரி விலக்கு உண்டு. செல்வ வரியிலிருந்தும் இவ்வகை முதலீடுகள் ரூ 1·5 இலட்சம் வரை விலக்குப் பெறுகின்றன.

முன்று ஆண்டுகள் முடிந்த பிறகு, முதலீட்டுத் தொகையிலிருந்து சிறியதொரு தொகையைக் கழிவாக கழித்துக் கொண்டு, மீதித் தொகையை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

3. 7 ஆண்டு தேசியச் சேமிப்புப் பத்திரம் நான்காவது வெளியீடு.

ரூ. 100-ம் இதன் பெருக்குத் தொகைகளிலும் வரையரையின்றி முதலீடு செய்யலாம்.

இதன் மீது $7\frac{1}{2}$ சத விகிதம் வட்டித் தொகை அளிக்கப்படுகிறது. வட்டித் தொகையை ஒவ்வோர் ஆண்டும் பெற்றுக் கொள்ளலாம். வட்டி மீது வருமான வரி விலக்கு உண்டு.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, எப்பொழுது வேண்டு மாறுலும் முதலீட்டுந் தொகையைத் திரும்பப் பெறலாம் செல்வ வரி விலக்கு ரூ. 1·5 இலட்சம் முதலீடுகள் வரையுண்டு.

4. காலவரை வைப்பு (Post Office Time Deposits)

இவ்வகை வைப்புக்கள் ரூ. 50-ம் இதன் பெருக்குத் தொகை களிலும் கிடைக்கின்றன.

ஓர் ஆண்டு, மூன்று ஆண்டு, ஐந்தாண்டு கால வரைகளில் வைப்புக்களைச் செய்யலாம்.

ஓர் ஆண்டு முதலீட்டுக்கு 6 சத விகித வட்டியும், மூன்று ஆண்டிற்கு 7 சத விகித வட்டியும், ஐந்தாண்டிற்கு $7\frac{1}{4}$ சத விகித வட்டியும் வழங்கப்படுகின்றன.

5, தொடர் வைப்புத் திட்டம் (Recurring Deposit Scheme)

இத்திட்டத்தில் ரூ. 5-ம் இதன் பெருக்குத் தொகையும் முதலீடு செய்யப்படலாம்.

ஊதியப் பட்டியல் (Pay Roll) மூலமாகவும் இதில் சேரலாம்.

இவ்வகை வைப்பின்மீது $6\frac{3}{4}$ சத விகிதம் கூட்டு வட்டி வழங் கப்படுகிறது. வட்டிக்கு வருமான வரி உண்டு. சேமிப்பில் ஒரு பாதியை ஒரு முறை எடுக்கும் வசதியுமுண்டு. மாத வைப்புத் தொகை ரூ. 5 ஆக இருப்பின், ஐந்தாண்டுகளின் இறுதியில் அது ரூ. 355 ஆக வளர்ந்து நிற்கும்.

மேற்கண்ட திட்டங்களன்றி, முன்னரே இருந்து வரும் சில திட்டங்கள் மேலும் சிறப்புடையனவாக திருத்தப்பட்டுள்ளன.

அஞ்சலகச் சேமிப்பு வங்கிகளில் உள்ள கணக்கில் ரூ. 100க்குக் குறையாத தொகையொன்றை ஆண்டு முழுவதும் கணக்கில் வைத்திருந்தால், அத் தொகை மீது $4\frac{1}{4}$ சத விகிதம் வட்டி அளிக்கப்படுகிறது. மற்றும் ரூ. 100 அல்லது அதன் பெருக்குத் தொகையினை இரண்டு அல்லது மூன்ருண்டுகளுக்கு எடுக்காமலிருப்பதாக அஞ்சலக அலுவலருக்குத் தெரிவித்து விட்டால், அத்தொகை மீது கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலகச் சேமிப்புக் கணக்கில் பெறும் வட்டிக்கு வருமான வரி கிடையாது.

வளரும் மாத சேமிப்புத் திட்டமொன்றையும் அஞ்சலகச் சேமிப்பு வங்கிகள் அளித்து வருகின்றன. ரூ. 5 அல்லது அதன்

பெருக்குத் தொகையினை 5அல்லது 10 அல்லது 15 ஆண்டுகளுக்குத் திங்கள் தோறும் செலுத்தி வந்தால், கால இறுதியில் கணிசமான ஒரு தொகை கிடைக்கும். 10 அல்லது 15 ஆண்டுக் கணக்கில் செலுத்தப்படும் தொகைக்கு வரிச் சலுகை உண்டு. கணக்கு முதிர்வடைந்ததும், குறிப்பிட்ட ஒரு தொகை போனசாக அளிக்கப்படுகிறது.

### உயிர் காப்பீட்டு ஏற்பாடு

முன்னரே கண்டபடி அஞ்சலகம் உயிர் காப்பீட்டு ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுகிறது. அரசாங்கமே ஏற்பாடு செய்யும் காப்பீடாக இது அமைவதால், இதன் மீது மக்களுக்கு நல்ல ஈடுபாடு இருக்கின்றது. மற்றும் முனைமம் (Premium) ஊதியத்திலிருந்து பிடித்துக் கொள்ளப்படுவதால் அதைச் செலுத்தும் சிரமம் தெரிவதில்லை. முனைமத் தொகை அஞ்சலக ஆயுள் காப்பீட்டுத் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

### காப்பீட்டு நிலையங்கள் (Insurance Companies)

பொதுமக்களின் சேமிப்பின் கணிசமானதொரு பகுதியை ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகள் பெறுகின்றன. முனைமத் தொகையாகப் பெற்ற பணத்தைக் காப்பீட்டுக் கம்பெனிகள், அரசாங்கப் பிணையங்கள், கூட்டுறவு நில வள வங்கிகளின் கடனீட்டுப் பத்திரங்கள், தொழிற் கம்பெனிகளின் பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவற்றில் முதலீடு செய்கின்றன. 1956 ஆம் ஆண்டு ஆயுள் காப்பீடு நாட்டுடைமையாக்கப்பட்டது. 1971-ல் பொதுக் காப்பீடு (General Insurance) நாட்டுடைமை யாக்கப்பட்டது.

நாட்டுடைமைக்கு முன்னர் 1954-ல் இந்தியாவில் ஆயுள், தீ, கடல் இன்னும் பிற காப்பீடுகளை மேற்கொள்ளும் கம்பெனிகள் 319 இருந்தன. இவற்றில் 215 இந்தியக் கம்பெனிகளாகவும், 104 வெளிநாட்டுக் கம்பெனிகளாகவும் இருந்தன. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகளின் சொத்து ரூ. 293·9 கோடியாகவும், அவை காப்பீடு செய்த மொத்தத் தொகை ரூ. 830 கோடியாகவும் இருந்தது. நாட்டுடைமை மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் மொத்தம் 245 கம்பெனிகள், ரு. 411 கோடி சொத்துக்களைக் கொண்டிருந்தன. ஐம்பது இலட்சத்துக்கும் அதிகமான பாலிசிகள் வழக்கிலிருந்தன. இவற்றின் மூலம் காப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1,250 கோடியாக இருந்தது.

**ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு**

மார்ச்சு 31, 1973-ல் முடிவுற்ற ஆண்டுக்கு ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு எந்த அளவுக்கு வளர்ந்திருந்தது என்பதைக் காண்போம். 1971-72-ல் புதிதாக மேற்கொள்ளப் பட்ட தொழில் ரூ. 1,639 கோடியாக இருந்தது. மொத்தம் 19·01 இலட்சம் புது பாலிசிகள் வெளியிடப்பட்டிருந்தன. இதில் 12·69 இலட்சம் பாலிசிகள் தம் ஆயுளை முதன் முறை யாகக் காப்பீடு செய்பவர்களுக்கு வெளியிடப்பட்டது. கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் 5·99 இலட்சம் பாலிசிகள் ரூ. 376 கோடிப் பெறுமானத்திற்கு வெளியிடப்பட்டது குறிப் பிடத்தக்க நிகழ்ச்சி.

சராசரி ஒரு பாலிசிக்கு ரூ. 7,937 காப்பீடு அமைந்தது. ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வரை காப்பீடு அளித்த பாலிசிகளின் எண்ணிக்கை 11·99 இலட்சமாக இருந்தது.

ஊதியச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் கூட்டுரு 5,84,490 பாலிசி களை வெளியிட்டு, ரூ. 331·68 கோடிக் காப்பீடு ஏற்றது.

1972 மார்ச்சு இறுதியில் கூட்டுரு 157·99 இலட்ச பாலிசிகளை வெளியிட்டு, அவற்றின் வழி ரூ. 8,202 கோடிக் காப்பீடு தந்திருந்தது.

**கூட்டுரு செய்துள்ள முதலீடுகள்**

மக்கள் முனைமமாக அளிக்கும் பணத்தை மக்கள் நலனுக்குப் பயன்படுத்தும் வகையில் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவின் முதலீடுகள் அமைந்துள்ளன. மேற் கூறிய தேதி வரை கூட்டுரு முதலீடு செய்த தொகையின் ஏட்டு மதிப்பு ரூ. 1,952·66 கோடி யாகும். இதில் ஆயுள் காப்பீட்டைச் சேர்ந்தது ரூ. 1,926·13 கோடி மதிப்புள்ளதாகும். ஆயுள் காப்பீட்டுத் துறையில் இந்தியாவில் செய்துள்ள முதலீடுகளில் 74·0 சத வீதம் (ரூ. 1,375 கோடி) பொதுத் துறையிலும், 10·9 சத வீதம் (ரூ. 201 கோடி) கூட்டுறவுத் துறையிலும், 0·2 சதவீதம் (ரூ. 4·42 கோடி) கூட்டுத் துறை (Joint sector)யிலும், 14·9 சத வீதம் (ரூ. 277 கோடி) தனியார் துறையிலும் அமைந்திருந்தது.

நகராட்சியின் கழிவு நீர் அகற்று திட்டங்களுக்கும், நகர்ப் புற-கிராம நீர் வழங்கு திட்டங்கள் பொருட்டுத் தன்னாட்சி ஆணையங்களுக்கும், வீடு கட்டுவதற்கும், மாநில மின் வாரியங் களுக்கும் கடன் கொடுத்து, சமூக நலனை மேம்படுத்துகிறது.

வீடு கட்ட, குடிநீர் வழங்க, மின் வசதி விரிவு படுத்த மொத்தம் ரூ. 600 கோடி. அதாவது மொத்த முதலீடுகளில் 29 சத வீதம் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நல்ல வீட்டில், நல்ல நீர் வசதியுடன் நல்ல வெளிச்சம் காற்றுடன் வாழ்ந்தால் மக்கள் நீடு வாழலாம். மக்கள் நீடு வாழ்ந்தால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு இலாபம்தானே. சடுதியில் மடிந்தால் தானே காப்பீட்டுக் கூட்டுரு நட்டத்தை ஈடு செய்ய நேரும். எனவே, மக்கள், குறிப்பாக ஆயுள் காப்பீடு செய்தவர்கள், நெடிது வாழ்வதில் கூட்டுருவுக்கு அக்கறையுண்டு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

**பொதுக் காப்பீடு (General Insurance)**

மே 1971-ல் இந்திய அரசு பொதுக் காப்பீட்டுத் துறையில் இருந்து வந்த 106 காப்பீட்டுக் கம்பெனிகளை நாட்டுடைமை யாக்கியது. இவற்றில் 64 இந்தியக் கம்பெனிகளும் 42 அயல் நாட்டுக் கம்பெனிகளுமாக இருந்தன. தீ, கடல் மற்றும், பிற வகைக் காப்பீடு மேற்கண்ட 106 கம்பெனிகளால் மட்டுமன்றி, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவாலும் சில மாநில அரசுகளாலும் கூட மேற்கொள்ளப்பட்டிருந்தது. மாநில அரசுகள் நடத்தும் தொழில், வணிக நிறுவனங்களிலுள்ள சொத்துக்களைக் காப்பீடு செய்ய, குஜராத், மகாராட்டிர மாநிலங்கள் காப்பீட்டு நிதியொன்றை நிறுவியுள்ளது. கேரள அரசு தீ, மோட்டார் காப்பீட்டையும், மைசூர் (கர்நாடகம்) மோட்டார் காப்பீட்டையும் ஏற்று நடத்தி வருகின்றனர்.

1969ஆம் ஆண்டு இறுதியில் 124 காப்பீட்டுக் கம்பெனிகள் இருந்தன. அவற்றில், 72 இந்தியக் கம்பெனிகள், 52 அயல் நாட்டுக் கம்பெனிகள். இக் கம்பெனிகள் அனைத்தும் 1968-ல் இந்தியாவில் செய்த தொழிலில் ரூ. 107·6 கோடி மொத்த முனைமம் (Premium) பெற்றனர். இதில் இந்தியக் கம்பெனி களின் பங்கு ரூ. 83·5 கோடி (77·6%), பிற கம்பெனிகளின் பங்கு ரூ. 24·1 கோடி (22·4%).

மேற்கூறிய கம்பெனிகளின் மொத்தச் சொத்து ரூ. 187·78 கோடியாக இருந்தது. இதில் இந்தியக் கம்பெனிகள் பங்கு ரூ. 161·96 கோடி பிற கம்பெனிகளின் பங்கு ரூ. 25·82 கோடி. இக் கம்பெனிகள் தமது முதலீடுகளில் கணிசமான பகுதியைத் தொழில் நிலையங்களின் பிணையங்களில் போட்டிருந்தன. அரசினர் பிணையங்களில் மிகக் குறைவான அளவே முதலீடு செய்திருந்தன. இக் கம்பெனிகள் 1968-ல் ரூ. 8·55 கோடி

இலாபம் ஈட்டியிருந்தன. 1969-ல் இந்தியக் கம்பெனிகள் ரூ. 10·83 கோடி அளவிற்கும் அயல் நாட்டுக் கம்பெனிகள் 23 கோடி அளவிற்கும் தொழில் செய்திருந்தனர். நாட்டுடைமை யாக்கப்பட்ட கம்பெனிகளின் மொத்தச் சொத்து 1969-ல் ரூ. 240 கோடி என மதிப்பிடப்பட்டது.

நாட்டுடைமையாக்கப் பட்ட இந்திய, அயல் நாட்டுப் பொதுக் காப்பீட்டுக் கம்பெனிகளை, இந்திய அரசு, நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கம்பெனியைத் தேர்ந்தெடுத்து, அந் நான்கு கம்பெனிகளையும் பொதுக் காப்பீட்டுக் கூட்டுறவின் (General Insurance Corporation) துணை நிறுவனங்களாக அமைக்கும் வகையில் ஏற்பாடு செய்துள்ளது.

### பங்கு மாற்று நிலையங்கள் (Stock Exchanges)

மூலதனச் சந்தையில் பெருமை மிக்கதொரு இடம் பெறும் அங்கம் பங்கு மாற்று நிலையமாகும். தொழில் நிலையங்களும், அரசினரும், அரசினர் போன்ற அமைப்புக்களும், தமக்கு வேண்டிய முதலைத் திரட்ட, பங்கு மாற்று நிலையங்களை நாடு கின்றனர். ஏற்கனவே வெளியிடப் பட்டுள்ள பங்குகளுக்கும் பிணையங்களுக்கும் தொடர்ந்து தயாராக ஒரு சந்தை இருப்பது பங்கு மாற்று நிலையங்களால் தான் என்பது எல்லோரும் ஒப்பும் உண்மை. முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது மட்டுமல்லாது, தேவைப்பட்ட நேரத்தில் பங்குகளையும் பிணையங்களையும் எளிதில் விற்றுத் தரவும் இந் நிலையங்கள் உதவுகின்றன. முதலீடு மிகவும் பத்திரமாக இருக்கவும், அதே நேரத்தில் நியாயமான ஆதாயம் கிடைக்கவும் முதலீட்டாளர் விரும்பு கிறார். முதல் தக்க வழிகளில் ஆதாயந் தரும் வகையில் பயன் படுத்தப்பட, பங்கு மாற்று நிலையம் உதவுகிறது.

உலகின் மிகப் பழைய பங்கு மாற்று நிலையம் ஹாலந்து நாட்டில் உள்ள ஆம்ஸ்டர்டாம் பியுர்ஸ் (The Amsterdam beurs) என்பதாகும். இது 16ஆம் நூற்றாண்டிலேயே செயற்பட்டு வந்தது. லண்டன் பங்கு மாற்று நிலையம் 1973-ல் நிறுவப் பெற்றது. பின்னர் நியூ யார்க் பங்கு மாற்று நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

நம் நாட்டில் 1887 ஆம் ஆண்டில் பம்பாய் பங்கு மாற்று நிலையம் துவக்கப்பெற்றது. இதையடுத்து 1894-ல் அகமதாபாத்

பங்குத் தரகர் சங்கம் ஏற்படுத்தப் பட்டது. 1908-ல் கல்கத்தா பங்கு மாற்றுச் சங்கம் நிறுவப் பெற்றது. சென்னையில் 1920 ஆம் ஆண்டில் சென்னைப் பங்குமாற்று நிலையம் ஏற்படுத்தப் பட்டது. ஆனால் மூன்றாண்டுகள் கழித்து, தொழில் கிடைக்காத காரணத்தால் இம் மாற்று நிலையம் மறைந்தது. மறுபடியும் 1937 ஆம் ஆண்டு சென்னைப் பங்கு மாற்று நிலையம் புதிதாகத் துவங்கப்பட்டது. 1937-ல் பங்குச் சந்தை மிகவும் செழித்து வளர்ந்ததால் பம்பாயிலும் கல்கத்தாவிலும் முன்னரே இயங்கி வரும் பங்குச் சந்தைகளுக்குப் போட்டியாக இரு பங்கு மாற்று நிலையங்கள் தோன்றின. இரண்டாம் உலகப்போர் 1939-ல் மூண்ட பொழுது, இந்தியாவில் எட்டுப் பங்குச் சந்தைகள்—பம்பாய், கல்கத்தா, அகமதாபாத்தில் இரண்டு வீதமும், சென்னை, லாகூரில் ஒவ்வொன்றுமாக இயங்கி வந்தன. இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட பெருக்க நிலையை யொட்டி மிகப் பல பங்கு மாற்ற நிலையங்கள் துவக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை நலிந்து அழிந்து போயின.

மத்திய அரசு 1956ஆம் ஆண்டில் இயற்றிய பிணையங்கள், ஒப்பந்தங்கள் (ஒழுங்காற்றுச்) சட்டப் (Securities Contracts Regulation) Act படி முதன் முதலாக அமைக்கப்பெற்ற பம்பாய், கல்கத்தா, சென்னை, அகமதபாத், டெல்லி, ஹைதராபாத், இந்தூர் பங்கு மாற்று நிலையங்கள் மட்டுமே ஒப்புதல் பெற்றன. மேற்கண்ட சட்டப்படி மத்திய அரசுக்கு மிகவும் விரிவான மேற்பார்வை அதிகாரங்களும், கட்டுப் படுத்தும் உரிமையும் வழங்கப்பட்டது.

தற்போது நம் நாட்டில் ஏழு பங்கு மாற்று நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்றான பம்பாய் பங்கு மாற்று நிலையத்திற்கு மட்டுமே அரசு நிரந்தர ஒப்புதல் அளித் துள்ளது. பம்பாய், அகமதாபாத் இந்தூரிலுள்ள நிலையங்கள் இலாப நோக்கற்ற தன் விருப்பச் சங்கங் (Voluntary non-profit-making association) களாக அமைக்கப் பட்டுள்ளன; கல்கத்தா, டெல்லி பங்கு மாற்று நிலையங்கள் பங்குகளால் வரையறுத்த கம்பெனிகளாக அமைக்கப் பட்டுள்ளன; சென்னை, ஐதராபாத் நிலையங்கள் பொறுப்புறுதியால் வரை யறுக்கப் பட்ட கம்பெனிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஒப்புதல் அளிக்கப்பெற்றுள்ள பங்குமாற்று நிலையங்களின் இன்றைய நிலை**

அரசாங்கம் அனுமதித்துள்ள விதிகளுக்கும், ஒழுங்கு முறைகட்கும் உட்பட்டு இயங்கும் இன்றைய பங்கு மாற்று

நிலையங்கள் கூட்டுப் பங்கு கம்பெனிகள், பொது நிலையங்கள், மாநில மத்திய அரசாங்கங்கள் வெளியிடும் பிணையங்களுக்கு ஒழுங்கமைதி பெற்ற சந்தையாக அமைந்துள்ளன. வரையறுத்த பொதுக் கம்பெனிகளின் பங்குகளில் 80% பங்கு மாற்று நிலையங்களில் வாங்க விற்கப்படுகின்றன. புதுப் பிணையங்களை மக்களுக்கு அளிப்பதிலும், பழைய பிணையங்களை மாற்றித் தருவதிலும் பங்குமாற்று நிலையங்கள் சிறந்த பணியினைச் செய்து வருகின்றன.

**உறுப்பினராகச் சேர்தல்**

பங்கு மாற்று நிலையத்தில் உறுப்பினராகச் சேர இன்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று பிணையங்கள் ஒப்பந்தங்கள் (ஒழுங்காற்று) விதிகள், 1957 (Securities Contracts (Regulation) Rules) பிரிவு 8-ல் கூறப்பட்டுள்ளது. தனி நபர் (Individuals) களே பங்கு மாற்றகத்தில் உறுப்பினராகலாம். இருபத்தொரு அகவைக்குக் குறையாது, இந்தியக் குடிமகனாக, முறிந்தவர் என்ற நிலைக்கு ஆளாகாத, கடனாளர்களோடு தீர்வு ஏதும் செய்து கொள்ளாத, மோசடிக் குற்றத்திற்காகத் தண்டனை பெறாத, பிணையங்கள் நடவடிக்கை தவிர வேறு எந்த தொழிலிலும் முதல்வர் அல்லது ஊழியர் என்று பணி புரியாத, பிணையங்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள எந்த வகை நிலையத்துடனும் எந்த வகைத் தொடர்புமில்லாத, மற்ற ஒரு பங்கு மாற்றகத்தினால் தவறியவர் (Defaulter) என்று கூறப்பட்டவர் அல்லது வெளியேற்றப் பட்டவரல்லாத, முன்னரே உறுப்பினராக அனுமதிக்கப் பெறாத ஒருவராயின், அனுமதி மறுக்கப்பட்டு, ஓராண்டு கழிந்த நிலையிலுள்ள ஒருவர் மட்டுமே உறுப்பினராகலாம். மத்திய அரசின் முன் அனுமதியுடன் இந்தியக் குடிமகன் (பிரஜை) அல்லாத ஒருவர் உறுப்பினராக ஏற்கப் படலாம். மேற்கண்ட தகுதிகளோடு மேலும் சில விதிகளையும் உறுப்பினர் நிறைவு செய்ய வேண்டும். அவையாவன: உறுப்பினராக விண்ணப்பிப்பவர் இரண்டு ஆண்டுகட்குக் குறையாது ஓர் உறுப்பினருடன் அவருடைய கூட்டாளி, அனுமதி பெற்ற உதவியர், அனுமதி பெற்ற எழுத்தர், பயிலி (Apprentice) என்று பணி புரிந்திருக்க வேண்டும்; அல்லது மற்றோர் உறுப்பினருடன் அவர் பெயரில் பங்கு மாற்றகத்துடன் பேரங்களை மேற்கொள்ளவும், குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு ஓர் உறுப்பினருடன் கூட்டாளி அல்லது பதிலி உறுப்பினராகப் பணிசெய்ய ஒப்ப வேண்டும்; இறந்துபட்ட அல்லது ஓய்வு பெற்ற தன் தந்தை, மாமன், உடன் பிறப்பு அல்லது நெருங்கிய உறவினர் முன்னரே நடத்தி

வரும் தொழிலுக்கு வாரிசாக அமைய வேண்டும். செல்வம், தகுதி, நாணயம், அறிவு, அனுபவம் ஆகிய நற்பண்புகளைக் கொண்டு பிணையங்களைச் சார்ந்த நடவடிக்கைகளில் தேர்ச்சியும் ஈடுபாடும் கொண்டவரென ஆட்சிக் குழு கருதினால் மேற்கண்ட விதிகளிலிருந்து உறுப்பினராகச் சேர விரும்பும் ஒருவருக்கு விலக்களிக்கலாம்.

புது உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டதும் நுழைவுக் கட்டணம் கட்டவேண்டும். மற்றும் ரொக்கமாக அல்லது அனுமதித்த பிணையங்களாகக் குறிப்பிட்ட தொகைக்குப் பிணை அளிக்கவேண்டும். பம்பாய், கல்கத்தா பங்கு மாற்றகங்களில் இத் தொகை ரூ. 20,000; சென்னை, அகமதாபாத், பெங்களூர் மாற்றகங்களில் ரூ 5,000; ஹைதராபாத், இந்தூர் மாற்றகங் களில் ரூ. 3,000; டெல்லியில் ரூ. 5,000-மும் நேர்மதிப்பு ரூ. 2,000 கொண்ட மாற்றகத்தின் ஒரு பங்கும் பிணைத் தொகை யாக அமைந்துள்ளன. பங்கு மாற்றகம் அல்லது தீர்வகம் இப்பிணை மீது பற்றுரிமை (Lien) செலுத்தும். மாற்றகத்தின் விதிகளுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டு, மேற்கொண்ட நடவடிக்கை, பேரம், ஒப்பந்தம் போன்றவை காரணமாக உறுப்பினர் செய்ய வேண்டிய கடமை ஏதும் குறித்து இப்பற் றுரிமை செலுத்தப்படலாம்.

இந்தியாவில் பங்கு மாற்றகத்தில் உறுப்பினராகச் சேரக் குறைந்த அளவு கல்வித் தகுதியும், குறைந்த அளவு செல்வ நிலையும், இன்னவென்று நிருணயிக்கப்படாதது குறிப்பிடத் தக்கது. மற்றும் உறுப்பினர்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும் என்ற நியதியும் கிடையாது. எவரேனும் இரு உறுப்பினர்களின் பரிந்துரையுடன் புதிய ஒருவர் உறுப் பினராகச் சேரும் வாய்ப்பு உண்டு. உறுப்பினர் தரகர்களாக வும், நடவடிக்கையர் (Dealer) களாகவும் செயலாற்றலாம். உறுப்பினர், அனுமதி பெற்ற உதவியர் அல்லது எழுத்தரை நியமித்து, தம் சார்பாகப் பங்குச் சந்தையில் பேரங்களை மேற் கொள்ளச் செய்யலாம். பிணையங்கள் நடவடிக்கைகளில் கழிவு ஈட்டும் பொருட்டுச் சிற்றர் (Remisiers) களையும் உறுப்பினர் நியமிக்கலாம். சிற்றர்கள் தேடித்தரும் தொழிலுக்குத் தரகில் பாதி அவர்களுக்குத் தரப்படும். சிற்றர் தம் சொந்தத் தொழி லுக்காக இப்பணியினை மேற்கொள்ளக் கூடாது. பங்கு மாற் றங்கள் மத்திய அரசின் கண்காணிப்பில் செயற்பட்டு வரு கின்றன. இவை இன்னும் சிறந்த, சீரான, ஒழுங்கான முறையில் செயலாற்றப் பல விதிகளையும் நடைமுறைகளையும் மாற்றியமைக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

# 11. தொழில் வள வங்கிகள்

(Industrial Development Banks)

தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் நிதி வசதிகளைக் கால வாரியாகப் பாகுபடுத்துவதுண்டு. ஒன்று நீண்ட கால நிதியம், அதாவது நிலையான சொத்துக்கள்—நிலம், கட்டடம், இயந்திரச் சாதனங்கள் போன்றன வாங்கத் தேவைப்படும் பண வசதி; மற்றொன்று குறுகிய கால நிதியம், அதாவது கச்சாப் பொருள் வாங்க, அவற்றை முடிவுற்ற பொருள்களாக மாற்ற, விற்பனை ஏற்பாடுகளை மேற்கொள்ள, அன்றாடச் செலவுகட்குத் தேவைப்படும் நடைமுறை முதல்.

## முதலாக்கமும் தொழில் நிதியமும்

பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படும் முதல் இரண்டு வழிகளில் கிடைக்கலாம். ஒன்று உள்நாட்டில் ஏற்படும் முதலாக்கம் (Capital formation), இரண்டாவது முதலை இறக்குமதி செய்வது, அதாவது வெளிநாடுகளிடமிருந்து பெறுவது. அயல்நாடுகளிலிருந்து முதல் இறக்குமதி செய்வது பலப்பல சூழ்நிலைகளையும் கொள்கைகளையும் பொறுத்தது. வளர்ச்சி பெறு நாடுகளில் முதலாக்கம் நிகழ்வது மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கின்றது. இதற்குக் காரணம் மக்களின் சேமிப்புத் திறன் மிகக் குறைவாக இருப்பது. தேசிய வருமானம் மிகக் குறைவாக இருப்பதால் முதலீடு செய்வதில் ஊக்கம் ஏதுமிருப்பதில்லை; இதனால் சந்தையின் அளவும் சிறியதாக இருக்கிறது. ஆக, மொத்தத்தில் முதலாக்கம் குறைந்து நிற்கின்றது.

இந்தியாவில் தொழில் நிலையங்கள் தமக்குத் தேவைப்படும் நீண்ட கால நிதியத்தைப் பல வழிகளில் பெறுகின்றனர். பங்கு முதல் வெளியீடு, கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடு, இலாபத்தில் பெரும் பகுதியைத் தொழிலில் திரும்பவும் முதலீடு

செய்தல், இயக்குநர்கள் தரும் கடன், வணிக வங்கிகள் அளிக்கும் கடன், தொழில் வள வங்கிகள் தரும் கடன் ஆகிய மூலங்களிலிருந்து நம் நாட்டில் தொழில் நிலையங்கள் கடன் பெறுகின்றன. இவையன்றி, குறிப்பிட்ட சில தொழில்களுக்கு அரசு மறைமுகமாக நிதி வசதி யளிக்கின்றது. அயல்நாட்டு நிதிய நிறுவனங்களும், பன்னாட்டு நிதிய நிலையங்களும் சில தொழில்களுக்குக் கடனளித்து வருகின்றன.

முதன் முதலில் 1822 ஆம் ஆண்டு பெல்ஜியத்தில், அந்நாட்டுத் தொழில்களுக்குக் கடனளிக்கும் பொருட்டு, தொழில் வள வங்கி யொன்று நிறுவப்பெற்றது. பின்னர், 1852ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் 'கடன் திரட்டர்' (Credit Mobiler) என்ற நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. ஜப்பான் தொழில் வங்கி (Industrial Bank of Japan) 1902 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் ஜெர்மனி, மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் தொழில் வங்கிகள் நிறுவப்பெற்றன.

தொழில் வங்கிகள் தொழிலுக்கு நீண்ட காலக் கடன் மட்டும் தரும் நிறுவனம் என்று எண்ணுவது சரியல்ல. ஏனெனில், இவ் வங்கிகள் தொழில் நிறுவனங்களின் பங்கு, கடனீட்டுப் பத்திரங்களை எடுத்துக்கொள்ள ஒப்புகின்றன; ஒப்புறுதி செய்கின்றன. பல தொழில் வங்கிகள் மேலும் சில பணிகளையும் மேற்கொள்ளுகின்றன. அவை புதுத் தொழில் நிலையங்களை உருவாக்கல், தொழில் முயற்சியில் ஈடுபடுவோருக்கு நிருவாக அறிவுரை வழங்கல், சந்தை, முதலீடு ஆராய்ச்சி மேற்கொள்ளல், தொழில் நுட்ப-பொருளாதார ஆய்வு நடத்தல் போன்றனவாகும்.

இந்தியாவில் தொழில் வள வங்கிகள் முதன் முதலில் தனியார் துறையில் 1917-23 ஆண்டுகளில் நிறுவப் பெற்றன. பல காரணங்களால் இவை சரிவர செயற்படாமல் முடிவில் மூடப்பட்டுவிட்டன. நாடு விடுதலையடைந்த பின்னரே தொழில் நிதிய நிறுவனம் ஒன்று சட்ட முறையாக நிறுவப் பெற்றது. அந் நிறுவனம்தான் இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு (Industrial Finance Corporation of India).

## இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு

**நோக்கங்கள்**

1948 ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு, தொழில் நிறுவனங்களுக்கு, முக்கியமாக வங்

கியக் கடன் பொருந்தி வராது அல்லது முதல் வெளியீடு மேற்கொள்வது நடைமுறையில் செய்ய முடியாது என்ற நிலையில், மத்திய கால, நீண்டகாலக் கடன் வசதிகளை விரைவாகச் செய்து தரும் நோக்குடன் நிறுவப் பெற்றது. அதாவது, நியாயமான நிபந்தனைகளின் பேரில் வேறு வழிகளில் நிதிய வசதி பெற முடியாத நிலையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு இக் கூட்டுரு நிதி வசதி யளிக்கும் என்று கருதப்பட்டது. வரையறுத்த பொதுக் கம்பெனிகளுக்கும், சட்ட முறையாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தயாரிப்பு, பதனிடுதல், கப்பல் கட்டுதல், சுரங்கம் தோண்டல், ஹோட்டல் நடத்தல், மின்சார அல்லது பிற வகை விசை உற்பத்தி அல்லது வழங்கல் ஆகிய தொழில்களுக்கு இக் கூட்டுரு நிதி வசதி அளிக்கச் சட்டம் இடமளிக்கிறது. துவக்கத்தில் கப்பல் கட்டுதல், ஹோட்டல் தொழில் போன்றவை இக் கூட்டுருவின் பயனைப் பெற வகை செய்யப்படவில்லை. காலத்தின் தேவைகளுக்கேற்பச் சட்டம் திருத்தப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இன்னும் பல தொழில்களுக்கும் இக் கூட்டுரு கடன் வசதிகள் அளிக்க நேரும். தற்போது பொதுத்துறையிலுள்ள கம்பெனி அமைப்பு, தொழில் நிறுவனங்களுக்கும், கூட்டுத் துறை (Joint sector) நிறுவனங்களுக்கும் இக் கூட்டுரு கடன் வசதி செய்து தருவது காலத்திற்கேற்பத் தொழில் வளர்ச்சியின் இன்றியமையாமை கருதி இது செயற்பட்டு வருவதை விளக்குகின்றது.

தொழில் நிதியக் கூட்டுரு சில கட்டுப்பாடுகட்கு உட்பட்டுச் செயலாற்ற வேண்டியிருக்கிறது என்பதை நினைவிற் கொள்ளுதல் நன்று. அவற்றுள் முக்கியமான சில: (i) ஐந்தாண்டு தவணைக்குக் குறைவான முதிர்வு கொண்ட வைப்புக்களை இக் கூட்டுரு ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை; (ii) தன்னுடைய பங்குகளைப் பிணையாக ஏற்றுக் கொண்டு, கடன் வழங்கலாகாது; (iii) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India) யின் முன் அனுமதியின்றி ஒரு நபருக்கு ரூ. 2 கோடிக்குமேல் கடன் வழங்கலாகாது; (iv) பிணையில்லாக் கடன் ஏதும் வழங்கலாகாது.

**பணிகள்**

இந்தியத் தொழில் நிதியக் கூட்டுருவின் முக்கியப்பணிகளைக் கீழ்க் கண்டவாறு பிரிக்கலாம் : (i) கடன்கள் அளிப்பது; (ii) பொறுப்புறுதி வழங்குவது; (iii) ஒப்புறுதி யளிப்பது (Underwriting); (iv) நேரடியாகப் பங்கு எடுத்துக் கொள்ள ஒப்புதல்

அளித்தல்; (v) தொழில் வள வங்கிகளைக் கட்டுப்படுத்தல்; (vi) அறிவுரை அளித்தல்; (vii) பிற பணிகள்.

**கடனளிப்பு**

உயர்ந்த அளவு 25 ஆண்டுகளுக்குத் தொழில் நிதியக் கூட்டுரு, தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்கலாம். கடன் ரூபாயாக அல்லது அந்நியச் செலாவணியாக அமையலாம். நடைமுறை முதலுக்கு மட்டும் என்றவாறு இக் கூட்டுக் கடனளிப்பதில்லை. மற்றத் தேவைகளுடன் நடைமுறை முதலுஞ் சேர்ந்து தீட்டப்பட்ட திட்டத்திற்குக் கடனளிக்கையில் நடைமுறை முதலுக்கும் கடன் கிடைக்கும். குறைந்தது ரூ. 10 இலட்சம், தொழில் வளர்ச்சி வங்கியின் அனுமதி கோராமல் உயர்ந்தது ரூ. 2 கோடி என்ற வரம்புகட்கு உட்பட்ட கடனையே இக் கூட்டுரு வழங்குகிறது. மாநில நிதியக் கூட்டுருக்களுடன் போட்டியைத் தவிர்க்கும் பொருட்டே குறைந்த அளவுக் கடன் ரூ. 10 இலட்சம் என்று நிருணயிக்கப்பட்டுள்ளது.

**பொறுப்புறுதி (Guarantee) வழங்கல்**

பல்வகை ஒப்பந்தங்களைக் குறித்து இக் கூட்டுரு பொறுப்புறுதி வழங்குகின்றது. குறிப்பாக, பொதுச் சந்தையில் வாங்கும் கடன்கள், வங்கிகளிடமிருந்து பெறும் கடன்கள், பின்னர் செலுத்து முறையில் (Deferred payment) பெற்ற உள் நாட்டு, அயல் நாட்டுக் கடன்கள், வெளி நாட்டில் திரட்டும் கடன்கள் ஆகியவற்றிற்குப் பொறுப்புறுதி வழங்கப்படுகிறது.

**ஒப்புறுதி யளித்தல் (Underwriting)**

தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்கு, பத்திரம், பங்குத் தொகுப்பு (Stock), கடனீட்டுப் பத்திரம் (Debenture) முதலியவற்றை ஒப்புறுதி செய்ய இக் கூட்டுரு உரிமை பெற்றுள்ளது. ஒப்புறுதி செய்ததன் விளையாக எடுத்துக் கொள்ள வேண்டி வரும் மேற்கண்ட பிணையங்களை ஏழாண்டுகளுக்கு மேல் தன் சொத்துக்களின் ஒரு பகுதியாக வைத்திருக்க, கூட்டுருவுக்கு அதிகாரம் கிடையாது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் அனுமதி பெற்று, ஏழாண்டுகளுக்கு மேலும் இப் பிணையங்களைக் கூட்டுரு வைத்திருக்கலாம்.

**நேரடியாகப் பங்குகளை ஒப்பி யெடுத்தல்**

தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை நேரடியாக ஒப்பி யெடுக்க 1960-ல் செய்யப்பட்ட சட்டத் திருத்தம் வகை

செய்துள்ளது. இதன்படி, தொழில் நிறுவனங்களின் சாதாரண பங்கு, முன்னுரிமைப் பங்குகளை இக் கூட்டுரு வாங்கிக் கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.

### தொழில் வள வங்கிகளைக் கட்டுப்படுத்தல்

இந்தியத் தொழில் நிதியக் கூட்டுருவின் பங்குகளில் ரிசர்வு வங்கி எடுத்திருந்த பங்குகளும், மத்திய அரசு எடுத்திருந்த பங்குகளும் 1964-ல் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு மாற்றப்பட்டபோது, சட்டம், இக் கூட்டுரு, பிற தொழில் வள வங்கிகளை ஏற்று நடத்த அதிகாரமளிக்கும் வகையில் திருத்தப்பட்டது. தொழில் வளர்ச்சி வங்கியின் முன் அனுமதி பெற்றே இங்ஙனம் பிற தொழில் வங்கிகளை இக் கூட்டுரு ஏற்று நடத்தலாம். அதாவது, மாநில நிதியக் கூட்டுரு எதனையும் அல்லது எல்லா மாநில நிதியக் கூட்டுருக்களையும் ஏற்று நடத்தும் அதிகாரம் இக் கூட்டுருவிற்குத் தரப்பட்டுள்ளது.

### அறிவுரை வழங்கல்

தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படுவது நிதி மட்டுமல்ல. சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களின் அறிவுரையும், நிருவாகத் துறையில் ஆலோசனையும் தொழில் நிறுவனங்களுக்கு அவ்வப்போது தேவைப்படுகின்றன. தொழில் முன்னேற்றத்தில் துவக்க நிலையிலுள்ள நம் நாட்டுத் தொழில்களுக்கு இது கூட்டுரு செய்யும் பணிகளில் மிகச் சிறந்ததொன்றாகக் கருதப்பட்டு வருகின்றது.

### பிற பணிகள்

உலக வங்கி, மத்திய அரசு முதலியவற்றிற்குத் தொழில் நிதியக் கூட்டுரு முகவராகச் செயலாற்றுகின்றது. உலக வங்கியும். மத்திய அரசும் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் அளிப்பதுண்டு; அவற்றின் கடனீட்டுப் பத்திரங்களை எடுத்துக் கொள்வதும் உண்டு. இதை யொட்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் முகவர் (Agent) என்ற நிலையில் கூட்டுரு மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தொழில் நிதியக் கூட்டுருச் சட்டப்படி, மத்திய அரசும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும் கொள்கை தொடர்புற்ற செய்திகளில் கூட்டுருவுக்குத் தக்க ஆணைகளை இடவும், கூட்டுருவுக்குத் தக்க விதிகளை வகுக்கவும் அதிகாரம் பெற்றுள்ளன, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி இடும்

ஆணைகளை நிறைவேற்றத் தவறினால் மத்திய அரசு கூட்டுருவின் இயக்குநர் அவையை மீற நேரும்.

**நிருவாகம்**

கூட்டுருவின் இயக்குநர் அவையில் 12 இயக்குநர்களும் ஒரு பெருந்தலைவரும் இடம் பெற்றுள்ளனர். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியைக் கலந்தாலோசித்து, இக் கூட்டுருவின் பெருந்தலைவர் நியமிக்கப்படுகிறார். முழு நேர அலுவலராகப் பணியாற்றும் இவர் 3 ஆண்டு பதவி வகிப்பார். இயக்குநர் பன்னிருவரில் நால்வர் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (கூட்டுருவின் பங்கு முதலில் 50 சதவிகிதம் வைத்திருக்கும் வங்கி) யாலும், இருவர் மத்திய அரசாலும், இருவர் பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெற்ற வங்கிகளாலும், இருவர் கூட்டுறவு வங்கிகளாலும், மீதமுள்ள இருவர் காப்பீட்டுக் கம்பெனிகள், முதலீட்டுப் பொறுப்பாண்மை (Investment Trust) போன்ற நிதிய நிலையங்களாலும் நியமிக்கப்படுகின்றனர். கடைசியாகக் கூறப்பட்ட ஆறு இயக்குநர்களின் பதவிக் காலம் 4 ஆண்டுகளாகும்.

**மத்தியக் குழு**

ஐந்து இயக்குநர்கள் கொண்ட மத்தியக் குழு (Central Committee)-பெருந்தலைவர், நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற இருவர், தேர்ந்தெடுக்கப் பட்ட இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கும் இருவர் ஆக, ஐவர் கூட்டுருவின் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகிறது. இக் குழுவின் கூட்டங்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற பல வணிக, தொழில் மையவிடங்களில் நடைபெறுகின்றன.

**ஆலோசனைக் குழு (Advisory Committee)**

தொழில் வல்லுநர்களின் ஆலோசனை, கடன் கோரும் நிலையங்களின் விண்ணப்பத்தைத் தொழில் நுட்பக் கண்ணோக் கோடு காணத் தேவைப்படுகிறது. இதற்காகப் பெருந்தலைவர், இரு இயக்குநர்கள், தொடர்புற்ற துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற சில வல்லுநர் (ஏழு அல்லது எட்டு) கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்சமயம் ஐந்து ஆலோசனைக் குழுக்கள் கூட்டுருவில் இருந்துவருகின்றன.

**பங்கு முதல்**

தொழில் நிதியக் கூட்டுருவின் அனுமதித்த முதல், பத்துக் கோடி ரூபாயாகும். இது ரூ. 5,000 மதிப்புள்ள 20,000 பங்குக

ளாக அமைந்துள்ளது. 1972 ஜூன் இறுதியில் பத்துக் கோடி ரூபாய் மதிப்புள்ள மொத்தப் பங்குகளும் வெளியிடப்பட்டு, ஒப்பவும் பட்டன. இதில் 50·00 சதவீதம் முதல் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு உரிமையானவை. 20·00 சதவீதப் பங்குகள் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளுக்கும், 8·00 சதவீதப் பங்குகள் கூட்டுறவு வங்கிகளுக்கும், 22·00 சதவீதப் பங்குகள் பிற வங்கிகளுக்கும் உரிமையானவை. இதனால் கூட்டுரு மொத்தமும் அரசுடைமையானது அல்ல; ஆனால், அரசின் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்டதுமல்ல என்பது விளங்கும். பங்கு முதலின் மீது உயர்ந்த அளவு 5 சத வீதம் இலாப ஈவு வழங்கக் கூட்டுரு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1970—71, 1971—72 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் 5 சத வீதம் இலாப ஈவு வழங்கப் பட்டது.

### கடனீட்டுப் பத்திர வெளியீடு

இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு, நிதி திரட்டப் பத்திரங்களை (Bonds) யும், கடனீட்டுப் பத்திரங்களையும் வெளியிடுகின்றது. இப் பத்திரங்கள் மீதான அசலும் வட்டியும் திருப்பிச் செலுத்தப்படுவதற்கு மத்திய அரசு பொறுப்புறுதியளிக்கின்றது. கூட்டுரு வெளியிட்ட பத்திரங்களுக்குச் சந்தையில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

மத்திய அரசு, தொழில் வளர்ச்சி வங்கி, ரிசர்வு வங்கி, அயல் நாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து இக் கூட்டுரு கடன் பெறலாம்.

### நாட்டுத் தொழில் வளர்ச்சியில் கூட்டுருவின் பங்கு

கூட்டுரு நிறுவப் பெற்று, இருபத்து நான்கு ஆண்டுகள் ஜூன் 30, 1972-ல் முடிவுற்றது. இந்த 24 ஆண்டுகளில் 565 பெரிய நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 397·86 கோடி நிதி யுதவி அளித்துள்ளது இக் கூட்டுரு. இந்த 565 தொழில் திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ. 2,006 கோடியாகும். இந்தத் தொகையானது விடுதலை பெற்ற பின், இந்தியாவில் தனியார் துறையில் செய்யப்பட்டுள்ள முதலீட்டில் 30 சத விகிதமாகும். நிதி யுதவி வழங்கப்பட்ட நிறுவனங்கள் 4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்ததோடு, ஆண்டுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் 20 சத விகிதம் அளவினை உற்பத்தி செய்து தந்தன.

பற்பல தொழில் முயற்சியில் ஈடுபட்ட முனைவோர்களுக்கு ஆதரவளித்து, தொழில் நுட்பம் மிகுந்த பல தொழில்கள் உருவாக இக்கூட்டுரு உதவியுள்ளது. பிராந்திய வளர்ச்சியிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க, வளர்ச்சி குறைந்த இடங்களில் நிறுவப் பெறும் தொழில்களுக்குச் சிறப்பான உதவி அளித்துள்ளது. மொத்த நிதி யுதவியில் 65·3 சத விகிதம் புதுத் தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

தொழில் நிதியக் கூட்டுருவின் உதவியால் பெரும் நலனடைந்த தொழில்கள் வருமாறு: சக்கரைத் தொழில் (ரூ. 80·14 கோடி), பஞ்சாலைத் தொழில் (41·68 கோடி), இரசாயனப் பொருள்கள் (ரூ. 34·24 கோடி), இரும்புச் சார்பற்ற உலோகங்கள் (ரூ. 31·08 கோடி), உரம் (ரூ. 30·37 கோடி), காகிதம் (ரூ. 25·01 கோடி), உலோகப் பொருள்கள் (ரூ. 24·95 கோடி).

தொழிற் கூட்டுறவுகளுக்கு இக் கூட்டுரு கணிசமான நிதியுதவி அளித்துள்ளது. 1972 ஜூன் இறுதி வரை 105 திட்டங்களுக்கு ரூ. 87·45 கோடி வழங்கியிருந்தது. இது கூட்டுரு துவங்கியது முதல் வழங்கிய மொத்தக் கடன் வசதிகளில் 22 சதவீதமென்பது குறிப்பிடத்தக்கது. இதில் ரூ. 73·32 கோடி 79 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

தொழில் வளர்ச்சி குறைந்த ஆந்திரம், அஸ்ஸாம், பீகார், மத்தியப் பிரதேசம், ஒரிசா, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மேகாலயா, மற்றும் யூனியன் பிரதேசங்கள் மொத்தக் கடனளிப்பில் 33·5% பெற்றன. மத்திய அரசு 211 மாவட்டங்களையும் 8 யூனியன் பிரதேசங்களையும் வளர்ச்சி குன்றிய இடங்கள் என அறிவித்து, அவ் விடங்களில் கடன் வசதி யளிக்கும் பொது நிதிய நிலையங்கள் சலுகை வட்டியில் கடன் வழங்கலாம் என்றும் அறிவித்துள்ளது இக் கூட்டுரு. இவற்றில் 68 மாவட்டங்களையும் 3 யூனியன் பிரதேசங்களையும் சேர்ந்த 148 திட்டங்களுக்கு ரூ. 107·11 கோடி கடன் வசதி வழங்கியுள்ளது. பிற நிதிய நிலையங்களுடன் இக் கூட்டுருவும் வளர்ச்சி பெறு மாநிலங்களில் ஆய்வு மேற்கொண்டு, அவற்றில் என்ன தொழில் திட்டங்களை ஏற்படுத்தலாம் என்று ஆராய்ந்து வருகின்றது. மற்றும், மாநில நிதியக் கூட்டுருக்களுக்கும், மாநில அரசுகளுக்கும் அவற்றின் திட்டங்களை நிறைவேற்றப் பிற நிதிய நிலையங்களோடு கூடி அறிவுரை யளித்து வருகின்றது.

முன்னர் கண்ட காலம்வரை, அதாவது 30 ஜூன் 1972 வரை, இக் கூட்டுரு ஆறு பொதுத்துறை நிறுவனங்களுக்கு ரூ. 6·92 கோடி நிதி யுதவி வழங்கியுள்ளது.

புதிய நிருவாக முறைகளைத் தம் வாடிக்கை நிறுவனங் களுக்குக் கற்பித்து, அவற்றை வளமுடன் இயங்கச் செய்ய' நிருவாக வளர்ச்சிக் கல்வி நிலையம் ஒன்றை நிறுவ, இக் கூட்டுரு ஏற்பாடுகள் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

**மாநில நிதியக் கூட்டுருக்கள் (State Financial Corporations)**

தேசிய அளவில் தொழில் நிதியக் கூட்டுரு அமைக்கப் பட்டது போன்று, மாநிலங்களிலும் தொழில் வளர்ச்சிக்கென நிதிய நிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டும் என்ற எண்ணம் பரவலாக இருந்து வந்தது. முக்கியமாக, சிறு, நடுத்தர அளவுள்ள தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி கள் செய்து தர, மாநில அளவில் ஒரு நிறுவனம் தேவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு பெரிய (வரையறுத்த பொதுக்) கம்பெனிகளுக்கும் கூட்டுறவு நிலையங்களுக்கும் மட்டுமே நிதி வசதி யளிக்குமென முடிவு செய்யப்பட்டதால் பிற தொழில் நிலையங்களுக்கு நிதி யுதவி யளிக்க வேறு நிறுவனங்கள் தேவைப்பட்டன. இந்த நிலையில் மாநில நிதியக் கூட்டுருக்கள் சட்டம் (State Financial Corporations Act) 1951 ஆம் ஆண்டில் இயற்றப்பெற்று, 1952 ஆகஸ்டு முதல் நாளில் அமுலுக்கு வந்தது.

மாநில நிதியக் கூட்டுருக்கள் சட்டம் அமுலுக்கு வரும் முன்னரே, அன்றைய சென்னை மாநிலத்தில் 1949 ஆம் ஆண்டில் சென்னைத் தொழில் முதலீட்டுக் கூட்டுரு (Madras Industrial Investment Corporation Limited) என்ற நிறுவனம் மாநில அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந் நிறுவனம் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கூட்டுரு என்ற பெயருடன் இயங்கி வருகிறது. இஃதன்றி, நாட்டில் வேறு 17 மாநில நிதியக் கூட்டுருக்கள் செயற்பட்டு வருகின்றன.

**நிறுவப் பெற்றதன் நோக்கம்**

பொருளாதார ஆதிக்கத்தைப் பரவலாகவும், நாட்டு வருமானத்தைப் பரவலாகப் பகிர்ந்து வழங்கவும், செல்வம், பொருளாதார வாய்ப்பு ஆகியவற்றைப் பலப்பலருக்குக்

கிட்டும் வகையில் ஏற்பாடு செய்யவும், வேலை வாய்ப்பு மிகுதிப் படவும், சிறு, நடுத்தர அளவு நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சிறு, நடுத்தர அளவுத் தொழில்களின் வளர்ச்சிக்கு மாநில நிதியக் கூட்டுருக்கள் ஓர் ஊக்குவிப்பாளுகவும், நிதிய நிலையாகவும் செயற்படும் என்ற கருத்து நிலவி வந்தது. அனைத்திந்திய அளவில் தொழில் நிதியக் கூட்டுரு என்னென்ன செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதோ, அவையனைத்தையும் சற்றுச் சிறிய அளவில் மாநிலக் கூட்டுருக்கள் செய்யவேண்டும் என்று கருதப் பட்டது. மாநிலக் கூட்டுருக்கள் வரையறுத்த பொதுக் கம்பெனி, கூட்டுறவுகளுக்கு மட்டுமல்லாமல். தனி நபர் நிறுவனம், கூட்டாண்மை நிறுவனம், வரையறுத்த தனிக் கம்பெனி ஆகியவற்றிற்கும் நிதி யுதவி வழங்கச் சட்டம் வகை செய்துள்ளது. ஒவ்வொரு மாநில நிதியக் கூட்டுருவும் அதன் எல்லைகளுக்குள் செயற்பட்டு வருகின்றது எனினும், இரண்டு அல்லது மேற்பட்ட மாநிலங்கள் சேர்ந்து கூட்டாக நிதியக் கூட்டுரு ஏற்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

## கடனளிப்பு முறை

மாநில நிதியக் கூட்டுருக்கள் தக்க பிணைகளின் பேரில் கடன் வழங்கலாம். ஒரு கடன் கோரும் நபருக்கு ரூ. 10 இலட் சத்திற்கு மேல் கடன் தரக்கூடாது; வரையறுத்த பொதுக் கம்பெனி, கூட்டுறவு நிறுவனங்களுக்கு இந்தத் தொகை ரூ. 20 இலட்சமாக நிருணயிக்கப்பட்டது. தொழில் நிறுவனங்களின் சாதாரண முதலில் இக் கூட்டுருக்கள் பங்கு வாங்க அனுமதிக்கப் படவில்லை. இவை தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிக்கும் பணியில் ஈடுபடலாகாது. அயல்நாட்டுச் செலாவணியில் கடன்களை வழங்க இவற்றிற்கு அதிகாரம் தரப்படவில்லை. பொதுத்துறை நிறுவனங்களுக்கு இவை கடன் வசதி அளிப்பதில்லை.

இருபது ஆண்டுகளில் திருப்பித் தரும் வகையில் மாநில நிதியக் கூட்டுருக்கள் கடன் வழங்குகின்றன. இவை யளிக்கும் கடன் குறிப்பிட்ட ஒரு நபருக்கு ரூ. 10 இலட்சத்துக்கு அல்லது கூட்டுறவு வரையறுத்த பொதுக் கம்பெனியாக இருப்பின் ரூ. 20 இலட்சத்துக்கு மிகக் கூடாது என்று உச்சவரம்பு குறிப்பிடப் பட்டது போன்று கீழ் வரம்பு நிருணயிக்கப்படவில்லை. நடை முறையில் கீழ் வரம்புக் கடன் தொகை ரூ. 10,000 முதல் ரூ. 1,00,000 வரை இருந்து வருகிறது. இக் கூட்டுருக்கள், தொழில் நிறுவனங்கள் பொது மக்களுக்கு வெளியிடும்

முதல் தொகையை ஒப்புறுதி செய்யலாம். நிறுவனங்கள் வெளியிடும் 20 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட இருக்கும் பிணையங்களை எடுத்துக் கொள்ளவும் ஒப்பலாம். நிறுவனங்களின் சாதாரணப் பங்குகளுக்கு ஒப்புதல் செய்யவும் இவற்றிற்கு அதிகாரமுண்டு. மேலும், மாநில நிதியக் கூட்டுருக்கள் பொறுப்புறுதி யளிக்கும் உரிமை பெற்றுள்ளன. பின்னர், பணஞ் செலுத்து முறையில் இயந்திரம் வாங்கல், பொதுச் சந்தையில் திரட்டும் கடன், பிற வங்கிகளிலிருந்து பெறும் கடன் ஆகியவற்றை இவை பொறுப்புறுதி செய்யலாம்.

மாநில அரசின் முகவராகப் பொறுப்பேற்று, மாநில அரசு தரும் கடன்களை சிற்றளவுத் தொழில் நிறுவனங்களுக்கு இக் கூட்டுருக்கள் அளிக்கின்றன. சிற்றளவுத் தொழில்களுக்குத் தரப்படும் கடன்களைப் பொறுப்புறுதி செய்ய, மத்திய அரசு உருவாக்கியிருக்கும் கடன் பொறுப்புறுதி திட் (Credit Guarantee Scheme) டத்தை இக் கூட்டுருக்கள் பயன்படுத்தி வருகின்றன. இத் திட்டத்தை ரிசர்வு வங்கி நடத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் கடன் தந்து, நட்டம் ஏதும் ஏற்பட்டால் நட்டத் தொகையில் 65%ஐ ரிசர்வு வங்கி ஏற்கும். இந்திய ஸ்டேட் வங்கி சிற்றளவுத் தொழில்களுக்குக் கடனளிப்பது தொடர்பாக மேற்கொண்டுள்ள முன்னோடித் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பல மாநில நிதியக் கூட்டுருக்கள் ஸ்டேட் வங்கியை, கடன் கோருவோரின் நிதி நிலை பற்றிய ஆய்வு, முதல், வட்டி பெற்றுக்கொள்வது போன்ற பணிகள் செய்யத் தமது முகவராக அமர்த்தியுள்ளன.

இனி, 18 மாநில நிதியக் கூட்டுருக்களும் இயங்கிவரும் பாணியைக் கண்ணுறுவோம். 1970 ஆம் ஆண்டு ரிசர்வு வங்கியின் செயற்குழு (Working Group) திரட்டிய தகவல்படி இவற்றின் செலுத்திய முதல் மொத்தம் ரூ. 20 கோடியாக இருந்தது. செப்டம்பர் 1972-ல் இத் தொகை ரூ. 24·22 கோடியாக உயர்ந்திருந்தது. இதே நேரத்தில் இக் கூட்டுருக்கள் ரூ. 94 இலட்சம் காப்பு நிதி பெற்றிருந்தன. செலுத்திய முதல், காப்பு நிதிகள், கடனீட்டுப் பத்திர வெளியீடு, ரிசர்வு வங்கி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, மாநில அரசுகள் முதலியவற்றிடமிருந்து பெற்ற கடன், வைப்புக்கள், பிற இனங்கள் ஆகிய மூலங்களிலிருந்து மேற்கூறிய தேதியில் இவை திரட்டிய தொகை ரூ. 208·85 கோடியாக இருந்தது. இந்தத் தொகையில் தொழில் நிறுவனங்களுக்கு இக் கூட்டுருக்கள் அளித்த கடன்

தொகை ரூ. 165·74 கோடியாகவும், கடனீட்டுப் பத்திரத்தில் ஈடு செய்தது ரூ. 61 இலட்சமாகவும், ஒப்புறுதி, பொறுப்புறுதி செய்தது ரூ. 7·48 கோடியாகவும், பங்குகளில் முதலீடு செய்தது ரூ. 10·31 கோடியாகவும் இருந்தது.

மாநில நிதியக் கூட்டுருக்கள் தமது சாதாரணப் பங்கு முதலைப் போன்று பத்து மடங்கு தொகையைக் கடனாகக் கொள்ளலாம் என்ற சட்ட வரம்பு அவற்றின் தொழிற் பெருக்கத்திற்குத் தடையாக இருக்கிறது. கடன் தேவை எவ்வளவு அதிகமாக இருந்தாலும், தனது முதலை மேலும் உயர்த்தினால்தான் இக் கூட்டுருக்கள் கூடுதலாகக் கடனளிக்க முடியும். இக் கூட்டுருக்களில் பல குறைந்த அளவு இலாப ஈவு எனக் குறிக்கப்பட்ட 5 சத வீதம் அளிக்கும் அளவுக்குக்கூட இலாபம் ஈட்டவில்லை என்பது இவற்றின் இலாப நிலை மிகக் குறைவாக உள்ளதைச் சுட்டுகிறது.

மாநில நிதியக் கூட்டுருக்கள் தமது மொத்தச் சொத்துக்களில் 80 சதவீதத்தை கடன்களாக அளித்திருப்பது கவனிக்கத் தக்கது. ஒப்புறுதி-பொறுப்புறுதி யளித்தல், கடனீட்டுப் பத்திரத்தில், பங்குகளில் ஈடு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் இக் கூட்டுருக்கள் அவ்வளவாக ஈடுபடாததும் கவனிக்கத் தக்கது.

### பிற வகை நிறுவனங்கள்

மேற்கண்ட நிதியக் கூட்டுருக்கள் தவிர, நாட்டளவிலும் மாநில அளவிலும் தொழில் வளர்ச்சிக்கெனப் பல கூட்டுருக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசியத் தொழில் வளர்ச்சிக் கூட்டுரு (National Industrial Development Corporation) என்னும் நிறுவனம் நிதிய நிறுவனமல்ல; தொழில், இட அமைப்பு, வளர்ச்சி, ஒருங்கிணைந்த சமனுள தொழில்துறை அமைப்பு முதலிய தரத்தைச் சார்ந்த நடவடிக்கைகளில் இது ஈடுபடுகிறது. தேசியச் சிறு தொழில் கூட்டுரு (National Small Industrial Corporation) என்னும் நிறுவனம் சிற்றளவுத் தொழில்களை உருவாக்க, அவற்றிற்குத் தேவையான இயந்திரம் தவணை முறையில் வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்ய, அவை உற்பத்தி செய்யும் பொருள்களுக்குச் சந்தையேற்பாடு செய்ய நிறுவப்பட்டுள்ளது. பல மாநிலங்களில் தொழில் வளர்ச்சிக் கூட்டுருக்கள் (State Industrial Development Corporations) நிறுவப்பட்டுள்ளன. இவை மாநில அரசுகளின் நிதிநிலையை முழுக்க முழுக்க நம்பியிருப்பதால் கணிசமான வளர்ச்சி பெறவில்லை.

மேலும், நிருவாக நுட்பம், தொழில் நுட்பத்தில் கூட்டு முதலிய கிடைப்பதில் இக் கூட்டுருக்களுக்குப் பல தொல்லைகள் உள. பொதுத் துறையில் பல தொழில்கள் நிறுவப்பட வேண்டு மென்ற தொழிற் கொள்கை 1969-ல் உருவாக்கப்பட்ட நேரத்தில் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு, தாம் தாம் இத் தொழில்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று மாநிலத் தொழில் வளர்ச்சிக் கூட்டுருக்கள் திட்டங்களை அளித்தன. ஏப்ரல் 1967 முதல் மார்ச்சு 1972 வரை இவை களுக்கு வழங்கப்பட்ட கருத்துக் கடிதம் (Letters of Intent) 120 ஆனால், இவற்றில் தொழில் உரிமமாக மலர்ந்தது ஆறு திட்டங்களே. இந்த ஆறு உரிமங்களும் செயற்படுத்தப்பட வில்லை என்பதும் மனத்திற் கொள்ளத் தக்கது.

**இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India)**

இந்தியா விடுதலை பெற்ற பின்னர், தொழில் வளர்ச்சிக் காகப் பல நிதிய நிறுவனங்கள் நிறுவப்பெற்றன. இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு, மாநில நிதியக் கூட்டுக்கள், இந்தி யத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுரு, தேசியத் தொழில் வளர்ச்சிக் கூட்டுரு, தேசியச் சிறு தொழில் கூட்டுரு என்பன போன்று பல நிறுவனங்கள் தொழில் வளர்ச்சிக்கென இயங்க லாயின. இந் நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, அவற்றிடையே போட்டியையும் குழப்பத்தையும் தவிர்க்க, ஓர் உச்சி நிலையம் (Apex Institution) தேவைப்பட்டது. இந்தத் தேவையை நிறைவு செய்யும் வகையில் 1964ஆம் ஆண்டு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India—I D B I ஏற்படுத்தப்பட்டது.

**முக்கிய நோக்கங்கள்**

பிற நிதிய நிலையங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத் தலும், தொழில்களுக்கும் தொழில் நிதிய நிலையங்களுக்கும் தொழில் வளர்ச்சிக்காக நிதி யுதவி அளித்தலும், தொழில்துறை அமைப்பில் விடப்பட்டுள்ள தொழில்களை நிறுவத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தலும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் முதன்மை நோக்கங்களாகும். இந் நோக்கங்களைச் செயற்படுத்த, இவ் வங்கிக்குப் பரவலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை இரண்டு வகையாகப் பிரிக் கலாம். ஒன்று நிதி தொடர்புடையது; மற்றது வளர்ச்சி நோக்கத் தொடர்புடையது. முதற் பிரிவில் கூறப்பட்ட

அதிகாரங்களில் சில கடன்கள் அளிப்பது, ஒப்புறுதி அளிப்பது, நேரடியாகப் பங்குகளை ஒப்புதல் செய்வது, பொறுப்புறுதி அளிப்பது, மறு தள்ளுபடி யளிப்பது, மறு நிதியம் அளிப்பது, கடனீட்டுப் பத்திரங்களை வாங்குவது போன்றன. இரண்டாம் பிரிவில் குறிக்கப்படுவது புதிய திட்டங்களை உரு வாக்கி, வளர்ச்சிப் பணிகளுக்கு ஏற்பாடு செய்வதாகும்.

### முதல் அமைப்பு

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் அனுமதித்த முதல் ரூ. 50 கோடியாகும். செப்டம்பர் 1972-ல் இத் தொகையில் ரூ. 40 கோடி செலுத்தப்பட்டிருந்தது. இவ் வங்கியின் முதல் முழுவதையும் ரிசர்வு வங்கி எடுத்துக்கொண்டுள்ளது. எனவே, இவ் வங்கி, ரிசர்வு வங்கியின் துணையமைப்பாக (Subsidiary) விளங்குகிறது. கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு, தனக்கு வேண்டும் நிதியைத் திரட்டவும், பன்னிரண்டு திங்களுக்குக் குறையாத வைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும், ரிசர்வு வங்கி — மத்திய அரசு ஆகியவற்றிடம் கடன் வாங்கிக் கொள்ளவும், அயல் நாட்டு, பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து அயல் நாட்டுச் செலாவணியைக் கடனாகப் பெறவும் இவ் வங்கிக்கு அதிகாரமுண்டு.

### வளர்ச்சி உதவி நிதி (Development Assistance Fund)

தொழில் வளர்ச்சி வங்கியின் முதல் அமைப்பில் தனிச் சிறப்பு, வளர்ச்சி உதவி நிதியொன்று நிறுவப்பட்டதாகும். இந் நிதி 1965-ல் ஏற்படுத்தப்பட்டது. ஒரு திட்டத்திற்குப் பல காரணங்களால் எந்த நிறுவனமும் நிதிய வசதி அளிக்க முடியாத நிலையிலும், இவ் வங்கியும் தனது பொது நிதி களிலிருந்து நிதி யுதவி அளிக்க முடியாத நிலையிலும், நாட்டின் பொருளாதாரத்தில் அத் திட்டம் மிகவும் முக்கியமான காரணத்தால் அதற்கு நிதியுதவி எவ்வாறேனும் அளித்தேயாக வேண்டும் என்ற நிலையில் 'வளர்ச்சி உதவி நிதி' யிலிருந்து நிதி வசதி அளிக்கப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக, பெட்ரோ — ரசாயனப் பொருள்கள், உரம், சிமெண்ட், கன இயந்திர நிருமாணம் போன்ற தொழில்களைச் சார்ந்த திட் டங்கள். வளர்ச்சி உதவி நிதிக்கு வேண்டிய பணமனைத்தும் மத்திய அரசால் தரப்படுகின்றது. அதன் அனுமதி பெற்றே அப்பணம் பயன் படுத்தப்படும்.

தேசியத் தொழில் கடன் (நீண்ட கால நடவடிக்கை) நிதி [National Industrial Credit (Long Term Operations) Fund].

ரிசர்வு வங்கியில் தேசியத் தொழில் கடன் (நீண்ட கால நடவடிக்கை) நிதி யென்ற ஒரு புது நிதி 1964-ல் நிறுவப்பட்டது. இந் நிதிக்கு ரிசர்வு வங்கி ரூ. 10 கோடி முதலில் வழங்கியது. இந் நிதியிலுள்ள பணத்தைக் கொண்டு ரிசர்வு வங்கி இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வெளியிடும் பத்திரங்களையும். கடனீட்டுப் பத்திரங்களையும் வாங்கலாம்; பிற நிதிய நிலையங்களின் பங்கு, பத்திரம், கடனீட்டுப் பத்திரங்களை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வாங்குவதற்கு இந் நிதியிலிருந்து கடன் அளிக்கப்படலாம்; மற்றும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் எந்த நடவடிக்கைக்கும் இந் நிதி ரிசர்வு வங்கியால் பயன்படுத்தப்படலாம்.

**வங்கியின் வளர்ச்சி**

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி 1972 ஜூன் இறுதியில் ரூ. 410·94 கோடி பொறுப்புக்களைக் கொண்டிருந்தது. இதில் அவ் வங்கியின் செலுத்திய முதல் ரூ. 40·00 கோடி; காப்பு நிதிகள் ரூ. 21·38 கோடி; பத்திரங்கள், கடனீட்டுப் பத்திரங்கள் ரூ. 12·65 கோடி; ரிசர்வு வங்கியிலிருந்து பெற்ற கடன் ரூ. 92·82 கோடி; அரசினரிடமிருந்து பெற்ற கடன் ரூ. 166·51 கோடி; பிற பொறுப்புக்கள் ரூ. 77·58 கோடி.

இவ் வங்கி துவங்கப்பட்டது முதல், அதாவது ஜூலை 1964 முதல் ஜூன் 1972 இறுதி வரை என்ன வகையான நிதி வசதிகளை எந்த அளவுக்குச் செய்துள்ளது என்பதை அடுத்த பக்க அட்டவணை விளக்கும்.

தனது எட்டு ஆண்டு நடவடிக்கைகளில் இவ் வங்கி 159 கம்பெனிகள் உருவாக்கிய 167 தொழில் திட்டங்களுக்கு நேரடி உதவியாக ரூ. 262·3 கோடி யளித்தது. ஏற்றுமதிக்கு அளித்த உதவி இதில் சேராது. நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியமான உரம், கலப்பு இரும்பு, அடிப்படைத் தொழில் சார்ந்த ரசாயனங்கள், சிமெண்ட், இரும்புத் தொடர்பற்ற உலோகங்கள் ஆகிய தொழில்களின் வளர்ச்சிக்கு இவ் வுதவி பெரும் ஆக்கமளித்துள்ளது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வெறும் ஒருங்கிணைப்புப் பணி செய்வதோடு நின்று விடவில்லை. பின் தங்கிய பகுதி

களில் தொழில் வளம் பெருகப் பல திட்டங்களை உருவாக்குவதிலும், சத்தியக் கூறு ஆய்வுகளை மேற் கொள்ளுவதிலும், தொழில் நுட்ப, நிருவாக உதவி புரிவதிலும் பெரு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## பட்டியல் 11-1

### இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளித்துள்ள நிதி யுதவி

(ரூ. கோடிக் கணக்கில்)

| | ஜூலை 1964 முதல் ஜூன் 1972 வரை அனுமதிக்கப் பட்டது | ஜூலை 1964 முதல் ஜூன் 1972 வரை பயன்படுத்தப் பட்டது |
|---|---|---|
| தொழில் நிறுவனங்களுக்கு (ஏற்றுமதி யல்லாத) நேரடிக் கடன் | 194·2 | 99·2 |
| தொழில் நிறுவனங்களின் பங்கு, கடனீட்டுப் பதித்திரங்களுக்கு நேரடி ஒப்பியது, ஒப்புறுதி தந்தது | 41·3 | 21·4 |
| தொழிற் கடன்களுக்கு மறு நிதியம் | 151·8 | 142·1 |
| மாற்றுச் சீட்டு மறு தள்ளுபடி | 135·2 | 115·3 |
| மொத்தம் | 522·4 | 378·1 |
| ஏற்றுமதிக்கு நேரடிக் கடன் | 48·4 | 25·1 |
| ஏற்றுமதிக் கடனுக்கு மறு நிதியம் | 27·2 | 21·4 |
| நிதிய நிலையங்களின் பங்கு, பத்திரங்களுக்கு ஒப்பியது | 36·6 | 33·9 |
| பெரு மொத்தம் | 634·7 | 458·5 |
| பொறுப்புறுதி (ஏற்றுமதி பொறுப்புறுதி உட்பட) | 28·7 | |

## இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுரு (Industrial Credit and Investment Corporation of India)

**நோக்கங்கள்**

இந்தியாவிலுள்ள தனியார் துறைத் தொழில் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு 1955 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வரையறுத்த பொதுக் கம்பெனியே இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுருவாகும். தனியார் துறையில் தொழில்களை உருவாக்க, விரிவாக்க, நவீனமாக்க வேண்டிய உதவிகளைச் செய்வதே இக் கூட்டுருவின் நோக்கமாகும். இக் கூட்டுருவின் நடவடிக்கைகள் மிகவும் பரந்த நிலையில் அமைவதற்கு ஏற்ற வாறு அமைப்பு முறையோடு தயாரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் இந்தியராக அல்லது பிற நாட்டவராக இருக்கலாம்; இந்தியாவில் எந்தப் பகுதியிலும் முதலீடு செய்ய அவர் திட்டமிடலாம்; அவர் கோரும் உதவி, எந்த உருவிலும் இருக்கலாம்; அவர் தாம் தீட்டிய திட்டத்திற்குப் பெரிதும் முனைந்து பாடுபட்டுப் பெருமளவு ஆக்கம் அளிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

பேரளவுத் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் இக் கூட்டுரு நிதி வசதி யளிக்கின்றது. புதுத் தொழில் துறைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு உதவி யளிப்பதில் இக் கூட்டுரு சிறப்பீடுபாடு காட்டுகின்றது. தொழில்களைத் தோற்றுவிப்பதை இக் கூட்டுரு மேற்கொள்வதில்லை.

**பணிகள்**

இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுருக் கடன்கள் (ரூபாய், அயல்நாட்டுச் செலாவணி) அளித்தல், பொறுப்புறுதி யளித்தல், ஒப்புறுதி யளித்தல், நேரடி ஒப்புதல் (Direct Subscription), சந்தை முதலீடு ஆராய்ச்சி, தொழில் நுட்ப-பொருளாதார ஆய்வு, பயிற்சி அறிவுரை வழங்கல் போன்ற பணிகளை மேற்கொள்ளுகிறது.

**கடனளிப்பு**

பதினைந்து ஆண்டுகளுக்கு மிகாத கடன்களை இக் கூட்டுரு வழங்கலாம். கடன் தொகை ரூ. 5 இலட்சத்திற்குக் குறையாமலும், ஒரு நிறுவனத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மிகாமலும் இருக்க வேண்டும். இக் கூட்டுரு, தொழில் நிறுவனங்களுக்கு மத்திய கால, நீண்ட காலக் கடன்களை அயல்நாட்டுச் செலாவணியில் வழங்குகின்றது. இது ஒரு முக்கியப் பணியாகும்.

இக் கூட்டுரு துவங்கப்பட்ட காலத்தில் வேறு எந்த நிலையமும் அயல் நாட்டுச் செலாவணியில் கடன்களை அளித்துவரவில்லை. சிறிதளவு அயல்நாட்டுச் செலாவணி மட்டும் கடன் வேண்டுவோரின் நன்மைக்காகக் குறைந்த அளவுக் கடன் தொகை ரூ. 5 இலட்சத்திலிருந்து ஓர் இலட்சமாகக் குறைக்கப்பட்டது.

**பொறுப்புறுதி-ஒப்புறுதி நடவடிக்கைகள்**

பிற நிதி நிலையங்களிலிருந்து பெறும் கடன்களுக்கு இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுரு பொறுப்புறுதி யளிக்கின்றது. இத்துறையில் கூட்டுரு அவ்வளவு முன்னேற்றம் காணவில்லை. இதற்குக் காரணம் கடன் வாங்குவது பொறுப்புறுதி பெறுவதைவிட எளிதாக, சிக்கனமாக அமைகிறது என்று பல தொழில் நிறுவனங்கள் கருதுவதேயாகும்.

ஒப்புறுதி யளித்தலில் இக் கூட்டுரு மிகவும் சிறந்த திருப்பத்தை உண்டு செய்தது. 1955ஆம் ஆண்டில் இது நிறுவப்பெற்ற போது, நாட்டில் கம்பெனிகள் வெளியிடும் பிணையங்களை ஒப்புறுதி செய்ய நிலையங்கள் ஏதுமில்லை. ஆகவே, இக் கூட்டுருவின் ஒப்புறுதிப்பணி முதலீட்டுச் சந்தையில் ஒரு பெரும் ஆக்க சக்தியாக அமைந்தது. இதை யடுத்து இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, யூனிட் டிரஸ்ட் போன்ற நிலையங்களும் ஒப்புறுதிப் பணியை மேற்கொண்டன. மொத்தத்தில், நாட்டில் தொழில் நிலையங்களின் பிணையங்களில் முதலீடு செய்வதற்குத் தக்கதொரு சூழ்நிலை உருவாக இக் கூட்டுரு பெரிதும் உதவியது.

தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை நேரடியாக ஒப்பும் நிதிய அல்லது தொழில் வள வங்கி இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுரு நிறுவப் பெறும் வரை இந்தியாவில் இருந்ததில்லை. இக் கூட்டுரு, கம்பெனிகளின் பிணையங்களுக்கு நேரடியாக ஒப்புதல் அளித்து, அதன் வழி, பல தொழில் நிறுவனங்கள் உருவாக உதவியது. மேலும் மேலும் புதிய தொழில் முனைவோர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, தான் நேரடியாக எடுத்துக்கொண்ட பங்கு, பத்திரங்கள் அல்லது தனது ஒப்புறுதிப் பொறுப்பின் விளைவாக எடுத்துக் கொள்ள நேரும் பங்கு, பத்திரங்கள் முதலியவற்றை உடனுக்குடன் விற்க இக் கூட்டுரு முயற்சி செய்கின்றது.

புதியதொரு தொழில் நிறுவனத்தைத் துவக்க, நிர்மாணிக்க, நடத்தத் தேவைப்படும் தொழில் நுட்பச் செய்திகளைத் தொழில் முனைவோருக்கு வழங்க, வல்லுநர்களைக் கூட்டுரு தயார் செய்து வைத்துள்ளது. சந்தை-முதலீடு, தொழில்நுட்ப-பொருளாதார ஆராய்ச்சிகளை இக் கூட்டுரு அவ்வப்போது நடத்தி வருகிறது; தனது வாடிக்கையருக்கும் பிறருக்கும் (தொழில் வள வங்கிகள் உட்படப்) பயன்தரக் கூடிய மாநாடுகளையும் இக் கூட்டுரு ஏற்பாடு செய்து வருகின்றது.

**நிருவாகம்**

இக் கூட்டுருவின் நிருவாகம் 15 இயக்குநர்களுக்கு மிகாத இயக்குநர் அவையில் அடங்கியுள்ளது. 1968 துவக்கத்தில் 14 இயக்குநர்கள் இருந்தனர். அவர்களில் 11 இயக்குநர்கள் இந்தியப் பங்குதாரர்களின் பிரதிநிதிகளும், 2 இயக்குநர்கள் பிரிட்டிஷ், ஓர் இயக்குநர் அமெரிக்கருமாக இருந்தனர். இந்திய இயக்குநர்களில் ஒருவர் பெருந்தலைவர், மற்றொருவர் துணைப் பெருந்தலைவர்-நிருவாக இயக்குநர், மேலும் ஒருவர் இந்திய அரசால் ஒப்பந்தப்படி நியமிக்கப்பட்ட இயக்குநர். இயக்குநர் அவைப் பெருந்தலைவர் மேலும் மூன்று இயக்குநர்கள் கொண்ட முதலீட்டுக் குழு (Investment Committee) ஒன்றை அமைத்துள்ளது. கூட்டுருவின் நிதியினை நீண்ட கால முதலீடுகளில் போடும் வாய்ப்பு வரும் வரை, குறுகிய கால முதலீடுகளில் போட்டு நிருவகிக்கும் பொறுப்பு இக் குழுவினைச் சாரும்.

**பங்கு முதல் அமைப்பு**

இக் கூட்டுருவின் செலுத்திய முதல் 1964 வரை ரூ. 100 மதிப்புள்ள 5 இலட்சம் சாதாரண பங்குகளாக, அதாவது ரூ. 5 கோடியாக இருந்தது, பின்னர், 1965-ல் தனது சாதாரண முதல் அடித்தளத்தைப் பலப்படுத்த, ரூ. 2·50 கோடி உரிமை வெளியீடு (2 பழம் பங்குகள் கொண்டவருக்கு 1 பங்கு) செய்து செலுத்திய முதலை ரூ. 7·50 கோடியாக உயர்த்தியது. இதில் 70 சத விகிதம் இந்திய முதலீட்டாளர்கள் வங்கிகள், காப்பீட்டுக் கம்பெனிகள், பொதுமக்கள் எடுத்துக் கொண்டனர்; மீதி 30 சதவிகிதம் அயல்நாட்டு முதலீட்டாளர் எடுத்துக் கொண்டனர். இந்த 30 சத விகிதம், அயல் நாட்டினர் முதலீட்டில் 20 சதவிகிதம், பிரிட்டிஷ் 10 சத விகிதம் அமெரிக்கப் பங்குதாரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனவரி 1972-ல், செலுத்திய முதல் ரூ. 10·00 கோடியாக உயர்த்தப்பட்டது.

இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுரு அவ்வப் போது கடன் பத்திரங்களை வெளியிட்டு நிதி திரட்டுகிறது. இங்ஙனம் திரட்டிய தொகை ரூ. 18·00 கோடியாக அக்டோபர் 1972 இறுதியில் இருந்தது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிட்டு, இக் கூட்டுரு கடன் திரட்டியுள்ளது. இங்ஙனம் கடன் திரட்டியதால் வெளியில் கடன் வாங்கும் தொகை குறைந்தது மட்டுமல்லாமல், இக்கூட்டுரு செவ்வையாக நடத்தப்பட்டு வருகிறது என்பதற்குத் தொழில் வளர்ச்சி வங்கி சான்றளித்தது போலும் ஆயிற்று. அக்டோபர் 1972 இறுதி யில் தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்றிருந்த கடன் ரூ. 15·10 கோடியாக இருந்தது.

**இந்திய அரசின் உதவி**

இந்திய அரசு, இக் கூட்டுரு நிறுவப்பெற்ற போதே ரூ. 7·50 கோடி வட்டியில்லாக் கடனாகத் தந்து உதவியது. இந்தப் பணம் அமெரிக்க அரசாங்கத்தின் தொழில் நுட்ப உதவித் திட்டத்தின்படி, இந்தியா ரூபாயாக அமெரிக்காவிற்குத் தர வேண்டியதாகும். நியாயமான வட்டிக்குப் புதுத் தொழில் களுக்கு இக் கூட்டுரு கடன் வழங்க வகை செய்யுமாறு இக் கடனை அரசு வழங்கியது. பின்னரும் பல கடன்களைக் குறைந்த வட்டிக்கு மத்திய அரசு வழங்கி வந்துள்ளது. அக்டோபர் 1972 இறுதியில் ரூ 27·65 கோடி கடன் மத்திய அரசிடம் இக் கூட்டுரு வாங்கியிருந்தது. கூட்டுருவின் இயக்குநர் அவையில் ஓர் இயக்குநரை நியமிக்கும் உரிமையை, கடன் கொடுக்கும் காரணத்தால், மத்திய அரசு பெற்றுள்ளது.

அயல் நாட்டுச் செலாவணியைப் பெருமளவு கடனாகப் பெற்றுள்ள சிறப்பு இக் கூட்டுருவுக்கே உரித்தான தனிச் சிறப் பாகும். உலக வங்கி, அமெரிக்க அனைத்துலக வளர்ச்சி முகமை, ஜெர்மனியின் கிரிடட்டன்சால்ட் போன்ற பல நிறு வனங்களிடமிருந்து ரூ. 91·46 கோடி அயல்நாட்டுச் செலா வணியை அக்டோபர் 1972 இறுதியில் இக் கூட்டுரு கடனாகப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இதன் மொத்த நிதியத்தில் 60 சத விகிதத்துக்கு மேலாக அயல் நாட்டுச் செலாவணி இருப்பது சிறப்பான ஒரு செய்தியாகும். ரூ. 10·00 கோடியே செலுத்திய முதல் கொண்டிருந்த இக் கூட்டுரு ரூ. 91·46 கோடி அயல்நாட்டுச் செலாவணியைக் கடனாகப் பெற்றிருந்தது. இது

அயல் நாடுகளில் எவ்வளவு சிறந்த நிறுவனமாகக் கருதப் பெறுகின்றது என்பதை விளக்குகின்றது.

### கூட்டுருவின் செயலாற்றல்

திரட்டிய நிதியினை இக் கூட்டுரு எங்ஙனம் கடனாக அளித்து வருகிறது அல்லது முதலீடு செய்கிறது என்பதைக் காண்போம். 1960—61-ல் இக் கூட்டுரு வழங்கிய கடன் ரூ. 2·19 கோடி 1970—71-ல் ரூ. 25·07 ஆக உயர்ந்தது. அதாவது பன்னிரு மடங்கு உயர்ந்தது. இத் தொகை மேலும் உயர்ந்து, அக்டோபர் 1972-ல் ரூ. 29·60 கோடியாக நின்றது. அயல் நாட்டுச் செலா வணியாக அளிக்கப்பட்ட கடன் 1960—61-ல் ரூ. 4·18 கோடி மதிப்புள்ளதாக இருந்தது, 1970—71-ல் ரூ. 77·73 கோடியாக உயர்ந்தது. அதாவது, பத்து வருட காலத்தில் பத்தொன்பது மடங்காகக் கடனளிப்புப் பெருகியது. பின்னர், இக் கடன் தொகை மேலும் உயர்ந்து, அக்டோபர் 1972-ல் ரூ. 97·77 கோடி யாக நின்றது. சுருங்கக் கூறின், இக் கூட்டுரு அளித்த கடன் களில் 77 சத விகிதம் அயல் நாட்டுச் செலாவணியில் அமைந்தது. பத்திரம், கடனீட்டுப் பத்திரங்களில் ரூ. 13·76 கோடியும், பங்கு, பங்குத் தொகுப்பில் ரூ. 16·75 கோடியும் இக் கூட்டுரு முதலீடு செய்திருந்தது, அக்டோபர் 1972 இறுதியில் வெளியான புள்ளி விவரப்படி புலனாகிறது.

இந்தியத் தொழில் கடன், முதலீட்டுக் கூட்டுரு, பிற நிதியக் கூட்டுருக்கள் போன்ற நடைமுறை மேற்கொண்டே கடன்களை வழங்குகின்றது. இக் கூட்டுரு 1958-ல் ரூ. 25·22 இலட்சம் இலாபம் ஈட்டியது. இத் தொகை 1967-ல் ரூ. 139·74 இலட்ச மாக உயர்ந்தது. 1972-ல் ரூ. 1·79 கோடி இலாபம் ஈட்டப் பெற்றது. 1956-ல் இலாப ஈவு 3·5 சத விகிதம் ஆக இருந்தது, 1967-ல் 9·0 சதவிகிதம் ஆக உயர்ந்து, 1971-ல் 10 சத விகிதம் ஆக நின்றது.

இரசாயனப் பொருள்கள், பெட்ரோ ரசாயனப் பொருள்கள், உரம், மருந்து வகை, அலுமினியம், இரும்புக் கம்பி, இரும்பு—எஃகுப் பொருள்கள், காகிதம், ஹோட்டல், வியாபார வாகனங்கள் போன்ற தொழில்களுக்கு இக் கூட்டுரு நிதியுதவி அளித்து வந்துள்ளது. மேலும், விரிவாகத் தொழில் செய்யும் வாய்ப்பு இக் கூட்டுருவுக்கு உள்ளது என்பதில் ஐயமில்லை.

### இந்திய யூனிட் டிரஸ்ட் (Unit Trust of India)

தொழில் வளர்ச்சிக்கு மறைமுகமாக உதவும் நிலையங்களில் இந்திய யூனிட் டிரஸ்ட் முக்கியமானதொன்றாகும். இந்த நிறுவனம் 1963-ல் இயற்றப்பெற்ற இந்திய யூனிட் டிரஸ்ட் சட்டப்படி நிறுவப்பெற்று, ஜூலை 1964 முதல் செயலாற்றி வருகின்றது. சிறு சிறு முதலீட்டாளர்கள் சிறிய தொகையைக் குறிப்பிட்ட ஒரு கம்பெனியில் முதலீடு செய்யும் போது, அதில் ஆதாயம் கிடைக்குமோ அல்லவோ என்று அச்சமும் ஐயமும் கொள்ளலாம். ஆனால், பல நல்ல கம்பெனிகளில் தம் பணத்தை முதலீடு செய்தால், மொத்தத்தில் நியாயமான ஆதாயம் பெற வழியுண்டு. சிறு தொகையை வைத்துக்கொண்டு, தனி ஓர் ஆள் எங்ஙனம் பல கம்பெனிகளில் முதலீடு செய்ய முடியும்? இதற்கு விடையளிக்கும் நிறுவனமே யூனிட் டிரஸ்ட் அல்லது அலகு பொறுப்பாண்மை என்னும் நிறுவனமாகும்.

#### சிறப்புக் கூறுகள்

பொது மக்களின் சேமிப்புகளைத் திரட்ட இந்த அலகு பொறுப்பாண்மை (Unit Trust) அலகுகளை (Units) விற்பனை செய்கிறது. ஓர் அலகின் மதிப்பு ரூ. 10 ஆகும். இங்ஙனம் அலகுகளை விற்பனை செய்து பெறும் பணத்தைப் பொறுப்பாண்மை (Trust) பலப்பல கம்பெனிகளின் பங்கு, கடனீட்டுப் பத்திரங்கள் (Debentures) வாங்குவதில் முதலீடு செய்யும். இந்த முதலீடுகளில் கிடைக்கும் வருவாய் (இலாப ஈவு, வட்டி) அலகுதார் (Unit holder) களிடையே பிரித்தளிக்கப்படும். சிறிய தொகையை முதலீடு செய்யும் நபர், இந்த அலகு பொறுப்பாண்மைத் திட்டத்தின்படி கீழ்க்காணும் நன்மைகளைப் பெறுகிறார்: (i) பணம் பல நல்ல கம்பெனிப் பிணையங்களில் முதலீடு செய்யப்படுவதால் முதலுக்கு ஆபத்து ஏதுமில்லை; (ii) திறமை மிக்க வல்லுநர் இதனை நிருவாகம் செய்கின்றனர்; (iii) திடமான வருவாய் கிடைக்கும்; (iv) எந்த நேரத்திலும் பொறுப்பாண்மை அலகுகளைத் திரும்பி வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதால் இந்த முதலீடு நீர்மைத் தன்மை (Liquidity) பெற்றுள்ளது.

துவக்கத்தில் ரூ. 5 கோடி முதலுடன் இந் நிறுவனம் பணியாற்றத் துவங்கியது. இந்த ரூ. 5 கோடியை அளித்த நிறுவனங்கள்—ரிசர்வு வங்கி ரூ. 2·5 கோடி, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு ரூ. 75 இலட்சம், ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் ரூ. 75 இலட்சம், பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கி

களும் பிற குறிப்பிட்ட நிதிய நிலையங்களும் ரூ. 1 கோடி. இப் பொறுப்பாண்மை சில விதிகளுக்குட்பட்டு, ரிசர்வு வங்கியிட மிருந்து கடன் பெறலாம்.

**நிருவாகம்**

அலகு பொறுப்பாண்மையின் நிருவாகம் பொறுப் பாண்மையர் அவை (Board of Trustees) யிடம் அமைந் துள்ளது. பொறுப்பாண்மையின் பெருந் தலைவரையும் நான்கு பொறுப்பாண்மையர்களையும் ரிசர்வு வங்கியும், ஒரு பொறுப் பாண்மையரை ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவும், ஒருவரை ஸ்டேட் வங்கியும், இரு பொறுப்பாண்மையர்களை முதல் வழங்கிய பிற நிலையங்களும் நியமிக்கும். இவர்களன்றி, நிரு வாகப் பொறுப்பாண்மையர் (Executive Trustee) ஒருவரை ரிசர்வு வங்கி நியமிக்கும்.

**முதலீடு செய்வது பற்றிய விதிகள்**

பொறுப்பாண்மை தனது நிதியினை முதலீடு செய்வதில் சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். எந்த ஒரு கம்பெனி யிலும், அக் கம்பெனி வெளியிட்டுள்ள பிணையங்களில் 15 சத வீதம் அல்லது அலகுத் திட்ட நிதியில் 5 சதவிகிதம் இவற்றில் எது குறைவான தொகையோ, அதற்கு மேற்படாமலே முதலீடு செய்யலாம். மற்றும் புதிய தொழில் நிறுவனங்களின் புதுப் பிணையங்கள் வெளியீட்டில் அலகு நிதியில் 5 சத விகிதம் மிகாத தொகையை மட்டுமே முதலீடு செய்யலாம்.

நிருவாகச் செலவு, பொறுப்பாண்மையின் வருவாயில் பெரும்பகுதியை விழுங்கிவிடலாகாது என்று கருதி, அலகு முதலின் 5 சத விகிதம் அளவுக்கு மட்டுமே நிருவாகச் செலவு இருக்கலாம் என்று நிருணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் நிருவாகச் செலவு ஆனல், அது துவக்க முதல் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படும். 1964 அலகுத் திட்டப்படி வரு மானத்தில் குறைந்தது 90 சத விகிதம் (நிருவாக, இதர செலவுகள் போக) அலகுதாரர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

1972 ஜூன் 30 ஆம் நாள் முடிவுற்ற முதல் எட்டு ஆண்டு களில் 43·7 இலட்சம் அலகுதாரர்களுக்கு ரூ. 104·72 கோடி பெறு மான அலகுகள் விற்கப்பட்டிருந்தன. அலகுதாரர்களுக்கு 1971-72 ஆண்டுக்கு 8·25 சத விகிதம் இலாப ஈவு தரப்பட்டது. துவக்

கத்தில் முதல் வழங்கிய நிலையங்கட்கு முதல் மீது 5·5% வருமானம் வழங்கப்பட்டது.

அலகுத் திட்டம், 1971 (Unit Scheme)

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவுடன் கலந்து, சேமிப்பு—காப்பீட்டுத் திட்டம் (Savings—Cum—Insurance Plan) ஒன்றை 1971-ல் பொறுப்பாண்மை அமுல் படுத்தியது. இத் திட்டம் ஒரு பத்தாண்டுத் திட்டமாகும். இதன்படி அலகுகள் வாங்கும் நபர் ஆண்டுக்கு அல்லது அரையாண்டுக்கு ஒரு முறை குறிப்பிட்ட ஒரு தொகையைப் பொறுப்பாண்மையில் கட்டி வருவார். இத் தொகையில் சிறியதொரு பகுதி காப்பீட்டுக் கூட்டுருவுக்கு அளிக்கப்படும். மீதி, அலகுகளில் முதலீடு செய்யப்படும். பத்தாண்டு இறுதியில் இத் தொகை ரூ. 3,000 க்குக் குறையாமலும், ரூ. 12,000 க்கு மிகாமலும் இருக்க வேண்டும். 18 வயது முதல் 45 வயது வரையுள்ள நபர்களுக்குப் பொருந்திய இத் திட்டப்படி பத்தாண்டுகள் கழித்து, அவர் பெயருக்கு எவ்வளவு அலகுகள் சேர்ந்துள்ளதோ அதற்குத் தக்க அலகுச் சான்றிதழ் அல்லது ரொக்கம் தரப்படும். அக் காலத்திற்குள் அலகுதார் இறந்து போனால், அவர் பேரில் சேர்ந்துள்ள அலகுகளும், குறியீட்டுத் தொகைக்கும் அவர் கட்டிய தொகைக்குமுள்ள வேறுபாட்டுத் தொகை (ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவால் வழங்கப்படுவது) யும், அவரது சட்ட முறையான வாரிசுகளுக்கு வழங்கப்படும். ஜூன் 1972 வரை 500-க்கு மேற்பட்ட நபர்கள் ரூ. 3·27 இலட்சம் துவக்கத் தொகையாக வழங்கி, இத் திட்டத்தில் சேர்ந்தனர். இதன் குறியீட்டுத் தொகை ரூ. 40·70 இலட்சமாக இருந்தது.

1972 ஜூன் இறுதியில் அலகு பொறுப்பாண்மையின் மொத்த முதலீடுகள் ரூ. 119·26 கோடியாக இருந்தது. முதல் பத்திரமாகவும், அதே நேரத்தில் நல்ல ஒரு வருமானம் தரக் கூடியதாகவும் உள்ள வகையில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. பொறுப்பாண்மை 1971—72-ல் ரூ. 4·58 கோடி பெறுமான 14 வெளியீடுகளை ஒப்புறுதி செய்திருந்தது. பொறுப்பாண்மையின் முதலீடுகள் அமைந்த வண்ணத்தை அடுத்த பக்க அட்டவணை விளக்குகிறது.

வருங்காலத்தில் அலகு பொறுப்பாண்மை மேலும் சிறப்பாக வளர்ந்து, பொது மக்களின்—குறிப்பாகச் சிறு முதலீட்டாளர்களின்—முதலீட்டுச் சாதனமாக அமையும் என்றும், தொழில் வளர்ச்சிக்குப் பொறுப்பாண்மை மேற்கொள்ளும்

முதலீடு மிகவும் உதவியாக அமையும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

## பட்டியல் 11-2

**பொறுப்பாண்மையின் நிதிகள் பயன்படுத்தப்பட்ட முறை**
(ஜூன் 30, 1972-ல் உள்ள நிலை)

| | தொகை ரூ. கோடி களில் | மொத்த முதலீட்டில் % |
|---|---|---|
| சாதாரண பங்குகள் | 44·61 | 37·4 |
| முன்னுரிமைப் பங்குகள் | 13·89 | 11·7 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 41·89 | 35·1 |
| பொதுக் கூட்டுருப் பத்திரங்கள், அரசினர் | — | — |
| பிணையங்கள் | 0·25 | 0·2 |
| கருவூல மாற்றுச் சீட்டுக்கள் | | — |
| கடனீட்டுப் பத்திரங்கள், முன்னுரிமைப் | | |
| பங்குகள் வாங்க முன்பணம் கட்டியது | 7·54 | 6·3 |
| அழைப்புத் தொகை எதிர்நோக்கி முன்பணம் | 0·03 | |
| விண்ணப்பத் தொகை | 3·09 | 2·6 |
| வங்கிகளிடம் அழைப்புப் பணம் | 7·93 | 6·7 |
| மொத்தம் | 119·23 | 100·00 |

# 12. வங்கியக் குழுவின் அறிக்கை

## (Banking Commission's Report)

இந்திய வங்கியத் துறை வரலாற்றில் மிகவும் சிறப்பான தொரு நிகழ்ச்சி வங்கியத் துறை பற்றிய முழுமையான தொரு ஆய்வு நடத்த இந்திய அரசு 1969 ஆம் ஆண்டில் ஒரு குழுவை நியமித்ததாகும். நம் நாட்டிலுள்ள வங்கியத் துறை பற்றிய ஆய்வு கடைசியாக நிகழ்ந்து, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. 1931-ல் இந்திய மைய வங்கிய விசாரணைக் குழு (Indian Central Banking Enquiry Committee) தனது அறிக்கையை அளித்தது யாவரும் அறிந்ததே. இக் குழுவின் அறிக்கைக்குப் பின் பலப்பல பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்கள் நாட்டில் நிகழ்ந்துள்ளன. நாட்டிற்கு ஒரு மைய வங்கி ஏற்படுத்தப்பட்டது. வங்கிய நிலையங்களுக்குப் பொருந் தும் சட்டம் இயற்றப் பெற்றது. நாடு விடுதலை யடைந்த பின், ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன. மக்களாட்சி முறையில் சோஷலிசம் நிலவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெரும் வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் வங்கியத் துறையில் பல மாற்றங்களை உண்டாக்கின.

### குழு அமைப்பு

பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாது தேவைப்படும் சேமிப்புத் தொகையைத் திரட்டுவதில் வங்கிகள் பெரும்பங்கு ஏற்க வேண்டும். கிராம, சிறு நகர்ப் புறங்களில் வைப்புக்களைத் திரட்டுவது மட்டுமன்றி, அவ்விடங்களிலுள்ள சிறு தொழில் முனைவோர், விவசாயிகள் போன்றோரின் நிதித் தேவைகளை ஆராய்ந்தறிந்து, அவர்களுக்கு உதவி வழங்கவும் வேண்டும். வங்கிகளின் நடைமுறை மேலும் சீர்மை பெற்று நவீனமாக்கப்பட வேண்டும். இந்தச் செய்திகளையும் தொடர்

புற்ற பிற செய்திகளையும் கூர்ந்து ஆராய்ந்து, வங்கியத் தொழில் சரியாக, செம்மையாக வளர, வழி வகைகளைப் பரிந்துரைக்கக் குழு வொன்று நியமிக்கப்பட்டது.

இங்ஙனம் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் விவரம் வருமாறு :

திரு. R. G. சரையா — பெருந்தலைவர்

திரு. N. ராமாநந்த ராவ் — உறுப்பினர்

திரு. பாபடோஷ் டட்டா — உறுப்பினர்

திரு. V. G. பெந்தார்க்கர் — உறுப்பினர்-செயலர்.

இக் குழுவை வங்கியக் குழு என்றும், சரையா குழு என்றும், வங்கிக் கமிஷன் என்றும் குறிப்பிடுவர். பெப்ரவரி 1969-ல் அமைக்கப் பெற்று, மார்ச்சு 7 ஆம் நாள் முறையாகத் துவக்கி வைக்கப் பெற்ற இக் குழு, 1972 பெப்ரவரி 9 ஆம் நாள் தனது அறிக்கையை அளித்தது. இக் குழு செயலாற்றத் தொடங்கிய சில திங்களில் 14 பெரும் வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டன. இந் நிகழ்ச்சி வங்கியக் குழுவின் அடிப்படை விசாரணைகளையும் ஆய்வினையும் மாற்றவில்லை.

**பார்வைக்குரிய செய்திகள்**

வங்கியக் குழு, கீழ்க்காணும் செய்திகளை ஆயும்படியும் பரிந்துரை செய்யும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(i) தற்போது அமைந்துள்ள வணிக வங்கிய அமைப்பு, அளவு, பரப்பு, நடவடிக்கை, எல்லை இவற்றைக் கருத்தில் கொண்டு, அமைப்பை மேலும் செம்மைப்படுத்தல்.

(ii) வணிக வங்கிய அமைப்பு மேலும் பரப்பப்பட்டு, மேலும் பணிகளை மேற்கொள்ளல்.

(iii) வணிக வங்கிகளின் செயல் முறைகளையும், நிருவாகக் கொள்கைகளையும் ஆராய்ந்து, அவற்றைச் செம்மைப்படுத்தல்.

(iv) மூலதன, செலவு அமைப்பு, காப்பு நிதிகளும் உபரியாயுள்ள தொகைகளும் போதுமானவையா என்று ஆராய்ந்து, வங்கியத் துறை வளர்ச்சிக்கு இது எவ்வளவு பொருந்தும் என்று காணல்.

(v) வங்கியத் துறையில் பணியர் சேர்ப்பு, பயிற்சி, மற்றும் தொடர்புற்ற செய்திகளைப் பரிசீலனை செய்தல்.

(vi) கூட்டுறவு வங்கிகளும் வணிக வங்கிகளும் ஒருங்கிணைந்து செயற்பட, முக்கியமாக வங்கிய வசதிகளையும் பணிகளையும் பெருக்குவதில் உள்ள வாய்ப்புக்களைப் பரிசீலித்தல்.

(vii) வங்கியல்லா நிதிய இடை நிலையர்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, அவை ஒழுங்கான முறையில் வளர, வழி வகைகளைக் காணல்.

(viii) பணச் சந்தையில் நாட்டு வங்கியர் எங்ஙனம் உதவக் கூடுமென்றும், அவர்களது நடவடிக்கைகள் எவ்விதமுள்ளன வென்றும் ஆராய்தல்.

(ix) வணிக வங்கி, கூட்டுறவு வங்கித் துறைகளைச் சார்ந்த தற்போது அமுலிலுள்ள சட்டங்களை ஆய்வு செய்தல்.

(x) குழு தான் மேற்கொண்டுள்ள பணியைச் சார்ந்தது எனக் கருதும் எச் செய்தியையும் விசாரித்துப் பரிந்துரை செய்தல்.

இந்திய மைய வங்கிய விசாரணைக் குழு 1931-ல் அளித்த அறிக்கைக்குப் பின் பல குழுக்கள் வங்கியத் துறையின் பரப்பு, பணிகள் பற்றிய ஆய்வுகளைச் செய்தன. முக்கியமாகக் கூட்டுறவுத் திட்டக் குழு (Co-operative Planning Committee 1945), கிராமிய வங்கிய விசாரணைக் குழு (Rural Banking Enquiry Committee 1950), அனைத்திந்திய கிராமியக் கடன் விசாரணை ஆணைக் குழு (Committee of Direction of All-India Rural Credit Survey 1951-52), திருவாங்கூர்—கொச்சி வங்கிய விசாரணைக் குழு (Travancore-Cochin Banking Inquiry Commission 1956), அனைத்திந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழு (All-India Rural Credit Review Committee 1969). இவை மட்டுமல்லாமல் தேசியக் கடன் மன்றம் (National Credit Council), பல ஆராய்ச்சிக் குழுக்களை அமைத்து, சமூக நோக்கங்களைச் செயற்படுத்த வங்கியமைப்பு, வணிக-கூட்டுறவு வங்கிகள் வைப்புத் திரட்டல், வணிக வங்கிகள் விவசாயக் கடன் அளிப்பதற்கு பர்ப்பு/திட்ட அடிப்படையில் செயலாற்றல் போன்ற பல செய்திகளைப் பற்றி வல்லுநர் அறிக்கைகளைச் சேர்த்து வைத்திருந்தது. இத்தனை அறிக்கைகளையும் செய்திகளையும் கருத்தில் கொண்டு, வங்கியக் குழு தனது அறிக்கையைத் தயாரித்தது.

வங்கியக் குழுவின் அறிக்கை 24 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு, 411 பாராக்களில் அளிக்கப்பட்டுள்ளது. நிதிய அமைப்பில் உள்ள சட்ட முறை நிறுவனங்களான ரிசர்வு வங்கி, யூனிட் டிரஸ்டு (அலகு பொறுப்பாண்மை) போன்றன குழுவின் ஆய்வுக்கு உட்படவில்லை. தன்னுடைய பணிக்கு உதவியாகக் குழு, ஐந்து படிப்புக் குழு, (Study Group) களை அமைத்துக் அவை கண்ட முடிவுகளைக் கருத்தில் கொண்டு, தனது பரிந்துரைகளைச் செய்தது.

**பரிந்துரைகள்**

வங்கியக் குழுவின் பரிந்துரைகளை ஐந்து தலைப்புக்களாகப் பிரித்துக் காணலாம்.

**I. நிலைய அடிப்படை அமைப்பு, கிராமிய வங்கிகள்**

கிராமிய இடங்களில் வங்கிய முறை வளரக் 'கிராமிய வங்கிகள்' (Rural Banks) நிறுவப்படவேண்டுமென்று குழு பரிந்துரைத்துள்ளது. கிராமிய வங்கிகள் கூட்டுறவுத் தன்மை கொண்ட நிலையங்களாக இருக்கும். தற்போது பிரதம விவசாய நாணயக் கூட்டுறவுச் சங்கங்கள் அளித்து வரும் சேவைகளை விட அதிகமான, பரவலான பணிகளை கிராமிய வங்கிகள் மேற்கொள்ளும். உள்ளூரிலுள்ள சேமிப்புக்களைத் திரட்டல், சிறிய நடுத்தர உழவர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்தல், படிப்படியாகக் கடன் சரிவரப் பயன்படுத்தப் படுகிறதா என்று மேற்பார்வை செய்தல், வங்கிய துணைப் பணிகளை மேற்கொள்ளல், கிடங்குகளை அமைத்துப் பராமரித்தல், விவசாயத் தளவாடங்கள், உள்ளீடு (Inputs) களை வழங்குதல், சந்தையிடுகைக்கு உதவுதல் போன்ற வழிகளில் எல்லையிலுள்ள கிராமங்களின் வளர்ச்சிக்குக் கிராமிய வங்கி பாடுபடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடக்கமாக உள்ள ஒரு சில கிராமங்களுக்கு ஒரு கிராமிய வங்கி, அதாவது 5,000 முதல் 20,000 மக்கள் தொகைக்குப் பணி செய்யும் வகையில், அமைக்கப்பட வேண்டும்.

கிராமிய வங்கிய அடிப்படை அமைப்பு ஒன்றை உருவாக்க, குழு, எங்கெல்லாம் பிரதமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் திறமையாக, நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றனவோ, அங்கெல்லாம் கூட்டுறவு அமைப்பிலேயே அவை கிராமிய வங்கிகளாச் செயலாற்றலாம் என்று பரிந்துரைத்துள்ளது. கிராமியக் கூட்டுறவு வங்கிகளின் சேவை பங்குதாரர்கட்கு மட்டும்

லாது துணையூர் உறுப்பினர் (Associate Member) என்ற புது வகை உறுப்பினர்களுக்கும் கிட்ட வேண்டும். இவர்களுக்கு வாக்குரிமை (Voting right) கிடையாது. ஆனால் கடன் வாங்கும் உரிமை தரப்பட வேண்டும்.

தன்னிறைவு (Viable) பெற்ற அல்லது பெறக்கூடிய பிரதம நாணயச் சங்கங்கள் இல்லாத இடங்களில், வணிக வங்கிகளின் துணை நிறுவனங்களாகத் தனித்த இயக்கமுள்ள, 'கிராமிய வங்கிகள்' நிறுவப் பெற வேண்டும். உள்ளூர் மக்கள் இவ் வகை வங்கியோடு தொடர்பு பெற, எங்கு வணிக வங்கி, ஒரு கிராமியத் துணை வங்கியை அமைக்கின்றதோ, அந்த ஊரிலுள்ள மக்களுக்கு, அத் துணை வங்கியின் பங்கு முதலில் 49 சத வீதம் அளவு வரைப் பங்குகளை எடுத்துக் கொள்ளுமாறு அழைக்க வேண்டும். புதிய வங்கிக்கு வேண்டிய முதல், தகுதி பெற்ற பணியர், தொழில் அனுபவம் ஆகியவற்றை வணிக வங்கிகள் மட்டுமே அளிக்கும் நிலையிலுள்ளன. வணிக வங்கியின் துணை வங்கியாக நிறுவப் பெறும் வங்கி, பின்னர் விரும்பினால் கூட்டுறவு அமைப்பாக மாற்றியமைக்கப் பெறும் வாய்ப்புள்ளதாக இருக்க வேண்டும்.

துவக்கத்தில் நன்கு நடத்தி வரப்படும் பிரதம விவசாய நாணயச் சங்கங்களைக் கிராமிய வங்கியாக மாற்றி யமைப்பதற்கு முதலிடம் தர வேண்டும். வணிக வங்கிகள் தாமே, துணை வங்கிகளை ஏற்படுத்தும் பொறுப்பைப் பரீட்சார்த்தமாகத் தமது முனைவு மாவட்டங்களில் (Lead Districts) ஐந்தாண்டுகளுக்கு முயன்று பார்க்கலாம். இத் திட்டத்தைச் செயற்படுத்த, விவசாயத்தில் மேம்பாடு அடைந்துள்ள, கணிசமான வைப்புக் கிடைக்கும் வாய்ப்புள்ள இடங்களையே முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**தன்னிறைவு பெறுவதற்கு யோசனைகள்**

கிராமிய வங்கிகள் தன்னிறைவு பெற்று விளங்க, கீழ்க் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்:

(i) ஒரு வணிக வங்கி அல்லது வலிமையான கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின் கீழும், மேற்பார்வையிலும் கிராமிய வங்கி செயலாற்றுமாகையால், இவ் வங்கியின் கடன் வாங்கு திறனுக்கு, உச்ச வரம்பு குறிப்பிட வேண்டுவதில்லை.

(ii) இலாபத்தை மீண்டும் தனது நிதியுடன் சேர்த்து விடுவதன் வழி, கிராமிய வங்கி தனது நிதி நிலையை வலுப் படுத்திக் கொள்ளலாம். மேலும், பங்குகளை வெளியிட்டு முதல் தேட வேண்டுவதில்லை. இதற்கு இலாப ஈவு வழங்குதலில் உச்ச வரம்பு இருத்தல் அவசியம்.

(iii) ரிசர்வு வங்கி ஏற்படுத்தி யுள்ள தேசிய விவசாயக் கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதியிலிருந்து, துணை வங்கிகள் நிறுவ முனையும் வங்கிகளுக்கு நிதியம் அளிக்கப்பட வேண்டும்.

(iv) தலை வங்கி அளிக்கும் வட்டியை விடக் கூடுதலான வட்டி யளிக்க, கிராமிய வங்கிகளுக்கு அனுமதி தரப்பட வேண்டும்.

(v) வைப்புக்காப்பீடு, கடன் பொறுப்புறுதித் திட்டங்களின் நன்மைகள், இவ் வங்கிகளுக்குக் கிட்டுமாறு செய்ய வேண்டும்.

(vi) பணச் செலவு ஏதுமின்றி அனுப்புகை (Remittance) வசதிகளும், பணியர் பயிற்சி வசதிகளும், கிராமிய வங்கி களுக்குச் சலுகையாக அளிக்கப்பட வேண்டும்.

பிரதமக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் பெற்றாலும் சரி, அல் லது கிராமிய வங்கியில் கடன் பெற்றாலும் சரி, கிராமப்புறக் கடன் கோருபவர் ஒரே அளவு வட்டி செலுத்தும்படி ஏற்பாடு அமைவது அவசியம்.

கிராமிய வங்கித் திட்டத்தைச் சரிவர அமுல் படுத்தும் பொறுப்பு, ரிசர்வு வங்கியினதாக இருக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்துள்ளது. வணிக, கூட்டுறவு வங்கி களின் கிராமிய வங்கித் திட்டத்திற்குத் தக்க வழி காட்டி, அவற்றை ஒருங்கிணைத்துச் செயற்பட வைப்பது ரிசர்வு வங்கியின் பொறுப்பாகும்.

**கூட்டுறவு அமைப்பை மாற்றி அமைத்தல்**

வங்கியக் குழு, எங்கெங்குக் கூட்டுறவு மத்திய வங்கிகள் நலிந்து கிடக்கின்றனவோ, அங்கங்குக் கூட்டுறவு அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது. மாவட்ட, மத்திய வங்கிகள் நலிந்து கிடக்கும் மாநிலங்களில், உச்சி வங்கிகளுக்குக் கிளை வங்கிகள் மட்டுமே அமைப்பில்

இடம் பெற வேண்டும். பெரும்பான்மையான மத்திய வங்கிகள் வலுவாக இருக்கும் மாநிலங்களில், தற்போதுள்ள அமைப்பை மாற்றத் தேவையில்லை. வலுவுள்ள, திடமான மாவட்ட மத்திய வங்கிகள், 'பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள்' (Scheduled Banks) என்ற நிலை பெற அனுமதிக்கப் பட வேண்டும். தேசியக் கூட்டுறவு வங்கி (National Co-operative Bank) ஒன்று நிறுவப்பட வேண்டுமென்ற கருத்தை வங்கியக் குழு ஆதரிக்கவில்லை. ரிசர்வு வங்கியின் விவசாயக் கடன் அவை (Agricultural Credit Board) வணிக, கூட்டுறவு வங்கிகளின் நிதிகள் விவசாயத் தேவைகளுக்கு வேண்டிய அளவுக்குக் கிடைக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.

**வணிக-கூட்டுறவு வங்கிகள் ஒருங்கிணைப்பு**

கிராமிய வங்கிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வங்கியக் குழு வற்புறுத்துவதை, வணிக வங்கிகள் வழி நாட்டுப் புறத்திற்குக் கடன் வசதிகள் வழங்குவது இயலாதது என்று நினைப்பதாகக் கொள்ளக் கூடாது, குறிப்பிட்ட ஒரு பரப்பில், எந்த வகை ஏற்பாடு சரிப்பட்டு வரும் என்று பல வழிகளில் முயல்வதே இன்றைய நிலையின் தேவை. கூட்டுறவு நிலையங்கள் குறுகிய காலக் கடன் மட்டும் வழங்க இயலும். ஆனால் நீண்ட காலக் கடன்-நிலத்தை வளப்படுத்தக் கடன் தர இயலாமலுள்ளது என்ற நிலையுள்ள இடத்தில், கூட்டுறவு நிலையங்களுடன் தக்க ஏற்பாடு செய்துகொண்டு, வளர்ச்சி நோக்கத்திற்கு மட்டும் வணிக வங்கி கடன் தரலாம். தரப்படும் மொத்தக் கடன் தொகை போதுமானது; அது சரி வரப் பயன்படுத்தப் படுகிறது என்று உறுதி செய்துகொள்ள, கூட்டுறவுகள் — வணிக வங்கிகளிடையே ஒருங்கிணைப்பு அவசியம் தேவைப் படுகிறது. இந்த ஒருங்கிணைப்பு உருவாக மாவட்ட அளவில் கடன் வழங்கும் எல்லா நிறுவனங்களும் சேர்ந்த அமைப்பு ஒன்று நிறுவப்படவேண்டும்; மாவட்ட வளர்ச்சித் துறைக்குத் தலைவரான அரசு அலுவலர் இவ்வமைப் பிற்குத் தலைமை தாங்க வேண்டும் எனக் குழுப் பரிந்துரை செய்துள்ளது. தமக்குள் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள ஒருங்கிணைப்பு அமைப்புக் கூட்டுறவு, வணிக வங்கிகளுக்கு உதவும். மாவட்டத்திற்குத் தேவைப்படும் கடன் அளவைத் திட்டமிடுதல், மாவட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். வங்கிகள் மாவட்டக் கடன் திட்டத்தைத் தயாரிக்க உதவ வேண்டும்.

விவசாய நிதியக் கூட்டுரு (Agricultural Finance Corporation) வும், விவசாய மறு நிதியக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) வும் ஒன்றிணைக்கப்பட்டு, வளர்ச்சிக் கடன்கள் அளிக்கப் புதிய நிலையமொன்று அமைக்கப்படலாம். ரிசர்வு வங்கியின் கண்காணிப்பில் குறுகிய காலக் கடன் அளிக்கும் நிலையங்களும், தவணைக் கடன், தொழில் நுட்ப உதவி அளிக்கும் நிலையங்களும் சீரான முறையில் ஒருங்கிணைந்து செயற்பட இவ்வேற்பாடு வழி வகுக்கும்.

**நகரக் கூட்டுறவுகள்** (Urban Co-operatives)

வைப்புக்களைத் திரட்டுவதிலும், சிறு கடன் கோருவோருக்குக் கடன் வசதி யளிப்பதிலும் நகர வங்கிகள் நல்ல பணியாற்றிவருகின்றன. நன்கு நிருவகிக்கப்படும் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்குப் 'பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெற்ற வங்கிகள்' (Scheduled Banks) என்ற தகுதி யளிப்பது, பெரிய வணிக வங்கிகளைப் பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெறாத நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு இலவசமாக அனுப்புகை வசதி யளிக்கக் கோருவது, நியாயமான நிபந்தனைகளின் பேரில் அவற்றிற்குக் கடன் வசதி தரும்படி கோருவது ஆகிய ஏற்பாடுகள் வழி, நகரக் கூட்டுறவு வங்கிகள் நிறுவப்படுவதை ஊக்குவிக்கலாம்.

**சிறப்பு வங்கிய நிலையங்கள்** (Specialised Banking Institutions)

சிறப்புச் சேமிப்பு வங்கி, சிறு தொழில்கள்—சிறு கடன் கோருவோர் நிதிய வங்கி, ஏற்றுமதி—இறக்குமதி வங்கி போன்ற சிறப்பீடுபாட்டு வங்கிய நிலையங்கள் நிறுவப்படுவதை வங்கியக் குழு ஆதரிக்கவில்லை. வீடு கட்ட நிதி யுதவி வழங்க மட்டும் நாட்டளவில் ஓர் உச்சி வங்கியும், மாநில அல்லது பிராந்திய அளவில் உள்ளூர் வீடு கட்டு நிதிய நிலையங்களும் உருவாக்கப்படலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உள்ளூரில் நிறுவப் பெறும் நிலையம், அவ் வூர் வாசிகளால் உச்சி நிலையத்தின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட வேண்டும். உள்ளூர் நிலையங்கள் வீடு கட்ட அல்லது வாங்க, தரப்படக் கூடிய கடனையும் சேமிப்பையும் இணைக்கும் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். உச்சி நிலையம் மேற்பார்வை செய்வது, ஊக்குவிப்பது, உள்ளூர் நிலையங்களுக்குத் தற்காலிகக் கடன் அளிப்பது ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். தற்போது புரிந்து வரும் நிதியச் சார்பற்ற நடவடிக்கைகளைத் துறந்துவிட்டால், வீட்டு—நகர வளர்ச்சிக் கூட்டுருவே (Hous

and Urban Development Corporation) உச்சி நிலையப் பணிகளை மேற்கொள்ளலாம். இல்லையேல், ரிசர்வு வங்கி இம் மாதிரியான மத்திய முகமை யொன்றைத் தோற்றுவிக்க வேண்டும்; மேலும் தனி வீட்டு வசதி நிதி யொன்றையும் நிறுவி, வீட்டு நிதிய ஏற்பாட்டுக்கு உதவ வேண்டும். பிரதம சங்கங் களுக்கு மறு நிதி வசதி யளிக்க ஓர் உச்சிக் கூட்டுறவு வீட்டு வசதி நிதியச் சங்கம் மாநிலம் ஒவ்வொன்றிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். வீடு கட்டுவோருக்கு வணிக வங்கிகள் குறுகிய, மத்திய காலக் கடன்கள் வழங்கி, அதன் வழி, வீட்டு வசதிப் பெருக்கத் திட்டத்தைச் செயற்படுத்தலாம்.

கூட்டாகச் சேர்ந்து நிதி யளிப்பது, திட்டங்களை உரு வாக்குவது, சிறு சேமிப்பாளர்—சேம நிதி, பொறுப்பாண்மை நிலையம் போன்றோருக்கு முதலீடு ஆலோசனை, முதலீடு நிறு வாகம் போன்ற பணிகளைச் செய்தல் ஆகியவற்றை மேற் கொள்ள, வியாபார வங்கிய (Merchant banking) நிலையங்கள் ஏற்படுத்தப்படலாம் எனக் குழு பரிந்துரைத்துள்ளது. வணிக வங்கிகளும், சிறப்பீடுபாடுள்ள நிதிய நிலையங்களும் சேர்ந்து சென்னை, பம்பாய், கல்கத்தா, புது டெல்லி ஆகிய இடங்களில் இவற்றைத் துவக்கலாம். பின்னர் முக்கிய இடங்களில் இதன் கிளைகள் திறக்கப்படலாம்.

**வங்கி யல்லாத நிதிய இடை நிலையர் (Non-banking Financial Intermediaries)**

பணவாக்கக் கொள்கை (Monetary policy) யின் பலனைக் குறைக்காது காக்கவும், வைப்பாளர்களின் நலன்களைப் பாது காக்கவும், வங்கியல்லாத நிதிய இடைநிலையரின் நடவடிக்கை களை ஒழுங்காற்றவும் வங்கியக் குழு பல யோசனைகளைத் தந் துள்ளது. இந்த இடை நிலையர்கள் கூட்டுருக்களாகத் தம்மை அமைத்துக் கொள்ளும்படி ஊக்குவிக்கப் படலாம். இந் நிறுவனம் ஒப்புதல் பெற்றவை, பெருதவை என இரு பிரிவுக ளாகப் பிரிக்கப்படலாம். முதல், காப்பு நிதி, நீர்மை விகிதம் (Liquidity ratio), நிருவாகத்தின் திறம் போன்ற தகுதிகளின் அடிப்படையில் ஒப்புதல் பெற்றதா அல்லவா என நிருணயிக்க வேண்டும். ஒப்புதல் பெற்ற நிலையங்கள் வங்கிகளிடம் மறு நிதிய வசதி, கடன் பொறுப்புறுதி போன்ற சலுகைகளைப் பெறத் தகுதியுள்ளன.

வாடகைக் கொள் முறை (Hire-purchase) நிலையங்கள் கட்டாயமாக உரிமம் (Licence) பெற வேண்டும். உரிமம்

வழங்கும் அதிகாரி, அதனை ரத்து செய்யும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். நாட்டின் கிழக்குப் பிராந்தியத்தில் வாடகைக் கொள் முறை நடவடிக்கைகளுக்கு நிதி வழங்கும் நிலையங்கள் இல்லாத காரணத்தால் பெரும் வணிக வங்கிகள் சில ஒன்று சேர்ந்து, சில வாடகைக் கொள் முறை நிதியக் கம்பெனிகளை உருவாக்கலாம்.

**சீட்டு நிதி — நிதியக் கூட்டுரு**

சீட்டு நிதி (Chit fund) களைப்பற்றிக் குழு கூறியுள்ளதாவது: நம் நாட்டில் தொன்று தொட்டுப் பிரபலமாக இருந்து வரும் சீட்டுப் பிடித்தல் என்ற தொழிலை அகற்றி விட்டால், வேறு மாற்று ஏற்பாடு இல்லாத நிலையில், மக்களுக்குக் கடன் வசதி தரும் ஒரு நிறுவனம் இல்லாது போகும். நாடு முழுவதற்கும் பொதுவாக ஒரு சீட்டு நிதிச் சட்டம் இயற்றி, வரையறுத்த பொதுக் கம்பெனிகள் மட்டுமே சீட்டுத் தொழிலில் ஈடுபடலாம் என்று வற்புறுத்தி. வேறு வகைகளிலும் அவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்காற்றலாம்.

நிதியக் கூட்டுருக்கள் (Finance Corporations) பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்கின்றன; கடன்களை வழங்குகின்றன. எனவே, இவற்றின் நடவடிக்கைகள் வணிக வங்கிகளின் நடவடிக்கை போன்று ஒழுங்காற்றப் பட வேண்டும். வைப்பு ஏற்றுக் கொள்ளும் நிலையங்களும், நிதிய நிலையங்களும் மாநில அளவில் ஏற்படுத்தப்பட்ட உரிமம் வழங்கும் அல்லது ஒழுங்காற்று ஆணையங்களால் ஒழுங்காற்றப் படலாம். இந்த ஆணையங்களுக்கு அனைத்திந்திய மட்டத்தில் ஓர் உச்ச நிலையம் இருக்கலாம். மாற்றாக, இந்திய ரிசர்வு வங்கிக்கு இப் பொறுப்பு ஒப்படைக்கப்படலாம்.

**நாட்டு வங்கியர் (Indigenous Bankers)**

வங்கியக் குழு, நகர்ப்புறங்களில் பெருமளவுக்குச் செயலாற்றி வரும் நாட்டு வங்கியரின் நடவடிக்கைகளை மட்டுமே ஆராய்ந்தது; வட்டித் தொழிலர்களைப் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்ளவில்லை. வியாபாரம், தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு, நடுத்தரக் கடன்கோருவோர் நாட்டு வங்கியரிடம் கடன் வாங்குகின்றனர். சடங்குகள் எவையுமின்றியும், தாமதமின்றியும், சூழ்நிலைக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ளும் தன்மையுடனும் நாட்டு வங்கியர் செயற்படுகின்றனர். நாட்டு வங்கியரின் நடவடிக்கைகளை ஓர் ஒழுங்குக்கும் கட்டுப்-

பாட்டுக்கும் உட்படுத்தி, அவர்களை ஒழுங்கமைதி பெற்ற நிதிய நிலையங்களோடு சேர்த்து, சமூக நிதிய ஒழுங்கு முறைப்படி தமது நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளச் செய்வதே குழுவின் பரிந்துரைகளின் நோக்கமாகும்

நாட்டு வங்கியரின் தொழிலைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வர, மிகச் சிறந்த வழி, அவர்களுக்கு வணிக வங்கி களின் வழி, தள்ளுபடி வசதிகள் (Discounting facilities) அளிப்பதாகும். தள்ளுபடி வசதிகள் கோரும் நாட்டு வங்கியர்.

(i) வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது;

(ii) ஓர் இலட்சம் ரூபாய்க்குக் குறையாது தம் முதலைத் தொழிலில் ஈடுபடுத்த வேண்டும் (சொந்த முதலைப் போன்று இத்தனை மடங்குத் தொகைக்குத் தள்ளுபடி வசதிகள் பெறலாம் என்று நிருணயிக்கப் படவேண்டும்);

(iii) கணக்கு ஏடுகளை ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். அவற்றைத் தணிக்கை செய்விக்கவும் வேண்டும்;

(iv) ஆண்டு நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கையை ரிசர்வு வங்கிக்கு அனுப்ப வேண்டும்;

(v) ஒரு வங்கியிடமிருந்து மட்டுமே கடன் வாங்கலாம்;

(vi) நாட்டு வங்கியர் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் என்ற விதி முறைகட்கு உட்பட்டுத் தொழில் செய்தால் மட்டுமே வணிக வங்கியிடம் தள்ளுபடி வசதிகளைப் பெறலாம்.

கடந்த காலத்தில் நாட்டு வங்கியர்களுக்கும் ரிசர்வு வங்கிக்கும் தொடர்பு உண்டாக்கப் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால், அவை யனைத்தும் தோல்வி யடைந்தன. வங்கியக் குழு, 'இங்ஙனமான நேரடித் தொடர்பு தேவை யில்லை; முடிகிற காரியமும் அல்ல' என்று கூறியுள்ளது. வணிக வங்கிகள் மூலம் ரிசர்வு வங்கி மறைமுகமான கட்டுப் பாட்டை மேற்கொள்ளுவதே போதும். இன்ன வகை உண்டியல்கள் (Hundis) தாம் தள்ளுபடி செய்து தரப்படும்; இன்ன தொகைக்கு மட்டும் தான் தள்ளுபடி செய்து தரப்படும் என்றெல்லாம் விதித்து, அவ்வப்போது நிதி நிலை அறிக்கை களைத் தரும்படி கோரி, அவ் வறிக்கைகளை ஆராய்ந்து, தக்க

அறிவுரைகளை வணிக வங்கிகள் நாட்டு வங்கியருக்கு வழங்க வேண்டும்.

நாட்டு வங்கியர் அளிக்கும் கடன், குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பயன் படுத்தப்படுகிறதா என்று அங்குமிங்கும் உசாவி, வணிக வங்கிகள் அறிய வேண்டும். தமது கடனாளிகளிடம் நாட்டு வங்கியர் என்ன வட்டி வாங்குவார் என்பது குறித்தும், நாட்டு வங்கியர்—வணிக வங்கிகளிடையே உடன்பாடு இருக்க வேண்டும். நாட்டுவங்கியர் கூட்டுரு அமைத்துக் கொள்ளுமாறு, ஊக்குவிக்கப் பட வேண்டும். அவர்களுடைய நடவடிக்கைகளையும் உண்டியல்களையும் சட்ட முறையாக ஒழுங்காற்ற வேண்டும்.

## II. வணிக வங்கிய அமைப்பு மாற்றம்

வங்கியக் குழு, வணிக வங்கியத் துறையின் அடிப்படை அமைப்பை மாற்றியமைக்கப் பரிந்துரைகள் பலவற்றை அளித்துள்ளது. இப்பரிந்துரைகளில் பொதுத் துறை (Public sector) வங்கிகளுக்குப் பொருந்துவனவற்றை முதலில் காண்போம்.

### அனைத்திந்திய—பிராந்திய வங்கிகள்

நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் விரைவில் இரண்டு அல்லது மூன்று அனைத்திந்திய வங்கிகளாகவும், ஐந்து அல்லது ஆறு பிராந்திய வங்கிகளாகவும் திருத்தியமைக்கப்பட வேண்டும். பணியின் அடிப்படையில் வங்கிகள் அமைக்கப்படுவதை—எடுத்துக்காட்டாக, சேமிப்புகளைத் திரட்ட ஒரு வங்கி, பெரும் நடுத்தர அளவுத் தொழில்களுக்குக் கடனளிக்க ஒரு வங்கி என்ற முறையில் அமைக்கப்படுவதைக் குழு ஆதரிக்கவில்லை. இந்த அமைப்பு மாற்றத்தை வங்கியக் குழு, செலவு காரணங்களை யொட்டி மேற்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது. பொதுத் துறை வங்கிகள் 2-ஐயும் ஒன்றாக இணைத்து, மாபெரும் ஓர் அமைப்பு ஏற்படுத்துவதை நல்லதெனக் குழு கருதவில்லை. வாடிக்கையர் தமக்கு விருப்பமான வங்கியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்புப் பெற்றிருக்க வேண்டும் என்று குழு கருதியுள்ளது.

**புதிதாக அமைக்கப்படும் வங்கிகள் தொழில் செய்ய நிருணயிக்கப்படும் பரப்பில் வளர்ச்சியுற்ற இடங்களும், பின் தங்கிய இடங்களும் கலந்திருக்க வேண்டும்; முடிந்தவரை அடக்கமான பரப்புள்ள இடங்களை ஒவ்வொரு வங்கிக்கும் ஒதுக்க வேண்டும்.**

நாடு முழுதும் பரவலாகக் கிளைகள் கொண்டுள்ள ஸ்டேட் வங்கி, மேலும் இரண்டு வங்கிகள் ஆகியவற்றின் அமைப்பை மாற்ற வேண்டுவதில்லை. மாற்றி யமைக்கப்பட்ட வணிக வங்கிய அமைப்பில், கிளை அலுவலகங்களில் செய்யப்படும் அலுவல் பரவலாக நிறைவேற்றப்பட வேண்டும். இங்ஙனம் அலுவலைப் பகிர்ந்து செய்வதன் வழி, கிளை நிருவாகருக்குத் திட்டமிட, ஒருங்கிணைக்க, கட்டுப்படுத்த வேண்டிய நேரம் கிடைக்கும். 200 அல்லது 300 கிளைகளைக் கட்டுப்படுத்திக் கண்காணிக்க மண்டல அலுவலகங்களும் புது அமைப்பில் இடம் பெற வேண்டும். மண்டல நிருவாகர்களுக்கும், பிரிவு நிருவாகர்களுக்கும் தக்க முறையில் அதிகாரம் அளிப்படைவு செய்யப்பட வேண்டும். வங்கி முழுவதற்குமான திட்டம், ஏற்பாடு முதலியன தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்திந்திய வங்கிகள், மாவட்ட நகரங்களிலும், அதற்கு மேல் நிலையிலுள்ள இடங்களிலும் கிளைகளைக் கொண்டிருப்பதைத் தம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். பிற வங்கிகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று அருகிலுள்ள 2 அல்லது 3 மாநிலங்களில் தொழில் செய்யலாம். இவ் வங்கிகள், மாவட்ட நகரங்களுக்குக் கீழ் மட்டத்திலுள்ள இடங்களில் தமது எல்லைக்குட்பட்ட மாநிலங்களில் பரவலாகக் கிளைகள் கொண்டிருக்க வேண்டும். மா நகரங்களில் அனைத்திந்திய வங்கிகளும் பிராந்திய வங்கிகளும் கிளைகள் திறக்க அனுமதிக்கப்பட வேண்டும். இதனால் இவ் விடங்களில் கிடைக்கக் கூடிய வங்கியத் தொழில் வாய்ப்பில் ஒரு பங்கு ஒவ்வொரு வங்கிக்கும் கிட்டும்.

வங்கிய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு. குழு, செயற் குழு வொன்று அமைக்கப்பட வேண்டுமென யோசனை கூறியுள்ளது. மாற்றி யமைக்கப்பட்ட பொதுத் துறை வங்கிகளின் தலைவர்கள், ரிசர்வு வங்கியின் பிரதிநிதி ஒருவர், மத்திய அரசின் பிரதிநிதியொருவர் ஆகியோர் இந்தச் செயற் குழுவில் இடம் பெறுவர். வங்கிகளிடையே யுள்ள தீர்வக ஏற்பாடு, மாற்றுச் சீட்டு வசூலித்தல், பணியர் மாற்றிக் கொள்ளுவது, பணத்தை இடத்துக்கு இடம் மாற்றுதல் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள இக் குழு உதவும். மேலும், முனைவு வங்கி முறை (Lead Bank System) யையும் இக் குழு மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தும்.

மிகவும் தவிர்க்க முடியாத சூழ்நிலை உருவானால் அன்றி, கிராமியத் துணை வங்கிகளைத் தவிர, புதிய வணிக வங்கிகள் நிறுவப்பட வேண்டுவதில்லை.

மாற்றி யமைக்கும் திட்டப்படி, வங்கிகள் அமைக்கப்பெற்ற பத்து ஆண்டுகள் கழித்து, அனைத் திந்திய, பிராந்திய வங்கிகள் எங்ஙனம் தொழில் செய்து வந்துள்ளன என்று மறு ஆய்வு செய்து, தேவைப்பட்ட மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

நல்ல முறையில் இயங்காத தனியார் துறை வணிக வங்கிகள், காலவரைத் திட்டம் ஒன்றின்படி இணைந்து அல்லது சேர்ந்து செயற்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப் பட வேண்டும்.

குறிப்பிட்ட இடங்களில் மட்டும், சில குறிப்பிட்ட பணிகளை மட்டும் மேற்கொண்டு வருவதால் அயல் நாட்டு வங்கிகள் தற்போதுள்ளபடியே தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படலாம்.

**III. வங்கிய நடவடிக்கைகள் பணிகளை விரிவுபடுத்தப் பரிந்துரைகள்**

வங்கிகள் — வணிக வங்கிகளாயினுஞ் சரி, அல்லது கூட்டுறவு வங்கிகளாயினும் சரி—குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, தமது கடன் கொள்கைகளை வகுத்தல் இன்றியமையாதது. வணிக வங்கிகள், தமது பணிகளை மேலும் விரிவாக்க, குறிப்பாக விவசாயிகளுக்கும் சிறு கடன் கோருவோருக்கும் தேவையான கடன் வசதிகளைப் பெருக்க, குழு பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவை களில் முக்கியமான சிலவற்றைக் காண்போம்.

(i) படிவங்கள் (Forms) எளிமையாக்கப்பட வேண்டும்.

(i ) சிறு நிறுவனங்களுக்கு வசதியாக எளிய கணக்கு வைப்பு முறையொன்று உருவாக்கப்பட வேண்டும். சிறிய கைவினைஞர் (Artisans) களின் நாணய நிலையைக் கணக்கிட, அவர்கள் தங்கள் கணக்கு ஏடுகளைச் சரிவர வைத்திருக்க வேண்டுமென்று வற்புறுத்தலாகாது.

(iii) கச்சாப் பொருள்கள் கிடைப்பு, சந்தை வாய்ப்புப் போன்ற செய்திகள் குறித்து அறிவுரை வழங்க, நிதியச் சார் பற்ற பல நோக்கு முகமைகள் (Multi-purpose agencies) அமைக்கப்பட வேண்டும். மாநில அரசுகள் முனைந்து உரு வாக்க வேண்டிய இந்த அமைப்பு, வணிக, கூட்டுறவு வங்கி களுக்கு உதவ வேண்டும்.

(iv) விவசாயத் துறைக்கு அளிக்கப்படும் கடன்கள் சரிவர ஒருங்கிணைக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

(v) விவசாயக் கடன்களைத் திருப்பி வசூலிப்பதில் நெகிழ்ச்சியான முறை யொன்றை உருவாக்க வேண்டும்.

(vi) கூட்டுறவு வங்கிகளுக்குப் பொருந்தாத தக வின்மைகள் (Disabi ities) வணிக வங்கிகளைப் பாதிக்காதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(vii) முந்துமைத் துறைகளுக்குக் கடனளிப்பது, பிற துறை களுக்கு நியாயமான அளவுக்குக் கடனளிப்பதைப் பாதிக்கும் வகையில் அமையக் கூடாது.

பொதுத்துறை வங்கிகள் இலாப நோக்கு எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென வங்கியக் குழு சுட்டியுள்ளது. விரி வாக்கத்திற்கும் நவீனப்படுத்துவதற்கும் தேவைப்படும் நிகரச் செலவு, தொழிலில் ஏற்படக் கூடிய நட்டத்தைத் தாங்க ஒதுக்க வேண்டிய நிதி, இந்திய அரசு செய்துள்ள முதலீட்டுக்குக் குறிப்பிட்ட ஒரு வீதத்தில் வருமானம் ஆகிய இனங்களுக்குத் தேவைப்படும் தொகையை இலாபமாக ஈட்டினால் போதும்.

வங்கிகளின் கடன்கள், (i) இயல்பான கடன்கள், (ii) தரங் குறைந்த கடன்கள், (iii) ஐயக் கடன்கள், (iv) வராக் கடன்கள் என்று பாகுபடுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வகைக் கடனுக்கும் குறிப்பிட்ட அளவு ஒதுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இரகசியக் காப்புப் (Secret reserves) பொதுத் துறை வங்கிகள் வைத்திருக்க வேண்டுவதில்லை. வங்கிய ஒழுங் காற்றுச் சட்டத்தைத் திருத்தி, வங்கிகள் தமது கணக்குகளில் உண்மையான சொத்துப் பொறுப்புக்களைக் குறிப்பிடும்படி செய்தல் வேண்டும்.

வைப்பாளர்களுக்கு நியாயமான வட்டி வழங்கப்பட வேண்டும். ஒரு கணக்கில், குறைந்தது இவ்வளவு பணம் வைத்திருக்க வேண்டும் என்ற விதியை யொட்டிக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும். வங்கியப் பழக்கத்தை வளர்க்க, ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தையும் நினைவில் இருத்த வேண்டும்.

கடன் அளிப்பு வட்டி வீதம் செலவுகளையொட்டி நிருண யிக்கப்பட வேண்டும். வங்கியினுடைய அளவு, அமைப்பு, சராசரிச் செலவு, இலாபம் ஈட்டத் தேவை முதலியவற்றின்

அடிப்படையில் உச்ச அளவு வட்டி வீதத்தை நிருணயிக்க வேண்டும்.

**நடவடிக்கைகளின் செய்முறை**

வணிக வங்கிகள் தமது செய்முறை (Method) களைச் செம்மைப்படுத்தி, திறனை மிகுதிப்படுத்தப் பல பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில:

(i) விசாரணைப் பகுதிகளை அமைத்து, வாடிக்கையருக்குத் தேவைப்படும் உதவியை உடனுக்குடன் செய்ய வேண்டும். வாடிக்கையரைப் பணிப்பலகை (Counter) யருகில் வெகு நேரம் காத்திருக்க வைக்கக்கூடாது.

(ii) கணக்குத் துவங்கும் படிவம், பணஞ் செலுத்துஞ் சீட்டு, காசோலை, செல்லுப் புத்தகம் (Pass-book) முதலியன பிராந்திய அல்லது வட்டார மொழிகளில் அமைய வேண்டும்.

(iii) ஜூன் திங்களில் அரையாண்டுக் கணக்கு முடிப்பதை வங்கிகள் கைவிட்டுவிட்டலாம்.

(iv) அரை நாள் வேலை செய்யும் சனிக் கிழமைகளை முழு நாள் விடுமுறையாக விட்டு விட்டு, மீதி நாட்களில் வேலை நேரத்தைக் கூட்டிக்கொள்ளலாம்.

(v) பெரிய கிளைகளில் இயந்திரங்களைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும். கிளைகளின் நடவடிக்கைகளைச் சரி பார்க்க கம்ப்யூடர்களைப் பயன்படுத்தலாம்.

(vi) மூன்று அல்லது நான்கு வங்கிகளுக்கு மேலிருக்கும், 50,000 க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருக்குமிடங்களில் தீர்வகங்கள் திறக்கப்பட வேண்டும்.

(vii) பணமனுப்புகை வசதிகளை மிகுதிப்படுத்தவும், வங்கிகளிடையே நிகழும் கடன் நடவடிக்கைகளைச் சரிக்கட்டவும் வங்கிய மாற்றுகை (Bank Giro) ஏற்படுத்தப்பட வேண்டும்.

(viii) பல்வேறு நிதிய நிலையங்களுக்கு நிதி நிலைத் தகவல் சேகரித்து அளிக்க, நாணயத் தகவல் நிலையம் (Credit Intelligence Bureau) ஒன்றை நிறுவ வேண்டும்.

(ix) ஒரு கடன் கோருவோர் ஒரு வங்கியிடமிருந்து மட்டுமே கடன் வாங்கும்படி வேண்டிக் கொள்ளப்பட வேண்டும். மிகப் பெரிய கடன் தொகையாக இருப்பின், சில வங்கிகள் கூட்டாகச் சேர்ந்து கடனளிக்கலாம்.

(x) சிறு கடன் கோருவோருக்குக் கடனளிக்கையில் அவர் திருப்பித் தருவதில் ஐயமேதும் தோன்றினால் மட்டுமே மூன்றும் நபர் பொறுப்புறுதி கேட்டுப் பெற வேண்டும்.

(xi) வங்கியின் தணிக்கை, ஆய்வுத் துறை நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும்.

(xii) அமைப்பு-செய்முறை, பொருளாதார-புள்ளியியல். பொது மக்கள் தொடர்புத் துறை வங்கிகளில் நிறுவப் பெற அல்லது வலுவாக்கப் பெற வேண்டும். நிருவாக வளர்ச்சிக்கு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும்.

(xiii) கிராமிய, மண்டி அமைந்துள்ள இடங்களில் உள்ள கிளைகள் மாலை நேரத்தில் திறந்து வைக்கப்பட வேண்டும். மக்கள் குடியிருக்கும் நகர்ப்புறங்களிலுள்ள கிளைகள் வாடிக்கையாரின் வசதியை அனுசரித்துக் காலையும் மாலையும் திறந்து வைக்கப்பட வேண்டும்.

(xiv) நன்கு திட்டமிடப்பட்ட நிருவாகச் செய்தியமைப்பு (Management Information System) ஒவ்வொரு வங்கியிலும் அவசியம் அமைக்கப்பட வேண்டும். கொள்கை வகுக்க, செய்து முடிந்ததை மதிப்பீடு செய்ய, கட்டுப்படுத்த, போன்ற பல தேவைகளுக்கு வேண்டும் செய்திகளை இந்த அமைப்பு அளிக்க வேண்டும்.

(xv) மிகத் துல்லியமாகத் தேவைப்படாத செய்திகள் குறித்து ரிசர்வு வங்கி அல்லது அரசு புள்ளி விவரம் திரட்ட மாதிரி அடிப்படையைக் கடைப்பிடிக்கலாம்.

(xvi) பணியரின் உற்பத்தித் திறனை அளக்க, பலப்பல வேலைகளுக்கு மனித—மணிகள் (Man-hours) நிருணயிக்கப் படலாம்.

**வங்கிகளின் நிருவாக மேம்பாடு**

வங்கிகளின் நிருவாகத்தைச் சீராக, செம்மையாக முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல, வங்கியக் குழு பல பரிந்துரைகளை அளித்துள்ளது.

(i) ஆள் பலம் திட்டமிடுதல் (Man Power planning): வங்கிகள், தற்போது பல நிலைகளில் பணியாற்றும் பணியரின் குறிப்புக்களைச் சரிவர வைத்திருத்தல் அவசியம். வரும் ஆண்டு களில் மேலும் எவ்வளவுப் பேர் எந்த எந்த நிலைகளில் தேவைப் படுவர் என்று சரிவரக் கணக்கிட்டு, அந்த அடிப்படையில் ஆள், சேர்ப்பு, பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

(ii) ஆள் சேர்ப்பு (Recruitment) : மூன்று நிலைகளில் வங்கியப் பணிக்கு ஆள் சேர்ப்பு நடைபெறலாம். ஒன்று எழுத்தர், இரண்டாவது இளநிலை அலுவலர், மூன்றுவது சிறப்புத் தேர்ச்சியர் (Specialist). பொதுத் துறை வங்கி களுக்கு வேண்டிய எழுத்தர், இள நிலை அலுவலர்களைத் தேர்ந் தெடுக்க, 'தேசிய வங்கியப் பணி ஆணைக் குழு' (National Banking Service Commission) ஒன்று அமைக்கப்பட வேண்டும். பொருளாதார, புள்ளியியல் நிபுணர்கள் போன்ற சிறப்புத் தேர்ச்சியுடையோரும் ஆணைக் குழுவின் வழி தேர்ந்தெடுக்கப் படலாம். மத்தியப் பொதுப்பணி ஆணைக் குழு (Union Public Service Commission) போன்ற சட்ட முறையான அமைப்பில் வங்கியப் பணி ஆணைக் குழு நியமிக்கப்படலாம். தேர்வுகளைப் பிராந்திய அளவில் நடத்தி, எழுத்தர்களையும் அனைத்திந்திய அளவில் நடத்தி, இளநிலை அலுவலர்களையும் தேர்ந்தெடுக்க லாம். கூட்டுறவு வங்கிகளும் இந்த ஆணைக் குழுவின் வழி, தமது பணியரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள அனுமதிக்கப் படலாம். பொதுத் துறை வங்கிகள் ஆணைக் குழுவின் செலவு களை ஏற்கலாம்.

(iii) பயிற்சி (Training): நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பெறும் எழுத்தர், இளநிலை அலுவலர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டும். தற்போது இயங்கி வரும் வங்கியப் பயிற்சிக் கூடங்களும் கல்லூரிகளும் தேவைக்கேற்ப விரிவு படுத்தப் பெறலாம். புதுக் கல்லூரிகளும் கூடங்களும் திறக்கப் படலாம்.

தேசிய வங்கி நிருவாகப் பயிற்சி நிலையம் (National Institute of Bank Management) பயிற்சி குறித்த திட்டங்களைத் தீட்டல், ஒருங்கிணைத்தல், இயக்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். இப் பயிற்சி நிலையம், ஆராய்ச்சி, ஆலோசனை அளித்தல் போன்ற பணிகளையும் தொடர்ந்து செய்து வர வேண்டும். இந்திய வங்கியர் நிறுவனத் (Indian Institute of Bankers) தோடு, தேசியப் பயிற்சி நிலையம் நெருங்கித்

தொடர்பு கொண்டு செயலாற்ற வேண்டும். அலுவலர்களின் பயிற்சியில் வங்கிய நுட்பங்களைவிட நிருவாகத் துறை நுட்பங்களைப் பயிற்றுவிப்பது அவசியம்.

கூட்டுறவு வங்கிப் பணியருக்குப் பயிற்சியளிக்க, வைகுந்த் மேத்தா தேசியக் கூட்டுறவு நிருவாகப் பயிற்சி நிலையம் (Vaikunth Mehta National Institute of Co-operative Management) வணிக வங்கிகளுக்குத் தேசிய வங்கி நிருவாகப் பயிற்சி நிலையம் செயற்படுவது போன்று செயற்பட வேண்டும்.

## IV. சட்டத்தைத் திருத்துவது பற்றிய பரிந்துரைகள்

கடன் வழங்கும் நிலையங்களின் மீதான அதிகாரத்தைப் பலவாருகப் பகிர்ந்திருப்பது நாட்டின் பொருளாதார நலனுக்கு உகந்ததல்ல என வங்கியக் குழு கருதுகின்றது. வெறுங் கடன் மட்டும் வழங்கும் நபர்களைக் கட்டுப்படுத்தும் அதிகார வரம்பு மாநில அரசுகளிடமும், வங்கியத் தொழில் நடத்துவோர் மீதான அதிகார வரம்பு மத்திய அரசிடமும் தற்போது உள்ளது. பணவாக்க, கடன் கொள்கைகளைச் செம்மையாக அமுல் படுத்த, இந்த நிலை அவ்வளவு உதவுவதாக இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலச் சட்டங்கள்படி செயலாற்றி வந்தாலும், வங்கியத் தொழில் புரிபவை மத்திய சட்டமான வங்கிய-ஒழுங்காற்றுச் சட்டப்படி செயலாற்ற வேண்டியிருக்கிறது. ஒழுங்கு விதிகளில் வேறுபாடுகள் இருப்பின், அவை திறமையான நிருவாகத்தையும் நடைமுறையையும் பாதிக்கும். எனவே, வட்டித் தொழில், வட்டித் தொழிலர், கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் ஆகிய மத்திய அதிகாரப் பட்டியல் (Union list) அல்லது ஒருங்கியல் அதிகாரப் பட்டிய (Concurrent list) லுக்கு அரசியல் சட்டத் திருத்தம் செய்து மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தை வங்கியக் குழு தெரிவித்துள்ளது. மத்திய அரசும், ரிசர்வு வங்கியும் அளிக்கும் நிதி வசதிகளைக் கொண்டே பெரும்பாலும் மாநில அரசுகள் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் மூலம் விவசாயக் கடன்கள் அளிப்பதும் இந்த அதிகார வரம்பை மாற்றுவதற்குத் தக்க ஒரு காரணமாகும்.

'வங்கியம்' என்ற சொல்லின் இலக்கணம், திருப்பி எடுக்கும் முறையைச் சாராது ஏற்றுக் கொள்ளப்படும் எல்லா வகை வைப்புக்களையும் உட்படுத்த வேண்டும் என்று குழு யோசனை கூறியுள்ளது. கிராமிய வங்கிகள் நிறுவ வகை செய்யும் சட்டம் விரைவில் இயற்றப்பட வேண்டும். எல்லா வகை

வைப்பு ஏற்கும் நிறுவனங்களுக்கும் பொருந்தும் இந்திய வங்கியச் சட்டத் தொகுப்பு (Indian Banking Code) ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

## V. மேலும் ஆயவேண்டியவை

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வங்கிய அமைப்பின் பங்கு யாது என்று அறிந்து கொள்ளும் வகையில், தொடர்ந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுவது அவசியம். வங்கிய ஆராய்ச்சி, வளர்ச்சியின் நோக்கங்களில் கீழ்க் கண்டவை முக்கிய இடம் பெற வேண்டும்:

(i) இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் வங்கியத் துறை எங்ஙனம் செயற்படுகின்றது ;

(ii) வங்கியத்துறையின் பல பகுதிகள் ஒன்றுக் கொன்று எங்ஙனம் தொடர்புற்றுள்ளன; இப் பகுதிகள் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றன ;

(iii) வங்கியப் பழக்கத்தை வளர்க்க வழி முறைகளை வகுப்பது, கண்டுபிடிப்பது;

(iv) வங்கியப் பணிகளின் தரத்தை உயர்த்துவது;

(v) வங்கிகளின் பணிகளும் பெருக்கமும் எவ்விதம் விரிவு படுத்தப் படலாம் என்பதிலும், சேமிப்புக்களைப் புது வகையில் எப்படித் திரட்டலாம் என்பதிலும் உதவி;

(vi) மூலதன, நடைமுறைச் செலவுகளைக் குறைத்தல்;

(vii) வங்கிகளின் கடன் கொள்கைகள் சுற்றுப் புறத்தில் எவ்வகை விளைவுகளை உண்டாக்குகின்றன. வங்கியத் துறையில் ஆராய்ச்சியின் தரத்தை உயர்த்த பல்கலைக் கழகங்களுக்கும் நிதிய நிலையங்களுக்கு மிடையே பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நிதிய நிலையங்கள் தமக்கிடையேயும் சில ஏற்பாடு களைச் செய்து கொள்ளலாம். ஆராய்ச்சியின் கண்டு பிடிப்புக் களை ஒளிவு மறைவின்றி வெளியிட வேண்டும்.

## குழுவின் பரிந்துரைகளைப் பற்றிய கருத்துக்கள்

மேற்காணப்படும் வங்கியக் குழுவின் முக்கியப் பரிந்துரை களைப் பலர் வரவேற்றும், சிலர் குறை கூறியும் இருக்கின்றனர். வரவேற்று, வங்கியக் குழுவின் முயற்சிகளைப் பாராட்டியோர்,

'இந்த அறிக்கை அருமையான மாபெரும் முயற்சி; குழு மிகவும் அடிப்படையான மாற்றங்களைப் பரிந்துரைக்காது, செயற்படுத்தக் கூடிய வகையில் மட்டுமே கருத்துக்களை அள்ளித் தந்துள்ளது' என்று கூறியுள்ளனர்.

அறிக்கையைக் குறை கூறுவோர், 'குழு வணிக வங்கிகள் இரண்டு பிரிவாகப் பிரிப்பது, அனைத்திந்திய வங்கிகள் பிராந்திய வங்கிகளென்று பிரிப்பது, அவற்றிற்கிடையே முதல், இரண்டாம் தர வங்கிகள் என்ற பாகுபாட்டை ஏற்படுத்தி, வங்கிய வளர்ச்சியைப் பாதிக்கும்' என்று கருதுகின்றனர். மேலும், எட்டு அல்லது ஒன்பது வங்கிகள் பணவாக்கக் கொள்கையை வெற்றிகரமாக அமுல்படுத்தும் என்னும்போது, அதே போன்று 22 வங்கிகளால் செய்ய இயலாதா என்று வினவுகின்றனர்.

குழுவின் பெருந்தலைவர் திரு. சராயா கூட்டுறவுத் துறையில் மாபெரும் தலைவராகத் திகழ்ந்து வருவதால், கிராமிய வங்கிகளைப் பற்றிய பரிந்துரைகளில் கூட்டுறவு முறை அமைப்புக்கு முதலிடம் தந்துள்ளாரெனச் சிலர் கருதுகின்றனர் மத்திய அரசும் ரிசர்வு வங்கியும் கிராமியப் புறங்களில் வணிக வங்கிகள்—சிறப்பாக நாட்டுடைமை வங்கிகள் நிறையக் கிளைகளைத் திறக்க வேண்டும் என்ற உறுதியான கொள்கையைக் கடைப்பிடித்து வரும்போது, மீண்டும் கூட்டுறவு அமைப்பைக் குழு பரிந்துரைத்துள்ளது சரியானதாகத் தோன்றவில்லை என்று சிலர் கூறுகின்றனர். மற்றும் கிராமிய வங்கிகள் பலதரப் பட்ட பணிகளை மேற்கொள்ளும் திறன் வாய்ந்திருக்குமா என்பதும் ஐயப்பாடுடையதாகும். கூட்டுறவுக் கடன் என்ற இனத்தை மாநில அதிகாரப் பட்டியலிலிருந்து, மத்திய அல்லது ஒருங்கியல் அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டுவருவது ஒரு பின்னோக்குக் கொள்கை யென்றும், நலிவுற்ற மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உள்ள இடங்களில் உச்சி வங்கியின் கிளைகளை ஏற்படுத்துவது மீண்டும் பழைய நிலைக்குச் செல்வது போன்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

வைப்புக்களைத் திரட்டுவதைப் பற்றிய பரிந்துரைகளில் வங்கியக் குழு இரு முக்கியச் செய்திகளைக் கவனிக்கவில்லை. ஒன்று, கடனளிப்பதன் வழி வைப்புத் திரட்டுவது, அதாவது கிராமியப் புறங்களில் கடன் வழங்குவதால் ஏற்படும் வளர்ச்சி, கூடுதல் வருமானம் ஆகியவற்றின் விளைவாகச் சேமிப்பு ஏற்பட்டு, அச்சேமிப்பை வைப்புக்களாகத் திரட்டுவது. மற்றது,

வங்கிக் கிளைகளுக்குள் போட்டியேற்பட்டு, ஒரு வங்கியிலிருந்து வைப்புக்களை மற்றொரு வைப்புக்கு ஈர்த்துச் செல்வதால் மொத்தத்தில் வைப்பு நிலை அதிகப்படுவதில்லை. முந்துமைத் துறைகளுக்குத் தரப்படும் கடன் வசதியால் ஏற்பட்டுள்ள வளர்ச்சியாலும், கூடுதல் உற்பத்தியாலும் கிடைக்கும் கூடுதல் வருமானத்தைத் தக்க திட்டம் போட்டு, வங்கிகள் தம்மிடம் ஈர்த்து, அதனல் வைப்புப் பணத்தின் சுழற்சியை மிகுதிப் படுத்துவதுதான் உண்மையிலேயே வைப்புக்களை அதிகப் படுத்துவதாகும். இவ்விரு செய்திகளையும் குழு ஆராயவில்லை எனக் குறை கூறப்பட்டுள்ளது.

சமுதாய நீதிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் கருவி களாகப் பயன்பட வங்கிகள் திறம்படச் செயலாற்ற வேண்டும். வங்கியக் குழு, வங்கிகளின் நிருவாகத்தைத் திறம்படச் செய்யு மாறு பலப்பல பரிந்துரை தந்துள்ளது; ஆனல் வங்கியத் துறையினல் நிருவாகத் தலைவர்களை உருவாக்கப் பரிந்துரை ஏதும் கூறப்படவில்லை என்று குறை கூறப்பட்டுள்ளது. சனிக் கிழமைகளை முழு விடுமுறை நாளாக ஆக்குவது குறித்த பரிந் துரை பற்றிப் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

வங்கியக் குழுவின் முக்கியப் பரிந்துரைகளுள் ஒன்று, வங்கியின் பெருந்தலைவரும் தலைமை நிருவாகரும் ஒரே நபராக இருப்பது சரியன்று என்பதாகும். இது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். அவைத் தலைவர் என்ற நிலையிலுள்ள பெருந் தலைவர், வங்கியின் அன்றாட அலுவல்களைப் பற்றிய செய்திகள் பற்றிப் பிற இயக்குநர்களுக்கு விடை கூற வேண்டுவதில்லை. இதைத் தலைமை நிருவாகர் கவனித்துக்கொள்ள வேண்டும். பெருந்தலைவர் வங்கிய வளர்ச்சிக்கான திட்டமிடல், கொள்கை வகுத்தல், பொது மக்கள் தொடர்பு கொள்ளல் போன்ற செய்திகளுக்குத் தமது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவிட வேண்டும். அரசாங்கம் வங்கிகளுக்கு இடும் ஆணை, எழுத்தால் அமைய வேண்டும் என்று வங்கியக் குழு பரிந்துரை செய் துள்ளது பாராட்டத்தக்கது என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுவாகக் கூறுமிடத்து, வங்கியக் குழுவின் அறிக்கை பாராட்டப் பெறுகிறது; வரவேற்கப் படுகிறது. வங்கிய முறையை மாற்றி யமைப்பது, வணிக—கூட்டுறவு வங்கிக ளிடையே ஒருங்கிணைப்பு ஏற்பாடு செய்வது ஆகிய இரு செய்திகள் பற்றிய பரிந்துரைகளே கடுந்தாக்குதலுக்கு இலக் காகியுள்ளன. இதற்குக் காரணம், குழு தற்போது இருந்து

வரும் அமைப்பை அடியோடு மாற்றுவது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத செயல் என்ற காரணத்தால் உள்ளதைத் திருத்தி அமைக்கப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையிலேயே புரட்சிகரமான மாற்றங்கள் தேவைப் பட்டால், குழு அதைப் பரிந்துரைத்திருக்கலாம். தக்க முன்னேற்பாடுகள் செய்து, எவ்வளவு பெரு மாற்றத்தால் ஏற்படும் சிக்கல்களையும் சமாளித்து விடலாம் என்று சிலர் கருதுகின்றனர். குழுவின் பெருந்தலைவர் நாடறியும் கூட்டுறவாளர் ஆகையால் அவர் தலைமையிலுள்ள குழு அளித்துள்ள பரிந்துரைகள் கூட்டுறவு நிலையங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அமைந்துள்ளன என்று சிலர் கூறுகின்றனர். இது நியாயமற்ற பேச்சு. இம்மாதிரி குறை கூறுவோர் வேறு மாற்றுத் திட்டம் ஒன்றையும் தரக்கூடவில்லை யென்பது குறிப்பிடத் தக்கது.

# கலைச்சொற்கள்

## A

Advances — கடன்கள்
Agency — முகமை
Agent — முகவர்
Apex bank — உச்சி வங்கி
Artisans — கைவினைஞர்
Asset — சொத்து
Associate — துணைஞர்
Audit — தணிக்கை

## B

Bad debt — வராக் கடன்
Balance sheet — இருப்பு நிலைக் குறிப்பு
Bank — வங்கி
,, Central — மைய வங்கி
,, Clearing — தீர்வக வங்கி
,, Commercial — வணிக வங்கி
,, Industrial — தொழில் வங்கி
,, functions of — வங்கியின் பணிகள், வங்கியின் அலுவல்கள்
Bank rate — வங்கி வீதம்; மைய வங்கியின் வட்டி வீதம்; மைய வங்கி வீதம்
Banker — வங்கியர்
Banker, indigenous — நாட்டு வங்கியர்
Banking — வங்கியம், வங்கிய முறை, வங்கியத் தொழில்
Banking Regulation Act — வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்

| | | |
|---|---|---|
| Banking structure | — | வங்கியக் கட்டமைப்பு |
| Bill | — | சீட்டு |
| ,, treasury | — | கருவூலச் சீட்டு |
| Bill of exchange | — | மாற்றுச் சீட்டு |
| ,, documentary | — | ஆவணஞ் சேர்ந்த மாற்றுச் சீட்டு |
| ,, foreign | — | அயல்நாட்டுச் சீட்டு |
| ,, market | — | சீட்டுச் சந்தை |
| Block capital | — | நிலைமுதல், அசையா முதல் |
| Board of directors | — | இயக்குநர் அவை |
| Bond | — | பத்திரம் |
| Bonus | — | மேலூதியம், போனசு |
| Branch expansion | — | கிளைப்பெருக்கம் |
| Broker | — | தரகர் |
| Bullion | — | உலோகக் கட்டி |

C

| | | |
|---|---|---|
| Capital formation | — | முதலாக்கம் |
| ,, issue | — | முதல் வெளியீடு |
| ,, market | — | மூலதனச் சந்தை, முதல் சந்தை |
| ,, authorised | — | அனுமதித்த முதல் |
| ,, paid up | — | செலுத்திய முதல் |
| ,, subscribed | — | ஒப்பிய முதல் |
| Cash credit | — | ரொக்கக் கடன் |
| Chairman | — | பெருந்தலைவர் |
| Cheap money policy | — | எளிமைப் பணக் கொள்கை |
| Cheque | — | காசோலை |
| Clearing house | — | தீர்வகம் |
| Code | — | சட்டத் தொகுப்பு |
| Collateral security | — | துணைப் பிணை |
| Company | — | கம்பெனி, நிறுமம் |
| ,, subsidiary | — | துணைக் கம்பெனி |
| ,, limited | — | வரையறுத்த கம்பெனி |
| ,, unlimited | — | வரையறாக் கம்பெனி |
| Co-operatives | — | கூட்டுறவு நிலையங்கள், கூட்டுறவுகள் |
| operative bank | — | கூட்டுறவு வங்கி |
| ,, credit | — | கூட்டுறவுக் கடன் |

| | | |
|---|---|---|
| Co-operative credit societies | — | கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு நாணயச் சங்கங்கள் |
| Currency chest | — | செலாவணிப் பெட்டகம் |

**D**

| | | |
|---|---|---|
| Dear money policy | — | அருமைப் பணக் கொள்கை |
| Debenture | — | கடனீட்டுப் பத்திரம் |
| ,, mortgage | — | அடைமானக் கடனீட்டுப் பத்திரம் |
| Deferred payment system | — | பின்செலுத்தும் முறை |
| Deposit | — | வைப்பு |
| ,, fixed | — | தவணை வைப்பு |
| Depression | — | மந்தம் |
| Discount | — | தள்ளுபடி |
| Discounting of bill | — | மாற்றுச் சீட்டுத் தள்ளுபடி |
| Dividend | — | இலாப ஈவு |
| Doubtful debt | — | ஐயக் கடன் |

**E**

| | | |
|---|---|---|
| Employees | — | பணியர், ஊழியர் |
| Encumbrance | — | வில்லங்கம் |
| Equity shares | — | சாதாரணப் பங்குகள் |
| Exchange bank | — | நாணய மாற்று வங்கி |
| ,, control | — | நாணய மாற்றுக் கட்டுப்பாடு |

**F**

| | | |
|---|---|---|
| Federation | — | கூட்டிணைப்பு, கூட்டமைப்பு |
| Finance | — | நிதி, நிதியம் |
| Fixed assets | — | நிலையான சொத்துக்கள் |
| Floating charge | — | இழைவுறு பற்றுப் பொறுப்பு |
| Foreign bank | — | அயல்நாட்டு வங்கி |
| Foreign bill | — | அயல்நாட்டுச் சீட்டு |
| Foreign trade | — | அயல்நாட்டு வியாபாரம் |

**G**

| | | |
|---|---|---|
| Government bonds | — | அரசாங்கப் பத்திரங்கள் |
| Government securities | — | அரசாங்கப் பிணையங்கள், அரசினர் பிணையங்கள் |
| Guarantee | — | பொறுப்புறுதி |

**H**

Hire purchase finance — வாடகைக் கொள்முறை நிதியம்
Hundi — உண்டியல்
Hypothecation — அடைமானம்

**I**

Indigenous bank — நாட்டு வங்கி
Industrial development banks — தொழில் வள வங்கிகள்
Industrial finance — தொழில் நிதியம்
Industry, large scale — பேரளவுத் தொழில்
,, medium scale — நடுத்தர அளவுத் தொழில்
,, small scale — சிற்றளவுத் தொழில்
Insurance — காப்பீடு, காப்புறுதி
Intermediaries — இடைநிலையர்
Investment — முதலீடு
Investor — முதலீட்டாளர்

**J**

Joint stock bank — கூட்டுப் பங்கு வங்கி

**L**

Land development bank — நில வள வங்கி
Lead bank — முதன்மை வங்கி, வழிகாட்டி வங்கி
Letter of credit — வாணிக உறுதிக் கடிதம்
Licence — உரிமம்
Lien — பற்றுரிமை
Liquid assets — எளிவரல் சொத்துக்கள், நீர்மைச் சொத்துக்கள்
Liquidity — நீர்மை, எளிவரல் நிலை

**M**

Maturity — தவணை முடிவு, கெடு
Monetary policy — பணவாக்கக் கைக்கோள்
Moratorium — கடன் ஒத்திவைப்பு

**N**

National income — நாட்டு வருமானம்
Nationalisation — நாட்டுடைமையாக்கல்
Note issue — நோட்டு வெளியீடு

**O**

Open market operations — வெளிச்சந்தை நடவடிக்கைகள்

Organised sector — ஒழுங்கமைதி பெற்ற பகுதி

**P**

Partnership — கூட்டாண்மை

Plantations — தோட்டக்கால் பயிர்கள்

Pledge — அடகு

Post office — அஞ்சலகம்

Post office savings bank — அஞ்சலகச் சேமிப்பு வங்கி

Premium — முனைமம்

Private sector — தனியார் துறை

Processing — பக்குவப்படுத்தல்

Promissory note — கடனுறுதிச் சீட்டு

Public sector — அரசுத் துறை, பொதுத் துறை

**Q**

Quorum — குறைவெண்

**R**

Remittance — அனுப்புகை

Re organisation — திருத்தி யமைப்பு, மாற்றி யமைப்பு

Reserve, secret — இரகசியக் காப்பு

Resources — வளப் பொருள்கள், சாதனங்கள்

Risk — துணிவு, நட்ட அச்சம்

**S**

Safe custody — காவல் வைப்பு

Safe deposit vault — பாதுகாப்புப் பெட்டகம்

Savings bank — சேமிப்பு வங்கி

Scheduled bank — பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெற்ற வங்கி

Security — பிணை

Security for loan — கடனுக்குப் பிணை
Securities — பிணையங்கள்
Selective credit control — தேர்வு கடனளிப்புக் கட்டுப்பாடு
Small scale industry — சிற்றளவுத் தொழில்
Specialisation — சிறப்புத் தேர்ச்சி
Stock — பங்குத் தொகுப்பு
Stock exchange — பங்கு மாற்றகம்; பங்கு மாற்று நிலையம்
Stock market — பங்கு மாற்றுச் சந்தை
Surety — பிணையாள், ஜாமீன்
Surplus — உபரி

## T

Technical — தொழில் நுட்பமான
Travellers cheques — பயணக் காசோலை
Treasury bill — கருவூலச் சீட்டு
Trust — பொறுப்பாண்மை
Trustee — பொறுப்பாண்மையர்
Trustee securities — பொறுப்பாண்மையர் பிணையங்கள்

## U

Under writer — ஒப்புறுதியர்
Unit trust — அலகு பொறுப்பாண்மை, யூனிட் டிரஸ்ட்
Unlimited liability — வரையறுப் பொறுப்பு
Unsecured loan — வெண்கடன், பிணையற்ற கடன்

# மேற்கோள் நூற்பட்டியல்

# (Bibliography)


1. Sinha, H. — Early European Banking in India, Macmillan and Co., Limited, London. 1927.

2 Gubbay, M. M. S. — Indigenous Indian Banking, D. B. Taraporevala & Sons, Bombay, 1928.

3. Chunilal B. Mehta and others (Editors)—Indian Banking and Currency Problems, Allahabad East End Publishers Ltd., 1949.

4. Om Prakash Gupta—Central Banking in India, New Delhi, 1934.

5. Krishnan V.—Indigenous Banking in South India, The Bombay State Co-operative Union, Bombay.

6 Bimal C. Ghose — An Introduction to Banking Principles, Practice and Law, Oxford University Press 1954.

7. Panandikar, S. G. — Banking in India, Orient Longmans Limited 1966.

8. Muranjan, S. K. Modern Banking in India, Kamala Publishing House, Bombay 4, 1952.

9. Raman, A. — Central Banking in India, Bookland Private Ltd., Culcutta, 1968.

10. Saksena, R. M.— Development Banking in India, Vora & Co., Publishers Private Ltd., Bombay, 1970.

11 Kabra, K. N. and Suresh R.R. — Public Sector Banking, People's Publishing House, New Delhi 1970.

12. Basu, S. K.—A Review of Current Banking Theory and Practice, Macmillan and Co., Limited, 1971.

13. Basu, S. K.—Theory and Practice of Development Banking, Asia Publishing House, 1965.

14. Choubey, B. N.—Principles and Practice of Co-operative Banking in India, Asia Publishing House, 1968.

15. Dehijia, V. T.—Views and Reviews, Vora&Co., Publishers Private Ltd , Bombay 1969.

16. Bedi, R. D.—Co-operative Land Development Banking in India, Committee for Co-operative Training, New Delhi, 1971.

17. Davar, S. R.—Law and Practice of Banking (Bankers' Edition), Progressive Corporation Ltd., Bombay, 1972.

18. Tannan, M. L.—Banking Law and Practice in India, Thacker & Co., Ltd., Bombay, 1971.

19 Reserve Bank of India — The Reserve Bank of India, Functions and Working, 1970.

20. Reserve Bank of India—History of the Reserve Bank of India, 1935—1951, 1970.

21. Reserve Bank of India—Report of the All, India Rural Credit Review Committee, 1969.

22. Reserve Bank of India—Technical Studies prepared for the Banking Commission, Bombay, 1972.

23. Government of India—Report of the Banking Commission, 1972.

24. Basu, S. K.—A Survey of Contemporary Banking Trends, The Book Exchange, Culcutta, 1957.

25. Mutalik Desai, V. R.—Banking Development in India, Manaktalas, Bombay, 1967.

26. Krishnamurthi, E. R. (Ed.)—Madras Stock Exchange Silver Jubilee Souvenir, 1962.

Reserve Bank of India Annual Reports, (Monthly) Bulletin.

Statistical Tables Relating to Banks in India published by the Reserve Bank of India.

Commerce, Eastern Economist Weeklies Commerce Pamphlet Series.

The Journal of the Indian Institute of Bankers—Quarterly issues.

State Bank of India Monthly Reviews

Co-operative News Digest—Monthly published by Reserve Bank of India, Agricultural Department, Bombay.

Selected Statistics Relating to Co-operative Credit in India Published by Reserve Bank of India, 1972.